அஷ்ட பாகுடம்

இயற்றியவர்

ஆசாரிய குந்த குந்த தேவர்

தமிழ் உரை

திரு. சிவ. ஆதிநாதன் அவர்கள்

ஸ்ரீ விசாகாசாரியர் தப நிலையம்

குந்தகுந்த நகர் – 604 505

வெளியிடுபவர்

திருமதி.அம்ஸா ஆதிதாஸ்

ஜெயின் தெரு

உப்புவேலூர் 604 154

2026

நூலின் விவரம்

நூலின் பெயர்	:	அஷ்ட பாகுடம்
பாகத மூலம்	:	ஆசாரியர் குந்த குந்த தேவர்
தமிழ் உரை	:	திரு. சிவ. ஆதிநாதன் அவர்கள்
புத்தக அளவு	:	க்ரௌன் 1/4
காகிதம்	:	மேப்லிதோ
பக்கங்கள்	:	520
பிரதிகள்	:	300
நூல் வடிவமைப்பு	:	மும்மணி பதிப்பகம் (9444227315)
நூல் வெளியீடு	:	திருமதி. அம்ஸா ஆதிதாஸ் 9442248248 உப்புவேலூர்.
விலை	:	சாஸ்திர தானம்

பதிப்புரை

மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்டு அரணாகித்
துக்கம் கெடுப்பது நூல்

- அருங்கல செப்பு

மெய்ப்பொருள்கள் என்பது என்றும் மறையாது. தொடர்ந்து உலகில் நிலைத்து நிற்பவையாகும். இந்த ஐந்தாம் காலத்தில் தீர்த்தங்கரர்கள், சுருத கேவலிகள் மற்றும் ஆச்சாரியர்கள் இல்லாத காரணத்தால் மேலே கூறப்பட்ட மெய்ப்பொருள்களை விளக்கி மனித சமுதாயம் பிறவிப் பிணியின்றும் நீங்கி பேரின்பமாகிய முக்தி நிலையை அடைய துணை நிற்பவை ஜின பகவானின் திவ்யதொனியில் வெளிப்பட்ட ஆகமங்களே ஆகும். ஆகம கருத்துக்களை பிறவி உயிர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் நம் அறவோர்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் நூல்களை எழுதியுள்ளனர். "எல்லா நாட்டிலும் இயல்வது பாகதம்" என்ற அகத்தியர் கூற்றுப்படி ஆகம நூல்கள் பலவும் பிராகிருதம் என்னும் பாகத மொழியில் இயற்றப்பட்டுள்ளன.

பாகத மொழியில் இயற்றப்பட்ட பல ஆகம நூல்களில் கி.மு.- கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக கருதப்படும் ஆசாரியர் **ஸ்ரீ குந்தகுந்த தேவர்** அருளிய ஆகமங்கள் முதன்மையாக கருதப்படுகின்றன. இவரே தென்னிந்திய சமண ஆகம தொகுதி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராவார். திருக்குறள் தவிர இவர் 82 பாகுட (ப்ராப்ருத) நூல்களை இயற்றினார் என்றும் அவற்றில் 52 நூல்களின் பெயர்கள் பட்டியல் மட்டுமே தெரிய வந்து திரு.தி.அனந்தநாத நயினார் அவர்களால் எழுதப்பட்ட **திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்** என்ற நூலில் தரப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 பாகுடங்களின் பெயர்கள் தெரியவில்லை. இவை இல்லாமல் வேறு சில நூல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளது என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆச்சாரியர் குந்த குந்த தேவரின் பல ஆகம நூல்களை சாஸ்திரியார் மற்றும் அறிஞர் பெருமக்கள் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட்டிருந்தாலும், இம்முயற்சிக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் சமயசாரம், பஞ்சாஸ்திகாயம், பிரவசன சாரம், நியம சாரம், அஷ்ட பாகுடம் ஆகியவற்றிற்கு தமிழ் மட்டுமே அறிந்த பவ்ய ஜீவன்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் விரிவான- விளக்கமான- செறிவான

தமிழ் உரையினை எழுதி அச்சிட வாய்ப்பினை ஏற்படுத்தி தமிழக ஆன்மீக இலக்கிய வெளியீட்டு வரலாற்றிலே புதிய சகாப்தத்தினை தன் பெயரினை கூட குறிப்பிடாமல் உருவாக்கியவர் **சுல்லகர் ஸ்ரீ ஆதிசாகர்** ஆவார். ஆன்மீக வளர்ச்சிக்கு பல நிறுவனங்களுடன் இணைந்து தொண்டாற்றிருந்தாலும் தனது வாழ்வின் இறுதியில் குந்த குந்தர் தபோ பூமியில் குந்தகுந்த நகரில் ஸ்ரீ விசாகாச்சாரியார் தபநிலையத்தை ஏற்படுத்தி சுருதகேவலி என்ற ஆன்மீக இதழை ஓசைப்படாமல் சுவடு தெரியாமல், ஆன்மீக வளர்ச்சி - முதிர்ச்சி- ஆகம பயிற்சி என பரிணமித்த இவர் ஆகமங்களை கற்றது மற்றுமின்றி அதற்குத் தக நின்று சல்லேகனை ஏற்று 7.3.2009 அன்று சமாதி மரணம் அடைந்தார்.

எனது கணவரின்முதலாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி ஒரு ஆகம நூலை வெளியிட எண்ணி மும்மொழி வித்தகர் திரு.ஜம்புகுமார் ஜெயின் சாஸ்திரியார் அவர்களை அணுகினேன். அவர் உடனே ஆசாரியர் குந்த குந்தர் தேவர் அருளிய அஷ்டபாகுடம் என்னும் ஆகம நூலை வெளியிடுமாறு யோசனை கூறினார்.

இந்தப் பாகுடங்களை முன்னரே தங்கள் குடும்ப நிகழ்வுகளின் போது அன்பர்கள் 1. திரு.ஜெ. குமார்-விஜயலட்சுமி குமார் மற்றும் சி.ஜெயக்குமார்- மல்லிகா ஜெயக்குமார் (சாரித்ர பாகுடம்) 2. திரு.சி.செல்வராஜ் மற்றும் குடும்பத்தினர் (போத பாகுடம்) 3. திரு.தேவதாஸ் மல்லி நாதன்- சுலோச்சனா தேவதாஸ் (தர்ஸன பாகுடம்) 4.Dr. ஜினதாஸ்- ஜெயந்தி ஜினதாஸ் (மோக்ஷ பாகுடம்) 5. ஸ்ரீ சுருத கேவலி பத்ரபாகு சுவாமி சேவா தளம், குந்தகுந்த நகர் (பாவ பாஹுடம்), 6.J.குமார்& R.ஜுவாலாமாலினி இராஜசேகரன் (சீல பாகுடம்), 7. M.மந்திரகுமார்-S.பத்மாவதி, காஞ்சிபுரம் (ஸுத்த பாகுடம்) மற்றும் 8. S.பாகுபலி ஜெயின் - சரஸ்வதி பாகுபலி ஜெயின் (லிங்க பாகுடம்) ஆகியோரை அணுகி மீண்டும் வெளியிட அனுமதி கோரினோம். அவர்களும் உவகையுடன் அனுமதி அளித்தனர். அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக எங்களுடைய உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந் நூலினை நன்றாக ஆராய்ந்து தரம் பார்த்து வெளியிடுவதற்கு உதவிய எங்களின் ஆன்மீக குரு திரு.ஜம்புகுமார் ஜெயின் சாஸ்திரியார் அவர்களுக்கும், தட்டச்சு எழுத்து பிழையினை சரி பார்த்து உதவிய திரு V.A. பிரபாகரன், திருமதி சாந்தி சுகுமாரன் மற்றும் திரு து. இரவிச்சந்திரன் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இந்த ஆகம நூலினை சிறப்பாக கணினி கட்டமைப்பு செய்து நேர்த்தியாக அச்சுட்டு உதவிய மும்மணி பதிப்பகம் திருமதி.கவிதா மதிசாகர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைத்து பவ்ய ஜீவன்களும் இந்த ஆகம நூலை ஸ்வாத்யாயம் செய்து ஆன்ம நலன் பெறுமாறுகேட்டுக்கொள்கிறேன்.

- திருமதி.அம்ஸாஆதிதாஸ்

	பொருளடக்கம்	
01.	தரிசன பாஹுடம்	1
02.	ஸுத்த பாஹுடம்	41
03.	சாரித்த பாஹுடம்	71
04.	போத பாஹுடம்	119
05.	பாவ பாஹுடம்	173
06.	மோக்ஷ பாஹுடம்	349
07.	இலிங்க பாஹுடம்	443
08.	சீல பாஹுடம்	469

பஞ்ச மந்திரம்

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆஇரியாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ லோஏ ஸவ்வ ஸாஹூணம்

ஏஸோ பஞ்ச ணமோ யாரோ,
ஸவ்வ பாவப் பணாஸணோ|
மங்கலாணஞ்ச ஸவ்வேஸிம்,
படமம் ஹோஇ மங்கலம் ||

குறிப்பு : இது சாஸ்திரம். இதனை அதற்குறிய பணிவோடு ஆளுக. பயன் கொள்க. ஒவ்வொரு முறை ஓதும் போதும் நூல் முடிக்கும் வரை ஏதேனும் பொருளைத் தியாகம் செய்தல் நல்லது.

ஆகமம் படிக்கும் முன் கூற வேண்டிய

அருகர் வாழ்த்து

ஓங்கார பிந்து சம்யுக்தம்
நித்யம் த்யாயந்தி யோகின |
காமதம் மோக்ஷதம் சைவ
ஓங்காராய நமோ நம: ||

அவிரள சப்த கனௌக
ப்ரக்ஷாளித ஸகல பூதல மல களங்கா |
முனிபிருபா ஸித தீர்த்தா
ஸரஸ்வதி ஹரது நோ துரிதான் ||

அஞ்ஞான திமிராந்தானாம்
ஜ்ஞானாஞ்ஜன சலாகயா |
சக்ஷுருன் மீலிதம் யேந
தஸ்மை ஸ்ரீகுருவே நம: ||

ஸ்ரீ பரம குருவே நம: பரம்பராசார்ய
ஸ்ரீ குருவே நம:

ஸகல கலுஷ வித்வந்ஸகம் ஸ்ரேயஸாம் பரிவர்தகம், தர்ம சம்பந்தகம், பவ்ய ஜீவமந: ப்ரதிபோதகாரக மிதம் சாஸ்த்ரம் **ஸ்ரீ அஷ்ட பாஹுடம்** நாமதேயம் அஸ்ய மூல க்ரந்த கர்த்தாரா: ஸ்ரீ சர்வக்ஞதேவா ஸ்துதத்தர க்ரந்த கர்த்தாரா: ஸ்ரீ கணதர தேவா: ப்ரதிகணதரதேவாஸ் தேஷாம், வசோ அனுஸார மாசாத்ய **ஸ்ரீமத் குந்தகுந்த ஆசார்ய** விரசிதம்

மங்கலம் பகவான் வீரோ
மங்கலம் கௌதமோ கணீ |
மங்கலம் குந்த குந்தாத்யோ
ஜைன தர்மோஸ்து மங்கலம் ||

ஸர்வ மங்கல்ய மாங்கல்யம்
ஸ்ர்வ கல்யாண காரகம் |
ப்ரதானம் ஸர்வதர்மாணாம்
ஜைனம் ஜயது ஸாஸனம் ||

ஸ்ர்வே ஸ்ரோதார ஸாவதானதயா ஸ்ருண்வந்து ||

தரிசன பாஹுடம்

மங்கல நுழைவாயில்

இன்பம் வாழ்க்கையின் பயன் ஆகும். அதனால் இன்ப நோக்கில் வாழ்க்கை அமைய வேண்டும் / அமைக்க வேண்டும். ஒரு பொறியுடைய செடி கொடி முதல் மனமுடைய மனிதர் வரை இன்பம் வேண்டியே வாழ்க்கை நடைபெறுகிறது. அது ஏன்?

உயிர் என்பது இன்ப வடிவம். அந்த உயிர் தன் இன்ப வடிவை முழுதும் துய்க்க முடியாமல் வரம்பற்ற காலமாக வினை எனும் வலையில் சிக்கித் தடுமாறுகிறது. அந்தத் தடுமாற்றத்தைத் தான் ஆன்றோர் "மாற்று" - பிறவி என்றனர்,

மாற்றில் நின்றது வையக மூன்றிலும்
ஆற்ற வும்பரி யட்டமோ ரைந்தினால்
தோற்றம் வீதல் தொடர்ந்திடையில்வினைக்
காற்றி னால்கதி நான்கில் சுழலுமே (மே.பு.71)

தொடர்ந்து பிறவியில் சுழலும் உயிர் தன் இயல்பான இன்ப வடிவை அறியவில்லை. ஆனால் அதன் பண்பு இன்ப வடிவாக இருப்பதால் அது இன்ப அனுபவம் வேண்டியே இயங்குகிறது, அதுவே அதன் வாழ்வு. ஆனால் அந்த வாழ்வில் அது இன்பம் என்று எதனை நுகருகிறதோ அதுவே அதற்குத் துன்பம் தருவதாகவும் அமைகின்றது. இன்பம் வேண்டி செய்கின்ற எதுவும் துன்பம் தருவதாக ஏன் அமைகிறது? உயிரின் பண்பு இன்பமே தவிர, துன்பம் அன்று. பிறகு இந்தத் துன்பம் எங்கிருந்து வருகிறது? இந்த வினாவுக்கு விடைதான் ஆன்றோர் அளித்த ஆகமங்கள். அவரும் இன்பம் ஏன் துன்பத்தோடு கூடி வருகிறது என்று வினா எழுப்பி, விடை கண்டு, பயின்று, துன்பம் இல்லாப் பேரின்ப நிலையைப் பெற்று நிற்கின்றனர். தாம் பெற்ற பயனை அறிவை அருளுணர்வோடு ஆகமமாக வடித்துத் தந்துள்ளனர். துன்பமில்லா இன்பத்துக்கு வழி "நற்காட்சி நெறி" என்றனர். அந்த நற்காட்சியின் சிறப்பை உணர்ந்த ஆசாரியர் குந்த குந்த தேவர் "தம்ஸண மக்கம்" எனும் நூலை ஆக்கித் தந்துள்ளார். அது "தரிசன பாகுடம்" எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆனால் நூலுக்கு ஆசாரியர் சூட்டியுள்ள பெயர் "தம்ஸண மக்கம்". அதன் பொருள் "நற்காட்சி நெறி" ஆகும்.

நற்காட்சி எனில் நல் நம்பிக்கை. நம்பிக்கையோடு ஒழுகுவதும் "நம்பிக்கைதான்", மரத்துக்கு வேர் போல நற்காட்சி வேராக விளங்குகிறது. ஆன்ம தருமத்துக்கு - இயல்புக்கு! நற்காட்சி தூய உயிரின் உணர்வாகும். அந்த உணர்வு வினைத் தொடர்பால் திரிந்து காணப்படுகிறது. அதனையே பொய்ம்மை அல்லது பொய் நம்பிக்கை (மித்யா தரிசனம்) என்கின்றனர். பொய் நம்பிக்கை வினை மூன்று

கூறுபடும்: 1. பொய்ம்மை, 2. மெய்ம்மை பொய்ம்மை, 3. மெய்ம்மை. இதற்குத் துணையாக நிற்பன வெகுளி, மானம், மாயை, பற்று (உலோபம்). இந்த நான்கும் "அனந்தானுபந்தி கசாயம்" என்று கூறப்படும். இப்படி ஏழு வகைப்படும் வினைத் துகள்கள் நற்காட்சியைத் திரிப்பன. இந்த ஏழும் தணிவதால் முதலில் தணிவு நற்காட்சி (உபசம சம்யக்த்வம்), ஏற்படுகிறது, இது ஏற்பட பல புறக் காரணங்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையான சில: ஜிந பிம்ப தரிசனம், பஞ்ச கலியாண வைபவம் காணல், முற் பிறவி நினைவு, பெருந்துன்ப உணர்வு, அறம் கேட்டல் முதலாயின.

இந்த ஏழு வினைகளில் ஆறு வினைகள் தணிவோ, அழிவோ அடைய மெய்ம்மை வினை உதயத்தில் இருந்தால் "தணிவு-அழிவு" நற்காட்சி (க்ஷயோபசம சம்யக்த்வம்) ஏற்படுகிறது. இதில் சற்று மீறல்கள் (அதிசாரங்கள்) காணப்படும். இந்த ஏழு வினைத் துகளும் அழியும் போது அழிவாலான நற்காட்சி (க்ஷாயிக ஸம்யக்த்வம்) ஏற்படுகிறது.

இந்த மூன்று வகையால் உயிர் உணர்வுகளில் மாற்றம் காணப்படுகிறது. பகவானே இதனை அறிய முடியும். ஏனெனில் அவை சமய கால உணர்வுகள் - பையைகள் - பரியாயங்கள். அதனால் இதற்கு நிமித்தமான வினைத் திரள்களும் அவற்றின் ஆற்றல்களும் மிக மிக நுட்பமானவை. மனித அறிவுக்கு எட்டக் கூடியன அல்ல. என்றாலும், சில உணர்வுகள் அறியக் கூடியனவாகவும் அமைகின்றன. அவற்றை அறிய புறத்தே அடையாளங்கள் உள்ளன. அவற்றை ஆய்ந்து தெளியலாம்.

தத்துவங்களில் நம்பிக்கை வைத்தல் புறச் சின்னம். உயிர், உயிரல்லது, உயிர்களின் ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடு இவை ஏழு தத்துவங்கள். புண்ணிய பாபம் சேர்த்தால் ஒன்பது பதார்த்தங்கள். அவற்றில் ஒழுகுதல் இவை எல்லாம் புற அடையாளங்கள்.

அனந்தானுபந்தி கசாயம் உதயம் இல்லாமல் இருக்கும் உணர்வு "பிரசமம்" (தணிந்து இருத்தல்) எனப்படுகிறது. ஒரு துணிபுடையோருடைய கருத்துகள் ஏற்காமை, புறத் தோற்றத்தையே உண்மை என நம்புதல் இல்லாமை, தனக்கு இன்னா செய்வோரை வெகுளாமை முதலான உணர்வுகள் "பிரசமம்" ஆகும். நான் "ஈட்டிய வினைகளே எனக்கு ஈட்டி"; "எய்பவர் நிமித்தமே" எனும் உணர்வு கொள்ளல் கசாயம் தணிதல் ஆகும். தருமத்திலும் தருமத்தின் பயனிலும் உள்ளோரிடமும், பஞ்ச பரமேட்டிகளிடமும் கொள்ளும் உவகையும் அன்புடைமையே, புலனின்பங்களிடம் ஆர்வம் கொள்ளாமை "நிர்வேத"மாகும். எல்லா உயிர்களுக்கும் உதவும் உணர்வு கொள்ளல் "அனுகம்பா" - நட்புணர்வு ஆகும். நடுநிலை உணர்வுடன் இருப்பதால் நற்காட்சியாளனுக்கும் எவரிடமும் பகை உணர்வு இராது. இறப்பு - பிறப்பு, இன்பம் - துன்பம் தனக்குப் பிறரும் பிறருக்குத் தானும் செய்வதாகக் கருதார். பிறருக்கு நன்மை செய்தால் தன்னுயிர்க்கு நன்மை, பிறருக்குத் தீமை செய்தால் தன்னுயிர்க்குத் தீமை

செய்தலாம் எனத் தெளிந்து துவர்ப்பு (கசாயம்) கொள்ளாது இருத்தல் தன்னிடம் கொள்ளும் நட்புணர்வாகும்.

உயிர் முதலான பொருள்களை அருகர் எப்படி அருளினாரோ அப்படியே உள்ளவாறு ஏற்று நிற்றல் உறுதி உணர்வு - "ஆஸ்திக்யம்" ஆகும். இவை எல்லாம் நற்காட்சியுடையாரைச் சுட்டும் புற அடையாளங்கள். நற்காட்சியுடையாருக்கு ஐயமின்மை முதலான எட்டு குணங்களும் அவரைக் காட்டுவனவே. அருங்கலச் செப்பு முதலான நூல்களில் இவற்றின் விளக்கங்களைக் காணலாம்.

இத்தகு சிறப்புடைய நற்காட்சி குறித்து பேசாத சமண நூல்கள் ஒன்று கூட இல்லை. எல்லா நூல்களும் இதன் சிறப்பை, முதன்மையைப் பேசுகின்றன. ஆசாரியர் குந்த குந்தரும் நற்காட்சியின் சிறப்பு - முதன்மை குறித்து 36 காதைகளில் விளக்கியுள்ளார். நற்காட்சியின் சிறப்பை விளக்கும் ஆசாரியர் நற்காட்சியுடையார் நற்காட்சி இல்லாரை எப்படி அணுக வேண்டும் என இந்நூலுள் காட்டியுள்ளார். அதுவே இதன் தனிச் சிறப்பாகும்.

அக ஒழுக்கம் இல்லாது புற ஒழுக்கம் உடையாரை அவர் பூண்டுள்ள தோற்றம் கொண்டு போற்றக் கூடாது என்கிறார். போலித் துறவி நற்காட்சியுடையாரைப் பணிய வைப்பதால் நிகோத பிறவியை அடைகிறார் என இடித்துக் காட்டுகிறார். ஜிநர் நெறியில் - நற்காட்சி நெறியில் - துறவுத் தோற்றம் மூன்று தான் என வரையறுக்கிறார். அதனால் தன்னை ஜிநத் துறவி எனக் காட்டும் பிற தோற்றங்களை ஒதுக்க ஆணை இடுகிறார். இவை எல்லாம் நற்காட்சியுடையார் தெளிந்து உறுதியோடு போற்ற வேண்டியவை.

உலகில் கிடைக்கும் அரு மணிகளுக்கு மதிப்புக் கூற முடியும். ஆனால் நற்காட்சி மணிக்கு யாரும் மதிப்பிட முடியாது. அந்த மணி காட்டும் ஒளியில் தான் இதுவரை உயிர்கள் பேரின்ப நிலையை அடைந்துள்ளன; இன்றும் பேரின்ப நிலையை அடைகின்றன; எதிர்காலத்திலும் அடையும். அந்த இனிய உவமை இலா ஒப்பிலா நற்காட்சி பெற அழைக்கிறார் ஆசாரியர். அந்த மங்கல நுழைவு அமைவதாக! நற்காட்சி நெறி அமைவதாக!

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே - (மே.பு.1406)

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

தம்ஸண மக்கம்

எனும்

நற்காட்சி நெறி

[தர்ஸன பாகுடம்]

(பாகத மூலமும். தமிழ் உரையும்)

மங்கல வாழ்த்து

1. **காவூண ணமுக்காரம் ஜிணவர வஸஹஸ்ஸ வட்ட மாணஸ்ஸ|**
தம்ஸண மக்கம் வோச்சாமி ஜஹா கம்மம் ஸமாஸேண ||

(பதஉரை) : ஜிண - ஜிநர்களுள், வர - உயர்ந்த, வஸ ஹஸ்ஸ - (ஆதிநாதர் எனப்படும்) விருஷப தேவருக்கும், வட்ட மாணஸ்ஸ - (கடைசி தீர்த்தங்கரர்) வர்த்தமானருக்கும், ணமுக்காரம் - வணக்கம், காவூண - செய்து, தம்ஸண - தரிசன, மக்கம் - நெறியை, ஜஹா கம்மம் - முறையாக, ஸமாஸேண - சுருக்கமாக, வோச்சாமி - உரைக்கிறேன், என்றவாறு.

(கருத்துரை) : (ஆசாரியர் குந்த குந்தர்) நான் விருஷப தேவரையும் வர்த்தமானரையும் வணங்கி, நற்காட்சி (தம்ஸண) நெறியை (மார்க்கம்) முறையாகச் சுருக்கமாக உரைக்கிறேன்.

(விளக்க உரை) : ஆசாரியர் குந்த குந்த தேவர் மங்கல வாழ்த்துடன் நூலைத் தொடங்குகிறார். நூலை மங்கல வாழ்த்துடன் தொடங்க வேண்டும்.

"வழிபடு தெய்வம் வணக்கம் செய்து
மங்கல மொழிமுத லாக வகுத்தே
எடுத்துக் கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் இன்றி இனிது முடியும்"

என்ப ஆதலின். இங்கு வணக்கம் கூறி நூலைத் தொடங்கியுள்ளார். இவ்வாறு நூலைத் தொடங்குதல் நூலறிந்தார் மரபாகும்.

தீர்த்தங்கரரை வழிபடுதலின் மங்கலம் ஆயிற்று. நூல் தோன்ற முதன்மையான நிமித்தம் பவ்வியர். பவ்வியருடைய ஆன்ம நன்மை வேண்டி நூலைப் படைத்தார். பயன் என்பது ஏது. அறியாமை நீக்கமும் அறிவு கொள்ளுதலும் பயன் ஆகும். நல்லறிவு கொடுத்தலால் வினை அழிவுக்கு ஏது ஆகிறது. அளவு நூலின் அளவு. சுருக்கமாக உரைப்பன் என்றார். 36 காதைகள் நூலுள் உள்ளன. நூலின் பெயர் "தம்ஸண மக்கம்"

- "தரிசன நெறி" என்பதாம். கருத்தா ஆசாரியர் குந்த குந்தர் "வோச்சாமி" (உரைக்கிறேன்) என்பதனால் பெறப்பட்டது.

இப்படி ஆசாரிய தேவர் இம்மங்கல வாழ்த்துப் பாடல் வழி நூல் செய்திகளைத் தந்துள்ளார்,

"ஜிண வர" என்ற தொடர் சிறப்புடையது. "ஜிண" என்றால் "வினை வெல்பவர்" என்று பொருள். நற்காட்சி பெற்றவர் தொடங்கி அனைவரும் "ஜிநரே"! அதாவது நான்காம் குணத்தானம் முதல் வினை அழிவு மடங்கு முறையில் (குண ஸ்ரேணி) நிகழ்வதால் அவரனைவரும் ஜிநர் எனப்படுகின்றனர். அவர்களுள் "வர"- உயர்ந்தவர் என்பதால் பகவானைக் குறிப்பது ஆயிற்று. "வஸஹஸ்ஸ"(விருஷபதேவர்) என்றதால் முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் ஆயிற்று. அவரை வணங்கினார். "வட்டமாண" எனில் வளர்ச்சி / உயர்ச்சி என்று பொருள். இது எல்லா தீர்த்தங்கரருக்கும் பொருந்தும். என்றாலும், முதல் தீர்த்தங்கரரைக் குறிப்பிட்டதால் கடைசி தீர்த்தங்கரரையும் வணங்கினார் எனலாம். முதலும் முடிவும் குறிப்பிட்டதால் இடைப்பட்டவரும் வணங்கப்பட்டனர் என்பது கருத்தாம். இப்படி எல்லா தீர்த்தங்கரரையும் வணங்கினார்.

"தம்ஸண மக்கம்" உரைப்பன் என்றார். இங்கே "தம்ஸண" என்ற சொல் ஆழ்ந்த பொருளுடையது. "மக்கம்" எனில் மார்க்கம் - நெறி. நெறி கூறுவன் என்பதால் உயிர் நடக்க வேண்டிய நெறி ஆயிற்று. அது எந்த நெறி? கோட்பாடு எது? நற்காட்சி கோட்பாடு. உயிர் தன் தூய உயர்ந்த நிலையை அடைதல் நற்காட்சியால் ஆகும். அது பயணம் - நெறி ஆகும். ஆசாரியர் கருத்துப்படி நற்காட்சியில் உயிரின் முக்தி பயண நெறி தொடங்குகிறது.

உமாசுவாமி ஆசாரியரும் "ஸம்யக் தர்சன ஜ்ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:" என்றார். அவரும் "மார்க்கம்" என்று குறிப்பிட்டு இருத்தலை அறியலாம். நற்காட்சிதான் வழி-நெறி ஆகும். அந்த நற்காட்சியை இந்நூல் விளக்குவதால் "நற்காட்சி நெறி" என நூலுக்குப் பெயர் சூட்டினார் எனலாம். "தம்ஸண" என்ற சொல்லுக்கு மதம் அதாவது கோட்பாடு / கருத்து என்ற பொருளும் உண்டு. இந்நூல் ஆய எடுத்துக் கொண்ட கோட்பாடு "நற்காட்சி" ஆவதால் "தம்ஸண" என்பதற்கு "நற்காட்சி" எனப் பொருள் காணல் பொருத்தமாகும்.

2. தம்ஸணமூலோ தம்மோ உவஇட்டோ ஜிணவரேஹிம் ஸிஸ்ஸாணம்|
தம் ஸோஊண[1] ஸகண்ணே தம்ஸணஹீணோ ண வந்திவ்வோ||

(ப-ரை) : ஜிணவரேஹிம் - தீர்த்தங்கரர், ஸிஸ்ஸாணம் - கணதரர் முதலான சீடர்தமக்கு, தம்மோ - தருமத்தின், மூலோ - மூலம் (வேர்), தம்ஸண - தரிசனம், என, உவஇட்டோ - உரைத்தருளினார்; தம் - அந்த தருமத்தை, ஸகண்ணே - தன்

1. பாடபேதம் : 'ஸோதூண'

செவியால், ஸோஊண - கேட்டு, தம்ஸணஹீணோ - அத் தரிசனத்தைப் போற்றாதார், வந்திவ்வோ - வணக்கத்துக்கு, ண - உரியரல்லர். எ.று.

(க-ரை) : தீர்த்தங்கரர், தருமத்தின் வேர் தரிசனம் எனத் தம் சீடர்களுக்கு அருளினார். அதனைத் தம் செவியால் கேட்டுப் போற்றாதாரை வணங்குதல் கூடாது.

(வி-ரை) : ஆசாரியர் தருமத்துக்கு வேர், தரிசனம் என்கிறார். உயிரைப் பிறவி நிலையிலிருந்து விலக்கி பேரின்ப நிலையில் எது நிறுத்துகிறதோ அது "தருமம்" எனப்படும். ஆசாரியரும் தம் நூல்களுள் இச்சொல்லைப் பல இடங்களில் ஆண்டுள்ளார். என்றாலும், இச்சொல்லை இங்கே ஆன்மாவோடு தொடர்புபடுத்திச் சிறப்பிக்கிறார். அந்தத் தருமத்துக்கு வேர் போன்றது தரிசனம். மரத்துக்கு வேரும் மாளிகைக்கு கடைக்காலும் எப்படி முதன்மையானவையோ அதே போல தருமத்துக்குத் தரிசனம் முதன்மையானது. அதனால் அதனை வேர் - மூலம் என்றார். அந்தத் தருமத்தில் நம்பிக்கை, ஈடுபாடு கொள்ளுதல், அதில் முயற்சியோடு ஒழுகுதல் "தரிசனம்" ஆகும். இதனை நம்பிக்கை என்பர். இதுவே "மதம்". அதாவது கோட்பாடு எனப்படுகிறது. அந்த தருமத்தில் நம்பிக்கை, ஈடுபாடு இல்லை என்றால் பிறகு நல்லொழுக்கமும் அமைய முடியாது. அதனால் வீடுபேறும் விளையாது, அதனால் தான் ஆகமங்கள் முதலில் தருமம் பற்றியும் தரிசனம் பற்றியும் மிக விரிவாக விளக்குகின்றன.

இந்தக் காதையில் இன்னொரு கருத்தையும் ஆசாரியர் குறிப்பிடுகிறார். தரிசனம் இல்லாதவர் வணக்கத்துக்கு உரியவர் அல்லர் என்கிறார். தரிசனம் இல்லை என்றால் அங்கே தருமம் இருக்க முடியாது. தருமம் இல்லாத போது அங்கே வணங்கி தருமத்தைப் பெற முடியாது. அதனால் அவரை வணங்கக் கூடாது என்கிறார். "வந்தே தத்குண லப்தயே" என்கிறார் சூத்திரக்காரர். குணங்களைப் பெறவே வந்தனை செய்யப்படுகிறது. குணம் இல்லை என்றால் பிறகு வந்தனை ஏன் செய்ய வேண்டும்? நாம் குணம் பெற. யாரை வணங்குகிறோமோ அவர் நிமித்தமாகிறார். அதனால் வணக்கம், வழிபாடு என்பது ஆன்ம குணம் பெற என்பதாயிற்று. அதனால் நற்காட்சி இல்லாதாரை வணங்குதல் கூடாது என்பதாம். தோற்றம் பார்த்து வணங்குதல் கூடாது. நெறி பார்த்து வணங்க வேண்டும்.

3. தம்ஸணபட்டா பட்டா தம்ஸணபட்டஸ்ஸ ணத்தி ணிவ்வாணம்|
ஸிஜ்ஜந்தி சரியபட்டா தம்ஸணபட்டா ண ஸிஜ்ஜந்தி||

(ப-ரை) : தம்ஸண - நற்காட்சி, பட்டா - இழந்தவன், பட்டா - இழிந்தவன், தம்ஸண பட்டஸ்ஸ - நற்காட்சி இழந்தவனுக்கு, ணிவ்வாணம் - வீடுபேறு, ணத்தி - இல்லை; சரிய - நல்லொழுக்கத்தில், பட்டா - இழிந்தவன், ஸிஜ்ஜந்தி - அடைகிறான்; தம்ஸணபட்டா - நற்காட்சி இழிந்தவன், ண ஸிஜ்ஜந்தி - அதனை அடையமாட்டான்.

(க-ரை) : நற்காட்சியை நழுவவிட்டவன் வீடுபேற்றை இழந்து விடுகிறான்; அதனால் அவன் இழந்தவன் / இழிந்தவன். நல்லொழுக்கத்தில் இழிந்தவன் வீடுபேற்றை அடையக் கூடும். ஆனால், நற்காட்சியை இழந்தவன் அதனை அடையமாட்டான்.

(வி-ரை) : ஆசாரியர், நற்காட்சி இருந்து ஒழுக்கம் இழந்தவன், மீண்டும் ஒழுக்கம் பெற்று வீடுபேற்றை அடைய முடியும்; ஆனால் ஒழுக்கம் இருந்தாலும் நற்காட்சி இல்லை என்றால் வீடுபேற்றை அடைய முடியாது என்று நற்காட்சியின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுகிறார். சாரித்திரம் இல்லாமல் வீடுபேறு பெறலாம் என்று கருதி விடக் கூடாது. காதையைப் படித்தவுடன் அப்படிக் கருதக் கூடும்.

நூலைப் படிக்கும் முறையில் சொல்லின் பொருள், நயத்தின் பொருள், கருத்துப் பொருள், நூற்பொருள், உள்ளூறைப் பொருள் காண வேண்டும். சொல்லின் பொருளை மட்டும் கொண்டு ஆசாரியரின் உட்கிடக்கையை அறிய முடியாது. எடுத்துக்காட்டாக "ஆன்மா நித்தியம்" என்று சொன்னால், "நித்தியம்" என்ற சொல்லின் பொருள் என்ன? எந்த நய நோக்கில் பொருள் நித்தியம்? ஏன் நித்தியம்? நூலில் இதன் விளக்கம் என்ன? இதன் உட்கிடக்கை அல்லது உள்ளூறை என்ன? இவை எல்லாம் அறிந்த பிறகே பொருளை அறிய முடியும்.

அதே போல ஒழுக்கத்தில் இழிந்தவன் வீடுபேறு அடைகிறான் எனில் நற்காட்சியால் மட்டுமே வீடுபேறு அடைகிறான் எனக் கருத்து அன்று. இங்கே கருத்து என்னவென்றால் நற்காட்சியுடையவன் தற்போது வினை உதயத்தால் ஒழுக்கம் இல்லாமல் இருக்கிறான். ஆனால் எதிர் காலத்தில் உறுதியாக ஒழுக்கம் ஏற்பான். ஒழுக்கம் ஏற்கவில்லை என்றால் நற்காட்சி நழுவிவிடும். நான்காம் குணத்தானத்தில் அதிக அளவு சற்றுக் கூடிய 33 கடல்காலம் வரை இருக்க முடியும். அதன் பிறகு ஒழுக்கம் ஏற்பான். இல்லை என்றால் நற்காட்சி நீங்கி விடும். ஆனால், ஒழுக்கத்தை மட்டும் உடையவன் நற்காட்சி அடைவான் என உறுதி இல்லை. ஆகையால் தான் "நற்காட்சி இழந்தவன் இழிந்தவன், ஒழுக்கம் இழந்தவன் இழிந்தவன் அல்லன்" என்றார். நற்காட்சி இல்லாதவன் பவ்விய சேண முனி, வசிஷ்ட ரிஷி போன்று பிறவிக் கடலில் சுழல வேண்டியது தான். வேர் இருக்கும் போது மரத்தின் கிளைகளைக் கழித்தாலும் அவை மீண்டும் துளிர்த்து விடும்; ஆனால் வேரையே வெட்டி விட்டால், பிறகு கிளை முதலியன கிளைப்பது எப்படி?

4. ஸம்மத்தரயணபட்டா ஜாணந்தா பஹுவிஹாஇம் ஸத்தாஇம்|
ஆராஹணாவிரஹியா பமந்தி தத்தேவ தத்தேவ||

(ப-ரை) : பஹு - பல, விஹாஇம் - வகைப்படும், ஸத்தாஇம் - ஆகமங்களை / நூல்களை, ஜாணந்தா - அறிந்தவரானாலும், ஸம்மத்த - நற்காட்சி, ரயண - மணியை,

பட்டா - இழந்தவர். ஆராஹணா - ஆராதனை (போற்றுதல்), விரஹியா - இழந்து, தத்தேவ தத்தேவ - அங்கேயே அங்கேயே, பமந்தி - சுற்றுகின்றனர். எ-று.

(க-ரை) : நூல்கள் / ஆகமங்கள் பல கற்றுத் தேர்ந்தவரானாலும் அருமணியாம் நற்காட்சியை இழந்தவர் நீண்ட நெடுங்காலம் பிறவியில் உழல்வார்.

(வி-ரை) : நற்காட்சி இல்லாதவர் எத்தனை நூல்களில் புலமை பெற்று இருந்தாலும் அப்புலமையால் ஆன்மாவுக்கு எந்தப் பயனும் இல்லை. அறிவும் ஒழுக்கமும் நற்காட்சி உள்ள போதுதான் நல்லறிவாகவும் நல்லொழுக்கமாகவும் அமைகின்றன. இந்திர பதவி, பேரரசர் பதவி, தீர்த்தங்கரர் பதவி, வீடுபேறு இவை எல்லாம் நற்காட்சி கூடிய ஒழுக்கத்தாலேயே அடையப்படுகின்றன.

"அரசர் இளவரசர் செட்டியரும் ஆவர்
புரைதீர்ந்த காட்சியவர்" (அருங்கலச்செப்பு - 53)

"விச்சா தரரும் பலதேவரும் ஆவர்
பொச்சாப்பில் காட்சியவர்" (அருங்கலச்செப்பு - 55)

"முச்சக் கரத்தோடு சித்தியும் எய்துவர்
நச்சறு காட்சியவர்" (அருங்கலச்செப்பு - 56)

என நற்காட்சியின் சிறப்பைப் பலவாறு விளக்குகிறது அருங்கலச்செப்பு.

இலக்கணம், நியாயம், யாப்பு, அணி முதலாக எத்தனை நூல்களில் புலமை பெற்று இருந்தாலும், பல ஆகமங்களில் புலமை பெற்று இருந்தாலும் நற்காட்சி போற்றப்பட வில்லை என்றால் அப்புலமையால் பயன் இல்லை. நற்காட்சி உணர்வே எல்லா உணர்வுகளிலும் சிறப்பானது என்பதனால் அதனை அருமணி (இரத்தினம்) என்றார்.

ஆராதனை நான்கு. அவை : நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம், தபம். இந்த நான்கிலும் இடைவிடாது நிகழ்தல் ஆராதனை எனப்படுகிறது. நற்காட்சி இல்லை என்றால் இந்நான்கு ஆராதனையும் அமையாது; வீடுபேறும் அமையாது. அதனால் குமரணம் அடைந்து நாற்பிறவிச் சுழலில் சுழல வேண்டும். நற்காட்சி இல்லாத நூலறிவுக்கு ஆராதனை என்னும் பெயர் இடப்படுவதில்லை. நற்காட்சி வழிப்படும் ஒழுக்கத்தை ஒதுக்கிவிட்டு எத்தனை ஆகமங்களில் புலமை பெற்றாலும் அதனால் பயன் இல்லை. பதினோரு அங்கம் அறிந்தவர் ஏழாம் நரகம் அடைகிறார். ஆராதனையைப் போற்றாமையால் என்பதனை நினைவு கூர்க.

5. ஸம்மத்தவிரஹியா ணம் ஸுட்டு வீ உக்கம் தவம் சரந்தா ணம்|
ணலஹந்தி போஹிலாஹம் அவி வாஸஸஹஸ்ஸகோடீஹிம்||

(ப-ரை) : ஸம்மத்த - நற்காட்சி, விரஹியா - இல்லாதவர், ஸஹஸ்ஸகோடீஹிம் - ஆயிரம் கோடி, வாஸ அவி - ஆண்டுகளானாலும், ஸுட்டு வி - வியத்தகு, உக்கம் -

கடும், தவம் - தவத்தை, சரந்தா - நிகழ்த்தினாலும், போஹிலாஹம் - மும்மணி பேற்றினை, ண லஹந்தி - அடையார், எ-று.

(க-ரை) : ஆயிரம் கோடி ஆண்டுகள் வியத்தகு கடுந்தவத்தை மேற்கொண்டாலும், நற்காட்சி இல்லார், மும்மணியை அடையார்.

(வி-ரை) : "ணம்" சொற்கள் இசை நிறைக்க வந்தவை. புறத்தபத்தை ஆசாரியர் இங்கே சுட்டியுள்ளார். துறவியர் வேடந்தரித்த அனைவரும் ஏதேனும் தபங்களைச் செய்வதாகவே கூறுகின்றனர். ஆனால் இங்கே ஆசாரியர் அவர் பெருமை பேசும் தபத்தை வழி மொழிந்து, அகத் தபம் இல்லை என்றால் புறத் தபத்தால் எந்தப் பயனும் விளையாது என்று சுட்டுகிறார்.

அவர் தபம் குறித்து மூன்று அடைமொழிகள் தந்துள்ளார். அவை "ஸுட்டு". "உக்கம்", "வாஸ ஸஹஸ்ஸ கோடீ". "ஸுட்டு" எனில், வியத்தகு என இங்கே பொருள் காணலாம். பார்ப்பவர் அவர் தபத்தை வியப்போடு பார்க்கிறார். அல்லது பார்ப்போர் வியக்கும்படி அவர் தபம் செய்கிறார். தப நிலைகளால் (ஆஸனங்களால்) வியப்பைக் காட்ட முடியும். அடுத்து. "உக்கம்", எனில் கடுமை (உக்ரம்) என்று பொருள். பல திங்கள் "உபவாசம்" முதலான கடுமையான நோன்புகளை ஏற்று தபம் செய்தல். அடுத்து "வாஸ ஸஹஸ்ஸ கோடீ" ஆயிரம் கோடி ஆண்டுகள் தபம் செய்தல், அதாவது நீண்ட காலம் தபம் செய்தல் என்று பொருள். ஆண்டுகள் எண்ணிக்கையை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. காலத்தின் மிகு நீட்சியைச்சுட்டினார் எனக் கொள்ள வேண்டும்.

நற்காட்சி இல்லாமல் இத்தகு தபங்களைச் செய்வதால் ஏதும் பயன் இல்லை என்பதாம். ஏனெனில் வீடு பேற்று நிலையை ஆன்மா அடைகிறது. மும்மணி ஆன்மாவின் நிகழ்வு / இயல்பு ஆகும். அதனை உடைய ஆன்மாவே வீடுபேறு அடைகிறது. தன் ஆன்ம இயல்பை உணராதவர் செய்யும் எந்தத் தபமும் - அது எவ்வளவுதான் போற்றப்பட்டாலும் - வீடு பேற்றைத் தரும் மும்மணியைத் தராது என்றார். அதாவது தன் இயல்பை அடைய முடியாது என்பதாம்.

"அரிய கொள்கையர் ஆரழல் ஐந்திடை
மருவி வீடுவிளைக்குறு மாட்சியர்
விரிய வேதம் விளம்பிய நாவினர்"

என நற்காட்சி இல்லாத தவத்தைச் சுட்டுவார் ஆசாரியர் திருத்தக்க தேவர்.
(சீ.சி.1423).

6. ஸம்மத்த ணாண தம்ஸண பல வீரிய வட்டமாண ஜே ஸவ்வே|
கலிகளுஸ பாவரஹியா வரணாணீ ஹோந்தி அஇரேண||

(ப-ரை) : ஸம்மத்த - நன்றான, ணாண - அறிவு, தம்ஸண - காட்சி, பல - வலிவு, வீரிய - ஆற்றல், ஜே ஸவ்வே - இவற்றில் எல்லாம், வட்டமாண - மிகுந்து, கலி -

கலிகால, களுஸ - மலின, பாவ - பாபங்கள், ரஹியா - இல்லாதார், அஇரேண - வெகு விரைவில், வரணாணீ - முழுதுணர் அறிவராக, ஹோந்தி - ஆகின்றனர், எ.று.

(க-ரை) : நல்லறிவு, நற்காட்சி, வலிவு, ஆற்றல் இவற்றில் வளர்முகமாகவும், கலிகால மலின பாபங்களில் விலகியவராகவும் இருப்போர் விரைந்து முழுதுணர் அறிவராக ஆகின்றனர்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் இந்தக் கலி காலத்திலும் நற்காட்சி நெறியில் சிறக்க முடியும் என இங்கே உணர்த்துகிறார். எல்லாக் காலத்திலும் எல்லாப் பிறவியிலும் எல்லா இடத்திலும் நற்காட்சியை அடைய முடியும், அதனால் ஐந்தாம் காலம் எனப்படும் இந்தக் கலி காலத்திலும் மும்மணியைப் போற்ற முடியும் என்பதாம்.

நல்காட்சி நல்லறிவு என்றதால் நல்லொழுக்கமும் கூறப்பட்டதாகக் கொள்ள வேண்டும். இம்மூன்று மணிகளையும் இடைவிடாது போற்றுவதுடன் முழுமை நோக்கி வளர்க்க வேண்டும், "பல" என்ற சொல் வழி மன, வசன, காயங்களைக் குறிப்பிட்டார் எனக் கொள்ளலாம். இம்மூன்றும் பத்து பிராணன்களில் அடங்கும் என்றாலும் ஆசாரியருடைய பார்வை இம்மூன்றும் வளர்முகமாக பயன்படவேண்டும் என்பதாம். வீரியம் என்பது ஆன்மாவைச் சார்ந்தது. தன் இயல்பில் நிகழும் ஆற்றல் வீரியமாகும். தன்னில் நிற்றலில் வளர்முகம் வேண்டும் என்பதாம். இனி கலி கால பாபங்களிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்கிறார். இன்ன பாபங்கள் என ஆசாரியர் சுட்டவில்லை.

"24ஆம் தீர்த்தங்கரர் காலத்தில் "குலிங்கியர்" தோன்றுவர்; துறவியர் துறவுவொழுக்கத்தைத் தாங்க முடியாது; மூல உத்தர குணங்களை சாதுக்கள் கைவிடுவர்; மனிதர் ஒழுக்கம் கெட்டு இருப்பர்; மக்கள் நல் சாதுக்களை விட்டு பிற சாதுக்களிடம் அறம் கேட்பர்; வியந்தர தேவர்களை வணங்க பிரசாரம் நடக்கும்; தருமம் மிலேச்ச கண்டங்களில் இருக்கும்; அவதி மனப்பரியய ஞானம் இராது; கேவல ஞானம் தோன்றாது" மகாபுராணம் குறிக்கும் பாபங்களில் சில இவை. கருத்து என்னவென்றால் முனி ஒழுக்கம் முறைமையாகப் போற்றப்படாது என்பது தான். இந்தப் பாபங்களிலிருந்தும் விலகி நின்று, உண்மையான நற்காட்சி நெறியைப் போற்றி மும்மணியோடு கூடி ஒழுகி கலி காலத்திலும் எதிர் நெறியில் செல்லாது இருப்பவர் விரைந்து வீடுபேறு பெறுவார் என்பதாம்.

7. ஸம்மத்தஸலிலபவஹோ ணிச்சம் ஹிய ஏ பவட்ட ஏ ஜஸ்ஸ|
கம்மம் வாலுயவரணம் பந்துச்சிய ணாஸஏ தஸ்ஸ||

(ப-ரை) : ஜஸ்ஸ - எவருடைய, ஹியஏ - இதயத்தில், ணிச்சம் - எப்போதும், ஸம்மத்த - நற்காட்சி எனும், ஸலில - நீரோடை, பவஹோ - ஓடுகிறது, தஸ்ஸ - அவருக்கு, கம்மம் - கருமம் எனும், வாலு - தூசு, அவரணம் - மறைப்பு, ணாஸஏ - அழிகிறது; அதோடு, பந்துச்சிய - முன் கட்டிய வினையும், ணாஸஏ - அழிகிறது, எ-று.

(க-ரை) : எவருடைய இதயத்தில் நற்காட்சி நீரோடை ஓடுகிறதோ அவருக்குக் கரும மாசு மறைப்பது இல்லை, முன் கட்டிய கருமமும் கழிகிறது.

(வி-ரை) : ஆசாரியர் நற்காட்சியினால் விளையும் பயனைக் கரும அழிவு நோக்கில் விளக்குகிறார். நற்காட்சி எப்போதும் போற்றப்படவேண்டும். அதற்கு உவமையாக நீர்ப் பெருக்கைச் சுட்டுகிறார். நீரோடை எங்கு உள்ளதோ அங்கு அழுக்குத் தங்கி இராது. நீர் தொடர்ந்து ஓட வேண்டும். அது போல நற்காட்சி எனும் நீர்ப்பெருக்கு அல்லது நீரோடை எப்போதும் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் - அதாவது அதனை இடைவிடாது நெஞ்சில் நிறுத்த வேண்டும். நற்காட்சி நிலைத்து இருப்பதால் அந்த உயிர் எப்போதும் தன் உயிரை நோக்கியதாகவே இருக்கும். அதனால், வினை உதயம் காரணமாக விருப்பு வெறுப்பு தோன்றும் போது "நான் செய்கிறேன்", "நான் துய்க்கிறேன்" எனும் உரிமை உணர்வு அதாவது "நான் எனது" எனும் உணர்வு அவருக்குத் தோன்றுவது இல்லை. அப்போது உயிர் கசாய உணர்விலிருந்து தன் இயல்பு தூய்மையில் மிகுவதால் நீரோடைக்குநிகர் என்றார். நீர் ஓடும்போது அங்கு அழுக்கு தங்குவது இல்லை அல்லவா? அது போல நற்காட்சியுடையவர் வினை உதயத்தைத் துய்த்தாலும் அதனால் மீண்டும் வினையைக் கட்டுவது இல்லை. அதனால் வினை மறைப்பு இல்லை என்றார். அதாவது புதிய வினைகள் கட்டுவது இல்லை; உதயமான முன் வினைகளும் அழிகின்றன.

இந்த நற்காட்சி நீரில் நனைபவர் கலிகால பாபங்களில் - அதாவது குதேவ - குசாஸ்திர - குகுருக்களுக்கு வழிபாடு செய்தல் பாபங்களில் - சிக்குவது இல்லை; அத்தூசுகளை / அழுக்கை ஒட்டிக் கொள்வதும் இல்லை. அதனால் பொய்ம்மை (மித்தியாத்துவம்) வினையைக் கட்டிக் கொள்வதும் இல்லை. நற்காட்சியின் சிறப்பு இது.

8. ஜே தம்ஸணேஸு பட்டா ணாணே பட்டா சரித்தபட்டா ய|
ஏதே பட்ட வி பட்டா ஸேஸம் பி ஜணம் விணாஸந்தி||

(ப-ரை) : ஜே - எவர், தம்ஸணேஸு - நற்காட்சியிலிருந்து, பட்டா - இழிந்தவர், ணாணே - அறிவிலும், பட்டா - இழிந்தவர், ஏதே - இவர், பட்ட வி பட்டா - இழிந்தவரிலும் இழிந்தவர், ஸேஸம் பி ஜணம் - பிற மக்களையும், விணாஸந்தி - அழிக்கிறார், எ-று.

(க-ரை) : நற்காட்சியிலிருந்து இழிந்தவர் அறிவிலும் ஒழுக்கத்திலும் இழிந்தவராம்; இழிந்தவரிலும் இழிந்தவராம்; பிற மக்களையும் இழியச் செய்கிறார் அவர்.

(வி-ரை) : உயிரின் தூய்மை நற்காட்சியால் அமைகிறது. நற்காட்சி இல்லாதாரிடம் விருப்பு வெறுப்பு முதலான புலனின்ப வேட்கையே மிக்கு நிற்கும். ஆசாரியர் அவரை நற்காட்சியில் இழிந்தவர் என்று சுட்டுகிறார். நற்காட்சி இல்லை என்றால் நல்லறிவும்

இராது, நல்லொழுக்கமும் இராது. ஏனெனில் அறிவும் ஒழுக்கமும் நற்காட்சியாலேயே சிறப்பு அடைகின்றன. இங்கு உயிர் எட்ட வேண்டிய தூய்மை (முத்தி) நிலை பற்றிய பேச்சு. அதனால், அத்தூய்மைக்கு முயலாதாரை இழிந்தவர் என்றும் இழிந்தவரிலும் இழிந்தவர் என்றும் கடிகிறார். சிலருக்கு நற்காட்சி இருக்கலாம். நல்லறிவு நல்லொழுக்கம் இல்லாமல் இருக்கலாம். சிலருக்கு நற்காட்சி இல்லாமல் இருக்கலாம். ஆனால் அறிவு. ஒழுக்கங்களில் சிறந்து விளங்கலாம். நற்காட்சி முதலான மூன்றுமே இல்லாதாரும் இருக்கிறார். மூன்றாவது சுட்டியவரே மிக இழிந்தவர். அவர் தான் இழி நிலையில் இருப்பதுடன் பிறரையும் இழி நிலைக்கு ஆளாக்குகிறார். தன் மனம் போல நடக்கின்றவர் பிறரையும் தன் போல நடக்கவே வழி கூறுவார். கள் குடிப்பாரும், புலால் உண்பாரும் பிறரைக் கள் குடிக்கவும், புலால் உண்ணவும் ஊக்கப்படுத்துவர். அது போல வேறு பல தீய ஒழுக்கம் உள்ளவரும் பிறரைத் தீய ஒழுக்கத்தில் ஒழுகவே வழிகாட்டுவர். அவர் தம்முடைய சொல் முதலான திறமையால் ஆகமங்களுக்கு வேறான பொருள் கூறி மக்களைத் தம் வயப்படுத்துவர். இங்கே இன்னொன்றையும் கருதலாம். ஆசாரியர் பொதுவாகக் குறிப்பிட்டிருப்பதால் எல்லோரையும் உட்படுத்த முடியும். தன்னுடைய மத (கோட்பாடு) நம்பிக்கை, அறிவு, ஒழுக்கத்திலிருந்து இழிந்து நடப்பவர் மிகக் கேடானவர்; தன் விருப்பப்படி நடப்பர், தன் மதத்துக்கே இழிவு செய்யும் அவரைப் பார்த்து பிறரும் தாமே இழிவு செய்து இழிவு அடைவர். ஆகையால் இப்படிப்பட்ட புலனாசை மிக்கவர் ஒதுக்கத் தக்கவர்; அவரோடு உறவு கொள்ளுதல் அறிவுடைமை அன்று.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு, [819]

நல்லினத்தி னூங்கும்துணை இல்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல், [460]

என்றார் தேவர்.

9. ஜோ கோவி தம்மஸீலோ ஸஞ்ஜமதவணியம ஜோக குணதாரீ|
தஸ்ஸ ய தோஸ கஹந்தா பக்கா பக்தத்தணம் திந்தி||

(ப-ரை) : ஜோ கோவி - எவரொருவர், தம்ம - தருமத்தில், ஸீலோ - ஒழுகுகிறார், ஸஞ்ஜம - அடங்கியவர், தவ - தவத்தர், ணியம - நியமமுடையவர், ஜோக - யோகம், குண - குணம், தாரீ - உடையவர், பக்கா - நெறி பிறழ்ந்தவர், தஸ்ஸ - அவருக்கு, தோஸ - குற்றங்களை, கஹந்தா - ஏற்றிச் செல்லுகிறார்; பக்கத்தணம் - நெறி பிறழ்வு, திந்தி - தருகிறார். எ-று.

(க-ரை) : தருமத்தில், அடக்கத்தில், தவத்தில், நியமத்தில், யோகத்தில், நற்குணங்களில் இருக்கும் ஒருவரை நெறி பிறழ்ந்து இழிந்தவர் அவர் மீது குற்றங்களை ஏற்றி உரைக்கிறார்; அவர் இழிந்தவர் தருமத்தில் உள்ளாரையும் நெறி பிறழச் செய்கிறார்.

(வி-ரை) : ஆசாரியர் அறவழியில் நிற்பாரைக் குறை கூறுபவர் இழிந்தவர். அதாவது நற்காட்சி இல்லாதவர் என்கிறார். அவரை அற நெறியிலிருந்து பிறழச் செய்ய விரும்புகிறார் என்கிறார்.

நற்காட்சி நெறியில் பயணிப்பவர் "தருமசீலர்" அதாவது தன் ஆன்ம இயல்பில் (தருமத்தில்) திகழ்பவர்; "ஸய்யமம்" உடையவர் - அதாவது புலனின்ப நீக்கமும் உயிர்களைப் போற்றலும் உடையவர் "நியமம்" உடையவர், அதாவது தமக்குரிய நாள் கடமைகளைச் செய்பவர் "யோகம்" உடையவர் - அதாவது "சமாதி", "தியானம்" முதலான ஆன்ம ஒருமை நிலையில் தோய்பவர்; மழைக்காலம் முதலான பருவ காலங்களில் முறைப்படி ஒழுகுபவர்; குணமுடையவர். அதாவது தனக்குரிய மூல குணங்களையும் உத்தர குணங்களையும் உடையவர். அப்படிப்பட்டவரை "இவர் குறையுடையவர் / குற்றமுடையவர்" என்று பழி தூற்றுவார். அவர் தான் இழிந்து இருப்பதுடன் தன்னை ஒத்தவர் அவர் எனக் காட்ட நினைக்கிறார். அதனால் தன்னைப் பெருமைபடுத்திக் கொள்ள நினைக்கிறார்.

குற்றமுடையவர் இயல்பு என்ன வென்றால் குற்றம் இல்லாதார் மீது குற்றம் கூறி தன்னைப் போல அவர் எனக் காட்டும் மனப்பாங்கு உடையவர் ஆகும். அப்படிப்பட்ட பாபிகள் தொடர்பு தவிர்க்கப்படவேண்டும்.

10. ஜஹ மூலம்பி விணட்டே துமஸ்ஸ பரிவார ணத்தி பரவட்டீ|
தஹ ஜிணதம்ஸணபட்டா மூலவிணாட்டா ண ஸிஜ்ஜந்தி||

(ப-ரை) : ஜஹ - எப்படி, மூலம்பி - அடிவேர், விணட்டே - அழிந்த, துமஸ்ஸ - மரத்தினுடைய, பரிவார - கிளை முதலானவை, பரவட்டீ - வளர்ச்சியை, ணத்தி - அடைவது இல்லை; தஹ - அப்படி, ஜிண தம்ஸண - ஜிநர் கோட்பாட்டிலிருந்து, பட்டா - இழிந்தவர், மூல - அக ஒழுக்கத்தில், விணட்டா - இழிந்தவர், (அதனால்) ண ஸிஜ்ஜந்தி - வீடு பேற்றை அடையார், எ-று.

(க-ரை) : வேரழிந்த மரத்தில் கிளை முதலானவை வளர்தல் இல்லை; அதே போல நற்காட்சி இல்லாதார் நல்லொழுக்கம் இன்றி வீடுபேற்றை அடையார்.

(வி-ரை) : ஆசாரியர் நற்காட்சி வேர் போன்றது என்று உவமை காட்டி அதனைப் போற்ற அறிவுறுத்துகிறார்.

மரத்தில் கிளையும் இலையும் பூவும் பழமும் செழிப்பாக உள்ளன என்றால் அதற்கு ஆதாரம் அதன் செழிப்பான வேராகும். வேர் செழிப்பாக உள்ள போதுதான் மரம் செழிப்பாக வளர முடியும்; பயன்தரமுடியும். அதுபோல உயிர் தன் முத்திப் பயணத்தில் நற்காட்சி எனும் வேரை வாட விடாது செழிப்பாக வைத்திருந்தால்தான் நல்லறிவு நல்லொழுக்கத்தில் வளர்ந்து முடிவில் வீடுபேறு எனும் பயனை - பழத்தை அடைய முடியும்.

ஆனால், மரத்தின் வேர் வாடி அழியுமானால் மரத்தின் கிளை முதலான பகுதிகளும் வாடி அழியும். அது போல் ஜிநர் கோட்பாட்டிலிருந்து - நற்காட்சியிலிருந்து நழுவியவர் வீடுபேறு அடையாது அழிவர். புறத்தே பிறந்த உடல் தோற்றம், மூல குணங்களைப் போற்றல், மயிற்பீலி - பிஞ்சம், கமண்டலம், விதி பார்த்து நின்று நாளில் ஒரு முறை உணவு ஏற்றல் - இப்படி புற நிலையில் நன்கு தோற்றம் காட்டுகின்றார். ஆனால் உள்ளுணர்வாக தத்துவங்களை உள்ளவாறு - ஜிநர் கோட்பாட்டில் உள்ளவாறு - நம்புதலும், உயிரையும் பிறவற்றையும் பிரிக்கும் பகுப்பு அறிவும், ஆன்மாவை ஒருமை நிலையில் காணும் ஒழுக்கமும் இல்லாதவர் வீடுபேறு அடைய முடியாது. ஆசாரியர் "மூல" எனும் சொல்லை ஆண்டுள்ளார். மரத்தின் வேர் மண்ணுக்கு உள்ளே இருப்பது போல நற்காட்சியும் உடலுக்கு உள்ளே உயிரில் காணப்படுகிறது என்பதனைச் சுட்டுவது போல் இருக்கிறது. புற ஒழுக்கம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதனால் பயன் இல்லை. அகத்தே நற்காட்சி சிறக்கும்போது அமையும் புற ஒழுக்கமே உண்மையான நற்காட்சி நெறி என்பது கருத்து. அந்நெறி இல்லாதபோது அவர் வீடு பேற்றை அடையமுடியாது.

11. ஜஹமூலாஓ கந்தோ ஸாஹாபரிவார பஹுகுணோ ஹோஇ|
தஹ ஜிணதம்ஸண மூலோ ணித்திட்டோ மோக்க மக்கஸ்ஸ||

(ப-ரை) : ஜஹ - எப்படி, ஸாஹாபரிவார - கிளைமுதலான, பஹு குணோ - பல மடங்காகப் பெருகும், கந்தோ - அடிமரம், மூலாஓ - மரத்தின் அடிவேர் காரணமாக, ஹோஇ - ஆகின்றது, தஹ - அப்படி, மோக்க - வீடுபேறு, மக்கஸ்ஸ - நெறிக்கு, ஜிண - ஜிநர், தம்ஸண - நற்காட்சி, மூலோ - வேர் என்று, ணித்திட்டோ - சொல்லப் பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : வேர் காரணமாக அடிமரம், கிளை, இலை முதலானவை பல மடங்காகப் பெருகுகிறது, அப்படி ஜிநர் போற்றிய நற்காட்சி வீட்டு நெறியின் வேர் என விளக்கப்பட்டுள்ளது.

(வி-ரை) : ஆசாரிய தேவர் வீடுபேற்று நெறிக்கு வேராக விளங்குவது நற்காட்சி என்று காட்டுகிறார். எடுத்துக்காட்டாக மரத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறார். மரத்தில் மூன்று பகுதிகள்: ஒன்று - வேர்; இரண்டாவது - அடிமரம்; மூன்றாவது - கிளை, இலை முதலான மேல் பகுதி. அடிமரம் செழுமையாக நின்று கிளை, பூ, கனி இவை எல்லாம் செழித்து வளர உதவுகிறது. கிளை முதலானவை அடிமரத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. அந்த அடிமரம் மண்ணுக்குள் புதைந்துள்ள வேரைச் சார்ந்து நிற்கிறது. வேர் வாடாது செழித்து உறுதியாக இருப்பதால்தான் மரம் செழித்து நின்று பயன் அடைகிறது.

அதே போல வீட்டு நெறியும் மூன்று பகுதிகளை உடையது. ஒன்று நற்காட்சி; இரண்டாவது மகாவிரதம்; மூன்றாவது வீடுபேறு. மரத்துக்கு வேர் போல வீட்டு

நெறிக்கு நற்காட்சி வேராகும். நற்காட்சியின் உறுதியைப் பொருத்தே வீட்டு நெறி அமையும். அதனால் அதனை வேர் - மூலம் என்றார். மரத்துக்கு அடி மரம் போல வீட்டு நெறியில் ஐந்து மகா விரதம், ஐந்து சமிதி, ஐம்புல அடக்கம், ஆறு நாள் கடமைகள், நீராடாமை முதலான ஏழு குணங்கள் அடங்கிய மகா விரதம் அல்லது பெரு நோன்பு வீட்டு நெறியில் அடி மரமாக விளங்குகிறது. கிளை செழித்து கனிகளை - பயனை - பெறுகிறது. அது போல பெரு நோன்பு சிறப்பால் வீடுபேறு பயன் / பழம் கனிகிறது.

ஜிந தேவர், தான் எந்த நற்காட்சியை ஏற்றாரோ, எந்த பெரு நோன்பை ஏற்றாரோ அதனையே உரைத் தருளினார். அதுவே மூல சங்கம் எனப்படுகிறது, அது 28 மூல குணங்களை உடையது என்பர்.

I. ஐந்து பெரு நோன்பு (மகாவிரதம்) : கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, காமமின்மை, பற்றின்மை.

II. ஐந்து விழிப்புடைமை (ஸமிதி) : நடைவிழிப்பு, மொழி விழிப்பு, உணவு விழிப்பு, எடுத்தல் - விடுத்தல் விழிப்பு, கழித்தல் விழிப்பு.

1. நடக்கும் போது நான்கு முழம் பார்த்து உயிர்களுக்கு ஊறு நேராவண்ணம் நடத்தல் நடைவிழிப்பு. 2. இனிய நன்மையுடைய சொற்களை ஆகமத்துக்கு இசைவாகப் பேசுதல் மொழி விழிப்பு. 3. 46 வகை குற்றம் நீங்கிய உணவை இல்லறத்தாரிடம் ஏற்றல் உணவு விழிப்பு. 4. பொருளை ஆளும் போது - எடுக்குங்காலும் வைக்குங்காலும் - விழிப்போடு உயிருக்கு ஊறு நேரா வண்ணம் செய்தல் எடுத்தல் - விடுத்தல் விழிப்பு. 5. மலம், நீர் கழிக்கும்போது உயிர்கள் இல்லாத இடத்தில் விழிப்பாகச் செய்தல் கழித்தல் விழிப்பு.

III. ஆறு நாள் கடமைகள் : நடுநிலை, வழிபாடு, பணிவு, கழுவாய், நோன்புறுதி, உடல் பற்றொழித்தல். விருப்பு வெறுப்பு இன்றி அறிவை நடுநிலைப் படுத்துதல் நடுநிலை (ஸாமாயிகம்).

24 தீர்த்தங்கரர்களையும் போற்றி வழிபடுதல் வழிபாடு (ஸ்தவனம்).

குணமுடையோருக்குப் பணிவு காட்டுதல் பணிவு (வந்தனை).

ஏற்ற நோன்புகளில் ஏற்பட்ட குறைகளுக்குக் கழிவிரக்கம் கொண்டு பாபத்தைக் கழித்தல் கழுவாய் (பிரதிகிரமணம்).

எதிர்காலத்தில் குறை இல்லாமல் நோன்பு காத்தல் நோன்புறுதி (பிரத்யாக்யானம்).

பொறிகளைத் தன் வயப்படுத்தி உடலுணர்வை நீக்கி தியானம் செய்தல் உடல்பற்றை ஒழித்தல்.

IV. ஐம்பொறிகளை அடக்குதல் : இந்த (5+5+6+5) 21 குணங்களுடன் நீராடமை, தரையில் படுத்தல், உடுத்தாமை, மயிர் பறித்தல், ஒரு தடவை உணவு ஏற்றல், நின்று

உணவு ஏற்றல், பல் துலக்காமை இந்த ஏழும் சேர்த்து 28 மூல குணங்கள் என்பர். இவற்றோடு உயிர் முதலான ஆறு பொருள்கள், ஐந்து அத்தி காயங்கள், ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்கள் பற்றி முடிந்தவரை அறிந்து அவற்றில் அசையாத நம்பிக்கை வைத்தல், உடலையும் உயிரையும் பிரித்து அறிந்து தன் உயிர் பற்றிய சிந்தனையில் ஆழ்தல் - அனுபவம் செய்தல் "தரிசனம்" ஆகும், அதாவது பகவான் நடந்து காட்டி உரைத்த கோட்பாடாகும். இந்தக் கோட்பாடே முத்தி நெறியின் வேராகும். இதிலிருந்து விலகுபவர் இழிந்தவர் ஆவர். வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றனர் அவர்கள். புறத் தோற்றங்களை மாற்றிக் கொண்டு ஒழுக்கங்களையும் கைவிட்டு துறவி எனும் பெயரில் உலா வருகின்றனர். அவர் முத்திக்குத் தகுதி உடையவர் ஆகார். பகவான் அருளிய மூல நெறியில் நிற்பவரே முத்தி நெறியை அடைந்து முத்தியும் அடைவர். இந்தக் காதையில் அதனையே ஆசாரியர் அருளியுள்ளார்.

12. ஜே தம்ஸணேஸு பட்டா பாஏ பாடந்தி தம்ஸணதராணாம்|
தே ஹோந்தி லல்லமூஆ போஹீ புண துல்லஹா தேஸிம்||

(ப-ரை) : தம்ஸண தராணாம் - நற்காட்சி உடையவரை, பாஏ - தன் காலடியில் ஜே - எந்த, தம்ஸணேஸு - நற்காட்சியிலிருந்து, பட்டா - இழிந்தவர், பாடந்தி - பணிய வைக்கிறார், தே - அவர். (அடுத்த பிறவியில்), லல்ல - நொண்டியாக, மூஆ - ஊமையாக, ஹோந்தி - பிறக்கிறார், புண - மீண்டும், தேஸிம் - அவருக்கு, போஹீ - மும்மணி, துல்லஹா - கிடைப்பது அரிது, எ-று.

(க-ரை) : நற்காட்சியிலிருந்து இழிந்தவர் நற்காட்சி யுடையாரைத் தம் காலடியில் பணியச் செய்வதால் அடுத்த பிறவியில் அவர் உறுப்பு சிதைந்தவராகப் பிறப்பதுடன் நற்காட்சியைப் பெறுவதும் அரிது.

(வி-ரை) : ஆசாரிய தேவர் நற்காட்சியுடையாரை எப்படிப் போற்ற வேண்டும் என இக் காதையில் குறிப்பாகச் சுட்டுகிறார். நற்காட்சி நெறியில் அதாவது வீடுபேற்று நெறியில் பணிவுக்கு (விநயத்துக்கு) மிகச் சிறப்பான இடம் உண்டு. பணிவு ஓர் அகத் தவமாகப் போற்றப்படுகிறது. புற நிலையில் அது நற்காட்சியாளரிடம் காட்டும் வணக்கமாகவும் போற்றப்படுகிறது. அகத்தே உள்ள பணிவு, நற்காட்சி உணர்வுக்குக் காட்டும் பணிவு; அது ஆன்ம துய்ப்பு நிலை. புறத்தே காட்டும் பணிவு, அகத் துய்ப்பு இல்லாத போது நற்காட்சி உணர்வுக்கு - நற்காட்சி உடையாருக்கு - காட்டப்படும் பணிவு.

ஜிநர் நெறிப்படி ஒழுகாதவர் மெய் நம்பிக்கை இல்லாதவர். அவர் நற்காட்சி உடையார், தன்னைப் பணிய வேண்டும் என எண்ணுவாரானால் அவருக்கு பொய் நம்பிக்கை (மித்யாத்துவ) வினை தீவிர உதயத்தில் இருக்கிறது என்று ஆகிறது. அதனால் அடுத்த பிறவியில் அவர் நொண்டியாக ஊமையாகப் பிறப்பார். ஒரு

பொறியுடைய உயிராக இழிந்து நிகோத நிலையை அடைந்து அனந்த காலம் துன்பத்தில் உழல்வார். அது மட்டுமன்று. அவருக்கு மும்மணி கிடைப்பதும் அரிது. பொய் நம்பிக்கையின் விளைவு நிகோதப் பிறப்பு என்று நூல்கள் சுட்டுகின்றன. அதனை நினைவு கூர்ந்தால் நற்காட்சியரை அவமதிப்பதின் விளைவு விளங்கும். இந்த ஐந்தாம் காலத்தில், நற்காட்சி இல்லாதார் ஆசாரியராகி மக்கள் தம்மை பணிய / போற்ற வேண்டும் என எதிர் பார்க்கின்றனர்; விரும்புகின்றனர். இயங்கு கதியில் (திரச ராசி) சுற்றுதல் முடிந்து தாவர கதிக்குச் (ஸ்தாவர ராசி) செல்ல அவருக்கு காலம் வந்துவிட்டது என எண்ண வேண்டியுள்ளது. இந்தக் காதையில் "பார படந்தி" என்பதற்கு "பாஏ ண படந்தி" எனப் பாடம் கொண்டுள்ளார். இந்நூலுக்கு உரை வரைந்த சுருத சாகர் முனிவர். அதற்குப் பொருள் நற்காட்சியுடையாரை நற்காட்சி இல்லாதார் தன் செருக்குக் காரணமாக வணங்கவில்லை என்றால் அவர் கீழ் கதியை அடைவார் என்பது கருத்தாகிறது. அதாவது நற்காட்சி உடையாரை அவமதிப்பது தீவிர பாப வினைக்கு ஏது ஆகும் என்பதாம். ஆசாரியரே நற்காட்சியுடையாரை வணங்காதவர் பொய் நம்பிக்கையர் எனக் கண்டிக்கிறார். பார்க்க காதை : 24.

13. ஜேவி[1]படந்திய தேஸிம் ஜாணந்தா லஜ்ஜா காரவ பயேண|
தேஸிம் பி ணத்தி போஹீ பாவம் அணுமோய[2] மாணாணம்||

(க-ரை) : லஜ்ஜா - வெட்கம், காரவ - தற்பெருமை, ய - மற்றும். பயேண - அச்சத்தால், ஜாணந்தா - அறிந்திருந்தும், தேஸிம் - நற்காட்சி இழிந்தவருடைய காலடியில், ஜேவி - எவர், படந்தி - பணிகின்றவர், தேஸிம் பி - அவருடைய, போஹீ - நற்காட்சியும், ணத்தி - அழிகிறது. ஏனெனில், பாவம் - பாபத்துக்கு, அணுமோய மாணாணம் - உடன்படுவதால். எ-று.

(க-ரை) : நற்காட்சியிலிருந்து இழிந்தவர் காலடியில் வெட்கம், தற்பெருமை, அச்சம் காரணமாகப் பணியும் நற்காட்சியுடையவர் தம் நற்காட்சியை இழக்கிறார். அவருடைய பாபத்துக்கு இசைவு காட்டுவதால்.

(வி-ரை) : ஆசாரியர் சற்று கடுமையாகவே நற்காட்சியுடையாரை எச்சரிக்கிறார். இந்த காதையில், நற்காட்சியுடையார் நற்காட்சியுடையாரையே போற்ற வேண்டும், பணிய வேண்டும். ஏனெனில் அப்பணிவால் ஆன்மத் தூய்மை ஏற்படுகிறது. ஜிநர் நெறியைப் போற்றும் ஒருவர் அதாவது நற்காட்சியுடையவர் நற்காட்சி இல்லாதாரைப் பணிவாரானால் அவருடைய நற்காட்சி அழிந்துவிடும்; ஏனெனில், தன் பணிவால் பொய்ம்மை ஒழுக்கத்துக்குத் துணை போவதால்.

ஜிநர் நெறியைப் போற்றாதவரை வணங்க ஆசாரியர் மூன்று காரணங்களைச் சுட்டியுள்ளார். 1. **வெட்கம்** : மக்கள் வணங்கும் ஒருவரைத் தான் வணங்கவில்லை என்றால் தன்னைக் கர்வம் உடையவன், மானம் உடையவன் என்று மக்கள் பரிகசிப்பர்.

1. பாடபேதம் : 1 'பி' 2. அ:

அந்த வெட்கம் காரணமாக நற்காட்சி இல்லாதவரை வணங்குவர். 2. **அச்சம்** : மக்கள் யாரை வணங்குகின்றனரோ அந்தப் பொய்க்காட்சியர் மிகச் செல்வாக்கு உடையவர்; அரசு தொடர்பு உள்ளவர். அதனால் தன்னை வணங்காதவருக்கு அவர் தொல்லை தருவார் என அஞ்சி அவரை வணங்குவர். 3. **காரவம்** : காரவம் என்றால் தற்பெருமை, பிறரிடம் இல்லாதது தன்னிடம் இருக்கிறது என்று தற்பெருமை அடைவது. இது மூன்று வகைப்படும். 1. "**ரச காரவம்**" : தனக்கு நல்ல சுவையான உணவு கிடைக்கிறது என்று தற்பெருமை பாராட்டல். 2. "**ரித்தி காரவம்**" - தான் பெற்றுள்ள சில "ரித்தி" காரணமாகத் தற்பெருமை கொள்ளல், 3. "**சாத காரவம்**" உடல் நலம் மன நலம் உடைமை காரணமாகப் பெருமை கொள்ளல். "இவை எல்லாம் பிறரிடம் இல்லை என்னிடம் இருக்கிறது" எனும் தற்பெருமை உணர்வு "காரவம்" எனப்படுகிறது. எது நன்மையானது? எது தீமையானது? என்று எண்ணிப் பார்க்கும் அறிவுக் கூர்மை தற்பெருமைக்காரருக்கு அமைவது இல்லை. அதனால் எதை வேண்டுமானாலும் செய்வர்.

மூன்று காரணங்களைக் குறிப்பிட்டாலும் வேறு காரணங்களையும் இவற்றுள் அடக்கிக் கொள்ளலாம். ஜிநர் நெறியைப் போற்றுவார் நற்காட்சியிலிருந்து இழிந்தாரை இன்ன பிற காரணங்களால் வணங்குவாரானால் அவரும் நற்காட்சியிலிருந்து இழிந்தவர் ஆவார். ஏனெனில், நற்காட்சி இல்லாதவர் என்று அறிந்து இருந்தும் அவரைப் பணிகிறார் என்றால் அவருடைய பொய்ம்மையை இவரும் ஏற்கிறார் / உடன் படுகிறார் என்று கருத்தாகிறது. செய்தல், செய்வித்தல், உடன் படுதல் மூன்றும் ஒரு தன்மையன என ஆகமங்கள் கூறுகின்றன. அதனால் நற்காட்சியரும் மும்மணியைப் பெற முடியாது. அதனை இழந்து நிற்பார். உடன்பட்டு நிற்கின்ற நிலையால் இது அமைகிறது என்று ஆசாரியர் சுட்டியுள்ளது மிகவும் நுட்பமானது. "சும்மா வணங்கினேன், உள்ளே வணங்கும் எண்ணம் இல்லை" என்று சொல்லுதல் பொருந்தாது. இந்த ஐந்தாம் காலத்தில் நற்காட்சி இல்லாத மயிற்பீலி உடையாரை மந்திரம், தந்திரம், யந்திரம், பணம், பதவி, செல்வாக்கு எனப் பல வேறு காரணங்களுக்காகப் பணிகின்றவர் நற்காட்சியை இழப்பதோடு நிகோதம் போன்ற பிறவிகளுக்கு அணியமாகிறார் எனக் கருத வேண்டியுள்ளது. எல்லாப் பாபங்களிலும் கொடிய பாபம் மெய் நம்பிக்கை இல்லாமை (மித்யாத்வம்) தான்.

14. துவிஹம் பி கந்தசாயம் தீஸுவி ஜோஏஸு ஸஞ்ஜமோ டாதி|
ணாணம்மி கரணஸுத்தே உப்பஸணே தம்ஸணம் ஹோதி||

(ப-ரை) : துவிஹம் - இரண்டு, பி கந்த - பற்றுகளும், சாயம் - இல்லை, திஸு - மூன்று வகை, விஜோஏஸு - யோகத்திலும், ஸஞ்ஜமோ - அடக்கம், டாதி - உள்ளது; ணாணம்மி - அறிவுடைமையில், கரணஸுத்தே - முக்கரண தூய்மை உள்ளது, உப்பஸணே - நின்ற நிலையில் உணவு ஏற்றல், அங்கே, தம்ஸணம் - ஜிந மதம், ஹோதி - அமைகிறது. எ-று.

(க-ரை) : இரு பற்றின்மை, மூவகை அடக்கம், அறிவில் முக்கரண தூய்மை, நின்ற நிலையில் உணவு ஏற்றல் - இதில் ஜிந மதம் அமைகிறது.

(வி-ரை) : ஜிந மதம் - ஜிநர் கருத்து அதாவது நற்காட்சி, அகமும் புறமும் இயைந்து இருக்க வேண்டும். அங்கே தான் நற்காட்சி - ஜிநர் கோட்பாடு அமைய முடியும், ஆசாரியர் நற்காட்சியர் தோற்றத்தை இங்கே காட்டியுள்ளார். இரண்டு பற்றுகள் : அகப்பற்று, புறப்பற்று. அகப்பற்று : பொய்ம்மை, நகைப்பு, விருப்பு, வெறுப்பு, கவலை, அச்சம், அருவருப்பு ,பெண்ணவா, ஆணவா, அலியவா, வெகுளி, மானம், மாயை, பற்று என இப் பதினான்கு உணர்வுகளும் அகப்பற்றுகள். வீடு, காசு, கூலம் (தானியம்), ஆள், பெண்ணாள், கால்நடை, ஆடை அணிகள், கலன் (பாத்திரம்) தாது, பொன் இப்பத்தும் புறப்பற்றுகள் என்பர். பற்று எனில் உடைமை உணர்வு. இந்த இருபத்து நான்கு பற்றுகளும் இல்லாதவர் நற்காட்சியுடைய துறவி, மூவடக்கம் - மனம். மொழி, உடல் அடக்கம். அடங்குதல் என்றால் புலன் இன்பங்களிலிருந்தும் உயிர்களுக்கு இன்னா (இமிசை) செய்யும் உணர்வுகளிலிருந்தும் விலகி நிற்றல். இது மனம், மொழி, உடல் மூன்றாலும் போற்றப்பட வேண்டும். அதனை உடையவர் நற்காட்சியுடைய துறவி. முக்கரண தூய்மை - செய்தல், செய்வித்தல் உடன் படுதல் மூன்றிலும் தூய்மை போற்றுதல், அதுவே அறிவுத் தூய்மை, அதனை உடையவர் நற்காட்சியுடைய துறவி. நின்ற நிலையில் தன் கையில் தூய உணவு ஏற்றல்; ஆகம விதிப்படி தூய்மை போற்றும் உணவை ஏற்றல்; அதனை உடையவர் நற்காட்சியுடைய துறவி. இவை எல்லாம் நிகழும் இடமே ஜிநர் கோட்பாட்டு இடம், நற்காட்சியுள்ள இடம். இவற்றை உடைய துறவியே நற்காட்சி வடிவம். அந்தத் தோற்றமே வணக்கத்துக்கு உரியது. அகமும் புறமும் ஒன்றெனத் திகழும் தோற்றமே வணக்கத்துக்கு உரியது, பிற அல்ல.

15. ஸம்மத்தாதோ ணாணம் ணாணாதோ ஸவ்வ பாவ உவலத்தீ|
உவலத்தபயத்தே புண ஸேயாஸேயம் வியாணேதி||

(ப-ரை) : ஸம்மத்தாதோ - நற்காட்சியால், ணாணம் - நல் அறிவு, ணாணாதோ - நல்லறிவால், ஸவ்வ - எல்லாப் பொருளின், பாவ - அறிவு, உவலத்தீ - ஆகிறது, உவலத்த - அடைந்த, பயத்தே - பொருளால், புண - மீண்டும், ஸேய - மங்கலம், அஸேயம் - அமங்கலம், வியாணேதி - பிரித்து அறியப்படுகிறது. எ-று.

(க-ரை) : நற்காட்சியால் நல்லறிவும், நல்லறிவால் பொருள்களின் உண்மையான அறிவும், அவ்வறிவால் மங்கல அமங்கலத்தைப் பிரித்தறியும் அறிவும் அமைகின்றன.

(வி-ரை) : ஆசாரிய தேவர் நற்காட்சியின் சிறப்பை ஒரு நுட்பமான கோணத்தில் காட்டுகிறார். அறிவு உயிரினுடைய பண்பு / குணம். அது எந்தப் பிறவியில் இருந்தாலும் எந்த நிலையில் இருந்தாலும் அறிவால் தான் வாழ்கிறது. ஆனால் அந்த

வாழ்க்கை உடலைச் சார்ந்த உலகியல் வாழ்க்கை; இன்பம் துன்பம் எனும் வட்டத்தில் உழலும் வாழ்க்கை. அந்த வாழ்க்கை அறிவு உயிருக்கு நன்மை பயப்பது அன்று. உயிருக்கு நன்மை பயப்பது எந்த அறிவு என்று இங்குச் சுட்டுகிறார்.

எங்கே நற்காட்சி தோன்றுகிறதோ அங்கே அந்த நல்ல அறிவு - உயிரை நோக்கும் அறிவு - தோன்றுகிறது, அறிவு உயிரை நோக்க வேண்டுமானால் முதலில் நற்காட்சி - நல்நம்பிக்கை - தோன்ற வேண்டும். அதனையே இங்குச் சுட்டுகிறார்.

நற்காட்சியால் அறிவு நல்லறிவாக பரிணமிக்கிறது / நிகழ்கிறது. நற்காட்சி தோன்றாத வரை அந்த அறிவு "பொய்யறிவு (மித்யா) எனப்படும். அறிவு அறிவு தான். அது எதனைத் தன் புலமாக்குகிறதோ அதனை ஒட்டியே அதற்குப் பெயர் சூட்டுகின்றனர். அறிவு தன்னை (உயிரை)ப் புலமாக்கி அறியும் போது அது நல்லறிவு. அறிவு தன்னை அறியாது பிறவற்றைப் புலமாக்கி அறியும் போது அது "பொய்யறிவு"; தன்னை அறியாமையால் அது "பொய்" எனப்படுகிறது. அதாவது பிறவற்றைப் பிரித்தறியாமல் தன்னையும் பிறவற்றையும் ஒன்றென அறிவது "பொய் அறிவு".

நற்காட்சி தோன்றும்போது அந்தப் பொய்யறிவு மறைகிறது; நல்லறிவு தோன்றுகிறது. அந்த நல்லறிவு தோன்றியதால் தன்னைப் பற்றியும் தானல்லாத பிற பொருள்கள் பற்றியும் உள்ளவாறு உயிரால் அறிய முடிகிறது. ஜிநர், பொருள் இயல்பை உரைத்தவாறு - அதே இயல்பை - அறிய முடிகிறது. நற்காட்சி இல்லாதாரால் பொருள் இயல்பை உள்ளவாறு அறிய முடியாது. அதனால் பொருள் இயல்பை உள்ளவாறு அறிய நற்காட்சி வேண்டும் என்பது ஆயிற்று.

பொருள் இயல்பு அறியப்பட்டதால் எப்பொருள் ஏற்கப்பட வேண்டும். எப்பொருள் நீக்கப்படவேண்டும் எனும்தெளிவு தோன்றுகிறது. அத்தெளிவால் நன்மை (மங்கலம்) எது தீமை (அமங்கலம்) எது என உறுதி செய்ய முடிகிறது. இந்தப் பிரிப்பு நிலை நற்காட்சி நெறியில் சிறந்த இடம் பெறுகிறது, இதனை "பேத விஞ்ஞானம்" என்பர். இந்தப் பிரிப்புத் திறமையே நெறி அமைக்க அடித்தளமாகிறது. இது வீடுபேற்று நெறி, இது பிறவி நெறி எனும் வேறுபாடு இங்கே தோன்றுகிறது. உயிர் வீடுபேற்று நெறியை அறிந்து அதில் தடம் பதிக்கிறது. இப்படி வீட்டு நெறி அமைய அடிப்படை காரணமாக நற்காட்சி அமைகிறது; ஜிந தரிசனம் அமைகிறது. அதனால் தான்,

காட்சியோடு ஒப்பதுயாம் காணோம் வையத்து
மாட்சி யுடையது உயிர்க்கு [46]

என்று அருங்கலச் செப்பு ஆனந்தப் பள்ளு பாடுகிறது.

16. ஸேயாஸேய விதண்ஹூ உத்துத துஸ்ஸீல ஸீலவந்தோ வி|
ஸீல பலேணப்புதயம் தத்தோ புண லஹஇ ணிவ்வாணம்||

(ப-ரை) : ஸேய - மங்கலம், அஸேய - அமங்கலம், விதண்ஹூ - அறிபவர், துஸ்ஸீல - தீயொழுக்கம், உத்துத - விட்டவர், ஸீலவந்தோ வி - நல்லொழுக்கம் உடையவர், ஸீல - அந்த நல்லொழுக்க, பலேண - பயனால், அப்புதயம் - பெருஞ் சிறப்பு, தத்தோ - அடைகிறார், புண - அடுத்து, ணிவ்வாணம் - வீடுபேறும், ல ஹ இ - அடைகிறார். எ-று,

(க-ரை) : நன்மை தீமை அறிபவர் தீயொழுக்கம் விட்டு நல்லொழுக்கம் பெறுகிறார், அதனால் பெருஞ் சிறந்த நிலைகளை அடைந்து முடிவில் வீடுபேறும் அடைகிறார்,

(வி-ரை) : ஆசாரிய தேவர் முன் காதையில் நற்காட்சி காரணமாகவே "பேத விஞ்ஞானம்" எனும் பிரிப்பறிவு தோன்றி உயிர் நன்மை தீமை அறிகிறது என்று சுட்டினார். அப்படி நன்மை நெறி, தீமை நெறி அறிபவரே அநாதி காலமாகத் தொடர்ந்து வரும் பொய்ம்மை நெறியைப் புரட்டிப் போட்டு மெய்ம்மை நெறியைப் போற்றுகிறார். இங்கே ஆசாரியர் தீய ஒழுக்கம் விட்டவர் என்று குறிப்பது அநாதி கால பொய்ம்மை ஒழுக்கம் விட்டவர் என்று குறிப்பது அநாதி கால பொய்ம்மை வினை (மித்யா வினை) ஆகும். அதனை விட்டதனால் நற்காட்சி வடிவம் கிடைத்தது. அது நல்லொழுக்க மாயிற்று. அந்த நல்லொழுக்கத்தால் புண்ணிய பந்தம் ஆயிற்று. அந்த வியத்தகு புண்ணியம் ஆறுகண்ட பேரரசர். தேவேந்திரர், தீர்த்தங்கரர் முதலான பெருஞ்சிறப்புகளைக் கொடுத்தது. கடைசியில் நிர்வாணமும் நேர்ந்தது.

அநாதி காலமாகப் பிறவி எனும் துன்பச் சுழலில் உழன்று கொண்டு இருந்த உயிர் நற்காட்சி பெற்றதாலேயே இத்தனை காலமாகப் பெறாத பெருஞ்சிறப்புகளை எல்லாம் பெற்று முடிவில் உவமை இல்லாத பேரின்ப முத்தியையும் பெறுகிறது.

இந்த நிலையை அடைய காரணம் நல்லொழுக்கமாகும். உலகச் சிறப்புகளாக இருந்தாலும் உயிர்ச் சிறப்புகளாக இருந்தாலும் அவை ஒழுக்கத்தாலேயே அடையப்படுகின்றன. மெய்யறியா துறவியரும் புலனடக்கம் முதலான புற ஒழுக்கங்களாலே தேவப் பிறவி போன்ற இன்பப் பிறவிகளைப் பெறுகின்றனர். ஆனால் வீடு பேற்று இன்பத்தைப் பெற நற்காட்சியும் அந்நெறிப்படும் நல்லொழுக்கமும் வேண்டும். அதனையே ஆசாரியர் இங்குச் சுட்டியுள்ளார்.

17. ஜிணவயண மோ ஸஹமிணம் விஸயஸுஹ விரேயணம் அமிதபூதம்[1]|
ஜரமரண வாஹி ஹரணம் கயகரணம் ஸவ்வ துக்காணம்||

(ப-ரை) : ஜிண - ஜிநர், வயணம் - திருமொழி, ஓஸஹமிணம் - அரு மருந்தாகும், விஸயஸுஹ - புலனின்பம், விரேயணம் - விலக்குவது, அமித பூதம் - அமிழ்து ஆகும்,

பாடபேதம் : 1. பூயம்

ஜர - பிறப்பு, மரண - இறப்பு, வாஹி - பிணி, ஹரணம் - நீக்குவது, ஸவ்வ - எல்லா, துக்காணம் - துன்பங்களையும், கயகரணம் - அழிப்பது. எ-று.

(க-ரை) : ஜிநர் திருமொழி புலனின்பம் விலக்கும் அருமருந்தாகும், அமிழ்தமாகும்; பிறப்பு இறப்பு பிணியைப் போக்குவது; எல்லா துன்பங்களையும் அழிப்பது.

(வி-ரை) : ஆசாரியர், பிறவிப் பிணி நீங்க, அரு மருந்து ஜிநர் அருளிய திருமொழி என்கிறார்.

பிறவியில் உயிர்கள் புலன் இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. அதனால் வினையைக் கட்டிக் கொள்கின்றன. அவ்வினைக்கட்டால் பிறப்பு மூப்பு இறப்பு எனும் பிணியால் துன்புறுகின்றன. இதனை உட்கொண்டு ஆசாரியர் ஜிநர் மொழி அப்பிணி போக்கும் அரு மருந்து என்கிறார். அது அமிழ்து என்கிறார்.

உண்ட உணவு செறிப்பு ஆகவில்லை என்றால் மலம் கட்டி விடும். மலம் கட்டினால் சுரம், உணவில் வெறுப்பு முதலியன வருகின்றன. அதனால் மலக்கட்டு நீங்க மருந்து தருகிறார் மருத்துவர். ஏனெனில் மலக்கட்டு நீங்கினால் தான் சுரம் நீங்கும். அதே போலப் புலன் இன்ப நுகர்ச்சியால் கரும மலக்கட்டு ஏற்படுகிறது. அதனால் பிறப்பு மூப்பு இறப்பு முதலான பிணி (சுரம்) வருகிறது. இந்தப் பிணி அநாதி காலமாகத் தொடர்கிறது. அதனால் கரும மலக்கட்டு அழிய சிறந்த மருந்து ஜிநர் திருமொழி ஆகும். அதாவது ஜிநர் மொழியில் கொள்ளும் உறுதியான நம்பிக்கை நற்காட்சி ஆகும். அந்த நற்காட்சியால் புலனின்ப வேட்கை நீங்குகிறது. அது நீங்குவதால் பிறப்பு முதலான பிணிகளும் நீங்குகின்றன. ஆன்மா பேரின்ப நிலையை அடைகிறது. அதனால் அந்த மருந்து அமிழ்து. நீலகேசியுடையார் கூறுவார் :

பேர்தற்கு அரும்பிணி தாமிவை யப்பிணி
தீர்தற் குரிய திரியோக மருந்திவை
யோர்தற் தெளிவோடு ஒழுக்கம் இவை உண்டார்
பேர்தற் கரும்பிணி யுள்பிறவார் பெரிதின்ப முற்றே [நீலகேசி 116]

18. ஏகம் ஜிணஸ்ஸரூவம் விதியம்[1] உக்கிட்டஸாவயாணம் து|
அவரட்டியாண தஇயம் சஉத்த புண லிங்க தம்ஸணம் ணத்தி||

(ப-ரை) : தம்ஸணம் - ஜிந மதத்தில், ஏகம் - ஒன்று (முதல்) ஜிண - ஜிநர், ஸரூவம் - உருவம், லிங்கம் - தோற்றம், விதியம் - இரண்டாவது, உக்கிட்ட - உயர்ந்த, ஸாவயாணம் து - சாவக, லிங்கம் - தோற்றம், தஇயம் - மூன்றாவது, அவரட்டியாண - கடைநிலையில் உள்ள, லிங்கம் - தோற்றம், புண - மேலும், சஉத்த - நான்காவது, லிங்கம் - தோற்றம், ணத்தி - இல்லை. எ-று.

பாடபேதம் : 1. வீயம்

(க-ரை) : ஜிந மதத்தில் மூன்று தோற்றங்கள் - பகவானை ஒத்த பிறந்த தோற்றம். உயர்ந்த இல்லறத்தார் தோற்றம். ஆர்யிகையர் தோற்றம் - மட்டுமே உள்ளன. நான்காவதாக தோற்றம் ஏதுமில்லை.

(வி-ரை) : இது ஓர் அரிய காதை. ஜிநர் நெறியில் மூன்று துறவுத் தோற்றங்கள் மட்டுமே உள என ஆசாரியர் குறிப்பிடுகிறார். நற்காட்சி நெறியில் நான்காவதாக ஒரு தோற்றம் (வேடம்) இல்லை என வரையறுத்துச் சுட்டுகிறார். முதல் தோற்றம் பகவானுடைய தோற்றம். அதாவது பிறந்த குழந்தை போன்ற பற்றற்ற முனிவர் தோற்றம். இரண்டாவது சாவக படிநிலையில் உள்ள கடைசி அதாவது உயர்ந்த (11ஆம் பிரதிமா) தோற்றம். மூன்றாவது ஆர்யிகை தோற்றம், "அவர" என்ற சொல்லை ஆளுகிறார். அதற்குப் பொருள் "தாழ்ந்த" என்பதாகும். இந்தச் சொல் ஆண்டதன் கருத்து ஆயப்பட வேண்டும். முதல் இடை கடை எனப்பிரிக்கிறாரா எனத் தெரியவில்லை. குணத்தான நோக்கில் பார்க்கும் போது உயர்ந்த சாவகரும் ஆர்யிகையாரும் ஐந்தாம் குணத்தானத்தைச் சேர்ந்தவரே. முனி நிலை 6 - ஆம் குணத்தானத்தில் தொடங்குகிறது. அதனால் ஆர்யிகையரை "மகாவிரதி" என்பது உலக வழக்கு என்றாகிறது. "முனி மங்கை" என்று அந்தாதி குறிப்பிடுகிறது. அதுவும் உலக வழக்குத் தான். அதனால் ஆர்யிகையருக்கு ஒன்பது வகை பத்தி (நவதா பத்தி) இல்லை என்று கருதவேண்டியுள்ளது. முனிவருக்கு மட்டுமே ஒன்பது பத்தி. ஆசாரியர் ஞான சாகர் - வித்தியாசாகர் பரம்பரையில் ஆர்யிகையருக்கு ஒன்பது பத்தி இல்லை என்பதும் நினைவு கூறத்தக்கது.

இந்த மூன்று தோற்றங்களே நற்காட்சியுடையார் வணங்க வேண்டியவை / போற்ற வேண்டியவை / வழிபட வேண்டியவை. ஜிந மதத்தில் தற்போது காணப்படும் பிற தோற்றங்கள் நற்காட்சி முதலானவற்றில் இழிந்ததால் ஏற்பட்டவை. ஆசாரியர் காலத்திலேயே இந்த இழிவு நிலை தோன்றிவிட்டதாகத் தெரிகிறது. அதனால் தான் மூன்று தோற்றங்கள் தவிர நான்காவது தோற்றம் இல்லை என வரையறுத்துச் சொன்னார். நற்காட்சியுடையார் இதில் உறுதியாக இருக்க வேண்டும். ஏனெனில் பிறத் தோற்றங்கள் மூல சங்கத்துக்குப் புறமான தோற்றங்கள்; வழி பாட்டுக்கோ போற்றுதலுக்கோ உரிய தோற்றங்கள் அல்ல.

19. சஹ தவ்வ ணவ பயத்தா பஞ்சத்தீ ஸத்த தச்ச ணித்திட்டா|
ஸத்தஹஇ தாண ரூவம் ஸோ ஸத்திட்டீ முணேயவ்வோ||

(ப-ரை) : சஹ - ஆறு, தவ்வ - பொருள், ணவ - ஒன்பது, பயத்தா - பதார்த்தம், பஞ்சத்தீ - ஐந்து அத்திகாயம், ஸத்த - ஏழு, தச்ச - தத்துவம், ணித்திட்டா - கூறப்பட்டுள்ளன, தாண - அவற்றின், ரூவம் - உளதாமியல்பு, ஸத்தஹஇ - நம்புகிறார், ஸோ - அவர், ஸத்திட்டீ - நற்காட்சியர் என, முணேயவ்வோ - அறிதல் வேண்டும். எ-று.

(க-ரை) : ஆறு பொருள், ஒன்பது பதார்த்தம், ஐந்து அத்திகாயம், ஏழு தத்துவங்களில் நம்பிக்கையுடையவர் நற்காட்சியாளர்.

(வி-ரை) : **ஆறு பொருள்கள்** : உயிர், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாயம், காலம். **ஒன்பது பதார்த்தங்கள்** : உயிர், உயிரல்லன, ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடுபேறு, புண்ணியம், பாபம். **ஐந்து அத்தி காயம்** : உயிர், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாயம் (காலம் அத்திகாயம் அன்று). **ஏழு தத்துவங்கள்** : உயிர், உயிரல்லன, ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடுபேறு (புண்ணிய, பாபம் இல்லை).

உயிர் : அருவமான அறிவு வடிவம். அது தரிசனம் ஞானம் கூடியது. புற்கலம் : ஊறு, சுவை, நாற்றம், நிறம் முதலான குணங்களுடைய உருவப் பொருள். பரமாணு, திரள் (ஸ்கந்தம்) என அதில் இரண்டு வகை. ஐம்பொறிக்கு ஆட்படுவன எல்லாம் புற்கலமே. புற்கலத்தில் நுட்ப நிலையும் பரும நிலையும் உள்ளன. கடைசி நுட்ப நிலை பரமாணு. பரமாணுக்கள் கூடிய திரள்கள் ஆறு வகைப்படும். 1. நுண்மை நுண்மை, 2. நுண்மை (வினைத்துகள்கள்) 3. நுண்மை - பருமை (சுவை, மணம் போன்றவை), 4. பருமை நுண்மை (இருள், நிழல் போன்றவை), 5. பருமை (நீர், எண்ணெய் போல்வன), 6. பருமை பருமை (நிலம், மலை போன்றவை). தன்மம் : பொருள்கள் இடம் பெயர உதவும் அருவப் பொருள். அதன்மம் : பொருள்கள் இடம் பெயராது நிற்க உதவும் அருவப்பொருள். ஆகாயம் : எல்லாப் பொருள்களும் இருக்க இடம் தரும் அருவப் பொருள். இம்மூன்றும் ஒவ்வொரு பொருள் - அதாவது தனித்தனி அகண்ட பொருள். காலாணு : அயங்கியம். காலம் தவிர மற்ற ஐந்தும் பல பிரதேசங்களை உடையவை. அதனால் அத்திகாயம் எனப்பட்டன. காலம் பல பிரதேசம் உடையது அன்று. அதனால் அத்தி காயத்தில் இடம் பெறவில்லை. கருமத் தகுதியுடை புற்கலத் திரள்கள் உயிரோடு சேர வருதல் ஊற்று : சேர்ந்து நிற்றல் கட்டு; ஊற்றைத் தடுப்பது செறிப்பு; கட்டியன கழிவது உதிர்ப்பு; முற்றுமாக உதிர்தல் வீடுபேறு; உயிரின் இன்பத்துக்கு நிமித்தம் புண்ணியம். துன்பத்துக்கு நிமித்தம் பாபம்; இந்த 27 ஐயும் ஆகமத்தில் உள்ளவாறு அறிதல், நம்புதல் செய்பவர் நற்காட்சியுடையவர்.

20. ஜீவாதீ ஸத்தஹணம் ஸம்மத்தம் ஜிணவரேஹிம் பண்ணத்தம்|
வவஹாரா ணிச்சயதோ அப்பாணம் ஹவஇ ஸம்மத்தம்||

(ப-ரை) : ஜிணவரேஹிம் - அருகரால், ஜீவாதீ - உயிர் முதலான பொருள்களில், ஸத்தஹணம் - நம்புதல், வவஹாரா - உலக வழக்கு நய, ஸம்மத்தம் - நற்காட்சி, அப்பாணம் - தன் ஆன்மா, ஹவஇ - நம்பிக்கையில் இருத்தல், ணிச்சயதோ - உண்மை வழக்கு நய, ஸம்மத்தம் - நற்காட்சி என்று, பண்ணத்தம் - கூறப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : உயிர் முதலான மெய்ப்பொருளை நம்புதல் வழக்கு நய நற்காட்சி, தன் ஆன்ம நம்பிக்கையில் திளைத்தல் உண்மை நய நற்காட்சி என ஜிநர் அருளியுள்ளார்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் நய நோக்கில் நற்காட்சியை விளக்குகிறார், உயிர் முதலான பொருள்களை முன் காதையில் குறிப்பிட்டுள்ளார், அவற்றை ஆகமத்தில் உள்ளவாறு ஏற்று நம்புதல் நற்காட்சி - உலக வழக்கு நற்காட்சி ஆகும்.

உண்மையில் நற்காட்சி என்பது ஆன்மாவின் இயல்பை துய்த்தலாகும். அந்தத் துய்ப்பே ருசி, சிரத்தை, ஆசாரித்தல் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இது ஆன்மாவிலிருந்து வேறுபட்டது அன்று. ஆன்மாவினுடைய நிகழ்வு - ஆன்மாவில் நிகழ்வது. அதனால் ஆன்மா தான். இப்படி ஆன்மாவையும் நற்காட்சியையும் ஒன்றென காணல் உண்மை வழக்காகும்.

அப்படி அல்லாது உயிர் முதலான பொருள்களை நம்புதல் நற்காட்சி எனும்போது உயிரும் பொருள்களும் வேறு பிரிக்கப்படுகின்றன, அதாவது உயிரும் பொருள்களை அறியும் - அறிவும் வேறு பிரிக்கப்படுகின்றன, அதனால் அது வியவகார நயம் எனப்படுகிறது. வீதராக தேவ, நூல், முனிவரை நம்புதல், தருமத்தை நம்புதல் எனப் பலவாறாக நம்பிக்கை விளக்கப்படும். அவை எல்லாம் நய வழிப்படுவன என அறிதல் வேண்டும், முத்தி நெறியில் உண்மை நய நற்காட்சியே பயன் உடையது. ஏனெனில் அதனாலேயே வீடுபேறு அமைகிறது. அதனை உயிர் சாரும் போது தான் வீடு பேறு அமைகிறது. நயங்கள் கருத்துக்களைப் புரிய வைப்பன, அவ்வளவே. அனுபவம் அதாவது துய்ப்பு என்பது நயம் கடந்தது,

21. ஏவம்ஜிணபண்ணத்தம் தம்ஸணரயணம் தரேஹ பாவேண|
ஸாரம் குணரயணத்தய ஸோவாணம் படம மோக்கஸ்ஸ||

(ப-ரை) : ஏவம் - இவ்வாறு, ஜிண - அருகரால், பண்ணத்தம் - சொல்லப்பட்டுள்ள, தம்ஸண - நற்காட்சி, ரயணம் - மணி (ரத்னம்), குண - குணங்களில், ரயணத்தய - மும்மணிகளில், ஸாரம் - சிறந்தது ஆகும், மோக்கஸ்ஸ - வீடுபேற்று, படம - முதல், ஸோவாணம் - படிக்கட்டும் ஆகும், ஆகையால் நல்லுயிரே, பாவேண - உள்ளுணர்வால், தரஹே - அதனை ஏற்பாயாக. எ-று.

(க-ரை) : அருகர் அருளிய நற்காட்சி, குணங்களிலும் மும்மணிகளிலும், முதன்மையானது ஆகும்; வீடு பேற்றுக்கு முதல் படி ஆகும். உள்ளுணர்வோடு அதனை ஏற்க!

(வி-ரை) : ஆசாரியர் நற்காட்சியை உள்ளுணர்வோடு ஏற்க என்கிறார். புறத்தே எத்தனை செயல்களைச் செய்தாலும் அகத்தே நற்காட்சி இல்லை என்றால் அச் செயல்களால் ஏதும் பயன் இல்லை. நற்காட்சி இல்லாதாருடைய புற ஒழுக்கம் முக்தியைத் தராது என்பதாம். ஆசாரியர் சமந்தபத்திரர் நற்காட்சியைப் படகோட்டிக்கு ஒப்பிடுகிறார். படகோட்டி பயணிகளைப் பாதுகாப்பாக இக்கரையிலிருந்து அக்கரைக்கு இட்டுச் செல்வது போல நற்காட்சி உயிரைப் பிறவிக் கடலிலிருந்து மீட்டு கரை ஏற்றுகிறது என்கிறார். அதனால்தான் ஆசாரியர் குணங்களில் முதன்மையானது - சாரமானது என்றார்.

நற்காட்சி தோன்றிய பிறகே அறிவு நல்லறிவாகவும் ஒழுக்கம் நல்லொழுக்க மாகவும் ஆகின்றன. இம்மூன்றும் கூடியே முத்தி நெறி அமைகிறது. "ஸம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க" என்பார் உமா சுவாமியார். அதனால் மும்மணியில் முதன்மையான மணி நற்காட்சி என்றார். உயிரில் நற்காட்சி தோன்றிய அளவில் உயிர் பெரும் மாற்றம் அடைகிறது. உயிருக்கும் பிறவற்றுக்கும் இடையே உள்ள உறவு தெளிவுபடுகிறது. உயிரின் பண்புகள் இவை, உயிரின் பண்புகள் அல்லன இவை எனும் வேறுபாட்டு உணர்வு தோன்றுகிறது. தன் உயிரில் ஈடுபாடு தோன்றுகிறது. மயக்கம் எனும் இருள் மறைகிறது. அறிவுக் கண் திறக்கிறது. வீடுபேறு நெருங்கி வருகிறது. அதற்கு முதல்படி நற்காட்சிதான். அதனால் தான் ஆசாரியர் அந்த அருமணியை அணிவாயாக என ஆணை இடுகிறார்.

22. ஜம் ஸக்கஇ தம் கீரிஇ ஜம் ச ண ஸக்கேஇ தம்ச ஸத்தஹணம்|
கேவலி ஜிணேஹிம் பணியம் ஸத்தஹ மாணஸ்ஸ ஸம்மத்தம்||

(ப-ரை) : ஜம் - எவ்வளவு, ஸக்கஇ - ஆற்றலோ, தம் - அவ்வளவு, கீரிஇ - ஒழுக்கம் செய்ய வேண்டும், ச - மற்றும், ஜம் - எவ்வளவு, ண ஸக்கேஇ - ஆற்றல் இல்லையோ, தம் - அப்போது அவர் அருளிய, ச ஸத்தஹணம் - நற்காட்சியைச் செய்ய வேண்டும். ஏனெனில், ஸத்தஹ மாணஸ்ஸ - நற்காட்சியுடையவரை, ஸம்மத்தம் - நற்காட்சியர் என, கேவலி ஜிணேஹிம் - முழுதுணர் அறிவரால், பணியம் - சொல்லப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : ஆற்றலுடையவர் நல்லொழுக்கத்தை ஏற்றுப் போற்ற வேண்டும்; ஆற்றல் இல்லாதவர் நற்காட்சியைப் போற்ற வேண்டும். ஏனெனில், நற்காட்சி உடையவர் நற்காட்சியர் என பகவானால் அருளப்பட்டுள்ளது.

(வி-ரை) : நற்காட்சி பெற்ற ஒருவர் தன் உயிரொழித்துப் பிற பொருள்களை விலக்கத் தக்கதாகக் கருதுகிறார். பிறவி விடத்தக்கது என்று கருதுகிறார். அப்போது துறவு ஏற்று ஒழுக்கத்தை மேற்கொண்டால் அப்போது அவர் நற்காட்சியர் எனக் கருதப்படுவார். ஆனால், பிற பொருளை நீக்கி தன் பொருளான ஆன்மாவை ஏற்கத் தக்கதாக நம்பினாலும், சாரித்திர மயக்க வினை வலிவாக இருக்கும் வரை நல்லொழுக்கத்தை ஏற்கும் ஆற்றல் தோன்றாது. என்றாலும், எவ்வளவு ஆற்றல் உண்டோ அவ்வளவு ஒழுக்கம் மேற் கொள்ள வேண்டும். தன் ஆற்றலை மறைக்காது நல்லொழுக்கம் ஏற்க வேண்டும். ஏற்க முடியாத ஒழுக்கத்தில், உறுதியான நம்பிக்கையைத் தொடர வேண்டும். இப்படி நம்பிக்கையுடையவரையே பகவான் நற்காட்சியர் என்றார்.

இங்கே ஆசாரியர் நற்காட்சி நல்லொழுக்கத்தோடு சேர வேண்டும் எனத் தூண்டுகிறார். நற்காட்சிக்குப் பிறகு நல்லறிவும் நல்லொழுக்கமும் அமைய முடியும். மூன்றும் ஒன்று சேரும் போதுதான் பிறவி அறுபட்டு பிறவா பேரின்ப நிலையை

அடைய முடியும். இது ஜிநர் நெறி. ஒரு கால் முன் கட்டிய சாரித்திர மயக்க வினை உதயமாகி ஒழுக்கம் ஏற்க இடம் கொடுக்காத நிலை தோன்றுமானால், முயற்சியுடன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஒழுக்கம் ஏற்க வேண்டும். துறவு நிலை ஏற்க முடியாத போது இல்லற நிலை ஏற்று, 11 படிமை வரை பயின்று வரலாம். துறவி நிலையில் ஊன்றிய நம்பிக்கையை உறுதி செய்து வரலாம். அப்படிச் செய்பவர் நற்காட்சி உடையவர் என்பது கருத்து. "வழுவது அல்லா வதம் வல்லன தாங்கி" என்று அந்தாதியர் (41) போற்றுவதை இங்கே நினைவு கூறலாம்.

23. தம்ஸணணாண சரித்தோ தவவிணயே ணிச்ச காலஸுபஸத்த[1]|
ஏதே து வந்தணீயா ஜே குணவாதீ குணதராணம்||

(ப-ரை) : தம்ஸண - காட்சியில், ணாண - அறிவில், சரித்தோ - ஒழுக்கத்தில், தவ - தபத்தில், விணயே - பணிவில், ணிச்சகால - எப்போதும், ஸுபஸத்தா - நன்கு ஒழுகுபவர், குணதராணம் - கணதரர் முதலான குணமுடையோரால், குணவாதீ - புகழப்படுபவர், ஏதேது - இவரே, வந்தணீயா - வணக்கத்துக்கு உரியவர். எ-று.

(க-ரை) : மும்மணியிலும் தபத்திலும் பணிவிலும் நன்கு ஒழுகுபவர், குணமுடையோரால் புகழப்படுபவரே வணக்கத்துக்கு உரியவர்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் வணக்கத்துக்கு உரிய துறவியர் யார் எனச் சுட்டிக் காட்டுகிறார். வெறும் வெளித் தோற்றம் மட்டும் கொண்டு துறவியராக ஏற்று போற்றுதல் கூடாது என்பதாம். ஏற்கெனவே காதை 2 இல் எவர் வணக்கத்துக்கு உரியவர் அல்லர் எனக் சுட்டிக் காட்டியுள்ளார். அங்கே நற்காட்சி மட்டும் குறிப்பிட்டார். இங்கே மும்மணியும் சுட்டிக் காட்டுகிறார் தபத்தையும் சுட்டுகிறார். முத்தி நெறியில் இந்த நான்கும் "ஆராதனை" எனப் போற்றப்படும். இந்த நான்கிலே அசையாது நின்று ஒழுகுபவரைக் கணதரர் முதலானோரும் போற்றுவர். அத்தகு பெருஞ் சிறப்புக்கு உரிய துறவியே வணக்கத்துக்கு உரியவர் என்பதாம்.

ஜிநர் நெறியில் நற்காட்சி வழிப்படும் நல்லொழுக்கமே போற்றப்படுகிறது. நல்தவம் என்பதும் நற்காட்சி வழியில் தான் அமைய முடியும். தன் ஆன்ம இயல்பு அறியாது தவம் செய்பவரும் உள். புற நிலையில் தபம் போலக் காணப்பட்டாலும் அக நிலையில் நற்காட்சி இன்மையால் போலித் தபமாகவே அதுச் சுட்டப்படும். ஜிநர் நெறியில் அது ஏற்கப்படவில்லை. அது பாசாண்டி தபம் என ஒதுக்கப்படுகிறது.

நல் தபமுடையாரே தபமுடையாரைப் போற்ற முடியும். நற்காட்சி இல்லாதார் செய்யும் தபம் நல் தபமாகாது. அவர் நல் தவத்தாரையும் போற்ற மாட்டார். மாறாகப் பொறாமையும் கொள்வார் பணிவும் காட்டார். அத்தகு போலித் துறவியர் வணக்கத்துக்கு உரியவர் அல்லர் என்று கருத்து.

பாடபேதம் : 1. ணிச்ச கால பஸத்தா

தவம்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு [266]

என்று போலித் துறவுக்குக் காரணம் சுட்டுவார் தேவர். அத்தகு பற்றுடைய போலித் துறவியர் வணக்கத்துக்கு உரியவர் அல்லர்; அவர் ஒதுக்கத்துக்கு உரியவர்.

24. ஸஹஜுப் பண்ணம் ரூவம் தட்டும் ஜோ மண்ணஏ ண மச்சரி ஓ|
ஸோ ஸஞ்ஜம படி வண்ணோ மிச்சா இட்டீ ஹவஇ ஏஸோ||

(ப-ரை) : ஜோ - எவர், ஸஹஜுப்பண்ணம் - பிறந்த நிலையான, ரூவம் - தோற்றம் (உருவம்), தட்டும் - கண்டும், ண மண்ணஏ - போற்றவில்லை, மச்சரிஓ - அழுக்காறு கொள்கிறார், ஸோ - அவர், ஸஞ்ஜம - ஒழுக்கம், படிவண்ணோ - உடையவரானாலும், ஏஸோ - நேரான, மிச்சா இட்டீ - பொய் நம்பிக்கையர், ஹவஇ - ஆகிறார். எ-று.

(க-ரை) : பிறந்த உருவில் காணப்படும் முனிவரைக் கண்டும் உரிய போற்றுதலைச் செய்யாதவர், அழுக்காறு கொள்பவர்; ஒழுக்கமுடையவரானாலும், நேரான பொய்க் காட்சியர் ஆவார்.

(வி-ரை) : ஆசாரியர் இங்கே முனி தோற்றத்தின் சிறப்பைச் சுட்டுகிறார். முனிவர் பிறந்த குழந்தை போலத் தோற்றம் உடையவர். அது இயல்பான தோற்றம். அகத்தே பற்றின்மையைக் காட்டும் அடையாளம். அதனால் தான் அது பகவானுடைய தோற்றம் எனப் போற்றப்படுகிறது (காதை 17). அந்தத் தோற்றம் உடைய முனிவர் வரும் போது அவரைக் காண்பவர் எழுந்து நிற்றல். பணிவு காட்டல் வணங்குதல் முதலானவற்றைச் செய்ய வேண்டும். நற்காட்சியுடையவர் அப்படித்தான் செய்வர். ஏனெனில் அந்தச் செயல்கள் மும்மணியைப் போற்றுகின்ற செயல்கள்.

ஒழுக்கம் உடையவர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் ஒருவர் பற்றற்ற முனி உருவைப் பார்த்து பணிவுச் சிறப்புகள் செய்யவில்லை என்றால், அவரிடம் அழுக்காறு கொள்கிறார் என்றால் அவர் ஒழுக்கமுடையவர் என்று எப்படிக் கூற முடியும்? மாறாக அவர் பொய் நம்பிக்கையர் என்று கூற வேண்டும். முனிவரைப் போற்றாமையை நேரே காண்பதால் அவரை நேராக பொய்ம்மை காட்சியர் எனக் கூறல் வேண்டும் என்கிறார். ஆசாரியர் கால சூழல் என்ன என்று விளங்கவில்லை. பொதுமக்கள் வணங்காது போகக் கூடும். பிற சமய துறவியரும் வணங்காது போகக் கூடும். ஆனால் தன் சமய துறவியே வணங்காத சூழல் இருந்தது போலும். அதனால் இந்தக் காதையை அமைத்தாரோ என எண்ணத் தோன்றுகிறது. எது எப்படி இருந்தாலும் உண்மையான பற்றற்ற துறவுத் தோற்றத்தைக் கண்டு பணிவு காட்ட வில்லை என்றால் அது நற்காட்சி இல்லார் செயல் என அறிதல் வேண்டும்.

**25. அமராண வந்தியாணம் ரூவம் தட்டூண ஸீல ஸஹியாணம்|
ஜே காரவம் கரந்தி ய ஸம்மத்த விவஜ்ஜியா ஹோந்தி||**

(ப-ரை) : அமராண - தேவரால், வந்தியாணம் - வணங்கப்படும், ஸீல - நல்லொழுக்கம், ஸஹியாணம் - கூடியவர், ரூவம் - தோற்றம், தட்டூண - கண்டு, ஜே - எவர், காரவம் - மதியா தற்பெருமை, கரந்தி - செய்கிறார், ய - அவர், ஸம்மத்த - நற்காட்சி, விவஜ்ஜியா - அற்றவராக, ஹோந்தி - ஆகின்றார். எ-று,

(க-ரை) : தேவரும் பணியும் நல்லொழுக்கமுடைய முனிவர் தோற்றத்தைக் கண்டு மதியாது தற்பெருமை காட்டுபவர் நற்காட்சி அற்றவராக ஆகிறார்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் முன் காதையில் ஒழுக்கமுடையவர் பகவான் தோற்றத்தைப் போற்றாமையைக் குறிப்பிட்டார். இக்காதையில் தன்னை மதிக்கும் தற்பெருமை உடையாரைக் குறித்துப் பேசுகிறார்.

பற்றற்ற உண்மை துறவியரைத் தேவரும் பணிகின்றனர், வழிபாடு செய்கின்றனர். பவணர், வியந்தரர், சோதிடர், வைமானிகர் என தேவர் நால்வகைப் படுவர். அத் தேவர் எப்போதும் இன்ப வாழ்வில் திளைப்பவர். அத்தகு பெரும் சிறப்புடைய தேவரும் பற்றற்ற துறவியவருக்குப் பணிவிடை செய்து மகிழ்கின்றனர். பற்றற்ற உண்மை துறவியர் அகத்தும் புறத்தும் தமக்குரிய நல்லொழுக்கத்தில் இடைவிடாது நிகழ்பவர். அதனால் தேவர் தொழுகின்ற சிறப்புடையவர் ஆகிறார் துறவியர். அப்படிப்பட்ட முனிவர் தோற்றத்தைக் கண்டு தேவரும் வணங்குகின்றனர்.

ஆனால், தேவர் போன்ற பெருஞ் சிறப்பு ஏதும் இல்லாத மனிதர் தாம் பெற்றுள்ள சிறு சிறு சிறப்புகளை மதிப்பாகக் கொண்டு தற்பெருமை கொள்கின்றார். அத் தற்பெருமை காரணமாக பற்றற்ற துறவுத் தோற்றம் கண்டு பணியாது நிற்கின்றார்; செருக்குற்று நிற்கின்றனர். அவர் நற்காட்சி இல்லாதவர் ஆகிறார். நற்காட்சி இல்லை என்றால் தன் உயிரைப் போற்றாதவர் ஆகிறார். உலக இன்பங்களைப் போற்றி நிற்பதால் பிறவியில் உழலும் தன்மை உடையவராகிறார். அவர் நீண்ட காலம் பிறவியில் உழல இருப்பவர் என்பதனை அவர் செயல் காட்டுகிறது. அதாவது அவர் பொய்க் காட்சியவர் ஆவார் என்பதாம்.

**26. அஸ்ஸஞ்ஜதம் வந்தே வத்த விஹீணோ வி தோண வந்திஜ்ஜ|
தோண்ணி வி ஹோந்தி ஸமாணா ஏகோ வி ண ஸஞ்ஜதோ ஹோதி||**

(ப-ரை) : அஸ்ஸஞ்ஜதம் - அடக்கம் இல்லாரை, ண வந்தே - வணங்குதல் கூடாது, வத்த - ஆடை, விஹீணோ வி - இல்லை என்றாலும், தோ - அவரையும், ண வந்திஜ்ஜ - வணங்குதல் கூடாது. ஏனெனில், ஏகோ வி - ஒருவரும், ஸஞ்ஜதோ - அடக்க முடையவராக, ண ஹோதி - இல்லை, தோண்ணி வி - இருவருமே, ஸமாணா - ஒத்து, ஹோந்தி - உள்ளனர். எ-று.

(க-ரை) : அடக்கம் (ஸய்யம்) இல்லார் வணக்கத்துக்கு உரியர் அல்லர் புறத்தே ஆடையில்லாமல் ஜிநர் தோற்றம் இருந்தாலும் அகத்தே அடக்கம் இல்லாதவரும் வணக்கத்துக்கு உரியர் அல்லர். ஏனெனில் இருவரும் அக நிலையில் அடக்கம் இல்லாதவரே.

(வி-ரை) : ஆசாரியர் வணங்கத் தகாத இருவரைச் சுட்டுகிறார், ஒருவர் "அஸய்யமி" - அடக்கம் இல்லாதர் மற்றொருவர் புறத்தே மட்டும் ஜிநர் தோற்றம் உடையவர். இவ்விருவரையும் நற்காட்சியர் வணங்குதல் கூடாது.

அடக்கம் என்றால் புலன்களில் செல்லாது அடங்குதல் ஒரு பொறி உயிர் முதல் எல்லா உயிர்களையும் ஓம்பி இன்னா செய்யாது அடங்குதல். இது துறவு நிலையிலேயே நிகழக் கூடியது. அதனால் துறவி "சய்யமி" அடக்கமுடையவர் எனப்படுகிறார். இல்வாழ்வார் முழு அடக்கம் இல்லாதவர். அதனால் அவர் அடக்கமில்லாதவர் எனப்படுகிறார். அடக்கம் உடைய துறவுத் தோற்றத்தை எடுத்த பிறகு அகத்தே அதற்கான அடக்கம் இல்லை என்றால் அவரும் இல் வாழ்வாரை ஒத்தவரே. ஏனெனில் அவ்விருவரும் அக நிலையில் அடக்கம் இல்லாது ஒத்துநிற்கின்றனர். அதனால் அவ்விருவரும் பணிவுக்கு உரியவர் அல்ல. அவரைப் பணிதல் கூடாது.

ஆசாரியருடைய கருத்துப்படி வெறும் புறத்தோற்றம் கண்டு மட்டும் வணங்கக் கூடாது. அவரிடம் அத்தோற்றத்துக்குரிய நல்லொழுக்கங்களும் உள்ளனவா என்று அறிந்து போற்றல் வேண்டும் என்பதாம். அக நிலையில் துறவுணர்வு இன்றி புற நிலையில் போற்றப்படும் செயல்களைக் கொண்டு ஒரு துறவியை "சய்யமி" - அடக்கமுடையவர் - என்று கூற முடியாது. அதனால் அவரும் "அசய்யமி" க்கு நிகராக இருப்பதால் வணக்கத்துக்கு உரியவர் அல்லர். இங்கே ஒரு வினா எழலாம். புறத்தே ஒழுக்கங்கள் சீராக இருக்கின்றன. அகத்தில் கபடமாக இருந்தால் எப்படி அறிய முடியும்? அகத்தில் நற்காட்சி உள்ளதா என்பதை அறிவரே அறிவார். எதுவரை புற ஒழுக்கங்கள் சீராக இருக்கின்றன என்று பார்க்கிறீர்களோ அதுவரை பணிவிடை செய்யலாம் / வணங்கலாம் தவறு இல்லை. அதில் குறை காணப்படும்போது வணங்காது விடலாம். அறிவுக்கு எட்டிய வரை தான் ஆய முடியும். அது தவிர வேறு வழி இல்லை.

27. ண வி தேஹோ வந்திஜ்ஜஇ ண வி ய குலோ ண விய ஜாஇஸஞ்ஜுத்தோ|
கோ வந்தமி குணஹீணோ ண ஹு ஸவணோ ணேய ஸாவஓ ஹோஇ||

(ப-ரை) : தேஹோ வி - உடலையும், ண வந்திஜ்ஜஇ - வணங்குதல் இல்லை, ய - மற்றும், ண வி குலோ - குலத்தையும் வணங்குவது இல்லை, ய - மற்றும், ண வி ஜாஇ ஸஞ்ஜுத்தோ - சாதியோடு கூடி இருந்தாலும் வணங்குவது இல்லை, குணஹீணோ - குணம் இல்லாதாரை, கோ - யார், வந்தமி - வணங்குகிறார்? ஹு - உண்மையில் அவர், ஸவணோ - சமணராகவும், ண ஹோ இ - இல்லை, ஸாவஓ - சாவகராகவும், ண யே ஹோ இ - இல்லையே. எ-று.

(க-ரை) : உடலோ, குலமோ, சாதியோ வணக்கத்துக்குக் காரணம் அல்ல. குணமில்லாரை யார் வணங்குவார்? அவர் சமணராகவும் (துறவியாகவும்) இல்லை, சாவகராகவும் இல்லை.

(வி-ரை) : ஆசாரிய தேவர் யாரை எதற்காக வணங்க வேண்டும் என விளக்குகிறார்.

வனப்பான உடலையோ பிறந்த குலத்தையோ சாதியையோ வைத்து ஒருவரை வணங்குவது இல்லை. உலக வாழ்விலும் எவரும் உடல் அழகுக்காக உத்தம குலத்துக்காக உத்தம சாதிக்காக யாரையும் வணங்குவதில்லை. அவை எல்லாம் போற்றத்ததக்கனவாக இருக்கலாம். ஆனால் அவை இருந்தும் குணம் இல்லை என்றால் மக்கள் மதியார். குலம், சாதி முதலானவை உலகம் சார்ந்தவை. அவை அறம் சார்ந்தவை அல்ல எனக் குறிப்பாகக் காட்டுகிறார்.

அதே போல ஜிநர் நெறியில் நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் ஆகிய குணமுடையாரே வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியர். அக்குணம் இல்லாது பிற உத்தம குலம் முதலான இருந்தாலும் அவர் வணக்கத்துக்கு உரியார் அல்லர். முக்தி நெறியில் சாதிக்கோ குலத்துக்கோ இன்ன பிற சமுதாய காரணங்களுக்கோ இடமில்லை. ஏனெனில் இவற்றால் சாவக நிலையோ துறவு நிலையோ தோன்றுவது இல்லை. மும்மணி உள்ள போதுதான் சாவக / துறவு நிலைகள் அமைகின்றன. ஆகையால் மும்மணி குணம் உடையாரே வணக்கத்துக்கு உரியவர்.

பறையன் மகனெனினும் காட்சி யுடையான்
இறைவன் என உணரல் பாற்று **[37]**

என்பது அருங்கலச் செப்பு மொழி.

28. வந்தமி தவ ஸாவண்ணா[1] ஸீலம் ச குணம் ச பம்பசேரம் ச|
ஸித்திகமணம் ச தேஸிம் ஸம்மத்தேண[2] ஸுத்த பாவேண||

(ப-ரை) : தவ - தபமுடைய, ஸாவண்ணா - சமணரை, ச - மற்று, ஸீலம் - அவருடைய சீலத்தை, ச - மற்றும், குணம் - குணத்தை, ச - மற்றும், பம்பசேரம் - பிரமசரியத்தை, ஸம்மத்தேண - நற்காட்சியுடன், ஸுத்த - தூய, பாவேண - உள்ளுணர்வால், வந்தமி - வணங்குகிறேன், ஏனெனில், ச - மற்றும், தேஸிம் - அக் குணங்களால், ஸித்த கமணம் - வீடு பேற்று பயணமாகிறது. எ-று.

(க-ரை) : தபமுடைய முனிவரை, அவர்தம் சீலத்தை, குணத்தை பிரமசரியத்தை, நற்காட்சியோடு கூடிய தூய உள்ளுணர்வால் நான் வணங்குகிறேன். ஏனெனில், அக் குணங்களால் வீடுபேறு அமைகிறது.

பாடபேதம் : 1. தவஸமண்ணா : தவஸஉண்ணா, தவஸமாணம்
2. ஸம்மத்தேணேவ

(வி-ரை) : "நற்காட்சியுடைய துறவியை நான் வணங்குகிறேன். ஏனெனில் அவரிடம் சீலமும் தபமும் பிரமசரியமும் உள்ளன. அவை வீடு பேற்றைத் தருவன" என ஆசாரியர் மும்மணிக்கு - ஜிநர் நெறிக்குத் - தன் வணக்கத்தைக் கூறியுள்ளார்,

முன்னே உடல் முதலானவை வணக்கத்துக்குக் காரணம் அல்ல என்றார். குணங்களே வணக்கத்துக்குக் காரணம் என்றார். அந்தக் குணமுடையாரை எப்படி வணங்க வேண்டும்? "நற்காட்சி உணர்வுடன் கூடிய பணிவோடு வணங்குகிறேன்" என்று சுட்டி குணமுடையாரை வணங்கும் உணர்வை தெளிவு செய்துள்ளார்.

இங்கே "சீலம்", "குணம்", "பிரமசரியம்" என மூன்று சொற்களை ஆண்டுள்ளார். "சீலம்" என்பதற்கு மேல் ஒழுக்க வகைபாடுகளையும் "குணம்" என்பதற்கு 28 மூல குணங்களையும், "பிரமசரியம்" என்பதற்கு ஆன்ம இயல்பில் ஆழ்தலையும் பொருளாகக் கருதலாம்.

சீலத்தை 18,000 என்று குறிப்பிடுவார். அசுப மன வசன காயம் அதை நீக்க சுப மனவசன காயம் (3 x 3 = 9) அவற்றை "ஆஹார, பய, மைதுன, பரிக்ரஹ சஞ்சையால் பெருக்க (9 x 4 = 36)" ஆகும். ஐந்து இந்திரியத்தால் பெருக்க (36 x 5 = 180) ஆகும். அதை மண்ணுடலி முதலாகப் பத்து வகையால் பெருக்க (180 x 10 = 1800) ஆகும். அதை உத்தம க்ஷமா முதலான பத்தால் பெருக்க (1800 x 10 = 18,000) வகை ஆகும். வேறு வகையாகவும் இதனைக் காட்டுவர். இவை எல்லாம் மேல் (உத்தர) ஒழுக்கங்கள்.

29. சஉஸட்டி சமரஸஹிஓ சஉதீஸஹி அஇஸஏஹிம் ஸஞ்ஜுத்தோ|
அணவர பஹுஸத்த ஹிஓ[1] கம்மக்கய காரண ணிமித்தோ[2]||

(ப-ரை) : ச உஸட்டி - அறுபத்து நான்கு, சமரஸஹிஓ - சாமரையோடு கூடியவர், சஉதீஸஹி - முப்பத்து நான்கு, அஇஸஏஹிம் - அதிசயங்களோடு, ஸஞ்ஜுத்தோ - கூடியவர், அணவர - எப்போதும், பஹுஸத்த - பல்லுயிர்களுக்கு, ஹிஓ - இதம் செய்பவர், கம்ம - வினை, கய - அழிய, காரண ணிமித்தோ - நிமித்த காரணர், இத்தகு தீர்த்தங்கர பரம தேவர் வணக்கத்துக்கு உரியவர். எ-று.

(க-ரை) : சாமரையும் அதிசயமும் கூடியவர், எல்லா உயிர்களுக்கும் இதம் செய்பவர், வினை அழிவுக்கு நிமித்த காரணர், தீர்த்தங்கரர் வழிபாட்டுக் குரியவர்.

(வி-ரை) : குணமுடையாரை - நற்காட்சியுடன் கூடிய குணமுடையாரையே வணங்க வேண்டும் எனச் சுட்டி வரும் ஆசாரியர் இங்கே தீர்த்தங்கரரையும் வணங்க வேண்டும். அவரும் வணக்கத்துக்கு உரியவர் என்கிறார். சமவசரணம் முதலான சிறப்புகளை உடையவரை "ஸய்யமி" (அடங்கியவர்) என்று கருத முடியுமா என ஐயம் கொண்டால் அதற்கு விடை தருதல் போல இக் காதை அமைந்துள்ளது.

பாடபேதம் : 1. அனுசரபஜுஸத்தஹிஓ
2. நிமித்தே

நற்காட்சியுடன் கூடி தப முதலான பெருமையால் தீர்த்தங்கர நிலை அடைந்தவர். அதனால் அவரும் வணக்கத்துக்கு உரியவரே என்று காட்டியுள்ளார். அவரை வணங்குவதால் வரும் பயனையும் சுட்டியுள்ளார்.

தேவர் சாமரை வீசுதலும் 34 அதிசயங்களும் அவருடைய தலைமை நிலையைச் சுட்டுகின்றன. உயிர்களுக்கு நன்மை செய்தலும், வினை கெட நிமித்தமாக ஆதலும், பிற உயிர்களுக்கு உதவும் நிலையைச் சுட்டுகின்றன, அவரை வணங்குதற்கு இவையே காரணங்கள். சமவ சரண அமைப்பு முதலானவை எல்லாம் தேவர் அன்பின் காரணமாகச் செய்கின்றனர். ஆனால் அவரோ திசை ஆடை உடுத்திக் கொண்டு தன் உயிர் தோயலில் தோய்ந்து நிற்கிறார். புற நிகழ்வுகளால் அவருக்கு எந்தப் பயனும் இல்லை.

"உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலக மாய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சோடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றியான்"

– யாப்பருங்கலம் மேற்கோள் பாடல்.

30. ணாணேண தம்ஸணே ண ய தவேண சரியேண ஸஞ்ஜம குணேணே|
சஉஹிம் பிஸமாஜோகே மோக்கோ ஜிண ஸாஸணே திட்டோ||

(ப-ரை) : ணாணேண – அறிவு, தம்ஸணேண – காட்சி, ய – மற்றும், தவேண – தபம், சரியேண – சாரித்திரம், சஉஹிம் – இந் நான்கும், ஸமாஜோகே – கூடிய, ஸஞ்ஜம – ஸய்யம, குணேண – குணத்தால் விளைவது, மோக்கோ – வீடுபேறு, என ஜிண ஸாஸணே – ஜிந சாஸனத்தில், திட்டோ – கூறப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : அறிவு காட்சி தபம் சாரித்திரம் இந்நான்கும் கூடிய ஸய்யமத்தால் வீடுபேறு என ஜிநசாஸனத்தில் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : ஒழுக்கத்தால் வீடு பேறு அமைகிறது என்கிறார் ஆசாரிய தேவர். அந்த ஒழுக்கம் அறிவு வழியாக அமைகிறது. அறிவு வழிப்படும் ஒழுக்கமே உண்மை ஒழுக்கமாக அமைய முடியும். ஆனால் அறிவு நற்காட்சியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். நற்காட்சி இல்லாத அறிவு நல்லறிவாக இருக்க முடியாது. எனவே நற்காட்சி வேண்டும். அதனால் தான் அறிவும் ஒழுக்கமும் நல்லனவாக உயிருக்கு நன்மை பயப்பனவாக அமைய முடியும். நம்பிக்கை அறிவு ஒழுக்கம் இவற்றுக்கிடையே உள்ள இந்த உறவை இங்கே ஆசாரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உண்மையில் முத்தி என்பது காட்சி, அறிவு, ஒழுக்கம், தபம் கூடிய ஒருமை நெறியால் அமைவது. இங்கு "ஸஞ்ஜம" என்ற சொல் அந்தப் பொருளுடையதே. "ஸய்யம்" என்பதன் கருத்தும் அதுதான். இவை தனித் தனி நின்று முத்தி தரவில்லை. நான்கும் ஒன்றாகக் குழைந்து ஒன்றான நிலை – ஒருமை நிலை, அந்த நிலை

"நிர்விகார" நிலை என்பர். அறிவு புறம் போகாது தன்னையே நோக்கும் ஒருமை நிலை. அந்த ஒருமையுணர்வே முத்தி ஆகும். இதுவே ஜிநர் நெறியில் கூறப்பட்டுள்ளது.

காடு எரிகிறது. நொண்டியும் குருடனும் தனித்தனி நின்று முயற்சி இன்றி இருந்தால் நெருப்பில் அழிய வேண்டியதுதான். கண்ணுடைய நொண்டி கண்ணில்லாதவன் கழுத்தில் அமர்ந்து இருவரும் முயற்சித்தால் இருவரும் தப்பலாம் என ஒரு கதை உண்டு. அதுபோல அறிவு ஒழுக்கம் எல்லாம் தனித்தனி இல்லாமல் ஒன்றாக நின்று முயன்று உயிரைப் பிறவியிலிருந்து மீட்டு முத்தியில் நிறுத்துகிறது என்பதாம்.

31. ணாணம் ணரஸ்ஸ ஸாரோ வி ணரஸ்ஸ ஹோஇ ஸம்மத்தம்|
ஸம்மத்தாஓ சரணம் சரணாஓ ஹோஇ ணிவ்வாணம்||

(ப-ரை) : ணாணம் - அறிவு, ணரஸ்ஸ - மனிதருக்கு, ஸாரோ - முதன்மையானது, ஸம்மத்தம் - நற்காட்சி, ணரஸ்ஸ - மனிதருக்கு, ஸாரோ வி - முதன்மையானதே, ஸம்மத்தாஓ - நற்காட்சியால், சரணம் - நல்லொழுக்கம் ஆகிறது, சரணா ஓ - நல்லொழுக்கத்தால், ணிவ்வாணம் - வீடுபேறு, ஹோஇ - ஆகிறது. எ-று.

(க-ரை) : நல்லறிவு காட்சி ஒழுக்கத்தால் வீடுபேறு ஆகிறது.

(வி-ரை) : ஆசாரியர் தேவர் முன் காதையில் அறிவு முதலான நான்கும் கூடி முத்தியைத் தருகிறது என்றார். இங்கே அவற்றில் முதன்மையைச் சுட்டுகிறார்.

அறிவு மனிதருக்கு முதன்மையானது. ஏனெனில் அறிவு உள்ள போதுதான் நல்லது - தீயது. ஏற்கத் தக்கது - விடத்தக்கது பற்றிய தெளிவு பெற முடியும். அந்த அறிவு மட்டும் இருந்தால் போதாது, மனிதருக்கு நற்காட்சியும் உடன் இருக்க வேண்டும். அதனால் அதுவும் முதன்மையானதே. நற்காட்சி இல்லை என்றால் அறிவு எத்தனை விரிவாக இருந்தாலும் அது உண்மையான அறிவு ஆகாது. அதனைப் பொய்யறிவு (மித்யா ஞானம்) என்பர்.

அறிவு உயிருக்கு உள்ள பண்பு. அது அறிதல் தொழிலில் இயங்கிக் கொண்டே இருக்கிறது. அந்த அறிவு எப்படி அறிகிறது என்பது முதன்மை அன்று. எதனை அறிகிறது என்பதே முதன்மை. உலகத்துப் புற்கலப் பொருள்களை அறிவு அறிகிறது. சரியாகவும் அறிகிறது. ஆனால் அதனை நல்லறிவு என்று சொல்லுவது இல்லை. உயிர் இயல்பை உள்ளவாறு அறிகிற போது தான் நல்லறிவு என்று சுட்டப்படுகிறது. அதனால் மெய்யறிவு பொய்யறிவு என்பன உயிரை அறிதல் / அறியாது இருத்தல் தன்மை நோக்கி அமைகின்றன. பிற பொருள்களை அறிதல் நோக்கில் அல்ல. நற்காட்சி பெறும் போதுதான் அறிவு நல்லறிவு ஆகிறது. ஏனெனில் நற்காட்சி தோன்றிய உயிரில் பொய்யறிவு நிகழாது. அதனால் நற்காட்சி முதன்மையானது என்றார். நற்காட்சியாலேயே நல்லொழுக்கம் ஆகிறது. நல்லொழுக்கத்தால் வீடுபேறு அமைகிறது. அதனால் நல்லொழுக்கம் முதன்மையானது. இப்படி உயிருக்கு நற்காட்சி

அடிப்படையிலேயே ஒவ்வொன்றும் முதன்மை அடைகிறது. இப்படி பார்க்கும் போது நற்காட்சியின் முதன்மை நன்கு விளங்குகிறது. இந்த முதன்மையே பிற எல்லாவற்றுக்கும் முதன்மை தருகிறது.

32. ணாணம்மி தம்ஸணம்மி ய தவேண சரிஏண ஸம்மஸஹிஏண|
சஉண்ஹம் பி ஸமாஜோகே ஸித்தா ஜீவா ண ஸந்தேஹோ||

(ப-ரை) : ணாணம்மி - அறிவு, தம்ஸணம்மி - காட்சி, தவேணா - தபம், சரிஏண - சாரித்திரம், சஉண்ஹம் பி - இந்நான்கும், ஸம்மஸஹிஏண - "ஸம்யக்த்வத்தால்", ஸமாஜோகே - கூடிய பிறகு, ஜீவா - உயிர், ஸித்தா - சித்தி அடைகிறது, ண ஸந்தேஹோ - இதில் ஐயம் இல்லை. எ-று.

(க-ரை) : அறிவு காட்சி தபம் சாரித்திரம் நான்கும் "ஸம்யக்த்வத்தால்" கூடிய பிறகு உயிர் சித்த நிலையை அடைகிறது; இதில் ஐயம் இல்லை.

(வி-ரை) : முத்தி நெறியில் நற்காட்சியின் முதன்மையை மீண்டும் இங்கே தெளிவு செய்கிறார். ஆசாரிய தேவர்.

அறிவும் காட்சியும் இணைதலில் முக்தி நெறி தொடங்குகிறது. அதனால் தான் காட்சியை - நற்காட்சியை - முதல் படி என்று சுட்டுவர். முத்தி மாளிகைக்கு நற்காட்சி பெறாதவரை அறிவு நல்லறிவு ஆவது இல்லை. நற்காட்சி பெற்று நல்லறிவு ஆனவுடன் உயிர் - உடல், தக்கன - தகாதன, ஏற்பன - தவிர்ப்பன பற்றிய கூரறிவு தோன்றுகிறது. அதனால் நற்காட்சி நல்லறிவுடன் கூடிய தபம் அமைகிறது. தபத்தோடு சேர்ந்து ஒழுக்கம் தொடங்குகிறது. இப்படி, காட்சி அறிவு தபம் ஒழுக்கம் நான்கும் ஒன்று சேரும் போது "ஸம்யக்த்வம்" ஒன்றாகிப் போகிறது. அதாவது நம்பிக்கை நான்கின் வடிவமாக இல்லாமல் நான்கும் நம்பிக்கை வடிவமாக ஒருமைப்பட்டு நிற்கிறது. அந்த ஒருமைப் பாட்டினை அனுபவம் செய்யும் போது உயிர் - தூய உயிராக தன்னை ஆக்கிக் கொள்கிறது. அதுவே "ஸித்த" நிலை - ஸித்தி அடைந்த நிலை; அடைய வேண்டிய ஒன்றை அடைந்த நிலை. இனி அதிலிருந்து திரும்புதல் இல்லை. இதில் ஐயம் இல்லை.

33. கல்லாண பரம்பரயா லஹந்தி ஜீவா விஸுத்த ஸம்மத்தம்|
ஸம்மதம்ஸண ரயணம் அக்கேதி ஸுராஸுரே லோஏ||

(ப-ரை) : ஜீவா - உயிர்கள், விஸுத்த - தூய, ஸம்மத்தம் - நற்காட்சியால், கல்லாண பரம்பரயா - பஞ்ச கலியாணங்களை முறையாக, லஹந்தி - அடைகின்றன; ஆகையால், ஸுராஸுரே - சுரர் அசுரர் உள்ள, லோஏ - மூவுலகில், ஸம்ம தம்ஸண - நற்காட்சி, ரயணம் - அருமணி, அக்கேதி - போற்றுதலுக்கு உரியது. எ-று.

(க-ரை) : உயிர் தூய நற்காட்சியால் பஞ்ச கலியாண பெருமையை அடைகிறது. அதனால் மூவுலகில் நற்காட்சி போற்றத்தக்க அருமணி ஆகும்.

(வி-ரை) : ஆசாரியர் நற்காட்சியின் பெருமையை இங்கே சுட்டுகிறார். நற்காட்சி நெறி உயிரை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வது. நற்காட்சியுடைய உயிர்கள் உன்னத நிலையை அடைகின்றன. என்றாலும் நற்காட்சி பெறுவதிலும் பெற்ற நற்காட்சியைப் போற்றுவதிலும் ஒரே தன்மையானவாக உயிர்கள் செயல்பட வில்லை. உன்னத நிலை "சித்த" நிலை என்றாலும், பலர் அருகர் நிலையிலிருந்து அடைய சிலர் "தீர்த்தங்கரர்" நிலையிலிருந்து அடைகின்றனர். அருகரும் தீர்த்தங்கரரும் குணநோக்கில் ஒத்தவரே. ஆனால், பவ்வியர் நோக்கில் பார்க்கும் போது வேறுபட்டு நிற்கின்றனர். பவ்வியர் பிறவிக் கடலை கடக்க புணையாகத் துணை செய்பவர் "தீர்த்தங்கரரே". "தீர்த்தங்கரர்" எனும் சொல்லுக்கு கரை ஏற்றுபவர் என்றே பொருள் கூறுவர். அதனால் தான் ஐம்மொழி (பஞ்ச மந்திரத்திலும்)யிலும் முதலில் தீர்த்தங்கரரை - அருகரை - வழிபடுகின்றனர். பிறகே "சித்தரை" வழிபடுகின்றனர்.

பவ்விய உயிர்களை, கரை ஏற்றும் தீர்த்தங்கரருக்கு ஐஞ்சிறப்புகள் (பஞ்ச கலியாணம்) நடை பெறுகின்றன. ஆசாரியர் அதனை நினைவு கூர்ந்து, "தீர்த்தங்கர" பதவி போன்ற சிறந்த நிலை கூட நற்காட்சியாலேயே அமைகிறது என நற்காட்சியின் பெருமைகளைச் சுட்டுகிறார். அதனால் தான் தேவர்கள் நிறைந்த மூவுலகம் அந்த நற்காட்சி அரு மணியைப் போற்றுகின்றது என கூறுகிறார். சுர அசுரர் என்றதால் மூவுலகம் எனப் பொருள் காணப்பட்டது. இனி சுர அசுரராலும் அது போற்றப்படுகிறது என்றும் பொருள் காணலாம்.

காட்சியோடு ஒப்பதுயாம் காணோம் வையத்து
மாட்சி யுடையது உயிர்க்கு [46]

என்று அருங்கலச் செப்புக் கூறும்.

34. லத்தூண ய மணுயத்தம் ஸஹியம் தஹ உத்தமேண கோத்தேண|
லத்தூண ய ஸம்மத்தம் அக்கய ஸோக்கம் ச மோக்கம் ச||

(ப-ரை) : உத்தமேண - உயர்ந்த, கோத்தேணே - கோத்திரம், ஸஹியம் - கூடிய, மணுயத்தம் - மனிதப் பிறவியை, தஹ லத்தூண - உறுதியாக அடைந்து, ய - மற்றும், ஸம்மத்தம் - நற்காட்சி, லத்தூண - அடைந்து, ச - மற்றும், அக்கய - அழிவில்லாத, ஸோக்கம் - இன்ப வடிவ முழு அறிவு, ச - மற்றும், மோக்கம் - வீடுபேறு அடைகிறார். எ-று.

(க-ரை) : உயர்ந்த கோத்திரம். மனிதப் பிறவி முழு அறிவு, வீடுபேறு இன்பம் இவை எல்லாம் நற்காட்சியால் பெறுகிறார்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் நற்காட்சியின் சிறப்பாக உத்தம கோத்திரத்தோடு மனிதப் பிறவி, பெயராப் பேரின்ப நிலை (வீடுபேறு) இவற்றைக் காட்டியுள்ளார்.

நற்காட்சியை நான்கு பிறவியிலும் அடைய முடியும். மனிதப் பிறவியில் மட்டுந்தான் நற்காட்சி அடைய முடியும் என்பது இல்லை. ஆனால் வீடுபேறு மனிதப்

பிறவியிலேயே அடைய முடியும். அந்த நோக்கில் கடைசி மனிதப் பிறவியைச் சுட்டினார் எனலாம்.

அடுத்து, "உத்தம கோத்திரம்". "உத்தம கோத்திரம்" என்பதற்கு உயர்ந்த குலம், வழிமுறை (வமிசம்) எனப் பொருள் காணுகின்றனர். ஆயத்தக்கது இது. நற்காட்சி நெறியில் குலம், சாதி போன்றவை அடிப்படை என்பது எப்படிப் பொருந்தும்? இவை எல்லாம் சமுதாயப் பிரிவுகளாக மனிதர் படைத்துக் கொண்டவை; ஆகமம் படைத்தவை அல்ல.

வினையில் "கோத்திர வினை" என்று ஒன்று உண்டு. போக பூமி மனிதரும், தேவரும் உத்தம கோத்திரம் உடையவர் நாரகரும் விலங்கும் நீச்ச கோத்திரம் உடையவர். விலங்கு நற்காட்சி பெறும் போது "உத்தம கோத்திரம்" ஆகிறது. அங்கே குலம் எங்கே? வினை நோக்கில் பார்க்கும் போது மனிதர் உச்ச கோத்திரம் அல்லது நீச்ச கோத்திரம் உடையவராக இருக்க முடியும். ஆனால் முனி நிலை துறவு ஏற்கும் போது அவர் உத்தம கோத்திரமுடையவராக இருக்க முடியும். அந்த நோக்கில் இங்கே உரை காணல் பொருந்தும். வீடு பேற்றுக்குத் தகுதியான மனிதப் பிறவியும் முனி ஆகுதற்குத் தகுதியான உத்தம கோத்திரமும் நற்காட்சியால் அடைய முடிகிறது என நற்காட்சியைச் சிறப்பித்தார் எனலாம். "குலம்" எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தமில்லை. ஆகம நோக்கில் ஆய்ந்து தெளியலாம்.

35. விஹரதி ஜாவ ஜிணிந்தோ ஸஹஸட்டஸுலக்கணேஹிம் ஸஞ்ஜுத்தோ|
சவதீஸ அஇஸய ஜுதோ ஸா படிமா தாவரா பணியா||

(ப-ரை) : ஸஹஸட்ட - ஆயிரத்தெட்டு, ஸுலக்கணேஹிம் - நல் இலக்கணங்கள், ஸஜ்ஜுத்தோ - கூடியவர், சஉதீஸ - முப்பத்து நான்கு, அஇஸய ஜுதோ - அதிசயங்களோடு கூடியவர், ஜிணிந்தோ - ஜிநர், ஜாவ - எக்காலம் வரை, விஹரதி - ஸ்ரீ விஹாரம் செய்கிறார், அது வரை, உடம்போடுள்ள, ஸா படிமா - அந்த படிமை. தாவரா - "தாவர படிமை" என, பணியா - சொல்லுவர். எ-று.

(க-ரை) : ஸ்ரீ விஹாரம் செய்யும் வரை அவர் உடலோடு உலா வருவதால் "தாவர படிமை" எனச் சுட்டப்படுகிறார்.

(வி-ரை) : "கேவல ஞானம்" - முழுதுணர் அறிவு பெற்று எது வரை பகவான் ஸ்ரீ விஹாரம் செய்கிறாரோ அதுவரை அவர் உடல் படிமை "தாவர படிமை" என அழைக்கப்படுகிறது. அவர் உடலில் 1008 இலக்ஷணங்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ விருக்ஷம் முதலான 108 "லக்ஷணம்" எனப்படும். "மச்சம்" முதலான 900 "வியஞ்ஜனம்" எனப்படும். இவையே "1008 இலக்ஷணம்" எனப்படுகின்றன. பகவானுடைய உடல் இந்த இக்ஷணங்களோடு விளங்குகின்றது,

34 அதிசயங்கள்

1. வேர்வை இன்மை, 2. அழுக்கு இன்மை, 3. வெள்ளை குருதி, 4. சம வடிவ உடல்,

5. "வஜ்ரவ்ருஷப நாராச" உடல் கட்டு, 6. நல்வடிவம், 7. நல்மணம், 8. நல் லக்ஷணம், 9. ஒப்பிலா வீரியம், 10. இதமித வசனம், இவை பிறப்பதிசயம்.

1. 100 யோஜனை வரை செழுமை, 2. வான் வழி செல்கை, 3. உயிர்கள் வதை இல்லாமை, 4. உணவு உண்ணாமை, 5. இடையூறு இல்லாமை, 6. நான்முகம், 7. எல்லா வித்தை, 8. நிழலின்மை, 9. கண் இமையாமை, 10. மயிர், நகம் வளராமை. இவை "கர்ம க்ஷய" அதிசயம்.

1. அர்த்தமாகதி மொழி, 2. உயிர்களிடம் அன்பு, 3. எல்லா பருவ பூ பழம், 4. கண்ணாடி போல பூமி, 5. மெல்லிய நறுங்காற்று, 6. மூலவுலகிலும் ஆனந்தம், 7. பூமி தூய்மை, 8. கந்தோதகம் சொரிதல், 9. பொன் தாமரை, 10. பயிர் செழுமை, 11. திசைகள் தூய்மை, 12. தேவர் அழைப்பு, 13. அற ஆழி முன் செல்லல், 14. அஷ்டமங்கலம் - இவை தேவர் செய்யும் சிறப்பு.

1. பாமண்டலம், 2. துந்துபி, 3. திவ்ய த்வனி, 4. சிங்க அணை, 5. பிண்டி, 6. சாமரை, 7. பூமழை, 8. முக்குடை. இவை எட்டு பிராதிஹார்யம் (எண்சிறப்பு),

அருக பகவான் அறவுரை ஆற்ற ஸ்ரீ விஹாரம் செய்யும் காலம் வரை "தாவர படிமை" என அழைக்கப்படுகிறார். இது பகவான் நிலை. இந்த உருவமே ஆலயங்களில் வடிவமைத்து வைக்கப்படுகிறது.

36. பாரஸ விஹதவ ஜுத்தா கம்மம் கவிஊண விஹிபலேண ஸம்|
வோஸட்ட சத்த தேஹா ணிவ்வாணமணுத்தரம் பத்தா||

(ப-ரை) : பாரஸ - பன்னிரண்டு, விஹ - வகை, தவ - தபத்தோடு, ஜுத்தா - கூடி, விஹி பலேண - விதி முறையால், ஸம் - தனது, கம்மம் - கருமத்தை, கவிஊண - கெடுத்து, வோஸட்ட சத்ததேஹா - உடலை விட்டு விலக்கி, அணுத்தரம் - கடைசி நிலையான, ணிவ்வாணம் - வீடுபேற்றை, பத்தா - அடைகிறார். எ-று.

(க-ரை) : தப விதி முறையால் வினையைக் கெடுத்து உடலை விட்டு வீடுபேற்றை அடைகிறார், என்பதாம்.

(வி-ரை) : தபத்தால் கேவல ஞானம் - முழுதுணர் அறிவு அடைந்து பிறகு விதி முறையால் அகாதி வினைகளை அழித்து உடலைப் பிரித்து விட்டு இனி மேல் நிலை இல்லை எனும் கடைசி நிலையான வீடுபேற்று நிலையை அடைகிறார் பகவான். அங்கே செல்ல ஒரு சமயம் ஆகிறது. அது போது "ஜங்கம படிமை" எனப்படுகிறார். ஸ்தாவரம் - அசையாமை; ஜங்கமம் - அசைதல். ஸ்ரீ விஹாரத்தில் உடல் அசையாமல் இருக்கிறது. முக்தி கதியில் உயிர்தனியே இடம் பெயர்கிறது - அசைகிறது.

இப்படி மும்மணியால் முக்தி அமைகிறது. அதில் நற்காட்சி முதன்மையானது. இந்த நூலில் நற்காட்சியின் பெருமை, முதன்மையை விளக்கியுள்ளார் ஆசாரிய தேவர்.

ஸூத்த பாஹுடம்

மங்கல நுழைவாயில்

இன்பம் உயிரின் இயல்பாகும். அது அறிவின் வடிவமாகும்; உண்மையான அறிவின் வடிவமாகும். அந்த உண்மையான அறிவைத் தேடலே பேரின்ப நெறியாகும். எங்கே உண்மையான அறிவு அடையப்படுகிறதோ அங்கே பேரின்பம் அடையப்படுகிறது.

ஆசாரியர் குந்த குந்தர் அருளிய ஸுத்த பாகுடம் மெய்ந்நூல் இது எனச் சுட்டி, அதன் வழி உண்மையான அறிவு அடைபவரே சமணர், அவரே பேரின்ப நெறியைப் பெறுகிறார் என வரையறை செய்கிறது. 'ஸுத்த' என்ற சொல்லுக்கு 'சூத்திரம்' என்று பொருள். பகவான் திருமொழியே இங்குச் சூத்திரம் எனப்படுகிறது. பகவான் தொடங்கி இந்த மெய்ந்நூல் பரம்பரை இன்று வரை தொடர்ந்து வருகிறது; இனியும் தொடரும், இடையிலே தடைபட்டாலும்.

பூமலி அசோகின் நீழல்
பொலிந்த எம்அடிகள் முன்னாள்
ஏமமாம் முதல்நூல் சொல்லக்
கணதரர் இயன்ற பாவால்
தாமொரு வழிநூல் சொல்லச்
சார்புநூல் பிறரும் சொல்லத்
தோமிலா மூன்று நூலும்
துவம்என உதித்த அன்றே

(சூடாமணி நிகண்டு.2)

இது மெய்ந்நூல் (சூத்திர) பரம்பரை ஆகும். அதனை வழிவழியாகக் கொண்டு வருபவர் அந்நூல் வழி ஆன்மச் சாதனை புரியும் சமணர் பற்றற்ற துறவியர் - ஆவர். அதனால் மெய்ந் நூலுக்கும் அதன் வழிபடும் சமணருக்கும் உள்ள தொடர்பு இனிது விளங்கும். அதனால், ஆசாரிய தேவர் மெய்ந்நூல் இது எனச் சுட்டி, அதன் வழி ஆன்மசாதனை செய்யும் துறவியர்தம் தூய இயல்பையும் இந்நூலுள் இணைத்துக் காட்டியுள்ளார். அத்தகு சமணரே வணக்கத்துக்கு உரியவர் என்றும் ஆணை இடுகிறார். வீடு பேற்று நெறியில் மூன்று தோற்றங்கள் உள்ளன. அவை: 1. பற்றற்ற முனிவர் தோற்றம், 2. உத்தம சாவகர் தோற்றம், 3. ஆர்யிகையர் தோற்றம் முனிவர்

தோற்றம் குறித்து மிக விரிவாகக் கூறி பிற இரண்டு தோற்றம் குறித்துச் சுருக்கமாகக் கூறியுள்ளார். உண்மையான தோற்றம் உடையாரைத் தெளிய மெய்ந்நூல் – சாத்திர – நல்அறிவு வேண்டும். அந்நல்லறிவே நல்லொழுக்க வழிகாட்டி. அந்த நல்லறிவைப் பெற இந் நூலை நாளும் ஓதுதல் வேண்டும். இன்றே அந்த மங்கல வாயிலில் நுழைவோமாக –நூலில் நுழைவோமாக!

மங்கலம்!

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

ஸுத்த பாஹுடம்

(சூத்திர பாகுடம்)

எனும்

சமண மெய்ந்நூல்

(பாகத மூலமும். தமிழ் உரையும்)

மங்களா சரணம்

1. அரஹத்த பாஸியத்தம் கணஹர தேவேஹிம் கந்தியம் ஸம்மம் |
ஸுத்தத்த மக்கணத்தம் ஸவணா ஸாஹந்தி பரமத்தம் ||

(பதவுரை) அரஹந்த - அருக பரமேட்டியால், பாஸியத்தம் - மொழியப்பட்டு, கணஹர தேவேஹிம் - கணதர தேவரால், ஸம்மம் - மிகு நன்கு, கந்தியம் - ஆக்கப்பட்டது ஆகமம், ஸுத்தத்த - அந்நூலின் பொருளை, மக்கணத்தம் - ஆய்கின்ற, ஸவணா - சமணர், பரமத்தம் - பரமான்மாவை அதாவது வீடு பேற்றை, ஸாஹந்தி - முடிக்கின்றனர், என்றவாறு.

(கருத்துரை) அருக பரமேட்டி அருளியதை கணதர தேவர் நூலாக வடித்தார். அந்நூலின் மெய்ப் பொருளை ஆய்கின்ற சமணர், வீடு பேற்றை அடைகின்றனர்.

(விளக்கவுரை) ஆசாரிய தேவர் வீடு பேற்று நிலையை விளைப்பதில் பரமாகமத்தின் பங்கினை இக்காதையில் சுட்டுகிறார். பரமாகமம், ஒலி வடிவில் அருக பரமேட்டியாலும், வரி வடிவில் கணதர பரமேட்டியாலும் ஆகின்றது. ஒலி வடிவத்துக்கு 'சூத்திரம்' என்றும் வரிவடிவத்துக்கு 'கிரந்தம்' என்றும், சொல்லும் மரபு காணப்படுகிறது. என்றாலும் கருதிய பொருளை சுருங்கிய வடிவில் தருவது சூத்திரம் என பின்னாளில் விளக்கம் தந்தனர். அதாவது மூல ஒலிக்கு இருந்த பெயர், பின்னால் எல்லா நூலுக்கும் பொருந்துவது ஆயிற்று.

'சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்
செவ்வன் அடியில் செறித்து இனிது விளக்கித்
திப்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்' (நன்.18)

என இலக்கணமும் சூத்திரத்திற்கு வரையப்பட்டது. குறிப்பிட்ட சாஸ்திரம் சூத்திரமா இல்லையா என்ற எதிராடல் (சர்ச்சை) கஷாய பாகுடம் போன்ற பழமையான நூல்களில் இடம் பெற்றுள்ளன. அதனால் சூத்திரம் என்ற சொல் பகவான் திருமொழிக்கே குறிப்பிட்டு வந்தனர் எனத் தோன்றுகிறது. சூத்திரம் என்பது சுருதம்

என ஒரு குறிப்பும் நூல்களுள் கிடைக்கிறது. அதாவது ’கேட்கப்பட்டது சூத்திரம்’ என்று பொருளாகிறது. அதனால், பகவான் திருமொழியே சூத்திரம் எனும் பெயரால் முதலில் வழங்கி உள்ளது என்பது தெளிவு. பின்னாளில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூற்பாக்கள் சூத்திரம் எனும் பெயரைப் பெறலாயின. நன்னூலார் விளக்கம் இதனையே சுட்டுகிறது.

ஆனால் இந்த முதல் காதையில் சூத்திரம் என்ற சொல்லை ஆசாரியர் ஆளவில்லை. ‘கந்தியம்’ என்ற சொல்லை ஆளுகிறார் ஆசாரியர். கிரந்தமாக ஆக்கினார் கணதரர் எனும் பொருள்பட இச்சொல் அமைவதால் அரகந்தர் மொழிந்தது ‘சூத்திரம்’ என்பதனை உய்த்துணர வைக்கிறது.

அந்தச் சூத்திரப் பொருளை ஆராய்கின்றவர் சமணர். சமணர் பற்றற்ற துறவியரைக் குறித்தது. நூல்களை ஆய்தல் அவருக்கு ஒழுக்கமாகும். ஆய்தல் எனில் அப்பொருளில் ஊன்றி நினைவு கூரல் (தியானித்தல்) என்பதாம். ‘அங்க பூவக ஆதி நூலோதி’ எனத் துறவியர் ஒழுக்கத்தைச் சுட்டுவார் மேருமந்தர புராணமுடையார் (124). ஏனெனில் முழு சுருத ஞானத்தை உடையவரே முதல் இரண்டு வெள்ளை (சுக்கில) தியானத்தை செய்ய முடியும் என்பது ஆகம உரை. அதனால்தான் ஆசாரியர் ஆகமங்களை ஆயும் துறவியர் வீடு பேற்றை அடைகின்றார் என்றார்.

முத்தி நெறியில் நூல்கள் ஓதுதலுக்குச் சிறப்பான இடம் உண்டு. ஆனால் நூல் ஓதுவார் நற்காட்சி உடையவராக இருத்தல் வேண்டும். நற்காட்சி இல்லாமல் எத்தனை நூல்களைப் படித்தாலும், படைத்தாலும் அதனாலே அவருக்கு எந்த ஆன்மீகப் பயனும் இல்லை. அதேபோது நற்காட்சியுடன் கூடி நூல் ஓதுவார் வினையை அழிக்கிறார். அவர் எந்தப் படி நிலையில் உள்ளாரோ அதற்கு ஏற்ப வினைக் கழிவும் வினைச் செறிப்பும் ஆகின்றன என்பது ஆகம உரை. அதனால்தான் ‘ஸ்வாத்யாயம் பரம தப’ எனப் போற்றப்படுகிறது.

2. **சுத்தம்மி ஜம் ஸுதிட்டம் ஆயிரிய பரம்பரேண மக்கணே |**
ணாஊண துவிஹ ஸுத்தம் வட்டதி ஸிவமக்க ஜோபவ்வோ ||

(ப-ரை) சுத்தம்மி - சூத்திரத்தில், ஜம் ஸுதிட்டம் - நன்கு சொல்லப்பட்டுள்ளவை, ஆயிரிய - ஆசாரியர்தம், பரம்பரேண - பரம்பரையாகும், மக்கணே - நெறியால், துவிஹ - இரண்டு வகைப்படும். ஸுத்தம் - சூத்திரத்தை, ணாஊண அறிந்து, ஜோ - எவர், ஸிவமக்கே - முக்தி நெறியில், வட்டதி - செல்கிறார், அவர், பவ்வோ - பவ்வியராம், எ-று

(க-ரை) பகவான் அருளிய சூத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளவை ஆசாரியர் பரம்பரையில் வருவன எனக் கொண்டு இரண்டு வகை சூத்திரத்தை அறிந்து முத்தி நெறியில் செல்பவர் பவ்வியராம் - அதாவது முத்திக்குத் தக்கவராம்.

(வி-ரை) ஆசாரிய தேவர், இங்கு ஆசாரிய பரம்பரை என்ற தொடரை ஆண்டுள்ளார். பகவான் வர்த்தமானர் முத்தி அடைந்த அன்று கௌதம கணதரர் கேவலி ஆனார். அவருக்குப் பிறகு சுதருமரும், அவருக்குப் பிறகு ஜம்பு சுவாமியும் கேவலி ஆகி முத்தி அடைந்தார். அவருக்குப் பிறகு ஐந்து சுருத கேவலியர் இருந்தனர். அவர் 1. விஷ்ணு 2. நந்தி மித்ர 3. அபராஜிதர், 4. கோவர்த்தனர், 5. பத்ரபாஹு,

இவ்வைவரும் பன்னிரண்டு அங்க சூத்திரம் அறிந்தவர். அவருக்குப் பின்னே பத்து பூர்வம் அறிந்த பதினோரு ஆசாரியர் இருந்தனர். அவர் 1.விசாகர், 2. பிரௌஷ்டிலர், 3.க்ஷத்திரியர், 4.ஜயசேனர், 5.நாகசேனர், 6.ஸித்தார்தர், 7.திருதிஷேணர், 8.விஜயர், 9.புத்திலர், 10.கங்க தேவர், 11.தரும சேனர். அவருக்குப் பின்னர் பதினோரு அங்கம் அறிந்த ஐவர் இருந்தனர். அவர் 1.நக்ஷத்திரர் 2.ஜயபாலர் 3.பாண்டு 4.துருவசேனர், 5.கம்சர். அவருக்குப் பின்னே ஓரங்கம் அறிந்த நால்வர் இருந்தனர். அவர் 1.சுபத்திரர், 2.யசோபத்திரர் 3.பத்ரபாஹு 4.லோகாசிரியர். அவருக்குப் பிறகு அங்க அறிவு குறைந்து போயிற்று. குறைந்த அங்க அறிவு பெற்றிருந்த சிலர்: அர்ஹத் பலி, மாகநந்தி, தரசேனர், புஷ்பதந்தர், பூதபலி எனத் தொடருகிறது.

செவி வழியாக வந்த அங்க சுருதம் வரிவடிவம் பெறும் முன்பே அழிந்துவிட்டது. அவற்றின் பெயர்: 1.ஆசாராங்கம், 2.சூத்ர க்ருதாங்கம், 3. ஸ்தானாங்கம், 4.ஸமவாயாங்கம், 5.வியாக்யா ப்ரஜ்ஞப்தி, 6.ஜ்ஞாத்ரு கதாங்கம், 7.உபாஸகாத்யயனாங்கம், 8.அந்தக்ருத தசாங்கம், 9.அனுத்தரோத்பாதிக தசாங்கம், 10.பிரச்ன வ்யாகரணாங்கம், 11.விபாக சூத்ராங்கம், 12.திருஷ்டிவாதாங்கம்.

பதினான்கு பூர்வம்: 1. உத்பாத பூர்வம், 2. அக்ராயணி பூர்வம், 3. வீர்யானுபூர்வம், 4. அஸ்தி நாஸ்தி பிரவாதம், 5. ஞான பிரவாதம், 6. சத்ய பிரவாதம், 7. ஆத்ம பிரவாதம், 8. கர்ம பிரவாதம், 9. பிரத்யாக்யான வாதம் 10. வித்யானு வாதம், 11. கல்யாண வாதம், 12. பிராணாவாய ப்ரவாதம், 13. கிரியா விசாலம், 14. லோக பிந்து பூர்வம்.

இவை எல்லாம் திருஷ்டிவாத அங்கத்தில் அடங்குபவை. இப்படி பகவான் திருமொழியாக வெளிப்பட்ட சூத்திரம் வரிவடிவம் பெறாமலே மறைந்து விட்டன. என்றாலும் வழி வழியாக ஆசாரியர் செவி வழி சொல்லி வந்தவை காலத்தால் குறைந்து கொண்டே வந்தாலும் முற்றுமாக அழிந்துவிடவில்லை. ஏனெனில் செவி வழி கேட்டு வந்த சூத்திரத்தின் அடிப்படையிலேயே ஆன்ம சாதனை செய்து வரும் ஆசாரியர் பரம்பரை இன்று வரை தொடர்ந்து வருகிறது. இந்த நோக்கிலேயே ஆசாரிய தேவர், பரம்பரை வழியில் சூத்திரம் தொடர்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சூத்திரம் இரண்டு வகை. ஒன்று ஒலி வடிவம்; மற்றொன்று பொருள் வடிவம் அதாவது அறிவு வடிவம். ஒலி வடிவம், அதைத் தொடர்ந்த வரி வடிவம் - ‘திரவ்ய’ சுருதம் எனப்படும். அச்சூத்திரப் பொருளைத் தெளியும் அறிவு ‘பாவ சுருதம்’ எனப்படும். இதனையே ஆசாரியர் இரண்டு வகையால் ஆயும் சமணர் என்றார்.

பவ்வியர் என்று குறிப்பிட்டதன் கருத்து சூத்திரம் அறிந்தவர் வீடுபேற்றுக்குத் தகுதியுடையவர் ஆகிறார் என்பதாம். ஏனெனில் சுருதகேவலியாகாமல் அருக கேவலி ஆக முடியாது.

3. **ஸுத்தம்[1] ஹி ஜாணமாணோ பவஸ்ஸ பவணாஸணம் ச ஸோ குணதி |**
ஸுஈ ஜஹா அஸுத்தா ணாஸதி ஸுத்தே ஸஹா ணோவி ||

(ப-ரை) ஜஹா - எப்படி, அஸுத்தா - நூலற்ற, ஸுஈ - ஊசி, ணாஸதி - தொலைந்து போகிறது, அது, ஸுத்தே ஸஹா - நூலோடு இருந்தால், ணோவி - தொலைவதும் இல்லை, ஹி - அப்படி, ஸுத்தம் - சூத்திரம், ஜாணமாணோ - அறிபவர், ஸோ - அவர், ச - உறுதியாக, பவஸ்ஸ - பிறவியில், பவ - தோன்றுதலை, ணாஸணம் - அழித்தல், குணதி - செய்கிறார். எ-று.

(க-ரை) நூலுடையார் தான் தொலையாது பிறவியைத் தொலைத்து விடுகிறார். நூலற்றார் தான் பிறவியில் தொலைந்துவிடுகிறார். எதுபோல எனில் நூலுள்ள ஊசி தொலையாது இருக்கிறது. நூலற்ற ஊசி தொலைந்து போவது போல.

(வி-ரை) ஆசாரிய தேவர் எவர் பிறவிக் கடலைக் கடப்பார் என ஓர் எளிய எடுத்துக்காட்டு வழி அழகாக விளக்குகிறார். துணி தைக்கும் ஊசி சிறியது. அது தொலையாது இருக்க அதில் நூல் கோர்த்து வைப்பர் மக்கள். நூல் இருந்தால் ஊசியைக் கண்டு பிடித்து விடலாம், எங்கேனும் கீழே விழுந்தால். ஆனால், நூல் இல்லாத ஊசி விழுந்து விட்டால் கண்டு பிடித்தல் அரிது. அது மண்ணோடு கலந்து விடும். இந்த எளிய எடுத்துக்காட்டு வழி நூல் (சூத்திரம்) அறிவின் இன்றியமையாமையை விளக்குகிறார்.

எவர் பகவானால் அருளப்பட்ட சூத்திரத்தோடு அதாவது நூல் அறிவோடு கூடியுள்ளாரோ அவர் பிறவிக் கடலில் தொலைந்து விடாது பிறவியைத் தொலைத்து விடுகிறார் - காணாது போகச் செய்கின்றார். ஆனால் நூல் அறிவு இல்லாதவர் தானே பவக் கடலில் தொலைந்து போகிறார் - அதாவது பிறவியில் கிடக்கிறார். நூலுடையார் அதனால் பிறவியை அழிக்கிறார் என்றார்.

பஞ்சால் நூற்கப்படுவதும் நூல், பாவால் நூற்கப்படுவதும் நூல். சூத்திரத்தை நூலோடு ஒப்புமை காட்டியுள்ளார். இதனை உவம ஆகு பெயர் என்ப.

1. பாடபேதம் 1 ஸுத்தம்மி

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்கு நூல் அஃதே போல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்கு நூல் மாண்பு. (நன். 25)

சூத்திரத்தை ஏன் நூலென்றனர் என்பதனை இப்பாடல் விளக்குகிறது. வளைந்த மரத்தினது கோணலை ஏற்று நூல் நீக்குதல் போல, மனத்தின் கோணலைத் தீர்த்து செப்பம் செய்வது நூல் என்பதாம். அதாவது நூல் அறியாமையைக் கெடுத்து அறிவினைக் கூர்மை செய்வது என்பது கருத்து. வீடு பேறு அறிவுத் தெளிவால் அமைகிறது. அந்தத் தெளிவைத் தருவதனை நூல் என்றது உவம ஆகுபெயர் என்க.

'பவஸ்ஸ ஸுத்தம்' எனக் கொண்டு பகவானால் அருளப் பெற்ற நூல் என உரை காண்கிறார் சுருத சாகர் ஆசாரியர். விருப்பு வெறுப்புடையவரால் ஆக்கப்பட்டவை நூலாகா என்பது அவர் கருத்தாம்.

4. **புரிஸோ வி ஜோ ஸஸுத்தோ ண விணாஸஇ ஸோ கஓ வி ஸம்ஸாரே |**
ஸச்சேதண பச்சக்கம் ணாஸதி தம் ஸோ அதிஸ்ஸமணோ வி ||

(ப-ரை) ஜோ - எப்படி, ஸஸுத்தோ - நூலுடன் கூடிய ஊசி, ண விணாஸஇ - தொலைவது இல்லையோ, அப்படி, புரிஸோவி-மனிதரும், ஸம்ஸாரே - பிறவியில், கஓவி - இருந்தாலும், ஸோ - அவர், ண விணாஸஇ - அழிவது இல்லை, ஏனெனில், நூலறிவு இருந்தால், ஸோ - அவர், அதிஸ்ஸமாணோவி - தன் ஆன்மாவைக் காணவில்லை என்றாலும், ஸச் சேதண - நிலைத்துள்ள ஆன்மாவை உணர்வால், பச்சக்கம் - நேரே காண்கிறார், அதனால், தம் - பிறவியை, ணாஸதி அழிக்கிறார், எ-று.

(க-ரை) நூலுடன் கூடிய ஊசி தொலையாதது போல நூலறிவுடையார் பிறவியில் தொலைவது இல்லை. தன் ஆன்ம இருப்பை நேரே உணர்வதால் பிறவியைக் கெடுக்கிறார்.

(வி-ரை) முன் காதையில் காட்டிய எடுத்துக் காட்டை இக்காதையிலும் விளக்குகிறார். பிறவி என்பது கடல். அதில் உயிர்கள் தொடக்க மற்ற காலமாக உழல்கிறது. அதற்குக் காரணம் தன்னைப் பற்றி அறியும் அறிவை (நூலை) பெறாமையால் ஆகும். நூலறிவு இருக்குமானால், அவர் பிறவியில் இருந்தாலும் அதில் மூழ்கி விடமாட்டார். நூலறிவால் தன்னைக் கண்டு கொள்வார். அதனால் ஆசாரியர் பிறிவியிலிருந்தாலும் அழிவது இல்லை என்றார்.

'பிறவியில் இருப்பதால்' என்று சுட்டுவதால் அவர் துறவு நெறி நோக்கி இன்னும் முயலாதவர் என்று உய்த்துணரலாம். ஆனாலும் நற்காட்சி உடையவர். அது இருப்பதால் பிறவி ஒரு நாள் முடிவுக்கு வந்து விடும்.

ஆன்மா பொறியால் அறியப்படாதது; அருவமானது. என்றாலும் நூலறிவு உடைய உணர்வாளர் (பாவ சுருத ஞானி) தன்னைத் தானே உணரும் அறிவில் துய்ப்பதால் தன்னை நேராகக் காண்கிறார் என்றார்.

பிற உயிர் தனக்குப் புறமானது. ஆனால் தன் உயிர் தனக்கு அகமானது, அனுபவமானது. வீதராக பகவானுக்கும் பிற உயிர்கள் புறமானவையே. அதுபோலக் கொள்க. ஊசியை நூல் அடையாளப் படுத்துவது போல நூலறிவு ஆன்மாவை அடையாளப்படுத்துகிறது. நூலறிவு உணர்வு, நிலை கொள்ளும்போது தன்னைத் தானே அறிகிறது, நேரே அனுபவம் செய்கிறது. எனவே நூலறிவு வேண்டும் என்பதாம்.

5. **ஸுத்தத்தம் ஜிணபணியம் ஜீவாஜீவாதி பஹு விஹம் அத்தம் |**
ஹேயாஹேயம் ச தஹா ஜோ ஜாணஇ ஸோ ஹு ஸத்திட்டீ ||

(ப-ரை) ஸுத்தத்தம் - நூற்பொருளை, ஜிண - ஜிநர், பணியம் - சொன்னார், அச் சூத்திரம், ஜீவ - உயிர், அஜீவ - உயிரல்லன, ஆதி - முதலாக, பஹு - பல, விஹம் - வகையான, அத்தம் - பொருளுடையது, ச-மற்றும், ஜோ - எவர், ஹேயம் - ஏற்கத்தக்கது, அஹேயம் - விலக்கத் தக்கது, தஹா - அப்படி, ஜாணஇ - அறிகிறார், ஸோஹு - அவரே, ஸத்திட்டீ - நற்காட்சியர், எ-று.

(க-ரை) சூத்திரப் பொருளை ஜிநர் அருளினார். அப் பொருள் உயிர், உயிரல்லன முதலாகப் பல வகைப் பொருளைச் சுட்டுவது. அப் பொருளில் ஏற்கத் தக்கவை, விலக்கத் தக்கவை எனப் பிரித்து அறிபவர் நற்காட்சி உடையவராம்.

(வி-ரை) பகவான் உரைத்த நூலுள் உயிர், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாயம், காலம் என ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றோடு ஏழு தத்துவங்களும் ஒன்பது பதார்த்தங்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தான் ஏற்கத் தக்கன எவை: விலக்கத் தக்கன எவை: என பகுத்து அறியும் நம்பிக்கையுடையவரே நற்காட்சியர். ஆறு பொருளுள் உயிர் ஒன்றே ஏற்கத் தக்கது, பிற எல்லாம் விலக்கத் தக்கன. ஏழு பொருளில் உயிர், செறிப்பு, உதிர்ப்பு, வீடு இவை ஏற்கத் தக்கன; பிற விலக்கத் தக்கன.

இப்படிச் சூத்திரப் பொருளை ஆய்ந்து தெளிபவரை நற்காட்சியர் என்றார். ஏனெனில் சூத்திரப் பொருளை நற்காட்சியுடையவரே நுட்பமாக அறிந்து அனுபவத்துக்குக் கொண்டு வரமுடியும். அதனால்தான் நற்காட்சியுடையாருடைய அறிவை நல்லறிவு என்றனர்.

ஜிநருடைய சூத்திரத்தில் எல்லாப் பொருளும் உள்ளன. உயிர் பிறவியில் உழல்வதற்கான பொருள்கள் எவை? பிறவியிலிருந்து விடுபட உதவும் பொருள்கள் எவை? என உலகப் பொருள் அனைத்தும் அதில் கூறப்பட்டுள்ளன. அதனால் அவற்றில் பிரித்து அறிந்து ஏற்பனவற்றைத் தெளிவர் நற்காட்சியர் என்றார்.

‘உரைத்தஇப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி’ (107)

என்றார் மேருமந்தரம் உடையாரும்.

6 **ஜம் ஸுத்தம் ஜிணஉத்தம் வவஹாரோ தஹ ய ஜாண பரமத்தோ |**
தம் ஜாணிஊண ஜோஈ லஹஇ ஸுஹம் கவஇ மல புஞ்ஜம் ||

(ப-ரை) ஜிண - ஜிநரால், உத்தம் - சொல்லப்பட்டது, ஜம் ஸுத்தம் - எந்த சூத்திரம், அது வவஹாரோ - வழக்கு வடிவம், தஹ - மேலும், பரமத்தோ - உண்மை வடிவமாகும் என - ஜாண - அறிக, ய - மற்றும், ஜோஈ - யோகியர், தம் - அதனை, ஜாணி ஊண - அறிந்து, மல புஞ்சம் - வினைகளை, கவ இ - அழிக்கின்றனர், ஸுஹம் - பேரின்பத்தை, லஹஇ - அடைகின்றனர். எ-று.

(க-ரை) அருகரால் அருளப் பெற்ற சூத்திரம் வழக்கு வடிவம், உண்மை வடிவம் உடையது என அறிய வேண்டும். யோகியர் அதனை அறிந்து வினைகளை வீழ்த்தி வீட்டின்பம் அடைகின்றனர்.

(வி-ரை) சூத்திரம் - நூல் - பரமாகமம் மெய்ப்பொருளை விளக்குவது. அவ்விளக்கம் வழக்கு நெறியிலும் உண்மை நெறியிலும் உரைக்கப்பட்டுள்ளது. இங்கே ஆசாரியர் நூலின் சொல் முறைமை குறித்துச் சுட்டுகிறார். ஏனெனில் உலகில் நூல்கள் பலவாக உள்ளன. நூல் உரைக்க தகுதி இல்லார் எல்லாம் நூல் உரைக்கின்றனர். அதனால் நூல் உரைக்கும் முறை ஜிநர் நெறியில் மாறுபட்டுள்ளது என இங்கே சுட்டுகிறார்.

மெய்ப் பொருளை ஒரு துணிபாக (ஏகாந்தமாக) துணிதல் இயலாது. அது பல் துணிபாலேயே (அநேகாந்தமாகவே) துணியப்படும். ஏனெனில் மெய்ப் பொருள் இயல்பை விளங்கிக் கொள்ளுதல் மிக அரிதாகும்.

நயம் என்பது சொல்லுவோனின் கருத்தாகும். அதாவது கருத்து ஒரு நோக்கில் கூறப்படுகிறது என்பதாம். அந்த நயம் வழக்கு நயம், உண்மை நயம் என இரு வகைப்படும். ஒரு பொருளை வேறுபடுத்துவது அல்லது வேறுபட்டவற்றை ஒன்றென்பது வழக்கு நயம் என்பர், இதற்கு எதிரானது உண்மை வழக்காகும். அதாவது உள்ளவாறு முழுமையைச் சுட்டுவது, தன்னைச் சார்ந்து சுட்டுவது உண்மை நயமாகும். இதில் கலப்பும் இருக்காது பிரிப்பும் இருக்காது. பொருள் இயல்பு உள்ளவாறு உரைப்பது. இவ்விரு நய நோக்கில் பொருளைத் தெளிய வேண்டும். யோகியர் அப்படித் தெளிந்தே பிறவியை அறுத்து வீட்டின்பத்தை அடைகின்றனர். மலபுஞ்ஜம் என்றது திரவிய, பாவ நோ கருமங்களை ஆகும்.

7 ஸுத்தத்த பயவிணட்டோ மிச்சாதிட்டீ ஹு ஸோ முணேயவ்வோ|
கேடே வி ண காயவ்வம் பாணிப்பத்தம் ஸசேலஸ்ஸ ||

(ப-ரை) ஸுத்த - சூத்திரத்தின், அத்த - அர்த்தம், பய - பதம் இவற்றிலிருந்து, விணட்டோ - விலகியவன், மிச்சாதிட்டிஹு - மெய்ம்மை இல்லாதவரே என்று, ஸோ முணேயவ்வோ - அவரை அறிதல் வேண்டும், ஸசேலஸ்ஸ - துணி உடுத்தியவனுக்கு, கேடே வி - விளையாட்டாகவும், பாணிப்பத்தம் - கையில் உணவு ஏற்க வழங்குதல், ண காயவ்வம் - முறைமை அன்று, எ-று.

(க-ரை) சூத்திரத்தின் சொல்லையும் பொருளையும் அறியாது விலகியவர் மெய்ம்மை இல்லாதவர். ஆடையோடு இருக்கும் அவருக்கு கையில் உணவு ஏற்க வழங்குதல் முறைமை அன்று.

(வி-ரை) ஆசாரியர் சூத்திரத்தை எப்படி அறிதல் வேண்டும் என முன்பு குறிப்பிட்டார். முனிவர் அப்படி அறியாது இருந்தால் என்ன சொல்வது? சூத்திரத்தை இரண்டாலும் அறிதல் வேண்டும். அதாவது சொல்லாலும் பொருளாலும் அறிய வேண்டும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய சூத்திரம். சொல்லால் அறிதல் திரவிய சூத்திரம் எனப்படும். அது வரிவடிவமாகவும் ஒலி வடிவமாகவும் இருப்பதாம். அச்சூத்திரம் சுட்டும் பொருளை அறிதல் பாவ சூத்திரம் எனப்படும். அங்கு ஒலிவடிவம் இல்லை, வரி வடிவம் இல்லை. அறிவு வடிவம் மட்டுமே உண்டு. இந்த இரண்டினை, சொல்லையும் பொருளையும் அறியாதவர் இழிந்தவர் என்றார். சொல்லையும் பொருளையும் அறியாமை என்பது பகவான் உரைக்கு எதிராகப் போதலாம். அதனால் அவர் மெய்ம்மை இல்லாதவர் என்றார். காதையின் முதல் பகுதி (அடி)யின் கருத்து இது. சூத்திரத்தை உள்ளவாறு அறிந்து போற்ற வேண்டும் என ஆணை இடுகிறார்.

அடுத்த வரி தரும் செய்தி சூத்திரத்தோடு தொடர்புடையது அன்று. ஆனால் அச் சூத்திர வழி நடப்பதாகக் கூறும் போலி முனிவருக்கு விளையாட்டாகவும் உணவு வழங்குதல் கூடாது என்கிறார். ஆடை உடுத்தியவர் தம்மை முனி என அறிவித்து கையில் உணவு ஏற்ற நிலை ஆசாரியர் காலத்தில் இருந்திருக்கும் போலும். சூத்திரத்தில் முனிவர் தோற்றம் பிறந்த தோற்றம் எனச் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு எதிராக நடந்து உடை உடுத்தியவர் முனி என கையில் உணவு ஏற்றல் நற்காட்சியிலிருந்து இழிந்த நிலையாகும் - மெய்ம்மை இல்லா நிலையாகும். அவருக்கு விளையாட்டாகவும் கையில் உணவு வழங்குதல் அதாவது பணிவு செய்தல் கூடாது என்கிறார்.

தற்போதும் பகவான் சூத்திரத்துக்கு எதிராக நடப்பவர், துறவி எனத் தம்மை அறிவித்துக் கொண்டு உடையோடு உலா வருதலைக் காணலாம். பகவானுக்குரிய அடைமொழி எல்லாம் கூச்சமின்றித் தமக்குச் சூட்டிக் கொள்வர். இத் தோற்றங்கள்

எல்லாம் பகவான் சூத்திரத்துக்கு (ஆகமத்துக்கு) எதிரானவை என்று தெளிய வேண்டும்.

இனி, இப்படிப்பட்ட மெய்ம்மை இல்லார், தன் கையால் உணவு ஏற்றல் தக்கது அன்று; விளையாட்டாகவும் இத்தோற்றத்தை ஏற்றல் கூடாது. அதாவது உடை உடுத்திக் கொண்டு கையில் உணவு ஏற்றல் விளையாட்டாகவும் செய்தல் கூடாது, எனவும் இக் காதையின் பின் அடிக்கு உரை காணலாம் என்பாரும் உளர்.

8 **ஹரிஹர துல்லோ வி ணரோ ஸக்கம் கச்சேஇ ஏஇ பவகோடீ |**
தஹ வி ண பாவஇ ஸித்திம் ஸம்ஸாரத்தோ புணோ பணிதோ ||

(ப-ரை) ணரோ - ஒருவர், ஹரி - நாராயணர், ஹர - உருத்திரர், துல்லோ வி - இணையாக ஆற்றல் உடையவரானாலும், ஸக்கம் - சொர்க்கம், கச்சேஇ - போகிறார், புணோ - மீண்டும், ஏஇ பவ கோடீ - அவர் கோடிக் கணக்கான பிறப்பெடுத்து, ஸம்ஸாரத்தோ - பிறவிகளில் உழல்கிறார், தஹ வி - அப்படி ஆனாலும், ஸித்திம் - வீடு பேற்றை, ண பாவஇ - அடைதல் செய்யார், பணிதோ - என்று சொல்லப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) சூத்திரம் அறியாத ஒருவர் ஆற்றலில் நாராயணர் உருத்திரரை ஒத்து இருந்தாலும் சொர்க்கம் செல்கிறார். மீண்டும் கோடிக் கணக்கான பிறப்பெடுத்து பிறவியில் சுற்றுகிறார்; வீடு பேற்றை அடையார் எனச் சொல்லப்பட்டுள்ளது.

(வி-ரை) சூத்திரத்தை (ஆகமத்தை)ச் சொல்லாலும் பொருளாலும் அறியாத ஒருவர் ஆற்றலில் அரி, அரரை ஒத்து இருந்தாலும் தான் செய்த தானம் பூஜை முதலான சுப நிகழ்வுகளால் தேவ இன்பத்தைப் பெறுகிறார். மீண்டும் அங்கிருந்து வந்து பிறவியில் உழல்கிறார். ஆகம அறிவு இன்மையால் வீடு பேற்றை அடையார் என பகவான் சூத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. சூத்திரத்தை அறியாதவர் என்றதால் அதற்கு எதிரான போக்குடையவர் என்பதாயிற்று. அவர் பொய் நம்பிக்கையர் (மித்யா திருஷ்டி) என்பதாம். அவருக்கு வீடுபேறு அமையாது. தான் கைக்கொள்ளும் சுப நிகழ்வுகளால் தேவ இன்பம் முதலானவற்றை அடைந்து மீண்டும் பிறவியிலேயே சுழல்வார் என்பதாம். வீடு பேற்றுக்கு சூத்திர அறிவு வேண்டும் என்பது கருத்து.

9 **உக்கிட்ட ஸீஹசரியம் பஹுபரியம்மோ ய கருயபாரோ ய |**
ஜோ விஹரஇ ஸச்சந்தம் பாவம் கச்சந்தி ஹோதி மிச்சத்தம் ||

(ப-ரை) ஜோ - எவர், ஸீஹ - சிங்கம் போல, உக்கிட்ட - தலைமையான, சரியம்- ஒழுகுதலும், பஹு - பலவான, பரியம்மோ - தப நிகழ்வுகள் செய்தலும், ய - மற்றும், கருய பாரோ - குரு பதவியும் கொண்டு, ஸச்சந்தம் - தன் விருப்பப்படி, விஹரஇ - ஒழுகுபவர், பாவம் -பாபி, கச்சந்தி - ஆகிறார், மிச்சத்தம் - பொய் நம்பிக்கை உடையவர், ஹோதி -ஆகிறார், எ-று.

(க-ரை) சிங்கம் போன்ற ஒழுக்கமும், பல தப நிகழ்வுகளும், குரு பதவியும் பெற்று தன் விருப்பப்படி நடக்கின்றவர், பாபி ஆகிறார், பொய் நம்பிக்கை உடையவர் ஆகிறார், சூத்திரப்படி ஒழுகாதவர்.

(வி-ரை) ஆசாரிய தேவர் சூத்திரத்தை ஒதுக்கி நடப்பவர் எவ்வளவு சிறந்த பெருமைகளை உடையவராக இருந்தாலும் மெய் நம்பிக்கை இல்லாமையால் பாபம் சேர்க்கிறார் என்று காட்டுகிறார். அவர் காட்டும் சில பெருமைகள்: சிங்கம் போல அச்சமற்றவர்; மிக உயர்ந்த புற ஒழுக்கத்தை உடையவர், பல வகை தப நிகழ்வுகளால் உடலை வாட்டுபவர், குரு பதவி உடையவர் அதாவது சீடருக்கு அச்சமில்லாத பாதுகாப்பு உடையவர், அதற்கான ஆளுமை உடையவர்; என்றாலும் தன் விருப்பப்படி ஒழுகுபவர்; சூத்திர ஆணையை ஒதுக்குபவர்; அதனால் சூத்திரத்துக்கு எதிராக ஒழுகுபவர். அவர் மெய் நம்பிக்கை இல்லாதவர். அதனால் பாபம் ஈட்டுபவர்.

காதையை ஊன்றிப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. பகவானுடைய தோற்றம் ஏற்றவர் புற ஒழுக்கங்களால் மக்களைக் குழுமச் செய்து, தம்மை வழிபடச் செய்து, தம்மை போற்றச் செய்து, தனி போக்குடையவராக நின்று, பெருமை அடைகிறார். அவர் சூத்திரம் அறிந்தவராக இரார். சூத்திரம் அறியாத பொய் நம்பிக்கை உடையவரே இத்தகு போக்குகளில் மகிழ்வார். அவர் பாபத்துக்குப் பாத்திரமாகிறார் எனத் தெளிய முடிகிறது.

10 **ணிச்சேல பாணிபத்தம் உவஇட்டம் பரமஜிணவரிம் தேஹிம் |**
ஏக்கோ வி மோக்க மக்கோ ஸேஸா ய அமக்கயா ஸவ்வே ||

(ப-ரை) ணிச்சேல - ஆடை இல்லாத தோற்றம், பாணி பத்தம் - கைகளே கலமாக உணவு ஏற்றல், ஏக்கோ வி - இது ஒன்றே, மோக்க - வீடு பேற்று, மக்கோ - நெறியாம், ய - மற்றும், ஸேஸா - மீதி, ஸவ்வே - எல்லாம், அமக்கயா - நெறி அல்லாதனவாம் என, பரம - உயர்ந்த, ஜிணவரிம்தேஹிம் - ஜிநருள் தலைமையான தீர்த்தங்கரரால், உவ இட்டம் - சொல்லப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) ஆடையில்லா தோற்றமும் கையில் உணவு ஏற்றலும் உடைய நெறியே வீடு பேற்று நெறி; பிற எல்லாம் நெறிகள் அல்ல என தீர்த்தங்கரரால் அருளப்பட்டுள்ளது.

(வி-ரை) ஆசாரிய தேவர் இரண்டு குறியீடுகளைக் காட்டி உண்மையான வீடுபேற்று நெறியின் செம்மையை விளக்கியுள்ளார். வீடு பேற்று நெறி எல்லாராலும் போற்றப்படுகிறது. அந் நெறியில் செல்வோர் பல்வேறு புறத் தோற்றங்களை உடையவராக விளங்குகின்றனர். உண்மையான வீடு பேற்று நெறியில் புறத் தோற்றம் எப்படி உள்ளது எனக் காட்டி நெறியின் இயல்பை இனிது விளக்குகிறார்.

ஆடை இல்லாத தோற்றம். துணி உடுத்தாமை மட்டும் இதன் பொருள் அன்று. பிறந்த போது உடல் எப்படி இருந்தது, அதே தோற்றம் இது. ஆடை அணி முதலான இல்லாமல் குழந்தை பிறக்கிறது. அது போல, - எந்தப் புற அணிகள் இல்லாமல் உடல் இயல்பாக இருத்தல் போல - இத் தோற்றம் உடையாருடைய உயிர் எந்தப் பற்றுகளும் இல்லாமல் இயற்கை உருவோடு அருவமாக இருக்கிறது; தூய்மையாக விளங்குகிறது. இதுவே வீடு பேற்று நெறி.

கைகள் கலமாக உணவு ஏற்றல் தன்னுரிமை நிலையை விளக்குகிறது. வீடு பேற்று நெறியாளர் யாரையும் எதையும் சார்ந்து இருக்க வில்லை எனத் தெளிவு செய்கிறது. இதுவே வீடு பேற்று நெறி. இந்த இரண்டும் பகவான் அருளிய சூத்திரத்தில் சொல்லப்பட்டு சமணரின் நெறியாகக் காட்டப்பட்டுள்ளன.

துறவி - வீடு பேறு வேண்டி துறந்தவர் என நம்பி அவர் கொண்டுள்ள தோற்றங்கள் பலவாம். அவை எல்லாம் நெறியாகா. ஏனெனில் அத் தோற்றங்கள் உயிரின் தூய்மையை, தனி உரிமையைக் காட்ட வில்லை.

ஜிநர் நெறியினர் என்று நம்பி சிலர் பொய்ந்நெறியைப் போற்றுகின்றனர். சிலர் வெள்ளாடை, சிலர் சிவப்பு ஆடை, சிலர் காவி ஆடை முதலாக உடுத்திக் கொண்டு, உண்ண தக்கன உண்ண தகாதன என வரையறை இல்லாமல், வேண்டிய இடத்தில் உணவு கொண்டு, தம்மை துறவு நெறியினர் எனப் போற்றிக் கொள்கின்றனர். அவரெல்லாம் சூத்திர நெறியிலிருந்து நெகிழ்ந்து பிறவி தரும் பொய் நெறியில் புகுந்துள்ளனர் எனத் தெளிதல் வேண்டும்.

11 **ஜோ ஸஞ்ஜமேஸு ஸஹிஓ ஆரம்ப பரிக்கஹேஸு விரஓ வி |**
ஸோ ஹோஇ வந்தணீஓ ஸஸுராஸுர மாணுஸு லோஏ ||

(ப-ரை) ஜோ-எவர், ஸஞ்ஜமேஸு - சய்யமத்தில், ஸஹிஓ -கூடி இருக்கிறார், ஆரம்ப - தொழில், பரிக்கஹேஸு - பற்றுகளில் இருந்து, விர ஓ - விலகியுள்ளார், வி- பிரமசரியம் முதலான குணநலன்களோடு இருக்கிறார், ஸோ - அவர், வந்தணீஓ - வணக்கத்துக்கு உரியவர், ஹோஇ - ஆகிறார், ஸஸுராஸுர மாணுஸு - தேவர், அசுரர், மனிதர், உள்ள, லோஏ-உலகில், எ-று.

(க-ரை) மூவுலகிலும் அடக்கத்தில் அமைந்து, தொழில் பற்றுகளிலிருந்து விலகி, பிரமசரியம் முதலான குணங்களில் திகழ்பவரே வணக்கத்துக்கு உரியவர்.

(வி-ரை) ஆசாரியர் இன்னார் வணக்கத்துக்கு உரியார் என்று இங்கே இனம் காட்டுகிறார்.

அவர் 'ஸய்யமி.' புலன் இன்பங்களிலிருந்தும் உயிர்களுக்கு இன்னா செய்வதிலிருந்தும் விலகி தன் உயிரில் அடங்கி நிற்பவர் 'ஸய்யமி' - (அடங்கியவர்)

எனப்படுவார். ஆரம்பம் உயிர்களை வருத்தும் நிகழ்வு. எனவே தொழிலாயிற்று. இன்னாமை செய்யாத தொழில் அல்லது செயல் என ஏதும் இல்லை. எனவே அதிலிருந்து விலகியவர் ‘ஸய்யமி’. பரிக்கஹம் – பற்றுடைமை. அது அகம் புறம் என இருவகைப்படும். பொய் நம்பிக்கை முதலான பதினான்கும் அகப்பற்று. வீடு, வயல் முதலான பத்தும் புறப் பற்று. இந்த இருபத்து நான்குப் பற்றுகளில் இருந்தும் விலகியவர் ’ஸய்யமி.’ அவரே மூவுலகிலும் வணக்கத்துக்கு உரியவர். பிறர் அல்லர். சூத்திரத்தில் தெளிந்தவரே ‘ஸய்யமி’ என்பது கருத்து.

வி என்ற விதப்புக் கிளவியால் பிரமசரியம் முதலான குண நலன்கள் தழுவப்பட்டன. என்னை? ‘விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்’ என்பது சூத்திரம் ஆவதால்.

12 **ஜே பாவீஸபரீஸஹ ஸஹந்தி ஸத்தீஸஏஹிம் ஸஞ்ஜுூத்தா |**
தே ஹோந்தி வந்தணீயா கம்மக்கயணிஜ்ஜரா ஸாஹூ ||

(ப-ரை) ஜேஸாஹூ - எந்தத் துறவியர், ஸத்தீஸஏஹிம் - மிகவும் ஆற்றல்கள், ஸஞ்ஜுூத்தா பெற்றுள்ளார், அவர், பாவீஸ -இருபத்திரண்டு, பரீஸஹ - பரீஷகங்களை, ஸஹந்தி - பொறுக்கின்றார், கம்ம - கருமங்கள், கய - அழியும், ணிஜ்ஜரா - உதிர்ப்பைச் செய்கிறார், தே - அவர் வந்தணீயா. வணங்கத் தக்கவர், ஹோந்தி - ஆகிறார், எ-று.

(க-ரை) இருபத்திரண்டு பரீஷகங்களைப் பொறுக்கின்ற, கருமங்களை அழிக்கும் உதிர்ப்பைச் செய்கின்ற ஆற்றல் மிகுந்துள்ள (சாது) துறவியர் வணங்கத் தக்கவர்.

(வி-ரை) ஆசாரியர் துறவியர் ஆற்றலைச் சுட்டிக் காட்டியுள்ளார். இங்கு. பரீஷகங்கள் எனில் தவிர்க்க இயலா தொல்லைகள் இடையூறுகள். அவை இருபத்திரண்டு: 1 பசி (க்ஷுூதா) 2 நீர் வேட்கை (திருஷா), 3 குளிர் (சீதம்), 4 வெய்யில் (உஷ்ணம்), 5 கொசு எறும்பு கடி (தம்ச, மசக), 6 அம்மணம் (நக்ன), 7 விரும்பாவை (அரதி), 8 பெண்ணவா (ஸ்த்ரி), 9 பயணத் துன்பம் (சரியா), 10 இருக்கை தளராமை (நிஷத்யா), 11 படுக்கை (சய்யா), 12 தூற்றல் (ஆக்ரோச), 13 வருத்துதல் (வத), 14 இரத்தல் (யாசனா), 15 பெறாமை (அலாப), 16 பிணி (ரோக), 17 முள் குத்தல் (த்ருண ஸ்பர்சம்), 18 அழுக்கு (மலம்), 19 பாராட்டு இன்மை (சத்காரபுரஸ்காரம்), 20 அறிவுச் செருக்கு (பிரஜ்ஞா), 21 அறிவை மதியாமை, (அஞ்ஞானம்) 22 சிறப்புப் பெறாமை (அதர்சனம்). இவை எல்லாம் உடல், மனம் நிமித்தமாக அமைவன; இவற்றை அமைதியாகப் பொறுத்தல், அகத்தே துவர்ப்பு (கசாயம்) முதலான உணர்வுகளுக்கு ஆட்படாமல் இருத்தல் பரீஷக ஜயம் எனப்படும். சுருக்கமாகச் சொன்னால் தன் உயிரை தூய்மையிலிருந்து இழியாமல்

காத்தல் இவற்றை வெல்லுதலாம். இதற்குத் தளராத உறுதிப்பாடு வேண்டும். அவரே இவற்றைப் பொறுத்து கருமங்கள் மீண்டும் கட்டுறா வகையில் உதிர்த்து கழியச் செய்வார். அத்தகு அக ஒழுக்கமும் புற ஒழுக்கமும் கூடி சூத்திர வழியில் செல்லும் துறவியரே வணங்கத் தக்கவர் என்பதாம்.

13 **அவஸேஸா ஜே லிங்கீ தம்ஸண ணாணேண ஸம்ம ஸஞ்ஜுத்தா |**
சேலேண ய பரிகஹியா தே பணியா இச்சணிஜ்ஜா ய ||

(ப-ரை) ஜே - எவர், அவஸேஸா - திகம்பர உருவம் இல்லாத பிற, லிங்கீ- அடையாளம் அல்லது சின்னத்தோடு, ஸஞ்ஜுத்தா -கூடி, ஸம்ம - நல்ல, தம்ஸண - காட்சி, ணாணேன - அறிவோடு கூடியவர், ய - மற்றும், சேலேண - ஓராடை, பரிகஹியா - ஏற்றுள்ளவர், தே - அவர், இச்ச ணிஜ்ஜாய - விரும்புவன் எனச் சொல்லத் தக்கவர் (எ.று)

(க-ரை) நற்காட்சி அறிவோடு கூடி சாவக (சிராவக) தோற்றத்தோடு ஓராடை மட்டும் ஏற்றுள்ளவரை 'உம்மை விரும்புவன்' எனச் சொல்லத் தகுந்தவர்.

(வி-ரை) சூத்திரத்தில் துறவு நெறி மூன்று தோற்றங்களை உடையது. 1 உடுத்தாத முனிவர் நிலை 2 ஓராடை உடைய உயர்ந்த சாவக படிம நிலை, 3 ஆர்யிகை நிலை.

இக்காதையில் ஆசாரியர் உயர்ந்த சாவக நோன்பியின் தோற்றத்தையும் அவரை எதிர் கொள்ளும் முறையையும் கூறியுள்ளார். சாவக நிலை 11 படி நிலைகளை உடையது. அவை: 1 நற்காட்சியன் 2 நோன்பினன் (விரதி) 3 சாமாயிகன் 4 போசதன் (புரோஷத உபவாசன்) 5 பசுமை விட்டவன் (ஸச் சித்த விரதி) 6 இரவு உண்ணான் 7 பிரமசரியன் 8 தொழில் விட்டவன் (அநாரம்பன்), 9 பற்றுவிட்டவன் (அபரிக்கிரகன்) 10. உடன் படாதவன் (அனுமதன்) 11 மனை துறந்தவன் (உத்திட்ட பிண்டவிரதி)

உத்திட்ட பிண்ட விரதி என்றால் தனக்கு என்று செய்த உணவை ஏற்காதவர் என்பதாம். எனவே மனை துறந்து ஆசாரியர் குரு நாடி சங்கத்தில் இருப்பவர். அவரையே ஆசாரியர் இங்குச் சுட்டுகிறார். அப்படி நிலையில் உள்ளவர் ஓராடை மட்டும் உடையவர். அடுத்து முனி நிலையை எதிர் நோக்குபவர். அவரும் துறவு நெறியில் இருக்கிறார். அவரை எதிர் கொள்ளல் எப்படி? அவரைக் கண்டு 'நான் உம்மை விரும்புவன்' என்று சொல்லி எதிர்கொள்ள வேண்டும். இதனையே இச்சாமி என்பர். இச்சாமி சமஸ்கிருத சொல். பாகதமும் இதே வடிவம்தான். 'நான் விரும்புகிறேன் என்று பொருள். நான் உம்மை விரும்புகிறேன்' என்பது ஆன்மாவை விரும்புதல் ஆகும். அதாவது அந்தத் தோற்றத்தை விரும்புதல் என்பது கருத்தாம். முனிவருக்கு நமோஸ்து சொல்லுதல் போல இவருக்கு இச்சாமி சொல்லப்படுகிறது. நமோஸ்து பகவானுக்கும் முனிவருக்கும் மட்டுமே சொல்ல வேண்டும்.

14 **இச்சாயார மஹத்தம் ஸுத்தட்டிஓ ஜோ ஹு சண்டஏ கம்மம் |**
டாணே ட்டிய ஸம்மத்தம் பரலோய ஸுஹங்கரோ ஹோதி ||

(ப-ரை) ஜோ - எவர், ஸுத்த - சூத்திரத்தில், ட்டிஓ - உறுதியானவர், கம்மம் - தொழிலை, ஹு - நன்கு, சண்டஏ - கைவிட்டவர், ஸம்மத்தம் - நற்காட்சியுடன், டாணே - தன் பதினோராம் படிநிலையில், ட்டிய - உறுதியுள்ளவர், இச்சாயார - இச்சாமியின், மஹத்தம் - சிறப்பை உணர்ந்தவர், பரலோய - மறு பிறவியில், ஸுஹங்கரோ - இன்பம் உடையவர், ஹோதி - ஆகிறார் எ-று.

(க-ரை) பதினோராம் படிநிலையில் உறுதியாக நின்று, இச்சாமி என்று அழைப்பதின் பெருமையை உணர்ந்து, ஆரம்பத்தில் (தொழிலில்) இருந்து நன்கு விலகி, நற்காட்சியுடன் கூடி சூத்திரத்தில் உறுதியானவர் மறு பிறவியில் சிறந்த இன்பத்தை அடைகிறார்.

(வி-ரை) பதினோராம் படி நிலையில் உள்ளவர் ஒழுக்கம் எப்படி அமைகிறது என ஆசாரியர் இங்குக் காட்டியுள்ளார். பதினோராம் நிலையில் வீட்டிலிருந்து விலகி சங்கத்தில் இருக்க வேண்டும். அதனால் ஆரம்பம் விட்டவர் ஆனார். பகவான் அருளிய சூத்திரத்தில் (ஆகமத்தில்) உறுதி இருத்தல் வேண்டும். அதாவது நூல் வழி ஒழுக்கத்தில் உறுதியாக இருக்க வேண்டும். நூல் அறிவை முனைப்பாகக் கூர்மையாக்க வேண்டும். அதுவே ஒழுக்கத்தின் உறுதிப்பாட்டுக்குத் துணை நிற்கும்.

விரத நிலை நற்காட்சி தோன்றிய பிறகே அமைகிறது. அதனால் நற்காட்சியுடன் கூடியுள்ளவர் என்றார். தன்னை நோக்கி இச்சாமி என்று சொல்வதன் கருத்தை உணர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக அதன் பெருமை தெரிய வேண்டும் என்றார். உயர்ந்த சாவக நிலையில் உள்ளவரை எதிர் கொள்ளும் பணிவு இது. எவர் தன் ஆன்ம குணத்தில் சிறந்த நிலையை எட்ட இடைவிடாது முயற்சிக்கிறாரோ அவரது குணப் பெருமையை மஹத்தம் என்றார். அந்தப்பெருமை நோக்கியே அவர் விரும்பப்படுகிறார். அதனால் அந்தச் சிறப்பை உணர்ந்து இருக்க வேண்டும் என்றார்.

அத்தகு உயர்ந்த சாவகர் மறு பிறவியில் 16 ஆம் கல்பம் வரை சென்று பிறக்க முடியும். அங்கிருந்து வந்து முனி நிலை ஏற்று வீடு பேறும் அடைய முடியும். இந்தக் காதையில் சூத்திரத்தில் உறுதி வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால், சாவகர் சூத்திரம் படித்தல் வேண்டும் எனும் குறிப்பும் உள்ளது.

15 **அஹ புண அப்பா ணிச்சதி தம்மாஇம் கரேஇ ணிரவஸேஸாஇம் |**
தஹ வி ண பாவதி ஸித்திம் ஸம்ஸாரத்தோ புணோ பணிதா ||

(ப-ரை) அஹ புண - (மேல்காதையில் கூறியதை ஒட்டி) மீண்டும் சொல்லுவன், அப்பா - ஆன்மாவை, ணிச்சதி - விரும்பாமல், தம்மாஇம் -அறச்

செயல்களில், ணிரவஸேஸா இம் - குறைவின்றி கரே இ -செய்கின்றவர், தஹ வி- என்றாலும், ஸித்தம் - வீடு பேற்றை, ண பாவதி - அடைவது இல்லை, புணோ - மீண்டும், ஸம்ஸாரத்தோ - பிறவியில் இருப்பார் என்று, பணிதோ - கூறப்பட்டுள்ளது, எ-று.

(க-ரை) ஆன்மா இயல்பை அறியாது அதில் ஈடுபாடு இல்லாது புற நிலையில் அறச் செயல்களில் குறைவின்றி செய்தாலும் அதனால் மீண்டும் பிறவி கிடைக்குமே தவிர வீடுபேறு அமையாது.

(வி-ரை) இச்சாமி என்பதன் முதன்மையான பொருள் நான் விரும்புகிறேன். தன் ஆன்மாவை அறிதல், அதனை விரும்புதல், அதில் ஈடுபாடு கொள்ளுதல் என்பதே அதன் கருத்தாகும். அச் சொல்லின் பொருள் அது தான். அதனால்தான் முன் காதையில் அதன் பெருமையை உணர வேண்டும் என்றார். அப்படி ஆன்ம இயல்பில் சுவை காட்டாது ஈடுபாடு கொள்ளாது ஒருவர் புற நிலையில், தானம், பூஜை, தபம், சீலம் முதலான அறச் செயல்களைக் குறைவின்றி செய்தாலும் அதனால் அவருக்கு வீடு பேறு கிடையாது; மாறாக மீண்டும் பிறவியிலேயே மூழ்குவார்.

இங்கே ஆசாரியர் காட்டும் நுட்பத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். வீடு பேறு அடைதல் புறச் செயல்களால் அன்று. அது அக நிகழ்வால் அமைவதாகும். ஆன்மாவின் இயல்பை அறிந்து அதன் இயல்பை அடைய ஆன்மாவில் சுவை தோன்ற வேண்டும் ஈடுபாடு தோன்ற வேண்டும். ஏனெனில் ஆன்மா பற்றிய தெளிவு ஏற்பட்ட பிறகே அதில் ஒழுகும் ஒழுக்கம் தொடங்குகிறது. அதுவே அக ஒழுக்கம். அந்த அக ஒழுக்கத்தில் நிகழாது புறத்தே எத்தனைச் சிறப்பாக அற நிகழ்வுகளில் ஒழுகினாலும் அதனால் வீடு பேறு அமையாது; மாறாக பிறவிகளே தொடரும் என்றார்.

"வேடம் தரித்து விதிஅந் தரிக்க ஒழுகிமெய்ந்நூல்
பாடம் தரித்து உண்மை பாரா"

தவருக்கு அதாவது தன் ஆன்ம உண்மையைப் பாராதவருக்கு வீடு பேறு இல்லை என்பதாம். ஆன்மாவை நோக்காத அறச் செயல்கள் வெற்று நிகழ்வுகளாக இருக்குமே ஒழிய வீடு பேற்றைத் தராது.

16 **ஏஏண காரணேண ய தம் அப்பா ஸத்தஹேஹ திவிஹேண |**
ஜேண ய லஹேஹ மோக்கம் தம் ஜாணிஜ்ஜஹ பயத்தேண ||

(ப-ரை) ஏஏண காரணேன - பவ்விய; அந்தக் காரணத்தால், தி விஹேண - முக் கரணத்தால், தம் அப்பா - அந்த ஆன்மாவில், ஸத்தஹேஹ - நம்பிக்கை கொள்க, பயத்தேண - முயன்று, தம் - அந்த ஆன்மாவை, ஜாணிஜ்ஜஹ - அறிந்து கொள்க, ச- மற்றும், மோக்கம் - வீடு பேறு, ஜேண லஹேஹ - அதனால் அடைகிறாய், எ-று.

(க-ரை) பவ்விய! ஆன்மாவில் நம்பிக்கை கொள்க! அதனை அறிக! அதனாலேயே வீடு பேறு அடைகிறாய்.

(வி-ரை) ஆசாரிய தேவர் இங்கே வீடு பேறு அடையும் முறையைச் சுட்டுகிறார். முன் காதையில் ஆன்மாவை அறியாமல் புற அறச் செயல்களால் வீடு பேறு அடைய முடியாது என்றார். அறச் செயல்கள் மட்டும் வீடு பேறு தராது என்றால் பிறகு என்ன செய்ய வேண்டும்? அதற்கு விடைபோல இந்தக் காதையை அமைத்துள்ளார்.

வீடு பேறு அடைவது ஆன்மா. ஆன்மா மட்டுமே பேரின்ப பேரறிவு மய வீடு பேற்று நிலையை அடைகிறது. அதனால் அந்த ஆன்மாவில் நம்பிக்கை வேண்டும் ஆன்ம இயல்பு என்னவோ அந்த இயல்பில் நம்பிக்கை வேண்டும் அதனை சூத்திரம் வழியே பெற வேண்டும். அதனால் சூத்திரம் வழி ஆன்மாவைத் தெளிந்து அதில் இடைவிடாது நம்பிக்கை கொள்ள வேண்டும். எந்த ஆன்மாவில் நம்பிக்கை கொள்ளப்படுகிறதோ அந்த ஆன்மாவை முயன்று அறிதல் வேண்டும். அதாவது அந்த ஆன்மாவை அதன் இருப்பை உள்ளவாறு தான் உணர்தல் - அனுபவம் செய்தல் வேண்டும். அந்த நிலையை எட்ட மன மொழி மெய் மூன்றும் தூய்மையாக செயல்பட வேண்டும். அதனையே 'திவிஹேண' என்றார்.

எதனால் வீடு பேறு அடையப்படுமோ அதனையே அறிய வேண்டும் நம்ப வேண்டும் என்பது முதன்மையான அறவுரை. அறிதலும் நம்புதலும் ஆன்மாவில் தோன்றும் நிகழ்வு எனத் தெளிக. முக்கரணம் துணை அல்லது நிமித்தம் அவ்வளவே. ஆன்மாவை அறிந்து அறச் செயல்களில் ஈடுபட வேண்டும். ஆன்மாவை அறியாது செய்யும் அறச் செயல்கள் வெற்றுச் செயல்களே - ஆன்ம நோக்கில் என அறிதல் வேண்டும்.

17 **வாலக்க கோடி மேத்தம் பரிகஹ கஹணம் ண ஹோஇ ஸாஹூணம் |**
புஞ்ஜேஇ பாணிபத்தே திண்ணண்ணம் இக்கடோணம்மி ||

(ப-ரை) ஸாஹூணம் - துறவியருக்கு, வால - முடியின், அக்க கோடி - நுனி அளவு, மேத்தம் - கூட, பரிகஹ - பற்றினை, கஹணம் ண - ஏற்காமை, ஹோஇ - ஆகும். திண்ணண்ணம் - பிறரால் தரப்பட்ட, புஞ்ஜேஇ - உணவை ஏற்கிறார், பாணி பத்தே - தம் கையால், இக்கட்டோணம்மி - ஓர் இடத்தில் நின்று, எ-று.

(க-ரை) துறவியர் மயிர் நுனி அளவும் பற்று ஏற்பது இல்லை. சாவகர் தரும் உணவை தம் கையில் ஓரிடத்தில் நின்று ஏற்கிறார்.

(வி-ரை) ஆசாரிய தேவர் வந்தனைக்குரிய பற்றற்ற துறவியர் இயல்பை இங்கே தெளிய வைக்கிறார். சாது என்பவர் அகப் பற்று, புறப்பற்று என இரு வகைப் பற்றும்

இல்லாதவர். அவர் பற்றில்லா உணர்வு எத்தனை நுட்பமானது என்பதனைச் சுட்ட மயிர் நுனி அளவும் பற்று இல்லை என எடுத்துக் காட்டுத் தருகிறார்.

அப்படிப் பற்றில்லாதவர் என்றால் அவர் உணவு எப்படிப் பெறுகிறார்? என ஐயம் தோன்றினால் அதற்கு விடை போலக் கூறுகிறார் அடுத்த அடியை. சாது தானே உணவு செய்வதில்லை. பிறர் அதாவது சாவகர் தாம் உண்ண செய்த தூய உணவைப் பங்கிட்டு அவருக்குத் தருகின்றனர். அதனால்தான் ஸாது தனக்கு என்று செய்த உணவினை ஏற்காதவர் என்று சுட்டுவர். பதினோராம் படி நிலை சாவகருக்கே இதுதான் நிலை. அதனால்தான் அந்த நிலைக்கு உத்திட்ட பிண்ட விரதி என்று பெயர். சாவகர் தரும் உணவை ஏற்றல் அங்கேயே தொடங்கி விடுகிறது. அப்படி உணவு ஏற்கும் முனிவர் தம் கைகளையே கலமாக (பாத்திரமாக)க் கொண்டு உணவு ஏற்கிறார். அதனால் கலம் தொடர்பான பற்றும் யாசித்தல் நிலையும் இல்லாது போகின்றன. அந்த உணவு ஏற்பும் நாளில் ஒரு முறை, அதுவும் ஓர் இடத்தில்தான் நிகழ்கிறது. பல இடத்திலோ பல முறையோ நிகழவில்லை.

பகவானுடைய சூத்திரத்தில் திசையாடையர் பற்றற்ற நிலை இப்படித்தான் வருணிக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்று ஒழுகும் துறவியே வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியவர், பிறர் அல்லர்.

18 **ஜஹஜாயரூவஸரிஸோ திளதுஸமேத்தம் ண கிஹதி ஹத்தேஸு|**
ஜஇ லேஇ அப்பஹுயம் தத்தோ புண ஜாஇ ணிக்கோதம் ||

(ப-ரை) ஜஹ ஜாய ரூவ - பிறந்த உருவோடு, ஸரிஸோ - ஒத்தவர், ஹத்தேஸு - தம் கைகளில், திளதுஸ மேத்தம் - எள் மூக்கு அளவும், ண கிஹதி - (பற்று) ஏற்கார், ஜஇ அல்பபஹுயம் - ஏதேனும் கூடக் குறைய, லேஇ - ஏற்பாரானால், தத்தோ - அப்போது, புண - மீண்டும், ணிக்கோதம் - ஒரு பொறி நிகோத பிறவியில், ஜாஇ- செல்வார். எ-று.

(க-ரை) பிறந்த தோற்றத்தில் உள்ள முனிவர் எள் மூக்கு அளவும் பற்று ஏற்கார். ஏற்பாரானால் மீண்டும் நிகோத பிறவிக்குச் செல்வார்.

(வி-ரை) ஆசாரிய தேவர் திசையாடையர்தம் பற்றற்ற நிலையைத் தெளிவிக்கிறார்.

அகப் பற்றற்ற நிலையிலேயே புறத்தே பிறந்த தோற்றம் அமைகிறது. அதனால் அவரிடம் எள் மூக்கு அளவும் பற்று இருக்காது. அவரும் ஏற்கார். அப்படி இல்லாது பற்று வைப்பாரானால், அவர் பகவான் சூத்திரத்தில் நம்பிக்கை இழந்தவர் ஆகிறார். பிறகு எப்படி அவர் நற்காட்சியுடையவர் ஆவார்? பொய் நம்பிக்கையர் என்றே கூற வேண்டும். பொய் நம்பிக்கையின் பயன் நிகோதப் பிறவிதான். தான் ஏற்ற தோற்றம் காரணமாக, செய்த தவம் முதலான நிகழ்வுகளால் அவர் சொர்க்கம் போகலாம். ஆனால் மீண்டும் ஒரு பொறியுடைய பிறவிக்கே செல்வார், பிறவியில் உழல்வார்.

திளதுஸ - என்றால் எள் ஆடை எனப்பொருள். எள் மூக்கு என பொருள் காணப்பட்டுள்ளது, உலக வழக்கில் அச்சொல் ஆளப்படுதல் போல.

எள் மூக்கு அளவு பற்று என்றதில் கமண்டலம், நூல், பிஞ்சம் அடங்கா. பற்று என்பதன் கருத்து புலனின்ப வேட்கையால் பெறப்படும் உணர்வு எனக் கொள்ளல் வேண்டும். அங்கே பொய் நம்பிக்கையும் அவாவும் இருக்கும். அதனையே இங்கு ஆசாரியர் சுட்டுகிறார். புலன் அடக்கம் (ஸய்யம்) காரணமாக வைத்துள்ள பிஞ்சம் முதலானவை பற்றாகா ஒரு வகையில்.

பொய் நம்பிக்கையில் இந்த உயிர் நிகோதம் முதலான எல்லாப் பிறவிகளிலும் அநாதி காலமாக உழன்று வருகிறது. முனியாகி பற்றுக் கொள்வரானால் மீண்டும் ஓர் பொறி முதலான பிறவிகளில் உழல வேண்டும் என ஆசாரியர் எச்சரிப்பதாகக் கருதலாம். உண்மையும் அதுதான்.

19 **ஜஸ்ஸ பரிக்கஹகஹணம் அப்பம் பஹுயம் ச ஹவஇ லிங்கஸ்ஸ |**
ஸோ கரஹிஉ ஜிணவயணே பரிகஹரஹிஓ ணிராயாரோ ||

(ப-ரை) ஜஸ்ஸ - எந்த, லிங்கஸ்ஸ - தோற்றத்தில், அப்பம் - குறைவு, ச - மற்றும், பஹுயம் - கூடுதலாக, பரிக்கஹ - பற்று, கஹணம் - ஏற்றல், ஹவஇ - இருக்கிறது, ஸோ - அந்தத் தோற்றம், கரஹிஉ - போற்றத்தக்கது அன்று, ஜிண வயணே - ஜிநர் மொழியில் (சூத்திரத்தில்) பரிகஹ - பற்று, ரஹிஓ - இல்லாமை, ணிராயாரோ - குற்றமற்றது எனப்படுகிறது, எ.று.

(க-ரை) சிலர் கூடுதல் குறைவாகத் துறவு தோற்றத்துக்குப் பற்று ஏற்கின்றனர். அவர் நிந்தனைக் குரியவர். ஜிநர் மொழியில் - சூத்திரத்தில் பற்றற்ற தோற்றமே குற்ற மற்றது எனக் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) ஆசாரியர் முனிவர்தம் தோற்றம் பற்றி தெளிவு செய்கிறார். தம்மை முனிவர் எனச் சொல்லும் சிலர் சில பல பற்றுக்களோடு கூடி இருக்கின்றனர். அதற்கு ஏற்ப அவர்தம் சூத்திரங்களும் கற்பனையாக வடிக்கப்பட்டுள்ளன. ஆசாரியர்தம் காலத்தில் துறவு நெறியில் இது போன்ற பற்றுள்ள தோற்றங்கள் பல இருந்து இருக்க வேண்டும். இன்றும் இத்தகு தோற்றங்களைக் காண முடிகிறது. எனவே ஆசாரியர் புறத் தோற்றம் அக ஒழுக்கத்தோடு இசைந்து இருக்க வேண்டும் என ஜிந சூத்திரத்தைச் சுட்டுகிறார். புறத்தே பற்றுகள் இருக்குமானால் அகத்தே பற்று இல்லை என எப்படிக் கூற முடியும்? அக ஒழுக்கம் ஒன்றாகவும் புற ஒழுக்கம் வேறாகவும் இருக்க முடியும் என்பது கற்பனையே. அதனால் அது நிந்தனைக்கு உரியது. போற்றத்தக்கது அன்று.

ஜிந சூத்திரம் அகத்தும் புறத்தும் பற்று இல்லாமையே குற்ற மற்ற நெறி என்று சுட்டுகிறது. அதனை எடுத்துக் காட்டி அந் நெறியுடையாரே வந்தனைக்கு உரியர், பிறர் அல்லர் என சூத்திர நெறியைத் தெளிவு படுத்தியுள்ளார். ஜிநர் நெறியினர் என்று சொல்லிக் கொண்டு ஜிந சூத்திரம் கூறாத தோற்றம் உடையவரும் போற்றத் தக்கவர் அல்லர், வணக்கத்துக்கு உரியர் அல்லர் எனத் தெளிதல் வேண்டும்.

20 **பஞ்சமஹவ்வய ஜுத்தோ திஹிம் குத்திஹிம் ஜோ ஸ ஸஞ்ஜதோ ஹோஈ |**
ணிக்கந்த மோக்க மக்கோ ஸோ ஹோதி ஹு வந்தணிஜ்ஜோ ய ||

(ப-ரை) ஜோ - எந்த முனிவர், பஞ்ச-ஐந்து, மஹவ்வய - பெரு நோன்பு (மகா விரதம்), ஜூத்தோ - உடையவரோ, திஹிம் - மூன்று. குத்திஹிம் - அடக்கம் உடையவரோ, ஸ - அம் முனிவர், ஸஞ்ஜதோ - ஸய்யமி (புலனடக்கம்) உடையவர், ஹோஈ - ஆவர், ய - மற்றும், ணிக்கந்த - பற்றற்ற, மோக்க - வீடு பேற்று, மக்கோ - நெறியவர், ஸோ ஹு - அவரே, வந்த ணிஜ்ஜோ - வணக்கத்துக்கு உரியவர், ஹோதி - ஆகிறார், எ-று.

(க-ரை) ஐந்து பெரு நோன்பும் மூன்று புலனடக்கமும் உடையவரே 'ஸய்யமி' ஆவார். அவரே மோக்ஷ நெறி. அவரே வணக்கத்துக்கு உரியவர்.

(வி-ரை) கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், மற்றும் பற்றின்மை இவ்வைந்தும் பெரு நோன்பாக (மகா விரதமாக) உடையவர் முனிவர். மன அடக்கம், மொழி அடக்கம், மெய் அடக்கம் இம்மூன்று அடக்கமும் உடையவர் முனிவர். அம்முனிவரே ஸய்யமி (அக ஒழுக்கத்தில் அடங்கியவர்) ஆவார். அவர் நெறியே வீடு பேற்று நெறி.-அவரே வீட்டு நெறி. அவரே வணக்கத்துக்குத் தகுதியுடையவர்.

இப்படி அல்லாது, வீடு பேற்று நெறியில் ஏதேனும் கூடக் குறைய பற்றுடையவர் முனிவர் ஆகார். அவரைப் பெரு நோன்பு உடையவர் என்று அழைக்க முடியாது. அதனால் 'ஸய்யமியும்' அல்லர். வீட்டு நெறியில் செல்பவரும் அல்லர். அவர் வணக்கத்துக்குத் தக்கவரும் அல்லர்.

'ஆடையுடன் கூடியவர் முனிவர் ஆகார். ஏனெனில் ஆடையில் பேன் போன்ற மூன்று பொறி உயிர் தோன்றுகிறது. அதனை எடுத்து வேறு இடத்தில் விட்டால் இறந்து விடும். இனி ஆடையைத் துவைத்தலால் எல்லா உயிர்க்கும் இன்னாமை ஆகிறது. ஆதலால் உடை உடுத்தியவர் மகா விரதியாக இருத்தல் இயலாது' என ஆர்யிகையார் உரையில் கூறப்பட்டுள்ளது.

பற்றுடையவர் பகவானுடைய சூத்திரத்துக்கு எதிரானவர் எனத் தெளிதல் வேண்டும்.

21 **துஇயம் ச உத்த லிங்கம் உக்கிட்டம் அவரஸாவயாணம் ச |**
பிக்கம் பமேஇ பத்தே ஸமிதீபாஸேண மோணேண ||

(ப-ரை) துஇயம் - இரண்டாவது என, உத்த - சொல்லப்பட்ட, லிங்கம் - தோற்றம், அவர - வீடு விட்ட, உக்கிட்டம் - உயர்ந்த, ஸாவயாணம் - சாவகர் ஆம், அவர் பமேஇ - நடந்து சென்று, மோணேண - மௌனமாக, ச-அல்லது, ஸமிதீபாஸேண - அடங்கிய மொழியால், பத்தே - கலத்தில், பிக்கம் - பிச்சை (உணவு) ஏற்கிறார் எ-று.

(க-ரை) இரண்டாவது தோற்றம் வீடு விட்ட உயர்ந்த சாவகர் தோற்றம். அவர் நடந்து சென்று மௌனமாக அல்லது அடங்கிய மொழியால் கலத்தில் உணவு ஏற்கிறார்.

(வி-ரை) ஆசாரியர் இரண்டாவது தோற்றத்தை இங்கு விளக்குகிறார். முதல் தோற்றம் முனிவர் தோற்றம். அதன் வருணனை முன்னே சொல்லப்பட்டது. இங்கே சொல்லப்பட்ட சாவகர் 11-ஆம் நிலையினர். அவர் வீட்டிலிருந்து வெளியேறி சங்கத்தில் தங்குகிறார். அவர் ஓராடை உடையவர். பிச்சை ஏற்று உண்கிறார். அதாவது வீட்டுக்கு முன்னே மௌனமாக நின்றோ அல்லது அடங்கிய மொழியால் பேசியோ கலத்தில் உணவு ஏற்கிறார் எனக் கூறப்பட்டுள்ளது. இது ஆசாரியர் கால நிலை. தற்கால நிலை வேறாக உள்ளது.

தற்காலத்தே 11ஆம் நிலை இரண்டாக உள்ளது. ஒன்று சுல்லகர் நிலை; மற்றொன்று ஐலகர் நிலை. 11-ஆம் நிலை ஆசாரியர் காலத்தில் இரண்டு பகுதிபட்டு இருந்ததாகத் தெரியவில்லை. அதனால் அவர் உயர்ந்த சாவக நிலை என்று மட்டும் குறிப்பிட்டார். இக்காதைக்கு உரை வகுக்கின்றவர் தம் கால முறைக்கு ஏற்ப விளக்கம் தருகின்றனர். அது எந்த அளவுக்கு ஆசாரியர் காலத்துக்குப் பொருந்தும் எனத் தெளிதல் வேண்டும்.

22 **லிங்கம் இத்தீண ஹவதி புஞ்ஜஇ பிண்டம் ஸுஏயகாலம்மி |**
அஜ்ஜிய வி ஏக்கவத்தா வத்தாவரணேண புஞ்ஜேதி ||

(ப-ரை) இத்தீண - பெண்ணின், லிங்கம் - தோற்றம், ஹவதி - இப்படி இருக்கிறது, பிண்டம் - உணவை, ஸுஏய காலம்மி - நாளில் ஒரு முறையே, புஞ்ஜஇ - ஏற்கிறார், அஜ்ஜிய வி - ஆர்யிகையானாலும், ஏக்க வத்தா - ஓராடை உடையவர், வத்தாவரணேண - உடையுடன், புஞ்ஜேதி - உண்ணுகிறார், (எ.று)

(க-ரை) ஆர்யிகை நாளில் ஒரு முறை உணவு ஏற்கிறார்; ஓராடை உடுத்துகிறார்; உடை உடுத்திக் கொண்டு உணவு ஏற்கிறார். பெண் துறவியர் தோற்றம் இது.

(வி-ரை) மூன்றாவது தோற்றம் பெண் துறவியர் தோற்றம். ஆசாரியர் இரண்டு கருத்துகளை இங்கே கூறுகிறார். ஒன்று முனிவர் போல ஆர்யிகையரும் நாளில் ஒரு முறையே உணவு ஏற்கிறார். இரண்டாவது ஆர்யிகை உடை உடுத்திக் கொண்டு உணவு ஏற்கிறார். முனிவர் போல உடை இல்லாமல் உணவு கொள்ளவில்லை.

இங்கே எண்ணிப்பார்க்க வேண்டிய செய்தி: 11-ஆம் சாவக நிலை பெண்ணுக்கு உண்டா இல்லையா? பெண் துறவி எனும் போது ஆசாரியர் கருத்துப்படி ஆர்யிகை மட்டுமே உள்ளார். அஜ்ஜிய எனும் சொல் ஆர்யா அதாவது ஆர்யிகை எனும் பொருளுடையது என்கின்றனர். பொதுவாக வணக்கத்துக்கு உரியவள் எனும் பொருளுடையது அச் சொல். பிற்கால உரைகாரர் உரைஎழுதும் போது தற்போது உள்ள சுல்லகி நிலையையும் உள்ளடக்கியே பொருள் வரைந்துள்ளனர். 11-ஆம் நிலையில் சுல்லகர்-ஐலகர் என ஆணைப் பிரிக்கும் போது, சுல்லகி, ஐலகி என ஏன் பெண்ணைப் பிரிக்கவில்லை? ஆசாரியர் காலத்து இந்த சுல்லகி நிலை இல்லை என்றே கொள்ள வேண்டும். பிரதமானுயோக நூலைப் பரவலாகப் பார்த்தால் பெண்டிர் ஆர்யிகையரிடம் ஆர்யிகையாக துறவு ஏற்ற நிகழ்ச்சிகளே வருகின்றன. சுல்லகி துறவு ஏற்றார் என்பது பிற்கால வரவு எனத் தோன்றுகிறது. ஆய வேண்டிய கருத்துக்கள் இவை. எது எப்படி இருந்தாலும் ஆசாரியர் காலத்தில் ஆர்யிகை தோற்றம் மட்டுமே இருந்துள்ளது. அவர் நூலுக்கு உரை காணும் போது அக்கால சூழல்படி உரை காண்பதே பொருத்தமாகும்.

ஆர்யிகை ஓராடை உடையவர் எனக் குறிப்பிட்டுள்ளார். ஓராடை எனில் மாற்று ஆடை உண்டா இல்லையா? இதுவும் சிந்தனைக்குரியது. ஓராடை உடைய ஆர்யிகையர் அமர்ந்து உணவு ஏற்கின்றனர். முனி போல நின்று உணவு ஏற்பது இல்லை.

23 **ணவி ஸிஜ்ஜதி வத்த தரோ ஜிநஸாஸணே ஜஇ வி ஹோஇதித்தயரோ |**
ணக்கோ விமோக்கமக்கோ ஸேஸா உம்மக்கயா ஸவ்வே ||

(ப-ரை) வத்த தரோ - உடையை உடுத்தியவர், ஸிஜ்ஜதி - வீடு பேற்றை, ணவி - அடையார், ஜிணஸாஸணே - ஜிநர் ஆகமத்தில் அல்லது கட்டளையில், தித்தயரோ - தீர்த்தங்கரர், ஜஇவி - என்றாலும் அதனை அடைய முடியாது; ணக்கோ - உடுத்தாமை அல்லது அம்மணம், விமோக்க மக்கோ - வீடு பேற்று நெறியாம்; ஸேஸா -அப்படி அல்லாத பிற, ஸவ்வே - எல்லாம், உம்மக்கயா - பொய் நெறியாம், எ-று.

(க-ரை) ஜிநர் ஆகமத்தில் உடை உடையவர் தீர்த்தங்கரரே யானாலும் வீடு பேற்றை அடைய முடியாது என்று கூறப்பட்டுள்ளது. அம்மண (உடுத்தாத) தோற்றமே வீட்டு நெறியாம்; வேறு தோற்றம் எல்லாம் பொய்ந் நெறி - குமார்க்கம் ஆகும்.

(வி-ரை) பற்றற்ற நிலையே பரமான்ம நிலைக்கும் படியாம். பரமாணு அளவு பற்று இருந்தாலும் பரமான்ம நிலையைப் பற்ற முடியாது. அகத்தில் -உயிரில் - பற்றற்ற நிலை தோன்றும் போது புறத்தே உடலில் பற்றுகள் எப்படிக் காணப்படும்? காணப்படா.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை (345)

எனக் குறளில் குறிப்பிட்டது போல உடல் விட வேண்டிய ஒன்று என்ற போது அதில் உடுத்துதல் எங்கே வந்தது? பஞ்ச கலியாண சிறப்புடைய தீர்த்தங்கரரும் எல்லா அகப் பற்றுப் புறப்பற்றுகளைக் களைந்து விட்டு ஆடையின்றி நின்றே அப்பதவியை அடைந்தார். எனில் பிறரைப் பற்றி என்னச் சொல்வது?

ஜிநர் சூத்திரத்தில் பிறந்த தோற்றமே பேரின்ப நெறிக்கு அடையாளம் எனச் சுட்டப்பட்டுள்ளது. அதனை ஏற்காத பிற தோற்றங்கள் எல்லாம் மோக்ஷ நெறி அல்ல; மோகமடையச் செய்யும் நெறி எனத் தெளிதல் வேண்டும்.

24 **லிங்கம்மி ய இத்தீணம் தணந்தரே ணாஹிகக்க தேஸேஸு |**
பணிஓ ஸுஹுமோ காஓ தாஸிம் கஹ ஹோஇ பவ்வஜ்ஜா ||

(ப-ரை) இத்தீணம் - பெண்டிர்தம், லிங்கம்மி - யோனியில், ய - மற்றும், தணந்தரே - இரு மார்பகங்களின் இடையே, ணாஹி - தொப்புளில், கக்க தேஸேஸு - அக்குள் பகுதிகளில், ஸுஹுமோ கா ஓ - நுண்ணிய உடலுடைய உயிர்கள், உள்ளன என, பணிஓ - கூறப்பட்டுள்ளன. தாஸிம் - அவர்களுக்கு, பவ்வஜ்ஜா - தீக்ஷை, கஹ ஹோஇ? - எப்படி ஆகும்? எ-று.

(க-ரை) பெண்டிர்தம் உறுப்புகளில் கண்ணுக்குப் புலப்படா நுண்ணுயிர்கள் இடைவிடாது பிறந்து இறக்கின்றன எனச் சொல்லப்பட்டுள்ளது. பிறகு அவர் எப்படி தீக்ஷைக்குத் தகுதி ஆவர்?

(வி-ரை) பெரு நோன்பு (மகாவிரதம்) கொல்லாமை (அகிம்சை) அடிப்படையில் அமைவதாகும். ஒரு பொறி முதல் ஐம்பொறி மனமுடைய உயிர்கள் பலவாம். அவற்றுள் கண்ணுக்குப் புலப்படா நுண்ணுயிர்களும் உள்ளன. பெண்டிர் உடம்பில் அப்பிறப்புக்கு ஏற்ப இயல்பாகவே ஐந்து பொறியுடைய கண்ணால் காண முடியாத நுண்ணுயிர்கள் பல எப்போதும் தோன்றி இறக்கின்றன. இந்த நிலையில் அவர் கொல்லாமை நெறியைப் போற்றுவது எப்படி? அவர் எப்படிப் பெரு நோன்புத் துறவு ஏற்க முடியும்? என வினா எழுப்பி விடை கூறாது விட்டார். அதாவது பெரு நோன்புத் துறவு பெண்டிருக்கு இல்லை என்பதுதான் விடை.

அப்படி என்றால் ஆர்யிகை பெரு நோன்பியர் என ஏன் கூறப்படுகிறது? அவர் மகா விரதி அன்று, உண்மையில். உபசாரமாக மகா விரதி என்று சுட்டப்படுகிறார். அவர் தன் ஆற்றலின் எல்லையைத் தொட்டு துறவு மேற்கொள்கிறார். இந்த நோக்கில் உபசாரமாக மகா விரதி எனப்படுகிறார்.

உண்மையில் குணத்தான நோக்கில் பார்த்தால் அவர் ஐந்தாம் குணத்தான நிலை உடையவர். அதாவது, (அணுவிரத) சாவக (சிராவக) நிலை உடையவர். அவருக்கு உபசாரமாக மகா விரதம் தருதற்குப் பல காரணங்களைக் காட்டுகின்றனர். உண்மையில் மகாவிரதி 6-ஆம் குணம்தானம் முதல் தொடங்குதல் போல இவருக்குக் குணத்தானம் இல்லை. அதனால் உண்மையில் மகாவிரதி அல்லர்.

ஆசாரியர் ஞான சாகர் வித்தியாசாகர் சங்க மரபில் ஆர்யிகையருக்கு ஒன்பது பக்தி இல்லை என்பதனையும் இங்கே நினைவு கூர்க. ஒன்பது பக்தி உண்மையான மகாவிரதிக்கு உரியது. உபசார மகாவிரதிக்கு அன்று என்பது அவர்தம் கருத்து.

25 **ஜஇ தம்ஸணேண ஸுத்தா உத்தா மக்கேண ஸாவி ஸஞ்ஜுத்தா |**
கோரம் சரிய சரித்தம் இத்தீஸு ண பவ்வயா[1] பணியா ||

(ப-ரை) இத்தீஸு - பெண்களுள் ஒருத்தி, தம்ஸணேண - நற்காட்சியில், ஸுத்தா - தூயவள், மக்கேண - நெறியோடு, ஸாவி - அவளும், ஸஞ்ஜுத்தா - கூடி இருக்கிறாள், ஜஇ உத்தா - எனச் சொல்லப்பட்டாலும், கோரம் - கடுமையான, சரிய - சாரித்திரம், சரித்தம் - தப முதலான ஒழுக்கங்களினால், ண பவ்வயா - பாபம் இல்லாதவள், பணியா - எனப்படுகிறாள், எ-று.

(க-ரை) பெண் துறவி நற்காட்சியுடன் கூடி நெறியில் நின்று இருந்தாலும் கடுமையான ஒழுக்கம் தபங்களினால் பாபம் அற்றவளாக ஆகிறாள் என பேசப்படுவாள் என்கிறார்.

(வி-ரை) பெண் துறவி வீடு பேற்று நெறியில் நற்காட்சியுடன் கூடி கடுமையான தப ஒழுக்கங்களினால் பாபம் அற்றவளாக ஆனால் அவள் புகழுக்குரியவள், பாராட்டுக்கு உரியவள். அவள் 16ஆம் சொர்க்கம் வரை செல்ல முடியும். என்றாலும் வீடு பேறு அடைய முடியாது. ஆசாரியர் பெண் எத்தனை கடுமையான நோன்பு நோற்கிறாள் எனப் புகழப்பட்டாலும் பாபம் அற்றவளாக ஆகிறாள் எனக் பேசப்படுவாள் என்கிறார். அதாவது அவள் பாபங்களைக் குறைத்துத் தேவப் பிறவி பெறலாமே ஒழிய வீடுபேறு அடைய முடியாது என்பதாம்.

நற்காட்சியுடைய உயிர் பெண்ணாகப் பிறப்பது இல்லை. ஆனால் பெண்ணாகப் பிறந்து நற்காட்சி அடைய முடியும். ஐந்தாம் குணத்தான நற்காட்சி

1. பாடபேதம் - பாவய

நல்லறிவு நல்லொழுக்கத்தோடு கூடி இருக்க முடியும். பார்ப்போர் அஞ்சக் கூடிய தபங்களையும் செய்து பெண் பிறவியை ஒழித்து 16ஆம் சொர்க்க இந்திரனாகவும் ஆக முடியும். என்றாலும் பெண் பிறவியில் அவள் தீக்ஷைக்கு - அதாவது அம்மண நிலையுடைய மகாவிரதத்துக்குத் தகுதியுடையவள் அல்லள் பிறந்த தோற்றம் இல்லாத போது கிரைவேயகம் முதலான தேவ பிறவியே கிடையாது எனும் போது வீடு பேறு எப்படிப் பெற முடியும்? 'அருகனது உருவமல்லார் அகமிந்திரர் ஆகார்' என்பது ஆகமம். அதனால் பெண் பிறவியில் முத்தி இல்லை என்பதாம். பெண் முத்தி அடைகிறாள் என்பது கற்பனையே தவிர உண்மை ஆகாது.

26 **சித்தாஸோஹி ண தேஸிம் டில்லம் பாவம் தஹா ஸஹாவேண |**
விஜ்ஜதி மாஸா தேஸிம் இத்தீஸு ண ஸங்கயா ஜாணா ||

(ப-ரை) இத்தீஸு- பெண்களிடத்து, சித்தா ஸோஹி - சித்தத்தில் தூய்மை, ண - இல்லை, தஹா - மேலும், ஸஹாவேண - இயல்பாகவே, தேஸிம் - அவருடைய, பாவம் - பாவனை, டில்லம் - தடுமாற்றம் உடையது, தேஸிம் - அவர்களுக்கு, மாஸா- மாதத்தீட்டும், விஜ்ஜதி -உள்ளது, ஆகையால், ஸங்கயா - ஐயமுடைய அவளுக்கு, ண ஜாணா - தியானம் இல்லை, எ-று.

(க-ரை) பெண்ணுக்குச் சித்த தூய்மை (விசுத்தி) இல்லை. இயல்பாகவே தடுமாறும் மனமுடையவள். திங்கள் தோறும் தீட்டுடையவள். ஐயம் நீங்கியவள் அல்லள்; அதனால் தியானம் இல்லை.

(வி-ரை) சித்த விசுத்தியும், உறுதியான உணர்வும், ஐயமின்மையும் உடையவருக்கே தியானம் கைகூடும். இம் மூன்றும் பெண்ணுக்கு இல்லாத போது தியானம் எப்படி அமையும்? தியானம் இல்லாமல் முழுதுணர் அறிவு (கேவல ஞானம்) எப்படித் தோன்றும்? முழுதுணர் அறிவு பெறாது வீடு பேறு எப்படி விளையும்? இல்லை என்பதாம். தீட்டு என்பதன் கருத்து அப்போது பல நுண்ணியிர்கள் இறக்கின்றன என்பதாம்.

பரமான்ம தியானத்துக்கு எதிரான எல்லா குறை பாடுகளும் பெண் பிறவியில் உள்ளதால் அப்பிறவியில் வீடு பேறு இல்லை என்பது கருத்து. பெண் பிறவியில் ஏன் வீடு பேறு இல்லை என்பதனை சமணர் சூத்திரம் மிக ஆழமாகவும் அகலமாகவும் ஆய்ந்துள்ளது.

27 **காஹேண அப்பகாஹா ஸமுத்தஸலிலே ஸசேல அத்தேண |**
இச்சா ஜாஹு ணியத்தா தாஹ ணியத்தாஇம் ஸவ்வ துக்காஇம் ||

(ப-ரை) ஸமுத்த - கடலளவு, ஸலிலே - நீரில், ஸசேல அத்தேண - தன் துணி துவைக்க வேண்டிய நீர் எடுப்பது போல, முனிவர், காஹேண - பெறக் கூடியவை மிக

உள்ள இடத்தில், அப்ப - மிகக் குறைவாக, காஹா - ஏற்கிறார், இச்சா ஜாஹு - ஆசைகள், ணியத்தா -நீங்கிய, தாஹ - அவருக்கு, ஸவ்வ - எல்லா, துக்கா இம்- துன்பங்களும், ணியத்தா இம் - நீங்கி விடுகின்றன, எ-று.

(க-ரை) கடலளவு நீர் இருந்தாலும் தன் துணி துவைக்க வேண்டிய நீர் மட்டுமே ஒருவர் எடுப்பது போல முனிவர் பெறக் கூடிய பொருள் தன் முன்னே மிகுதியாக இருந்தாலும் குறைவாகவே தனக்கு வேண்டியதை ஏற்கிறார். வேட்கைகள் விலகியவருக்கு எல்லா வேதனைகளும் விலகிவிடுகின்றன.

(வி-ரை) ஆசாரியர் நூலை முடிக்கும் போது,

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

எனும் கருத்தோடு முடிக்கிறார்.

முனிவர் வேட்கை அற்றவர். அவருக்கு உலக இன்ப விருப்பு அணு அளவும் இல்லை. உடல் பற்றும் இல்லை. உணவு முதலானவற்றை மிகச் சொற்பமாகவே ஏற்கிறார். இதனால் ஆனந்தமாக இருக்கிறார்.

எங்கே மகிழ்ச்சி அங்கே சுகம் என்பர். இக் காதையில் கடல் எடுத்துக்காட்டாக காட்டப்பட்டுள்ளது. துணி துவைக்க விரும்புவோருக்கு கடல் அளவு நீர் இருந்தாலும் அவ்வளவும் வேண்டும் என விரும்புவது இல்லை. தனக்கு தேவையான அளவு பயன் கொள்கிறார். அதுபோல முனி நிலையில் உணவு முதலான சில தேவைகள் உள்ளன. தனக்கு முன்னே பொருள்கள் மிகுதியாக இருந்தாலும் வேட்கை விட்ட முனிவர் தன் தேவையை நிறைவு செய்ய சொற்பமாகவே பயன் கொள்கிறார். இது அவருடைய மன நிறைவைக் காட்டுகிறது. அக நிகழ்வைக் காட்டுகிறது. போதுமென்ற மன நிறைவு. தன் தவ நிகழ்வுக்கு உதவுவன மட்டுமே அவருடைய தேவைகள். பிற அல்ல. அதனால் தவத்துக்கு இடையூறு இல்லாத வகையில் தேவைகளைச் சொற்பமாக நிறைவு செய்து தவத்தில் மகிழ்கிறார். ஆனந்தம் கொள்கிறார். ஆசை அற்றவருக்கே துன்பங்கள் அகலுகின்றன. மேற்கூறிய குறள் அதனையே காட்டுகிறது.

இவை எல்லாம் ஜிந சூத்திரத்தின் பயனாகும். வேறு சூத்திரங்களில் உண்மையான நெறிக்கு உறுதி காட்டப்படவில்லை. ஆகையால் ஆன்மா மங்கல நிலை அடைய ஜிந சூத்திரத்துக்கு இடைவிடாது சேவை செய்க மங்கலம் பெறுக.

மங்கலம்

(குறிப்பு: இவ்வுரைக்குப் பயன்பட்ட நூல்கள்: 1. ஆர்யிகை சுபார்சுவ மதியார் உரை வகுத்த ஷட் பாகுடம் 2. பண்டிதர் ஐயசந்தரர் உரை வகுத்த அஷ்ட பாகுடம்)

சாரித்த பாஹுடம்

மங்கல நுழைவாயில்

நல் இன்பம் வேண்டும் என உயிர்கள் அவாவுகின்றன. எந்த உயிரும் துன்பத்தை வேண்டுவது இல்லை. ஆனால் இன்பம் பெறும் நெறி அறியாது உயிர்கள் அறியாமையில் நிகழ்கின்றன. அந்த அறியாமை உள்ள வரை அவ்வுயிருக்கு நல்நெறி அமையாது. நெறியும் குறியும் தெளியாத நிலையில் நல் இன்பம் நேராது. அதனால் குறியான இன்பம் எத்தகையது? அதனை நேரும் நெறி யாது? எனத் தெளிய வேண்டும்.

ஆசாரிய குந்த குந்த தேவர் நல் இன்பம் நல்லொழுக்கம் வழியாகவே அடையப்படுகிறது என்று சாரித்த பாகுடத்தில் தெளிவு செய்கிறார். எட்டுப் பாகுடங்கள் (அஷ்ட பாகுடம்) என்று சொல்லப்படும் தொகையில் "சாரித்த பாகுடம்' மூன்றாவதாக உள்ளது. ஆனால் ஆறு பாகுடங்களுக்கு சமற்கிருத உரை வரைந்துள்ள ஆசாரிய சுருத சாகர் இரண்டாவது பாகுடமாக இதனை வைத்துள்ளார். இரண்டாவது பாகுடமான "ஸுத்த" பாகுடத்தை மூன்றாவதாக வைத்துள்ளார். தற்போது இந்தி உரையுடன் கிடைக்கும் எட்டுப் பாகுடங்களில் "சாரித்த பாகுடம்' மூன்றாவதாகவே பெரு வழக்காக உள்ளது. இந் நூலுள் 45 காதைகள் உள்ளன.

நூலைத் தொடங்கும் மங்கல வாழ்த்தில் முத்தியை அடையச் செய்யும் பாகுடம் எனச் சுட்டியுள்ளார். முத்தி என்றால் முழு இன்ப நிலை. முழு இன்ப நிலையை அடையும் வழியை இந்நூல் நுவல்கிறது எனத் தெளியலாம்.

நற்காட்சியும் நல்லறிவும் கூடிய நிலையே நல்லொழுக்கம், அது பேரின்ப நிலைக்கு உயர்த்தும் ஒழுக்கம் எனக் காட்டுகிறார். அந்த நல்லொழுக்கத்தை மெய்க்காட்சி ஒழுக்கம் ("ஸம்யக்த்வாசரண சாரித்ரம்"). உயிர் நோக்கும் ஒழுக்கம் ("சையமாசரண சாரித்ரம்") என இரண்டாகக் காட்டுகிறார். மெய்க்காட்சி ஒழுக்கம் நற்காட்சியின் தூய்மையைச் சுட்டுகிறது. அந் நற்காட்சியோடு கூடி "சையமத்தை" உயிரை நோக்கிய ஒழுக்கத்தை - ஏற்றல் "சையமாசரண சாரித்திரம்" எனப்படுகிறது. இந்த ஒழுக்கமும் இல்லில் இருந்து நோற்கப்படுவது இல்துறந்து நோற்கப்படுவது, எனக் கூறுபடுத்திக் காட்டுகிறார்.

நூலின் செம்பாதி நற்காட்சியின் தூய்மை பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் பேசுகிறது. அதனால் முத்தி நெறியில் நல் நம்பிக்கைக்கு உரிய முதன்மை நன்கு விளங்குகிறது. ஒழுக்கம் என்று வரும் போது அது நற்காட்சி அடிப்படையிலேயே அமைய முடியும் என்று தெளிவு செய்கிறார்.

அறிவு + காட்சி
நல் ஒழுக்கம் காதை : 3

மெய்க்காட்சி ஒழுக்கம் (காதை : 4 – 20) உயிர்நோக்கும் ஒழுக்கம்

பற்றுடைய ஒழுக்கம்
(சாவக ஒழுக்கம்)
(காதை : 21 – 27)

பற்றற்ற ஒழுக்கம்
(சாது ஒழுக்கம்)
(காதை : 28 – 44)

நற் காட்சியில் இருந்து இழிந்தவர் "சையம" ஒழுக்கத்தில் புறத்தே நிகழ்ந்தாலும் அவர் அறிவில்லாதவர், மூடர் என இடித்துரைத்து அவருக்கு வீடு பேறு இல்லை எனத் தெளிவு செய்கிறார். (காதை - 10). நற்காட்சி பற்றிக் குறிப்பிடும் போது அருக நம்பிக்கையில் ஒழுகுதல் என்று குறிப்பிடுகிறார் (காதை 8). இத்தொடர் ஆழ்ந்த பொருளுடையது. குடும்ப வழக்கமாக வரும் அருக நம்பிக்கை அன்று. ஏனெனில் அருக நம்பிக்கை நல்லறிவுடன் கூடியது என்று சுட்டுகிறார். அது வீடு பேற்றுக்கு ஏது என விளக்குகிறார். எனவே நல்லறிவும் நல் நம்பிக்கையும் சேர்ந்தது அருக நம்பிக்கை ஆகிறது. இந்த நம்பிக்கை குறித்துத் தெளிவு இல்லாமல் போனால் நல்லொழுக்கம் அமைய முடியாது. அதனால் ஆசாரியர் நற்காட்சி ஒழுக்கத்தைத் தெளிவு செய்து இருக்கிறார் எனலாம்.

சாவக ஒழுக்கம் இல்லின்கண் இருந்து போற்றுதல் என்றும் சாது ஒழுக்கம் இல் துறந்து சென்று ஒழுகுவது என்றும் குறிப்பிடுகிறார். முன்னது பற்றுடன் கூடியது; பின்னது பற்றற்றது என்கிறார். இதனால் நல்லொழுக்கத்தில் வேறுபாடு வருதல் "கசாயம்" காரணமாக ஆகும் எனத் தெளிவாகிறது. ஒழுக்கத்தில் கசாயம் கலந்து இருப்பதால் அது குறை ஒழுக்கமாகிறது. அதாவது சாவக ஒழுக்கமாகிறது. "கசாயம்" கலக்காத ஒழுக்கம் குறையற்ற நிறை ஒழுக்க மாகிறது, அது சாது ஒழுக்கமாகிறது. இந்தப் பகுப்பு பகவானால் பகரப்பட்டதாகும். இந்த அடிப்படையில் இரண்டு கூறுபடும் நல்லொழுக்கத்தை விளக்குகிறார்.

நல்லொழுக்கத்தின் இரண்டு கூறுகளையும் மிக விரிவாக உரைக்கவில்லை என்றாலும் அவற்றின் அடிப்படையை மிகத் தெளிவாகக் காட்டுகிறார். நல்லின்பம் இந்த நல்லொழுக்கத்தை அறிந்து ஏற்று ஒழுகுவதாலேயே பெற முடியும். அந்த இன்பம் புறப்பொருளால் வருவது அன்று. புறப்பொருளை ஆன்மாவில் சேர்க்காமையால் வருவது (காதை - 43).

இந்த நல்லுணர்வுடன், "மங்கல நற்காட்சி நுழைவாயிலில் நுழைந்து நல் இன்ப நிலையைத் தொட்டுத் திளைக்க" என ஆசாரியர் அழைக்கிறார். இனி நூலில் நுழைக! பேரின்பம் நுகர்க!

- ஓம் சாந்தி -

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

சாரித்த பாகுடம்

எனும்

நல்லொழுக்க நூல்

(சாரித்ர பாகுடம்)

(பாகத மூலமும், தமிழ் உரையும்)

1. ஸவ்வண்ஹு ஸவ்வதம்ஸி ணிம்மோஹா வீயராய பரமேட்டீ|
வந்தித்து திஜகவந்தா அரஹந்தா பவ்வஜீவேஹிம்||

(பதவுரை) : ஸவ்வண்ஹு - முழுதுணர் அறிவர், ஸவ்வதம்ஸி - எல்லாப் பொருள்களையும் பார்ப்பவர், ணிம்மோஹா - மயக்கமில்லாதவர், வீயராய - ஆர்வம் அற்றவர், திஜக வந்தா - மூவுலகோராலும் வணங்கப்படுகிறவர், பவ்வ ஜீவேஹிம் - பவ்வியர்களால் வணங்கப்படுகிறவரான, அரஹந்தா - அருக, பரமேட்டீ - பரமேட்டியை, வந்தித்து - வணங்கி, என்றவாறு.

2. ணாணம் தம்ஸண ஸம்மம் சாரித்தம் ஸோஹிகாரணம் தேஸிம்|
மோக்காராஹண ஷேஉம் சாரித்தம் பாகுடம் வோச்சே|| (குளகம்)

(ப-ரை) : ஸம்மம் - நல்ல, ணாணம் - அறிவு, தம்ஸண - காட்சி, சாரித்தம் - ஒழுக்கம், தேஸிம் - அவற்றின், ஸோஹி காரணம் - தூய்மைக்குக் காரணமான, மோக்காராஹண - முத்தி பாகுடத்தை (நூலை), வோச்சே - உரைப்பன், எ-று.

(கருத்துரை) : முழுதுணர் அறிவர் ("ஸர்வஜ்ஞ") மூவுலகப் பொருள்களைப் பார்ப்பவர், மோகம் இல்லாதவர், ஆர்வம் அற்றவர், மூவுலகராலும் வணங்கப்படுகிறவர் ஆன அருக பரமேட்டியை வணங்கி மும்மணியைத் தூய்மை ஆக்கும் முக்தியை அடையச் செய்யும் "சாரித்த பாகுடம்" உரைப்பன்.

(விளக்க உரை) : ஆசாரிய தேவர் மங்கல வாழ்த்தோடு நூலைத் தொடங்கியுள்ளார். மங்கல வாழ்த்தோடு நூலைத் தொடங்குதல் ஆகம மரபு.

அருக பரமேட்டியை வணங்கியுள்ளார், "அரஹந்த" எனும் பாகத சொல் ஆழ்ந்த பொருளுடையது. "அ" எனில் பகை (அரி). இங்கே ஆன்மாவுக்குப் பகையான மயக்க வினையைக் குறித்தது. "ர" எனில் தூசு (ரஜ). தூசி படிந்துபொருளை நன்கு விளங்க ஒட்டாமல் செய்வது போல ஆன்மாவின் அறிவு, காட்சி குணங்களை மறைக்கும் வினைகளைக் (ஞானாவரணம்,தர்ஸனாவரணம்) குறித்தது. "ர" எனில் மறைவாக

(ரஹஸ்ய) அதாவது இடையில் தடையாக நிற்கும் இடைத் தடை (அந்தராய) வினையைக் குறித்தது. "ஹந்தா" எனில் அழிதல். மயக்க வினை முதலான நான்கு காதி வினைகளையும் அழித்தவர் "அரஹந்தர்" என்பதாம்.

இனி "அர்ஹ" எனும் சமற்கிருத மொழியாகக் கொண்டால், போற்றுதலுக்கு உரியவர் எனப் பொருள்படும். "அருகன் நீ நல்ல பூசைக்கு அருகனாய்" என வருதல் காண்க. "நீ நல்ல பூசைக்குத் தக்கவர் அதனால் அருகர்" என்பது கருத்து[1]. அத்தகுதி வினைகளை வென்று முழுதுணர் (கேவலி) நிலையை அடைந்தமையால் அமைந்தது என்க.

"பரமேட்டி" எனில் மூவுலகோராலும் வணங்கத் தக்க மீமிசை (உயர்ந்த) நிலையில் இருப்பவர் என்று பொருள். ஆசாரியர் அருகர் சிறப்புகளாக நான்கு அடைமொழிகளைத் தந்துள்ளார்.

1, "ஸவ்வண்ஹூ" எனில் மூவுலக முக்காலப் பொருள்களை ஒரு கணத்தில் அறிபவர் என்பதாம். அறிவு மறைப்பு வினை (ஞானாவரணம்) முற்றுமாக நீங்கிய நிலையில் பரமான்மாவில் தோன்றும் முழு அறிவு உடையவர். "அறிவன் நீ அறியாப் பொருள் இன்மையால்" என்பர்.[2]

2, "ஸவ்வ தம்ஸி" எனில் மூவுலகப் பொருள்களை ஒரு சேர பார்ப்பவர் என்பதாம், "பார்த்தல்" என்பதன் கருத்து பொருள்கள் தன்னில் - ஆன்மாவில் தோன்றுதலை உணர்தல் என்பதாம். "பார்த்தல்" நிலை, காட்சி மறைப்பு வினை (தர்சனாவரணம்) அழிவதால் அமைவதாகும். கண்ணாடியின் தூய்மையில் பொருள் காணப்படுதல் போன்றது இது. பார்த்தலும் அறிதலும் அருகருக்குக் கால இடைவெளி இன்றி ஒன்றாகவே காணப்படும்.

3. "ணிம்மோஹா" எனில் மயக்க வினை நிமித்தமாகக் காணப்படும் மயக்கம் இல்லாதவர். மயக்க வினை காட்சி மயக்கம் (தரிசன மோகம்) ஒழுக்க மயக்கம் (சாரித்ர மோகம்) என இரண்டு வகைப்படும். தரிசன மயக்கம் இன்மையால் நற்காட்சி உடைமை ஆயிற்று. அவ்வழியால் ஒழுக்க மயக்கம் நீங்கி தன்னில் தோயும் நல்லொழுக்கம் உடைமை ஆயிற்று; நற்காட்சியும் நல்லொழுக்கமும் உடையவர் என்பதாம்.

4. "வீயராய" ஆர்வம் இல்லாதவர். நான்கு துவர்ப்புகளும் (கசாயங்களும்) விருப்பு வெறுப்பு என இரண்டில் அடங்கும். விருப்பைச் சிறப்பாக நீங்கியவர் என்றார். விருப்பு நீங்கவே வெறுப்பும் தானே இல்லாது போயிற்று; வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதாம். மயக்க வினையின் உதயத்தைக் கெடுத்து தன்னைப் பிரித்துத் தன் ஆன்மாவின் தூய்மையை (நிர்விகாரம்) வெளிப்படுத்தியதால் "வீதராகி" எனச் சிறப்பிக்கப்படுகிறார் என்பர்.

1. மேருமந்தர புராணம், 1301. *2. மேருமந்தர புராணம், 1303*

இத்தகு சிறப்பு நிலையை எய்திய அருகரை மூவுலகோரும் வணங்குகின்றனர். மூவுலக அரசர்களுடன் (தேவேந்திரன், தரணேந்திரன், நரேந்திரன்) அனைவரும் வணங்குகின்றனர் என்பதாம். பவ்வியர்களும் வணங்குகின்றனர் எனப் பிரித்துச் சொன்னதால் முத்திக்குறிக்கோளை முதன்மைப் படுத்தினார் எனலாம். பிறவித் துன்பத்தைக் கடக்க விரும்புவோர் சிறப்பாகத் தொழுவர் என்பதாம்.

நூலாக்கத்துக்கு ஆசாரியர் காரணம் காட்டியுள்ளார். நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் இவை ஆன்மாவின் நிகழ்வுகள். அம் மூன்றின் தூய்மை நல்லொழுக்கத்தாலே அமைகிறது. ஏனெனில் நற்காட்சியும் நல்லறிவும் நல்லொழுக்கத்தை ஏற்பதாலேயே தூய்மையும் முழுமையும் அடைகின்றன. அந்த நல்லொழுக்கமே முத்திக்கு ஏதுவாகும். அதனால் அது போற்றப்பட வேண்டிய இன்றியமையா ஒழுக்கமாகும். அப்படிப்பட்ட நல்லொழுக்கத்தை நவில ஆசாரியர் உறுதி கொள்கிறார்.

3. ஜம் ஜாணஇ தம் ணாணம் ஜம்பேச்சஇ தம்ச தம்ஸணம் பணியம்|
ணாணஸ்ஸ பிச்சியஸ்ஸ ய ஸமவண்ணா ஹோ இ சாரித்தம்||

(ப-ரை) : ஜம் - எது, ஜாணாஇ - அறிகிறது, தம் - அது, ணாணம் - அறிவு, ஜம் - எது, பேச்சஇ - பார்க்கிறது, தம் - அது, தம்ஸணம் - காட்சி, ச பணியம் - என்று சொல்லப்பட்டுள்ளன, ணாணஸ்ஸ - அறிவின், ய - மற்றும், பிச்சியஸ்ஸ - காட்சியின், ஸமவண்ணா - கூட்டம், சாரித்தம் - ஒழுக்கம், ஹோஇ - ஆகும். எ-று.

(க-ரை) : அறிவும் காட்சியும் ஒன்றாய் ஒழுகுதல் ஒழுக்கம் ஆகும்.

(வி-ரை) : ஆசாரியர் ஒழுக்கத்துக்கு இலக்கணம் காட்டுகிறார். அறிவு உயிரின் பண்பாகும். அதே போல காட்சியும் உயிரின் பண்பாகும். "தரிசனம்" என்ற சொல் காட்சி எனும் பொருளும். பார்த்தல் எனும் பொருளும் உடையது. காட்சி மயக்க வினையின் தொடர்புடையது. அங்கே நம்பிக்கை என்று பொருள். "பார்த்தல்" என்பது "தர்சனாவரண" வினையோடு தொடர்புடையது. அங்கே அறிவின் உணர்வு என்று பொருள்.

இங்கு நல்லொழுக்கம் பேசப்படுகிறது. அது வீடு பேற்றுக்கு ஏது ஆகும். நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் கூடியது முத்தி நெறி என்பர். அதனால் ஆசாரியர் நற்காட்சியும் நல்லறிவும் ஒருமைப்பட்டு நிற்றலே நல்லொழுக்கம் என்றார்.

உயிர் தொடக்க மற்ற காலமாக வினையோடு தொடர்பு கொண்டு வருவதால் தன் உண்மை இயல்பை அறியவில்லை. வினைத் தொடர்பால் தன் இயல்பில் திரிந்து நின்று நாற்கதியிலும் உழன்று வருகிறது. அந்த உயிர் அத்திரிபு நிலையில் இருந்து விலக முதலில் நற்காட்சியைப் பெறுகிறது, அதனால் அறிவும் நல் அறிவாக ஆகிறது. இந்த இரண்டும் - காட்சியும் அறிவும் - உயிரின் பண்பாகும். இந்த இரண்டும் ஒருமை

நிலை கொள்ளுதலே ஒழுக்கம் ஆகும், அதாவது இம் மூன்றும் உயிரில் ஒருமுக நிகழ்வை நிகழ்த்துகின்றன. அப்போது முத்தி - வீடுபேறு அமைகிறது.

புறநோக்கு இல்லாமல் தன்னில் ஈடுபாடு கொள்ளுதல் உண்மையான நற்காட்சி - நல்நம்பிக்கை - ஆகும். தன்னைப் பிற பொருளிலிருந்து பிரித்துத் தன் இயல்பை அறிதல் நல்லறிவு ஆகும். தன் பண்புகளில் பகுதிப் படாது தன் முழுமையில் - தன் ஒருமையில் - மூழ்குதல் நல்லொழுக்கம் ஆகும். அதனால் ஆசாரியர் காட்சியும் அறிவும் கூடி ஒழுக்கம் ஆகிறது என்றார்.

4. ஏஏ திண்ணி வி பாவா ஹவந்தி ஜீவஸ்ஸ அக்கயாமேயா|
திண்ஹம் பி ஸோ ஹணத்தே ஜிண பணியம் துவிஹ சாரித்தம்||

(ப-ரை) : ஏஏ - இந்த. திண்ணி வி - மூவகைப்படும், பாவா - இயல்புகள், ஜீவஸ்ஸ - உயிரினுடையன, அவை, அக்கய - அழிவில்லாதனவாக, அமேயா - வரம்பில்லாதனவாக, ஹவந்தி - அமைகின்றன, திண்ஹம்பி - இம்மூன்றையும், ஸோஹணத்தே - ஆய்வு செய்ய (தூய்மை செய்ய), ஜிண -ஜிநரால். துவிஹ - இரண்டு கூறுபடும், சாரித்தம் - ஒழுக்கம், பணியம் - பகரப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : காட்சி, அறிவு, ஒழுக்கம் எனும் இம்மூன்றும் உயிரின் இயல்புகளாம். அவை அழிவில்லாதன; வரம்பில்லாதன. இம்மூன்றையும் தூய்மை செய்ய முழுதுணர் அறிவர் இரு கூறுபடும் ஒழுக்கம் கூறினார்.

(வி-ரை) : ஆசாரியர் "பாவா" என்ற சொல்லால் மூன்றையும் குறிக்கிறார். காட்சி, அறிவு, ஒழுக்கம் மூன்றும் உயிரின் தருமம் - இயல்பு - எனும் பொருள்படும்படி அச்சொல்லை ஆண்டுள்ளார் எனத் தோன்றுகிறது. ஏனெனில் அச்சொல் பல பொருளுடையது என்றாலும், அது, இங்கே, இயல்பு எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது, அதனால் தான் இவை அழியாதன, வரம்பில்லாதன எனக் குறித்தார். இயல்புக்கு அழிவும் வரம்பும் இல்லை அல்லவா?

இம்மூவுலகை அறியக் கூடியது அறிவு. அது போன்றது தான் காட்சியும் ஒழுக்கமும். அதாவது வரம்பற்றன என்றாலும் வினைத்தொடர்பால் இவை திரிபு அடைய முடியும்; அழிய முடியாது, குறைவுபடாது. அத்திரிபு எப்படி உள்ளது? மூவுலகப் பொருள்களை ஒரு கணத்தில் அறியும் வரம்பற்ற ஆற்றல் உடையது அறிவு. அந்த அறிவு அவ்வாற்றலில் முழுமையாக நிகழாமல் துண்டு துண்டாக நிகழ்கிறது; திரிபுற்று நிகழ்கிறது. அதே போல காட்சியும் ஒழுக்கமும் நிகழ்கின்றன. அகண்டமானது (முழுமையானது) துண்டு துண்டாகப் பிரிவு பட்டு நிகழ்கிறதே அதுதான் திரிபு. அதனை "அசுத்தம்" என்பர். ஆகவே ஆசாரியர் அந்த "அசுத்த" நிலையை - திரிபு நிலையை - ஒழுக்கத்தால் ஆய்வு செய்ய வேண்டும் / தூய்மை செய்ய வேண்டும் என்று சுட்டுகிறார். அந்த ஒழுக்கம் இரண்டு கூறாக உள்ளது என்றார்.

5. ஜிண ணாணதிட்டி ஸுத்தம் படமம் ஸம்மத்த சரண சாரித்தம்|
விதியம் ஸஞ்ஜம சரணம் ஜிணணாண ஸதேஸியம் தம் பி||

(ப-ரை) : ஜிண - அருகர் அருளிய, ணாண - அறிவு, திட்டி - காட்சியில், ஸித்தம் - தூய்மையுடைமை, படமம் - முதல், ஸம்மத்த - மெய்ம்மையில், சரண - ஒழுகும், சாரித்தம் - நல்லொழுக்கம் ஆகும், விதியம் - இரண்டாவது, ஸஞ்ஜம் - உயிரில் (சையம்), சரணம் - ஒழுகும் ஒழுக்கம், தம்பி - அதுவும், ஜிண - அருகர், ணாண - அறிவால், ஸதேஸியம் - அறிவிக்கப்பட்டதாகும். எ-று.

(க-ரை) : அறிவு, காட்சி மெய்ம்மையில் ஒழுகும் ஒழுக்கம் முதலாவது; சையமத்தில் ஒழுகும் ஒழுக்கம் இரண்டாவது என ஜிந பகவானால் அருளப்பட்டுள்ளன.

(வி-ரை) : முன் காதையில் நல்லொழுக்கம் இரு கூறுபடும் என்றார். இங்கே அந்த இரு கூறுகளின் பெயரைச் சுட்டியுள்ளார். ஒன்று "ஸம்மத்த சரண சாரித்தம்" - "ஸம்யக்த்வ சரண சாரித்திரம்" ஆகும். அதனை விளக்கும் போது, அறிவிலும் காட்சியிலும் தூய்மையுடைமை என்றார். அந்த அறிவு காட்சியின் இயல்பு குறித்து அருகர் அருளியுள்ளார். அந்த இயல்பில் அறிவையும் காட்சியையும் வைத்திருத்தல் ஒழுக்கம் என்றார்.

அறிவும் காட்சியும் ஆன்மாவின் பண்புகள். அப்பண்புகளை அதனதன் தூய்மையில் நிறுத்துதலே ஒழுக்கம் என்கிறார். முத்தி நெறியில் முதல் ஒழுக்கம் அறிவு, காட்சியின் தூய்மையில் தொடங்குகிறது என்கிறார். இதனால் அக ஒழுக்கம் முத்திக்கு ஏது என அதன் முதன்மையைக் காட்டியுள்ளார்.

இரண்டாவது ஒழுக்கம் "ஸஞ்ஜம சரணம்" - "ஸய்யம சரணம்" என்றார். "ஸய்யம" எனில் விலக்குதல், நீங்குதல் என்று பொருள். புலன் விருப்பங்களிலிருந்தும், உயிர்களைத் துன்புறுத்துதலிலிருந்தும் விலகுதல் என்றதால் உணர்வு புறம் போகாது உயிரில் அடங்குதல் ஆயிற்று. அதாவது அகத்துள் - உயிருள் - அடங்குதல் "ஸய்யமம்" ஆயிற்று.

முதல் ஒழுக்கம் பண்புகளைக் காத்தலைச் சுட்டுகிறது. அப்பண்புகள் அறிவும் காட்சியும் ஆகும். இரண்டாவது ஒழுக்கம் அவற்றில் நிகழுதலை - ஆழ்தலைச் சுட்டுகிறது எனலாம். முன்னது கடைகால் என்றால் பின்னது கட்டடம் ஆகும்.

06. ஏவம் சிய ணாஊண ய ஸவ்வே மிச்சத்த தோஸ ஸங்காஇ|
பரிஹர ஸம்மத்த மலா ஜிண பணியா திவிஹ ஜோஏண||

(ப-ரை) : ஏவம் சிய - முன்னே சொன்னவாறு, ணாஊண - அறிந்து, ய - மேலும், ஸம்மத்த - நற்காட்சியின், மலா - குற்றங்கள் என, ஜிண - அருகர், பணியா - சொன்ன, மிச்சத்த - பொய்ம்மை (மித்யாத்வ) வினை உதயத்தால் ஆகும், ஸங்காஇ - ஐயம்

முதலானவற்றை, திவிஹ - மூன்று, ஜோஏண - யோகத்தாலும், ஸவ்வே - முற்றுமாக, பரிஹர - விடல் வேண்டும். எ-று.

(க-ரை) : மெய்க் காட்சியில் ஒழுகும் ஒழுக்கத்தை அறிந்து, நற்காட்சியின் குற்றங்கள் என அருகர் அருளிய ஐயம் முதலான குற்றங்களை மனம் மொழி மெய்களால் முற்றுமாக நீக்கி ஒழுகுதல் முதல் ஒழுக்கமாகும்.

(வி-ரை) : முதல் ஒழுக்கம் எப்படித்தூய்மை ஆகும் எனக் கூறுகிறார், ஆசாரியர், முதல் ஒழுக்கம் மெய்க் காட்சி ஒழுக்கம் - "ஸம்யக்த்வ ஆசரண சாரித்திரம்", அதற்குக் குற்றமாக அமைவன ஐயம் முதலான எட்டு என்பர். பொய்ம்மை (மித்யாத்வ) வினை உதயத்தால் விளைவன அவை. அக்குற்றங்களை நீக்க வேண்டும் என அருகர் அருளினார். அவை நீங்கினால் மெய்க்காட்சி ஒழுக்கம் தூய்மையுடையதாகும் என்பது கருத்து.

1. ஐயம் : பொருள் இயல்பு ஆகமத்தில் எப்படிச் சொல்லப்பட்டுள்ளதோ. அதில் ஐயம் கொள்ளல் குற்றமாகும். ஐயத்தினால் அச்சம் தோன்றி தன் நம்பிக்கையில் இழிதல் நேரும்.

2. அவா : புலனின்பங்களில் ஆர்வம் கொள்ளல் குற்றம் ஆகும். அதனால் புலன் இன்பம் விரும்பி தன் ஆன்ம நம்பிக்கையில் இழிதல் நேரும்.

3. உவர்ப்பு : பொருள் இயல்பை அப்படியே நோக்காது உவர்ப்பு கொள்ளுதல் குற்றமாகும். அதனால் முன் வினைப் பயனால் அறவோருக்குப் புறத்தே தோன்றும் குறை கண்டு உவர்தல் கொண்டால் தன் நம்பிக்கையில் இழிதல் ஆகும்.

4. மூடநோக்கு : இறை, நூல், அறத்தில் மற்றும் அற நிகழ்வுகளில் உண்மைத் தன்மை அறியாது போதல் குற்றமாகும். அதனால், பிறர் போற்றும் பற்றுடைய தேவர்களையும், இமிசை தருமத்தையும், பற்றுடைய துறவியரையும், அறியாமையால் செய்யும் நிகழ்வுகளையும் ஏதேனும் வேண்டி ஏற்கும் போது தன் நம்பிக்கையில் இழிதல் ஆகும்.

5. அறப்பழி : அறத்தில் இருப்போருக்கு முன் வினை உதயத்தால் ஏதேனும் குறை நேரக் கண்டால் அதனைத் தூற்றுதல் குற்றமாகும். அதனால், அறத்தில் இழிதல் ஆகும்.

6. அழிந்தாரைத் தாங்கல் : அறத்தில் இருப்போர் முன்வினை உதயத்தால் அறத்தில் இழியும் போது அவரை மீண்டும் அறத்தில் நிறுத்தாது தளரவிடுதல் குற்றமாகும். அதனால், அறத்தில் ஆர்வமின்மை வெளிப்படுகிறது. அறத்தில் ஆர்வமின்மை நம்பிக்கையில் இழிதல் ஆகும்.

7. அளவளாவல் : அறத்தில் இருப்பாரோடு நெருங்கி மகிழாமல் ஒதுங்குதல் குற்றமாகும். அதனால் ஆன்ம நம்பிக்கை இல்லாது போகிறது.

8. அறம் விளக்கல் : அறத்தின் பெருமையை ஆற்றலுக்கு ஏற்றவாறு விளக்காமை குற்றமாகும். அதனால் அறப்பெருமையில் நம்பிக்கை இல்லாமை ஆகிறது.

இவை எட்டும் நற்காட்சிக்குக் குற்றங்கள் ஆகும். இவை எல்லாம் பொய்ம்மை (மித்யாத்வ) வினை உதயத்தால் ஆட்படும் போது நிகழ்கிறது. இக் குற்றங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளும் அவ்வினைகளின் சிறப்பாகும். அவற்றைத் தெளிந்து குறைகளைக் களைய வேண்டும்.

இக்குற்றங்களுக்கு ஆட்படும்போது வேறு குற்றங்களும் நிகழ்கின்றன. அவற்றுள் மும்மூடங்கள் உள. அவை :

1. தேவ மூடம் : ஏதேனும் பெற வேண்டி பற்றுடைய தேவர்களை வழிபடுதல், அவர்களுக்குச் சிலை வடித்து ஆலயம் கட்டி வழிபடுதல் தேவ மூடமாகும். பற்றுடைய தேவர் எனில் மனிதரைப் போல விருப்பு வெறுப்புடையவரைக் கடவுளாக / தேவராக கருதுதல்.

2. குரு மூடம் : பொருள் பற்று, உயிர்களுக்குத் துன்பம் தரும் தொழில், இமிசையைத் தருமமாகக் கருதுதல் உடையாரை அணுகிப் போற்றி ஒழுகுதல் குரு மூடமாகும்.

3. உலக மூடம் : பிறர் அறியாமையில் செய்வனவற்றை ஏற்றல், உண்மையை ஆராயாது ஏற்றல் இவை போல்வன உலக மூடம். "உலக மூடம்" என்ற பெயரே அம் மூடங்களுக்கு வரம்பு இல்லை எனச் சுட்டுகிறது. அருங்கலச் செப்பு, அறநெறிச் சாரம் முதலான நூல்களில் இவற்றின் விரிவுகளைக் காணலாம். "பொய்ம்மை" வினை உதயத்தால் ஆட்படுவோர் இம் மூட நிகழ்வுகளில் ஈடுபடுவர். துறவுத் தோற்றம் உடையவரும் இதற்கு விதி விலக்கு இல்லை. அதனால் துறவியர் சொல்வன எல்லாம் சரியே என்று ஏற்பதும் மூடமாகும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில் துறவு உள்ளம் இல்லாதவர் எல்லாம் துறவு பூண்டுள்ள நிலையில் குரு மூடத்துக்கு ஆட்படாமல் தெளிவு பெற வேண்டும்.

ஆறு அவிநயம் : அவையும் குற்றமாகும். குதேவன், குகுரு, குசாத்திரம், இவற்றைப் போற்றுவோர் என ஆறு வகைப்படும் அவிநயம். இவற்றை அறம் எனக் கருதி வழிபடுதல், பாராட்டுதல் குற்றமாகும். இவற்றை "அநாயதனம்" என்றும் குறிப்பர், "அயதன்" எனில் நற்காட்சி தோன்றுதற்கு இடனாக இருப்பது என்பர், அதனால் நற்காட்சிக்கு ஏது அல்லாத குதேவன் முதலானவை "அநாயதன்" எனப்படும்.

நல்லறத்தின் தீர்த்த வணக்கத்தை நல்லோர்கள்
சொல்வர் அவிநயம் என்று.

என்பதனால் அறம் இல்லாத இடத்தில் வணங்குதல் அவிநயம் ஆயிற்று[1]. இவ்விடங்களைச் சேருவதால் பொய்ம்மை வினை உதயம் எனத் தெளியலாம்.

எட்டுச் செருக்குகள் : எட்டுச் செருக்குகளும் குற்றமாகும். பிறப்பு (சாதி), குலம், வலி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், அறிவு இவை எட்டு காரணமாக தன்னைப் பெரியோனாகக் கருதுதல் செருக்கு ஆகும். இவை எல்லாம் ஏன் ஆகின்றன? தாய் வழிப்படுவது சாதி என்பர். தந்தை வழிப்படுவது குலம் என்பர். இவை எல்லாம் வினை வழியால் அமைவன. வலி, செல்வம், வனப்பு, முதலானவையும் வினை வழி அமைவன. பிற பொருள் நிமித்தமாகத் தோன்றுவனவற்றில் தன்னை ஏற்றிப் பார்த்தல் நற்காட்சி இன்மையைச் சுட்டுகிறது.

இப்படி இருபத்தைந்து (8+3+6+8) குறைபாடுகள் அல்லது குற்றங்கள் நற்காட்சிக்குக் குற்றங்களாகும். இக் குற்றங்கள் இல்லாமல் காத்துக் கொள்ளலே நற்காட்சியின் தூய்மை ஆகும். இதுவே மெய்க்காட்சி ஒழுக்கமாகும். இதனை "தரிசன ஆசாரம்" என்றும் குறிப்பர்.

7. ணிஸ்ஸங்கிய ணிக்கங்க்கிய ணிவ்விதிகிஞ்சா அமூடதிட்டி ய|
உவகூஹண டிதிகரணம் வச்சள்ள பஹாவணா யதே அட்ட||

(ப-ரை) : ணிஸ்ஸங்கிய - ஐயமின்மை, ணிக்கங்க்கிய - அவா இன்மை, ணிவ்விதிகிஞ்சா - உவர்ப்பு இன்மை, அமூடதிட்டி - மூட மின்மை, ச - மேலும், உவகூஹண - அறப்பழி நீக்கல், டிதிகரணம் - அழிந்தாரைத் தாங்கல், வச்சள்ள - அளவளாவல், ய - மற்றும், பஹாவணா - அறம் விளக்கல், தே - அவை அட்ட - எட்டாகும். எ-று.

(க-ரை) : ஐயமின்மை, அவா இன்மை, உவர்ப்பு இன்மை, மூட மின்மை, அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்கல், அளவளாவல், அறம் விளக்கல் எனும் எட்டும் குணமாகும்,

(வி-ரை) : முன் காதையில் மெய்க்காட்சி வழிப்படும் ஒழுக்கம் தூய்மையாக விளங்க விலக்க வேண்டிய குற்றங்களைக் குறிப்பாகச் சுட்டினார். இங்கே அவ் வெட்டுக் குற்றங்கள் நீங்குவதால் வெளிப்படும் குணங்கள் இவை என எட்டினைச் சுட்டினார். இவற்றை நற்காட்சியின் உறுப்புகள் என்றும் சுட்டுவர். இக்குணங்களின் சிறப்பை / பெருமையை முறையே அஞ்சனசோரன், அனந்தமதி, ஒத்தாயணன், இரேவதி, ஜினேந்திர பத்தர், பாரிசேணர், விஷ்ணு முனிவர், வச்சிர குமாரர் புராண வரலாறுகளால் அறியலாம்.

1. *அருங்கலச்செப்பு, 40.*

08. தம்சேவ குண விஸுத்தம் ஜிண ஸம்மத்தம் ஸுமுக்கடாணாஏ|
ஜம் சரஇ ணாண ஜுத்தம் படமம் ஸம்மத்த சரண சாரித்தம்||

(ப-ரை) : ஸுமுக்க டாணா ஏ - நல்வீடுபேற்றுக்காக, ணாணஜுத்தம் - நல்லறிவுடன் கூடி, தம்சேவ - முன்னே கூறப்பட்ட அந்த, குண - ஐயமின்மை முதலான குணங்களால், விஸுத்தம் - தூய்மை அடைந்த, ஜிண ஸம்மத்தம் - அருக நம்பிக்கையில், சரஇ - ஒழுகுதல், ஜம் - அந்த, படமம் - முதல், ஸம்மத்த சரண சாரித்தம் - மெய்க்காட்சி வழிப்படும் ஒழுக்கமாகும். எ-று.

(க-ரை) : வீடுபேறு வேண்டி நல்லறிவுடன் தூய அருக நம்பிக்கையில் ஒழுகுதல் முதல் மெய்க்காட்சி வழிப்படும் ஒழுக்கமாகும்.

(வி-ரை) : ஆசாரியர் முதல் ஒழுக்கத்தில் ஒழுகும் முறை கூறுகிறார், இரண்டு வகையாகும் நல்லொழுக்கம் என்றவர் காட்சி அறிவு ஒழுக்கத்தில் தூய்மையுடன் இருத்தல் முதல் ஒழுக்கம் என்றார். ஐயம் முதலான குற்றங்கள் நீங்கி இருத்தலே அதன் தூய்மை ஆகும், அக்குற்றங்கள் இல்லை என்றால் அதனால் ஒழுக்கத்தில் எட்டு குணங்கள் வெளிப்பட்டு நிற்கும் என்றார்.

உயிர் அனாதி காலமாக வினையோடு சேர்ந்து வருகிறது. இதில் பொய்ம்மை (மித்யாத்வ) வினை உயிரை ஐயம் கொள்ளல் முதலான குற்றங்களில் நிகழ வைக்கிறது. அதனால், அவ்வினையின் வயப்படாமல் இருக்க வேண்டும் என்பதனையே தூய்மையாக இருக்க வேண்டும் என்றார். இந்தக் காதையில் அத் தூய்மையோடு அறிவு கூர்மை கொண்டு ஒழுக வேண்டும் என்கிறார். அறிவு கூர்மை என்பது ஜிநர் நம்பிக்கையில் தெளிந்து இருத்தல் ஆகும். ஏனெனில் அந்த நம்பிக்கையே வீடு பேற்றின் ஆதாரம் ஆகும். நற்காட்சி முத்தி நெறியின் முதல் படியாகக் கூறப்பட்டுள்ளது. ஆசாரியர் அதனையே இங்குச் சுட்டுகிறார்.

09. ஸம்மத்த சரண ஸுத்தா ஸஞ்ஜம சரணஸ்ஸ ஜஇ வஸுபஸித்தா|
ணாணி அமூடதிட்டீ அசிரே பாவந்தி ணிவ்வாணம்||

(ப-ரை) : ஸம்மத்த சரண - மெய்க்காட்சி ஒழுக்கத்தில், ஸுத்தா - தூய்மையோடு, வ - மேலும், ஸஞ்ஜம - உயிரில் அடங்கும் (ஸய்யம்), சரணஸ்ஸ ஜஇவ - ஒழுக்கத்தினால், ஸுபஸித்தா - நன்கு விளங்குவரானால், ணாணி - அந்த அறிவுடையவர், அமூடதிட்டீ - முடமில்லாதவர், அசிரே - வெகு சீக்கிரம், ணிவ்வாணாம் - வீடுபேற்றை, பாவந்தி - அடைகிறார். எ-று.

(க-ரை) : மெய்க்காட்சித் தூய்மையோடு சையம ஒழுக்கம் ஏற்று நன்கு ஒழுகுபவர் அறிவுடையவர், மூடம் இல்லாதவர். அவர் விரைந்து வீடு பேறு பெறுகிறார்.

(வி-ரை) : காட்சி, அறிவு, ஒழுக்கம் உடையவர் விரைந்து வீடுபேறு அடைகிறார் என்கிறார், ஆசாரியர். ஜிநர் உரைத்தவாறு பொருள் இயல்பை உள்ளவாறு அறிதல் மூடமின்மை ஆகும். அதனால் அறிவுடையவர் மூடமில்லாதவர் என்றார். தூய நம்பிக்கையராக அவர் நல்லொழுக்க வடிவமான ஸய்யமத்தை ஏற்பாரானால் விரைந்து வீடுபேறு பெறுவார் என்றார். புலன் இன்பங்களிலிருந்து விலகியும், ஆறு வகையாகக் கூறப்படும் உயிர்களுக்கு இன்னா செய்யாமல் விலகியும் அடங்கி இருத்தல் - உயிரில் அடங்குதல் - ஸய்யமம் - ஆகும். இப்படி மும்மணி வடிவமாக விளங்கும் போது வீடுபேறு எளிதாக அமையும் என்பதாம்.

இந்தக் காதையில் ஒழுக்கத்தின் சிறப்பை உணர்த்துகிறார் ஆசாரியர். ஒழுக்கத்தை ஏற்கும் போது தன் இயல்பை அடைய கருவியான தியானம் ஏற்க வேண்டும். ஒரு முகப்பட்டு நிற்கும் தரும தியானத்தில் நிகழ்ந்து அதன் பயனாக அபிரமத்த - குணத்தான நிலையில் நின்று, மேலே உயரும் சிறப்புத் தோன்ற குணத்தான படி நிலையில் விரைந்து சென்று, ஒரு மூழ்த்த காலத்துள் முழுதுணர் அறிவைப் பெற்று, பிறகு அகாதி வினைகளை அழித்து அழியா வீட்டின்பத்தை அடைவர். அதுவே, நல்லொழுக்கத்தின் சிறப்பு / பெருமை ஆகும்.

10. ஸம்மத்த சரணபட்டா ஸஞ்ஜம சரணம் சரந்தி ஜே வி நரா|
அண்ணாண ணாணமூடா தஹ வி ண பாவந்தி ணிவ்வாணம்||

(ப-ரை) : ஸம்மத்த சரண - மெய்க்காட்சி ஒழுக்கத்தில், பட்டா - இழிந்த, நரா - மனிதர், ஸஜ்ஜம சரணம் - ஸய்யம ஒழுக்கத்தில், சரந்தி - ஒழுகுகிறார், ஜே வி - அப்படி இருந்தாலும், அண்ணாண ணாண - அறிவில்லாமையால், மூடா - மூடனாகி, தஹ வி - அதனால், ணிவ்வாணம் - வீடுபேற்றை, ண பாவந்தி - அடையார். எ-று.

(க-ரை) : நற்காட்சி இல்லாமல் ஸய்யம ஒழுக்கத்தில் ஒழுகுகிறார். அந்த துறவியர் அறிவு இல்லாத மூடராகி வீடுபேற்றை அடையார்.

(வி-ரை) : ஆசாரியர் மெய்க்காட்சி ஒழுக்கம் இல்லாமல் வெறும் மெய் (உடல் - புற) ஒழுக்கம் வீடு பேற்றைத் தராது எனத் தெளிவு செய்கிறார். இருபத்தைந்து குற்றங்கள் இல்லாமையே தூய மெய்க்காட்சி ஒழுக்கமாகும்; நற்காட்சி ஒழுக்கமாகும். அந்த அடிப்படை ஒழுக்கத்தில் இழிந்த பிறகு அந்தத்துறவியர் துறவின் புற ஒழுக்கங்களைச் செய்வதால் வீடுபேறு அடையார். ஆசாரியர் புற ஒழுக்கமாக ஸ்யமை ஒழுக்கம் அமைவதால் அதனை உடையவரைத் துறவி என்று சுட்டாது மனிதர் (நரா) என்று சுட்டியுள்ள நுட்பம் எண்ணி நினைவில் கொள்ளத்தக்கது.

அக நிலையில் இருக்க வேண்டிய மெய்க்காட்சி ஒழுக்கம் இல்லை. மெய்க்காட்சி ஒழுக்கம் ஜிநர் வழிபாடாகும். ஜிநர் நெறி வழிபாடாகும். அதில் ஐயம் முதலான 25 குற்றங்கள் இரா. அதுவே அவ்வொழுக்கத்தின் தூய்மையாகும் / சிறப்பாகும்.

அச் சிறப்பான ஒழுக்கத்தில் தெளிவு இல்லாமல் நற்காட்சிக்கு ஊறு செய்யும் குற்றங்களுக்கு ஆட்படுபவரானால் நற்காட்சியில் இழிந்தவர் ஆவர். விருப்பு வெறுப்பு உணர்வுடைய தேவ தேவியரை சாவகர் வணங்கலாம் என்பதும், அவருக்கு வழிபாடு செய்யலாம் என்பதும், கோயில் எடுக்கலாம் என்பதும், நவகிரஹ வழிபாடு செய்யலாம் என்பதும் ஜிநர் நெறி நம்பிக்கையிலிருந்து இழிந்தநிலையாகும். அவர் துறவி வேடத்தில் இருந்து துறவியின் புற ஒழுக்கங்களைச்செம்மையாக செய்தாலும் துறவி அல்லர்; பொது மனிதரே! அதனால் அவர் வீடுபேறு அடையார். ஏனெனில் அவர் மெய் அறிவிலார்; மூடர். புற ஒழுக்கம் வீடுபேற்றைத் தராது எனத் தெளிவு செய்கிறார் ஆசாரியர்.

11. வச்சள்ளம் விணஏண ய அணுகம்பாஏ ஸுதாணதச்சாஏ|
மக்ககுண ஸம்ஸணாஏ அவகூஹண ரக்கணாஏ ய||

(ப-ரை) : வச்சள்ளம் - அளவளாவல், விணஏண - பணிவுடைமை, ய - மற்றும், அணுகம்பாஏ - இரக்கமுடைமை, ஸுதாண - நல்தான, தச்சாஏ - சிறப்புடைமை, மக்ககுண - அறநெறி, ஸம்ஸணாஏ - புகழ்தலுடைமை, அவகூஹண - அறப்பழி இன்மை, ய - மற்றும், ரக்கணாஏ - அழிந்தாரைத் தாங்கல்.

12. ஏஏஹிம் லக்கணேஹிம் ய லக்கிஜ்ஜஇ அஜ்ஜவேஹிம் பாவேஹிம்|
ஜீவோ ஆராஹந்தோ ஜிணஸம்மத்தம் அமோஹேண|| (குளகம்)

(ப-ரை) : ஏஏஹிம் - இந்த, லக்கணேஹிம் - இலக்கணங்கள், அமோஹேண - மோகம் இல்லாமல், ஜிண ஸம்மத்தம் - ஜிநர் நற்காட்சியை, ஆராஹந்தா - ஆராதிக்கின்றன, ஜீவோ - உயிர்களிடம் காணமுடியும், ய - மற்றும். லக்கிஜ்ஜஇ - இவற்றைக் குறிப்படுத்தும், அஜ்ஜவேஹிம் - சரளமான, பாவேஹிம் - தன்மையும் காணமுடியும்.

(க-ரை) : அளவளாவல், பணிவுடைமை, இரக்கமுடைமை, தானச் சிறப்புடைமை, அறநெறி புகழ்தலுடைமை, தாங்குதலுடைமை இவை முதலான இலக்கணங்கள் மோகமில்லாமல் ஜிநர் நெறியை ஆராதிக்கின்ற உயிர்களிடம் காண முடியும். இவற்றைக் குறிப்படுத்தும் சரளமான தன்மையும் அவரிடம் காணமுடியும்.

(வி-ரை) : முன் காதையில் ஆசாரியர் மெய்க்காட்சி ஒழுக்கம் இல்லாதவர் புற ஒழுக்கத்தால் வீடுபேறு அடைய முடியாது என்றார். இந்தக் காதைகளில் அந்த மெய்க்காட்சி ஒழுக்கம் உடையாரை எப்படி அறிவது எனும் வினாவுக்கு விடை தருதல் போல நற்காட்சியுடையாருடைய சில அடையாளங்களைச் சுட்டுகிறார்.

நற்காட்சி ஆன்மாவின் நிகழ்வாகும். பொய்ம்மை (மித்யா) வினை உதயம் இல்லாத போது தோன்றுவது; மிகவும் நுட்ப உணர்வாகும். வினைத் தொடர்பு

உடையவரால் அறிய முடியாது; கேவலியால் அறியப்படுகிறது. என்றாலும் நற்காட்சி உடையாருக்குக் காணப்படும் புற அடையாளங்கள் / சின்னங்களைக் கொண்டு அவருக்கு நற்காட்சி உண்டு என ஊகிக்க முடியும். அதனால் ஆசாரியர் சில அடையாளங்களைச் சுட்டுகிறார்.

இங்கே சுட்டப்பட்டுள்ள அடையாளங்கள் அறியத்தக்கன. அக நிலையில் தான் உணர்தலோடு தன் உணர்வை வெளிப்படுத்தலால் பிறர் அறிய முடியும். அதே போன்று பிறருடைய பிறச் செயல்களால் அவரை உய்த்துணர முடியும். அப்படி இல்லை என்றால் நடைமுறை நற்காட்சி நெறி மறைந்து போகும் என அறிதல் வேண்டும், அதனால் ஆசாரியர் நடைமுறைச் செயல்களை அடையாளம் என்றார். உண்மை நிலையைப் பகவான் அறிகிறார்.

அளவளாவல் : அற நெறியில் நிகழ்வாரைக் கண்டு. கறவை கண்ட கன்று போல் அன்புடன் உறவாடுதல்.

பணிவுடைமை : நற்காட்சி முதலான உணர்வுகளில் சிறந்துடையார் இடத்து பணிவு கொள்ளல் பணிவுடைமை ஆகும். தன்னினும் மிக்கார் என்பது குண அடிப்படையில் அமைவது ஆகும். அவருக்கு - அக்குணங்களுக்கு - பணிவுகாட்டுதல் அக்குணங்களைப் போற்றுதலாம்.

இரக்கமுடைமை : இடருறும் உயிர்களிடத்து இயல்பாக எழும் அன்புணர்வு இரக்கமுடைமை ஆகும். அவருக்கு உதவுதல் இரக்கமாகும்.

தானச்சிறப்புடைமை : உயிர்கள் துன்புறுங்கால் அத்துன்பம் நீங்க எல்லா வகையானும் உதவுதல் தானச் சிறப்புடைமை ஆகும். அல்லது கொடைச் சிறப்புடைமை ஆகும். இங்கே உயிர்கள் துன்பமின்றி இன்புற உதவுவது ஆகும்.

அறநெறியைப் புகழ்தல் : பற்றற்ற நெறியே அற நெறி, மும்மணி நெறி எனப் புகழ்தல், அதாவது அதனை வெளிப்படுத்துதல். அதனால் நிர்வாண நெறியில் உள்ள ஈடுபாடு வெளிப்படுகிறது.

அறப்பழி நீக்கல் : அற நெறியில் நிகழ்வார் முன்வினை உதயத்தால் அறச் செயல்களில் நெகிழ்வாரானால் - குறை செய்வாரானால் - அக்குறையை வெளிப்படுத்தாமல் காத்தல் அறப்பழி நீக்கலாம். இது அற நெறிக்கு ஊறுவராமல் காத்தலாகும்.

அழிந்தாரைத் தாங்குதல் : நெறி பிறழ்ந்தாரை மீண்டும் நெறிக்கண் நிற்கச் செய்தல் அழிந்தாரைத் தாங்குதலாம், முன் வினை உதயத்தால் நேரும் பிறழ்வு கண்டு மீண்டும் அறத்தின் துணை கொள்ள உதவுதல் இது.

இந்த அடையாளங்களை வெளிப்படுத்த உள்ளே அக நிகழ்வாக இருப்பது சரளமான உணர்வாகும். வஞ்சனை அற்ற வெள்ளை மனமாகும். அந்த வஞ்சனை

உணர்வு இல்லாத நிலையிலேயே புறத்தே இவை காணப்படும். புறச் செயல்களைப் பிறர் அறிவர். அக நிகழ்வுகளைத் தானே அறிவர் / அனுபவம் செய்வர் என்பது கருத்து.

13. உச்சாஹ பாவணா ஸம்பஸம்ஸஸேவா குதம்ஸணே ஸத்தா|
அண்ணாண மோஹமக்கே குவ்வந் தோ ஜஹதி ஜிணஸம்மம்||

(ப-ரை) : அண்ணாண - அறியாமையும், மோஹ - மயக்கமும் உடைய, மக்கே - நெறியான, குதம்ஸணே - பொய் மதத்தில், உச்சாஹ - உவகையும், பாவணா - உணர்வும், ஸம்பஸம்ஸ - மகிழ்ந்து போற்றுதலும், ஸேவா - சேவையும், ஸத்தா - ஈடுபாடும், குவ்வந்தோ - செய்கிறவர், ஜிண ஸம்மம் - ஜிநர் நற்காட்சியை, ஜஹதி - இழக்கிறார். எ-று.

(க-ரை) : அறியாமை, மயக்கம் உடைய பொய் மதத்தில் உவகையும், உணர்வும், போற்றுதலும், சேவையும், ஈடுபாடும், செய்கிறவர் ஜிநர் நம்பிக்கை வடிவ நற்காட்சியை இழக்கிறார்.

(வி-ரை) : நற்காட்சியாளரின் அடையாளங்கள் இவை என முன்பு சுட்டிய ஆசாரியர் அவருக்கு ஆகாதவை இவை என இக்காதையில் சுட்டுகிறார். இவற்றை உடையவர் நற்காட்சியைக் கைவிட்டவர் - இழந்தவர் என்கிறார். முன்னே உடன்பாட்டு முறையால் நற்காட்சியின் சிறப்பை நவின்றார்; இங்கே எதிர்மறை முகத்தான் அதன் சிறப்பை உய்த்துணர வைக்கிறார் எனலாம்.

"குதம்ஸண" என்ற சொல்லை ஆசாரியர் ஆளுகிறார், "தம்ஸண" எனில் "தரிசனம்"; இங்கே "மதம்" - "கோட்பாடு" எனும் பொருளில் ஆண்டுள்ளார். உயிருக்கு கேடு செய்யும் அத்தனை கோட்பாடுகளையும் இச்சொல்லில் அடக்கியுள்ளார் எனலாம். உயிரை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வது உண்மையான தரிசனமாகும். ஆனால், தரிசனம் எனும் பெயரால் உயிர்களைப் பிறவியில் உழலச் செய்வதனை "குதம்ஸண" என்றார் எனலாம். புறத்தே ஒன்று போல தோன்றி அகத்தே தீமை தருவதால் "கு" அடைமொழி கொடுத்து "குதம்ஸண" என்றார். "குபாத்திரம்" என்பது போல.

அறியாமையும் மயக்கமும் ஊட்டுவதால் அது பிழைபட்ட நெறியாகும். உயிர் முதலான உள் பொருளை உள்ளவாறு தெளியாமை அறியாமை ஆகும். ஒன்றை மற்றொன்றாக மயங்கி ஏற்றல் மயக்கமாகும். இமிசையிலும் தருமம் உண்டு என மயங்குதல் போன்றது. செயல்களில் ஊக்கம் கொள்ளுதல் "உவகை" ஆகும். இந்த தரிசனத்தை ஏற்கலாம் என எண்ணுதல் "உணர்வு" ஆகும். மனத்தாலும் சொல்லாலும் பாராட்டுதல் "போற்றுதல்" ஆகும். அந் நெறியை வளப்படுத்துதலும் அந்நெறியுடையாருக்குப் பணிவு முதலியன காட்டலும் "சேவை" ஆகும். அந்நெறியில் ஈடுபாடு கொள்ளுதல் "நம்பிக்கை" ஆகும்.

இவற்றை எல்லாம் ஏற்று நடப்பவர் ஜிநர் நம்பிக்கையை இழக்கிறார் என்கிறார். அதாவது நற்காட்சியை இழக்கிறார். அருளறமான அருக நெறிக்கு இத்தகு செயல்கள் பொருந்தா. அதனால் நற்காட்சி இல்லாது போகிறார் என்பதாம்.

14. உச்சாஹ பாவணா ஸம்பஸம்ஸ ஸேவா ஸுதம்ஸணே ஸத்தா|
ணஜஹதி ஜிணஸம்மத்தம் குவ்வந்தோ ணாண மக்கேண||

(ப-ரை) : ணாண - உயிர் முதலான உள் பொருளை உள்ளவாறு அறியும், மக்கேண - அறிவு நெறியான, ஸுதம்ஸணே - மும்மணி தரிசனத்தில், உச்சாஹ - உவகையும், பாவணா - உணர்வும், ஸம்பஸம்ஸ - மகிழ்ந்து போற்றுதலும், ஸேவா - சேவையும், ஸத்தா - ஈடுபாடும், குவ்வந்தோ - செய்கிறவர், ஜிண ஸம்மத்தம் - ஜிநர் நற்காட்சியை, ணஜஹதி - இழப்பது இல்லை. எ-று.

(க-ரை) : அறிவு நெறியான மும்மணி தரிசனத்தில் உவகையும் உணர்வும், போற்றுதலும், சேவையும், நம்பிக்கையும் செய்கிறவர் ஜிநர் நம்பிக்கையாம் நற்காட்சியை இழப்பது இல்லை.

(வி-ரை) : முன் காதையில் ஆசாரியர் நற்காட்சிக்கு ஆகாதன இவை எனச் சுட்டினர். ஆனால் இங்கே ஜிந தரிசனத்தில் அத் தகு செயல்கள் செய்யும் போது அவர் நற்காட்சியை இழப்பது இல்லை எனச் சுட்டுகிறார். சொற்கள் ஒன்றானாலும் அவை சுட்டும் பொருள்கள் நுட்பமானவை.

"ஸுதம்ஸண" எனில் "நல்தரிசனம்". அதாவது நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்க வடிவ தரிசனமாகும். அது உயிரை உன்னத நிலைக்கு உயர்த்தும் தரிசனமாகும். அது "ணாணமக்க" மென்றார். நல்லறிவு நெறி என்றார். அதாவது நல்லறிவு கூர்மையுடன் கூடி செல்லவேண்டிய நெறியாம். அம் மும்மணி நெறியில் "உவகை" கொள்ளுதல் எனில் உன்னத நிலைக்கு உயர முனைப்புக் காட்டுதலாம். அந்நெறியில் "உணர்வு" கொள்ளுதல் எனில் அறிவு மறைப்பு முதலான பொருள் (திரவிய) வினை, உடல் முதலான நோ கருமம், வெகுளி முதலான உணர்வு (பாவ) வினை இவற்றிலிருந்து தன் உயிரைப் பிரித்து உணர்தல் ஆகும் தொடக்க மற்ற காலமாக தன் உண்மை நிலை அறியாது வினை முதலான புற்கலப் பொருளைத் தனதாகக் கருதி உழன்று வந்த உயிர், இப்போது ஜிநர் நெறிப்பட்டு தன் உண்மை இயல்பு அறிந்து நற்காட்சியை உணர்தலாகும். மனம் மொழி மெய்யால் வேண்டுதல் வேண்டாமை இலா அருகரைப் புலன் இன்ப எதிர்பார்ப்பு நோக்காது அன்பு செய்தல் "போற்றுதலாம்". அவரை வழிபடுதல், வாழ்த்துதல், ஊழ்கம் (தியானம்) செய்தல், அவரை வழிப்படும் துறவியர்க்கு பணிவிடை செய்தல் "சேவை" ஆகும். இவற்றில் ஈடுபாடு கொள்ளல் நம்பிக்கை ஆகும்.

இவ்வாறு ஒழுகுபவர் நற்காட்சியை இழப்பது இல்லை. அதாவது அதனைக் கைவிடுவது இல்லை.

15. அண்ணாணம் மிச்சத்தம் வஜ்ஜஹ ணாணே விஸுத்த ஸம்மத்தே|
அஹ மோஹம் ஸாரம்பம் பரிஹர தம்மே அஹிம்ஸாஏ||

(ப-ரை) : ணாணே - நல்லறிவு பெற, அண்ணாணம் - அறியாமையை, வஜ்ஜஹ - கைவிடுக, விஸுத்த - தூய, ஸம்மத்தே - நற்காட்சி பெற, மிச்சத்தம் - பொய்க்காட்சியை, வஜ்ஜஹ - கைவிடுக, அஹ - மேலும். அஹிம்ஸாஏ - அருள் வடிவான, தம்மே - தருமம் (அறம்) பெற, ஸாரம்பம் - ஆரம்பத்தோடு, மோஹம் - மயக்கத்தை, பரிஹர - கைவிடுக. எ-று.

(க-ரை): பவ்விய! நல்லறிவு வேண்டின் அறிவின்மையை, தூய நற்காட்சி வேண்டின் பொய் நம்பிக்கையை, அருள் வடிவான அறம் வேண்டின் ஆரம்பத்தோடு மயக்கத்தைக் கைவிடுக!

(வி-ரை) : நற்காட்சியை நிலைப்படுத்த ஆசாரியர் இங்கே வழி கூறுகிறார். நற்காட்சியில் தூய்மை, ஐயம் முதலான குற்றங்களை நீக்குவதால் அமைகிறது. மெய்க்காட்சி நல்லொழுக்கம் அதுவே. அந்த ஒழுக்கம் நிலைப்பட அதற்கு எதிரானதைக் கைவிட வேண்டும்.

நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம், ஆன்ம நிகழ்வுகளாகும். அந் நிகழ்வுகள் வெளிப்படும் போது அவற்றுக்கு எதிரான நிகழ்வுகள் தோன்றி அவற்றை அழிக்காமல் காக்க வேண்டும். அதாவதுஅந்த எதிரான நிகழ்வுகளில் நாட்டங் கொள்ளாது இருத்தல் வேண்டும். நல்லறிவுக்கு எதிரானது பொய் அறிவு. அந்த அறிவுக்கு இடம் கொடாமல் அதனை விட்டு நீங்க வேண்டும். நற்காட்சிக்கு எதிரானது பொய் நம்பிக்கை. உண்மை அல்லாதவற்றை உண்மை என நம்புதல் பொய் நம்பிக்கை ஆகும். நல் நம்பிக்கை நிலைப்பட பொய் நம்பிக்கைக்கு இடம் கொடாமல் அதனை விட்டு நீங்க வேண்டும்.

அடுத்து அருகர் அருளிய அறம் அருள் வடிவமாகும். அருள் அறம் அகத்தே மகிழும் போதுதான் கொல்லாமை முதலான பெரு நோன்புகள் (மகா விரதங்கள்) ஏற்க முடியும். அதனால் அந்த அருள் அறம் நிலைப்பட இன்னாமை (இமிசை) உணர்வுக்கு இடம் கொடாமல் நீங்கி இருக்க வேண்டும். உயிர்களுக்கு இன்னாமை (இமிசை) நிகழ ஏதுவாகும், செயல்களை "ஆரம்பம்" என்பர். அருள் நிலைப்பட "ஆரம்பம்" கைவிடப்பட வேண்டும். உடன் மயக்கத்தையும் கைவிட வேண்டும். மோகம் உள்ள இடத்தில் அருள் பூக்காது. அதனால் அதனையும் விட்டு நீங்க வேண்டும்.

16. பவ்வஜ்ஜ ஸங்க சாஏ பயட்ட ஸுதவே ஸுஞ்ஜமே பாவே|
ஹோஇ ஸுவிஸுத்த ஞானம் ணிம்மோஹே வீயராயத்தோ||

(ப-ரை) : ஸங்க - பற்று, சாஏ - விட்டு, பவ்வஜ்ஜ - திகம்பர துறவு ஏற்று, ஸுதவே - நல்தவத்தில், ஸுஸஞ்ஜம பாவே - நல் சையமத்தில், பயட்ட - நிகழ்ந்து, ணிம்மோஹே - மயக்கமில்லாது, வீய ராயத்தே - வீதராகத்தில் உள்ள போது, ஸுவிஸுத்த - மிகு தூய, ஞானம் - ஊழ்கம் (தியானம்), ஹோஇ - அமைகிறது. எ-று.

(க-ரை) : பற்றுகளை விட்டு, திகம்பர துறவு ஏற்று, நற்றவம் நல் சையமத்தில் நிகழ்ந்து, மயக்கமில்லாது, வேட்கை அற்ற நிலையில் இருக்கும் போது மிகு தூய ஊழ்கம் அமைகிறது.

(வி-ரை) : வீடுபேறு வெள்ளை ஊழ்கத்தால் (சுக்கில தியானத்தால்) அமைகிறது. அந்த ஊழ்கம் யாருக்கு அமைகிறது என்று இங்குச் சுட்டுகிறார்.

பற்று இருவகைப்படும். அகப்பற்று, புறப்பற்று என. அகப்பற்று 14 வகை : பொய் நம்பிக்கை (மித்தியாத்துவம்), வெகுளி, மானம், மாயை, உலோபம், சிரிப்பு, விருப்பு, விருப்பின்மை, சோகம், அச்சம், உவர்ப்பு, ஆண் நசை, பெண் நசை, அலி நசை (புருஷ வேதம், ஸ்திரீ வேதம், நபும்ஸக வேதம்).

புறப்பற்று பத்து வகைப்படும் : அவை நிலம், வீடு, தனம், தான்யம், வெள்ளி, பொன் வேலைக்காரன், வேலைக்காரி, ஆடை அணி (குப்பியம்), கலன்கள் (பாண்டம்), இவற்றுள் வெள்ளி, பொன், வேலைக்காரன், வேலைக்காரி இந்த நான்குக்கும் பதிலாக ஆள், விலங்கு, வண்டி (ஊர்தி), படுக்கை எனச்சொல்லுதலும் உண்டு. இந்த 24 பற்றுகளிலிருந்து விடுபட்டவராக இருத்தல் வேண்டும்.

தவம் : அகத்தவம், புறத்தவம் என இருவகைப்படும். அகத்தவம் : அவை ஆறு வகையாகும். கழுவாய் (பிராயசித்தம்), பணிவுடைமை (விநயம்), பணிவிடை (வையாவ்ருத்யம்), ஆன்மாவில் ஈடுபடுதல் (ஸ்வாத்யாயம்), ஊழ்கம் (தியானம்), உடல் பற்று விடல் (வ்யுத்ஸர்க). புறத்தவம் : அவை ஆறு வகைப்படும், உண்ணாமை (அனசனம்), உணவு குறைத்தல் (அவமௌதர்யம்), குறி வைத்த உணவு (வ்ருத்தி பரிஸங்க்யானம்), சுவை விடுதல் (ரச பரித்யாகம்) ஒதுக்கிட உறைவு (விவிக்த சய்யாசனம்), உடலை வாடவிடல் (காயக்லேசம்), இப்பன்னிரண்டும் தவங்களில் நிகழவேண்டும்.

சையம் எனில் உள் அடங்குதல், பொறிவழிப் படாதும் உயிர்களுக்கு இன்னா செய்யாது உயிர் காத்தலும் ஆம். உயிர் தன்னையே நோக்குதல் நிலை ஆகும். இதனை உயிருள் அடங்குதல் எனினும் அமையும்.

மயக்கம் : எனில், உயிருக்கு நன்மை தீமை அறியாது மயங்குதல். அது பொய் நம்பிக்கை நிலை. அது இல்லாமை நற்காட்சி நிலை.

வீதராயம் : எனில் விருப்பு வெறுப்பு இல்லா நிலை. இங்கே ஆசாரியர் நற்காட்சியையும் வீதராகத்தையும் குறிப்பிட்டதால் மோகனீய வினை இல்லை என்பது ஆயிற்று. அந்த நிலையிலேயே மிகு தூய ஊழ்கம் அதாவது "சுக்கில தியானம்" அமையும் என்றார். மோக வினை அழிவிற்குப் பற்றின்மை, திகம்பரத் துறவு, தபம், சையமம் இவை முதலானவை ஏது எனக் காட்டினார். வெள்ளை ஊழ்கம் நான்கு வகைப்படும். முதல் இரண்டும் முனி நிலையிலும் அதாவது சுருதகேவலி நிலையிலும் பின் இரண்டும் கேவலி நிலையிலும் அமைகின்றன. "இரு சிரேணி" அடிப்படையில் இதனை அறிக.

17. மிச்சா தம்ஸண மக்கே மலினே அண்ணாண மோஹ தோஸேஹிம்|
வஜ்ஜந்தி மூட ஜீவா[1] மிச்சத்தா புத்தி உதயேண||

(ப-ரை) : மூட - அறியாமையுடைய, ஜீவா - உயிர்கள், மிச்சத்த - பொய்க்காட்சி, அபுத்தி - பொய்யறிவு, உதயேண - உதயத்தால், அண்ணாண - அறியாமை, மோஹ - மயக்க, தோஸேஹிம் - குற்றங்களால், மலினே - இழிந்த, மிச்சா தம்ஸண - பொய் நம்பிக்கை, மக்கே - நெறியில், வஜ்ஜந்தி - செல்கின்றன. எ-று.

(க-ரை) : அறியாமையுடைய உயிர்கள் பொய்க்காட்சி பொய் அறிவு உதயத்தால் அறியாமை, மயக்க குற்றங்களால் இழிந்த பொய் நம்பிக்கை நெறியில் செல்கின்றன.

(வி-ரை) : ஆசாரியர் உயிர்கள் பிறவிக்கு ஏதுவான பொய் நம்பிக்கை நெறியில் போதற்குக் காரணம் காட்டியுள்ளார். அந்த நெறி இழிவான நெறி ஆகும். ஏனெனில், அங்கே அறியாமை மற்றும் மயக்கம் எனும் குற்றங்கள் உள்ளன. பொய் நம்பிக்கை (மித்யாத்வ) வினை உதயத்தில் இருக்கும் போது அறிவும் பொய்யறிவாகவே அமைய முடியும். அதனால் ஆசாரியர் அவ்விரண்டின் உதயத்தையும் ஏதுவாகக் காட்டினார். நம்பிக்கையும் அறிவும் பொய்யானதால் ஒழுக்கமும் பொய்யாகவே அமைய முடியும். அதனால் பொய் ஒழுக்க நெறியில் உயிர்கள் செல்கின்றன என்றார். எனவே, அவற்றை அழித்தால்தான் உயிர்கள் நற்காட்சி நெறியில் செல்ல முடியும் என அறிவுறுத்துகிறார்.

18. ஸம்மதம்ஸண பஸ்ஸதி ஜாணதி ணாணேண தவ்வபஜ்ஜாயா|
ஸம்மேண ய ஸத்தஹதி ய பரிஹரதி சரித்தஜே தோஸே||

(ப-ரை) : ஸம்மதம்ஸண - நற்காணுகையால், பஸ்ஸதி - பார்க்கிறது, தவ்வ - பொருள், பஜ்ஜாயா - பையை (பர்யாயம்) களை, ணாணேண - அறிவால், ஜாணதி - அறிகிறது, ய - மற்றும், ஸம்மேண - நல்மெய்ம்மையால், ஸத்தஹதி - நம்பிக்கையும், ய - மற்றும், சரித்தஜே - ஒழுக்கத்தில் ஆகும். தோஸே - குற்றங்களை, பரிஹரதி - உயிர் நீக்குகிறது. எ-று.

1. பாடபேதம் 1 — மிச்சத்தா புத்தி தோஸேண

(க-ரை) : உயிர் நற்காட்சியால் பார்க்கிறது. நல்லறிவால் அறிகிறது. நல் மெய்ம்மையால் நம்புகிறது மற்றும் ஒழுக்க குறைபாடுகளை நீக்குகிறது.

(வி-ரை) : பொருள் குண பையைகளை (பர்யாயம்) உடையது. என்றும் நிலைத்திருப்பது. அப்பொருளை உள்ளவாறு பார்த்தலும் அறிதலும் செய்யும் போது ஒழுக்கத்தில் தூய்மை அமைகிறது. பார்த்தலும் அறிதலும் கூடியது ஒழுக்கம் என முன்னே (காதை 3) ஆசாரியர் சுட்டியுள்ளார். இங்கே "தம்ஸண" என்ற சொல் "காணுகை" என்னும் பொருள் உடையது. பொருள் பற்றிய அறிவு தோன்றுதற்கு முன் அப்பொருளின் இருப்புப் பற்றிய பொது உணர்வு தோன்றுவது காணுகை ஆகும். இதனை "நிராகர" வடிவம் என்பர். அப்படிக் கண்ட பொருளை "இது" என அறிதல் அறிவு ஆகும். இதனை "சாகார" வடிவம் என்பர். அதனால் பொருளை அறிவதில் நிகழ்வு முறை அமைகிறது எனத் தெளியலாம். இந்த நிகழ்வு முறை வினை வயப்பட்ட உயிர்களுக்கு அமைகிறது. ஆனால் அருகருக்கு இரண்டும் ஒரே காலத்தில் அமைகின்றன.

பொருளை உள்ளவாறு அறியும் மெய்ம்மையால் அப்பொருள் மீது நம்பிக்கை அமைகிறது. அதுமெய் நம்பிக்கை ஆகும். அந்த மெய் நம்பிக்கையால் நல்லொழுக்கத்தில் குறைகள் - குற்றங்கள் இல்லாமல் களையப்படுகின்றன.

உயிர், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாயம், காலம் இவை பொருள்கள். அவை பையைகளை (பரியாயங்களை) உடையவை. உயிரின் தூய பையை சித்த நிலை ஆகும்; முழுதுணர் நிலையாகும். உயிரின் தூய்மை அற்ற பையை நாரகன் முதலான நிலைகளும் வெகுளி, மானம், மாயை, உலோபம், புண்ணியம், பாபம் முதலான பல நிலைகளாகும். இவற்றை விபாவ (திரிபு) நிலை என்பர்.

புற்கலம் ஊறு, சுவை, மணம், நிறப்பண்புகளுடைய உருவப் பொருளாகும். அவற்றில் வேறுபாடு நிலைகள் தோன்றுவதும், அணு அணுத்திரள்கள் முதலான அமைவதும், ஒலித்தல், கட்டுதல் முதலான நிலைகள் அமைவதும் பையைகள் (மாறுகை) ஆகும்.

தன்மமும் அதன்மமும், பொருள்கள் முறையே நிற்கவும், செல்லவும் உதவும் பையைகளை உடையன. ஆகாயம் எல்லாப் பொருள்களும் தங்க இடம் தருவதாகும். காலம் பொருளில் நிகழும் மாறுகைகளுக்கு உதவும் நிமித்தமாகும். அது சமயம் முதலாக அமைவது பரியாயம் ஆகும். அதனை வியவஹார காலம் என்பர். இப்படிப் பொருள்களின் இயல்பு ஆகமங்களில் எப்படிக் கூறப்பட்டுள்ளதோ அப்படியே காணுதல் அறிதல் நம்புதல் வேண்டும். அதனால் தூய ஒழுக்கம் அமைகிறது. நல் அறிவும் நல் நம்பிக்கையும் இல்லாமல் ஒழுக்கத்தில் தூய்மை அமையாது.

முன் காதையில் பொய் நம்பிக்கையில் உயிர் நிகழக் காரணம் காட்டினார். இக்காதையில் மெய் நம்பிக்கையில் உயிர் நிகழ வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

19. ஏஏ திண்ணி விபாவா ஹவந்தி ஜீவஸ்ஸ மோஹரஹியஸ்ஸ|
ணியகுண மாராஹந்தோ அவிரேண ய கம்ம பரிஹரஇ||

(ப-ரை) : மோஹரஹியஸ்ஸ - மோகம் இல்லா, ஜீவஸ்ஸ - உயிர்களிடத்தில், ஏஏ - அந்த, திண்ணி வி பாவா - "பாவங்கள்" (உணர்வுகள்) மூன்றும், ஹவந்தி - உள்ளன, ய - மற்றும், ணியகுணம் - அந்த உயிர் தன் இயல்பான அக் குணங்களை ஆராஹந்தோ - ஆராதனை செய்யும்போது, அவிரேண -வெகு விரைவில், கம்ம - வினைகளை, பரிஹர- அழிக்கிறது. எ-று.

(க-ரை) : மோகம் இல்லாத உயிரிடத்தில் நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் எனும் மூன்று உணர்வுகளும் உள்ளன. அவ்வுணர்வுகளை உடைய தன் ஆன்மா இயல்பை ஆராதிக்கும் உயிர் வெகு விரையில் வினைகளைக் கெடுத்து வீடுபேறு அடைகிறது.

(வி-ரை) : "மோஹ" என்ற சொல் தரிசன மோஹத்தைக் குறிக்கிறது. அதாவது பொய் நம்பிக்கை. அந்தப் பொய் நம்பிக்கையைக் கைவிடும் போது உயிரில் நல் நம்பிக்கை வெளிப்படுகிறது. அதனால் நல்லறிவும் நல்லொழுக்கமும் தொடர்கின்றன. இந்த மும்மணி உயிரின் இயல்பாகும். வெளிப்பட்டு நிற்கும் இம் மும்மணி உணர்வை நிலைப்படுத்துதல் வேண்டும்: வாழ்வில் வெளிப்படுத்தல் வேண்டும். அதுவே ஆராதனை ஆகும். தன் தூய ஆன்மாவில் மும்மணியை நிலைப்படுத்தும் உயிர் விரைந்து வினைகளைக் கெடுத்து வீடுபேறு அடைகிறது.

20. ஸங்கிஜ்ஜ மஸங்கிஜ்ஜ குணம் ச[1]ஸம்ஸாரி மேருமத்தா ணம்|
ஸம்மத்த மணுசரந்தா கரேந்தி துக்கக் கயம் தீரா||

(ப-ரை) : ஸம்மத்தம் - நற்காட்சியில், அணுசரந்தா - ஒழுகும், தீரா - வீரர், ஸம்ஸாரி - பிறவி உயிர்கள் (கட்டும்), மேருமத்தாணம் - மேரு அன்ன வினைகளை, ஸங்கிஜ்ஜம் குணம் - எண்ணுடை மடங்கு, ச - மற்றும், அஸங்கிஜ்ஜ குணம் - எண்ணற்ற (அயங்கியம்) மடங்கு முறையில் அழித்து, துக்கக் கயம் - பிறவியின் அழிவை, கரந்தி - செய்கின்றனர். எ-று.

(க-ரை) : நற்காட்சியில் ஒழுகும் வீரர் பிறவி நிலையில் கட்டப்படும் மேரு அன்ன வினைகளை எண்ணுடை மடங்கு, எண்ணற்ற மடங்கு முறையில் அழிப்பதோடு பிறவித் துன்பங்களையும் அழிக்கின்றனர்.

பாடபேதம் 1 — ஸம்ஸாரி மேருமித்தா

(வி-ரை) : மும்மணியுடன் கூடிய உயிர் பிறவி நிலையில் கட்டும் வினைகளை மடங்கு மடங்காக, முறையாக உதிர்த்து பிறவியையும் முடிக்கிறது என நல்லொழுக்கத்தின் சிறப்பைச் சுட்டுகிறார்.

நல்லொழுக்கத்தை இரண்டு வகை (காதை 5) என்றார். முதலில் மெய்க்காட்சி ஒழுக்கம் தொடங்குகிறது. நற்காட்சி பெற்றவுடன் முன் கட்டிய வினைகளை முறையாக அழிக்கின்றன. நல்லொழுக்கச் சிறப்பால், உயிர்கள், அந்த வினைகள் மடங்கு முறையில் உதிர்த்தலை ஆசாரியர் இங்குச் சுட்டியுள்ளார். முன் காதையில் விரைந்து நற்காட்சி உயிர் வினைகளைக் கெடுக்கிறது என்றார். அவ்வினைகள் கெடுகை முறை எப்படி அமைகிறது என இங்கே சுட்டுகிறார்.

நற்காட்சி ஒழுக்கம் தொடங்கிய பின் நற்காட்சியுடைய உயிர், வினைகளை எண்ணுடை மடங்கு முறையில் சமயந்தோறும் அழிக்கிறது. அதனால் "ஸங்கிஜ்ஜ குணம்" என்றார். இங்கே "குணம்" என்றால் மடங்கு என்று பொருள். எண்ணத் தக்க மடங்குகளாக அழிக்கிறது என்று பொருள். பிறகு "சையம" (உயிர்) ஒழுக்கத்தை ஏற்கும் போது வினைகளை எண்ணிக்கை இல்லா மடங்குகளாக உதிர்க்கிறது, உயிர். குணத்தான படி நிலையில் ஏறும் போது ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றில் வினைகள் அழிவை இந்த முறையில் பெருக்கிக் கொண்டே போகிறது. அதனைச் சுட்ட "அஸங்கஜ்ஜ குணம்" என்றார். வினைகளது இந்த உதிர்தல் மடங்கு முறையை "குணசிரேணி நிர்ஜரை" என்பர்.

21. துவிஹம் ஸஞ்சம சரணம் ஸாயாரம் தஹ ஹவே ணிராயாரம்|
ஸாயாரம் ஸக்கந்தே பரிக்கஹா ரஹிய களு ணிராயாரம்||

(ப-ரை) : ஸஞ்சம சரணம் - உயிர்நோக்கும் ஒழுக்கம், ஸாயாரம் - இல்வாழ்தல், தஹ - மற்றும், ணிராயாரம் - இல்துறத்தல் என, துவிஹம் - இருவகை, ஹவே - ஆகும். ஸக்கந்தே - பற்றுடன் இருத்தல், ஸாயாரம் - இல்வாழ்தல், களு - அடுத்து, பரிக்கஹாரஹிய - பற்றுவிட்டு இருத்தல், ணிராயாரம் - இல்துறத்தல் ஆகும். எ-று.

(க-ரை) : சையம ஒழுக்கம் (உயிர் ஒழுக்கம்) பற்றுடன் இல்லின்கண் வாழ்தல், பற்று இன்றி இல்துறந்து வாழ்தல் என இரு வகைப்படும்.

(வி-ரை) : முன்பு அறிவும் காட்சியும் ஒன்றுதல் ஒழுக்கம் என்றார் (காதை 3). அவ்வொழுக்கம் மெய்க்காட்சி ஒழுக்கம் (தரிசன சாரித்ரம்) உள்ளடங்கு அல்லது உயிர்நோக்கு ஒழுக்கம் (ஸம்யமாசரண சாரித்ரம்) என இரு கூறுபடும் என்றார் (காதை 5). இதுவரை மெய்க்காட்சி ஒழுக்கம் பற்றி விளக்கினார். அடுத்து, உயிர்நோக்கு ஒழுக்கம் பற்றி விளக்கத் தொடங்குகிறார். அந்த உயிர் நோக்கமும் இரண்டு வகையாக அமைகிறது என இங்குச் சுட்டுகிறார். ஒன்று பற்றுடன் கூடி இல்லின் கண் இருந்து

ஒழுகுதல், அது "ஸாயாரம்" என்றார். மற்றொன்று பற்றுகள் இன்றி இல் துறந்து ஒழுகுதல். அது "ணிராயாரம்" என்றார். "ஆயார" என்றால் வீடு - இல்லம்.

இல்லின் கண் இருந்து அக ஒழுக்கம் மேற்கொள்ளுதலை இல்லற ஒழுக்கம் என்றும், இல் துறந்து அக ஒழுக்கம் மேற்கொள்ளுதலைத் துறவு ஒழுக்கம் என்றும் குறிப்பர். அக ஒழுக்கத்தை ஆசாரியர் இரண்டு வகையாகக் காட்டுகிறார். ஆனால் நற்காட்சி தோன்றிய பிறகுதான் இந்த இரண்டு வகையான ஒழுக்கமும் அமைகிறது என்பது தெளிவு. இல்லின் கண் இருந்து ஒழுகுதல் வேறு. இல்லின்கண் இருந்து உயிர்நோக்கு அல்லது உள்ளடங்கு ஒழுக்கத்தில் ஒழுகுதல் வேறு. முன்னது பொய் நம்பிக்கையுடன் ஒழுகுதல். அது பிறவிக்கு ஏதுவாகும். பின்னது நல் நம்பிக்கையுடன் ஒழுகுதலாகும். அது காலப்போக்கில் துறவு ஒழுக்கத்துக்குத் துணை செய்வதாகும். இதனைப்படி நிலையாகக் கருதாமல் உயிரின் தகுதி நிலையாகக் கருதுதல் வேண்டும். அதாவது இந்த வகைப்பாடு படி நிலை நோக்கில் அமைந்தது அன்று: உயிரின் தகுதி நோக்கில் அமைந்ததாகும். நற்காட்சி பெற்றவுடன் நேரே இல் துறந்து துறவு ஏற்கவும் முடியும். அல்லது துறவு ஏற்காமல் இல்லின்கண் இருந்தும் ஒழுகவும் கூடும். அல்லது இல்லின்கண் ஒழுகிப் பிறகு துறவு ஏற்கவும் கூடும். அதனால் உயிரின் தகுதி அடிப்படையில் இவ் வகைப்பாட்டை நோக்க வேண்டும். பரதரின் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஒருசேர அதே பிறவியில் துறவு ஏற்று வீடு பேறுபெற்றனர் என்பதனை நினைவு கூர்க. அது அந்த உயிர்களின் தனித் தகுதி ஆகும்.

22. தம்ஸண வய ஸாமாஇய போசஹ ஸசித்த ராயபத்தே ய|
பம்பாரம்ப பரிக்கஹ அணுமண உத்திட்ட தேஸவிரதோ ய||

(ப-ரை) : தம்ஸண - காட்சி, வய - வதம், ஸாமாஇய - ஸாமாயிகம், போசஹ - போசதம், ஸசித்த - அசித்தம், ய - மேலும், ராயபத்தே - இரவு உணவு இல்லாமை, பம்ம - பிரமசரியம், ஆரம்ப - ஆரம்பம் இன்மை, பரிக்கஹ - பற்று இன்மை, அணுமண - உடன்படாமை, ய - மேலும், உத்திட்ட - உத்திட்டம், என இவை பதினொன்றும், தேசவிரதோ - அணுவதமாகும். எ-று.

(க-ரை) : காட்சி, வதம், ஸாமாயிகம், போசதம், அசித்தம், இரவு உணவு இல்லாமை, பிரமசரியம், ஆரம்பம் இன்மை, பற்று இன்மை, உடன்படாமை, உத்திட்டம் என அணுவதம் பதினொருபடி நிலைகளை உடையதாம்.

(வி-ரை) : இல்லின் கண் இருந்து ஓம்பும் பற்றுடை அற ஒழுக்கம் பதினோரு படி நிலைகளாக உள்ளது என்று அவற்றின் பெயர்களை மட்டும் இங்குக் குறிப்பிட்டுள்ளார். இவை பற்றி அவர் விளக்க வில்லை. பிற இல்லற ஒழுக்க நூல்களில் இவற்றின் வருணனை விரிவாகக் காணப்படுவதினால் விளக்காது விட்டார் போலும்.

1. காட்சி நிலை : நற்காட்சியில் உறுதியுடன் இருக்கும் நிலை. இந்த நிலையில் அகிம்சை முதலான நோன்பு ஏற்கவில்லை என்றாலும் எட்டு மூல குணங்கள் போற்றப்படும்.

2. வத நிலை : நோன்பு ஏற்கும் நிலை : அணுவிரதம், குணவிரதம், சிக்கை விரதம் என 12 நோன்புகளை ஏற்று நிற்கும் நிலை.

3. ஸாமாயிகம் நிலை : மூன்று சந்திப் போதுகளில் (ஸந்த்யா காலம்) மனமொழி உடல் ஒருங்குபட்டு சம உணர்வுடன் ஆன்ம தியானம் செய்யும் நிலை.

4. போசத நிலை : "போசதம்" எனில் ஒரு வேளை உண்ணல் என்று பொருள். இந்த நிலையில் முன் நாளும் பின் நாளும் ஒரு வேளை உண்டு இடையில் ஒரு நாள் உண்ணாது நோற்பது. அதனால் இந்த நிலை "போசத உபவாச" நிலை எனப்படும். அட்டமி. சதுர்தசி நாள்களில் "உபவாசம்" இருப்பர். அல்லது தன் ஆற்றலுக்கு ஏற்ப ஒரு வேளை உண்டோ அல்லது சுவையற்ற உணவு கொண்டோ நோற்பர். புலன்களில் சிந்தை புகாமல் தடுத்து நோற்கும் நிலை இது.

5. அசித்த நிலை : "சித்த" எனில் உயிர். "அசித்த" எனில் உயிரற்றது. இந்த நிலையில் பழம், நீர் முதலானவை பச்சையாக உண்ணப்படுவதில்லை. பக்குவப்படுத்தி அதாவது சூடு செய்து அல்லது காய வைத்து உயிரற்றதாக ஆக்கி உண்ணும் நிலை இது.

6. இரவு உணவு இல்லாமை : இரவு உண்ணாமை முதல் நிலையிலேயே ஏற்கப்படுகிறது. இந்த நிலையில் பிறருக்கு உண்பித்தலையும் செய்தல் இல்லை. "பகல் போகம் நீக்கல்" எனும் பெயரும் இதற்கு உண்டு.

7. பிரம்மசரியம் : இந்த நிலையில் முழு பிரம்மசரியம் ஏற்கப்படுகிறது. ஐந்துபொறிகளும் அடங்கும் நிலை இது.

8. ஆரம்பம் இன்மை : "ஆரம்பம்" எனில் இமிசைக்கு ஏதுவான செயல்கள். அச்செயல்களிலிருந்து முற்றுமாக விலகி நிற்கும் நிலை இது.

9. பற்று இன்மை : பற்று அகப்பற்று, புறப்பற்று என இரு வகைப்படும். அப்பற்றுகளில் ஊக்கம் காட்டாது விலகி நிற்கும் நிலை இது.

10. உடன்பாடு இன்மை : தான் விலகி நின்றாலும் இல்லற வாழ்வில் இருப்பதால் தொழில் முதலான குறித்து குடும்பத்தார் கேட்கும் போது அறிவுரை தந்துவந்தார். இந்த நிலையில் அதனையும் நீக்கி உலகத் தொடர்புகளில் தன்னை உடன்படுத்திக் கொள்ளார்.

11. உத்திட்ட பிண்ட வதம் : "உத்திட்ட" எனில் தனக்குக் குறிப்பிட்டு செய்வது என்று பொருள். தனக்கு எனச் செய்யும் உணவு முதலானவற்றை ஏற்காத நிலை. இந்த நிலையில் இல்லத்திலிருந்து விலகி மாதவர் சங்கத்தில் சேர்தலாகும்.

இவற்றுள் முதல் ஆறு நிலைகள் கடை (ஜகன்யம்) : ஏழு, எட்டு, ஒன்பது இடை (மத்யமம்): பத்து பதினொன்று தலை (உத்தமம்) நிலை என்பர். இந்தப் பதினொரு நிலைகளும் கைக்கொள்ளும் அகஒழுக்க நிலைக்கு ஏற்ப அமைவன.

23. பஞ்சேவ ணுவ்வயாஇம் குணவ்வயாஇம் ஹவந்தி தஹ திண்ணி|
ஸிக்காவய சத்தாரி ய ஸஞ்சம சரணம் ச ஸாயாரம்||

(ப-ரை) : ஸாயாரம் - இல்லின்கண் இருத்தலான, ஸஞ்சம சரணம் - உயிர்நோக்கு ஒழுக்கத்தில், பஞ்சேவ - ஐந்தாகும், அணுவ்வயாஇம் - அணுவிரதங்களும், தஹ - மேலும். திண்ணி - மூன்றாகும். குணவ்வயாஇம் - குண விரதங்களும், ய - மேலும், சத்தாரி - நான்காகும், ஸிக்காவய - சிக்கை விரதங்களும், ஹவந்தி - உள்ளன ஆகும். எ-று.

(க-ரை) : இல்லற ஒழுக்கம் ஐந்து அணு விரங்கள், மூன்று குண விரதங்கள், நான்கு சிக்கை விரதங்கள் என பன்னிரெண்டு வதங்களை உள்ளடக்கியதாம்.

(வி-ரை) : முன் காதையில் பதினோரு படி நிலைகள் பெயரை மட்டும் குறிப்பிட்டார். பன்னிரெண்டு விரதங்கள் இவை என்று இங்கே குறிப்பிட்டுள்ளார். முதல் நிலை காட்சி நிலை ஆகும். அங்கு எப்படி இந்த வதங்கள் பொருந்தும் என வினா எழலாம். "அணு" எனில் சிறிது என்று பொருள். அதனால் இந்த அணு விரதங்களில் சிறிது முதல் நிலையிலும் அமைகிறது. அதனால் முதல் நிலையும் அணு விரத நிலை எனக் கொள்ளலாம். முதல் நிலையில் நற்காட்சி மட்டும் உண்டு. அணுவிரதம் இல்லை. அதனால் அவிரதம் எனப்படுகிறது. என்றாலும், அங்கு அணுவிரதத்தில் அதிசாரம் காணப்படுவதால் அது விரதம் எனச் சுட்டப்படாமல் அவிரதம் எனப்பட்டது என்பர். இரண்டாம் நிலையில் அதிசாரம் இல்லாமல் போற்றப்படுவதால் விரத நிலை எனச் சுட்டப்பட்டது. முதல் நிலையில் அதிசாரம் இல்லாத நற்காட்சி முதன்மை ஆவதால் காட்சி (நம்பிக்கை) நிலை எனப்பட்டது. வேறு வேறு வகையாக இந்ந நிலை விளக்கப்பட்டாலும் அவை முரண் உடையன அல்ல. விளக்கும் முறை வேறுபாடு என்று கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக மூல குணம் என்பதற்கு வேறு வேறு விளக்கங்கள் காணப்படுதல். அவை எல்லாம் ஐந்து அணுவிரதங்களை அடிப்படையாக உடையன என உய்த்துணரலாம். அதனால் முதல் நிலையும் அணுவிரத நிலை எனக் கொள்ளல் வேண்டும். அதனால் தான் இல்லின் கண் இருக்கும் உயிர் நோக்கு ஒழுக்கத்தில் (ஸாகார ஸய்யம ஆசரணத்தில்) இதுவும் எண்ணப்பட்டுள்ளது.

24. தூலே தஸகாயவஹே தூலே மோஷே அதத்ததூலே ய|
பரிஹாரோ பரமஹிளா பரிக்கஹாரம்ப பரிமாணம்||

(ப-ரை) : தூலே தஸகாய - பெரிய இயங்குயிர், வஹே - கொலை, தூலே மோஷே - பெரிய பொய், அதத்த தூலே - பெரிய களவு, பரமஹிளா - பிற பெண்டிர், பரிஹாரோ - இவற்றை விலக்குதலும், ய - மற்றும், பரிக்கஹ - பற்று, ஆரம்ப - ஆரம்பம், பரிமாணம் - இவற்றில் வரம்பு கட்டுதலும், என ஐந்து அணுவிரதங்களாம். எ-று.

(க-ரை) : கொலை, பொய், களவு, பிறர் மனை இவற்றை விலக்குதலும், பற்று, ஆரம்பம் இவற்றில் வரம்பு கட்டுதலும் என இவை ஐந்து அணு வதங்களாகும்.

(வி-ரை) : ஆசாரியர் "தூல" என்ற சொல்லை ஆண்டுள்ளார். "தூல" எனில் பருமை. பெரிது என்று பொருள். அருங்கலச்செப்பு "பெரிய" என்ற சொல்லை ஆளுகிறது. இதன் கருத்து என்ன வென்றால் தனக்கும் பிறருக்கும் / பிறவற்றுக்கும் இறப்பு நேரக் கூடிய, தன் குடும்பம் பிற குடும்பம் கெடக் கூடிய, அரச தண்டனைக் குரிய, ஊராட்சி தண்டனைக் குரிய, அறமல்லாத பாபங்கள் என்பதாம் என்பர்.

"தஸகாயம்" எனில் இயங்குயிர். இரண்டு பொறி முதலான உடைய உயிர்கள். "அதத்த" எனில் கொடாதது. கொடாத பொருளைக் கொள்ளுதல் களவு ஆகும். "பரிக்கஹ" எனில் பற்று, இங்கே புறப்பற்றுக்களைக் குறித்தது எனலாம். "ஆரம்பம்" எனில் இமிசை நிகழக்கூடிய உழவு வாணிபம் முதலான தொழில்கள். இவற்றைப் பயன் கொள்ள வரம்பு கட்டுதல். மிகு பொருள் விரும்பாமை என்றும் சுட்டுவர். ஆசாரியர் உடைமைக்கும் தொழிலுக்கும் வரம்பு கட்டுதல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். உடைமை என்பது துய்ப்புக்கு உரியது. தொழில் அவ்வுடைமைக்குக் காரணமாவது. உடைமையில் வேட்கை உணர்வும், தொழிலில் இமிசை உணர்வும் உள்ளன என அறிதல் வேண்டும்.

ஐந்தாகக் கூறப்பட்டுள்ளவற்றில் நான்கு விடத்தக்கவை. ஒன்று வரம்புடன் செய்யத் தக்கது. விடத்தக்கன வற்றை தண்டனை அச்சம் அல்லது வேறு காரணங்கள் நிமித்தமாக விடுதல் விரதம் ஆகாது. இது மிகு துவர்ப்புணர்வு (கஷாயம்) காரணமாகி கரும வினைக் கட்டுக்குக் காரணம் என்று தான் அறிந்து தானே விலக்குதல் வதம் / விரதம் ஆகும்.

இவை ஒவ்வொன்று பற்றியும் "அருங்கலச்செப்பு". "பதார்த்த சாரம்" முதலான நூல்களில் விரிவாகக் காணலாம்.

25. திஸிவிதிஸி மாணம்படமம் அணத்த தண்டஸ்ஸ வஜ்ஜணம் விதியம்|
போகோபபோக பரிமானம் இயமேவ குணவ்வயா திண்ணி||

(ப-ரை) : திஸி - திசை. விதிஸி - கோண திசை. மாணம் - எல்லை கட்டுதல். படமம் - முதல் குண வதம். அணத்த தண்டஸ்ஸ - அனர்த்த தண்டம். வஜ்ஜணம் - விடுதல், விதியம் - இரண்டாம் குணவதம், போகோபபோக - போக, உபபோகம், பரிமாணம் - வரம்பு கட்டுதல், இயமேவ - இவையே, குணவ்வயா - குணவதங்கள், திண்ணி - மூன்று. எ-று.

(க-ரை) : திசை, விதிசை எல்லை வரைதல். அனர்த்த தண்டம் விடுதல், போக உபபோகங்களுக்கு வரம்பு கட்டுதல் இவை மூன்றும் குண வதங்களாகும்.

(வி-ரை) : இங்கே "குணம்" என்ற சொல் உதவுதல் என்ற பொருளை உடையது. ஐந்து அணுவதங்களுக்கு இவை உதவுவதால் - துணை செய்வதால் குண வதங்கள் எனப்படுகின்றன.

திசை, கோண திசைகளில் போகவர எல்லை கட்டுதல் முதல் குண வதம், "அணத்தம்" எனில் வீண் - பயனற்றது; "தண்ட" எனில் உயிருக்கு இன்னா செய்தல். உயிருக்கு ஊறு செய்யும் தனக்குப் பயனற்ற செயலைச் செய்யாது விடுதல் "அணத்த தண்ட" வதமாகும். வீணான அல்லது பயனற்ற செயல் யார் செய்வர்? என வினவலாம். நற்காட்சியுடைய இல்லறத்தார் தாம் ஏற்றுள்ள ஒழுக்க நிலைக்குத் தக்கனவற்றை மட்டுமே செய்வார். பிற எல்லாம் அவருக்கு வீணே. அவற்றைச் செய்யாமல் விடும் போது அவற்றால் உயிர்களுக்கு ஏற்படும் ஊறு தவிர்க்கப்படுகிறது. அதனால் பாபம் வராமல் காக்கப்படுகிறது. போகம் - ஒரு முறை துய்த்தல்; உபபோகம் - மீண்டும் மீண்டும் அதனையே துய்த்தல். உணவு போன்றவை போகப் பொருள்கள்; ஆடை, அணிகள், ஊர்தி போன்றவை உபயோகப் பொருள்கள்.

இம்மூன்று வதங்களுள் இரண்டை வரம்பு கட்டிப் பயன்கொள்ளல் வேண்டும்; ஒன்றைச் செய்யாது விலக்கல் வேண்டும். முதலும் கடைசியும் வரம்புக்குரியன. இடையில் நின்றது விலக்கத் தக்கது.

26. ஸாமாஇயம் ச படமம் விதியம் ச தஹேவ போஸஹம் பணியம்|
தஇயம் ச அதிஹிபுஜ்ஜம் சஉத்த ஸல்லேஹணா அந்தே||

(ப-ரை) : படமம் - முதல், ஸாமாஇயம் - சாமாயிகம், தஹேவ - அதேபோல, போஸஹம் - போசத வதம், விதயம் ச - இரண்டாவது, தஇயம் - மூன்றாவது, அதிஹிபுஜ்ஜம் - அதிதி போற்றுதல், ச - மேலும், சஉத்த - நான்காவது, அந்தே - கடைசி காலத்தில் எடுக்கப்படும், ஸல்லேஹணா - சல்லேகனை, பணியம் - சிக்கை வதம் எனச் சொல்லப்பட்டுள்ளது.

(க-ரை) : சாமாயிகம், போசத வதம், அதிதி போற்றல் கடைசி சல்லேகனை இவை நான்கும் சிக்கை வதம் எனச் சொல்லப்பட்டுள்ளது.

(வி-ரை) : "ஸிக்கா" எனில் "சிக்ஷை". அதாவது பயிற்சி என்று பொருள். முனிவர் நிலைக்கு உயரக் கூடியவருக்குப் பயிற்சி தருவன இந் நான்கும் என்று குறிப்புடையது ஆகும் இந்த வதம்.

"ஸமய" எனில் ஒன்றி இருத்தல். மனம் மொழி அடக்கத்துடன் தன் ஆன்மாவில் ஒன்றிப் போதல் "ஸாமாயிகம்" ஆகும். விருப்பு வெறுப்பு இன்றி தன் ஆன்ம இயல்பைச் சிந்தனை செய்தல், பஞ்ச பரமேட்டிகள் பக்தி பாடம் சொல்லுதல், அவரைத் துதித்தல் / வணங்குதல் ஸாமாயிகம் ஆகும். இது விடியல் காலை, நடுப்பகல், மாலை என மூன்று சந்தி வேளைகளில் குறிப்பிட்ட காலம் வரை தனி இடத்தில் அமர்ந்து செய்யப்படுகிறது.

"தனியன் உடம்பிது வேற்றுமை சுற்றம்
இனைய நினைக்கப் படும்"[1]

"தனக்கும் பிறர்க்கும் உறுதிச் சொல் செய்கை
மனத்தினில் சிந்திக்கற் பாற்று"[2]

"கூடியவை எல்லாம் பிரிவனவாம் கூடின்மை
கேடின்மை சிந்திக்கற் பாற்று"

என வரும் அருங்கலச் செப்பு பாடல்களால் "சாமாயிக" கால சிந்தனைகளைப் பற்றி அறியலாம்.[3]

"போசத" உபவாசம் அட்டமி, சதுர்தசி நாள்களில் போற்றப்படுகிறது. அப்போது அற நிகழ்வுகளில் நிகழ உறுதி கொள்ளப்படுகிறது. உலகச் செயல்களிலிருந்து ஒதுங்கி செய்யப்படுகின்றது. இது தலை, இடை, கடை என மூவகைப்படுகிறது.

"அதிதி" போற்றுதல் என்பது முனிவருக்கு உணவு அளித்தல் என்பதாம். "அதிதி" எனில் நாள் குறிப்பிட்டு வராதவர் என்று பொருள். முனிவர் இன்று வருவார் என்று நாள் குறித்தல் இல்லை. அதனால் அவர் "அதிதி" எனப்படுகிறார். அவருக்கு ஒன்பது பக்தியுடனும் ஏழு குணத்துடனும் உணவு வழங்குதல் "அதிதி பூஜை" ஆகும். உணவு வழங்கும் சாவகர் உணவு ஏற்கும் பாத்திரத்திடம் (முனிவரிடம்) மிகு ஈடுபாடும், முனிவரைக் கண்டவுடன் மகிழ்வும், முனிவரிடம் பக்தியும், இடம், பொருள், காலம், பாவம் குறித்து அறிவு கூர்மையும், உணவு வழங்குவதற்குப் பயனாக இன்பங்களை வேண்டாமையும், உணவு வழங்கும் காலத்தில் பொறுமையும், தன் ஆற்றலை மறைக்காது உணவு வழங்கலும் என இவை ஏழு குணங்கள் ஆகும். இப்படி உணவு வழங்குதலை "அதிதி சம்விபாகம்" என்றும் குறிப்பர்.

கடைசி காலத்தில் உடலையும் துவர்ப்பு (கசாய) உணர்வுகளையும் வாட விடுதல் - மெலியச் செய்தல் - சல்லேகனை ஆகும். இது முதுமை காலத்தில்

---

1. அருங்கலச்செப்பு — 112, 2. அருங்கலச்செப்பு — 116 3. அருங்கலச்செப்பு — 119.

செய்யப்படுகிறது, இது நீக்குதற்கு அறிய இன்னல் (உபசர்கம்) பஞ்சம், கடும் பிணி முதலான வேறு காரணங்களை எதிர் கொள்ளும் போதும் மேற்கொள்ளப்படுகிறது.

"இடையூறு ஒழிவில் நோய் மூப்பிவை வந்தால்
கடைதுறத்தல் சல்லே கனை"[1]

என "அருங்கலச்செப்பு" கூறுகிறது,

"எல்லாப் படியும் விலக்கப் படாதெரியா
இல்லம் அழியில் அதனகத்தில் - நல்ல
பொருள்கொண்டு போவான்போல் சாம்போது பற்றற்று
அருள்கொண்டு போதல் அறம்"

எனவரும் பாடல் சல்லேகனை ஏற்பாரின் மன நிலையை விளக்குதலைக் காணலாம்.[2]

இறப்பு இனி தவிர்க்க முடியாது எனும் நிலை தோன்றும் போது எல்லாப் பற்றுகளை நீக்கி, அனைவரிடமும் மன்னிப்பு வேண்டிக் கொண்டு, குருவிடம் தன் குற்றங்களை எல்லாம் மறைக்காமல் கூறி, அவர் காட்டும் வழியில் முறையே, அன்னம், பால், மோர், நீர் இவற்றை நீக்கி பஞ்ச மந்திரத்தை ஜபம் செய்து கொண்டு உயிர் விடுதல் "சல்லேகனை" ஆகும்.

அருங்கலச்செப்பு திசை வதம், அனர்த்த தண்ட வதம், போக உபபோக பரிமாணம் மூன்றையும் குண வதமாகக் குறிப்பிடுகிறது. ஆசாரிய குந்த குந்தர் நூல் வழி அமைகிறது அது. ஆனால் "தத்வார்த்த சூத்திரம்" போக உபபோக வதத்தை சிக்கை விரதத்தில் அடக்கி உள்ளது.[3] ஸல்லேகனையைத் தனியாக அமைந்துள்ளது. அருங்கலச்செப்பும், சல்லேகனையைத் தனியாகக் கூறுகிறது. சிக்கை வதத்தில் "தேசாவகாசிகம்" குறிக்கிறது.[4] திசை வரைதலில் அது அடங்கிப் போவதால் ஆசாரியர் குந்த குந்தர் அதனைத் தனிப்படுத்தாது சல்லேகனையை சிக்கை வதத்தில் அடக்கினார் போலும். இரண்டுக்கும் முரண் இல்லை. பிற்கால ஆசாரியர் விரிவு கருதி வகுத்துக் கொண்ட நெறி எனலாம்.

27. ஏவம் ஸாவய தம்மம் ஸஞ்ஜம சரணம் உதேஸியம் ஸயலம்|
ஸுத்தம் ஸஞ்ஜம சரணம் ஜஇ தம்மம் ணிக்கலம் வோச்சே||

(ப-ரை) : ஏவம் - இப்படி, ஸாவய - சாவக, தம்மம் - அறமான, ஸஞ்ஜம சரணம் - உயிர்நோக்கு (சையம) ஒழுக்கம், ஸயலம் - சிறியது என, உதேஸியம் - கூறப்பட்டது: இனி, ஸுத்தம் - தூய்மையும், ணிக்கலம் - முழுமையுமான, ஸஞ்ஜம சரணம் - சையம தருமமான, ஜஇ - யதி, தம்மம் - அறம், வோச்சே - சொல்வன். எ-று.

1. அருங்கலச்செப்பு — 145.
2. நீலகேசி 321 மேற்கோள்
3. தத்வார்த்தசூத்திரம் — 7/21
4. அருங்கலச்செப்பு — 129

(க-ரை) : சாவக அறமான சையம ஒழுக்கம் சிறியது எனக் கூறப்பட்டது. இனி தூய முழுமையான சையம தருமமான முனிவர் தருமம் சொல்வன்.

(வி-ரை) : ஆசாரியர் சாவகர் சையம ஒழுக்கம் பகுதிபட்டது, சிறியது என்றார். அதாவது சாவகர் ஒழுகும் சையமம் அணுவதம் என்பதாம். "ஸயலம்" என்ற சொல் சிறிது, துண்டு எனும் பொருளுடையது. அவ்வொழுக்கம் சிறு ஒழுக்கம்; முழு ஒழுக்கம் அன்று என அச்சொல் வழி உணர வைக்கிறார். அதனை அணுவதம் என நூல்கள் சுட்டுகின்றன.

அடுத்து முனிவர் ஒழுக்கம் சுட்டும் போது "ஸுத்தம்" என்றும் "ணிக்கலம்" என்றும் குறிப்பிடுகிறார். "ஸுத்தம்" எனில் தூய்மை. பாபச் செயல் இன்மை தூய்மை ஆகும். இதனால் சாவக நிலையில் "பாபம்" உண்டு என குறிப்பாக உணர வைத்தார். முனிவர் ஒழுக்கத்தில் அணு அளவும் பாபம் இல்லை என்பது கருத்து. "ணிக்கலம்" எனில் - பகுதி / கூறு இன்மை, அதாவது முழுமை என்பதாம். யதி ஒழுக்கம் கூறுபடா ஒழுக்கம் - முழு ஒழுக்கம்.

"**குறைந்தூஉம் முற்ற நிறைந்ததூஉ மாக**
அறைந்தார் ஒழுக்கம் இரண்டு"

என அருங்கலச்செப்பு இலக்கணம் சுட்டுகிறது.[1]

சாவக ஒழுக்கம் பற்றி ஆசாரியர் அடிப்படை ஒழுக்கங்களை மட்டும் சுட்டியுள்ளார். இதனுடைய பிரிவுகளை எல்லாம் அருங்கலச் செப்பு முதலான நூல்களில் காணலாம்.

28. பஞ்சிந்திய ஸம்வரணம் பஞ்ச வயா பஞ்ச விம்ஸ கிரியாஸு|
பஞ்ச ஸமிதி தய குத்தீ ஸஞ்சம சரணம் ணிராயாரம்||

(ப-ரை) : பஞ்சிந்திய - ஐம்பொறிகள், ஸம்வரணம் - அடக்கம், பஞ்ச - ஐந்து, வயா - வதங்கள், இவை, பஞ்சவிம்ஸதி - இருபத்தைந்து, கிரியாஸு - கிரியைகளால் ஆகின்றன, பஞ்ச - ஐந்து, ஸமிதி - சமிதி, தய - மூன்று, குத்தீ - அடக்கம், ணிராயாரம் - துறவியர், ஸஞ்சம சரணம் - சையம ஒழுக்கமாகும். எ-று.

(க-ரை) : ஐம்பொறி அடக்கம், ஐந்து வதங்கள், இருபத்தைந்து கிரியைகளால் ஆகும். அவற்றோடு ஐந்து சமிதி, மூன்று அடக்கம் உள்ளது யதி தருமமான சையம ஒழுக்கம் ஆகும்.

(வி-ரை) : சையம ஒழுக்கம் சாவக ஒழுக்கம், யதி ஒழுக்கம் என இரண்டு வகை. இங்கே யதி ஒழுக்கம் எப்படி அமைகிறது என்று சுட்டுகிறார்.

---

1. அருங்கலச்செப்பு — 63.

செறிவெனப் படுவ மூன்று
செழுமதில் செறியச் செய்து
பொறிஎனும் வாயில் ஐந்து
பொற்கதவு அடைத்து மாற்றி
அறிவமை சிந்தை யின்மாட்டு
அகம்படி உழையர் ஆக்கிக்
கறையில் ஈரறுவர் நிற்ப
இறைவராக் காக்க வைத்தான்

என்பார் சூளாமணியுடையார்.[1]

29. அமணுண்ணே ய முணுண்ணே ஸஜீவ தவ்வே அஜீவ தவ்வேய|
ண கரேதி ராயதோஸே பஞ்சிந்திய ஸம்வரோ பணிவோ||

(ப-ரை) : அமணுண்ணே - மனதிற்கு இன்னாதன, ய - மற்றும், முணுண்ணே - மனதிற்கு இனிய (என உலகோர் கருதும்) ஸஜீவ - உயிருடைய, தவ்வே - பொருள், ய - மற்றும், அஜீவ - உயிரற்ற பொருள் மீது, ராய - வேட்கையும், தோஸ - வெறுப்பும், ண கரேதி - செய்யாமை, அது, பஞ்சிந்திய - ஐம்பொறி, ஸம்வரோ - அடக்கம், என, பணிவோ - சொல்லப்பட்டுள்ளது.

(க-ரை) : மனதுக்கு இனியன, இன்னாதன என உயிருடைய, உயிரற்ற பொருள்களைக் கருதுவர் மக்கள். அப்பொருள்களிடத்து, விருப்பும் வெறுப்பும் கொள்ளாமையே ஐம்பொறி அடக்கம் எனச் சொல்லப்பட்டுள்ளது.

(வி-ரை) : உலக மக்கள் இவை மனத்துக்கு இனிமை செய்வன இவை மனதுக்கு இன்னா செய்வன என்று கருதுவர். அப்பொருள்கள் இரண்டு வகைப்படும். ஒன்று உயிருடைய பொருள்கள். மற்றொன்று உயிரற்ற பொருள்கள் - புற்கலப் பொருள்கள். உயிருடைய பொருள்கள், மனைவி, மக்கள், உறவினர், பசு முதலான கால்நடைகள். புற்கலப் பொருள்கள் ஆடை, அணி, வீடு, வயல் முதலானவை. இந்த இருவகைப் பொருள்களும் ஐம்பொறிகளுக்குப் புலமாவன. நல் நம்பிக்கை இல்லா மக்கள் இப்பொருள்கள் தமக்கு இன்பமோ துன்பமோ தருவன என நம்புவர். அதனால், இன்பம் தருவனவற்றை மனத்துக்கு இனிமை செய்வன என ஆர்வம் கொள்வர். துன்பம் தருவனவற்றை மனத்துக்கு இன்னா செய்வன என வெறுப்புக் கொள்வர்.

இப்படிப் பொறிகளுக்குப் புலனாகும் பொருள்களிடத்து முனிவர் விருப்பு அல்லது வெறுப்பு கொண்டு மகிழ்தலோ மலங்குதலோ செய்யார். ஏனெனில் அவர் பொறிகளைப் புறம் போக விடாது காத்து இருப்பர். அதுவே ஐம்பொறி அடக்கம் என்றார்.

1. சூளாமணி — 2111.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்றும்[1],

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி"

என்றும் தேவர் பெருமான் ஐந்துபொறிகள் அடங்கலின் சிறப்பைக் காட்டுவார்.[2]

விருப்பு, வெறுப்பு, துவர்ப்பு உணர்வாகும். பாப உணர்வாகும். முனிவருடைய சையம ஒழுக்கம் தூய்மையும் முழுமையும் உடையது என முன்னே (காதை 27) குறிப்பிட்டதால் இங்கே புலன் வழி செல்லும் பாப உணர்வு இல்லாமை ஐம்பொறி அடக்கம் என்றார்.

30. ஹிம்ஸாவிரஈ அஹிம்ஸா அஸச்சவிரஈ அதத்தவிரஈ ய|
துரியம் அபம்பவிரஈ பஞ்சம ஸங்கம்மி விரஈ ய||

(ப-ரை) : ஹிம்ஸா - இன்னா (இமிசை), விரஈ - விடுதல், அஹிம்ஸா - கொல்லாமை (அகிம்ஸை), அஸச்ச - பொய்மை, விரஈ - விடுதல், ய - மேலும், அதத்த - கொடாமை கொள்ளல், விரஈ - விடுதல், துரியம் - நான்காவது, அபம்ப - அபிரம்மம், விரஈ - விடுதல், ய - மேலும், பஞ்சம - ஐந்தாவது, ஸங்கம்மி - பற்றுகளை, விரஈ - விடுதல், இவை ஐந்தும் பெரு (மகா) விரதங்கள். எ-று.

(க-ரை) : கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், பற்றின்மை இவ்வைந்தும் மகா விரதங்கள் ஆகும்.

(வி-ரை) : ஆசாரியர் ஐந்து விரதங்கள் இவை எனச் சுட்டாமல் அவை எப்படி ஆகின்றன என்று சுட்டுகிறார். இமிசை விடுதல் அஹிம்சை, பொய்விடுதல் பொய்யாமை, கொடாதது கொள்ளாமை களவின்மை, அபிரம்மம் விடுதல் பிரம்மம், பற்றுகள் விடுதல் பற்றின்மை, நான்காவது ஐந்தாவது என வரிசை சுட்டினார். அதனால் அகிம்சை முதலாவது, பொய்யாமை இரண்டாவது, கள்ளாமை மூன்றாவது என உய்த்துணர வைத்தார்.

"கொலை முதலா ஐந்தினையும் முற்றத்துறத்தல்
தலையாய மாவத மாம்"

என அருங்கலச் செப்பு செப்பும்.[3]

1. அஹிம்சை : விருப்பு முதலான உணர்வுகளை உயிரில் தோன்றச் செய்யாமல் இருத்தல் உண்மையில் அஹிம்சை - கொல்லாமை ஆகும். அவற்றைத் தோன்றச்

1. திருக்குறள் — 126. 2. திருக்குறள் — 25. 3. அருங்கலச்செப்பு — 87.

செய்தல் இமிசை - இன்னா செய்தல் என்றார் பகவான் என ஆசாரியர் அமிர்தசந்திரர் குறிப்பிடுகிறார்.[1] முனிவர்தம் கொல்லாமை உணர்வு (அஹிம்சை) இதுவே. அதனால் தன் உயிரில் துவர்ப்புக்கு இடம் தராமையே அஹிம்சை ஆகும்.

உடல், பொறி, குணத்தானம், மார்காணா தானம், குலம், ஆயு, யோனி இவற்றின் நோக்குகளில் உயிர்களின் வாழ்வை அறிந்து இமிசையை விடுதல் அகிம்ஸை மகாவிரதம் என மூலாசாரம் குறிக்கிறது.[2]

உண்மையில் அஹிம்சையைப் போற்றுதல் என்பது தன் உயிரைக் காத்தலே ஆகும். பிற உயிரைக் காத்தல் என்ற பார்வை அங்கு இல்லை. இதுவே முனிவர் நிலை ஆகும்.

2. பொய்யாமை : வீடு பேற்று நெறியில் தனக்கும் பிற உயிர்க்கும் அஹிம்ஸை வேண்டப்படுவதால் நன்மையும் சுருக்கமும் உடைய உரையாடல் பொய்யாமை எனப்படுகிறது. விருப்பு, வெறுப்பு மற்றும் மோகத்தினால் பொய் பேசத் தோன்றும் உணர்வை விடுதலே உண்மையில் பொய்யாமை ஆகும். இந்த உணர்வைப் பெறும்போது அதாவது பொய்யாமை உணர்வைப் பெறும்போது அங்கே கடுஞ்சொல் நிகழாது, அன்பற்ற சொல் நிகழாது, இமிசையைத் தூண்டும் சொல் நிகழாது, பிறர் மறைவாகப் பேசும் சொல்லைக் கேட்டல் நிகழாது. அங்கே நன்மையும், அற விளக்கமும் பெறும் சொல் நிகமும் என்பதாம்.

3. கள்ளாமை : பிறர் பொருளைப் பார்த்து அதனை எடுக்கத் தோன்றும் உணர்வு இல்லாமை கள்ளாமை மகா விரதம் ஆகும். பிறர் பொருளை எடுக்க வேண்டும் என உணர்வு துவர்ப்பு உணர்வு ஆகும். அது உயிருக்கு இன்னா செய்யும் உணர்வாகும். ஆனால் முனிவர் துவர்ப்புணர்வை வெல்லுகிறவர். அதனால் அவர் கொடாத பொருளைக் கொள்ள வேண்டும் என்னும் உணர்வைக் கொள்ளார். அதனால் அவருக்குக் கள்ளாமை - கொடாமை கொள்ளாமை - வதம் அமைகிறது.

4. பிரம்மசரியம் : வீடு பேற்று நெறியில் பிரம்மசரியத்துக்கு முதன்மையான இடம் உண்டு. ஏனெனில் உண்மையில் "பிரம்மத்தில்" ஆன்மாவில் - திளைத்தலே பிரம்மசரியம் ஆகும். அபிரம்மத்தை விடுதல் பிரம்மம் என ஆசாரியர் குறிப்பிடுகிறார்.

அபிரம்மம் எனில் "மைதுனம்"[3] - அதாவது போகம் செய்தல், அதனால் அபிரம்மம் உணர்வு என்பது துவர்ப்பு உணர்வாக அமைகிறது. அது ஆன்மாவுக்கு இன்னா செய்வதாகும். அதனால் அருள் அறத்தைப் போற்றும் முனிவர் அபிரம்ம உணர்வுகளிலிருந்து விலகி இருப்பதால் பிரம்மம் ஆகிறார் - பரமான்மாவில் தோய்கிறவர் ஆகிறார். இங்கே பெண் உறவை விடுதல் பிரம்மம் எனக்கருதாது, ஐம்புல வேட்கையும் விடுதல் எனக் கருதுதல் நல்லது.

1. புருஷார்த்தஸித்துபாயம். 2. மூலாசாரம் 5/289 3. தத்துவார்த்த சூத்திரம் 7/16.

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்பார் தேவர்.[1] அதனால் ஐம்புல வேட்கையும் காமத்தில் உண்டு எனத்தெளியலாம். உடல் உறவைத் தவிர்த்தல் மட்டும் அபிரம்மம் அன்று. ஐந்துபொறிகளும் புறம் போதல் அபிரம்மம் என்று அறிதல் வேண்டும். அந்த அபிரம்மத்தில் இருந்து விலகுதலே, அந்த ஐம்புல நெகிழ்விலிருந்து காத்தலே பிரம்மம் ஆகும். அதுவே தன்னில் நிகழ்தல் ஆகும். இந்த அடிப்படையிலேயே முனிவருக்கு 18,000 சீல ஒழுக்கம் பேசப்படுகிறது.

5. பற்றுஇன்மை : பற்று அகப்பற்று, புறப்பற்று என இரண்டு வகைப்படும். வேட்கை உயிரில் தோன்றும் அகப்பற்று. அவ்வேட்கையுடைய உயிர் புறப் பொருள்களை ஈட்டல் புறப்பற்று ஆகும். ஆசாரியர் பற்றுகளில் இருந்து விலகுதல் பற்றின்மை என்கிறார். "என் பொருள்" எனும் உணர்வுதான் பற்றாகும். அது துவர்ப்பு உணர்வாகும். துவர்ப்பு உணர்வு உயிருக்கு இன்னா செய்வது. அதனால் முனிவர் பற்றுக்கு இடம் தராமல் விலகி நிற்கிறார். அதனால் பற்றற்றவர். உயிரில் பற்றுக்குக் காரணமாகும் துவர்ப்பு இன்மை உண்மையில் பற்றின்மை ஆகும். துவர்ப்பு இல்லாமையால் புறப்பொருள் ஈட்டல் இல்லாது போதல் வழக்கு நய பற்றின்மை ஆகும்.

இத்தகு தூய முழுமையான சையம ஒழுக்கமுடையவரே மகா விரதம் உடையவர் எனப்படுகிறார். அவரே எல்லாராலும் - தேவர், மனிதர்களால் தொழப்படுகிறார்.

31. ஸாஹந்தி ஜம் மஹல்ல ஆயரியம் ஜம் மஹல்லபும் வேஹிம்|
ஜம் ச மஹல்லாணி ததோ மஹவ்வயா இந்தஹே யா இம்||

(ப-ரை) : மஹல்ல - புருடர், ஜம் - எவற்றை, ஸாஹந்தி - சாதிக்கின்றனர். பும்வேஹிம் - முன்பு, மஹல்ல - மகா புருடர், ஜம் - எவற்றை, ஆயரியம் - ஒழுகினார், ச - மற்றும், ததோ - தாமே, மஹல்லாணி - பெருமையுடையன, தாணி - அவை, இத்தஹே - இங்கே, மஹவ்வயா - மகாவிரதங்கள். எ-று.

(க-ரை) : மகா புருடர் எவற்றைச் சாதிக்கின்றனர். முன்பு மகா புருடர்கள் எவற்றை ஒழுகினர் மற்றும் தாமே பெருமையுடைய அவையே இங்கு மகா விரதங்கள் ஆகும்.

(வி-ரை) : இங்கே ஆசாரியர் மகா விரதங்கள் என ஏன் சுட்டப்படுகின்றன என்று விளக்குகிறார். மகா புருடர் அவற்றைச் சாதிக்கின்றனர். முன்பு தீர்த்தங்கரர், கணதரர், முதலான மகா புருடர் அவற்றில் ஒழுகினர். அவ்விரதங்கள் தாமே பெருமையுடையன. ஆகையால் இவ்வுலகில் அந்த ஐந்தும் மகா விரதங்கள் எனப்படுகின்றன.

1. திருக்குறள் — 1101.

புகழ்தலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர் மகா புருடர் என்பதாம். அவரால் போற்றப்பட்டமையால் ஐந்து விரதங்களும் மகா விரதங்கள் எனப்பட்டன. பெருமையுடைய பரமான்ம நிலை அடைய காரணம் ஆவதால் அவ்விரதங்கள் தாமே பெருமைக்கு உரியன என்றார் போலும்.

32. வய குத்தீ மணகுத்தீ இரியா ஸமிதீ ஸுதாண ணிக்கேவோ|
அவளோயபோயணாஏ அஹிம்ஸஏ பாவணா ஹோந்தி||

(ப-ரை) : வய - மொழி, குத்தீ - அடக்கம், மண - மனம், குத்தீ - அடக்கம், இரியா ஸமிதீ - நடத்தல் ஒழுக்கம், ஸுதாணணிக்கேவோ - விழிப்போடு எடுத்தல் வைத்தல், அவளோய - நன்கு பார்த்து எடுக்கும், போயணாஏ - உணவு, இவை, அஹிம்ஸஏ - அஹிம்ஸையின், பாவணா - பாவனை, ஹோந்தி - ஆகின்றன. எ-று.

(க-ரை) : மொழி அடக்கம், மன அடக்கம், நடத்தல் ஒழுக்கம், விழிப்போடு பொருளை எடுத்தல், வைத்தல், நன்கு ஆய்ந்து உண்ணல், என இவ்வைந்தும் அஹிம்ஸை மகா விரதத்தின் பாவனைகளாம்.

(வி-ரை) : பாவனை என்றால் ஆழ நினைத்தல் என்று பொருள். மீண்டும் மீண்டும் நினைப்பதால் ஒரு பொருள் பற்றிய பயிற்சி அமைகிறது. அஹிம்ஸையைப் போற்ற இங்கே ஐந்து பாவனைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

1. **மொழி அடக்கம்** : நன்மையுடைய சொல்லைச் சொல்லல் வேண்டும். சுருங்கச் சொல்ல வேண்டும். கேட்போருக்கு மனத் துன்பம் தரும் சொற்களைப் பேசுதல் கூடாது. ஏனெனில் அத்தகு கடுஞ்சொல் நிகழ வெகுளி முதலான துவர்ப்பு உணர்வுகள் வேண்டும். அது உயிருக்கு இன்னா செய்தலாகும். அதனால் அஹிம்ஸை போற்ற துவர்ப்பு நீக்கும் முயற்சி வேண்டும். அது மொழி அடக்கம் வழியே நிகழ்வதாகும்.

2. **மன அடக்கம்** : மனத்தில் தீயன எண்ணுதல் கூடாது. ஏனெனில் தீயன எண்ண விருப்பு வெறுப்பு முதலான உணர்வுகள் வேண்டும். அவை துவர்ப்புணர்வுகள். அவை உயிருக்கு இன்னா செய்வன. அதனால் அஹிம்ஸை போற்ற துவர்ப்புணர்வைத் தடுக்கும் முயற்சி வேண்டும். அது மனம் அடக்கம் வழியே நிகழ்வதாகும்.

3. **நடத்தல் ஒழுக்கம்** : நடக்கும் போது உயிர்களுக்கு ஊறு நேரும் வாய்ப்பு உண்டு. அதனால் அவற்றுக்கு இன்னா செய்தல் ஆகும். அப்படி நடக்க வேண்டுமானால் உள்ளத்தில் "பிரமாத" உணர்வு வேண்டும். துவர்ப்புடன் கூடிய உணர்வு "பிரமாத"மாகும். அது உயிருக்கு இன்னா செய்வது. அதனைத் தடுக்கும் முயற்சி வேண்டும். இது பாதையை விழிப்போடு பார்த்து நடத்தலால் நிகழ்வதாகும்.

நான்கு முழத் தொலைவு பாதையில் பார்வை வைத்துச் செல்லுதல் நடத்தல் ஒழுக்கமாகும்.

4. **பொருள்களை ஆளுதல்** : கமண்டலம், பிஞ்சம் முதலான உபகரணங்களை எடுக்கும் போதும் வைக்கும் போதும் விழிப்பின்றி செய்தல் கூடாது. அப்படிச் செய்தல் "பிரமாத"மாகும் - கசாயம் ஆகும். அது உயிருக்கு இன்னா செய்வது. அதனைத் தடுக்க பொருள்களை விழிப்போடு கையாள வேண்டும். அதனால் தன்னுயிரும் காப்பாற்றப்படும். புறத்தே பொருள்களிடத்தில் உள்ள உயிர்களும் காப்பாற்றப்படும்.

5. **ஆய்ந்து உணவு ஏற்றல்** : உணவை ஏற்கும் காலத்து விழிப்போடு ஆய்ந்து உண்ணாவிட்டால் "பிரமாத" குற்றமாகும். அது உயிருக்கு இன்னா செய்வது ஆகும். மேலும் உணவில் உயிர்கள் இறந்து கிடந்தால் அல்லது வேறு தூய்மை அற்ற பொருள் கிடந்தால் அப்படியே உண்ண நேரிடும். அதனால் தூய உணவு கொள்ளாத குற்றம் வரும். இவற்றை நீக்க கையில் வாங்கும் உணவை வெளிச்சத்தில் நன்கு ஆய்ந்து பின் உண்ண வேண்டும். அதனால் அஹிம்ஸை போற்றப்படும்.

இவ்வாறு இவற்றில் ஆழ நினைத்து செயல்படுவதால் இவை அஹிம்ஸையின் பாவனைகள் எனப்படுகின்றன.

33. கோஹ பய ஹாஸ லோஹ மோஹா விவரீய பாவணா சேவ|
விதியஸ்ஸ பாவணாஏ ஏபஞ்சேவ ய தஹா ஹோந்தி||

(ப-ரை) : கோஹ - வெகுளி, பய - அச்சம், ஹாஸ - சிரிப்பு, லோஹ - உலோபம், மோஹா - மயக்கம் (இந்த ஐந்தின்), விவரீய பாவணா - எதிரான பாவனை, ஏ - இவை, விதியஸ்ஸ - இரண்டாவதன், பாவணாஏ - பாவனைகளாம், தஹா - இப்படி. பஞ்சேவ - ஐந்தாகவே, ஹோந்தி - ஆகின்றன. எ-று.

(க-ரை) : வெகுளி, அச்சம், சிரிப்பு, உலோபம், மயக்கம் இந்த ஐந்தும் இல்லாமை ஸத்திய மகாவிரதத்தின் பாவனைகளாம்.

(வி-ரை) : வெகுளி, அச்சம், சிரிப்பு, உலோபம், மயக்கம் இவை எல்லாம் பொய் நம்பிக்கையால் (மித்யாத்வத்தால்) உண்டாவன. இவை நிமித்தமாக வரும் பேச்சுகள் பொய்வடிவின ஆகும். பொய் பேசுவதற்கு இவற்றின் உதயமே காரணமாகும். இவை உயிருக்கு இன்னா செய்வன. அதனால் அகிம்ஸை இல்லாது போகிறது. இதனை நீக்க இத் துவர்ப்புணர்வுகளிலிருந்து நீங்குதல் வேண்டும். அப்போது பொய்யாமை அதாவது மெய்ம்மை (உண்மை) மகா விரதம் போற்றப்படுகிறது.

உமாசுவாமி ஆசாரியர் மோகத்தைச் சுட்டாமல் ஆகம உரைக்கு இசைவாகப் பேசல் (அநுவீசீ பாஷணா) வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.[1] பொய் நம்பிக்கை

1. தத்துவார்த்த சூத்திரம் 7/5.

நிமித்தமாகவே ஆகம உரைக்கு எதிரான பேச்சு நிகழும். அது இல்லாத போது ஆகம உரைக்கு இசைவான பேச்சு அமையும். உமாசுவாமி ஆசாரியர் உரைப்பதும் இப் பொருளுடையதே. அதனால் பொருள் வேறுபாடு இல்லை எனக் கருதலாம்.

34. ஸுண்ணாயார ணிவாஸோ விமோசியாவாஸ ஜம்பரோதம் ச|
ஏஸண ஸுத்திஸஉத்தம[1] ஸாஹம்மீஸம் விஸம்வாதோ||

(ப-ரை) : ஸுண்ணாயார - குகை முதலான காலி இடத்தில், ணிவாஸோ - உறைதல், விமோசிய - கைவிடப்பட்ட, ஆவாஸ - இடத்தில் உறைதல், ச - மற்றும், பரோதம் - பிறருக்கு இடங்கொடுத்தல், ஏஸண - உணவு, ஸுத்திஸஉத்தம் - தூய்மையோடு ஏற்றல், ஸாஹம்மீஸம் விஸம்வாதோ - தன் அறத்தாருடன் வீண் எதிராடல் செய்யாமை (இவை ஐந்தும் கள்ளாமையின் பாவனையாம்). ஏ-று.

(க-ரை) : குகை முதலான காலி இடத்தில் உறைதல், கைவிடப்பட்ட இடத்தில் உறைதல், பிறருக்கு இடம் கொடுத்தல், தூய்மையோடு உணவு ஏற்றல், தன் அறத்தாருடன் வீண் எதிராடல் செய்யாமை இவை ஐந்தும் கள்ளாமை விரதத்தின் பாவனைகளாம்.

(வி-ரை) : காலி இடம் என்றது மலை, குகை, மரம், மரப்பொந்து முதலான இயற்கையாக அமைந்த இடங்கள். கைவிடப்பட்ட இடம் என்றது மக்களால் கைவிடப்பட்ட வீடு, ஊர் முதலியன. "பரோதம்" எனில், பிறர் தங்க வந்தால் தடை செய்யாமை. தாம் உள்ள இடத்தில் வேறொருவர் தங்க வந்தால் அவரைத் தடுக்காது இடம் கொடுத்தல் வேண்டும்.

உறையுளுக்கும் உணவுக்குமே உலகில் கொடாமல் கொள்ளும் - களவு - இமிசை நடைபெறுகிறது. முனிவருக்கு தங்குதற்கு இடமும் உடலைத் தாங்க உணவும் தேவைப்படுகின்றன. இவ்விரண்டையும்பெறுவதில் அவருக்குக் கொடாமல் கொள்ளும் - களவு - உணர்வு பற்றாகும். அது உயிருக்கு இன்னா செய்வதாகும். அதனால் அதனை நீக்க எவருக்கும் உரிமை இல்லாத இடத்தில் தங்கவும், ஒன்பது பத்திச் சிறப்புடன் தரப்படும் உணவை ஏற்கவும் கூறப்பட்டுள்ளன. கள்ளாமை குற்றம் இதனால் நேராமல் காக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நிகழ்வுகள் (உறையுள், உணவு) காரணமாக தன் அறத்தாரோடு வீண் எதிராடலும் கூடாது எனச் சுட்டப்பட்டுள்ளது. இதுவும் கள்ளாமையோடு தொடர்புடையது ஆகிறது.

தான் இருக்கும் இடத்தில் இன்னொருவர் வந்தால் அவருக்கு இடம் மறுக்கக் கூடாது என்பது மிக நுட்பமான உணர்வாகும். ஒரு முனிவர் அப்படி மறுப்பாரானால்

1. பா.பே. ஸாஹம்மீஅம்விஸம்வதே

அவருக்கு அவ்விடம் குறித்து உரிமை உணர்வு அமைகிறது. "எனது" எனும் உணர்வு பற்றாகும். தனக்கு உரிமை இல்லாத ஒன்றில் உரிமை கொள்ளும்போது கொடாததைக் கொள்ளும் - களவு - குற்றம் வருகிறது. அது களவாகும். அதனால் முனிவர் அப்படி மறுக்கக் கூடாது எனச் சுட்டப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு கள்ளாமை விரதம் போற்றப்படுகிறது. முனிவர் தம் விழிப்புணர்வைக் காட்டுகிறது இது. எனவே இவ்வைந்தும் போற்றப்படும் போது கள்ளாமை மகாவிரதத்தின் தூய்மை காக்கப்படுகிறது.

35. மஹிலா ளோயண புவ்வரிஇ ஸரண ஸம்ஸத்தவஸஹி விகஹாஹிம்|
புட்டிய ரஸேஹிம் விரஓ பாவணாபஞ்சாவி துரியம்மி||

(ப-ரை) : மஹிலாளோயண - பெண்டிரைப் பார்த்தல், புவ்வரஇ - முன்பு துய்த்தவற்றை, ஸரண - நினைவு கூருதல், ஸம்ஸத்த - பெண்ணுள்ள, வஸஹி - இடத்தில் இருத்தல், புட்டிய - ஊட்டம் தரும், ரஸேஹிம் - சாறு குடித்தல், விகஹாஹிம் - விகதை கேட்டல், விரஓ - இவற்றில் விலகி இருத்தல், துரியம்மி - நான்காவதான பிரம்மசரியத்தின், பஞ்சாவி - ஐந்து ஆகும். பாவணா - பாவணைகள், எ-று.

(க-ரை) : பெண்டிரை நோக்குதல், முன் துய்த்தவற்றை நினைவுகூருதல், பெண்டிரோடு தங்கி இருத்தல், ஊட்டம் தரும் சாறு குடித்தல், பெண்டிர் கதை கேட்டல் இவ்வைந்திலிருந்தும் விலகி இருத்தல் பிரம்மச்சரியத்தின் பாவனைகளாம்.

(வி-ரை) : காம (ஐம்புல) வேட்கை உணர்வால் பிரம்மசரிய உணர்வுக்கு ஊறு நேருகிறது. அதற்குப் பெண்டிரை நோக்குதல் முதலான நிமித்தங்கள் கூறப்பட்டுள்ளன. இங்கே கூறப்பட்டுள்ளவற்றுக்கு ஏதுவான உணர்வுகள் துவர்ப்பின்பாற்படும். துவர்ப்பு உயிருக்கு இன்னா செய்வது. அதனால் அதனை நீக்க இவற்றிலிருந்து விலகி இருத்தல் வேண்டும். அதாவது இத் துவர்ப்பு உணர்வுகளிலிருந்து விடுபட்டு இருத்தல் வேண்டும் எனும் நினைப்பு ஆழமாக இருத்தல் வேண்டும். இவையே பிரம்மசரியத்தின் பாவனைகளாம், அஹிம்ஸையைப் போற்ற அப்போதுதான் முடியும்.

36. அபரிக்கஹ ஸமணுண்ணேஸு ஸத்த பரிஸ ரஸ ரூவ கந்தேஸு|
ராயத் தோஸாஈணம் பரிஹாரோ பாவணா ஹோந்தி||

(ப-ரை) : ஸமணுண்ணேஸு - மனதுக்கு இனிதான, ஸத்த - ஒலி, பரிஸ - ஊறு, ரஸ - சுவை, ரூவ - உருவம், கந்தேஸு - மணங்களில், ராய - ஆர்வமும், தோஸாஈணம் - மனதுக்கு இனிதல்லாதனவற்றில் வெறுப்பு முதலானவற்றை, பரிஹாரோ - செய்யாதொழிதல், அபரிக்கஹ - பற்றின்மையின், பாவணா - பாவனைகள், ஹோந்தி - ஆகின்றன. எ-று.

(க-ரை) : மனதுக்கு இனிதான ஐம்புலன்களிலும் மனதுக்கு இனிமை செய்யாத ஐம்புலன்களிலும் முறையே விருப்பமும் வெறுப்பும் கொள்ளாது இருத்தல் பற்றின்மையின் ஐந்து பாவனைகளாகும்.

(வி-ரை) : ஊறு, சுவை, மணம், நிறம், ஒலி இவை ஐம்பொறிகளின் புலன்களாகும். இவற்றில் விருப்பு, வெறுப்பு உணர்வு கொள்ளுதல் துவர்ப்பின் பாற்படும். அது உயிருக்கு இன்னா செய்வது. அதனால் அகிம்சையை ஏற்றுள்ள முனிவர் இவற்றில் விருப்பு வெறுப்பு கொள்ளாமல் தன்னைக் காக்கும் போது பற்றின்மையில் உறுதி ஏற்படுகிறது. அதனால் இவ்வைந்தும் பற்றின்மை பாவனைகள் ஆகும்.

ஐந்து மகா விரதங்களின் இருபத்தைந்து பாவனைகளை "கிரியா" என்று குறிப்பிட்டார் (காதை 28). "கிரியா" எனில் முயற்சி அல்லது கைக்கொண்டு ஒழுகுதல் என்று பொருள். இவற்றின் முயற்சியால் ஐம்பொறி அடக்கமும் மகா விரதங்களும் அமைகின்றன என்பதாம்.

37. இரியா பாஸா ஏஸணா ஜாஸா ஆதாணசேவ ணிக்கேவோ|
ஸஞ்ஜம ஸோஹிணிமித்தம் கந்தி ஜிணா பஞ்ச ஸமிதீஓ||

(ப-ரை) : இரியா - நடை, பாஸா - மொழி, ஜா - மற்றும், ஏஸணா - உணவு, ஸாஆதாண - எடுத்தல், சேவ - மற்றும், ணிக்கேவோ - வைத்தல், பஞ்ச - ஐந்து, ஸமிதீஓ - ஸமிதி, ஸஞ்ஜம - சையம, ஸோஹி - தூய்மைக்கு ணிமித்தம் - நிமித்தம் என, ஜிணா - ஜிநர், கந்தி - அருளியுள்ளார். எ-று.

(க-ரை) : நடை ஒழுக்கம், மொழி ஒழுக்கம், உணவு ஒழுக்கம், பொருள் எடுத்தல் ஒழுக்கம் மற்றும் விடுதல் ஒழுக்கம் இந்த ஐந்து சமிதிகளும் சையம ஆய்வுக்கு அதாவது தூய்மைக்கு நிமித்தம் என்று ஜிநர் அருளியுள்ளார்.

(வி-ரை) : "ஸமிதி" எனில் பயனுடைய அல்லது நல்ல நடைமுறை எனப்பொருள் ஆகும். முனிவர் ஐம்பெருநோன்பு வடிவ சையமத்தில் ஒழுகுகிறார். அந்த சையமத்தின் (உயிர் நோக்கு ஒழுக்கத்தின்) தூய்மையாக இந்த நல்ல நடைமுறைகள் போற்றப்படுகின்றன.

"இரியா ஸமிதி" - நடை ஒழுக்கம் : நடக்கும் போது சாலையில் நான்கு முழத் தொலைவு விழிப்போடு பார்த்துக் கொண்டு நடத்தல் வேண்டும்.

"பாஸா ஸமிதி" - மொழி ஒழுக்கம் : நன்மையுடைய சுருங்கிய மொழியில் பேச வேண்டும். ஆகம உரைக்கு இசைவாக மொழிதல் வேண்டும்.

"ஏஸணா ஸமிதி" - உணவு ஒழுக்கம் : உணவு ஏற்கும் போது 46 குற்றம் இல்லாத 32 அந்தராயம் பார்த்து, பதினான்கு குறைபாடு இல்லாத உணவை கையால் ஏற்க வேண்டும்.

"ஆதாண ஸமிதி" - எடுத்தல் ஒழுக்கம் : பொருளை எடுக்கும் போது விழிப்போடு எடுத்தல் வேண்டும்.

"ணிக்கேவ ஸமிதி" - விடுதல் ஒழுக்கம் : ஒன்றை விடும்போது அல்லது வைக்கும் போது விழிப்போடு செய்தல் வேண்டும்.

இப்படி விழிப்புடன் செயல்படும் போது சையம (உயிர்) ஒழுக்கம் தூய்மையுடன் போற்றப்படுகிறது.

"மூலாசார" நூலில் எடுத்தல் - வைத்தல் ஒன்றாகவும் விடுதல் வேறாகவும் கூறப்பட்டுள்ளன. இங்கு எடுத்தல் தனியாகவும் வைத்தல் தனியாகவும் கூறப்பட்டுள்ளது. வைத்தலில் விடுதலும் அடங்கும் எனக்கொள்க.

38. பவ்வஜண போஹணத்தம் ஜிணமக்கே ஜிணவரேஹிம் ஜஹ பணியம்|
ணாணம் ணாணஸரூவம் அப்பாணம் தம் வியாணேஹி||

(ப-ரை) : ஜிண மக்கே - ஜிநர் நெறியில், ஜிணவரேஹிம் - ஜிந பகவான், பவ்வ ஜண - பவ்வியருக்கு, போஹணத்தம் - அறிவு கொளுத்த, ணாணம் - அறிவு, ணாணஸரூவம் - அறிவு இயல்பு, ஜஹ பணியம் - எப்படிக் கூறினாரோ, தம் அப்பாணம் - அந்த ஆன்மாவை, வியாணேஹி - அப்படியே அறிவாயாக. எ-று.

(க-ரை) : ஜிநர் நெறியில் அறிவு மற்றும் அறிவின் இயல்பு குறித்து பவ்வியருக்கு அறிவு கொளுத்த ஜிந பகவான் எப்படி அருளினாரோ அப்படியே ஆன்மாவை அறிக!

(வி-ரை) : அறிவு குறித்தும் அறிவின் இயல்பு குறித்தும் பலவாறான கருத்துகள் காணப்படுகின்றன. வீடு பேற்று நெறியில் செல்லும் பவ்வியர் அவற்றை எல்லாம் கண்டு குழம்பாமல் முழுதுணர் அறிவர் அறிவு பற்றியும் அறிவின் இயல்பு பற்றியும் எப்படி அருளியுள்ளாரோ அப்படியே ஏற்கவேண்டும் என ஆசாரியர் அறிவு கொளுத்துகிறார். அந்த அறிவு வடிவமே ஆன்மா. உண்மையில் அறிவு வேறு ஆன்மா வேறு அன்று. அறிவுதான் ஆன்மா. ஆன்மாதான் அறிவு. அந்த ஆன்மாவை அறிந்து / தெளிந்து அதில் ஈடுபாடுகொண்டு புறப்பொருள்களில் / புலன்களில் விருப்பு வெறுப்பு கொள்ளாமல் விலகி நின்று ஒழுகும் போது சையம (உயிர்) ஒழுக்கம் அமைகிறது. அதனால் ஐம்பெருவதங்களில் விளங்கி அறிவு வடிவ ஆன்மாவில் ஆழ்க என அறிவுறுத்துகிறார், ஆசாரியர்.

39. ஜீவாஜீவ விபத்தி ஜோ ஜாணஇ ஸோ ஹவேஇ ஸண்ணாணீ|
ராயாதி தோஸ ரஹி ஓ ஜிணஸாஸணே[1] மோக்க மக்கோத்தி||

(ப-ரை) : ஜோ - எவர், ஜீவா ஜீவ - உயிர் மற்றும் உயிரற்றனவற்றின், விபத்தி - வேறுபாட்டை, ஜாணஇ - அறிகிறார். ஸோ - அவர், ஸண்ணாணீ - நல்லறிவர்,

பா.பே. 1. மோக்க மக்குத்தி

ஹவேஇ - ஆகிறார், ராயாதி தோஸ - விருப்பு முதலான குற்றங்களில், ரஹஓ - நீங்கியவர் ஆகிறார், இப்படி, ஜிண ஸாஸணே - ஜிநர் ஆகமத்தில், மோக்க - வீடுபேறு, மக்கோத்தி - நெறி அமைகிறது. எ-று.

(க-ரை) : எவர் உயிர் மற்றும் சடத்தின் வேறுபாட்டை அறிகிறார் அவர் நல்லறிவர் மற்றும் விருப்பு முதலான குற்றங்கள் இல்லாதவர். ஜிநர் ஆகமத்தில் வீடு பேற்று நெறி இப்படி அமைகிறது.

(வி-ரை) : உயிர் மற்றும் உயிரல்லனவற்றின் வேறுபாட்டை அறிந்து தன்னையும் பிறவற்றையும் பிரித்து அறிகிறார். அதனால் நல்லறிவு உடையவர் ஆகிறார். தன் இயல்பை அறிந்த நிலையில் புறப் பொருள்மேல் செல்லும் விருப்பு வெறுப்பு முதலான துவர்ப்பு உணர்வுகளை விடுகிறார். அப்போது அறிவு நிலைப்படுகிறது. உண்மை சாரித்திரம் அதுவே ஆகும். அதுவே ஜிநர் நெறியில் வீடுபேற்று நெறியாகும். அதனையே இங்கு ஆசாரியர் நினைவுபடுத்துகிறார். ஐந்து பெரு நோன்புகளை நோற்று, 25 பாவனைகளில் நிலைத்து, ஏற்ற சையமத்தில் (உயிரொழுக்கத்தில்) நிலைப்படுகிறார். அதன் விளைவாகத் தன் அறிவை தன்னில் நிலைப்டுத்துகிறார் என்பதாம்.

ஆசாரியர் அமிர்த சந்திரர், "எத்தனை பேர் சித்தர் ஆனாரோ அவர் அனைவரும் உயிர் உயிரல்லன வேறுபாட்டைஅறிந்தே (பேதவிஞ்ஞானத்தால்) ஆனார். எத்தனை பேர் பிறவி நிலையில் வினைக் கட்டில் இருக்கின்றனரோ அவர் அனைவரும் அவ்வேறுபாட்டை அறியாமையால்தான் வினைக் கட்டில் உள்ளனர். வினைக்கட்டுக்கு மூல காரணம் அறியாமை; வீடு பேற்றுக்கு மூல காரணம் பேதவிஞ்ஞானம்" என்று குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவு கூறலாம்.[1]

40. தம்ஸணணாண சரித்தம் திண்ணி வி ஜாணேஹ பரம ஸத்தாஏ|
ஜம் ஜாணி ஊண ஜோஈ அஇரேண ஸஹந்தி ணிவ்வாணம்||

(ப-ரை) : ஜம் - எதை, ஜாணிஊண - அறிந்து, ஜோஈ - யோகியர், அஇரேண - விரைவாக, ணிவ்வாண்ணம் - வீடுபேற்றை, ஸஹந்தி - அடைகின்றனர், ஏ! பவ்விய! அந்த, தம்ஸண ணாண சரித்தம் - நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய திண்ணி வி - மூன்றையும், பரம ஸத்தாஏ - மிகு நம்பிக்கையுடன், ஜாணேஹ - அறிக! எ-று.

(க-ரை) : மும்மணி ஏற்று யோகியர் வீடுபேற்றை விரைந்து அடைகின்றனர். ஏ! பவ்வியனே! நீயும் அம் மும்மணியை மிகு நம்பிக்கையுடன் அறிக!

1. *சமயசாரநாடகம், சுலோகம் 7, ஸம்வரை பிரகரணம்,*

(வி-ரை) : நற்காட்சி நல்ஞானம் நல்லறிவு மூன்றும் கூடியதே முக்தி நெறி. இம் மூன்றையும் நம்பிக்கையுடன் அறிக என ஆசாரியர் அறிவுறுத்துகிறார். ஏனெனில் இவற்றை அறிந்தே முனிவர் முக்தியை அடைகின்றனர்.

உரைத்தஇப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத்தெளிதல் காட்சி
பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்தல்நல் ஒழுக்கம் ஆகும்
சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய் வீட்டின்
மெய்ந்நெறி ஆவதாமே!

என்பர் மேருமந்தர புராணம் உடையார்[1]. அறிவும் காட்சியும் ஒன்றுதல் நல்லொழுக்கம் என்றார். ஆசாரியர் குந்த குந்தர் கூறிய கருத்தை (காதை 3) இவர் எதிரொலிப்பதை இணைத்துப் பார்க்கலாம். இம்மூன்றும் ஒன்றுதல் முத்தி நெறி என்பதும் மேற்காதையின் கருத்தை எதிரொளிப்பதையும் அறியலாம். இப்பாடலில் ஒழுக்கத்தின் இலக்கணமும் வீடு பேற்று நெறியும் கூறப்பட்டுள்ளன; ஆசாரியர் குந்த குந்தர் காதைகளைத் தமிழில் அமைத்தது போல இப்பாடல் அமைந்துள்ளது.

41. [2]பாஊண ணாண ஸலிலம் ணிம்மல ஸு[3]விஸுத்த பாவ ஸஞ்ஜுத்தா|
ஹோந்தி ஸிவாலயவாஸீ திஹுவண சூடாமணீ ஸித்தா||

(ப-ரை) : ணாண - ஜிநர் அருளிய அறிவு வடிவ, ஸலிலம் பாஊண - நீரை அடைந்து (குடித்து), ணிம்மல - தன் குற்றமில்லா, ஸு - நல்ல, விஸுத்த பாவ - தூய உணர்வோடு, ஸஞ்ஜுத்தா - கூடியுள்ளவர், திஹுவண - மூவுலக, சூடாமணீ - முடிமணியாக, ஸிவாலயவாஸீ - சித்த உலகில் இருக்கும், ஸித்தா - சித்த பரமேட்டியாக, ஹோந்தி - ஆகிறார். எ-று.

(க-ரை) : அறிவு வடிவ நீரைக் குடித்து குற்றமில்லா தூய உணர்வோடு கூடியுள்ளவர் மூவுலக சூடாமணியாக, ஸித்த பரமேட்டியாக ஆகிறார்.

(வி-ரை) : நல்ல நீரில் குளித்து தூய்மையாகி நல்லவர் மாளிகையில் வாழ்கிறார். உலக வாழ்வில் இதனைக் காணலாம். அது போல அறிவு நல்ல நீர் போன்றது. ஆன்மா விருப்பு வெறுப்பு அழுக்குகளால் மலினமாக உள்ளது. அந்த ஆன்ம அழுக்கை அறிவு எனும் நல் நீரால் நீக்கி ஆன்மாவைத் தூய்மை செய்கிறவர் முத்தி மாளிகையில் தங்கி பேரின்பத்தைத் துய்க்கிறார். அவரை மூவுலக சூடாமணி சித்தர் என்கின்றனர்.

1. மேருமந்திரபுராணம், 107. 2 - பா.பே. : பீஊண; 3 - பா.பே. : ஸுபுத்தி;

முன் காதையில் அறிவு இயல்பை அறிக என்று ஆசாரியர் அருளினார். இந்தக் காதையில் அந்த அறிவு நீரால் அழுக்குள்ள ஆன்மாவை தூய்மை ஆக்கி மூவுலக சூடாமணி சித்தராக ஆகுக என அருளியுள்ளார்.

களங்காண் வகையுடைந்து காலர் காமர் கையகல
விளங்காத் திசையின்றி விளங்க வீரன்மெய்ப்பொருளை
உளங்காண் கேவலப் பேரொளியால் இம்பர் உலகெல்லாம்
துளங்காது உயர்ந்து உலகின் முடிக்கோர் சூளா மணியானான்

என சித்த நிலையை விளக்குவார் சூளாமணியார்.[1]

42. ணாண குணேஹிம் விஹீணா ண லஹந்தே தே ஸுஇச்சியம் லாஹம்|
இயணாஊம் குணதோஸம் தம் ஸண்ணாணம் வியாணே ஹி||

(ப-ரை) : ணாணகுணேஹிம் - அறிவு குணத்தில், வி ஹீணா - இழிந்தவர், தே - தம், ஸுஇச்சியம் - விரும்பிய, லாஹம் - சிறப்பை (இலாபத்தை), ணலஹந்தே - அடைவது இல்லை, இய - இப்படி, ணாஊம் -அறிந்து, குண தோஸம் - குணம், குற்றங்களை அறிய, தம் - அந்த, ஸண்ணாணம் - நல்லறிவை, வியாணேஹி - அறிக. எ-று.

(க-ரை) : அறிவு குணத்தில் இழிந்தவர் தாம் விரும்பிய சிறப்பை அடைவது இல்லை. இதனைஅறிந்து குணம் குற்றங்களை அறிய அந்த நல்லறிவை அறிக.

(வி-ரை) : குணம் குற்றங்களை அறிய நல்லறிவு வேண்டும். அவ்வறிவு இல்லை என்றால் தனக்கு இன்பம் தருவது எது, துன்பம் தருவது எது என்று அறிய முடியாது. அப்போதுதான் விரும்பும் பொருளை அல்லது சிறப்பைப் பெற முடியாது. அதனால் நல்லறிவால் தான் குணம் குற்றங்களை வேறுபடுத்தி அறிய முடியும். ஏனெனில் நல்லறிவு இல்லாமல் ஏற்கத் தக்க பொருள் இது விடத்தக்க பொருள் இது என வேறுபடுத்தி அறிய முடியாது. ஏற்கத் தக்கதையும் விடத் தக்கதையும் தெளியாமல் நல்லொழுக்கத்தை அடைய முடியாது. அதனால் முதன்மையான அந்த நல்லறிவை அறிய வேண்டும் என்பதாம்.

"குணதோஸம்" என்பதற்கு நல்லறிவன் குணம்,பொய் அறிவின் குற்றம் எனப் பொருள் காணுவாரும் உளர்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

எனத்தேவர் மொழியும்.[2]

---

1. சூளாமணி 2127   2. திருக்குறள், 355.

"இல் இயலார் நல்லறமும் ஏனைத் துறவறமும்
நல்லியலின் நாடி உரைக்குங்கால் - நல்லியல்
தானத்தால் போகம் தவத்தால் சுவர்க்கமாம்
ஞானத்தால் வீடாக நாட்டு"

எனக் காரியாசானார் மொழியும்[1] இங்கே இணைத்துப் பார்க்கலாம்.

43. சாரித்த ஸமாரூடோ அப்பாஸு பரம் ண ஈஹஏ ணாணீ|
பாவஇ அஇரேண ஸுஹம் அணோவமம் ஜாண ணிச்சயதோ||

(ப-ரை) : சாரித்த - நல்லொழுக்கத்தில், ஸமாரூடோ - உயர்ந்துள்ளவர், ணாணீ - நல்லறிவாளர், அப்பாஸு - தன் ஆன்மாவில், பரம் - புறப் பொருளை, ண ஈஹ ஏ - ஏற்பதில்லை, அவர், அணோவமம் - ஒப்பில்லாத, ஸுஹம் - பேரின்பத்தை, அஇரேண - விரைந்து, பாவஇ - அடைகிறார், ஏ! பவ்விய! ணிச்சயதோ - உறுதியாக, இதனை, ஜாண - அறிக. எ-று.

(க-ரை) : உயர்ந்த நல்லொழுக்கமுடைய நல்லறிவாளர் தன் ஆன்மாவில் புறப்பொருளை ஏற்பது இல்லை. அதனால் அவர் விரைந்து ஒப்பிலாத பேரின்பத்தை அடைகிறார். ஏ பவ்விய! உறுதியாக இதனைஅறிக!

(வி-ரை) : வீடுபேறு உயிர் ஒழுக்கத்தால் அடையப்படுவது, அந்த உயிர் ஒழுக்கம் நல்லறிவால் அமைகிறது. அப்படி நல்லறிவும் உயர் சையம (உயிர்) ஒழுக்கமும் உடையவர் தன் ஆன்மாவில் புறப்பொருளை ஏற்பது இல்லை. புறப்பொருள் என்றது காம வெகுளி மயக்கம் ஆகும். இவை பொய்ம்மை நிலையில் காணப்படும் பையைகள் (பரியாயங்கள்) அல்லது திரிபுகள். நற்காட்சி பெற்று நல்லறிவும் நல்லொழுக்கமும் ஏற்றுள்ள ஆன்மா மீண்டும் புலனார்வத்துக்கு இடம் தருவது இல்லை. ஏனெனில் தன் ஆன்ம இன்ப நிலை சுவையைத் தொட்டுப் பார்த்த நிலையில் புலனார்வம் எப்படித் தோன்றும்? இன்கனியைச் சுவைத்தவர் காஞ்சிரம் பழத்தை ஏன் விரும்பப் போகிறார்? தன்னைத் துய்ப்பவர் ஆவதால் புறத்தே போகப் பொருளை நோக்குவதில்லை என்கிறார். அவரே விரைந்து வீட்டின்பத்தை அடைகிறார் என்று எடுத்துக் காட்டி பவ்வியனுக்கு அறிவுறுத்துகிறார் ஆசாரியர்.

காட்சியைக் கலக்கி ஞானக்
கதிர்ப்பினைத் திரித்துப் புக்கான்
மீட்சியில் உலகம் ஏற்றும்
ஒழுக்கத்தை அழித்து வையம்

1. சிறுபஞ்சமூலம் 36.

ஆட்சி பெற் றவனை வையம்
அதனுக்கே அடிமை ஆக்கும்
மாட்சித்தால் நிதானம் தன்னை
மனங்கொள்ளார் மதியின் மிக்கார்[1]

என்பார் மேருமந்திர புராணமுடையார். ஆன்மா புறம் நோக்கினால் மீட்சியில் உலகம் ஏற்றும் ஒழுக்கம் சிதையும் எனச் சயந்தன் வரலாற்றால் அறியாலம்.

நல்லறிவராய், ஏற்பது, விலக்குவது அறிந்து, சையம (உயிர்) ஒழுக்கம் உடையவராய் புறப்பொருளைத் தன் உயிரில் ஏற்காதவர் பேரின்ப நிலையை அடைகிறார் என்கிறார் ஆசாரியர்.

44. ஏவம் ஸங்க்கேவேண ய பணியம் ணாணேண வீயராஏண|
ஸம்மத்த ஸஞ்ஜமாஸய துண்ஹம் பி உதேஸியம் சரணம்||

(ப-ரை) : ஏவம் - இப்படி, ஸங்க்கேவேண - சுருக்கமாக, வீயராஏணே - வீதராக பகவான், ணாணேண - முழுதுணர் அறிவால், ஸம்மத்த - காட்சி, ய - மற்றும், ஸஞ்ஜம - சையம், ஆஸய - சார்ந்துள்ள, சரணம் - நல்லொழுக்கம், மெய்க்காட்சி ஒழுக்கம் (ஸம்யக்த்வ சரண) மற்றும் உயிர்நோக்கு ஒழுக்கம் (ஸய்யம சரணம்) என, துண்ஹம்பி - இரண்டு வகையாக, உதேஸியம் - அருளியுள்ளது, பணியம் - கூறப்பட்டுள்ளது. எ-று.

(க-ரை) : காட்சியும் சையமும் இணைந்த நல்லொழுக்கம் மெய்க்காட்சி ஒழுக்கம் சையம ஒழுக்கம் என வீதராக பகவான் அருளியது சுருக்கமாக இந்நூலுள் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : ஆசாரியர் இந்நூலுள் முழுதுணர் அறிவர் கூறிய நல்லொழுக்கம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது எனக் குறிப்புக் காட்டியுள்ளார். விரிவு வேண்டுவோர் பிற நூல்களுள் காணலாம் என்பது கருத்து. மூலாசாரம் முதலான நூல்களில் விரிவு காணலாம்.

45. பாவேஹ பாவஸுத்தம் புடு ரஇயம் சரணபாஹுடம் சேவ|
லஹுசஉகஇ சஇஊணம் அஇரேண புணப்பவா ஹோஇ||

(ப-ரை) : சரண பாஹுடம் - சாரித்திர பாகுடம், புடு - தெளிவாக, ரஇயம் - ஆக்கப்பட்டுள்ளது, பவ்விய! நீ, ஸித்தம் - தூய, பாவ - எண்ணத்துடன், பாவேஹ - எண்ணுக! சேவ - அதனால் இனி, அஇரேண - விரைந்து, சஉகஇ - நான்கு கதிகளை, லஹு - எளிதாக, சஇஊணம் - நீங்கி, அபுணப்பவா - மீண்டும் பிறவாத முத்தி, ஹோஈ - ஆகும். எ-று.

1. மேருமந்தரபுராணம் : 139.

(க-ரை) : பவ்விய! சாரித்திர பாகுடம் தெளிவாக ஆக்கப்பட்டுள்ளது. நீ தூய எண்ணத்துடன் எண்ணுக. விரைந்து பிறவியை எளிதாக நீங்கி வீடுபேறு அடைக.

(வி-ரை) : இந்நூலை (சாரித்திர பாகுடத்தை) கேட்டு, கற்று, ஏற்று, மீண்டும் மீண்டும் நினைந்து பயிற்சி செய்ய வேண்டும் என்பது அறிவுரை. இதனால் நல்லொழுக்க இயல்பை அறிந்து கைக்கொள்ள ஈடுபாடு தோன்றும், பிறகு கைக்கொண்டு ஒழுகும் போது நான்கு கதிகள் துன்பம் நீங்கி வீடுபேறு கிடைக்கும். பிறகு பிறவியின் பிறப்பு இறப்பு துன்பம் இராது. ஆகையால் உயிருக்கு நன்மை வேண்டுவோர் இவ்வாறு நூலை இடைநெகிழாது கற்கலாம்.

-மங்கலம்-

குறிப்பு : இந்நூலைத் தமிழ் உரையுடன் வெளியிட துணை நின்ற நூல்கள் :

1. பணிவுக்குரிய ஆர்யிகை சுபார்சுவமதி உரை வரைந்துள்ள "ஷட்பாஹுடம்".

2. பண்டிதர் ஜயசந்திரர் உரை வரைந்துள்ள "அஷ்ட பாகுடம்".

போத பாஹுடம்

மங்கல நுழைவாயில்

ஆசாரியர் குந்தகுந்தர் அருளிய ‘அட்ட பாஹுட’ தொகுப்பில் நான்காவது நூலாக உள்ளது ‘போஹ பாஹுட’ - ‘போத பாகுடம்’, ‘போஹ’ எனில் அறிவு அல்லது அறிவு புகட்டுதல் என்று பொருள் ஆகும். இந்நூலுள் ஆசாரியர் அறிவு பெற வேண்டிய பதினோரு இடங்களைச் சுட்டுகிறார். இவ்விடங்கள் ஜிந நெறியில் குறிப்பாகத் துறவு நெறியில் முதன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. ஜிந நெறி அஹிம்ஸை நெறியாகும். அந்நெறியில் கால் பதித்து முன்னேற பற்றுகள் அனைத்தையும் நீக்க வேண்டும். பற்றுகள் அணுவளவு இருந்தாலும் அகிம்சையின் முழுமையைத் தொடமுடியாது. ஏனெனில் அஹிம்ஸை ஆன்ம வடிவமாகும். அங்கே பற்றுக்குச் சற்றும் இடமில்லை. ஆனால், அவர் காலத்தில் இப்போக்குக் காணப்படவில்லை என்று தெரிகிறது. ஜிந நெறியில் பல வழுக்கள் அல்லது பல வழுக்கல்கள் அவர் காலத்தில் இருந்து உள்ளன. தேவர் அல்லது அருகர் குறித்தும், துறவு அல்லது துறவியர் குறித்தும் பல வழுக்கல்கள் அவர் காலத்தில் இருந்துள்ளன. ஜிந நெறியில் அருக நிலையும் துறவு நிலையும் செம்மையாக அமைய வேண்டும். அவற்றில் வழுக்கல்கள் ஏற்பட்டால் ஜிந நெறி அமைய முடியாது. அதனால் ஜிந நெறியில் அருகர் நிலை, துறவு நிலை குறித்துத் தெளிவு செய்கிறார். அதனைப் பதினோரு தளங்களில் வைத்துக் காட்டுகிறார். அவை:

1. ஆயதனம் (காதை: 5-7), 2. சேதியம் (8-9), 3. படிமம் (10-13), 4. தம்ஸணம் (14-15), 5. பிம்பம் (16-18), 6. முத்திரை (19), 7. ஞானம் (20-23), 8. தேவர் (24-25), 9. தீர்த்தம் (26-27), 10. அருகர் (28-41), 11. துறவியர் (பிரவ்ரஜ்யா - 42-59). 62 காதைகள் மொத்தம் உள்ளன.

இப்பதினொன்றும் முனிவர், அருகர், சித்தர் ஆகிய மூவர் நிலை பற்றியே பேசுகின்றன. இவற்றுள் செம்பாதி காதைகள் துறவியர்-முனிவர் குறித்தனவாக உள்ளன. அதனால் ஆசாரியர் காலத்தில் ஜிந துறவு நெறியில் வழுக்கல்கள் பல காணப்பட்டுள்ளன என்று உய்த்துணர முடிகிறது. ஜிந துறவு நெறியில் வழுக்கல்கள் பலவாகப் பல்கியுள்ள நிலையை இன்றும் காணமுடிகிறது. ஆசாரியருடைய காலத்திலேயே இவ்வழுக்கல்கள் தொடங்கியுள்ளன என்பது தெளிவு.

இக்காலத்தில் தீர்த்தங்கரர் இல்லை. பகவான் மகாவீரருக்குப் பிற்பாடு இனி ஐந்தாம் காலம் முடியும் வரை ஜிந துறவியரே இருப்பர். ஜிந நெறியை அறிய அவரே ஆதாரமாகும். ஆனால் அத்துறவியரோ மூல நெறியிலிருந்து விலகிச் செல்கின்றனர்.

கடைசி சுருத கேவலி பத்திரபாகு சுவாமியைப் பணிந்து நூலை முடிக்கிறார் ஆசாரியதேவர். மகாவீரருடைய முத்திக்குப் பிறகு கடைசி சுருத கேவலி வரை ஜிந நெறி சீராக/செவ்வையாக வந்துள்ளது. அவருக்குப் பிறகு தான் ஜிந நெறியில் வழுக்கல்கள்

தோன்றத் தொடங்கியுள்ளன. ஆசாரியருடைய காலத்தில் அவை மிகத் தெளிவாகவே காணப்பட்டுள்ளன. அதனால் கடைசி சுருதகேவலி பத்திரபாகு சுவாமியை மூல ஜிந நெறியின் சின்னமாக எடுத்துக்கொண்டுள்ளார். இதனால் அப்போதே மூல நெறியிலிருந்து நழுவிய கிளைகள் கிளைக்கத் தொடங்கியுள்ளன என்ற குறிப்பைப் பெற முடிகிறது. இந்நூல் சுருதகேவலி நெறியினது என்று சுட்டுவதனால் இதுவே ஜிந நெறி எனப்பதிவு செய்துள்ளார். அதனால் இந்நூல் சுட்டும் உண்மைகள் பகவான் மகாவீரர் அருளிய உண்மைகள் எனக் காட்டியுள்ளார்.

ஜிந நெறி ஆன்மாவை பரமான்ம நிலைக்கு உயர்த்தும் நெறி ஆகும். அதனால் இந்நெறியில் பற்றுகளுக்கு அணு அளவும் இடமில்லை. இந்த அடிப்படையிலேயே ஆன்ம முயற்சியாளன் அறிந்து / தெளிந்து சார வேண்டிய அருகர், சாதுக்கள் (பற்றற்ற துறவியர்) தன்மையை / இயல்பைத் தெளிவு செய்கிறார். பஞ்ச பரமேட்டிகளை அருகர், சித்தர், சாதுக்கள் என மூன்றில் அடக்கலாம். இந்நூலும் அம்மூவர் பற்றியே விளக்குகிறது. அவரைத் தெளிய வேண்டிய அளவுக்கு அடையாளங்களைச் சுட்டியுள்ளார். அவை எல்லாம் ஆன்மாவோடு தொடர்புடைய அடையாளங்கள் - புறப்பொருளோடு தொடர்புடைய அடையாளங்கள் அல்ல. ஆன்ம சாதனையில் புறப்பொருள்களுக்குச் சற்றும் இடமே இல்லை.

இன்று ஜிந நெறி என்ற பெயரில் விளங்கும் நெறிகளுள் எது மூல நெறி எனத் தெளிதல் அரிதாகும். ஆனாலும் நன்கு முயன்றால் நெறியைத் தெளியலாம். அதுவும் குறிப்பாகத் துறவு நெறியைத் தெளிய வேண்டும்; துறவியைத் தெளிய வேண்டும். ஏனெனில் இக்காலத்தே ஜிந நெறி அவர் வடிவிலேயே காணப்படுகிறது. ஒன்றைக் கருத்து வடிவில் அறிவது வேறு; அறிவு (அனுபவ) வடிவில் அறிவது வேறு. கருத்துக்களைத் தேடுவாருக்கு இந்நூல் பல தகவல்களைத் தருகிறது. ஆனால் அனுபவ வடிவில் அறிவாருக்கு இந்நூல் உரை கல்லாகத் திகழ்கிறது என்பதே உண்மை. ஆகமங்கள் அறிவு புகட்டுவன மட்டுமல்ல. அனுபவத்தைத் தெளியச் செய்யும் உரைகல்லும் ஆகும். இது ஜிந நெறியின் மூல ஆதார உண்மையைப் பேசுகிறது. உரை கல்லாகப் பயன்கொள்வோருக்கு உண்மை விளங்கும்!

பயில்க! உரைத்துப் பயன் பெறுக!

உங்கள் மங்கல நுழைவு அமைவதாக!

ஓ சாந்தி!

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

போத பாகுடம்

எனும்

அறிவு நூல்

(பாகத மூலமும். தமிழ் உரையும்)

ஆசாரியர் வாழ்த்து

1. பஹூ ஸத்த அத்த ஜாணே ஸஞ்ஜம ஸம்மத்த ஸூத்த தவயரணே|
வந்தித்தா ஆயரிஏ கஸாய மல வஜ்ஜிதே ஸூத்தே ||

(பதவுரை) : பஹூ-பல, ஸத்த-மெய்ந்நூல்களின் (சாத்திரங்களின்), அத்த-கருத்தை, ஜாணே-அறிபவர், ஸஞ்ஜம-சய்யம (புலனும், இம்சையும் அடங்கிய ஒழுக்கம்), ஸம்மத்த-நற்காட்சி, தவயரணே-தவ ஒழுக்கம் (இவற்றில்), ஸூத்த-தூய்மை, கஸாய மல-கசாயம் (துவர்ப்பு) எனும் அழுக்கு, வஜ்ஜிதே-நீங்கிய, ஸூத்தே-தூய்மை உடைய, ஆயிரிஏ-ஆசாரியரை, வந்தித்தா-வணங்கி, என்ற வாறு.

2. ஸயல ஜண போஹணத்தம் ஜிண மக்கே ஜிணவரேஹிம் ஜஹ பணியம் |
வோச்சாமி ஸமாஸேண சக்காய ஸூஹங்கரம் ஸூணஹ ||

(பதவுரை) : ஜினவரேஹிம்-தீர்த்தங்கரரால், ஜிணமக்கே-ஜிந நெறியில், சக்காய-ஆறுவகை உயிர்களுக்கு, ஸூஹங்கரம்-சுகம் தரும் அறம், ஜஹ-எவ்வாறு, பணியம்-உரைக்கப் பட்டுள்ளது, (அவ்வாறே) ஸயலஜண-எல்லா மக்களுக்கும், போஹணத்தம்-அறிவு கொளுத்த, ஸமாஸேண-சுருக்கமாக, வோச்சாமி-உரைப்பன், ஸூணஹ-கேட்பீராக, எ.று.

(கருத்துரை) : பல நூல்களின் பொருளை அறிபவரும், சய்யமத்திலும் நற்காட்சியிலும் தவ ஒழுக்கத்திலும் தூய்மையுடையவரும், கசாயம் இல்லாத வருமான ஆசாரிய தேவரைப் பணிந்து தீர்த்தங்கரரால் அறுவகை உயிர்களுக்கும் சுகம் தரும் அறம் ஜிந நெறியில் உரைக்கப் பட்டுள்ளவாறு எல்லா மக்களுக்கும் அறிவு புகட்ட சுருக்கமாக உரைப்பன்.

(விளக்கவுரை) : ஆசாரியர் நூலின் மங்கல வாழ்த்தாக இரண்டு பாடல்களை (யுகளம்) அமைத்துள்ளார். பொதுவாக மங்கலப் பாடலாக பகவான் வாழ்த்தை ஆக்குவர். அல்லது ஐங்குரவரை (பஞ்ச பரமேட்டிகளை)ப் பாடுதல் மரபு. ஆனால், இந்நூலில் பொதுவாக ஆசாரியரைக் குறிப்பிட்டு இருப்பதால் கணதரர் முதலாகத் தன்

குரு ஆசாரியர் வரை வாழ்த்தியுள்ளார் எனக் கருதலாம். பஞ்ச பரமேட்டியுள் ஒருவரை வழிபட்டதால் ஐவரையும் வழிபட்டுள்ளார் எனக் கொள்ளலாம்.

நூலை மங்கல வாழ்த்துடன் தொடங்க வேண்டும் என்பதே முதன்மை.

‘வழிபடு தெய்வம் வணக்கம் செய்து
மங்கல மொழிமுத லாக வகுத்தே
எடுத்துக்கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் இன்றி இனிது முடியும்’

என்ப ஆதலின்[1].

இவ் வாழ்த்துப் பாடலில் ஆசாரியர் குணச் சிறப்புகளாக ஐந்தைச் சுட்டியுள்ளார். அவை:

1. மெய்ந் நூல்களில் புலமை
2. ஸய்யமத்தில் தூய்மை
3. நற்காட்சியில் தூய்மை
4. தவத்தில் தூய்மை
5. கசாயமிலா உயிர்த் தூய்மை

‘ஐவகை ஒழுக்கம் என்னும்
அருங்கலம் ஒருங்கு அணிந்தார்
மெய்வகை விளக்கம் சொல்லி
நல்லறம் மிக அளிப்பார்
பவ்வியர் தம்மைத் தம்போல்
பஞ்சநல் ஒழுக்கம் பாரித்து
அவ்வியம் அகற்றும் தொல்லா-
சிரியர் எம் அல்லல் தீர்ப்பார்.

என ‘யசோதர காவிய’ நூலுடையார் ஆசாரியர் பண்புகளைப் போற்றுதலைக் காணலாம்[2]. ஆசாரியர் 36 குணநலன்களை உடையவர் என்பர். அவை : (1) ஐவகை ஒழுக்கம் (ஆசாரவான்), (2) அங்கம் பூர்வம் அறிவு, நற்காட்சி முதலானவற்றுக்கு ஆதாரம், (3) கழுவாய் விதிகளில் வல்லமை, (4) நடைமுறை ஒழுக்கங்களில் விழிப்புடைமை (ஆசமமாதி), (5) துறவி எச்சரிப்பு (ஆயபயகதீ), (6) ஆழ் மனக்குறை அறிதல் (தோஷாபாஷக), (7) குறைகள் புலப்படுத்தாமை (ஆச்சிரவக), (8) இன் அமைதி தருதல் (நிர்வாபக), (9) குறித்த உணவை ஏலாமை (அனுசிஷ்ட போஜி), (10) இடம் தருவாரிடம் உணவு ஏற்காமை (சய்யாசனம்), 11. அரச உணவு ஏற்காமை

1. நன்னூல் 55 உரைமேற்கோள்,
2. யசோதர காவியம், 54

(அராஜபுக்), (12) தன் செயல் ஊக்கம் (கிரியா யுக்த), (13) துறவு தருதல் (விரதவான்), (14) உயர்ந்த குணம் (ஜ்யேஷ்ட ஸத் குணம்), (15) குறை ஆய்ந்து நீக்கல் (ப்ரதிக்ரமி), (16) ஆறுதிங்கள் தங்கல், (ஷண் மாஸ யோகி), 17-18 இரண்டு இடங்களில் தங்கல் (தோ நிஷத்யக), 19-30 அனசனம் முதலான ஆறு புறத் தவங்கள், கழுவாய் முதலான ஆறு அகத் தவங்கள், 31-36 ஆறு நாள் கடமை (ஷட் ஆவஸ்யகம்).

இனி, பத்து அறம், பன்னிரண்டு தவம், 5 ஒழுக்கம், 6 நாள் கடமை, 3 குத்தி, என 36 குணமுடையவர் எனக் கூறும் மரபும் காணப்படுகிறது.

ஆசாரியர் குறிப்பிடும் ஐந்து குணச் சிறப்புகளில் 36 ஒழுக்கங்களும் அடங்கிப் போதலை நுண்ணறிவினர் அறியலாம். ஆசாரியருடைய சிறப்பு தானும் இக் குணங்களில் ஒழுகிப் பிறரையும் ஒழுகச் செய்தலாம். இந்த நோக்கிலேயே ஆசாரியருடைய சிறப்புகள் பேசப்படுகின்றன. முத்தி நெறியில் ஆசாரியருடைய பதவி தனிச் சிறப்புடையதாகும். ஆன்மீக முயற்சியாளனை (சாதகனை) வழிப்படுத்துவதில் அவர் பங்கு பெரிதாகும். இந்த நோக்கில் இந்த மங்கல வாழ்த்தினைக் காண வேண்டும்.

அடுத்து, இந்நூலுள் சொல்லப்படுவன முழுதுணர் அறிவர் அருளியன எனக் குறிப்பிடுகிறார். அதனால் அவை உண்மையானவை பிழைபடாதவை என்பதனைப் பெற வைத்துள்ளார். ஜிந நெறி என்று சுட்டியமையால் அகிம்சை நெறி என்பதாயிற்று. அதனால்தான் ஆறு வகை உயிர்களுக்கும் நன்மை செய்யும் நெறி என்றார். ஆறு வகை உயிர்களாவன : 1. மண்ணுடலி, 2. நீருடலி, 3. நெருப்புடலி, 4. காற்றுடலி, 5. தாவர உடலி, 6. இரு பொறி முதலாக ஐம் பொறிகள் வரை உள்ள பிற உயிர்கள். இந்த ஆறுவகை உயிர்களும் போற்றப்படும் நெறியே ஜிந நெறி.

நூலை ஆக்க காரணம் கூறும் போது எல்லா மக்களுக்கும் அறிவு கொளுத்த நூல் உரைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். எல்லா மக்களும் (‘ஸயல ஜண’) என்ற தொடர் ஆசாரியருடைய அருளுணர்வைக் காட்டுகிறது. எல்லா உயிர்களும் துன்பத்திலிருந்து விடுபடும் நெறியைச் சொல்ல வேண்டும் எனும் உணர்வு அருளுணர்வாகும். அது அகிம்சையின் வடிவமாகும். மனமுடைய உயிரே அறநெறி வழிச் செல்ல முடியும். அப்படிச் செல்லும் போது அனைத்து உயிர்களுக்கும் நன்மையே நிகழ முடியும். துன்பம் நிகழாது. அதனால்தான் எல்லா உயிர்களுக்கும் என்றார். ‘சுருங்கிய வடிவில் கூறுகிறேன்’ என்பது ‘முழுமையின் எல்லை வரம்பற்றது அதனை அடைய தேவையான அளவு மட்டும் உரைக்கிறேன்’ என்பதாம். சொல்லின் ஆற்றலும் வரம்புடையது என்பதால் சுருங்கச் சொன்னார் எனினும் அமையும்.

3. ஆயதணம் சேதிஹரம் ஜிணபடிமா தம்ஸணம் ச ஜிணபிம்பம்|
பணியம் ஸுவீயராயம் ஜிண முத்தா ணாணமாதத்தம்||

(ப-ரை) : ஆயதணம்-ஆயதனம், சேதிஹரம்-சைத்யாலயம், ஜிணபடிமா-ஜிந படிமை, தம்ஸணம்-தரிசனம், ச-மற்றும், ஸுவீயராயம்-வீதராக வடிவம் என, பணியம்-சொல்லப்பட்டுள்ள, ஜிண பிம்பம்-ஜிந பிம்பம், ஜிணமுத்தா-ஜிந முத்திரை, ணாணமாதத்தம்-ஆன்ம அறிவு. எ.று.

4. அரஹந்தேண ஸுதிட்டம் ஜம் தேவம் தித்தமிஹ ய அரஹந்தம்|
பாவஜ்ஜ குண விஸுத்தா இய ணாயவ்வா ஜஹாகமஸோ||

(ப-ரை) : தேவம்-தேவன், தித்தம்-தீர்த்தம், ய-மற்றும், அரஹந்தம்-அருகர், குண-குணங்களில், விஸுத்தா-தூய்மையுடைய, பாவஜ்ஜ-துறவி, இய-என்று, ஜம்-எவ்வாறு, அரஹந்தேண-அருகரால், ஸுதிட்டம்-நன்கு அருளப்பட்டுள்ளது (அவ்வாறு) ஜஹாகமஸோ-வரிசையாக, இஹ-இங்கு (இந்நூலுள்) ணாயவ்வா-கூறப்பட்டுள்ளது என அறிதல் வேண்டும். எ.று.

(க-ரை) : அருகரால் அருளப்பட்ட ஆயதனம், சைத்தியாலயம், ஜிந படிமம், தம்ஸணம், ஜிந பிம்பம், ஜிந முத்திரை, ஆன்ம அறிவு, தேவர், தீர்த்தம், அருகர், துறவி ஆகிய பதினோரு இடம் குறித்து முறையே இந்நூலுள் அவர் அருளியவாறே கூறப்பட்டுள்ளன.

(வி-ரை) : ஆசாரியர் இங்குப் பதினோரு இடங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஜிந நெறியில் மிக முதன்மையான இடங்கள் இவை. இந்த அற இடங்களில் குறை இருத்தல் கூடாது. எந்த ஒரு நெறியும் அதற்கு உரிய கோட்பாட்டுக்கு இசைய அமையும் போதுதான் அந்நெறியில் செல்லுதலின் பயனை அடைய முடியும். இல்லை எனில் அடைய முடியாது. கோட்பாடு குறி என்றால் நெறி கருவியாகும். கருவி பழுதுபடுமானால் குறியை அடைய முடியாது. உருளை ஒழுங்காகச் சுற்றவில்லை என்றால் பானையை வனைய முடியாதல்லவா?

முத்தி நெறியில் இவ்விடங்கள் பழுதுபடாமல் இருத்தல் வேண்டும். ஆனால் ஆசாரியர் காலந்தொடங்கி இவை பழுதுபட்டே வந்துள்ளன. இன்றும் பழுதுபட்டு வருகின்றன. இது தொடரும். எனினும், முத்தி நெறி என்றும் உள்ள நெறி ஆகும். அதில் செல்வோனும் என்றும் உள்ளவனே. உண்மையை-உள்ளவாறு உள்ளதை-உரைக்கும் போது உண்மையான முயற்சியாளன் விழிப்பாக நடப்பான். அதனால்தான் ஆசாரியர் முழுதுணர் அறிவர் கூறிய அம்முறைப்படி இங்கே உரைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிய வேண்டும் எனச் சுட்டியுள்ளார்.

காலப் போக்கில் அற நெறியில் பல வழுக்கல்கள் தோன்றிவிடுகின்றன. அருக நெறியும் அதற்கு விதி விலக்கு அன்று. இங்கேயும் பல வழுக்கல்கள் தோன்றியுள்ளன.

ஆசாரியருடைய காலத்திலேயே அவை தொடங்கிவிட்டன, அதனால் ஆசாரியர் அந்த வழுக்களை களைய எண்ணினார். மக்கள் உண்மையான நெறியைத் தெளியவில்லை. புறத்தோற்றங்கள் உண்மை எனக்கொண்டு அதிலே ஆழ்ந்து போகின்றனர். அவர்களுக்கு அறிவு கொளுத்த வேண்டியே இந்த நூலை ஆக்கியுள்ளார். அருகர் நெறியில் முதன்மையான பதினோரு இடங்களை எடுத்துக் கொண்டு அவற்றின் உண்மையான இயல்பு அல்லது இலக்கணத்தை இங்கே தெளிவுபடுத்தியுள்ளார். முழுதுணர் அறிவர் அருளியவாறே தெளிவு செய்து உள்ளார்.

1. ஆயதனம்

5. மணவயணகாய தவ்வா ஆயத்தா* ஜஸ்ஸ இந்தியா விஸயா|
ஆயதணம் ஜிண மக்கே ணித்திட்டம் ஸஞ்ஜயம்ரூவம் ||

(பதவுரை) : ஜிண மக்கே-ஜிந நெறியில், மணவயண காய-மனம் மொழி உடல், தவ்வா-திரவியம், ஜஸ்ஸ-எவர் இந்தியா-ஐம்பொறிகளின், விஸயா-புலன்கள், ஆயத்தா-ஆட்சிகொண்டார், ஸஞ்சயம்-புலனடங்கிய, ரூவம்-உருவம், அதாவது அம்முனிவர் வடிவம், ஆயதணம்-சேரிடம் என, ணித்திட்டம்-கூறப்பட்டுள்ளது. எ.று.

(கருத்துரை) : ஜிந நெறியில் மனம் மொழி உடல் திரவியமும் மற்றும் ஐம்புலன்களும் அடங்கிய முனிவர் வடிவம் சேரிடம் எனக் கூறப்பட்டுள்ளது.

(விளக்கவுரை) : ஆசாரியர் இங்கே முனிவர் உடல் தோற்றத்தை 'ஆயதனமாகக்' குறிப்பிட்டுள்ளார். 'ஆயதனம்' எனில் வாழிடம் என்று பொருள். ஆன்மீக முயற்சியாளன் சார்ந்து நிற்க வேண்டிய இடங்களை 'ஆயதனம்' என்று குறிப்பர். பணிவுக்கு உரிய இடம் என்று சொல்லுதலும் உண்டு. பணிவுக்கு உரியதல்லாத இடத்தை 'அவிநயம்' என்பர்.

'நல்லறத்தின் தீர்ந்த வணக்கத்தை நல்லோர்கள்
சொல்வர் அவிநயம் என்று'[1]

முனிவருடைய தோற்றம்-உருவம் பணிவுக்கு உரியது. அம்முனிவருடைய இயல்பைச் சுட்டும்போது மனம் மொழி உடல் மூன்றையும், ஐம்புலங்களையும் தம் ஆளுமையில் அடக்கியவர் என்று குறிப்பிட்டுள்ளார். புலம் அடங்கிய (ஸய்யமி) முனிவர் தோற்றமே போற்றுதலுக்கு உரியது. முனிவர் தோற்றத்தை விளக்கும் போது, 'துறவியரிடையே அமர்ந்துள்ள அவர் முத்தி நெறியின் உருவமாக பேச்சு இன்றி தன் வடிவாலே முத்தி நெறியைச் சுட்டுவது போல இருந்தார்' என்று ஆசாரியர் பூஜ்யபாதர் குறிப்பிடுவார்[2].

---

* *பா.பே. 'ஆஸத்தா'*

1. அருங்கலச் செப்பு, 40 ; 2, ஸர்வார்த்த ஸித்தி மங்கலாசரண உரை.

*

அத்தகு உருவையே இங்கே ஆசாரியர் சுட்டுகிறார், இங்கே 'தவ்வா' என்ற சொல்லாலே உடல் கூறுகளான மனம் மொழி மெய்களைச் சுட்டியுள்ளார்.

இம்மூன்றும் புற்கல வடிவம். புலனுணர்வு உயிர் வடிவம். எனவே இரண்டையும் அடங்க வைத்துள்ள முனிவர் உருவம் இங்கே போற்றப்பட்டுள்ளது.

'ஆயதனம்' இந்நூலுள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. உடல் 'ஆயதனம்' பற்றியது இந்த காதை.

6. மயராயதோஸ மோஹோ கோஹோ லோஹோ ய ஜஸ்ஸ ஆயத்தா|
பஞ்ச மஹவ்வயதாரா ஆயதனம் மஹரிஸீ பணியம்||

(ப-ரை) : மய-செருக்கு, ராய-ஆர்வம், தோஸ-செற்றம், மோஹோ-மயக்கம், கோஹோ-வெகுளி, லோஹோ-கடும்பற்று, ய-மேலும் மாயை முதலானவற்றை, ஆயத்தா-விலக்கிவிட்டாரோ, ஜஸ்ஸ-எவர், பஞ்ச-ஐந்து, மஹவ் வயதாரா-பெரு நோன்புகளை ஏற்றுள்ளாரோ (அந்த), மஹரிஸீ-மாமுனிவர், ஆயதனம்-சேரிடம், பணியம்-என்று கூறப்பட்டுள்ளது.

(க-ரை) : செருக்கு, ஆர்வம் (ராக) செற்றம் (த்வேஷம்), மயக்கம், வெகுளி, கடும்பற்று, மாயை முதலான உயிரின் விகார உணர்வுகளை விலக்கி ஐம்பெரு நோன்புகளை நோற்கின்ற மாமுனிவர் சேரிடமாகும்.

(வி-ரை) : ஆசாரியர் இங்கே அக மலங்களை விலக்கிய முனிவரைக் காட்டுகிறார். செருக்கு முதலானவை உயிரில் காணப்படும் அக மலங்களாகும். அம்மலங்களை நீக்கும் போதுதான் அகிம்சை, பொய்யாமை, கள்ளாமை, காமமின்மை, பற்றின்மை எனும் ஐம்பெரு நோன்புகளை நோற்க முடியும். அகநிலையில் தோன்றும் அழுக்கு நீங்கிய நிலையே ஐம்பெரும் நோன்பு வடிவமாகக் காட்சி தருகிறது. அக்காட்சிக்கு உரியவர் மாமுனிவர். அவரை 'மஹரிஸீ' என்கிறார்.

'ரிஷி' என்ற சொல் முக்காலப் பொருள்களை அறியும் துறவியைக் குறிப்பது என்பர். அம் மாமுனிவர் சேரிடமாவார். முன் காதையில் ஆசாரியர் முனிவரது போற்றுதலுக்குரிய உருவைச் சுட்டினார். இந்த காதையில் அக நிலை புற நிலை இரண்டையும் காட்டியுள்ளார் எனலாம். போற்றுதலுக்கு உரிய முனிவர் அகத்தாலும், புறத்தாலும் எப்படி அமைவர் எனக் காட்டியுள்ளமையால் இவற்றுக்கு எதிராக உள்ளவர் போற்றுதலுக்கு உரியவர் ஆகார் என்பதனை உய்த்துணர வைத்துள்ளார்.

முனிவர்கள் பல தோற்றங்களில் காணப்படுகின்றனர். அத்தோற்றங்களைக் கண்டு மயங்காமல் உண்மையான முனிவரைக் கண்டு தெளிந்து போற்ற வேண்டும். கமண்டலம், மயிற்பீலி (பிச்சி), கையில் ஏந்திக் கொண்டு இங்குச் சுட்டிய பண்புகளில் விலகியவரானால் அவரைப் போலித் துறவியர் என்பர். அவர் போற்றுதலுக்கும், பணிதலுக்கும் உரியவர் அல்லர் என அறிதல் வேண்டும்.

7. ஸித்தம் ஜஸ்ஸ ஸதத்தம் விஸுத்த ஞானஸ்ஸ ணாணஜுத்தஸ்ஸ|
ஸித்தாயதணம் ஸித்தம் முனிவரவஸஹஸ்ஸ முனிதத்தம் ||

(ப-ரை) : விஸுத்த-தூய, ஞானஸ்ஸ-தவமுடைய, ணாண-முழு அறிவு, ஜுத்தஸ்ஸ-உடைய, முனிவர-சிறந்த முனிவருள், வஸஹஸ்ஸ-முதன்மையுடைய, முனிதத்தம்-எல்லா பொருளையும் அறிந்துள்ள, ஜஸ்ஸ-எவருடைய, ஸதத்தம்-ஆன்மா முழுத்தூய்மையை, ஸித்தம்-அடைந்து விட்டது (அவரே), ஸித்தாயதணம்-'ஸித்தாயதனம்', ஸித்தம்-அடைந்தவராம். எ.று.

(க-ரை) : தூய தவமும், முழு அறிவும், முனிவருள் முதன்மையும் உடைய முழுதுணர் அறிவர் 'ஸித்தாயதனம்' (சேரிடம்) ஆவார்.

(வி-ரை) : ஆசாரியர் மூன்றாவது சேரிடமாக முழுதுணர் அறிவரைக் குறிப்பிட்டுள்ளார். முன் இரண்டு காதைகளில் முனிவரையும் இக்காதையில் முனிவருள் முதன்மையான முழுதுணர் அறிவரையும் 'ஆயதனமாக'க் குறிப்பிட்டுள்ளார். ஆயதனம்-சேரிடம். அற மரபில் பிறர் சார்தற்கு-சேருதற்கு ஆதாரமானவர் 'ஆயதனம்' ஆவர். அதாவது பிறருடைய போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியவர் ஆவார்.

நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் வலிவும், வளமும் பெற நிமித்த காரணமானவரை 'ஆயதனம்'-சேரிடம் என்பர். அந்த 'ஆயதனம்' புலனடங்கிய முனிவர் அல்லது முழுதுணர் அறிவரே ஆக முடியும். ஏனெனில் முத்தி நெறியில் மும்மணி அடையவோ வளம்படவோ அவர்தம் சார்பே வேண்டி உள்ளது. அதனால் ஆசாரியர் பற்றற்ற தோற்றமும் புலனடங்கிய இமிசை இலா ஒழுக்கமும் உடைய முனிவரும் அல்லது நான்கு காதி கருமங்களை அழித்த முழுதுணர் அறிவரும் சார்தற்கு அதாவது போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியவர் என்று காட்டினார். இவர் தவிர பிறர் எவரும் வழிபடுதலுக்கு உரியவர் அல்லர். கமண்டலமும் மயிற் பீலியும் உடைய புறத் தோற்றம் மட்டும் போதாது. ஏனெனில், முனிவர் அல்லது முழுதுணர் அறிவர் வழிபாட்டில் வழிபடுவோனின் ஆன்ம விளக்கம் அமைந்துள்ளது. அந்த ஆன்ம விளக்கம் பெற புறத் தோற்றம் மட்டும் போதாது என்பதனை இந்த காதைகள் வழி ஆன்மீக முயற்சியாளருக்கு அறிவு புகட்டுகிறார் எனத் தெளிய வேண்டும். ஜிநர் ஆணைக்கு அல்லது ஜிந நெறிக்குப் புறம்பாக நடப்பவர் போலிகள் என ஒதுக்கப்படுவர். அவர் ஒருக்காலும் ஆயதனமாக - சாரும் இடமாக - ஆக முடியாது. ஜிந நெறியிலும் போலிகள் காணப்படுகின்றனர். அவரை ஆயதனமாகக் கருதக்கூடாது.

2. சைத்யாலயம்

8. புத்தம் ஜம் போஹந்தோ அப்பாணம் சேதயாஇம் அண்ணம் ச|
பஞ்ச மஹவ் வய ஸுத்தம் ணாணமயம் ஜாண சேதிஹரம்||

(ப-ரை) : புத்தம்-அறிவு வடிவ ஆன்மாவை அறிந்தவர், ச-மற்றும், அண்ணம்-பிற, அப்பாணம்-உயிர்களை, சேதயாஇம்-அறிவு வடிவமாக, போஹந்தோ-அறிகிறவர், ஜம்-அதனால், பஞ்ச-ஐந்து, மஹவ்வய-பெருநோன்புகளில், ஸுத்தம்-தூய்மையும், ணாணமயம்-அறிவு மயமாகவும் உள்ளவரே, சேதிஹரம்-'சைத்யாலயம்' என, ஜாண-அறிக. எ.று.

(க-ரை) : அறிவு வடிவ ஆன்மாவை அறிந்தவரும், உயிர்களை அறிவு வடிவமாக அறிந்தவரும், பெரு நோன்புகளில் தூய்மை உடையவரும், அறிவு மயமாக உள்ளவரும் ஆன முனிவர் 'சைத்யாலயம்' என அறிக.

(வி-ரை) : ஆசாரியர் முனிவரை 'சைத்யாலயம்' என்று குறிப்பிடுகிறார். அறிவு மயமாக தன் ஆன்மாவை அறிவது போல பிற உயிர்களையும் அறிவு வடிவமாக அறிகிறார். அறிவு மயமாக விளங்குகிறார். தாம் ஏற்றுள்ள ஐம்பெரு நோன்புகளில் தூய்மை உடையவர். அம்முனிவர் 'சைத்யாலயம்' என்கிறார். அல்லது அருகரை 'சைத்யாலய'மாகவும் குறிக்கலாம் என சமஸ்கிருத உரைகாரர் குறிக்கிறார். அதாவது தூய ஆன்மா 'சைத்யாலயம்' எனப் பொருள்படுகிறது.

'நவ தேவதை' வழிபாட்டில் 'சைத்யாலம்' குறிப்பிடப் படுகிறது. நவதேவதை வழிபாட்டின் நோக்கத்தை இந்த காதை நோக்கில் ஆயும் போது ஒன்பது தேவதையும் ஆன்ம வடிவம் எனத் தெளிய முடிகிறது. நவ தேவதையில் ஐந்து பரமேட்டிகள் எண்ணப்படுகின்றனர். அவரோடு ஜிந தருமம், ஜிந சுருதம், ஜிந 'சைத்யம்', 'ஜிந சைத்யாலயம்' என நான்கும் எண்ணப்படுகின்றன. பஞ்ச பரமேட்டிகள் அனைவரும் ஆன்ம வடிவம். அதே போல் இந்நான்கும் ஆன்ம வடிவம் எனக் கொண்டால் நவதேவதை வழிபாட்டின் உள் கருத்தை விளங்கிக் கொள்ளலாம்.

பஞ்ச பரமேட்டிகளை அருக ஆன்மா, சித்த ஆன்மா, சாது ஆன்மா என மூன்றாகத் தொகுக்கலாம். மூவரும் ஆன்ம வடிவமே. அருகரையும், சித்தரையும் பகவானாகவும் சாதுக்களை முனிவராகவும் கருதலாம். இந்நூல் கருத்துப்படி இவர்களே வழிபாட்டுக்கு உரியவர் ஆவர். 'சைத்யாலயம்' முனிவரைக் குறிப்பதால் 'சைத்யம்', 'சுருதம்', 'தருமம்' இவையும் உண்மையில் முனிவரை அல்லது பகவானைக் குறிப்பதாகக் கொள்ள முடியும். இந்நான்கும் ஆன்ம வடிவம் ஆகும். ஆக ஒன்பது தேவதை என்பது பகவான், முனிவர் என இரண்டாக அடங்கிப் போகும். அப்போது பஞ்ச பரமேட்டி வழிபாடு ஆன்ம வழிபாடாக அமைதல் போல நவ தேவதை வழிபாடும் ஆன்ம வழிபாடாக அமைதலை அறியலாம். இரண்டு ஆன்மாக்களை ஐந்தாகவும், ஒன்பதாகவும் பிரித்து வழிபாடு செய்ய வழி காட்டியுள்ளனர் எனலாம்.

வழிபாட்டின் நுட்பத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். 'தத்குண லப்தயே' என்பது வழிபாட்டின் உண்மையான குறிக்கோள். ஆன்ம குணங்களே வழிபாட்டுக்கு உரியன. இதனை நினைவில் கொண்டு நவதேவதையை வழிபடும் போது 'தத்குண' வழிபாடு அமைதலைக் காணலாம். சடப் பொருளை வழிபடுதல் இல்லை. சடப்பொருள் வழியாக உயிர்ப் பொருளே வழிபாட்டுக்கு உரியதாகக் காட்டப்படுகின்றன. சிலையைப் பார்க்கும் போது சிற்பியின் பாவனையை, ஓவியத்தைக் காணும் போது ஓவியனின் பாவனையை உய்த்து உணர்தல் போன்றது. ஆசாரியருடைய பார்வையின் ஆழத்தைக் காட்டுகிறது இந்த காதை. அடுத்து வரும் காதைகளும் அப்படியே. உலக வழக்கில் காணப்படும் வழிபாடுகள் இங்குப் பார்வைக்கு உரியன அல்ல. இங்கு நிச்சய வழிபாடு முதன்மையானது.

9. சேஇய பந்தம் மோக்கம் துக்கம் ஸுக்கம் ச அப்பயம் தஸ்ஸ|
சேஇஹரம் ஜிண மக்கே சக்காய ஹயங்கரம் பணியம்||

(ப-ரை) : பந்தம்-கட்டும், மோக்கம்-முத்தியும், ச-மற்றும், துக்கம்-துன்பமும், ஸுக்கம்-இன்பமும், தஸ்ஸ-உடையது, அப்பயம்-ஆன்மா, அது, சேஇய-'சைத்யம்' ஆகும். அதாவது ஆன்மா 'சைத்ய'மாகும், சேஇஹரம்-அச்சைத்தியம் உள்ளது சைத்யாலயம், ஜிணமக்கே-ஜிந நெறியில் அது, சக்காய ஹயங்கரம்-ஆறுவகை உயிர்களுக்கும் நன்மை நல்குவது என, பணியம்-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : கட்டும்-முத்தியும், துன்பமும்-இன்பமும் உடையது ஆன்மா. அது 'சைத்தியம்' ஆகும். அது இருக்கும் இடம் 'சைத்யா'லயமாகும். அச் சைத்யாலயமே ஜிந நெறியில் ஆறு வகை உயிர்களுக்கும் நன்மை நல்குவது.

(வி-ரை) : ஆசாரியர் இந்த காதையில் முனிவரை 'சைத்யாலயம்' என்று சுட்டுகிறார். கட்டு முதலான உடையது ஆன்மா. அது 'சைத்யம்' என்றார். கட்டு முதலாயின ஆன்மாவை அடையாளப்படுத்துவன. அவ்வளவே. இங்கே ஆன்மாவை 'சைத்யம்' எனக் குறிப்பிட்டுள்ளது முதன்மையாகும். 'நவதேவதை'யில் வரும் 'சைத்யம்' என்பதனை இங்கே நினைவு கூர்க. அதுவும் ஆன்மாவைச் சுட்டுகிறது என அறியலாம். வழிபாட்டில் 'தத்குண லப்தயே' என்பது முதன்மை ஆகும்.

முனிவர் 'சைத்யாலயம்' என்றார். அந்த முனிவர் ஆறுவகை உயிர்களுக்கும் நன்மை செய்பவர். ஐவகைப்படும் ஒரு பொறி உயிர்களுக்கும், இரு பொறி முதலான 'திரச' உயிர்களுக்கும் அவர் நன்மை செய்பவர். அந்த உயிர்கள் தன்னைப் போல வாழ உரிமையுடையவை என முனிவர் அஹிம்சை நோக்கில் காத்தலைச் செய்கிறார். பிறருக்கும் அப்படியே உரைக்கிறார். அவற்றை முனிவர் இமிசை செய்வது இல்லை. அதுவே அவ்வுயிர்களுக்கு நன்மை ஆகும். மனமுடைய உயிர்களுக்கும் நன்மை செய்வதோடு நன்மை செய்யவும் அவற்றுக்கு உரைக்கிறார். பிறவியை ஒழித்துப்

பிறவா நிலையை அடையவும் வழி கூறுகிறார். இப்படி முனிவர் ‘சைத்யாலயம்’ ஆறுவகை உயிர்களுக்கும் நன்மை செய்கிறார். ஜிந நெறியில் துறவு ஏற்ற துறவியர் (முனிவர்) எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்கிறார் என்பது கருத்து.

ஜிந நெறியில் ஆறு வகை உயிர்களுக்கும் நன்மை செய்யும் ஆன்மாவே ‘சைத்ய’மாகப் போற்றப்படுகிறது என்பதாம். அத்தகு உயிர் வடிவை சிலையில் நிறுவி போற்றுதல் உலக வழக்காறு ஆகும். துன்பம் முதலானவற்றை உயிருக்கு அடையாளமாகக் காட்டி அந்த திரிபு நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் உயிரே இங்கே ‘சைத்ய’ மாகப் போற்றப்படுகிறது என்பதனை நுணுகி ஆய்வார் உய்த்துணர முடியும். ஏனெனில் போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரிய இடங்களின் உண்மை இயல்பை உரைப்பதே ஆசாரியர்தம் உள்ள கிடக்கை ஆகும். நூல் முழுதுக்கும் இது பொருந்தும்.

3. ஜிந படிமம்

10. ஸபரா ஜங்கம தேஹா தம்ஸண ணாணேண ஸுத்தசரணாணம்|
ணிக்கந்த வீயராயா ஜிண மக்கே ஏரிஸா படிமா||

(ப-ரை) : தம்ஸண-நற்காட்சி, ணாணேண-நல்லறிவால், ஸுத்த-தூய்மையான, சரணாணம்-நல்லொழுக்கமுடைய, ஸ-ஆன்மாவிலிருந்து, பரா-வேறுபட்ட, ணிக்கந்த-பற்றுகள் இல்லாத, வீயராயா-விருப்பற்ற (வீதராக), ஜங்கம-நடைபயில், தேஹா-உடல், ஏரிஸா-அப்படிப்பட்டது, ஜிணமக்கே-ஜிந நெறியில், படிமா-படிமம் ஆகும். எ.று.

(க-ரை) : நற்காட்சி நல்லறிவால் தூய்மையான நல்லொழுக்கமுடைய உயிரிலிருந்து வேறுபட்ட பற்றுகள் இல்லாத, விருப்பற்ற, நடைபயிலும் உடல் ஜிந நெறியில் படிமம் எனப் போற்றப்படுகிறது.

(வி-ரை) : ஆசாரியர் இந்த காதையில் முனிவர்தம் உடல் படிமம் என்கிறார். படிமம் எனும் சொல் வடிவம் எனும் பொருளுடையது. ஒத்த வடிவத்தையும் படிமம் என்பது உலக வழக்கு ஆகும். படிமம் போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியது. அதனால் ஆசாரியர் இங்கே படிமம் என்பதன் விளக்கத்தைக் தருகிறார்.

நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆன்மாவின் பரிணாமம். அந்த ஆன்மா தூய்மையானது-விருப்பு வெறுப்பு இல்லாதது. அந்த ஆன்மா தங்கியுள்ள உடல் நடைபயில்வது; ஆடை அணிகள் இல்லாதது. அது பரமான்மாவின் புறவடிவம். அதனால் அது படிமை. அந்த படிமையே ஜிந நெறியில் போற்றப்படுகிறது.

ஜிந நெறி என்று குறிப்பிட்டுள்ளதால் ஜிந நெறியில் இதற்கு மாறான படிமம் இருக்குமானால் அது வழிபாட்டுக்கு உரியது அன்று என அறிவு புகட்டுகிறார்.

‘ஸபரா’ என்ற தொடருக்கு மூன்று வகையில் பொருள் காண்கின்றனர். ஸ+பரா = ஸ்வ+பர. அதாவது தனதும் பிறரதுமான உடல். குரு-சீடர் உடல் எனக் கருத்துப்படுகிறது.

‘ஸ பரா’-ஸ-ஆன்மா, பர-வேறானது. ஆன்மாவிலிருந்து வேறுபட்ட உடல் எனப் பொருள்படுகிறது.

ஸ-பரா-ஸ-ஆன்மா; பர-உயர்ந்தது. அதாவது உயர்ந்த ஆன்மா எனப்பொருள்படுகிறது. எல்லாமே தூய்மையான ஆன்மாவைச் சுட்டுதலைக் காணலாம். தூய ஆன்மா தங்கியுள்ள வடிவம் அதாவது பரமான்மா வடிவம் படிமை ஆகும். அதுவே வழிபாட்டுக்குரியது. அந்த படிமைக்கு ஒப்பாக வடிக்கப்படும் பிற எல்லாம் படிமம் எனச் சுட்டப்படுதல் உலக வழக்காறு ஆகும்.

பிற படிமங்களைப் பற்றி இங்கே ஒன்றைச் சொல்ல வேண்டும். போலி துறவியரால் நிறுவப்படும் படிமங்கள் வழிபாட்டுக்கு உரியன அல்ல என சமஸ்கிருத உரைகாரர் குறிப்பிடுகிறார். திகம்பர முத்திரை போற்றப்பட்டாலும் அவை ஜிந நெறிக்கு மாறானவை என்கிறார். உண்மையான துறவியர் வழியாக நிறுவப்படும் படிமங்களே வழிபாட்டுக்கு உரியன என்பது அவர் கருத்து. பகவான் படிமங்களை நிறுவுவோர் சிந்தனை செய்ய வேண்டிய கருத்துகள் இவை.

11. ஜம் சரதி ஸுத்த சரணம் ஜாணஇ பிச்சேஇ ஸுத்த ஸம்மத்தம்|
ஸா ஹோஈ வந்தணீயா ணிக்கந்தா ஸஞ்ஜதா படிமா ||

(ப-ரை) : ஸுத்த-தூய, சரணம்-ஒழுக்கத்தில், ஜம்சரதி-செல்பவர், ஜாணஇ-மெய்ப்பொருளை அறிபவர், பிச்சேஇ-தன்னைப் பார்ப்பவர் (அவரே), ஸுத்த-தூய, ஸம்மத்தம்-நற்காட்சியர், ஸா-அத்தகு, ணிக்கந்தா-பற்றற்ற, ஸஞ்ஜதா-புலனடங்கிய, படிமா-படிமை, வந்தணீயா-வணக்கத்துக்கு, ஹோஈ-உரியது ஆகிறது.

(க-ரை) : நல்லொழுக்கமும் மெய்ப்பொருள் அறிவும் தன்னுணர்வும் உடைமையே தூய நற்காட்சியர் தன்மை. அத்தகு பற்றற்ற புலனடங்கிய படிமை போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியது ஆகிறது.

(வி-ரை) : ஆசாரியர் பற்றற்ற துறவியர் தோற்றம் போற்றுதலுக்கு உரியது என்கிறார். துறவியர்தம் ஒழுக்கமாக அவர் குறிப்பிடுவன சிந்தனைக்கு உரியன. முதலில் தூய ஒழுக்கம் உடையவர் என்கிறார். அக ஒழுக்கம் புற ஒழுக்கம் இரண்டிலும் தூய்மை காத்து ஒழுகுபவர். மெய்ப்பொருளை உள்ளவாறு தெளிந்து இருப்பவர். அத்தெளிவுதான் தூய ஒழுக்கத்துக்கு அடிப்படை ஆகும். இவ்விரண்டும் அமைவது நற்காட்சியால் ஆகும். தொகுத்துச் சொன்னால் மும்மணியில் சிறந்து விளங்கும் துறவியர் படிமை ஆகும். நடைபயிலும் அப்படிமையே போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியது, ‘படிமை’ என்ற சொல் ஜிந ஒழுக்கத்தின் வடிவம் எனும் கருத்தைத் தருகிறது.

ஒன்றைப் படி எடுத்தால் அதனைப் படி (நகல்) என்பது போல ஒழுக்கத்தின் வடிவமாக விளங்கும் முனிவர் 'படிமை' ஆவார். இதனால் வெறும் நிர்வாண வடிவம் 'படிமை' ஆகாது எனத் தெளியலாம்.

12. தம்ஸண அணந்த ணாணம் அணந்த வீரிய அணந்த ஸுக்காய|
ஸாஸய ஸுக்க அதேஹா முக்கா கம்மட்ட பந்தேஹிம்||

(ப-ரை) : அணந்த-வரம்பற்ற, தம்ஸண-காட்சி, அணந்த-வரம்பற்ற, ணாணம்-ஞானம், அணந்த-வரம்பற்ற, வீரிய-ஆற்றல், அணந்த-வரம்பற்ற, ஸுக்கா-இன்பம், ய-மேலும், ஸாஸய-நிலையான, ஸுக்க-இன்பம், அதேஹா-உடல் இல்லாமை, அட்டகம்ம-எட்டு வினைகள், பந்தேஹிம்-கட்டினின்றும், முக்கா-விடுபட்டவர். எ.று.

13. நிருவம மசல மகோஹா ணிம்மிவியா ஜங்கமேண ரூவேண|
ஸித்தட்டாணம்மி டியா வோஸர படிமா துவா ஸித்தா||

(ப-ரை) : நிருவமம்-உவமை இல்லாதவர், அசலம்-சலனமில்லாதவர், அகோஹா-நிலைத்தவர், ஜங்கமேண ரூவேண-இடம்பெயர்தல், ணிம்மிவியா-செய்தவர், ஸித்தட்டாணம்மி-ஸித்த நிலத்தில், டியா-நிற்பவர், துவா-நிலைபேறு அடைந்தவர், ஸித்தா-ஸித்தர், வோஸர-உடலற்ற, படிமா-படிமை ஆவார். எ.று.

(க-ரை) : வரம்பற்ற காட்சி, ஞானம், ஆற்றல், இன்பம் உடைய, அழிதல் இல்லா இன்பம் உடைய, உடல் இல்லாத, எட்டு வினைகள் தொடர்பு இல்லாத, உவமை இல்லாத, சலனமில்லாத, அசைதல் இல்லாத, இடம் பெயரும் செயலைச் செய்த, ஸித்த நிலத்தில் நிற்கின்ற, துருவமான, ஸித்தர் உடலில்லா படிமை ஆவார்.

(வி-ரை) : இங்கே ஆசாரிய தேவர் சித்த வடிவத்தைப் பேசுகிறார். சித்த நிலையை அடைந்த பரமான்ம வடிவம் இங்கே பணிவுக்கு உரியதாகக் காட்டப்பட்டுள்ளது. சித்தர் நிலையையும் ஆசாரியர் தெளிவு செய்துள்ளார். சமய பாகுடத்தின் முதல் காதையையும் இங்கே இணைத்துப் பார்க்கலாம். சித்தருக்குத் தந்துள்ள அடைமொழிகள்: வரம்பற்ற மும்மணி வடிவம், அழியாத இன்ப வடிவம், உடலைப் பெறாத தனி ஆன்ம வடிவம், ஒப்புமை இல்லாத உருவம், சலனமின்மை, அசைவின்மை, வினை இன்மை, நிலை பேறுடைமை, உலக உச்சியான 'ஸித்த பூமி'யில் உறைதல் என சித்த வடிவம் கூறப்பட்டுள்ளது.

'படிமம்' போற்றுதல் இங்கே அதிகாரம். நான்கு காதைகளை அமைத்துள்ளார். 'படிமம்' அதாவது வடிவம் மூன்று வகையாகக் கூறப்படும் என்பர். 1. இயங்கா வடிவம், 2. இயங்கும் வடிவம், 3. சித்த வடிவம். அருகர் வடிவமும், சித்தர் வடிவமும் மூன்றாக விரிந்துள்ளன. அல்லது உடல் வடிவமும் உடல் அற்ற வடிவமும் மூன்றாக விரிந்து உள்ளன எனலாம். இவற்றுள் உயிர்ப்பு நிலையோடு தொடர்புடைய வடிவங்கள்

போற்றுதலுக்கு உரிய வடிவங்கள். புற்கலத்தோடு தொடர்புடைய இவற்றின் வடிவங்கள் உலக வழக்கின எனத் தெளிதல் வேண்டும். அவை இயங்கா வடிவங்கள் ஆகும்.

சித்த நிலைக்குக் கூறப்பட்டுள்ள சிறப்புகளைப் பற்றி பிற நூல்கள்/வல்லார் வாய்வழி அறிக.

4. தரிசனம்

14. தம்ஸேஇ மோக்க மக்கம் ஸம்மத்தம் ஸஞ்ஜமம் ஸுதம்மம் ச |
ணிக்கந்தம் ணாண மயம் ஜிண மக்கே தம்ஸணம் பணியம் ||

(ப-ரை) : ஸம்மத்தம்-நற்காட்சி, ஸஞ்ஜமம்-புலனடங்கிய ஒழுக்கம், ச-மற்றும், ஸுதம்மம்-நல்லறம் கூடிய, மோக்க மக்கம்-முக்தி நெறியை, தம்ஸேஇ-காட்டுகின்ற, ணாணமயம்-அறிவு வடிவமான, ணிக்கந்தம்-பற்றற்ற வடிவு, ஜிண மக்கே-ஜிந நெறியில், தம்ஸணம்-தரிசனம், பணியம்-சொல்லப்படுகிறது. எ.று.

(க-ரை) : நற்காட்சி, நல்லொழுக்கம், நல்லறம் கூடிய முத்தி நெறியைக் காட்டுகின்ற அறிவு வடிவான பற்றற்ற வடிவம் ஜிந நெறியில் ‘தரிசனம்’ என்று சொல்லப்படுகிறது.

(வி-ரை) : இங்கே ஆசாரியர் முனிவர் வடிவை ‘தரிசனம்’ என்று குறிப்பிடுகிறார். எது காட்சிக்கு உரியதோ அதனையே ‘தரிசனம்’ என்றார். முத்தி நெறி என்பது மும்மணி வடிவம் ஆகும். நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் கூடியது முத்தி நெறி. அதனையே இங்குக் குறிப்பிட்டுள்ளார். ‘ஸுதம்மம்’ என்பது பத்து அறத்தைக் குறிப்பிடுவது எனக் கொள்ளலாம். பற்றற்ற வடிவம் என்பது உடலையும், அறிவு மயம் என்பது பரமான்ம நிலையையும் சுட்டுகிறது எனக் கருதலாம். முனிவருடைய வடிவமே இங்கே காட்சிக்கு உரியதாகிறது. அது முத்தி நெறியைக் காட்டி நிற்கிறது.

உண்மையில் பரமான்வாவைக் காணுதலே/நம்புதலே காட்சி ஆகும். அது அக நிலை. அத்தகு காட்சி உடைய முனிவர் பிறர் காணுகைக்குக் காட்சி ஆவார் எனத் தெளிய வேண்டும். ஏனெனில் அத்தகு காட்சி காணுவோருடைய நம்பிக்கை தோற்றத்துக்கும், வளமைக்கும் நிமித்தமாக அமைகிறது. புறவேடம் இருந்து அகத்தே காட்சி இல்லை என்றால் அது அபவ்வியனுடைய புறத்தோற்றம் போல அமைந்து போகும். அதனால் காண்பானுக்கு பயன் இராது.

15. ஜஹ புல்லம் கந்த மயம் பவதி ஹு கீரம் ஸ கியமயம் சாவி |
தஹ தம்ஸணம் ஹி ஸம்மம் ணாணமயம் ஹோஇ ரூவத்தம் ||

(ப-ரை) : ஜஹ புல்லம்-எப்படி மலர், கந்த மயம்-மணமுடையதாக, பவதி-அமைகிறது, கீரம்-பால், ஸ கிய மயம்-அந்த நெய்யுடையதாக, ஹு-தெளிவாக, பவதி-

அமைகிறது, சா வி-மேலும் பிற பொருள் தன் மயமாக இருக்கின்றன, தஹ-அதுபோல, ஸம்மம்-நற்காட்சியுடைய, தம்மஸணம் ஹி-தரிசனமும், ணாணமயம்-அகத்தே அறிவு மயமாக, ஹோஇ-அமைகிறது, ரூவத்தம்-புறத்தே உருவம் உடையதாக அமைகிறது. எ.று.

(க-ரை) : மலருக்கு மணமும் பாலுக்கு நெய்யும் அகத்தே இயல்பாக அமைந்தவாறு, ஜிந மதத்தில் தரிசனம் அகத்தே அறிவு மயமாகவும் புறத்தே உருவமாகவும் உள்ளது.

(வி-ரை) : ஆசாரியர் இங்கே ஜிந கோட்பாட்டில் தரிசனத்தைத் தெளிவு செய்கிறார். தம்ஸணம்-கோட்பாடு. 'ஷட்தரிசனம்' என்பது போலக் கொள்க. மலருக்குப் புறவடிவமும் உண்டு; அக வடிவமும் உண்டு. புறவடிவம் மலரின் தோற்றம்; அக வடிவம் மண மயம். அதே போல் பாலுக்குப் புற வடிவமும் உண்டு; அக வடிவமும் உண்டு. புற வடிவம் பாலின் தோற்றம், அக வடிவம்-நெய் மயம். இந்த உவமைகளைக் கூறி ஜிந கோட்பாட்டை இங்கே விளக்குகிறார். ஜிந கோட்பாட்டில் புற நிலை முனிவர், சாவகர், ஆர்யிகையர் தோற்றம். அக நிலை அத் தோற்றங்களுக்கு ஆதாரமாக அமையும் நல்நம்பிக்கை-இவையே இங்கு தரிசனம் என்று சுட்டப்பட்டுள்ளன.

நெறியும் நெறிக்கான கோட்பாடும் இசைந்து நிற்கும் என்பது கோட்பாடு. ஒன்றாத தோற்றம் பயனற்றது என்பது கருத்து. முன் காதைக்கு இது விளக்கம் போல அமைந்துள்ளது. அகத்தே தரிசனம் இருக்கும்போது புறத்தே தோற்றம் பொலிவுடன் விளங்கும். அதுவே முத்தி நெறியைத் தெளியச் செய்யும். மலர் வேறாகவும், மணம் வேறாகவும் இல்லாதது போல, பால் வேறாகவும், நெய் வேறாகவும் இல்லாதது போல கோட்பாடும் தோற்றமும் இசைந்து இருக்கும் என்பதாம். ஒன்று இல்லை என்றால் மற்றொன்று இராது. ஆனால், காலப்போக்கில் புறத் தோற்றத்துக்கு ஏற்ற அகக் கருத்து இல்லாமையைக் காண முடிகிறது. அத் தோற்றங்களும் உள்ளன. அவரிடம் விழிப்பு வேண்டும் என அறிவு புகட்டுகிறார் ஆசாரியர்.

5. ஜிநபிம்பம்

16. ஜிண பிம்பம் ணாணமயம் ஸஞ்ஜம ஸுத்தம் ஸுவீயராயம் ச|
ஜம் தேஇ திக்கஸிக்கா கம்மக்கய காரணே ஸுத்தா ||

(ப-ரை) : ணாண மயம்-அறிவு வடிவாகவும், ஸஞ்ஜம-புலனடங்கிய ஒழுக்கத்தில், ஸுத்தம்-தூய்மையும், ச-மற்றும், ஸுவீயராயம்-விளங்கிய வீதராகமும் உள்ள, ஜம்-அந்த, திக்க-தீக்ஷையும், ஸிக்கா-சிக்ஷையும், தேஇ-வழங்குதலும், கம்மக்கய-கரும அழிவுக்கு, காரணே-காரணமாதலும், ஸுத்தா-தூய்மையும் உடையவர், ஜிணபிம்பம்-ஜிண பிம்பம் ஆவார். எ.று.

(க-ரை) : அறிவு வடிவமாகவும், ஒழுக்கத் தூய்மையும், ஆர்வம் இல்லாமையும், வேண்டி வருவோருக்குத் துறவும் பயிற்சியும் வழங்குதலும், வினை அழிவுக்கு நிமித்த காரணமாதலும், ஆன்மத் தூய்மையும் உடைய ஆசாரிய பரமேட்டி ஜிநபிம்பம் ஆவார்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் ஜிநரை ஒத்த நிழலாக விளங்கும் ஆசாரியர் ‘ஜிநபிம்பம்’ ஆவார். அவரே போற்றுதலுக்கும் பணிதலுக்கும் உரியவர் என்கிறார்.

‘பிம்பம்’ எனில் நிழல், ஒத்த உருவம் என்று பொருள். ‘ஜிந பிம்பம்’ எனும்போது ஜிநரை ஒத்த வடிவம் அல்லது ஜிநரின் நிழல் போன்றவர் எனக் கருதலாம். அவர் ஆசாரிய பரமேட்டி. அவரது சிறப்புகளாக ஆசாரியர் கூறுவன:

1. அறிவு வடிவம். ஆகமங்களில் தெளிவான அறிவுடையவர் என்பதாம். அவரே பிறருக்குத் துறவும் பயிற்சியும் தரமுடியும். 2. தூய ஒழுக்கமுடையவர். ஐம்பெரு நோன்பு, மூன்று அடக்கம், ஐந்து நடைமுறை (ஸமிதி) ஒழுக்கம் எனப் பதின்மூன்று ஒழுக்கங்களில் சிறந்த தூய்மை உடையவராக இருத்தல் வேண்டும். பரமான்ம நெறி பழுதில்லாத தூய ஒழுக்க நெறியாகும். தான் தூய நெறியில் நிற்கும் போதுதான் பிறரைத் தூய நெறியில்-ஒழுக்கத்தில் நிறுத்த முடியும். 3. ஆர்வம் இன்மை. ‘ஸு’ எனும் அடைமொழி தந்துள்ளார். ‘அற்புதம்’ எனப் பொருள் காணலாம் அதற்கு. ஏனெனில் ஆர்வம் (ராகம்) இல்லாத நிலையே அற்புத ஒழுக்க நிலையாகும். அதுவே முத்தி நிலைக்கு ஏதுவாகும்.

இம்மூன்று சிறப்புகளைச் சுட்டி அத்தகு ஆசாரிய பரமேட்டியே பிறருக்கு-பவ்வியருக்கு ‘தீக்ஷை’யும் ‘சிக்ஷை’யும் தரவல்லவர். ஜிநர் முத்தி நெறியை விளக்கியவர். அதனை வழிப்படுத்துபவர் ஆசாரிய பரமேட்டி ஆவார். தோற்றத்தில் ஜிநருக்கும் ஆசாரியருக்கும் (முனிவருக்கும்) வேறுபாடு இல்லை. அதனால் அவர் பிம்பம் போன்றவர்-நிழல் போன்றவர். அவரே பணிவுக்கு உரியவர் என்பதாம்.

இத்தகு சிறப்புகள் இல்லாத ஆசாரியர் தரும் துறவும் பயிற்சியும் உயிருக்குப் பயன்படா என அறிவு புகட்டுகிறார் இங்கே.

17. தஸ்ஸ ய கரஹ பணாமம் ஸவ்வம் புஜ்ஜம் ச விணய வச்சல்லம்|
ஜஸ்ஸ ய தம்ஸண ணாணம் அத்தி துவம் சேயணாபாவோ||

(ப-ரை) : தஸ்ஸ-அந்த ஜிந பிம்பத்துக்கு (ஆசாரியருக்கு), பணாமம்-பணிவு, கரஹ-செய்க, ய-மேலும், ஸவ்வம்-எல்லா வகையிலும், புஜ்ஜம்-சிறப்புச் செய்க, ச-மேலும், விணய-வணங்குக, வச்சல்லம்-அன்பு காட்டுக, ஜஸ்ஸ-(ஏனெனில்) அவரிடம், துவம்-உறுதியாக, தம்ஸண-நற்காட்சி, ணாணம்-நல்லறிவு, அத்தி-உள்ளன, சேயணா பாவோ-அறிவுணர் இயல்பு உள்ளது. எ.று.

(க-ரை) : ஆசாரியருக்கு பணிவு காட்டுக, எல்லா வகையிலும் பூசை செய்க, வணங்குக, அன்பு செய்க. ஏனெனில் அவரிடம் மும்மணி உள்ளது, அறிவுணர் இயல்பு உள்ளது.

(வி-ரை) : 'ஜிந பிம்பம்' (ஆசாரியர்) போற்றுதலுக்கும் பணிவுக்கும் உரியவர் என்பதற்கான காரணங்களை இங்கே சுட்டியுள்ளார்.

'ஜிந பிம்ப' சேவையின் சிறப்பு அறியத்தக்க ஒன்றாகும். பவ்வியரே அதனை அறிந்து போற்ற முடியும். 'செய்' என ஆணை இடுகிறார், ஆசாரியர். குணநலன்கள் போற்றப்படும் போதுதான் தன் குணங்கள் விளக்கமுறும். ஆசாரியர் போன்ற பரமேட்டியின் குணங்களைப் போற்றும் போதுதான் தன் உயிரில் 'பரமேட்டி' நிலையை உருவாக்க முடியும். வேறு வழி இல்லை. ஜிநர் அல்லது பஞ்ச பரமேட்டி வழிபாட்டுக்கு இதுவே அடிப்படை. வேறுவேறு காரணங்களால் வழிபாடு நிகழும் போது பரமேட்டி நிலையை அடைய முடியாது. அதனால்தான் ஆசாரியர் வழிபாட்டுக்குச் சாரவேண்டியவர் இவர் என நூல் தொடக்கத்திலேயே குறிப்பிட்டார். அவரே வழிபாட்டுக்கு உரியவர் எனத் தெளிதல் வேண்டும்.

இங்கே 'உயிர் பிம்பம்' போற்றப்பட்டுள்ளது. 'புற்கல பிம்பம்' கௌணமாக்கப்பட்டுள்ளது.

18. தவவயகுணேஹிம் ஸுத்தோ ஜாணதி பிச்சேஇ ஸுத்த ஸம்மத்தம்|
அரஹந்த முத்த ஏஸா தாயாரீ திக்க சிக்கா ய ||

(ப-ரை) : தவ-தவம், வய-விரதம், குணேஹிம்-குணங்களில், ஸுத்தோ-தூயவரும், ஜாணதி-மெய்ப் பொருளை உள்ளவாறு அறிபவரும், பிச்சேஇ-பார்ப்பவரும், ஸுத்த-தூய, ஸம்மத்தம்-நற்காட்சி உடையவரும், அரஹந்த-அருகருடைய, முத்த-முத்திரையுடையவருமான, ஏஸா-அந்த ஆசாரியரே, திக்க-தீக்ஷை, ய-மேலும், சிக்கா-சிக்ஷையும், தாயாரீ-கொடுப்பவர் ஆவார். எ.று.

(க-ரை) : தவம், நோன்பு, குணங்களில் தூய்மையும், மெய்ப்பொருள் அறிவும், மெய்ப்பொருள் பார்வையும், உடையவர் நற்காட்சியுடையவர், அவரே துறவும் பயிற்சியும் தரவல்ல அரஹந்த முத்திரையுடைய ஆசாரியர் ஆவார்.

(வி-ரை) : ஆசாரிய பரமேட்டியை ஜிந முத்திரை உடையவர் என இங்குச் சுட்டியுள்ளார். அவரே பவ்வியருக்கு தீக்ஷையும் சிக்ஷையும் தரும் தகுதியுடையவர் என்கிறார். இதனால் இக்குணமில்லாதார் அவற்றுக்குத் தகுதி அற்றவர் என்பதாம். முத்திரை-அடையாளம். ஜிந அடையாளம் ஜிந பிம்பம் ஆகும்.

6. ஜிந முத்திரை

19. தடஸஞ்ஜம முத்தாஏ இந்தியமுத்தா கஸாயதிடமுத்தா|
முத்தா இஹ ணாணாஏ ஜிணமுத்தா ஏரிஸா பணியா||

(ப-ரை) : தட-உறுதியான, ஸஞ்ஜம-ஒழுக்க, முத்தாஏ-முத்திரை, இந்திய-பொறிகள், முத்தா-முத்திரை, கஸாய-துவர்ப்பு, திட-உறுதியான, முத்தா-முத்திரை, ணாணாஏ-அறிவு, முத்தா-முத்திரை, இஹ-இவையே, இங்கு, ஏரிஸா-இப்படி, ஜிண முத்தா-ஜிநமுத்திரை (உள்ளது என), பணியா-கூறப்படுகிறது. எ.று.

(க-ரை) : ஒழுக்கத்திலும், ஐம்பொறிகளிலும், துவர்ப்புகளிலும் அறிவிலும் சலனப்படாது உறுதியாக உள்ள முத்திரை ஜிந முத்திரை எனப்படுகிறது.

(வி-ரை) : ஆசாரியர் 'முத்திரை'யின் உண்மை வடிவத்தை இங்கே காட்டுகிறார். 1. ஒழுக்கத்தில் உறுதிப்பாடு: ஆறுவகையான உயிர்களும் போற்றப்படும் அகிம்சை வடிவ ஒழுக்கத்தில் தடுமாற்றம் இன்றி வச்சிரபடை போல உறுதியாக (திடமாக) நிற்றல், 2. ஐம்பொறிகளில் உறுதிப்பாடு: ஐம்புலன்களில் மேயாமல் ஆமை போல் ஐம்பொறிகள் அடக்கத்தில் உறுதியாக நிற்றல், 3. துவர்ப்பில் உறுதிப்பாடு: வெகுளி, மானம், மாயை, உலோபம் முதலான துவர்ப்புகளில் சிக்கி சலனப்படாமல் விலகி நிற்கும் உறுதிப்பாடு. 4. அறிவு உறுதிப்பாடு : ஜிந ஆகமங்களில் அறிவைச் செலுத்தி ஜிந நெறியின் மெய்ம்மையைத் தெளிந்து நிற்றல்; தன் உயிரில் திளைத்து நிற்றல்.

முத்திரை எனும் சொல்லால் முனிவர்தம் அடையாளங்களைச் சுட்டியுள்ளார் ஆசாரியர். நான்கு அடையாளங்கள் இங்கே சுட்டப்பட்டுள்ளன. இந்த அடையாளங்களே 'ஜிந முத்திரை' எனச் சுட்டப்படுகின்றன என்கிறார். அக நிலை அடையாளங்கள் இவை. இவையே போற்றுதலுக்கு உரியன. பிற புற 'முத்திரைகள்' இங்கே சுட்டப்படவில்லை.

7. ஞானம்

20. ஸஞ்ஜம ஸஞ்ஜுத்தஸ்ஸ ய ஸுஜ்ஜாணஜோயஸ்ஸ மோக்க மக்கஸ்ஸ|
ணாணேண லஹதி லக்கம் தம்ஹா ணாணம் ச ணாயவ்வம்||

(ப-ரை) : ஸஞ்ஜம-ஒழுக்கத்தோடு, ஸஞ்ஜுத்தஸ்ஸ-கூடியுள்ள, ய-மேலும், ஸுஜ்ஜாண-நல்தியானத்துக்கு, ஜோயஸ்ஸ-தகுதியான, மோக்க-முத்தி, மக்கஸ்ஸ-நெறியான (ஆன்ம அனுபவத்தை), லக்கம்-குறிக்கோள், ணாணேண-நல்லறிவாலே, லஹதி-அடையப்படுகிறது, ச-மேலும், தம்ஹா-ஆகையால், ணாணம்-அறிவை, ணாயவ்வம்-போற்றுதல் வேண்டும். எ.று.

(க-ரை) : ஒழுக்கத்தோடு கூடியுள்ள, நல் தியானத்துக்கு ஏற்ற, முத்தி நெறி குறிக்கோளை நல்லறிவாலே பெறமுடியும். அதனால் நல்லறிவைப் போற்றுக.

(வி-ரை) : ஆசாரியர் இங்கே நல்லறிவைப் போற்றுக என ஆணை இடுகிறார். அறிவு, பொருளை அறிவது ஆகும். மெய்ப்பொருளை அறியும் அறிவே நல்லறிவு ஆகும். உயிரின் பண்பு அறிவு. அது எல்லா உயிரிடத்தும் காணப்படும். ஆனால், தன்னை அல்லது மெய்ப்பொருளை உள்ளவாறு அறியும் போதுதான் அறிவு-ஞானம் எனப்படுகிறது. தன்னை அறியாது வேறுபொருளை அறியும் அறிவு அறிவுதான் என்றாலும் அதனை 'ஞானம்' என்று சுட்டுதல் இல்லை. அந்த அறிவு உடையவரை 'ஞானி' என்று சொல்லுதலும் இல்லை. 'ஞானம்'-'அஞ்ஞானம்' அல்லது 'ஞானி-அஞ்ஞானி' எனும் சொற்கள் தன்னை அறிதல் அல்லது தன்னை அறியாது இருத்தல் என்னும் நிலையிலேயே ஆளப்படுகின்றன.

முத்தி நெறி ஒழுக்க நெறி. அது அகிம்சை வடிவம் ஆகும். ஆறுவகையான உயிர்களைப் போற்றுதலும் ஐவகையான புலன்களை வெல்லுதலும் ஒழுக்கம் ஆகும். அந்த ஒழுக்கம் அமையும் போதுதான் 'தியானம்'-ஊழ்கம் அமைய முடியும். தன்னை அறியும் அறிவு இல்லை எனில் இவை அமையா. அதனால் முத்தி நெறியும் அமைய முடியாது. முத்தி நெறியின் குறி தன்னில் தோய்ந்து நிற்றலே-தன்னை அறிவதில் நிற்றலே ஆகும். அந்த அறிவே இங்கே போற்றப்பட்டுள்ளது. அவ்வறிவு இல்லாத ஒழுக்கமும் தியானமும் முத்தி நெறிக்குப் பயன்படாது.

ஒரு புறம் அடுப்பு எரிகிறது. அதே அறையில் முனிவர் உணவு ஏற்பாரானால் அவர் ஆறுவகை உயிர்களைப் போற்றவில்லை என்றுதான் கருதவேண்டும். அவரிடம் பிற ஒழுக்கம் இருந்தாலும் அவ்வொழுக்கம் முத்தி நெறியில் பயனுடையது அன்று. 28 மூல குணங்களையும் போற்ற தன்னை அறியும் அறிவு வேண்டும் என ஆசாரியர் அறிவு புகட்டுகிறார் எனலாம்.

21. ஜஹ ணவி லஹவி ஹுு லக்கம் ரஹிஓ கண்டஸ்ஸ வேஜ்ஜய விஹீணோ|
தஹ ணவி லக்கதி லக்கம் அண்ணாணீ மோக்க மக்கஸ்ஸ||

(ப-ரை) : ஜஹ-எப்படி, வேஜ்ஜய-அம்பு, விஹீணோ-இல்லாமலும், கண்டஸ்ஸ-வில்லின், ரஹிஓ-பயிற்சி இல்லாமலும், ஹுு-உண்மையில், லக்கம்-குறியை, ணவிலஹதி-அடைய முடியாதோ, தஹ-அதே போல, அண்ணாணீ-அறிவு இல்லான், மோக்க மக்கஸ்ஸ-முத்தி நெறியின், லக்கம்-குறியை, ணவி லக்கதி-அடைவது இல்லை. எ.று.

(க-ரை) : விற்பயிற்சியும் குறியை வீழ்த்தும் அம்பும் இல்லாதவன் குறித்த பொருளை அடைய முடியாது. அதே போல, அறிவு இலான் முத்தி நெறியின் குறியான தன் உயிர் பரமான்மாவை அடையான்.

(வி-ரை) : முன் சுட்டிய அறிவின் இன்றியமை யாமையை ஓர் எடுத்துக்காட்டு வழி இந்த காதையில் விளக்கியுள்ளார்.

குறித்த பொருளை அடைய விரும்பும் வில்லாளி விற்பயிற்சியும், அம்பும் பெற்றிருக்க வேண்டும். அவை இல்லை எனில் பொருளை அடைய முடியாது. அம்பு பொருளை அடைவிப்பது. பயிற்சி அம்பை நாணில் ஏற்றி செலுத்தும் முறை. இரண்டும் வேண்டும். அதே போல அறிவு எனும் அம்பும் அதனைச் செலுத்தும் பயிற்சியும் உடையவரே பரமான்மா எனும் பொருளை அடைய முடியும். தன்னை அறியும் அறிவு எனும் அம்பு இல்லாமல் முத்தி நெறியில் (வில்லில்) பயிற்சி அமையாது எனத் தெளிதல் வேண்டும். நல்லறிவு என்றதால் மும்மணி அடங்கிற்று எனத் தெளிக.

22. ணாணம் புரிஸஸ்ஸ ஹவதி லஹதி ஸுபுரிஸோ வி விணய ஸஞ்ஜுத்தோ|
ணாணேண லஹதி லக்கம் லக்கந்தோ மோக்க மக்கஸ்ஸ ||

(ப-ரை) : ணாணம்-அறிவு, புரிஸஸ்ஸ-புருடருக்கு, ஹவதி-அமைகிறது, ஸுபுரிஸோவி-நல்ல புருடரானாலும், விணய ஸஞ்ஜுத்தோ-பணிவுடைமை சேர்ந்தவருக்கே, ணாணம் லஹதி-அறிவு பெறமுடிகிறது (அவரே), ணாணேண-அறிவால், மோக்க மக்கஸ்ஸ-முத்தி நெறியின், லக்கந்தோ-குறியான, லக்கம்-பரமான்ம குறியை, லஹதி-அடைகிறார். எ.று.

(க-ரை) : பணிவுடைய புருடருக்கே அறிவு அமைகிறது. அந்த அறிவால் அவர் முத்தி நெறியின் குறியான பரமான்ம நிலையை அடைகிறார்.

(வி-ரை) : அறிவின் பயன் பரமான்ம நிலையை அடைதலாகும். பரமான்ம நிலையை அடைய தன் ஆன்மாவைத் துய்க்கும் அறிவு வேண்டும். அந்த அறிவு புருடருக்கே உண்டு என இங்குக் குறிப்பிடுகிறார். ஆண், பெண் என்பது உடல் வேறுபாடு. ஆன்ம வேறுபாடு அன்று என்றாலும் ஆன்மாவை அனுபவம் செய்யும் அறிவு - சுக்கில தியானம் செய்யும் அறிவு - அமையும் போது உடல் ஆண் உடலாகவே அமைகிறது; பெண் உடலாக அமைவது இல்லை. ‘நிமித்த-நைமித்திக’ தொடர்பு இது. பொதுவான அறிவு எல்லா உயிர்களிடமும் உண்டு. ஆனால் ஆன்மீக அறிவு மனமுடைய உடல் அமையும்போது தான் பெறப்படுகிறது. மனமற்ற நிலையில் ஆன்மீக அறிவு பெறப்படுவது இல்லை. அதே போல ஆன்மத் துய்ப்பு அறிவு பெறும் போது உடல் ஆண் உடலாகவே அமைகிறது. ஆனால், பெண் உடல் அமையும்போது ‘அங்க’, அறிவு பெற முடியும் என சமஸ்கிருத உரைகாரர் குறிப்பிடுகிறார். பிராமி, சுந்தரி, இராஜ மதி, சந்தனை போன்றோர் அங்க அறிவு பெற்று இருந்தனர் எனச் சுட்டுகிறார். ஆனாலும் குணத்தான நோக்கில் பார்க்கும்போது அவர் ஐந்தாம் குணத்தானத்தைத் தாண்டுவது இல்லை. அதனால் சுக்கில தியானம்-வெள்ளை

ஊழ்கம்-அமைவது இல்லை, இந்த நோக்கில் ஆசாரியர் இந்த காதையை அமைத்துள்ளார் எனக் கருதத் தோன்றுகிறது.

ஆன்ம அறிவின் பயன் பரமான்ம நிலையை அடைதலாகும். அதனை அடைய பன்னிரண்டு அங்க அறிவு வேண்டும். அது புருடருக்கே, அதுவும் விநய தவமுடைய புருடருக்கே, அமைகிறது என்று சுட்டுகிறார். விநய தவம் அகத்தவம் என்பதனை நினைவுகூரல் வேண்டும். முத்தி நெறியில் அகத் தவம் சிறப்புடையது. அதனை அடையாளப்படுத்துவது புறத்தவம் ஆகும்.

23. மஇதணுஹம் ஜஸ்ஸ திரம் ஸுதகுண பாணா ஸுஅத்தி ரயணத்தம்|
பரமத்த பத்த லக்கோ ணவி சுக்கதி மோக்க மக்கஸ்ஸ ||

(ப-ரை) : ஜஸ்ஸ-எவரிடம், மஇ-மதி அறிவு, தணுஹம்-வில், திரம்-உறுதியாக உள்ளது, ஸுதகுண-சுருத அறிவு நாண் உள்ளது, ரயணத்தம்-மும்மணி, பாணா-அம்பு, ஸுஅத்தி-நன்கு கூடியுள்ளது, பரமத்த-பரமான்ம, லக்கோ-குறி, பத்த-உள்ளது (அவர்), மோக்க மக்கஸ்ஸ-முத்தி நெறியில், சுக்கதி-இழிதல், ணவி-இல்லை. எ.று.

(க-ரை) : மதி அறிவு வில்லும் சுருத அறிவு நாணும், மும்மணி அம்பும், பரமான்ம குறியும் உடைய முனிவர் முத்தி நெறியினின்றும் என்றும் இழிதல் இல்லை.

(வி-ரை) : நல்லறிவு போற்றப்பட வேண்டும் என வற்புறுத்தும் ஆசாரியர் ஓர் எடுத்துக் காட்டு வழியாக இங்கு விளக்கி உள்ளார்.

வில்லாளி வில்லுக்கு வேண்டியது எல்லாம் பெறும் போது தான் குறித்த பொருளைத் தப்பாது அடைகிறான். அதே போல முனிவர் தன் முத்தி நெறிக்கு வேண்டியவற்றைப் பெறும்போது தான் குறித்த பொருளைத் தவறாமல் அடைகிறார் என்கிறார். இது ஆன்மா குறித்த நல்லறிவின் சிறப்பு ஆகும். உள்முகமாக நோக்கும் அறிவே நல்லறிவாகும். புறத்தே பிறவற்றை நோக்கும் அறிவு - முத்தி நெறியது எனப் புறத்தை நோக்கும் அறிவு - நல்லறிவு ஆகாது என இங்குத் தெளிவு செய்துள்ளார்.

8. தேவர்

24. ஸோ தேவோ ஜோ அத்தம் தம்மம் காமம் ஸுதேஇ ணாணம் ச|
ஸோ தேஇ ஜஸ்ஸ அத்தி ஹு அத்தோ தம்மோ ய பவ்வஜ்ஜா||

(ப-ரை) : ஜோ-எவர், அத்தம்-பொருள், தம்மம்-அறம், காமம்-இன்பம், ச-மற்றும், ணாணம்-நல்லறிவு, ஸுதேஇ-நல்குபவர், ஸோ-அவர், தேவோ-தேவராம் (ஏனெனில்), ஜஸ்ஸ-எவரிடம், ஹு-உறுதியாக, அத்தோ-பொருள், தம்மோ-தருமம், ய-மற்றும், பவ்வஜ்ஜா-துறவு (தீக்ஷை), அத்தி-உள்ளதோ, ஸோ-அவர், தேஇ-நல்குகிறார். எ.று.

(க-ரை) : எவர் அறம் பொருள் இன்பம் அளிக்கிறாரோ அவர் தேவர் (இறைவர்) எனப்படுகிறார். ஏனெனில் தன்னிடம் இருப்பதனையே தரமுடியும். அதனால் அறம் பொருள் துறவு தருபவர் தேவர் ஆவார்.

(வி-ரை) : ஆசாரியர் முத்தி சாதகன் தேவனைத் தெளிய வேண்டும் என இங்குச் சுட்டுகிறார். அறம் பொருள் இன்பம் வீடு அளிப்பவர் தேவர். தன்னிடம் இருப்பன வற்றையே பிறருக்குத் தர முடியும் என்பது நீதி. இல்லாததை எப்படித் தர முடியும்? அதனால் அறம் பொருள் இன்பம் வீடுபேறு உடையவரே பிறருக்கு வழங்க முடியும், அவரே தேவர்.

ஓர் உயிர் அறம் பொருள் இன்பம் வீடுபேற்றை அடைவது, தானே ஆகும். வேறொருவர் தரும் பொருள் அல்ல இவை. முத்தி சாதகர் தேவர் இவர் எனத் தெளிந்து வழிபட்டு அந்நெறியில் செல்லும்போது சுப பாவனையாலும் சுத்த பாவனையாலும் முறையே வைபவங்களையும் வீடுபேற்றையும் பெறுகிறார். அப்பாவனைகளுக்கு நிமித்தமாக அமைபவர் தேவர் (அருகர்). அதனால் உலக வழக்கில் தேவர் தருகிறார் எனக் கூறப்பட்டுள்ளது. நிமித்த நைமித்திக தொடர்பு இங்குக் காட்டப்பட்டுள்ளது என அறிதல் வேண்டும். அறம் முதலானவற்றை அடைந்துதான் தேவரானார். அதனால் அவரை வழிபடுவார் அறம் முதலானவற்றை அடைவர் என்பதாம். தேவர் (இறைவர்/ கடவுள்) இயல்பை தெளியும் போதுதான் தான் தேவ நிலையை அடைய முடியும் என அறிய வேண்டும்.

25. தம்மோ தயா விஸுத்தோ பவ்வஜ்ஜா ஸவ்வ ஸங்க பரிசத்தா|
தேவோ வவகய மோஹோ உதயகரோ பவ்வ ஜீவாணம்||

(ப-ரை) : தயா-அருளால், விஸுத்தோ-தூய்மையானது, தம்மோ-அறம் (தருமம்), ஸவ்வ-எல்லா, ஸங்க-பற்றுகளும், பரிசத்தா-நீங்கியது, பவ்வஜ்ஜா-துறவு, வவகய மோஹோ-மோகம் அழிந்தவர், தேவோ-தேவர், பவ்வ ஜீவாணம்-பவ்விய உயிர்களுக்கு, உதயகரோ-உன்னத நிலைக்குக் காரணமாவார். எ.று.

(க-ரை) : அஹிம்ஸை வடிவமானது அறம். பற்றுகள் அற்றது துறவு. மோக மில்லாதவர் தேவர் (இறைவர்). அவரே பவ்விய உயிர்கள் உன்னத நிலைக்குக் காரணமாவார்.

(வி-ரை) : ஆசாரிய தேவர் பவ்வியர் உன்னத நிலையை அடைய எந்தத் தேவரைச் சார வேண்டும் எனக் காட்டியுள்ளார். அருள் வடிவமான அகிம்சை அறத்தைப் போற்றியதால் மோகத்தை அழித்துப் பகவான் ஆனார். மோகத்தை அழிக்க பற்றற்ற துறவு ஏற்றார். அவரே பவ்வியர் உன்னத நிலை - தன்னைப் போல பகவான் நிலை - அடைய அறவுரை ஆற்றியவர். அவரே போற்றப்பட வேண்டிய-வழிபாட்டுக்கு உரிய தேவர் (இறைவர்) ஆம்.

‘நினைத்தனை யாயினும் வாழ்த்தினை யாயினும் நீயும் நெஞ்சே
தினைத்துணை நல்லறம் செய்தனை யாயினும் சேர்ந்தவரைப்
பினைத்தனை வந்தனை செய்யஒட் டாப்பிண்டி யாற்குஅரிதோ
உனைத்தனை யேஒக்க இத்தனை நாளில் உயர்த்துகையே’[1]

என்பார் அவிரோதி ஆழ்வார். குறியிலும் நெறியிலும் தெளிவாக இருத்தல் வேண்டும். எதனை அடைய வேண்டுமோ அது குறி. எப்படி அடைய வேண்டுமோ அது நெறி. இரண்டையும் நுட்பமாகச் சுட்டுகிறார் இங்கே. தேவ நிலை குறி. அகிம்சையும் பற்றின்மையும் மோக அழிவும் நெறி. இதை விடுத்து அறியார் இமிசையும் பற்றும் போகமும் உள்ளாரைத் தேவர் என மயங்கித் தொழுது குறியும் நெறியும் தெளியாது நீண்ட பிறவிச் சுழலில் உழல்கின்றனர். பிறப்பு இறப்பு உடையாரைத் தொழுவதால் பிறவி எப்படி அறுபடும்? தேவ உலகத்தாரையும் வழிபாட்டில் போற்ற வேண்டும் என்று கூறும் துறவுத் தோற்றம் உடையார் இந்த காதையை நினைவு கூரல் வேண்டும். வீதராக தோற்றத்தை ஏற்று ராக தோற்றத்துக்கு முன்னே அமர்ந்து இருப்பாரை என்ன சொல்வது? காலத்தைப் பழிப்பதால் பயன் இன்று. கரும வழிப்படுஉம் அத்தோற்றத்தினர் பால் கழிவிரக்கம் கொள்ள வேண்டும்.

9. தீர்த்தம்

26. வய ஸம்மத்த விஸுத்தே பஞ்சேந்திய ஸஞ்ஜதே ணிராவேக்கே|
ண்ஹாஏஉ முணீ தித்தே. திக்காஸிக்காஸுண்ஹாணேண||

(ப-ரை) : வய-விரதம், ஸம்மத்த-நற்காட்சியில், விஸுத்தே-தூய்மை, ணிராவேக்கா-இம்மை மறுமை விருப்பின்றி, பஞ்சேந்திய-ஐம்பொறிகளில் அடங்கிய, ஸஞ்ஜதே-ஒழுக்கம் உள்ள, தித்தே-தீர்த்தத்தில், முணீ-முனிவரது, திக்கா-தீக்ஷை, ஸிக்கா-சிக்ஷை, ஸுண்ஹாணேண-நல்குளியல், ண்ஹாஏஉ-குளிப்பாயாக. எ.று.

(க-ரை) : தூய நோன்பும் நற்காட்சியும் ஐம்புலனடங்கிய ஒழுக்கமும் ஆன தீர்த்தத்தில் முனிதீக்ஷை சிக்ஷை எனும் நல்குளியல் செய்வாயாக.

(வி-ரை) : புனித நீராடல் எனும் வழக்கு உலகில் காணப்படுகிறது. ஆனால் உண்மையான புனித நீராடல் எது என்று இங்கே ஆசாரியர் சுட்டுகிறார். புனித நீராடலுக்கு உரிய நீர் நிலையைத் ‘தீர்த்தம்’ எனச் சுட்டப்பட்டுள்ளது. நற்காட்சியும் அதன் அடியில் அமைந்த நோன்பும் புலனடங்கிய ஒழுக்கமும் ஆன ‘தீர்த்தம்’ என்கிறார்.

1. *திருநூற்றந்தாதி, 85*

"எங்கோன் அருகன் அசலன் நெறியமலன்
செங்கோன் நடத்துமிறை சேமத் துணையரங்கன்
வங்கார வண்ணன் வரதன் அகிலகுணன்
சங்கார காலன் சகல வினையறுக்கும்
சிங்கா சனத்துஇருந்த செல்வன் திருந்தடியைப்
பொங்குஆர்வம் தீரப் புலம்பிப் புகழ்பாடிக்
கெங்கா சலமுதித்த கேவலமாம் பொய்கைதனில்
பங்கே ருகப்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்"

என 'கேவல ஞான பொய்கை'யில் ஆடுக என்பார் அவிரோதியார்,[1]

முனி தீக்ஷையும் சிக்ஷையும் இங்கே நீராடலாகக் குறிக்கப்பட்டுள்ளன. அதாவது மும்மணி ஒழுக்கத்தில் சிறந்து துறவு ஏற்று பரமான்ம நிலை பெறுக என்பதாம்.

இங்கே 'ணிராவேக்கா' என்ற தொடரை ஆண்டுள்ளார். குறி எதிர்ப்புப் பாராமல் என்று பொருள்படுகிறது. ஒழுக்கத்தில் ஒழுகும்போது புகழ், பாராட்டு, பொருள் விருப்பு முதலான எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும். புகழுக்குரிய ஒழுக்கம் பேண வேண்டும்; ஆனால் புகழ் வேண்டி பேணுதல் கூடாது. பரமான்ம நிலை நோக்க ஒழுக்கம் என்பதால் அது புகழுக்குரியது. ஆனால் குறியை மறந்து புகழில் மயங்கினால் புலனாசையில்பட்டு அழிவதாகிவிடும். எனவே, ஆசாரியர் மிக நுட்பமாக எச்சரிக்கிறார். 'தரும பிரபாவனை' எனும் மயக்கத்தில் செல்வந்தரும் துறவியரும் விளம்பரத்தில் சிக்கி நிற்கும் காட்சியை இன்று காணமுடிகிறது. 'தரும பிரபாவனை' ஆன்மாவில் தோன்றுவது; தாள்களில் தோன்றும் விளம்பரம் அன்று! எனத் தெளிவு வேண்டும்.

27. ஜம் ணிம்மளம் ஸுதம்மம் ஸம்மத்தம் ஸஞ்ஜமம் தவம் ணாணம்|
தம் தித்தம் ஜிண மக்கே ஹவேஇ ஜதி ஸந்தி பாவேண||

(ப-ரை) : ஜிண மக்கே-ஜிந நெறியில், ஜம்-எது, ணிம்மளம்-தூய, ஸுதம்மம்-நல்லறம், ஸம்மத்தம்-நற்காட்சி, ஸஞ்ஜமம்-நல்லொழுக்கம், தவம்-நற்றவம், ணாணம்-நல்லறிவு, தம்-அது, ஜதி ஸந்தி பாவேண-நல் சாந்த உணர்வுடன் கூடியிருக்குமானால், தித்தம்-தீர்த்தம், ஹவேஇ-ஆகும். எ.று.

(க-ரை) : ஜிந நெறியில் சாந்த உணர்வுடன் கூடிய தூய நல்லறம், தூய நற்காட்சி, தூய நல்லொழுக்கம், தூய நற்றவம், தூய நல்லறிவு 'தீர்த்தம்' எனப்படும்.

(வி-ரை) : ஜிந நெறியில் 'தீர்த்தமாக'ப் பேசப்படுவன எவை எனச்சுட்டியுள்ளார், ஆசாரியர். கடலையும், ஆற்றையும் 'தீர்த்தம்' என உலக மக்கள் கொண்டாடுதலையும் அங்கே நீராடுதலையும் காணலாம். அங்கே நீராடுதலைப் புனிதமாகக் கருதுகின்றனர். மக்கள் உடலின் அழுக்கை நீரால் சற்றுப் போக்கலாம். ஆனால் உடலுக்கு உள்ளே

உள்ள அழுக்கை அந்நீராடுவதால் கழுவ முடியாது. அதே போல அறிவு மறைப்பு முதலான கரும அழுக்கை, ஆர்வம், செற்றம் முதலான துவர்ப்பு அழுக்கை அந்நீராடலால் கழுவ முடியாது. மாறாக அந்நீராடலால் இமிசை முதலான பாபமே நிகழ்கிறது. நீர்வாழ் உயிர்களுக்குத் துன்பம் ஆகிறது. ஆகையால் கடலிலும் ஆற்றிலும் நீராடல் புனிதம் எனக் கருதுதல் மயக்கமே ஆகும். ஏனெனில், அக அழுக்கை புற நீரால் கழுவ முடியாது. எதனால் கரை ஏற முடியுமோ அதுவே 'தீர்த்தம்' ஆகும். பிறவிக் கடலைக் கடத்தலே பயனாக வேண்டும். அதுவே 'தீர்த்தம்' ஆகும்.

இங்கே உத்தம பொறுமை முதலான பத்து அறமும், ஐயம் முதலான 25 குற்றங்கள் அற்ற நற்காட்சியும், அறுவகை உயிர்களைப் போற்றும் புலனடங்கிய நல்லொழுக்கமும், உண்ணாமை முதலான பன்னிரண்டு தவமும், உயிர் மற்றும் உயிரற்ற பொருள்களை உள்ளவாறு அறியும் நல்லறிவும், 'தீர்த்த'மாகச் சுட்டப்பட்டுள்ளன. இவை எல்லாம் உயிரது பரிணாமங்கள் ஆகும். அதனால்தான் 'சாந்த உணர்வுடன்' கூடி இவை இருத்தல் வேண்டும் என்கிறார். சாந்த நிலை உயிரின் இயல்பான/அமைதியான நிலையாகும். உண்மையான 'தீர்த்தம்' இவை எனத் தெளிக என அறிவு புகட்டியுள்ளார். இங்கே உலக வழக்கில் கூறப்படும் பிற 'தீர்த்தங்கள்' கௌணம் என்று கருதுதல் வேண்டும்.

10. அருகர்

28. ணாமே டவேண ஹி ய ஸந்தவவே பாவே ஹி ஸகுண பஜ்ஜாயா|
ச உணாகதி ஸம்பதிமே பாவா பாவந்தி அரஹந்தம்||

(ப-ரை) : ணாமே-பெயராலும், டவேண ஹி-நிறுவுதலாலும், ய-மற்றும், ஸந்தவ்வே-பொருளாலும், பாவே-தன்மையாலும், ஹி-மேலும், ஸகுண-குணங்களின், பஜ்ஜாயா-பரியாயங்களாலும், சஉண-வருகையாலும், ஆகதி-தோன்றுதலாலும், ஸம்பத-சிறப்புகளாலும், ஆகிய, இமே-இவற்றால் ஆன, பாவா-இயல்புகளால், அரஹந்தம்-அருகரை, பாவந்தி-அறிகின்றனர். எ.று.

(க-ரை) : நான்கு வகைப்படும் குறியீடுகளாலும், குண பரியாயங்களாலும் வருகையாலும், தோன்றுமிடத்தாலும், பெறும் சிறப்புகளாலும், அருக பரமேட்டியை அறிகின்றனர்.

(வி-ரை) : ஆசாரியர் இங்கு முழுதுணர் அறிவரை அறியும் முறையைக் குறிப்பிடுகிறார். அருகர் எனப் பொதுவாகக் குறிப்பிட்டாலும் தீர்த்தங்கரரை இங்குச் சுட்டுகிறார் எனக் கருதுதல் வேண்டும். முழுதுணர் அறிவர் அனைவரும் அருகர் என்றாலும் ஏழிறை இருக்கை வட்டத்தில் (ஸமவ ஸரணத்தில்) அமர்ந்து அறவுரை ஆற்றும் தீர்த்தங்கர பரமேட்டி முதன்மையான போற்றுதலுக்கு உரியவர் ஆகிறார். ஏனெனில் அறப்பாதை அவராலேயே அமைக்கப்படுகிறது.

அந்த தீர்த்தங்கரரை எப்படி அறிதல் வேண்டும்?

உலக வழக்கில் பெயரிடுதல் உள்ளது. அப்பெயருக்கும் பெயரை உடைய பொருளுக்கும் பொருத்தம் இருக்க வேண்டும் என்பது இல்லை. அதனை 'நாம நிக்ஷேபம்' என்பர். வாழ்வில் சோகமாக இருப்பவனை அசோகன் என்பது போல. ஆனால் இங்கே அந்தப் பொருந்தா பெயர் இடுதல் இல்லை. என்னப் பெயரால் சுட்டப்படுகிறாரோ அக்குணத்தை உடையவராக அவர் இருக்கிறார். அப்பெயர் அவருக்குப் பொருந்தி இருக்கிறது. ஆயிரக்கணக்கான பெயரால் தீர்த்தங்கரர் போற்றப்படுகிறார். அப்பெயர்கள் எல்லாம் காரணப் பெயர்களே. அப்பெயர்களால் அருகர் அறியப்படுகிறார்.

ஒரு பொருளின் தோற்றத்தை அல்லது உருவை மரம் முதலான வேறு பொருளில் 'அது இது' என வடிவமைப்பது 'ஸ்தாபனா நிக்ஷேபம்' என்பர். ஆனால் அருகரை அப்படி வேற்று வடிவமைப்பில் காணாமல் குணத்தான நோக்கிலும், மார்கணை நோக்கிலும் நிறுவுதல் வேண்டும். அதாவது அறிதல் வேண்டும். அது நிறுவுதலால் அருகரை அறிதலாகும். புறப்பொருளால் அல்லாது தன் குண நிலையில் நிறுவப்படுதலாம் எனக் கொள்ள வேண்டும்.

கடந்துபோன அல்லது வரப்போகிற நிலையை நிகழ்காலத்தில் குறிப்பிடுதல் 'திரவிய நிக்ஷேபம்' என்பர். இளவரசரை அரசர் என்றோ அரச பதவி இழந்தாரை அரசர் என்றோ குறிப்பிடுதல் 'திரவிய நிக்ஷேபம்' ஆகும். ஆனால் இங்கு அந்த நிலை இல்லை. முந்தைய நிலை பிந்தைய நிலை பகவான் நிலையில் இல்லை. திரவிய நிலையில் அவர் பகவானாகவே எப்போதும் விளங்குகிறார். அல்லது பகவானை 1008 இலக்ஷணங்களால் குறிப்பிடுதல் திரவிய நிலை எனலாம். நிகழ்காலத்தின் நிலையை அப்படியே குறிப்பது 'பாவ நிக்ஷேபம்' என்பர். பூசை செய்யும்போது 'பூசாரி' என்பது போல. மற்ற நேரங்களில் பூசாரி என்று சுட்டப்படுதல் இல்லை. அந்த நிலை இங்கு இல்லை. இங்கு எப்போதும் நிகழ்காலம் போலவே நிகழும் நிலை. விடுபாட்டு நிலை இல்லை. இப்படி உலக வழக்கில் சுட்டப்படும் 'நிக்ஷேப' நோக்கில் இங்கு அருகரை அறிதல் கூடாது. ஏனெனில் இங்கே அருகர் நிச்சய நோக்கில் சுட்டப்படுகிறார். அருகருக்கு என்ன பெயர்சுட்டப்படுகிறதோ அக்குணமுடையவர் என்றும், உடலோடு அவர் எப்படி விளங்குகிறாரோ அதுவே நிறுவுதல் என்றும், அவர் திரவியத்தால் எப்படி உள்ளாரோ அப்படியே திரவியம் என்றும், எப்படி 'பாவ'த்தில் உள்ளாரோ அப்படி 'பாவம்' என்றும் அறிதல் வேண்டும்.

வரம்பற்ற அறிவு காட்சி ஆற்றல் பேரின்பம் முதலானவை அருகருடைய குணங்களாகும். அவற்றால் அவர் அறியப்படுகிறார். அவற்றின் பரியாயங்கள்தாம் அருகருடைய பரியாயங்கள். அதாவது குணபரியாயங்கள் வடிவமாக அவர் உள்ள நிலை ஆகும். அவற்றால் அவர் அறியப்படுகிறார்.

தீர்த்தங்கரராக வருபவர் தேவ உலகில் இருந்தோ நரக உலகில் இருந்தோ வருகிறார். அதாவது இந்த இரண்டு பிறவியிலிருந்துதான் தீர்த்தங்கரராகும் உயிர் வருகிறது. வேறு பிறவிகளில் இருந்து வருதல் இல்லை. அருக நிலைக்கு உரியவரை வருகை நோக்கிலும் அறிதல் வேண்டும் என்கிறார்.

தீர்த்தங்கரர் தோன்றுதல் நிலம் வரையறைக்கு உட்பட்டதாகும். அவர்கள் பரத ஐராவத கரும பூமியில் ஆரிய கண்டத்திலும் கிழக்கு மேற்கு விதேக நிலத்தில் மட்டுமே தோன்றுகின்றனர். இந்த நோக்கிலும் அவரை அறிகின்றனர் என்பதாம்.

தீர்த்தங்கரர் கருவில் வந்து தங்குதற்கு ஆறு திங்களுக்கு முன்பு இருந்தே ஒன்பதாம் திங்கள் வரை அதாவது 15 திங்கள்கள் இந்திரன் ஆணையை ஏற்று குபேரன் நகரில் 14 கோடி இரத்தினங்களை நாள் தோறும் பொழிந்து நகரை இரத்தின மயம் ஆக்குகிறார். சமவசரணம் முதலான சிறப்புகளும் அமைகின்றன. இத்தகு சிறப்புகளாலும் தீர்த்தங்கரர் அறியப்படுகின்றனர். இத்தகு தன்மைகள் உடையவரை 'பாவ ஜிநர்' என்பர். இங்கே ஆசாரியர் தீர்த்தங்கரரை அக நிலையிலும், புறவழிப்படூஉம் நிமித்தம் கொண்டு அவருக்கு இருக்கும் அக நிலையாலும் அறிகின்றனர் என்று சுட்டியுள்ளார். நிமித்த-நைமித்திக தொடர்பாலும் நய நோக்காலும் அவர் அறியப்பட வேண்டும் எனக் கருதலாம்.

29. தம்ஸண அணந்த ணாணே மோக்கோ ணட்ட கம்ம பந்தேண|
நிருவம குணமாரூடோ அரஹந்தோ ஏரிஸோ ஹோஇ||

(ப-ரை) : அணந்த-வரம்பற்ற, தம்ஸண-காட்சியும், ணாணே-அறிவும், ணட்ட கம்ம பந்தேண-வினைக் கட்டு இன்மையால், மோக்கோ-முத்தியும், நிருவம-ஒப்பிலா, குணமாரூடோ-குணங்களோடு கூடியும், ஏரிஸோ-இப்படியுள்ளவர், அரஹந்தோ-அருகர், ஹோஇ-ஆகிறார். எ.று.

(க-ரை) : வரம்பற்ற காட்சியும் அறிவும் முத்தியும் ஒப்பிலா குணங்களும் உடையவர் அருகபரமேட்டி ஆவார்.

(வி-ரை) : ஆசாரியர் அருக பரமேட்டியை அவருடைய குணநலன்களால் அறிய வேண்டும் எனச் சுட்டுகிறார். அருக நிலை என்பது ஆன்மாவின் தலைவரம்பான பண்பு நிலை ஆகும். அது தூய்மையின் எல்லையாகும். அந்த உயர்ந்த ஆன்ம நிலையில் காட்சியும் அறிவும் வரம்பற்று உள்ளன. அவை மட்டுமல்ல. அனைத்துப் பண்பு நலன்களும் வரம்பற்ற தூய்மையில் விளங்குகின்றன. அதனால்தான் ஒப்பு கூற முடியாத குணங்களோடு கூடியவர் என்றார்.

அருக நிலையை முத்தி நிலை என்றும் சுட்டியுள்ளார். காதி வினைகள் நான்கையும் கெடுத்தவர் அருகர். என்றாலும் அகாதி வினைகள் நான்கும் இன்னும் உள்ளன. வினைக்கட்டு நோக்கில் பார்க்கும் போது எட்டு வினைகளும் அவருக்கு

பந்தமாவது இல்லை. ஸத்துவம், உதயம் நிலை இங்குக் கருதப்படவில்லை. ஸாதா வேதனீய வினையின் ஊற்று உண்டு என்று சொல்லப்பட்டாலும் அங்கே ஸ்திதி, அனுபாக பந்தம் இல்லை. ஆகையால் பந்தமில்லாமைக்கு ஒப்பாகும். இந்த நோக்கில் எட்டு வினைகள் கட்டு இன்மையால் 'பாவ மோக்ஷம்' உடையவர் அல்லது 'ஜீவன் முக்தர்' என்று கூறப்படுகிறார்.

இத்தகு பண்பு நலன்கள் வேறு எவரிடமும் அதாவது வேறு முனிவரிடம் காணப்படவில்லை. அதனால் பெயரளவில் அருகர் என்று சுட்டப்படுவதால் எவரும் அருகர் ஆக முடியாது. வரம்பற்ற அறிவு முதலான குணங்களோடு உள்ளவருக்கே அருகர் எனும் பெயர் பொருத்தமுடையதாகும் என்பதாம்.

30. ஜரவாஹி ஜம்ம மரணம் சஉகஇ கமணம் ச புண்ணபாவம் ச|
ஹந்தூண தோஸ கம்மே ஹுஉ ணாணமயம் ச அரஹந்தோ||

(ப-ரை) : ஜர-முதுமை, வாஹி-பிணி, ஜம்ம-பிறப்பு, மரணம்-இறப்பு, ச-மற்றும், சஉகஇ-நான்கு கதி, கமணம்-செல்கை, ச-மற்றும், புண்ணம்-புண்ணியம், பாவம்-பாபம், தோஸ ஹுஉ-குற்றங்களுக்கு ஏதுவான, கம்மே-வினைகளை, ஹந்தூண-அழித்து, ச-மற்றும், ணாணமயம்-முழுதுணர் அறிவு வடிவமானவர், அரஹந்தோ-அருகராவார். எ.று.

(க-ரை) : முதுமை, பிணி, பிறப்பு, இறப்பு, நாற்பிறவி சுழற்சி, புண்ணியம், பாபம் இவை இல்லாது செய்து, பசி முதலான குற்றங்களுக்கு ஏதுவான வினைகளைக் கெடுத்து உயிரின் இயல்பான முழுதுணர் அறிவை வெளிப்படுத்தியவர் அருகர் ஆவார்.

(வி-ரை) : முன் காதையில் உடன்பாட்டு முறையில் அருகர் இயல்பைப் பெயரிட்டுச் சுட்டிய ஆசாரியர் இந்தகாதையில் எதிர்மறை முறையில் பெயரிட்டுச் சுட்டுகிறார் எனலாம்.

அருகர் பதினெட்டு குற்றங்கள் இல்லாதவர் என்பர்,

'பதினெண் குற்றம் அரிந்தோய் நீ
பரம நான்மை அடைந்தோய் நீ' (மேருமந்தரபுராணம் 808)

என்பார் மேருமந்தரத்தார்.[1]

ஆர்வம், செற்றம், செருக்கு, மயக்கம், வெறுப்பு, கவலை, அச்சம், உறக்கம், சோகம், துன்பம், வியப்பு இப்பதினோரு குற்றங்களும் காதி வினை உதயத்தோடு தொடர்புடையன. பசி, நீர் வேட்கை, பிறப்பு, மூப்பு, இறப்பு, பிணி, வேர்வை இவ்வேழு குற்றங்களும் அகாதி வினை உதயத்தோடு தொடர்புடையன.

இந்த காதையில் மூப்பு, பிணி, பிறப்பு, இறப்பு மற்றும் நாற்பிறவி சுழற்சி இன்மை குறிப்பிட்டதால் அகாதியோடு தொடர்புடைய இவை இல்லை என்பதாம். ஏனெனில், அகாதி வினையில் இவற்றுக்கு நிமித்தமாகும் பாப மூலங்கள் (பிரகிருதிகள்) இல்லை. ஆர்வம், செற்றம் முதலானவை காதி வினை இல்லாமையால் இல்லா தொழிந்தன. மீண்டும் பிறத்தல் இல்லை எனும் நோக்கில் இறப்பு இன்மை கூறப்பட்டது என அறிதல் வேண்டும். பந்த நோக்கில் புண்ணிய பந்தம் இன்மையால் புண்ணியம் இன்மை கூறப்பட்டுள்ளது என அறிதல் வேண்டும். அஸாத வேதனீயத்தின் மிகு மந்த உதயம் இருந்தாலும் சாதா வேதனீயத்தின் முன் அதன் தாக்கம் தெரியவில்லை. மேலும் ஸாத வேதனீயமாகவும் அது மாறுதல் அடைகிறது. ஆகையால் அனந்த நான்மையோடு கூடிய அருகருக்கு இப்பதினெட்டு குற்றங்களும் இல்லை எனத் தெளிதல் வேண்டும். அதுவே இறைநிலை ஆகும்.

31. குணடாண மக்கணேஹிம் ய பஜ்ஜத்தீபாண ஜீவடாணேஹிம்|
டாவண பஞ்ச விஹேஹிம் பணயவ்வா அரஹபுரிஸ்ஸ||

(ப-ரை) : குணடாண-குணத்தானத்தாலும், ய-மற்றும், மக்கணேஹிம்-மார்கணையாலும், பஜ்ஜத்தீ-'பர்யாப்தி' யாலும், பாண-பிராணனாலும், ஜீவடாணேஹிம்-'ஜீவ ஸ்தான'த்தாலும் என, பஞ்ச விஹேஹிம்-ஐந்து வகையால், அரஹபுரிஸ்ஸ-அருகருடைய, டாவண-'ஸ்தாபனை'யை, பணயவ்வா-செய்யலாம். எ.று.

(க-ரை) : குணத்தானம், மார்கணை, 'பர்யாப்தி', பிராணன், 'ஜீவஸ்தானம்' என ஐந்து நோக்கில் அருகரை நிறுவலாம்.

(வி-ரை) : பெயர் முதலான குறியீடுகள் வழியாக உலகில் பொருள்கள் அறியப்படுகின்றன/விளக்கப் படுகின்றன. அது போல அல்லாது உண்மை நோக்கில் பெயர் முதலான வற்றால் அருகரை அறியும் முறையை ஆசாரியர் கூறி வருகிறார். பெயரால் அருகர் அறியப்படும் திறன் குறித்தவர் இந்த காதையில் அவர் எப்படி நிறுவப்படுகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். ஸ்தாபன நிலை எப்படி அமைகிறது என்று இங்குச் சுட்டியுள்ளார்.

32. தேரஹமே குணடாணே ஸஜோஇ கேவலிய ஹோஇ அரஹந்தோ|
சஉதீஸ அஇஸய குணா ஹோந்தி ஹு தஸ்ஸட்ட படிஹாரா||

(ப-ரை) : ஸஜோஇ கேவலிய-'ஸயோக கேவலி' எனப்படும், தேரஹமே-பதின்மூன்றாம், குணடாணே-குணத்தானத்தில், அரஹந்தோ-அருகர், ஹோஇ-நிறுவப்படுகிறார், அங்கே, சஉதீஸ-முப்பத்து நான்கு, அஇஸய-அதிசய, குணா-குணங்களும், ஹு-உறுதியாக, தஸ்ஸட்ட-எட்டு, படிஹாரா-பிராதிஹார்யங்களும், ஹோந்தி-அமைகின்றன. எ.று.

(க-ரை) : ‘ஸயோக கேவலி’ எனும் பதின்மூன்றாம் குணத்தானத்தில் இருப்பவர் அருகர். அவருக்கு 34 அதிசயங்களும் 8 பிராதிகார்யங்களும் அமைகின்றன.

(வி-ரை) : குணத்தான நோக்கில் அருகர் இங்கே நிறுவப்படுகிறார். குணத்தானம் பதினான்கு ஆகும். அவை: 1) ‘மித்யாத்வ’ குணத்தானம், 2) ‘ஸாஸாதன’ குணத்தானம், 3) ‘ஸம்யக் மித்யாத்வ’ (மிச்ர) குணத்தானம், 4) ‘அவிரத ஸம்யக்த்வ’ குணத்தானம், 5) ‘ஸய்யமாஸய்யம’ குணத்தானம், 6) ‘பிரமத்த விரத’ குணத்தானம், 7) ‘அபிரமத்த விரத’ குணத்தானம், 8.) ‘அபூர்வ கரண’ குணத்தானம், 9) ‘அனிவ்ருத்தி கரண’ குணத்தானம், 10) ‘ஸுக்ஷ்ம ஸாம்பராய’ குணத்தானம், 11) ‘உபசாந்த கஷாய’ குணத்தானம், 12.) ‘க்ஷீண கஷாய’ குணத்தானம், 13) ‘ஸயோக கேவலி’ குணத்தானம், 14) ‘அயோக கேவலி’ குணத்தானம்.

இப்பதினான்கு குணத்தானங்களுள் அருகர் பதின்மூன்றாம் குணத்தானத்தால் அறியப்படுகிறார். குணத்தானம் என்பது உயிரின் அகநிலையில் காணப்படும் தூய்மை பரிணாமத்தின் வளர்ச்சியைச் சுட்டுவதாகும். யோகத்தோடு கூடியவர் என்பதால் இடம் பெயரும் இயக்கமும் மொழி வெளிப்பாட்டுத் திறனும் உடையவர் என்பது பெறப்படுகின்றன. ‘கேவலி’ என்பதால் எல்லாவற்றையும் அறியும் முழுதுணர் அறிவர் என்பது பெறப்படுகிறது.

முப்பத்து நான்கு அதிசயங்களோடு கூடியவர் எனப்பட்டுள்ளது. அவ்வதிசயங்கள் ஆவன: பிறந்த போது காணப்படும் பத்து அதிசயங்கள் : 1. மலம், மூத்திரம் இன்மை, 2. வேர்வை இன்மை, 3. வெள்ளை நிற குருதி, 4. நாற்பக்கமும் ஒத்த உடல் கட்டமைப்பு, 5. வச்சிரவ்ருஷப நாராச ஸம்ஹனனம், 6. அழகிய வடிவம், 7. நறுமண உடல், 8. சுப லக்ஷணம் உடைமை, 9. வரம்பற்ற ஆற்றல், 10. இனிய மொழி.

முழுதுணர் அறிவு பெற்ற பின் காணப்படும் பத்து அதிசயங்கள்: 1. இடையூறு இன்மை, 2. இமிசை இன்மை, 3. நிழலின்மை, 4. நான்குமுக தோற்றம், 5. முழுதுணர் அறிவுடைமை, 6. இமைக்காமை, 7. 100 ஓசனை தொலைவு வரை செழிப்புடைமை, 8. வான் வழி செல்கை, 9. உணவு உண்ணாமை, 10. நகம், மயிர் வளராமை.

தேவர் செய்யும் பதினான்கு அதிசயங்கள் : 1. அர்த்தமாகதி மொழி[1], 2. உயிர்களிடையே அன்புடைமை, 3. எல்லாப் பருவ பூ பழங்கள் தோன்றுதல், 4. கண்ணாடி போல தரை, 5. கல், முள் இல்லாத தரை, 6. நறுமணமுள்ள மென் காற்று,

---

1. “ஒரு ஓசனை வரை அருகருடைய மொழி ஒ-க்கிறது. அதற்கு மேலே அவ்வொ-யை மகத தேவன் கேட்கச் செய்கிறான். அதனால் தேவனால் அமைகிறது.” என்று ஆசாரியர் பிரபா சந்திரர் ‘நந்தீஸ்வர பக்தி’ உரையில் குறிப்பிடுகிறார்.

7. எல்லோரும் மகிழ்தல், 8. நறுமண நீர் பொழிதல், 9. திருவடிக்குக் கீழே தாமரை மலர்கள் வரிசை, 10. நிலத்தில் எல்லா தானியங்களும் விளைதல்-பசுமை, 11. திசை பத்தும் தூய்மையாக இருத்தல், 12. தேவர்தம் அழைப்புக் குரல், 13. அற ஆழி முன்னே செல்லுதல், 14. எட்டு மங்கலப் பொருள்கள் முன்னே செல்லுதல்.

'பொங்கு சாமரை, பூமழை, மண்டிலம்,
சிங்கம் ஏந்தணை, பிண்டி, செழுங்குடை,
அங்க பூவமது ஆம்மொழி, துந்துபி
எங்கள் தீவினை தீர விளங்குமே'

என எட்டு சிறப்புப் பொருளும் போற்றப்படுதலை (பிராதிஹார்யங்களும்) அறியலாம். இவை 'இமையோர் செய்யும் எண் சிறப்பு' என்று சுட்டும் திருநூற்றந்தாதி (80).

இப்படி 34 அதிசயங்கள், 8 பிராதிஹார்யங்களுடன் பதின்மூன்றாம் குணத்தான வழி அருகரை நிறுவுதல் கூறப்பட்டுள்ளது.

33. கஇ இந்தியம் ச காஏ ஜோஏ வேஏ கஸாய ணாணேய|
ஸஞ்ஜம தம்ஸண லேஸா பவியா ஸம்மத்த ஸண்ணி ஆஹாரே||

(ப-ரை) : கஇ-கதி, இந்தியம்-பொறி, ச-மற்றும், காஏ-உடல், ஜோஏ-யோகம், வேஏ-வேதம், கஸாய-கஷாயம், ய-மற்றும், ணாணே-அறிவு, ஸஞ்ஜம-ஸய்யமம், தம்ஸண-தரிசனம், லேஸா-லேஷ்யா, பவியா-பவ்வியத்துவம், ஸம்மத்த-ஸம்யக்த்வம், ஸண்ணி-ஸஞ்ஜி, ஆஹாரே-ஆஹாரம் என இப்பதினான்கும் மார்கணை ஆகும். எ.று.

(க-ரை) : பதினான்கு வகைப்படும் மார்கணையாலும் அருகர் அறியப்படுகிறார்.

(வி-ரை) : அருகர் மார்கணையாலும் நிறுவப்படுகிறார் என்று முன்பு சுட்டினார். (கா.31). அந்த மார்கணை 14 வகைப்படும் என இங்குச் சுட்டியுள்ளார். 'மார்கணை' என்பதன் பொருள் 'ஆய்தல்' அல்லது 'தேடுதல்' என்பதாகும். குறிப்பிட்ட ஒரு தன்மையில் ஓர் உயிரின் தன்மையை ஆய்தல் மார்கணை ஆகும். இங்கு கதி முதலாகப் பதினான்கு தன்மைகள் காட்டப்பட்டுள்ளன. அப்பதினான்கு தன்மை நோக்கில் அருகரை நிறுவுதல் வேண்டும்.

அருகர் பதின்மூன்றாம் குணத்தானம். இதில் 14 மார்கணையை ஆய வேண்டும். கதி : நான்கு. நரக, விலங்கு, மனிதர், தேவர் என. அருகர் மனித கதியில் உள்ளார். பொறிகள் : ஐந்து. சாதி என்று குறிப்பிடுவர். அருகர் ஐம்பொறி சாதி ஆவார். உடல் : ஆறுவகை. 'திரஸ காய'த்தில் அருகர் உள்ளார். யோகம் : பதினைந்து ஆகும். சத்திய மனோ யோகம், அனுபய மனோ யோகம், சத்திய வசன யோகம், அனுபய வசன யோகம், ஔதாரிக காய யோகம் இப்படி ஐந்து யோகம் அமைகிறது. 'ஸமுத்காத' நிலையானால் 'ஔதாரிக மிச்ரம்' மற்றும் கார்மண யோகம் சேர்ந்து ஏழு யோகம் அமைகிறது. வேதம்:

ஆண் பெண் அலி என மூன்று. மூன்றும் அருகருக்கு இல்லை. கஷாயம்: வெகுளி முதலான 16, அரதி முதலான 9 நோகஷாயம் சேர்ந்து 25. கஷாயம் எதுவும் அருகருக்கு இல்லை. அறிவு: எட்டு வகைப்படும் அறிவில் கேவல ஞானம் அருகருக்கு அமைகிறது. ஸய்யம் : ஏழு ஸய்யமத்தில் 'யதாக்யாத' ஸய்யம் மட்டுமே அருகருக்கு அமைகிறது. தரிசனம் : நான்கு வகைப்படும் தரிசனத்தில் கேவல தரிசனம் மட்டும் உண்டு. லேஷ்யா : ஆறு இலேசையில் சுக்கில இலேசை யோக நிமித்தத்தால் அமைகிறது. பவ்வியத்துவம் : இரண்டில் பவ்வியர் அருகர். ஸம்யக்த்வம் : ஆறு ஸம்யக்த்வத்தில் க்ஷாயிக ஸம்யக்த்வம் அருகருக்கு அமைகிறது. ஸஞ்ஜி : இரண்டில் 'ஸஞ்ஜி' (மனமுடையவர்) ஆவார். அது திரவிய (புற்கல) நோக்கில் ஆகும். பாவ நோக்கில் அன்று. அல்லது மனம் கடந்தவர் எனினும் அமையும். ஆஹாரம் : இரண்டில் 'ஆஹாரம்' உடையவர். அதுவும் நோ கர்ம வர்கணை வருதல் நோக்கில் ஆகும். 'ஸமுத்காத' நிலையில் 'அனாஹாரம்' இருப்பதால் இரண்டு ஆஹாரமும் உடையவர் எனலாம்.

இப்படி மார்கணை நோக்கில் அருகரை நிறுவி அறியலாம்.

34. ஆஹாரோ ய ஸரீரோ இந்திய மண ஆணபாணபாஸா ய|
பஜ்ஜத்தி குண ஸமித்தோ உத்தம தேவோ ஹவஇ அரஹோ||

(ப-ரை) : ஆஹாரோ-ஆஹாரம், ய-மற்றும், ஸரீரோ-உடல், இந்திய-பொறி, மண-மனம், ஆணபாண-சுவாச உச்சுவாசம், ய-மேலும், பாஸா-மொழி என, பஜ்ஜத்தி-'பர்யாப்தி', குண ஸமித்தோ-குணத்தோடு கூடிய, உத்தம-உயர்ந்த, தேவோ-தேவர், அரஹோ-அருகர், ஹவஇ-ஆகிறார். எ.று.

(க-ரை) : ஆஹாரம், உடல், பொறி, மனம், மூச்சு, மொழி என 'பர்யாப்தி' ஆறாகும். இந்த பர்யாப்தி குணம் வழி உத்தம அருகரை அறிய வேண்டும்.

(வி-ரை) : இங்கே ஆசாரியர் 'பர்யாப்தி' நோக்கில் அருகரை நிறுவுதல் வேண்டும் என்கிறார்.

'பர்யாப்தி' எனில் நிறைவடைதல் என்று பொருள். குறிப்பிட்ட ஆற்றல் நிறைதல் இங்கே 'பர்யாப்தி' எனப்படுகிறது. அது ஆறுவகையாகும்.

ஓர் உயிர் ஒரு பிறவியை விட்டு வேறொரு பிறவிக்குச் செல்லுங்காலத்து மூன்று சமய காலம் உயர்ந்த இடைவெளியில் இருக்க முடியும். அடுத்து மனமுடைய ஐம்பொறி உயிராகப் பிறவி எடுக்க வேண்டும். அப்போது மூன்று வகை வர்கணைகளை அது சேகரிக்க வேண்டும். அவை: ஆஹாரவர்கணை, மொழி வர்கணை, மனோ வர்கணை, ஆஹார வர்கணை கொண்டு ஆஹாரம், உடல், பொறிகள், மூச்சு எனும் நான்கு நிறைவுகள் உள்முழுத்த காலத்துக்குள் முடிக்கும். பிறகு மொழி வர்கணை மனோ வர்கணை கொண்டு உள் முழுத்த காலத்துக்குள் மொழி, மன நிறைவுகளை முடிக்கும். இப்படி ஆறு நிறைவுகளையும் உள்முழுத்த

காலத்துக்குள் முடிக்கும். அதன் பிறகு ஆயுள் முடியும் வரை அது 'பர்யாப்தி' உயிர் என்றே சுட்டப்படும். நோ கரும வர்கணைகளைச் சேர்த்துக்கொண்டே இருக்கும். இங்கே பதின்மூன்றாம் குணத்தானத்தில் உள்ள அருகர் ஆறு நிறைவுகளையும் உடையவர் என நிறுவி அறியலாம். என்றாலும், அருகருக்கு மனம், மொழி, உடல் இருந்தாலும் அவை காரணமாக வினைக்கட்டு அவருக்கு இல்லை. ஏனெனில் பந்த நோக்கில் எட்டு வினைக்கட்டு அவருக்கு இல்லை. உயிரில் முத்தி நிலை அடைந்தவராகக் கருதப்படுகிறார்.

இப்படி 'பர்யாப்தி' நோக்கில் அருகரை நிறுவி அறியலாம்.

35. பஞ்ச வி இந்திய பாணா மணவயகாஏண திண்ணி பல பாணா|
ஆணப்பாணப்பாணா ஆஉக பாணேண ஹோந்தி தஹ பாணா||

(ப-ரை) : பஞ்ச வி-ஐந்தாம், இந்திய பாணா-இந்திரிய பிராணன், மண வய காஏண-மன மொழி உடல் என, திண்ணி-மூன்றாம், பலபாணா-பல பிராணன், ஆணப்பாணப்பாணா-சுவாச உச்சுவாச பிராணன் ஒன்று, ஆஉக-ஆயுள், பாணேண-பிராணன் ஒன்று என, தஹ-பத்து, பாணா-பிராணன்கள், ஹோந்தி-உள்ளன. எ.று.

(க-ரை) : ஐந்து இந்திரிய பிராணன்கள், மனம் மொழி உடல் என மூன்று பல பிராணன்கள், ஒரு மூச்சு பிராணன், ஒரு ஆயுள் பிராணன் எனப் பத்து பிராணன்கள் உள்ளன.

(வி-ரை) : பத்து பிராணன் இவை என இங்கே ஆசாரியர் குறிப்பிட்டுள்ளார். இப் பத்து பிராணன்கள் வழியாக அருகரை அறிய வேண்டும் என்பது கருத்து. உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதனவற்றை பிராணன் என்பர்.

இப்பத்து பிராணன்களில் அருகருக்கு எத்தனை உள்ளன?

பதின் மூன்றாம் குணத்தானத்தில் அறிவு மறைப்பு, ஆற்றல் தடை வினைகளின் கேடு-தணிவால் ஆகும் 'பாவ' இந்திரியம், 'பாவ' மனம் இல்லை. இந்த நோக்கில் காய பலம், வசன பலம், மூச்சு, ஆயு எனும் நான்கு பிராணன்கள் உள்ளன. ஆனால், திரவிய நோக்கில் பத்து பிராணன்களும் உள்ளன. இப்படி பிராணன் வழி அருகரை உறுதி செய்து அறியலாம்.

36. மணுயபவே பஞ்சிந்திய ஜீவட்டாணேஸு ஹோஇ சஉதஸமே|
ஏதே குணகணஜுத்தோ குணமாரூடோ ஹவஇ அரஹோ||

(ப-ரை) : மணுய பவே-மனிதப் பிறவியில், பஞ்சிந்திய-ஐம்பொறி எனும், சஉதஸமே-பதினான்காம், ஜீவட்டாணேஸு -ஜீவ ஸமாஸத்தில், ஹோஇ-உள்ளது, ஏதே குண கண ஜுத்தோ-இத்தனை குணங்களோடு கூடிய, குணமாரூடோ-பதின் மூன்றாம் குணத்தை அடைந்த, அரஹோ-அருகர், ஹவஇ-உள்ளார். எ.று.

(க-ரை) : பதினான்கு ஜீவ ஸமாஸத்தில் மனமுடைய ஐம்பொறி ஜீவ ஸமாஸத்தில் அருகர் அறியப்படுகிறார்.

(வி-ரை) : ஜீவ ஸமாஸ நோக்கில் இங்கு அருகரை அறிய வேண்டும் என்கிறார்.

உயிர்களை வகைப்படுத்தி தொகுப்பது 'ஜீவ ஸமாஸம்' எனப்படும். அது பதினான்கு ஆகும். ஒரு பொறியில் நுண்மை-பருமை என 2, இரண்டு, மூன்று, நான்கு பொறியுடையன என 3, ஐந்து பொறியில் மனமுடையது, மனம் இல்லாதது என 2 ஆக ஏழு வகைகள் ஆயின. இவற்றை நிறைவு உடையன, நிறைவு அடையாதன (பர்யாப்தி, அபர்யாப்தி) எனப் பெருக்கும் போது பதினான்கு ஆகும். இப்பதினான்கனுள் 'மனமுடைய ஐம்பொறி ஸமாஸம்' அருகருடையதாம். காதையில் 'மனமுடைமை' என்று குறிப்பிடவில்லை. மனிதப் பிறவி என்றதால் ஐம்பொறியும் மனம் உடைமையும் பெறப்பட்டன. இப்படி ஜீவஸமாஸ வழி அருகரை நிறுவி அறியலாம்.

இப்படி காதை 31 முதல் 36 வரை நிறுவுதல் (ஸ்தாபனா) நோக்கில் அருகரை அறியலாம் என்றார். இனி, திரவிய நோக்கில் அருகரை விளக்குகிறார்.

37. ஜரவாஹி துக்க ரஹியம் ஆஹாரணிஹார வஜ்ஜியம் விமலம்|
ஸிம்ஹாண கேல ஸேஓ ணத்தி துகுஞ்சா ய தோஸோ ய ||

(ப-ரை) : ஜர-மூப்பு, வாஹி-பிணி, துக்க-துன்பம், ரஹியம்-இல்லாதவர், ஆஹார-உணவு, ணிஹார-மலக்கழிவு, வஜ்ஜியம்-இல்லாதவர், விமலம்-தூய்மையானவர், ஸிம்ஹாண-சளி, கேல-இருமல், ஸேஓ-வேர்வை, ய-மேலும், துகுஞ்சா-துர்நாற்றம், தோஸோ ய-ஆகிய குற்றங்கள், ணத்தி-இல்லாதவர். எ.று.

38. தஸ பாணா பஜ்ஜதீ அட்டஸஸ்ஸா ய லக்கணா பணியா|
கோகீர ஸங்க தவளம் மம்ஸம் ருஹிரம் ச ஸவ்வங்கே||

(ப-ரை) : தஸ பாணா-பத்து பிராணன் உடையவர், பஜ்ஜதீ-பர்யாப்தி உடையவர், ய-மேலும், அட்ட ஸஹஸ்ஸா-1008, லக்கணா-இலக்கணங்கள், பணியா-கூறப்பட்டவர், ச-மற்றும், ஸவ்வங்கே-உடல் முழுதும், கோ கீர-பசும்பால், ஸங்க-சங்கு போல, தவளம்-வெண்மையான, மம்ஸம்-இறைச்சி, ருஹிரம்-குருதி உள்ளன எனக் கூறப்பட்டவர். எ.று.

39. ஏரிஸ குணேஹிம் ஸவ்வம் அஇஸயேவம்தம் ஸுபரிமலாமோயம்|
ஓராலியம் ச காயம் ணாயவ்வம் அரஹபுரிஸஸ்ஸ||

(ப-ரை) : அரஹபுரிஸஸ்ஸ-அருகருடைய, ஓராலியம்-ஔதாரிக, காயம்-உடல், ஏரிஸ-மேல் கூறப்பட்ட, குணேஹிம்-குணங்களோடு கூடியுள்ளது, ஸவ்வம்-முழுதும் அஇஸயே வம்தம்-அதிசயத்தோடு கூடியது, ஸுபரிமலா மோயம்-நறுமணம் மிக்கது என, ணாயவ்வம்-அறிதல் வேண்டும். எ.று.

(க-ரை) : அருகருடைய ஔதாரிக உடல் அதிசயத்தோடு கூடியது. நறுமணம் மிக்கது. மேலும் மூப்பு, பிணி, உணவு, மலக்கழிவு, சளி, இருமல், வேர்வை, தீ நாற்றம் முதலான குற்றங்கள் இல்லாதது. அவர் பத்து பிராணன், பர்யாப்தி, 1008 இலக்கணங்கள் உடையவர் மற்றும் உடல் முழுதும் பசும்பால் அல்லது சங்கின் வெண்மை போல நிணமும், குருதியும் வெண்மை நிறம் உடையன.

(வி-ரை) : ஆசாரியர் இங்கே (கா: 37, 38, 39) அருகருடைய உடல் சிறப்பை முதன்மையாகக் குறிப்பிட்டுள்ளார். அருக நிலையில்-ஆன்மாவின் பரம நிலையில் - உடல் விளங்கும் சிறப்பைக் காட்டியுள்ளார். இங்கே திரவிய நிக்ஷேபம் என்று கருதுதல் கூடாது.

இத்தகு நிலைவழி அருகரை நிறுவி அறியலாம் என்பதாம். இது போன்ற நிலை வேறு எங்கும் காணப்படாமையால் இந்நிலையைச் சுட்டினார் எனலாம். பரமான்ம நிலையினின்றும் வேறுபட்ட பரம ஔதாரிக உடலை முதன்மையாகக் கொண்டு கூறிய 'திரவிய அருகர்' வருணனை எனக் கொள்ள வேண்டும்.

40. மயராய தோஸ ரஹிஓ கஸாய மல வஜ்ஜிஓ ய ஸு விஸுத்தோ |
சித்த பரிணாம ரஹிதோ கேவல பாவே முணேயவ்வோ ||

(ப-ரை) : மய-செருக்கு, ராய-ஆர்வம், தோஸ-செற்றம், ரஹிஓ-இல்லாத, ய-மேலும், கஸாய மல-வெகுளி முதலான கசாயங்கள், வஜ்ஜிஓ-இல்லாத, ஸுவிஸுத்தோ-மிக தூய்மை, சித்த-மன, பரிணாம-விகல்பம், ரஹிதோ-இல்லாத, கேவல பாவே-கேவல ஞானம் எனும் ஒரே இயல்புடைய அருகர் என, முணேயவ்வோ-அறிதல் வேண்டும். எ.று.

(க-ரை) : கேவல அறிவு வடிவ ஒரே பாவம் உடையவர் அருகர் என அறிதல் வேண்டும். அவருக்குச் செருக்கு, ஆர்வம், செற்றம், கசாயம், மன விகற்பம் முதலான இல்லாத தூய நிலை மட்டுமே உண்டு.

(வி-ரை) : ஆசாரியர் அருக நிலையை 'பாவ' நோக்கில் சுட்டுகிறார். பதின்மூன்றாம் குணத்தான நிலையில் மோகனீய வினை முதலான காதி வினைகள் இன்மையால் கசாயம் முதலான பரிணாமங்கள் இல்லை. அறிவு மறைப்பு வினையின் கேடு-தணிவு நிலை இன்மையால் மன விகற்பம் இல்லை. இப்படி முழுதுணர் அறிவு வடிவான வீதராக 'பாவ அருகனை' நிறுவி அறிதல் வேண்டும் என்பதாம். 'பாவ' நிக்ஷேபம் அன்று.

41. ஸம்மத் தம்ஸணி பஸ்ஸதி ஜாணதி ணாணேண தவ்வ பஜ்ஜாயா|
ஸம்மத்த குண விஸுத்தோ பாவோ அரஹஸ்ஸ ணாயவ்வோ||

(ப-ரை) : ஸம்மத் தம்ஸணி-நல் தரிசனத்தால், பஸ்ஸதி-தன்னையும் பிற அனைத்தையும் பொதுமை நிலையில் பார்க்கிறார், ணாணேண-கேவல ஞானத்தால், தவ்வ-எல்லா திரவியங்களையும், பஜ்ஜாயா-அவற்றின் எல்லா பரியாயங்களையும், ஜாணதி-அறிகிறார், ஸம்மத்த குண-க்ஷாயிக ஸம்யக்த்வ குணத்தால், விஸுத்தோ-தூய்மையுடையவர் என, அரஹஸ்ஸ-அருகருடைய, பாவோ-பாவத்தை, ணாயவ்வோ-அறிதல் வேண்டும். எ.று.

(க-ரை) : தன்னையும் பிற அனைத்தையும் பொதுமையில் பார்ப்பவரும் முழுதுணர் அறிவால் அனைத்துப் பொருள்களையும் அவற்றின் பரியாயங்களை அறிபவரும், அழியாத நற்காட்சியால் தூய்மையுடையவரும் ஆனவர் அருகர். இப்படி 'அருகர்பாவ'த்தை அறிதல் வேண்டும்.

(வி-ரை) : முன் காதையில் அருகர் 'பாவ' நிலையை எதிர்மறை முகத்தான் கூறியவர் இந்த காதையில் உடன்பாட்டு முறையில் கூறியுள்ளார். இருவகையாலும் கூறுதல் ஆசாரியர் உரை மரபாகும்.

இந்நூலுள் 14 காதைகள் வழி அருக நிலை விளக்கப்பட்டுள்ளது. இவற்றின் விரிவை ஐஞ்சிறப்பு (பஞ்ச கலியாண) வருணனைகளில் காணலாம். அருக நிலைக்கு உயரும் சிறப்புகளை அறிய வேண்டும் என்பது கருத்து.

11. பிரவ்ரஜ்யா (துறவியர்)

42. ஸுண்ணஹரே தருஹிட்டே உஜ்ஜாணே தஹ மஸாணவாஸே வா|
கிரிகுஹ கிரிஸிஹரே வா பீமவணே அஹவ வஸிதே வா||

(ப-ரை) : ஸுண்ணஹரே-காலி வீடு, தரு ஹிட்டே-மரத்தின் அடி (மரபொந்து), உஜ்ஜாணே-பூங்கா, தஹ-மேலும், மஸாணவாஸே-சுடுகாடு/இடுகாடு, வா-மற்றும், கிரி குஹ-மலைக்குகை, கிரிஸிஹரே-மலை உச்சி, வா-மற்றும், பீமவணே-கொடிய காடு, அஹவவா-மேலும் பிற இடங்களில், வஸிதே-துறவியர் தங்குவர். எ.று.

43. ஸவஸாஸத்தம் தித்தம் வசசஇதாளத்தயம் ச உத்தேஹிம்|
ஜிண பவணம் அஹ வேஜ்ஜம் ஜிணமக்கே ஜிணவரா விந்தி||

(ப-ரை) : ஸவஸாஸத்தம்-தற்சார்புடைய முனிவர், தித்தம்-தீர்த்தம், வச-வசனம், சஇதாளத் தயம்-சைத்தியம், ஆலயம் எனும் மூன்றும், ச-மற்றும், உத்தேஹிம்-முன்னே கூறப்பட்டவை, ஜிண பவணம்-இயற்கை ஆலயம், ஜிணமக்கே-ஜிந கோட்பாட்டில்/நெறியில், அஹ வேஜ்ஜம்-தியானத்துக்கு உரியன என, ஜிணவரா-ஜிநர், விந்தி-கூறியுள்ளனர்.

(க-ரை) : தற்சார்புடைய முனிவர் தியானத்துக்கு தீர்த்தம், வசனம், சைத்தியம், ஆலயம், இயற்கை ஆலயம் இவை ஜிந நெறியில் உரியன என ஜிநர் கூறியுள்ளனர். எ.று.

44. பஞ்ச மஹவ்வய ஜுத்தா பஞ்சிந்திய ஸஞ்ஜயா ணிராவேக்கா|
ஸஞ்ஜாய ஜாண ஜுத்தா முணிவரவஸஹா ணிஇச் சந்தி||

(ப-ரை) : பஞ்ச-ஐந்து, மஹவ் வய-மாவிரதம், ஜுத்தா-கூடியவர், பஞ்சிந்திய-ஐம்பொறி அடங்கிய, ஸஞ்ஜயா-ஒழுக்கமுடையவர், ணிராவேக்கா-குறி எதிர்ப்பு இல்லாதவர், ஸஞ்ஜாய-ஸ்வாத்யாயம், ஜாண-தியானம், ஜுத்தா-கூடியவர், முணிவர வஸஹா-முனிவருள் சிறந்தவர், ணிஇச்சந்தி-விரும்புகின்றனர். எ.று.

(க-ரை) : ஐம்பெரு நோன்பும் ஐம்புலனடங்கிய ஒழுக்கமும், தற்சார்பும், எக்குறி எதிர்ப்பும் நோக்காமையும், படித்தல், படிப்பித்தல், தியானம் உடைய முனிவருள் சிறந்தோர், கைவிடப்பட்ட வீடு, மரப்பொந்து, பூங்கா, சுடுகாடு, மலைக் குகை, மலை உச்சி, கொடிய காடு முதலான இடங்களில் தங்குதலை விரும்புகின்றனர்; தீர்த்தம். ஜிநர் மொழி, சைத்தியம், ஆலயம், இயற்கை ஆலயம் இவற்றை ஜிந நெறியில் தியானத்துக்கு உரியனவாக ஜிநர் அருளியுள்ளார் என விரும்புகின்றனர்.

(வி-ரை) : ஜிந நெறியில் அறிவுத் தெளிவு வேண்டும் என எடுத்த பதினோரு இடங்களில் கடைசியான 'ப்ரவ்ரஜ்யா'-துறவு ஏற்றார்-இயல்பை விளக்கத் தொடங்கியுள்ளார். 17 காதைகளில் அறிவு புகட்டுகிறார். இங்கே முதலில் துறவு ஏற்பார் தங்கும் இடங்களைக் குறிப்பிட்டுள்ளார். கைவிடப்பட்ட வீடு முதலாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தங்கும் இடங்களை நோக்கும் போது துறவியர் தம் துறவுக்குத் துணையாகும் தனி இடங்களில் தங்குதல் வேண்டும் எனும் குறிப்பைத் தருகிறார் எனலாம். இவர் குறிப்பிட்டுள்ள இடங்களில் மக்கள் கூட்டம் இருக்க வாய்ப்பு இல்லை. பெண்கள் இருக்க வாய்ப்பில்லை. பசு முதலான விலங்கு கூட்டங்கள் இருக்கவும் வாய்ப்பில்லை. இத்தகு இடங்களில் துறவியர் தங்குதல் வேண்டும் என அறிவு புகட்டுகிறார்.

அடுத்த காதையில் (கா:43) துறவியர் தியானிக்கக் கூடிய இடங்களைச் சுட்டியுள்ளார். 'தீர்த்தம்'-முத்தி அடைந்த நிலம் முதலானவற்றை தீர்த்தங்களாகக் கருதலாம். ஏற்கெனவே விளக்கியுள்ள 'ஆயதனம்' முதலானவற்றை இங்கு நினைவில் கொண்டு 'தீர்த்தம்' முதலானவற்றுக்குப் பொருள் காணல் வேண்டும். பஞ்ச பரமேட்டிகள் பெயராக உள்ளவை, பகவானுடைய வாணி முதலானவை 'வசனம்' ஆகும். அவர்தம் உருவை வடித்தல் 'சைத்யம்' ஆகும். அவற்றை நிறுவும் இடம் 'ஆலயம்' ஆகும். இயற்கையாக அமைந்துள்ள ஆலயமும் உள்ளன. இவை எல்லாம் ஜிந நெறியில் தியான பொருளாக விளங்குகின்றன எனக் காட்டியுள்ளார். தரும தியானத்துக்கு உரிய பொருள்கள் எனக் கருதலாம்.

அடுத்து அத்துறவியர் தாம் ஏற்ற நோன்புகளில் சிறந்து விளங்கும் முதன்மை உடையவர் என்று காட்டியுள்ளார்.

45. கிஹகந்த்த மோஹமுக்கா பாவீஸ பரீஸஹா ஜிய கஷாயா|
பாவாரம்ப விமுக்கா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : கிஹ-வீடு, கந்த்த-பற்று (இவற்றில்), மோஹ-விருப்பு, வெறுப்பு, முக்கா-இல்லை, பாவீஸ - இருபத்திரண்டு, பரீஸஹா - பரீஷகங்களை (இடையூறுகளை) பொறுத்தல், ஜியகஷாயா-கசாயங்களை வெல்லல், பாவாரம்ப-பாபமான ஆரம்பங்களில் (செயல்களில்), விமுக்கா-விடுபடுதல், ஏரிஸா-இப்படி உள்ளவர், பவ்வஜ்ஜா-துறவியர் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : அகப்புற பற்றுகள் இல்லாமை, இருபத்திரண்டு இடையூறுகளைப் பொறுத்தல், கசாயங்களை வெல்லல், பாபத் தொழில்களிலிருந்து விடுபடுதல் என இவை இல்லாதவர் துறவியர் எனக் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : துறவு ஏற்பு உணர்வை ஆசாரியர் இங்கு விளக்கியுள்ளார். ஜிந நெறியில் பற்றுகளுக்கு அணுவளவும் இடம் இல்லை. எதிலும் விருப்பு வெறுப்பு உணர்வு இல்லை. தானே வரும் இடையூறுகளைப் பொறுக்கும் உணர்வு உள்ளது. கொசுக்கடி முதலான 22 தொல்லைகளை 'பரீஷகம்' என்பர். வெகுளி முதலான கஷாயங்களை வெல்லும் உணர்வு உள்ளது. இத்தகு துறவு உணர்வு வேறு எங்கும் காணப்படவில்லை.

துறவியர் தங்கும் இடங்களில் மின் விசிறிகள் பொருத்தித் தருதலும், கொசுக்கள் தடுப்பு வலை, புகை ஊட்டுதலும் முதலான ஏற்பாடுகள் செய்தலும், இரவுக் காலங்களில் மின் விளக்கை அணைக்காமல் துறவியர் அறையில் எரிய விடுதலும் எந்த அளவு ஜிந நெறிக்குப் பொருந்தும் என எண்ணிப்பார்த்தல் வேண்டும். துறவியர்க்குச் செய்யும் இவை போன்ற செயல்கள் ஆகமம் சுட்டும் புண்ணிய பாவனையைத் தருமா என்பதும் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

46. தணதண்ணவத்ததாணம் ஹிரண்ண ஸயணாஸணாஇ சத்தாஇம்|
குத்தாண விரஹ ரஹியா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : தண-தனம், தண்ண-தானியம், வத்த-ஆடை, தாணம்-தானமாகப் பெறுதல், ஹிரண்ண-பணம், பொன் முதலான, ஸயண-படுக்கை, ஆஸணாஇ-இருக்கை முதலான, சத்தாஇம்-குடை முதலான, குத்தாணம்-குதானம் தருதல் (ஆகிய), விரஹ-ஏற்பாடு, ரஹியா-இல்லாத, ஏரிஸா-இப்படிப் பட்டவர், பவ்வஜ்ஜா-துறவியர் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : தனம், தானியம், ஆடை, பணம், பொன், படுக்கை, இருக்கை, குடை இவை போல்வனவற்றைப் தருதல் கெட்ட தானமாகும், அதிலிருந்து விலகியவர் துறவியர் ஆவர்.

(வி-ரை) : துறவியர் தரக் கூடாத தானம் பற்றி இங்கு ஆசாரியர் குறிப்பிடுகிறார். துறவியர் பெயர் கொண்டு தனம் முதலானவற்றை உடையவராக உள்ளார். பிறருக்கு அவற்றைத் தானமாக வழங்குதல் உலகில் காணப்படுகிறது. இந்த காதை ஆசாரியர் காலத்தில் காணப்பட்ட துறவு நிலையின் இழிவைக் காட்டுகிறது. அந்த இழிந்த நிலை இன்றும் தொடருதலைக் காணலாம். துறவி என்பவர் பற்று இல்லாதவர். ஆனால் துறவி எனப் பெயர் கொண்டு இல்வாழ்வான் போல எல்லாப் பற்றுகளோடும் இருக்கின்றனர். துறவு வேடம் பூண்டு அதன் காரணமாகத் தனம் முதலானவற்றைப் பெறுகின்றனர்; பிறருக்குத் தானமாகத் தருகின்றனர். அது தானம் அன்று; 'குதானம்'- கெட்ட தானம் எனச் சுட்டியுள்ளார். தானம் என்பது தருபவனுக்கும் பெறுபவனுக்கும் உயிர் நலத்தைச் செய்வது ஆகும். உயிர் நலம் இல்லாத வழங்குதல்-வாங்குதல் தானம் ஆகாது. அறம் கருதி செய்யும் தானமே தானம் ஆகும். பொருளை ஈட்டுபவனே தானம் தர தக்கவன். துறவி பொருளை ஈட்டுபவன் அல்லன். அவன் பற்றுகளைத் துறந்தவன். பாபமின்றி பொருளை ஈட்ட முடியாது. இல்வாழ்வான் நிலையில் பாபம் காணப்படுகிறது. அதனால் அவனுக்கு நல்தானம் கூறப்பட்டுள்ளது. துறவு நிலையில் இது நடைபெற இயலாது.

ஜிந நெறியில் பற்றுகளைத் துறந்தவரே துறவியராகச் சுட்டப்பட்டுள்ளனர்.

47. ஸத்தூமித்தே ய ஸமா பஸம்ஸ ணிந்தா அலத்திலத்தி ஸமா|
தணகணஏ ஸமபாவா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : ஸத்தூ - பகைவரிடமும், மித்தே - நண்பரிடமும், ய-மற்றும், பஸம்ஸ - புகழிலும், ணிந்தா - இழிவிலும், அலத்தி - இழப்பிலும், லத்தி - வரவிலும், ஸமா- ஒத்த உணர்வும், தண - புல்லிலும், கணஏ-பொன்னிலும், ஏரிஸா - இப்படி, ஸமபாவா - நடுநிலையுடையவர், பவ்வஜ்ஜா-துறவியர் என்று, பணியா - கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : பகை-நட்பு, புகழ்-இகழ், இழப்பு-வரவு, புல்-பொன் இவற்றிடையே வேற்றுமை காணாத நடுநிலை உடையவரே துறவியர் எனக் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : ஜிந நெறியில் விருப்பு-வெறுப்புக்கு இடம் இல்லை. ஏனெனில் இது பிறவி உயிரை பிறவா நிலைக்கு உயர்த்தும் உயர் நெறியாகும். ஆகையால் ஜிந நெறியில் துறவு ஏற்போர் நடுநிலை உணர்வு உடையராகவே, விருப்பு வெறுப்பு நீங்கியவராகவே இருக்க முடியும். ஒவ்வொரு பொருளும் தற்சார்பு (Independent) உடையது என்பது ஜிநர் கோட்பாடாகும். தற்சார்புடைய உயிரில் விருப்பு, வெறுப்பு

எங்ஙனம் இருக்க முடியும்? நடுநிலையே காணப்படும். அதனையே இங்கு ஆசாரியர் சுட்டினார் எனலாம்.

48. உத்தம மஜ்ஜிம கேஹே தாரித்தே ஈஸரே ணிராவேக்கா|
ஸவ்வத்த கிஹித பிண்டா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா ||

(ப-ரை) : உத்தம-உயர்ந்த, கேஹே-வீட்டிலும், மஜ்ஜிம-இடைப்பட்ட, கேஹே-வீட்டிலும், தாரித்தே-வறியாரிடமும், ஈஸரே-வளமானவரிடமும், ணிராவேக்கா-வேறுபாடு காணாது, ஸவ்வத்த-எல்லா இடத்தும், கிஹித பிண்டா-உணவு ஏற்கும், ஏரிஸா-இப்படிப்பட்டவர், பவ்வஜ்ஜா-துறவியர் ஆவார் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : மாளிகை, மண் குடிசை, வறியவர்-வளமிக்கவர் என வேறுபாடு நோக்காது தக்க எல்லா இடத்தும் உணவு ஏற்பவர் துறவியர் எனக் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : துறவியர் உணவுக்கு இல்வாழ்வாரை நோக்கவேண்டி உள்ளது. துறவு ஏற்கும் காலத்து நடுநிலை உணர்வோடு துறவு ஏற்கிறார். அந்த உணர்வே உணவு ஏற்கப் போகும் காலத்தும் துறவிக்கு இருக்கும் என்று ஆசாரியர் சுட்டுகிறார்.

அழகிய மாளிகையாக உணவு ஏற்கும் இடம் இருக்க வேண்டும், வளமை மிக்கவரிடம் உணவு ஏற்க வேண்டும் எனும் ஒரு சார்பு உணர்வு துறவியருக்கு ஆகாது. அல்லது மண் குடிசையில் ஏழை எளியவரிடம் உணவு கொள்ள வேண்டும் எனும் ஒரு சார்பு உணர்வும் துறவியருக்கு ஆகாது. இடம் பற்றியோ உணவு இடுவார் பற்றியோ எவ்வித ஆர்வமும் இன்றி தக்க இடத்தில் தக்கவரிடத்தில் தகுதியான உணவை ஏற்க வேண்டும் எனும் நடுநிலை உணர்வு துறவு ஏற்பாருக்கு இருத்தல் வேண்டும். இன்று உணவு உண்டு எனும் உறுதி துறவியருக்கு இல்லை. ஆகையால் நடுநிலை உணர்வோடு துறவியர் உணவுக்குச் செல்வர் என்பதாம்.

49. ணிக்கந்தா ணிஸ்ஸங்கா ணிம்மாணாஸா அராய ணித்தோஸா|
ணிம்மம ணிரஹங்காரா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : ணிக்கந்தா-பற்றின்மை, ணிஸ்ஸங்கா-தொடர்பின்மை, ணிம்மாணாஸா-செருக்கு இன்மை, ஆர்வமின்மை, அராய-விருப்பு இன்மை, ணித்தோஸா-வெறுப்பு இன்மை, ணிம்மம-எனது உணர்வு இன்மை, ணிரஹங்காரா-நான் உணர்வு இன்மை, ஏரிஸா-இப்படி உடையவர், பவ்வஜ்ஜா-துறவு ஏற்பவர் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : பற்று, தொடர்பு, செருக்கு, ஆர்வம், விருப்பு, வெறுப்பு, மமகாரம், அகங்காரம் எதுவும் இல்லாதவர் துறவியர் ஆவார்.

(வி-ரை) : துறவு பூணுதல் வேடம் மாற்றுதல் அன்று. அது உயிர் உணர்வுகளில் தூய்மையைக் கூட்டுவது என இங்கு ஆசாரியர் ஜிந நெறி துறவியரைச் சுட்டியுள்ளார்.

பற்று இன்மை	-	**அகப்புற பற்றுகள் இல்லாமை**
தொடர்பு இன்மை	-	**பெண் முதலான பிற பொருளோடு தொடர்பு இன்மை**
செருக்கு இன்மை	-	**எட்டு வகையான செருக்குகள் இல்லாமை**
ஆர்வ மின்மை	-	**ஐம்புல வேட்கை இல்லாமை**
விருப்பமின்மை	-	**உடல் முதலானவற்றில் விருப்பம் இல்லாமை**
செற்றமின்மை	-	**பிறரிடம் வெறுப்பு இன்மை**
மமகாரம் இன்மை	-	**எனது எனும் உணர்வு இன்மை**
அகங்காரம் இன்மை	-	**நான் எனும் உணர்வு இன்மை**

எது நிகழ்கிறது அது வினை உதயத்தின் நிமித்தமாக நிகழ்கிறது என அறியும் போது பிற பொருள் மீது கருத்தா உணர்வு செல்லாது. தனக்கு அது சாதனமாக அமைகிறது எனத் தெளியலாம்.

50. ணிண்ணேஹா ணில்லோஹோ ணிம்மோஹா ணிவ்வியார ணிக்கலுஸா|
ணிப்பய ணிராஸபாவா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : ணிண்ணேஹா-நட்பின்மை, ணில்லோஹா-உலோபமின்மை, ணிம்மோஹா-மயக்கமின்மை, ணிவ்வியார-விகாரமின்மை, ணிக்கலுஸா-மலினமின்மை, ணிப்பய-அச்சமின்மை, ணிராஸ பாவா-ஆசை இன்மை, ஏரிஸா-இப்படி உடையவர், பவ்வஜ்ஜா-துறவியாவார் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : நட்பு, உலோபம், மயக்கம், விகாரம், மலினம், அச்சம், ஆசை என்பன இல்லாதவர் துறவியர் எனக் கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) : ஜிந துறவியர் நிலையை இங்கு ஆசாரியர் விளக்கியுள்ளார்.

நட்பின்மை - எவரிடமும் நட்புரிமை பாராட்டாமை, உலோபமின்மை - பிறபொருள் மீது கடும் பற்று கொள்ளாமை. மயக்கமின்மை - பிறபொருளைத் தானாக மயங்காமை; விகாரமின்மை - அகஉணர்விலும் புறத் தோற்றத்திலும் வேற்றுமை கொள்ளாமை, மலினமின்மை-கசாயத்தால் உயிரை மலினப்படுத்தாமை; அச்சமின்மை - தன் அழிவின்மையை அறிவதால் பிறவற்றில் அச்சமில்லாமை, ஆசைபாவம் இன்மை - பிற பொருளில் ஆசை ஏதும் கொள்ளாத உணர்வு; பிறபொருளைத் தனதாக அல்லது தானாக கருதாதபோது ஆசை இராது. இப்படி அமைகிறார் துறவு ஏற்பவர்.

51. ஜஹஜாயரூவ ஸரிஸா அவலம்பிய புய ணிராஉஹா ஸந்தா|
பரகியணிலயணிவாஸா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : ஜஹஜாயரூவ ஸரிஸா-பிறந்த உடம்பு போன்ற தோற்றம். அவலம்பிய புய-தொங்கிய தோள்கள். ணிராஉஹாஸந்தா-படை கொள்ளாத சாந்த முத்திரை. பரகிய ணிலய-பிறர் தந்த வாழிடத்தில். ணிவாஸா-தங்குதல். ஏரிஸா-இப்படி உள்ளவர். பவ்வஜ்ஜா-துறவியர் ஆவார் என, பணியா -கூறப்பட்டுள்ளது. எ,று,

(க-ரை) : ஆடை புனையா உடல், ஆடாத தோள்கள், படை பூணாத சாந்த தோற்றம், பிறர் தந்த இடத்தில் தங்குதல் உடையவர் துறவியர் ஆவார்.

(வி-ரை) : துறவியர் தோற்றத்தை இங்கு விளக்குகிறார். ஆடை புனையாத தோற்றம் உடையவர் ஜிந நெறி துறவியர். வெட்கப்படாத குழவி போல நிர்வாணமாக உலா வருபவர். தவத்தில் நிற்பதால் தோள்கள் ஆடாமல் தொங்குகின்றன. துறவியின் தவ உணர்வைச் சுட்டும் தொடர்கள் இவை. படைக் கருவிகள் ஏதும் பூணாத தோற்றம். அகிம்சை உணர்வின் வெளிப்பாடு இது. தனக்கு அழிவில்லை எனத் தன்னை உணர்தலால் அச்சமற்ற நிலை. அதனால் படைக் கருவிகள் இல்லை. சாந்த வடிவம் என்றது அகத்தே கஷாயம் முதலான விகாரமில்லா நிலையைச் சுட்டியது. பற்றுகளைத் துறப்பதால் பிறர் (வழங்கும்) இடத்தில் தங்குகிறார். தனக்கென பிறபொருள் இல்லை என்பதன் அடையாளம்.

ஜிந நெறியில் துறவு ஏற்பவர் நிலை இது என அறிவு புகட்டுகிறார்.

52. உவஸமகமதமஜுூத்தா ஸரீர ஸங்கார வஜ்ஜியா ருக்கா|
மயராய தோஸ ரஹியா பவ்வஜ்ஜா ஏரிஸா பணியா||

(ப-ரை) : உவஸம-சாந்த பரிணாமம், கம-உத்தம க்ஷமையும், தம-புலனடக்கமும், ஜுூத்தா-கூடிய, ஸங்கார-சீர்மை, வஜ்ஜியா-நீக்கிய, ருக்கா-எண்ணெய் தடவாத, ஸரீர-உடல், மய-செருக்கு, ராய-ஆர்வம், தோஸ-செற்றம், ரஹியா-இல்லாத, ஏரிஸா-இப்படியானவர், பவ்வஜ்ஜா-துறவி ஆவார் என, பணியா-கூறப்பட்டுள்ளது. எ.று.

(க-ரை) : சாந்தமும் பொறுமையும் புலனடக்கமும் உடலை அழகுபடுத்தாமையும், எண்ணெய் பூசாமையும், செருக்கு ஆர்வம் செற்றம் இல்லாமையும் உடையவர் துறவி ஆவார்.

(வி-ரை) : உடலும் உள்ளமும் துறவியருக்கு அமையும் இயல்பு கூறுகிறார், ஆசாரியர். துறவு ஏற்கும் திகம்பர துறவியின் செயல்பாட்டினை அல்லது சிந்தனையை விளக்குகிறார் எனினும் அமையும்.

(ப-ரை) ஜே - எவர், பர தவ்வ - புறப் பொருள்களை, முஹா து - நோக்காது, ஸதவ்வம் - தன் பொருளை (உயிரை), ஜாயந்தி - தியானிக்கிறார், தே- அவர், ஸுசரித்தா - நல்லொழுக்கம் உடையவராகி, ஜிண வராணம் - ஜிநருடைய, மக்கே - நெறியில், அணுலக்கா - இசைந்து நடந்து, ணிவ்வாணம் - நிர்வாணத்தை, லஹஹிம் - அடைகின்றார், எ.று.

(க-ரை) புறப்பொருளை நோக்காது தன்னை நோக்கித் தியானிப்பவர் நல்லொழுக்கராக ஜிநர் நெறிக்கு இசைய ஒழுகி நிர்வாணத்தை அடைகிறார்.

(வி-ரை) ஆசாரியர் தன் உயிரைத் தியானிப்பவரே முத்தி அடைகிறார் என்கிறார்.

தன்னை உணரும் போது பிற பொருள் நோக்கம் இராது. அதனால் பிற பொருளை நோக்காதவர் என்றார். தன் பொருள் தன் தூய உயிராகும். அது தியானப் பொருளாவதே நல்லொழுக்கம் ஆகும். அந் நல்லொழுக்கம் உயிரைத் தழுவியது; புறத்தைத் தழுவியது அன்று. அதனால் நல்லொழுக்கில் நிகழ்பவர் என்றார். அதுவே ஜிநர் நெறி. அதனால் அவர் உரைக்கு இசைவாக நடப்பவர் என்றார். அவரே முத்தியை அடைகிறார்.

---

13. மேருமந்தர புராணம் - 999.

நிழல்போல நின்றுன்னை வந்தடைந்தார் மாற்றாம்
அழல்போக்கி அந்தமிலா இன்பத்தை ஆக்கி
வழுத்தரா முத்தியின்கண் வைக்கும்நின் பொற்பாத
நிழல்சேரார் மாற்றாம் நெடுவழியைச் சேர்வார்.

'அலகுஇ லாஅறி வின்கண் அடங்கிவந்து
உலகுஎ லாம்உள் அடங்கிய உன்னைஎன்
மலம்இ லாத மனத்திடை வைத்தபின்
அலகி லாமையது என்கணது ஆயதே'

என வருவன காண்க.[14]

20 ஜிணவரமஏண ஜோஇ ஜாணே ஜாஏஇ ஸுத்தமப்பாணம் |
ஜேண லஹஇ ணிவ்வாணம் ண லஹஇ கிம் தேண ஸுரலோயம் ||

(ப-ரை) ஜிண வர மஏண - ஜிநர் அறத்தில் செல்லும், ஜோ இ - யோகி (முனிவர்) ஸுத்த மப்பாணம் - தூய உயிரை, ஜாணே - தியானத்தில், ஜாஏஇ - தியானிக்கிறார், ஜேண - அவர், ணிவ்வாணம் - முத்தியை, லஹஇ - அடைகிறார், தேண - அவர், ஸுரலோயம் - தேவ உலகை, ண லஹஇ - அடையாரா, கிம் - என்ன ? எ.று.,

(க-ரை) ஜிந அறத்தில் செல்லும் முனிவர் தம் தியானத்தில் தூய உயிரைத் தியானிப்பதால் முத்தியை அடைகிறார். அந் நெறியில் அவர் தேவ உலகை அடையாரா என்ன?

(வி-ரை) ஜிந அறத்தில் நிகழ்பவர் தேவ இன்பத்தையும் முத்தி இன்பத்தையும் பெறுகிறார் என்கிறார்.

முத்தி உலகையே பெறும் போது தேவ உலகைப் பெறுவது கடினம் இல்லை. ஏனெனில் ஜிந நெறியில் தேவ உலகம் வழியில் உள்ளது: முத்தி உலகம் முடிவில் உள்ளது.

தூய உயிரைத் தியானிக்கும் முனிவர் ஆயுள் வினை கட்டினால் தேவ ஆயுள்தான் கட்டுவார். இந்த ஐந்தாம் காலத்தில் முத்தி அடைய முடியாது, பரத கண்டத்தில். நற்காட்சியுடைய முனிவர் ஆயுள் கட்டும் போது தேவ ஆயுவே கட்டுவார். இங்கே தியானம் என்பது உயிரின் தூய பரியாய நிகழ்வு அன்று. உயிரின் தூய பரியாய நிகழ்வு நிகழும் போது அது உயிரைத் தழுவுவதால் முத்தியே நிகழும். ஆனால் தூய ஆன்மா பற்றிய சிந்தனை ஆகும் போது அங்கு தேவ ஆயுள் கட்டும்

14. மேருமந்தர புராணம் - 494, 633.

வாய்ப்பு அமைகிறது. அது இடையிலே வரும் வாழ்வு. எனவே முத்தி நெறியில் அவ் வாழ்வு கிடைப்பது அரிதான ஒன்று அல்ல. எளிதாகவே அமைகிறது. நற்காட்சியாளனுக்கு அவ் வாழ்வு குறி அன்று. அவன் குறி நோக்கிச் செல்லும் நெறியில் இடையில் உள்ளது அது.

கண்ணினால் களங்கமில் நிலையைக் கண்டிடா
பண்ணுறப் பெரியவர் பாதம் சேர்ந்துஅப்
புண்ணியச் சுருதியைச் செவியில் பூரியா
விண்ணுலகு அடைந்தனன் வென்றி வீரனே![15]

21 ஜோ ஜாஇ ஜோயணஸயம் திய ஹேணேக்கேண லேவி குருபாரம் |
ஸோ கிம் கோஸத்தம் பி ஹு ண ஸக்கஏ ஜாஉ புவணயலே ||

(ப-ரை) ஜோ - எவர், குருபாரம் - பெரும் சுமையை, லேவி - எடுத்துக் கொண்டு, தியஹேணேக்கேண - ஒரு நாளில், ஜோயண ஸயம் - நூறு ஓசனை தூரம், ஜாஇ - செல்கிறார் எனில், ஸோ - அவர், புவணயலே - இப் புவியில், கோஸத்தம் பி ஹு - உண்மையில் அரை கோச தூரம் கூட, ண ஸக்கஏ ஜாஉ - செல்ல வல்லமை இராதா, கிம் - என்ன? எ.று.,

(க-ரை) பெரும் சுமையோடு ஒருவர் ஒருநாளில் நூறு யோசனை தொலைவு செல்ல முடியும் என்றால் அவர் அரை கோச தூரம் செல்ல ஆற்றல் இராதா என்ன?

(வி-ரை) தேவ உலகம் பெறுதல் எளிது என்பதற்கு எடுத்துக் காட்டுத் தருகிறார்.

முன் காதையில் தன் ஆன்ம தியானத்தால் சொர்க்க சுகமும் முத்தி சுகமும் பெற முடியும் என்றார். அதனை எடுத்துக் காட்டு வழி இங்கே விளக்கியுள்ளார். ‘ சுமையோடு செல்லுதல் ‘ என்றதால் முத்தியை அடைய செய்யப்படும் மிகு முயற்சியைக் குறிப்பாகக் காட்டினார். அத்தகு மிகு முயற்சி உடையவருக்கு சொர்க்க சுகம் கிடைப்பதற்குத் தனி முயற்சி தேவை இல்லை; அது தானே கிடைக்கும் என்பதாம்.

நான்கு கோசம் கொண்டது ஒரு யோஜனை. இது ஒரு நில அளவை.

22 ஜோ கோடிஏ ண ஜிப்பஇ ஸுஹடோ ஸங்காமஏஹிம் ஸவ்வேஹிம் |
ஸோ கிம் ஜிப்ப இ இக் கிம்ணரே ண ஸங்காமஏ ஸுஹடோ ||

(ப-ரை) ஜோ - எவர், ஸங்காமஏ - போர்க் களத்தில், ஸங்காமஏஹிம் ஸவ்வேஹிம் - போரிடும் எல்லோரோடும் போரிட்டு, கோடிஏ ஸுஹடோ - கோடி மறவர்களை, ஜிப்பஇ - வெல்கிறார் எனில், ஸோ - அவர், இக் கிம்ணரேண ஸுஹடோ - ஒருவனான மறவனை, கிம் ஜிப்பஇ ண - வெல்ல முடியாதா, என்ன? எ.று,

15. மேருமந்தர புராணம் - 551

(க-ரை) போர்க்களத்தில் எல்லாரோடும் போரிட்டு கோடி மறவர்களை வெல்லும் வீரர் ஒரு தனி மறவனை வெல்ல முடியாதா என்ன?

(வி-ரை) அடுத்து ஒரு எடுத்துக் காட்டுத் தந்துள்ளார்.

ஜிநர் நெறியில் செல்பவர் கொடும் கருமங்களை வெல்லவே செய்கிறார். அவர் சொர்க்க இன்பத்தைத் தடுக்கும் பாப வினையை வெல்ல முடியாதா என்ன? எளிதாக வெல்வார் என்பதாம். சொர்க்க இன்பத்துக்கான தடை வேறு; முத்தி இன்பத்துக்கான தடை வேறு. முன்னது எளிதான தடை; பின்னது அரிதான தடை. அரிதானதை வெல்லும் ஆற்றல் உடையவருக்கு எளிதான தடையை வெல்லுதலில் என்ன இடர் இருக்க முடியும்? ஒன்றும் இருக்க முடியாது.

சீயம் சுமந்த மாசறு மணியணை
மேய உரவோன் சேவடி
வாயின் வாழ்த்த வானுலகு எளிதே.[16]

23 ஸக்கம் தவேண ஸவ்வோ வி பாவஏ தஹிம் வி ஜாண ஜோஏண |
ஜோ பாவஇ ஸோ பாவஇ பரலோஏ ஸாஸயம் ஸோக்கம் ||

(ப-ரை) ஸக்கம் - தேவ பிறவியை, தவேண - தவத்தால், ஸவ்வோ வி - எல்லாரும், பாவஏ - அடைகிறார், தஹிம் வி - ஆனால், ஜாண ஜோஏண - தியான முயற்சியால், ஜோ - எவர், பாவஇ - தேவ பிறவியை அடைகிறார், ஸோ - அவர், பரலோஏ - மறு பிறவியில், ஸாஸயம் - அழியாத, ஸோக்கம் - பேரின்பத்தை, பாவஇ - அடைகிறார், எ.று.,

(க-ரை) தவம் செய்வார் பலரும் சொர்க்க சுகத்தை அடைகிறார். ஆனால், தன் உயிரைத் தியானம் செய்யும் முனிவர் சொர்க்க சுகத்தைப் பெறுவதோடு, மறு பிறவியில் அழியா வீடு பேற்றையும் பெறுகிறார்.

(வி-ரை) தியானத்தின் சிறப்பை விளக்குகிறார்.

உபவாசம் முதலான உடலை வருத்தும் தபத்தைப் பவ்வியரும், அபவ்வியரும் செய்கின்றனர். மந்த துவர்ப்பு உணர்வால் எல்லாரும் சொர்க்கம் அடைகின்றனர். ஆனால், அவர் வீடு பேற்று இன்பத்தை அடைவது இல்லை. மீண்டும் பிறவியில் உழல்கின்றனர். அதே போது தன் ஆன்ம தியானத்தால் சொர்க்கம் அடைபவர் மறு பிறவியில் அந்த ஜிந நெறி தியான ஆற்றலால் என்றும் அழியா பேரின்பத்தை அதாவது முத்தியை அடைகிறார். ஜிநர் நெறியில் தியானம் செய்யும் முனிவருக்கும் வேறு வழியில் தபம் செய்யும் துறவியருக்கும் உள்ள வேறுபாடு இவ்வளவே!

---

16. யாப்பருங்கலம் நூ.11 இன் மேற்கோள் பாடல்.

24 அஇஸோஹண ஜோஏண ஸுத்தம் ஹேமம் ஹவேஇ ஜஹ தஹய |
காலாஇ லத்தீஏ அப்பா பரமப்பஓ ஹவதி ||

(ப-ரை) அஇ ஸோஹண - தக்க அழுக்கு நீக்கிகள், ஜோ ஏண - தொடர்பால், ஜ ஹ - எப்படி, ஹேமம் - பொன், ஸுத்தம் - தூய்மை, ஹவேஇ - அடைகிறது, தஹ ய - அப்படியே, காலாஇ லத்தீஏ - கால வாய்ப்பு முதலானவற்றின் தொடர்பால், அப்பா - பிறவி உயிர், பரமப்பஓ - பரமான்மாவாக, ஹவதி - ஆகிறது.

(க-ரை) புடம் இட்ட பொன் தூய்மை பெற்று ஒளிர்தல் போல, கால வாய்ப்பு முதலானவற்றால் பிறவி உயிர் பரமான்மாவாக விளங்குகிறது.

(வி-ரை) ஓர் எடுத்துக் காட்டு வழி தியானத்தின் சிறப்பை விளக்குகிறார்.

கிட்டகாலிதம் முதலானவற்றால் கலந்துள்ள சுரங்கத்துப் பொன் புடம் போட்டு அழுக்கு நீக்கிய பிறகு தன் இயல்பில் ஒளிர்கிறது. அது போல பிறவி உயிர் விருப்பு வெறுப்பு முதலான துவர்ப்பு அழுக்குகளால் மாசுற்றுள்ளது/ அம் மாசு நீங்க தக்க காலம், இடம், பொருள், பாவம் கிடைக்கும் போது மாசு நீங்கி பரமான்மாவாக-தன் இயல்பான வரம்பற்ற அறிவு முதலான குணங்களோடு விளங்குகிறது.

மாசுடைய உயிருக்குத் தொடக்க மில்லை; மாசற்ற உயிருக்கு முடிவு இல்லை. அதாவது பிறவி நிலைக்குத் தொடக்க மில்லை. பிறவா நிலைக்கு முடிவு இல்லை. முயற்சி வேண்டும் என்பதாம்.

25 வர வயதவேஹி ஸக்கோ மா துக்கம் ஹோஉ ணிரட இயரேஹிம்|
சாயாதவட்டியாணம் படிவாலந்தாண குருபேயம்||

(ப-ரை) வயதவேஹி - நோன்பு, தவங்களால், ஸக்கோ - சொர்க்கம் கிடைக்கிறது, வர - அது சிறந்ததே, இயரேஹிம் - இவை இல்லாமையால், ணிரட - நரக, துக்கம் - துன்பம், ஹோஉ - கிடைக்கிறது, மா- அது சிறப்பன்று, சாயாதவட்டியாணம் - நிழலிலும் வெய்யிலிலும், படிவாலந்தாண - இருத்தலில், குரு பேயம் - பெரும் வேறுபாடு உள்ளது, எ.று.,

(க-ரை) நோன்பு நோற்றலால், தவ ஆற்றலால் சொர்க்கம் கிடைக்கிறது; அது சிறந்ததே. அவை ஏதுமில்லாமல் நரகம் முதலான துன்பங்களை அடைதல் சிறப்பன்று; நிழலிலும் கடும் வெய்யிலிலும் இருத்தலில் பெரும் வேறுபாடு உண்டு.

(வி-ரை) நோற்றல் ஒழுக்கம் வேண்டும் என வற்புறுத்துகிறார்.

மர நிழலில் அமர்வார் இனிய சுகம் பெறுகிறார். சுடும் வெய்யிலில் இருப்பவர் மிகு துன்பம் பெறுகிறார். இவ் விரண்டு அனுபவங்களுக்கு இடையே மிகுந்த வேறுபாடு உள்ளது அல்லவா? அது போல நோன்பு, தவம் முதலான ஒழுக்கத்தில்

ஒழுகுபவர் சொர்க்கம் பெறுகிறார். ஆனால் அப்படி ஒழுகாமல், ஐம்புல வேட்கையில் அழுந்தி கிடப்பவர் அடுத்த பிறவியில் நரகம் முதலான பொறுக்க முடியாத துன்பங்களை அடைகின்றனர். இப்படி இவர்களுக்கு இடையே மிகுந்த வேறுபாடு உள்ளது. ஆகையால் வீடுபேறு பெறும் வரை நோன்பு முதலானவை நோற்றல் சிறப்புடையதாகும். இதில் புலனின்பமும் கிடைக்கிறது; முத்திக்குத் துணையும் ஆகிறது. ஆனால் நோற்றல் ஒழுக்கம் இல்லாமல், ஐம்புல இன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவர் மறுமையில் நரக துன்பம் முதலானவற்றுக்கு ஆளாகிறார். ஆகையால், அத் துன்பங்கள் தருவனவற்றில் ஈடுபடுதல் அறியாமை ஆகும் என அறிதல் வேண்டும்.

26 ஜோ இச்சஇ ணிஸ்ஸரிதும் ஸம்ஸாரமஹண்ணவாஉ ருந்த் தா ஓ |
கம்மிதணாண டஹணம் ஸோ ஜா யஇ அப்பயம் ஸுத்தம் ||

(ப-ரை) ஜோ - எவர், ருந்த் தா ஓ - அகன்ற, ஸம்ஸார - பிறவி, மஹண்ணவாஉ - பெருங் கடலை, ணிஸ்ஸரிதும் - கடக்க, இச்சஇ - விரும்புகிறார்; ஸோ - அவர், கம்மிதணாண - கரும விறகை, டஹணம் - எரிக்கும், அப்பயம் ஸுத்தம் - தூய ஆன்மாவை, ஜாய இ - தியானிக்கிறார், எ.று.,

(க-ரை) பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்பும் முனிவர் கரும விறகை எரிக்கும் தூய ஆன்ம ஊழ்கத்தில் ஆழ்கிறார்.

(வி-ரை) பிறவியைக் கடக்க ஆன்ம தியானமே வழி என்கிறார்.

வீடு பேறு வினைகள் அழிவால் நிகழ்வதாகும். வினைகள் அழிவு தூய ஆன்மாவைத் தியானித்தலால் அமைகிறது. ஆகையால் பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்பும் முனிவர் கரும களங்கம் இல்லாத அனந்த தன் நான்மை உடைய பரமான்மாவை தியானம் செய்கிறார். ஏனெனில் வீடுபேறு விளைய வேறு வழி இல்லை.

விறகை எரித்து சாம்பலாக்குவது நெருப்பு. அது போல தியானம் ஒரு தீ. அதுவே கரும விறகை எரித்துச் சாம்பலாக்கும்.

“துன்னாத வினைப்பகையைத் துணிசெய்யும் துணிவினையாய்
இன்னாத பகைமுனைபோல் எரித்தடக்கும் நினைப்பினால்
இருளில்லா உணர்வென்னும் இலங்கொளியால் எரித்தனையாய்”

என வருதல் காண்க.[17]

17. யாப்பருங்கலம் நூ.11 இன் மேற்கோள் பாடல்.

27 ஸவ்வே கஸாய மோத்தும் காரவமயராயதோஸ வாமோஹம்|
லோய வவஹார விரதோ அப்பா ஜாஏஹ ஜாணத்தோ||

(ப-ரை) முனிவர், ஸவ்வே - எல்லா, கஸாய - துவர்ப்புகளையும், மோத்தும் - விட்டு, காரவ - தற்பெருமை, மய - செருக்கு, ராயதோஸவாமோஹம் - காமம், வெகுளி மற்றும் மயக்கம், லோய வவஹார - உலகத் தொடர்பு இவற்றிலிருந்து விரதோ - விலகி, ஜாணத்தோ - தியானத்தில் நின்று, அப்பா - ஆன்மாவை, ஜாஏஹ - தியானிக்கிறார், எ.று.,

(க-ரை) முனிவர் துவர்ப்புகளையும், தற்பெருமை, செருக்கு, காம வெகுளி, மயக்கம் உலகத் தொடர்பு இவற்றையும் விலக்கி விட்டு தியான நிலையில் நின்று தூய ஆன்மாவைத் தியானிக்கிறார்.

(வி-ரை) தியான விதியை விளக்குகிறார்.

தியானம் நிகழும் இடம் உயிர் ஆகும். அந்த உயிர் எந்த நிலையில் இருந்தால் தியானம் அமையும் என்று சுட்டுகிறார். வீட்டில் வாழ வேண்டுமானால் வீட்டை நன்கு பெருக்கி, தூய்மை செய்த பிறகே இன்பமாக வாழ முடியும். அது போல உயிர் தன் தூய்மை நிலையைத் தியானிக்க வேண்டுமானால் உயிரில் உள்ள மாசுகளை நீக்கித் தூய்மை ஆக்க வேண்டும். அதன் பிறகே தியானம் செய்ய முடியும். முனிவர் அப்படித்தான் தியானம் செய்கிறார். உயிரின் மாசுகளாகச் சிலவற்றைக் குறித்துள்ளர். அவை:

கசாயம் : வெகுளி, மானம், வஞ்சகம், பற்று (உலோபம்) இவை துவர்ப்புகள் எனப்படும். இவை இல்லாது போக வேண்டும்.

காரவம் : தற்பெருமை, பிறரிடம் இல்லாதது தன்னிடம் உள்ளது என்று அகத்தே மகிழும் உணர்வு. அது மூன்று வகையாகக் கூறப்படுகிறது. தன் மொழிதலில் அதாவது மொழி உச்சரித்தலில் பிறரைக் காட்டிலும் சிறந்து விளங்குவதாக அகத்தே மகிழ்வது மொழிதல் தற்பெருமை (சப்த காரவம்).

சீடர் கூட்டம், கமண்டலம், மயிற் பீலி, நூல்கள், பெற்று இருப்பதில் தன் தனித்துவம் மேலோங்கி இருப்பதாக அகத்தே மகிழ்வது ‘இருத்தி காரவம்’ - நோற்றல் தற்பெருமை.

முனி நிலையில் உணவு முதலாயின சிறப்பாக, பிறரைக் காட்டிலும் நல்வரவேற்போடு பெறுவதாக அகத்தே மகிழ்வது ‘ஸாத காரவம்’. அதாவது ஐம்புலப் பொருள்கள் சிறப்பாக வந்து அடைகின்றன என இன்ப உணர்வில் மகிழ்தல்.

செருக்கு : பிறரைக் காட்டிலும் தான் பெரியோன் என்று தருக்கி நிற்கும் உணர்வு செருக்கு-கர்வம் எனப்படும். இது தோன்ற எட்டு காரணங்கள் உள்ளன

என்பர். ஜாதி (தாய்வழி) குலம் (தந்தை வழி) வலிமை, செல்வம், அழகு, சிறப்பு, தவம், அறிவு.

காமம் : விரும்பியதன் மேலெழும் ஆர்வம்.
வெகுளி : விரும்பாதன மேலேழும் எதிர்ப்புணர்வு.
மயக்கம் : உண்மையைத் தெளியாது ஒன்றை மற்றொன்றாக நம்புதல்.
உலகத் தொடர்பு : முனிமை நிலையில் உலகத் தொடர்பு ஏதும் இல்லை.

ஆனால் அறம் உரைத்தல் முதலான அற ஒழுக்கங்கள் மேற் கொள்ளும் போது உலகத் தொடர்பு அமைகிறது. அத்தோடு சங்கத்தில் உள்ளதால் கற்றல், கற்பித்தல், உடன் இருப்போருக்கு சேவை முதலாயினவும் உள்ளன. இவற்றை எல்லாம் விட்டு விலக வேண்டும். தன்னை மட்டுமே சார்ந்து தன்னையே-பரமான்ம நிலையையே-தியானிக்க வேண்டும்.

இவை எல்லாம் துவர்ப்பில் அடங்கும் என்றாலும் இவற்றுக்கு இடையே நுட்பமான உணர்வு வேறுபாடுகள் காணப்படுவதால் தனித் தனியாகக் கூறினார் எனக் கருதலாம்.

28 மிச்சத்தம் அண்ணாணம் பாவம் புண்ணம் சஏவி திவிஹேண |
மோணவ்வஏண ஜோஈ ஜோயத்தோ ஜோயஏ அப்பா ||

(ப-ரை) ஜோஈ - முனிவர், மிச்சத்தம் - பொய்ம்மை, அண்ணாணம் - அறியாமை, பாவம் - பாபம், புண்ணம் - புண்ணியம், திவிஹேண - மனம், மொழி, மெய் மூவகையாலும், சஏவி - விட்டு, மோணவ்வ ஏண - மௌன விரதம் கொண்டு, ஜோயத்தோ - தியானத்தில் நின்று, அப்பா - ஆன்மாவை, ஜோயஏ - தியானிக்கிறார், எ.று.

(க-ரை) முனிவர் பொய்ம்மை, அறியாமை, பாபம், புண்ணியம் இவற்றை மனம், மொழி, மெய் மூவகையாலும் விட்டு மௌன விரதம் பூண்டு தன் ஆன்மாவைத் தியானம் செய்கிறார்.

(வி-ரை) தியான விதியை மேலும் விளக்குகிறார்.

தியானம் எல்லா துறவியரும் செய்கின்றனர். அவரைத் தியானி, முனிவர் என்றும் அழைக்கின்றனர். ஆனால் ஆசாரியர் இங்கே தியானம் செய்ய - பரமான்மாவைத் தியானம் செய்ய - தக்கவர் யார் என குறிப்புக் காட்டுகிறார்.

பொய்ம்மையும் அறியாமையும் கூடாது என்கிறார்.

ஆன்ம இயல்பை உள்ளவாறு அறிந்து நம்பாதவர் பொய்ம்மையும் அறியாமையும் உடையவர். அவர் எதை தியானம் செய்வார்? தான் நம்பும் ஒன்றைத்

தானே தியானம் செய்வார்? அப்போது அந்த தியானம் பந்த காரணமாக அமையுமே தவிர கரும அழிவுக்குக் காரணமாகாது. ஆகையால் ஆன்மாவின் இயல்பை உணர்ந்து நம்புதல் வேண்டும் என்கிறார்.

புண்ணியம், பாபம் இரண்டுமே பந்த காரணம் ஆகும். இமிசை முதலானவை பாபம். அதற்கு எதிரானவை புண்ணியம். முன்னது அசுபம், பின்னது சுபம். அவற்றில் வெறுப்பும் விருப்பும் கொள்ளல் பந்த காரணமாகும். அவ்விரண்டிலும் உணர்வு நிலைக்கும் போது எவ்வாறு பரமான்ம தியானம் செய்ய முடியும்? ஆகையால் அவ்விரண்டி லிருந்தும் விலகி இருத்தல் வேண்டும் என்றார். இக் குறைகளை மனம், மொழி, மெய் இம் மூவகையாலும் விலக்க வேண்டும்.

மௌனம் பரமான்ம சாதனையில் நல்ல கருவியாகும். மனமும் மொழியும் நிகழாமை மௌனம் என்பர். மனம் மொழி நிகழும் போது ஒருமுக சிந்தனை அமைய முடியாது. அதனால் அவை அமைதி கொள்ள வேண்டும். அடுத்து, தன் இயல்பு தன்னுள் மறைந்துள்ளது. அம் மறைவில் ஆழ்ந்து தன்னை உணர்தல் மௌனம் ஆகும். அதுவே பரமான்ம தியான நிலையாகும். உண்மை அறிந்த துறவியர் அதனையே செய்கின்றனர். அவரே தம் தியானத்தால் கருமங்களை முற்றுமாக அழித்து வீடுபேறு பெறுகின்றனர். எனவே துறவியர் தோற்றம் பூண்ட அனைவரும் தியானி ஆகார். இக் குறைகளை அகத்தில் இல்லாதவரே தியானி - முனிவர் ஆவார்.

மெய்த்தவத் தன்மை தானும்
வென்றவர் படிமம் தாங்கிச்
சித்தமெய் மொழிகள் மூன்றில்
இரு தொடர்ப் பாட்டின் நீங்கிப்
பத்தறம் பன்னிர ண்டாம்
தவத்தொடு பயின்று தன்கண்
உத்தமக் காட்சி ஞான
ஒழுக்கத்தை அழுத்தல் கண்டாய்

என தவத்தின் இயல்பைச் சுட்டுவார்.[18]

29 ஜம் மயா திஸ்ஸதே ரூவம் தம் ண ஜாணாதி ஸவ்வஹா |
ஜாணகம் திஸ்ஸதே ணேவ தம்ஹா ஜம்பேமி கேண ஹம் ||

(ப-ரை) மயா - என்னால், ஜம் ரூவம் - எந்த உருவம், திஸ்ஸதே - பார்க்கப்படுகிறதோ, தம் - அது, ஸவ்வஹா - ஒன்றையும், ண ஜாணாதி - அறிவது இல்லை, ஜாணகம் - அறிகிறது, ணேவ திஸ்ஸதே - பார்வைக்கு வருதலே இல்லை, தம்ஹா - ஆகையால், அஹம் - நான், கேண - எவரோடு, ஜம்பேமி - பேசுவேன், எ.று.

18. மேருமந்தர புராணம் - 411

(க-ரை) நான் பார்க்கின்ற உருவம் எதனையும் அறிவது இல்லை. ஏனெனில் அது புற்கலம் ஆகும். அறிகிற உயிர் பார்வைக்கு வருவது இல்லை. ஏனெனில் அது அருவம். பிறகு நான் எவரோடு பேச முடியும்?

(வி-ரை) மௌனம் பற்றி விளக்குகிறார்.

பேச்சு இரண்டு பேருக்கு இடையே நிகழ்வதாகும். ஆன்மா அருவப் பொருள். அதனைக் காண முடியாது. பிறகு அதனோடு எப்படிப் பேச முடியும்? பேச முடியாது. இனி பார்க்கின்ற பொருள்கள் அனைத்தும் உயிரற்ற பொருள்கள்-புற்கலங்கள். ஏனெனில் புற்கலங்களே பொறிகளுக்குப் புலப்படுவன. ஆனால் அவற்றுக்கு அறிவு இல்லை. பேசுதலை அறிந்து கொள்ள இயலாத புற்கலத்தோடு என்ன பேச்சு நிகழ முடியும்? பேச்சு நிகழாது. அதனால் மௌனம் தவிர வேறு இயல்பு உயிரிடம் காணப்பட வில்லை. எனவே முனிவர் மௌனமாகி தியானத்தில் ஆழ்கிறார் என்பது கருத்து.

இதே கருத்துடைய பாடல் சமாதி சதகத்திலும் (19) காணப்படுகிறது.

30 ஸவ்வாஸவணிரோஹேண கம்மம் கவதி ஸஞ்சிதம் |
ஜோயத்தோ ஜாணஏ ஜோஈ ஜிணதேவேண பாஸியம் ||

(ப-ரை) ஜோயத்தோ - ஆன்ம தியானத்தில் நிற்கும், ஜோ ஈ - யோகி, ஸவ்வாஸவ - எல்லா வினை ஊற்றுகளையும், ணிரோஹேண -தடுத்து, ஸஞ்சிதம் - முன்பு கட்டிய, கம்மம் - வினைகளை, கவதி - அழிக்கிறார், ஜாணஏ - முழுதுணர் அறிவர் ஆகிறார், என்பது, ஜிணதேவேண - ஜிநரால், பாஸியம் - கூறப்பட்டதாகும்-எ.று.

(க-ரை) ஆன்ம தியானத்தில் நிற்கும் முனிவர் எல்லா வினை ஊற்றுகளையும் தடுத்து முந்தைய வினைகளை அழிக்கிறார். அதனால் முழுதுணர் அறிவராக ஆகிறார் என ஜிநர் அருளியுள்ளார்.

(வி-ரை) பரமான்ம தியானத்தாலேயே பிறவி கெடும் என்கிறார்.

தூய ஆன்ம தியானத்தால்-ஆகம மொழியில் சொல்ல வேண்டுமானால்-வெள்ளை (சுக்கில) தியானத்தால் புதிய வினைகளின் வருகை தடுக்கப்படுகிறது; முந்தைய வினைகளும் அழிகின்றன. குளத்தில் நீர் வரத்து நின்று போனால் பழைய நீர் சுண்டிப் போகிறது. அது போல என்க. காதி வினைகள் முற்றும் அழிந்தவுடன் உயிர் தன் தூய்மை நிலையில் நின்று வரம்பற்ற முழுதுணர் அறிவோடு விளங்குகிறது, என ஜிநர் அருளியுள்ளார்.

'இறந்த காதிகள் நான்மையும் அழிந்த அக் கணத்தே
நிறைந்த நான்மையும்'

என்பர்.[19]

19. மேருமந்தர புராணம் - 129

31 ஜோ ஸுத்தோ வவஹாரே ஸோ ஜோஈ ஜக்கஏ ஸகஜ்ஜம்மி |
ஜோ ஜக்கதி வவஹாரே ஸோ ஸுத்தோ அப்பணோ கஜ்ஜே ||

(ப-ரை) ஜோ - எவர், வவஹாரே - உலக நிகழ்வுகளில், ஸுத்தோ - உறங்குகிறார், ஸோ ஜோஈ - அந்தயோகி, ஸகஜ்ஜம்மி - தன் ஆன்ம நிகழ்வுகளில், ஜக்கஏ - விழித்திருக்கிறார், ஜோ - எவர், வவஹாரே - உலக நிகழ்வுகளில், ஜக்கதி - விழித்திருக்கிறார், ஸோ - அவர், அப்பணோ - தன் ஆன்ம, கஜ்ஜே - நிகழ்வுகளில், ஸுத்தோ - உறங்குகிறார், எ.று.

(க-ரை) உலக நிகழ்வுகளில் உறங்குகிற (ஈடுபடாத) முனிவர் தன் ஆன்ம (தியான) நிகழ்வுகளில் விழித்திருக்கிறார் (ஈடுபடுகிறார்). உலக நிகழ்வுகளில் விழித்திருக்கிற முனிவர் தன் ஆன்ம நிகழ்வுகளில் உறங்குகிறார்.

(வி-ரை) ஆன்ம தியானம் உலக நடைமுறையில் ஈடுபாடுடைய முனிவர் செய்ய இயலாது என்கிறார்.

பற்றற்ற துறவு நிலையில் உலகப் பற்றும் இருக்க இயலாது. அதனால் உலக காரியங்களில் ஈடுபடுதல் என்பது இராது. அப்படி ஈடுபாடு இருந்தால் அவர் பற்றற்ற துறவியாக இருக்க இயலாது.

சங்க நடைமுறை அறச் செயல்களில் ஈடுபடுதல், ஐம் பெரும் நோன்புகளைப் போற்றுதல் முதலானவற்றிலும் ருசி இராது. எல்லா நிகழ்வுகளிலிருந்தும் உணர்வுகளை விலக்கித் தன் தூய ஆன்ம தியானத்தில் நிகழ்தலையே உலக நிகழ்வுகளில் உறங்குதல் என்பர். தன் ஆன்ம இயல்பில் ஆழ்ந்து, அறிவுணர்வில் நிகழ்தலை ஆன்ம நிகழ்வுகளில் விழித்திருத்தல் என்பர். ஆனால், உலக நிகழ்வுகளில் ஈடுபாடு உடைமை, தன்னில் நிகழாமை ஆகும். அதனால் அவர் உலக செயல்களில் விழித்திருக்கிறார் என்பர்.

32 இய ஜாணிஊண ஜோஈ வவஹாரம் சயஇ ஸவ்வஹா ஸவ்வம் |
ஜாய இ பரமப்பாணம் ஜஹ பணியம் ஜிணவரிந்தேஹிம் ||

(ப-ரை) இய - இவ்வாறு, ஜாணிஊண - அறிந்து, ஜோஈ - யோகியர், ஸவ்வம் - எல்லாவற்றையும், ஸவ்வஹா - எப்போதும், வவஹாரம் - உலகச் செயல்களை, சயஇ - விலக்குகிறார், ஜஹ - எவ்வாறு, ஜினவரிந்தேஹிம் - ஜிநரால், பணியம் - சொல்லப்பட்டுள்ளதோ அவ்வாறு, பரமப்பாணம் - பரமான்மாவை, ஜாயஇ - தியானிக்கிறார், எ.று.

(க-ரை) யோகியர் முன் சொன்னவாறு அறிந்து, எல்லா உலகச் செயல்களையும் எப்போதும் விலக்கி, ஜிநர் அருளிய வழி முறைப்படி தன் பரமான்ம தியானத்தில் ஈடுபடுகிறார்.

(வி-ரை) யோகியர் ஜிநர் அருளிய வழியில் தியானிக்கிறார் என்கிறார்.

'வியவஹாரம்' எனில் உலகச் செயல்கள். அவற்றுள் அறச் செயலும் அடங்கும். அதனால்தான் எப்போதும், எல்லாவற்றையும் என்றார். அவற்றிலிருந்து விலகும் போதுதான் தியானிக்க முடியும். அறிவுணர்வு உயிரில் நிலைத்தல் தியானம். அப்போது அது புறத்தே நிகழ முடியாது. புறத்தே நிகழ்தல் வியவஹாரம் ஆகும். அதனால் அதனைவிட வேண்டும் என்பதாம். பரமான்மா இயல்பு பற்றிய தெளிவுடையாரே பரமான்ம தியானத்தில் நிகழ முடியும். பரமான்மா இயல்பு பற்றி பலவாறான கருத்துகள் உள்ளமையால் பரமான்மா அனுபவம் புறச் செயல்களுக்கு எதிராகும் என எச்சரிக்கிறார். புறச் செயல்களாலே பரமான்ம நிலையை அடைய முடியாது என்பது கருத்தாம்.

33 பஞ்ச மஹவ்வய ஸுத்தோ பஞ்சஸு ஸமிதீஸு தீஸு குத்தீஸு |
ரயணத்தய ஸஞ்ஸுத்தோ ஜாணஜ்ஜயணம் ஸயாகுணஹ ||

(ப-ரை) பஞ்ச - ஐந்து, மஹவ்வய ஸுத்தோ - பெரு நோன்புகள் கொண்டுள்ளவர், பஞ்சஸு - ஐந்து, ஸமிதீஸு - சமிதியுடையவர், தீஸு - மூன்று, குத்தீஸு - குத்தியுடையவர், ரயணத்தய - மும்மணி, ஸஞ்ஸுத்தோ - கூடியவர், ஜாண ஜ்ஜயணம் - தியானம் ஆகமம் பயிலல், ஸயா - எப்போதும், குணஹ - நீர் செய்க, எ.று.

(க-ரை) ஐந்து பெரு நோன்பும், ஐந்து சமிதியும், மூன்று குத்தியும் மும்மணியும் உடைய நீர் எப்போதும் தியானம் செய்க; ஆகமம் பயில்க!

(வி-ரை) ஆகமப் பயிற்சியும் தியானப் பயிற்சியும் வேண்டும் என்கிறார்.

கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, காமமின்மை, பற்றின்மை இவை ஐந்தும் முனிவர் ஏற்றுள்ள பெருநோன்புகள். இவற்றில் குறை இல்லாமல் நிகழ்பவர். நான்கு முழம் பார்த்து விழிப்போடு நடத்தல் நடை ஒழுக்கம். ஆகமத்துக்கு இசைவாக உரையாடுதல் மொழிதல் ஒழுக்கம், 46 குறைகள் இல்லாத உணவை நாளில் ஒருமுறை நின்று ஏற்றல் உணவு ஏற்பு ஒழுக்கம், நூல், கமண்டலம், மயிற்பீலி முதலானவற்றை ஆளும்போது விழிப்போடு எடுக்க வேண்டும் / வைக்க வேண்டும். இது எடுத்தல் வைத்தல் (பொருளை ஆளுதல்) ஒழுக்கம். உயிர்களுக்கு ஊறு நேரா வண்ணம் மலம் நீர் கழித்தல் விடுதல் ஒழுக்கம்; இவை ஐந்தும் 'சமிதி' எனப்படும். மனம் மொழி மெய் தன்னுள் அடங்கி இருத்தல் 'குத்தி' ஆகும். நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் இம் மூன்றிலும் வழக்கு நோக்கினையும், உண்மை நோக்கினையும் தெளிந்து ஒழுகுதல் மும்மணி உடைமை ஆகும். இவ்வாறு 13 ஒழுக்கங்களும் மும்மணியும் உள்ள முனிவர் எப்போதும் தியானத்தில் ஆழ வேண்டும். அது இயலாத போது ஆகமப் பயிலல் வேண்டும். மனம் ஆகமப் பயிற்சியைச் செய்ய வேண்டும். அதுவும் தியானத்துக்கு ஒப்பானதாகும். ஏனெனில் ஆகமத்தில் பரமான்மாவின் இயல்பு தெளிவு செய்யப்பட்டுள்ளது.

தியானமே - பரமான்ம தியானமே - வீடுபேற்றுக்கு வழி. முத்தியை அடையும் வரை முனிவர் பயிற்சியை விடாது தொடர வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

34 ரயணத்தயமாராஹும் ஜீவோ ஆராஹஓ முணேயவ்வோ |
ஆராஹணாவிஹாணம் தஸ்ஸ பலம் கேவலம் ணாணம் ||

(ப-ரை) ரயணத்தயம் - மும்மணியை, ஆராஹம் - போற்றும், ஜீவோ - உயிர், ஆராஹஓ - உயிரைப் போற்றுபவர், முணே ய வ்வோ - என்று அறிதல் வேண்டும், ஆராஹணா விஹாணம் தஸ்ஸ - அப் போற்றுதல் முறையினுடைய, பலம் - பயன், கேவலம் ணாணம் - முழுதுணர் அறிவு அடைதலாம், எ.று.,

(க-ரை) மும்மணியைப் போற்றும் முனிவர் ஆன்மாவைப் போற்றுகிறவர் ஆகிறார். அப் போற்றல் முறையினால் விளைவது முழுதுணர் அறிவு பெறுதலாம்.

(வி-ரை) மும்மணியைப் போற்றும் முனிவர் முழுதுணர் அறிவர் ஆகிறார் என்கிறார்.

மும்மணியைப் போற்றுதல் என்றால் அதில் நிகழ்தலாகும். மும்மணியில் நிகழ்தலே முத்தி நெறியாகும்.

உரைத்தஇப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி
பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்தல்நல் லொழுக்கம் ஆகும்
சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய் வீட்டின்
மெய்ந்நெறி யாவ தாமே

என வருதல் காண்க.[20]

35 ஸித்தோ ஸுத்தோ ஆதா ஸவ்வண்ஹு ஸவ்வலோயதரிஸீ ய |
ஸோ ஜிணவரேஹிம் பணிஓ ஜாண துமம் கேவலம் ணாணம் ||

(ப-ரை) ஸித்தோ - தானே இருப்பது, ஸுத்தோ - தூய்மையானது, ஸவ்வண்ஹு - முழுதுணர்வது, ய - மேலும், ஸவ்வலோய தரிஸீ - மூவுலகையும் காண்பது, ஸோ ஆதா - அது ஆன்மாவாகும், என, ஜிணவரேஹிம் - ஜிநரால், பணிஓ - கூறப்பட்டுள்ளது, அதனால், துமம் - நீ, கேவலம் ணாணம் - கேவல ஞானம், ஆன்மா என, ஜாண - அறிக, எ.று.,

20. மேருமந்தர புராணம் - 107

(க-ரை) ஆன்மா தானே இருப்பது, தூய்மையானது, முழுதுணர்தலும் பார்த்தலும் உடையது என ஜிநர் அருளியுள்ளார். அதனால் கேவல ஞானம் ஆன்மா என்று நீ அறிக.

(வி-ரை) தூய உயிர் கேவல ஞானமாம் என்கிறார்.

ஆன்மா தன் ஆற்றலால் தானே இருப்பது - தானே உறுதியானது. அதனால் 'சித்த' என்றார். வினைகள் நிமித்தமாகத் தோன்றும் மலினத் தன்மை இன்மையால், தூய்மையானது என்றார். மூவுலகம் மற்றும் உலகம் அல்லாதது அனைத்தையும் முக்கால பரியாயங்களோடு சமயந்தோறும் அறிதலும் பார்த்தலும் உடையது ஆன்மா என்பதால் முழுதுணர் அறிவர், முழுதும் பார்ப்பவர் என்றார். ஆன்மா, அனந்த நான்மை வடிவம் என்பது கருத்து.

இப்படி ஆன்மா குண நோக்கில் பலவாறாகப் பேசப்பட்டாலும் குணி நோக்கில் அவ் வேறுபாடு இல்லாத ஒருமையை அனுபவம் செய்ய வேண்டும் என ஆசாரியர் அறிவுறுத்துகிறார். ஒருமை நிலையில் அது கேவல ஞான வடிவம் மட்டுமே. அதுவே அனுபவம் ஆக வேண்டும் . ஆகும் என்பதாம்.

'உலகம் மூன்றையும் ஏந்திடும்
ஆற்றலை ஒருகணத்து உலகத்தின்
அலகில் நீளமும் அகலமும்
உயரமும் அணுவினால் அளக்கிற்கும்
இலகு தன்மையை இயல்பில்எவ் வுயிர்களும்
இயற்றும் அத்தொழில் செய்து
விலகி நின்றிடும் விசித்திரக் கிரியை நல்
வீரி யவிறல் வேந்தே'

என வருதல் காண்க. [21]

36 ரயணத்தயம் பி ஜோஈ ஆராஹஇ ஜோ ஹு ஜிணவரமஏண|
ஸோ ஜாயதி அப்பாணம் பரிஹரஇ பரம் ண ஸந்தே ஹோ||

(ப-ரை) ஜோ ஜோஈ - எந்த யோகியர், ஜிணவரமஏண - ஜிநர் நெறிப்படி, ரயணத்தயம் பி - மும்மணியை, ஹு - உண்மையில், ஆராஹஇ - போற்றுகிறார், ஸோ - அவர், அப்பாணம் - ஆன்மாவையே, ஜாயதி - போற்றுகிறார், பரம் - பிற பொருளை, பரிஹரஇ - விலக்குகிறார், ண ஸந்தேஹோ - இதில் ஐயம் இல்லை, எ.று.,

(க-ரை) மும்மணியைப் போற்றும் முனிவர் உண்மையில் பரமான்மாவைப் போற்றுகிறார். அவர் பிற பொருளை விலக்குகிறார். இதில் ஐயம் இல்லை.

21. மேருமந்தர புராணம் - 174

(வி-ரை) மும்மணி ஆன்ம வடிவம் என்கிறார்.

முனிவர் நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் போற்றுகிறார். போற்றுதல் எனில் ஒழுகுதல். மும்மணி குணம்; ஆன்மா குணி. குணமும் குணியும் ஒன்றே. குணத்தைப் போற்றுதல் குணியைப் போற்றுதல் ஆகும். ஏனெனில் குணமும் குணியும் பிரிவுறா தொடர்புடையன; ஓரிடத்தன. அதனால், ஜிநர் நெறிப்படி மும்மணியைப் போற்றுதல் ஆன்மாவைப் போற்றுதலாகும். அவ்வாறு நிகழும் முனிவர் பிற பொருளிலிருந்து விலகி நிற்கிறார். இதில் ஐயம் இல்லை என்கிறார். மும்மணி பிற பொருள் அல்ல. அது தன் பொருளே. ஆன்மாவின் இயல்பாகும் - குண மாகும்!

37 ஜம் ஜாணஇ தம் ணாணம் ஜம் பிச்சஇ தம் ச தம்ஸணம் ணேயம்|
தம் சாரித்தம் பணியம் பரிஹாரோ புண்ண பாவாணம்||

(ப-ரை) ஜம் ஜாணஇ - எது அறிகிறது, தம்ணாணம் - அது அறிவு, ச - மேலும், ஜம் பிச்சஇ - எது காண்கிறது, தம் - அது, தம்ஸணம் - தரிசனம், புண்ணம் பாவாணம் - புண்ணியம், பாபம், பரிஹாரோ - விலகுதல், தம் சாரித்தம் - அது ஒழுக்கம், பணியம் - என கூறப்பட்டுள்ளது, ணேயம் - அறிதல் வேண்டும், எ.று.,

(க-ரை) அறிவது ஞானம்; காண்பது தரிசனம். புண்ணிய பாபம் இன்மை சாரித்திரம் என்ப. நீ அறிதல் வேண்டும்.

(வி-ரை) மும் மணியின் விளக்கம் கூறுகிறார்.

அறிதல், காணுதல், ஒழுகுதல் என மும்மணியை விளக்குகிறார். தன்னையும் பிறவற்றையும் அறிதல் அறிவு ஆகும். தன்னையும் பிறவற்றையும் காணுதல் காட்சி ஆகும். இது வழக்கு நயம் ஆகும். உண்மையில் உயிர் தன்னைக் காண்கிறது; தன்னை அறிகிறது. எனவே இவை உயிரின் குணங்களாகும். இவற்றில் நிகழ்தல் ஒழுக்கம் ஆகும். அப்போது உயிர் புண்ணிய பாப செயல் இல்லாமல் நிகழ்கிறது. எனவே ஆன்மா மூன்றையும் நிகழ்த்துகிறது. ஆன்மா குணி; மும்மணி குணம். இங்கே குணி-குணம் வேறுபாடு இல்லை. மும்மணி உண்மையில் ஆன்மாதான். இதனையே தெளிதல் வேண்டும் என்கிறார்.

38 தச் சருஇ ஸம்மத்தம் தச்சக்கஹணம் ச ஹவஇ ஸண்ணாணம்|
சாரித்தம் பரிஹாரோ பரூவியம் ஜிணவரிந்தேஹிம் ||

(ப-ரை) தச்சருஇ - தத்துவ ஈடுபாடு, ஸம்மத்தம் - நற்காட்சி ஆகும், ச - மேலும் தச்சக்கஹணம் - தத்துவம் அறிதல், ஸண்ணாணம் - நல்லறிவு, ஹவஇ - ஆகும், பரிஹாரோ - விலக்குதல், சாரித்தம் - ஒழுக்கம் ஆகும், என ஜிண வரிந்தேஹிம் - ஜிநரால், பரூவியம் - பகரப்பட்டுள்ளது, எ.று.,

(க-ரை) தத்துவத்தில் ஈடுபாடு . ருசி கொள்ளல் நற்காட்சி; தத்துவத்தை அறிதல் நல்லறிவு. புண்ணிய பாபம் விலக்குதல் நல்லொழுக்கம்.

(வி-ரை) மும்மணியை வேறு முறையில் விளக்குகிறார்.

உயிர், உயிரல்லன, ஊற்று, கட்டு, செறிப்பு, உதிர்ப்பு, வீடு இவை தத்துவம் ஆகும். இவற்றை உள்ளவாறு நம்புதல், ஈடுபடுதல் நற்காட்சி ஆகும். இவற்றை அறிதல் நல்லறிவு ஆகும். பிற பொருள்களை விலக்கும் செயலில் இருந்து விலகுதல் அதாவது தன்னுள் தான் ஆழ்தல் நல் ஒழுக்கமாகும். இவ்வாறு ஜிநர் அருளியுள்ளார்.

இம் மும்மணியை ஆகமம் காட்டி உள்ளவாறு வழக்கு நயத்தாலும், உண்மை நயத்தாலும் அறிந்து முடிக்க வேண்டும் என்பதாம்.

'உள்பொருள் இதுவென உணர்தல் ஞானமாம்
தெள்ளிதின் அப்பொருள் தெளிதல் காட்சியாம்
விள்ளற இருமையும் விளங்கத் தன்னுளே
ஒள்ளிதின் தரித்தலை ஒழுக்கம் என்பவே'

'காட்சி நன்னிலையில் ஞானக்
கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சி சால் ஒழுக்கம் என்னும்
வயிரத்தாழ் கொளுவிப் பொல்லா
மாட்சியில் கதிகள் எல்லாம்
அடைத்தபின் வரம்பில் இன்பத்து
ஆட்சியில் உலகம் ஏறத்
திறந்தனன் அலர்ந்த தாரான்'

என வருவன காண்க.[22]

39 தம்ஸண ஸுத்தோ ஸுத்தோ தம்ஸண ஸுத்தோ லஹேஇ ணிவ்வாணம்|
தம்ஸண விஹீண புரிஸோ ண ல ஹஇ தம் இச்சியம் லாஹம் ||

(ப-ரை) தம்ஸண - நற்காட்சியில், ஸுத்தோ - தூய்மை உடையார், ஸுத்தோ - தூயவராம், ஏனெனில், தம்ஸண ஸுத்தோ - தூய நற்காட்சியர், ணிவ்வாணம் - நிருவாணத்தை, லஹஇ - அடைகிறார், தம்ஸண - நற்காட்சி, விஹீண புரிஸோ - இல்லாதவர், தம் - தான், இச்சியம் - விரும்பிய, லாஹம் - வீட்டினை, ண லஹஇ - அடைதல் இலர், எ.று.,

22. சீவக சிந்தாமணி - 2845, 381.

(க-ரை) தூய நற்காட்சி உடையவர் தூயர். அவர் வீடுபேறு அடைகிறார். அத் தூய நற்காட்சி இல்லாதவர் வீடுபேற்றை அடையார்.

(வி-ரை) நற்காட்சியின் சிறப்பை முதன்மைப்படுத்துகிறார்.

நற்காட்சி என்பது உண்மையில் ஆன்மாவில் நிகழ்வதாகும். அது நிகழும் போது தவறான நம்பிக்கைகள் இரா. ஆன்மாவின் உண்மை இயல்பு உள்ளவாறு அனுபவத்துக்கு வரும். அதனால் ஆசாரியர் நற்காட்சி உடையவரைத் தூயவர் என்றார். அவருக்குப் பிற பொருள்கள் பற்றிய நம்பிக்கைகள் முற்றுமாக விலகிப் போகின்றன. அவை தன்னால் காணப்பட தக்கனவே தவிர பேணப்பட தக்கன அல்ல என்ற தெளிவு பிறக்கிறது அவருக்கு. அதுவே முத்தி நெறியின் முதல் படியாகும். அதனையே நற்காட்சி எனச் சுட்டினர். அந்த தூய நற்காட்சி அவரை முத்தியில் கொண்டு சேர்க்கிறது. அது இல்லாத போது முத்தியை அடைய முடியாது என்பது கருத்து.

மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பர்
எப்பொருளும் கண்டுணர்ந் தார்.

நற்காட்சி இல்லார் உணர்வும் ஒழுக்கமும்
ஒற்கா ஒசிந்து கெடும்.

காட்சியோடு ஒப்பதுயாம் காணோம் வையத்து
மாட்சி யுடையது உயிர்க்கு

முச்சக் கரத்தோடு சித்தியும் எய்துவர்
நச்சறு காட்சி யவர்

என நற்காட்சியின் சிறப்பைச் செப்பும் அருங்கலச் செப்பு.[23]

40 இய உவஏஸம் ஸாரம் ஜரமரண ஹரம் கு மண்ணஏ ஜம் து |
தம் ஸம்மத்தம் பணியம் ஸவணாணம் ஸாவயாணம் பி ||

(ப-ரை) இய - இவ்வாறு, ஜர மரண - மூப்பு, இறப்புகளை, ஹரம் - அழித்தலே, கு - தெளிவாக, உவஏஸம் - அறிவுரையின், ஸாரம் - பிழிவாகும், மண்ணஏ ஜம் து - இதனை எவர் ஏற்கிறார், தம் - அவரை, ஸம்மத்தம் - நற்காட்சியர், என, பணியம் - சொல்லப்பட்டுள்ளது, அது, ஸவணாணம் - முனிவர், பி - மற்றும், ஸாவயாணம் - இல்வாழ்வார் இருவருக்கும் கூறப்பட்டுள்ளது, எ.று.,

(க-ரை) பிறவியை அழித்தலே ஜிநர் உரையின் பிழிவாகும். அதனை ஏற்றலே நற்காட்சி. அது முனிவர் இல்வாழ்வார் இருவருக்கும் கூறப்பட்டுள்ளது.

23. அருங்கலச்செப்பு - 3, 44, 46, 56

(வி-ரை) நற்காட்சி ஏற்றலே சிறப்பாகும் என்கிறார்.

உயிருக்கு உள்ள உணர்வுகளுள் மும்மணி உணர்வு முதன்மை ஆகும். உயிருக்கு நன்மை செய்வது அது. அம் மூன்றினுள்ளும் நற்காட்சி சிறப்புடையது. பிழிவு எனில் சிறப்பு என்பது கருத்து. ஏனெனில் அது இல்லை எனில் அறிவும் ஒழுக்கமும் போலி ஆகிவிடும். அதனால் காட்சி சிறப்புடைய தாகும். அதனை ஏற்க வேண்டும். இந்த அறவுரை, இல்வாழ்வார், இல் துறந்தார் இருவருக்கும் ஆகும்.

உண்மையில் நற்காட்சி நான்கு பிறவி உயிர்களுக்கும் தோன்ற முடியும். ஆனால் அந் நற்காட்சியுடன் முழு ஒழுக்கம் மனிதப் பிறவியிலேயே மேற்கொள்ள முடியும். அதனால் மனிதரைச் சிறப்பித்துக் குறிப்பிட்டார்.

'மாதவன் மலர்ந்த வாய்மை
மணிவிளக்கு எறிப்ப மையல்
ஆதியாம் அந்த காரம்
அகன்றதன் அறிவு காட்சி
ஓதிய வகையில் தோன்ற
உலாப் பிலாப் பொருளைக் கண்டான்
ஏதிமான்று இலாமைக்கு ஏது
இயற்றுவன் என்று சொன்னான்'

என நற்காட்சியால் உலப்பிலா (அழியா) பொருளை (ஆன்மாவை) கண்டான் என்பார்.[24]

41 ஜீவாஜீ வ விஹத்தீ ஜோஈ ஜாணேஇ ஜி ணவரமஏண |
தம் ஸண்ணாணம் பணியம் அவியத்தம் ஸவ்வதரஸீஹிம் ||

(ப-ரை) ஜிணவரமஏண - ஜிந ஆகமப்படி, ஜீவாஜீவ - உயிர் மற்றும் உயிரல்லனவற்றை, விஹத்தீ - வேறுபடுத்தி, ஜாணே இ - அறிகிறார், ஜோ ஈ - யோகியர் . முனிவர், ஸவ்வதரஸீஹிம் - முழுதையும் காணும் ஜிநரால், தம் - அந்த ஸண்ணாணம் - நல்லறிவு, அவியத்தம் - உண்மையானது என்று, பணியம் - கூறப்பட்டுள்ளது, எ.று.,

(க-ரை) உயிரையும் உயிரல்லதையும் வேறுபடுத்திக் காணும் யோகியர் அறிவு நல்லறிவு, உண்மையான அறிவு என்று ஜிநர் கூறியுள்ளார்.

(வி-ரை) நல்லறிவின் இயல்பினைக் காட்டுகிறார்.

24. மேருமந்தர புராணம் - 726

உயிர், புற்கலம், தன்மம், அதன்மம், ஆகாயம், காலம் என ஜிநர் பொருள்களை வகைப்படுத்திக் கூறியுள்ளார். இவற்றுள் உயிர் அறிவு-காட்சியாம் அறிவுணர்வும், அருவமும் உடையது என்றார். வண்ணம், சுவை, மணம், ஊறு, ஒலியும் உருவமும் உடையது புற்கலம். அது பொறிகளுக்குப் புலப்படும் என்றார். தன்மம் முதலான நான்கும் இயல்பாகவே உள்ளன. உயிருக்கும் புற்கலத்துக்கும் தொடக்க மற்ற காலமாகத் தொடர்பு காணப்படுகிறது. புற்கல வினைகளை ஏற்று உயிர் ஆர்வம், செற்றம், மயக்கம் எனும் உணர்வுகளில் நிகழ்கிறது. உடல் முதலான புறப் பொருளைத் தானாக நம்புகிறது. அதனால் விருப்பும் வெறுப்பும்கொண்டு புதிய புற்கல வினைகளைக் கட்டிக் கொள்கிறது. இதனை 'நிமித்த-நைமித்திக' (நிமித்தம் நிமித்தம் சார்ந்த) தொடர்பு என்பர். இப்படி உயிர் அறியாமையில் நிகழ்ந்து உயிர்-புற்கல வேறுபாட்டை அறிய வில்லை. மெய்யறிவு இல்லாததாக இருக்கிறது. அதனால் ஆசாரியர் ஜிநர் நெறியில் உயிர்-புற்கல வேறுபாட்டை அறிந்து நற்காட்சியைத் தெளிய வேண்டும் என்றார். ஜிநர் அருளியது உண்மை ஆகும். அதனை நயம் பிரமாணங்களால் உறுதி செய்யலாம். ஏனெனில் ஜிநர் நேரே கண்டதை அருளினார். அதனால் ஜிநர் நெறியில் உயிர் உயிரல்லன இயல்பு உள்ளவாறு சொல்லப்பட்டுள்ளதால் உண்மை ஆகும். அவற்றை அறிவது நல்லறிவு ஆகும். இவ்வாறு தெளிந்து ஜிநர் ஆணை என ஏற்று நல்லறிவை ஏற்க வேண்டும். அதனால் நல்லொழுக்கம் அமைகிறது.

பொருள்நின்ற பெற்றியைப் பொய்யின்று உணர்தல்
மருளறு நல்ஞான மாண்பு [25]

என உரைக்கும் அருங்கலச் செப்பு.

42 ஜம் ஜாணிஊண ஜோஈ பரிஹாரம் குணஇ புண்ணபாவாணம் |
தம் சட்ரித்தம் பணியம் அவியப்ப கம்ம ரஹி ஏஹிம் ||

(ப-ரை) ஜம்-நல்லறிவு அதை, ஜாணி ஊண - அறிந்து ஜோ ஈ - யோகியர், புண்ணபாவாணம் - புண்ணிய பாபங்களை, பரிஹாரம் - விட்டு விடுதலை, குணஇ - செய்கிறார், தம் - அது, சாரித்தம் - நல்லொழுக்கம், அவியப்ப - நிர்விகல்பம், கம்ம ரஹிஏஹிம் - வினை இல்லாதது, பணியம் என்று கூறப்பட்டுள்ளது, எ.று,

(க-ரை) நல்லறிவினை அறிந்து யோகியர் புண்ணிய பாபங்களிலிருந்து விலகி ஒழுகுகிறார். அது நல்லொழுக்கம் எனப்படுகிறது. அது வினைகள் தொடர்பு அற்ற நிர்விகல்ப நிலை ஆகும். அங்கே வினை இல்லை.

நல்லொழுக்கத்தை விளக்குகிறார்.

25. அருங்கலச்செப்பு - 57.

தன்னையும் பிறவற்றையும் பிரித்து அறிதல் நல்லறிவு ஆகும். அந்த அறிவு உண்டான பிறகே நல்லொழுக்கம் அமைகிறது. அது உண்மை ஒழுக்கம், நடைமுறை (வழக்கு) ஒழுக்கம் என இரண்டு வகை யாகும். ஐம்பெரு நோன்பு, ஐந்து சமிதி, மூன்று குத்தி என கூறப்படுவது நடைமுறை ஒழுக்க மாகும். இதில் புண்ணிய வினை பந்தம் ஆகிறது. இச் செயல்களிலிருந்து விலகி நிற்கும் போது வினைக் கட்டு இல்லாது போகிறது. அதாவது அப்போது தன்னை மட்டும் சார்ந்து நிகழும் நிலை உள்ளது. அங்கே முந்தைய வினைகள் கழிகின்றன. எல்லா வினைகளும் விலகித் தன் ஆன்ம இயல்பில் ஒன்றிப் போதல் உண்மையான நல்லொழுக்க மாகும். இதன் விளைவு கருமங்கள் அழிதலே ஆகும். இதுவே புண்ணிய பாபம் இல்லாத நிர்விகல்ப நிலை ஆகும். முனிவர் பாபச் செயல்களை விட்டவரே. புண்ணியச் செயலையும் விடுகிறார், பிறகு.

நற்செயல்களின் விளைவு புண்ணிய பந்தமாகும். அதில் ஆர்வம் இல்லை. ஆனால், பந்தம் இல்லாது போகத் தன்னியல்பில் நிற்றலே வழியாகும். அதற்கு முயல்தல் புண்ணிய-பாபத்தை விடுதலாம். முழு நல்லொழுக்கம் பதினான்காம் குணத்தான கடைசியில் அமைகிறது. அதிலிருந்தே வீடுபேறு விளைகிறது என்பது ஆகம உரை.

43 ஜோ ரயணத்தய ஜுத்தோ குணஇ தவம் ஸஞ்ஜதோ ஸஸத்தீயே |
ஸோ பாவஇ பரம பயம் ஜாயந்தோ அப்பயம் ஸுத்தம் ||

(ப-ரை) ஜோ - எம் முனிவர், ரயணத்தய - மும்மணியோடு, ஜுத்தோ - கூடி, ஸஞ்ஜதோ - சய்யமி ஆகி, ஸஸத்தீயே - தன் ஆற்றலுக்கு ஏற்ப, தவம் - தவத்தை, குணஇ - செய்கிறார், ஸோ - அவர், ஸுத்தம் அப்பயம் - தூய ஆன்மாவை, ஜாயந்தோ - தியானம் செய்த, பரம பயம் - உயர்ந்த பதவியை - வீடுபேற்றை-பாவஇ-அடைகிறார், எ.று,

(க-ரை) மும் மணியுடைய முனிவர் சய்யமி. அவர் தன் ஆற்றலுக்கு ஏற்ப தபம் செய்கிறார். தன் தூய ஆன்மாவைத் தியானித்து உயர்ந்த வீடு பேற்று நிலையை அடைகிறார்.

(வி-ரை) தூய ஆன்ம தியானமே வீடுபேற்றுக்கு வழி என்கிறார்.

முனிவர் ஐம்பெரு நோன்பு, ஐந்து சமிதி, மூன்று குத்தி எனும் பதின்மூன்று ஒழுக்கங்களில் நிகழ்கிறார். அது நடைமுறை ஒழுக்கம் ஆகும். அதனை சய்யம் என்பர். அதில் நிகழ்ந்து தன் ஆன்ம இயல்பில் திளைக்கும் முயற்சியைச் செய்கிறார். அப்போது உண்ணாமை முதலான புறத் தவங்களில் ஆழ்கிறார். அவர் அகத் தவங்கள் வழி ஆன்மாவில் ஒன்றிப் போகும் தியானத்துள் முயன்று, முடித்து முடிவில் வீடு பேறு அடைகிறார்.

'சுத்திஓர் எட்டில் தூயான்
ஒன்பதாம் யோகில் ஊற்றுப்
பத்தையும் தடுக்க அங்கம்
பதினொன்றில் பயின்ற ஞானம்
சித்தம் பன்னிரண்டில் சென்று
சிந்தையை முறுக்கி இட்டுப்
பத்து மூன்றாகி நின்ற
கிரியையைப் பயின்றிட்டானே'

எனப் பதின் மூன்று கிரியைகளில் நிகழ்தலைச் சுட்டுவார்.[26]

'மெய்த் தவத் தன்மை தானும்
வென்றவர் படிமந் தாங்கிச்
சித்தமெய் மொழிக்கண் மூன்றில்
இருதொடர்ப் பாட்டின் நீங்கிப்
பத்தறம் பன்னி ரண்டாம்
தவத்தொடு பயின்று தன்கண்
உத்தமக் காட்சி ஞான
ஒழுக்கத்தை அழுத்தல் கண்டாய்'

என தவத்தின் தன்மையை விளக்குவார்.[27]

'தான்எனப் படுவது எட்டு
வினைவிட்ட தன்மை'

என்பதும் காண்க.[28]

44 திஹி திண்ணி தரவி ணிச்சம் தியரஹிஓ தஹ திஏண புரியரிஓ|
தோ தோஸவிப்பமுக்கோ பரமப்பா ஜாயஏ ஜோஈ||

(ப-ரை) ஜோஈ - யோகியர், திஹி - மன, மொழி, மெய் மூன்றால், திண்ணி - மழைக்காலம், கோடைக்காலம், குளிர்காலம் என முக்கால, தரவி - யோகங்களை ஏற்று, ணிச்சம் - எப்போதும், திய ரஹிஓ - மாயை, பொய்ம்மை, நிதானம் மூன்றும் இல்லாமல், தஹ - மேலும், திஏண பரியரிஓ - நற்காட்சி, நல் ஞானம், நல்லொழுக்கத்தில் நிறைந்து, தோ - இரண்டு, தோஸ - ஆர்வம், செற்றமாம் குற்றங்கள், விப்பமுக்கோ - இன்றி, பரமப்பா - பரமான்மாவை, ஜாயஏ - தியானிக்கிறார், எ.று,

26. மேருமந்தர புராணம் - 145
27. மேருமந்தர புராணம் - 411
28. மேருமந்தர புராணம் - 412

(க-ரை) யோகியர் மும்மையால் மூன்று யோகங்களை ஏற்று, எப்போதும் மூன்று இன்றி, மும்மையில் நிறைந்து, இரண்டு குற்றங்கள் விட்டு, பரமான்மாவை தியானிக்கின்றனர்.

(வி-ரை) யோகியர் தியானிக்கும் முறையை விளக்குகிறார்.

இங்கே ஆசாரியர் எண்ணை மட்டும் குறிப்பிட்டுக் கருத்துகளைப் பெற வைத்துள்ள பாங்கு எண்ணி மகிழத்தக்க தாகும்.

மன மொழி மெய் மூன்று. இவற்றுடன் இசைந்து முக்கால யோகம் தாங்குகிறார். மழைக்காலம், குளிர்காலம், கோடைக்காலம் இவை முக்காலம். 'மலை போல நின்று வெயில் வன்பனி மாரி வந்தால் நிலை பேர்தல் இல்லார்' என்பது முக்கால யோகமாகும்.[29] மாயை, மித்யா, நிதானம் மூன்றும் சல்லியம். இவை எப்போதும் இல்லாமல் தியானிக்கிறார். மும்மணியில் நிறைந்து நிகழ்கிறார். இரு குற்றங்கள் ஆர்வம், செற்றம் அவை இல்லாமல் தியானிக்கிறார்.

தியான நிலை சுக்கில தியான நிலையாகும். அதில் ஆழ இங்குக் குறிக்கப்பட்டுள்ளவை ஏதுக்களாகும். புறம் நோக்கும் விபாவத்தை நீக்கி அகம் நோக்கும் சுபாவத்தில் ஆழ்ந்து தியானிக்கிறார் என்பது கருத்து. முன் காதையில் தரப்பட்டுள்ள மேற்கோள் பாடல்களை இங்கும் இணைத்துப் பார்க்கலாம்.

45 மயமாய கோஹ ரஹிஒ லோஹேண விவஜ்ஜிஓ ய ஜோ ஜீவோ |
ணிம்மல ஸஹாவ ஸுத்தோ ஸோ பாவஇ உத்தம் ஸோக்கம் ||

(ப-ரை) ஜோ - எந்த, ஜீவோ - உயிர், மய - செருக்கு, மாய - மாயை, கோஹ - வெகுளி, ரஹிஓ - இல்லாதது, ய - மற்றும் லோஹேண - உலோபத்தை, விவஜ்ஜிஓ - விட்டது, ணிம்மல - நிருமலமான, ஸஹாவ - இயல்பில், ஸுத்தோ - ஆழ்ந்துள்ளது, ஸோ - அந்த உயிர், உத்தம் ஸோக்கம் - பேரின்பத்தை, பாவஇ - அடைகிறது, எ.று.,

(க-ரை) செருக்கு, மாயை, வெகுளி, உலோபம் இன்றி நிருமலமான தன் இயல்பில் தோயும் முனிவர் பேரின்ப நிலையை அடைகிறார்.

இதுவும் அது.

செருக்கு என்பது தன்னைப் பெரியோனாகக் கருதுதல். மாயை - வஞ்சனை, வெகுளி - கோபம், உலோபம் - கடும் பற்றுள்ளம், இவை எல்லாம் புறப் பொருளை நோக்கும் போது தோன்றும் விபாவ பரியாயங்கள் ஆகும். விபாவ பரியாயங்கள் உள்ள போது சுபாவ பரியாயங்கள் தோன்ற முடியாது. ஒன்றுக் கொன்று முரணான இரண்டு ஒரே சமயத்தில் தோன்ற முடியாது. அப்படித் தோன்றினால் ஒன்று அழியும். ஆகையால்

29. மேருமந்தர புராணம் - 3

ஆசாரியர் விபாவ (திரிபு) உணர்வுகளுக்கு ஏதுவானவற்றிலிருந்து விலகித் தன் இயல்பில் நிற்கும் முனிவர் பேரின்பம் - வீடு பேறு அடைகிறார் என்றார்.

'கோபத்தீக் குடைய ஓடி நரகத்தைக் குறுகி பல்கால்'
'மாயத்தால் .... பேயொத்துச் சுழன்ற'
'பற்றுதான் இடும்பை நீருள் பரியட்டம் தன்னை ஆக்கும்'.

என வருவன விபாவ பரியாயங்களின் விளைவைச் சுட்டுதலைக் காணலாம்.[30]

46 விஸயகஸாஏஹி ஜதோ ருத்தோ பரமப்ப பாவரஹிய மணோ |
ஸோ ண லஹஇ ஸித்திஸஹம் ஜிணமுத்தபரம்முஹோ ஜீவோ ||

(ப-ரை) ஜீவோ - எந்த உயிர், விஸய - ஐம்புல, கஸாஏஹி - துவர்ப்புகளில், ஜதோ - கூடியுள்ளது, ருத்தோ - ரௌத்திரமுள்ளது, பரமப்ப - பரமான்ம, பாவ - உணர்வு, ரஹிய மணோ - இல்லாதது, ஜிணமுத்த - ஜிநர் தோற்றத்தில், பரம் முஹோ - பாரா முகமுடையது, ஸோ - அந்த உயிர், ஸித்த ஸுஹம் - சித்த இன்பத்தை, ண லஹஇ - அடைவது இல்லை, எ.று.,

(க-ரை) ஐம்புல துவர்ப்புகளில் கூடியுள்ள, தீய எண்ணங்கள் உள்ள, பரமான்மாவில் ஈடுபாடு இல்லாத, ஏற்றுள்ள ஜிநர் தோற்றத்தில் பாரா முகம் உள்ள முனிவர் வீடுபேற்று இன்பத்தை அடையார்.

(வி-ரை) இதுவும் அது.

இங்கே ஆசாரியர் நான்கு விபாவ உணர்வுகளைக் காட்டியுள்ளார். ஐம்புல இன்ப நோக்கு உள்ள போது விருப்பு-வெறுப்பு வரவே செய்யும். அது துவர்ப்பு (கசாய) உணர்வு என்பர். துறவு ஏற்ற பின்பு உள்ளம் புலன் இன்பங்களை நாடுமானால் அந்தத் தோற்றத்தினால் பயன் இல்லை. அதனால் துவர்ப்பு எனும் விபாவ உணர்வு உள்ள போது அங்கே சுபாவ ஈடுபாடு தோன்றாது.

'ரௌத்திர' உணர்வும் விபாவ பரிணாமமே. இமிசை முதலான தீமைகளில் ஈடுபாடு கொள்ளும் உணர்வு இது. இதற்கு ஒரு கதை உண்டு. ருத்திரன் என்றொரு வித்தியாதரன் இருந்தான். ஒரு முறை அவன் காட்டில் செல்லும் போது வித்தையை கற்கும் வித்தியாதர மங்கையைப் பார்த்தான். அவள் மீது காமம் கொண்டு தன்னை ஒரு வண்டாக உருமாற்றம் செய்து கொண்டான். ஆறு மாத காலம் அம் மங்கையின் முகத் தாமரையில் திளைத்து இருந்தான். மேலும் நுண்ணிய உருவம் கொண்டு தொடை, மார்பு முதலான இடங்களில் விளையாடினான். ஒரு நாள் தன் உருவம் கொண்டு அவள் முன் நின்றான்; ஆடிய கதையைச் சொன்னான். அவள் தான் வித்தை

30. மேருமந்தர புராணம் - 1004, 321, 328.

கற்றும் முடியும் வரை காத்திருக்கச் சொன்னாள்; தான் அவனை மணப்பதாகக் கூறினாள்.

சில நாள்களில் அவள் வித்தையை முடித்தாள். பெற்றோர் அவள் மனம் அறிந்து அவளை ருத்திரனுக்கு மணம் முடித்தனர். அவர்கள் இல்வாழ்வில் திளைத்து மகிழ்ந்தனர். அவர்கள் இருவருக்கும் ஏதோ காரணத்தால் உலக வாழ்வில் ஈடுபாடு இல்லாது போயிற்று. இருவரும் முனிவரிடம் சென்று துறவு ஏற்றனர். இருவரும் துறவு ஏற்றாலும் அன்பை விட வில்லை. அதனால் இருவரும் ஆயுள் முடிந்து தேவ உலகில் தேவ-தேவியாகப் பிறந்தனர். பிறகு இருவரும் தேவ ஆயுள் முடிந்து மனிதராகப் பிறந்து துறவு ஏற்றனர். ஒரு நாள் ஆர்யிகை யாரும் இல்லை என்று நினைத்து ஒரு குகையில் தன் புடவையைக் காய வைத்தாள். அங்கு முனிவன் இருந்ததைப் பார்க்கவில்லை. முனிவன் அவளைப் பார்த்தான்; காம வயப்பட்டு அவளை கலந்தான். இப்படி கதை போகிறது. அவன் கடைசியில் நரகத்தில் சென்று பிறக்கிறான். தீய உணர்வுகளில் திளைத்தமையைச் சுட்ட 'ருத்ர' என்ற சொல் ஆளப்படுகிறது என்பது மட்டும் இங்கே கருதத் தக்கது.

இத்தகு உணர்வுடையாருக்கு எப்படி பரமான்மாவில் ஈடுபாடு வர முடியும்? தான் ஏற்றுள்ள துறவுத் தோற்றத்தில் ஈடுபாடு வர முடியும்? இரண்டிலும் பாரா முகமாகவே இருப்பர். அதனால் அவர் ஆன்ம தியானத்தில் ஈடுபட முடியாது; முத்தியும் அடைய முடியாது. அவர் பிறவியிலேயே உழல்வர், முனிவர் தோற்றம் கொண்டாலும்! ருத்திரன் வரலாறு அதனையே சுட்டுகிறது. துறவி ஆகியும் ஒழுக்கம் போற்றாது பிறவியில் உழல்கின்றனர், அத்தகையோர்!

47 ஜிண முத்தம் ஸித்திஸுஹம் ஹவேஇ ணியமேண ஜிணவருத்திட்டம் |
ஸிவிணே விண ருச்சஇ புண ஜீவா அச்சந்தி பவகஹணே ||

(ப-ரை) ஜிண முத்தம் - ஜிநர் தோற்றம், ஸித்தி ஸுஹம் - சித்தர் இன்பம், ணியமேண - முறையாக, ஹவேஇ - ஆகிறது, ஜிண வருத்திட்டம் - என்று ஜிநர் அருளியுள்ளார், புண - இனி, அத் தோற்றம், ஸிவி ணே வி - கனவிலும், ண ருச்சஇ - இனிக்க வில்லை எனில், ஜீவா - உயிர்கள், பவகஹணே - பிறவிக் காட்டில், அச்சந்தி - நிலைகொள்கின்றனர், எ.று.

(க-ரை) ஜிநர் தோற்றம் வீடு பேறு ஆகும். கனவிலும் அத்தோற்றம் இனிக்கவில்லை என்றால் அவ்வுயிர்கள் பிறவிப் பெருங் காட்டிலேதான் உழலும்.

(வி-ரை) ஜிநர் தோற்றத்தின் சிறப்பை விளக்குகிறார்.

ஜிநர் அருளிய ஜிநத்தோற்றம் முத்திக்குக் காரணமாகும். அதாவது பற்றற்ற நிலையே முத்திக்குக் காரணம். அதற்கு அடையாளம் ஜிநர் தோற்றம். இங்கே

ஆசாரியர் அகக் காரணத்தைப் புறத் தோற்றத்தில் ஏற்றி உரைத்துள்ளார். அதனால், தோற்றம் காரணம் என்றால் முத்தி காரியமாகும். அத்தகு சிறப்புடைய ஜிநர் தோற்றம் கண்டு கனவிலும் சுவை தோன்றவில்லை என்றால் அந்த உணர்வை என்ன வென்று சொல்லுவது? ஜிநர் உரைக்கு 'அவிநயம்' அல்லவா? அது பாப உணர்வாகும். அந்த உயிர் பிறவியில் உழலும்; அங்கிருந்து வெளியேறாது.

பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி
காமாதி வென்றுயர்ந்த கடவுள்என்று அறையுமே
காமாதி வென்றுயர்ந்த கடவுள்என்று அறைந்தாலும்
கோமான்! நின் திருவுருவம் கொண்டு உவப்பர் அரியரே! [31]

48 பரமப்பய ஜாயந்தோ ஜோஈ முச்சேஇ மலதலோஹேண |
ணாதியதி ணவம் கம்மம் ணித்திட்டம் ஜிணவரிந்தேஹிம் ||

(ப-ரை) பரமப்பய - பரமான்மாவை, ஜாயந்தோ - தியானிக்கும், ஜோஈ - யோகியர், மலதலோஹேண - உயிரை மலினப்படுத்தும் 'லோப'த்திலிருந்து, முச்சேஇ - விடுபடுகிறார், ணவம் - புதிய, கம்மம் - வினை, ணாதியதி - அவருக்கு வருதல் இல்லை என, ஜிணவரிந்தேஹிம் - ஜிநரால், ணித்திட்டம் - அருளப்பட்டுள்ளது, எ.று.,

(க-ரை) பரமான்மாவை தியானிக்கும் யோகியர் உலோப கசாயத்திலிருந்து விடுபடுகிறார். புதிய வினை ஊற்றும் அவருக்கு இல்லை என்று ஜிநர் அருளி யுள்ளார்.

(வி-ரை) பரமான்ம தியானத்தால் புதிய வினை தடுக்கப்படுகிறது என்கிறார்.

முனிவராகி மறுமை இன்ப பற்று இருக்குமானால் அவருக்கு பரமான்ம தியானம் கைகூடாது. அதனால் பரமான்ம தியானம் செய்பவருக்கு உலோபம் இல்லை என்றார். அதன் விளைவாக புதிய வினை ஊற்றும் அவருக்கு இல்லை. இது ஜிநர் உரையாகும்.

'லோப' கசாயம் பத்தாம் குணத்தானம் வரை உள்ளது. அது வரை உயிரை அது மலினப் படுத்த முடியும். எனவே அதனை நீக்க வேண்டும். முத்தி வேண்டும் எனும் விருப்பம் இருந்தாலும் அதுவரை முத்தி விளையாது. அதனால் உலோபம் ஒழிக்கப்பட வேண்டும். பரமான்ம தியானத்தில் நிற்றலே முத்திக்கு வழி. அது உலோப அழிவால் அமைகிறது. அதனையே சுட்டுகிறார், ஆசாரியர்.

49. ஹோஊண திட சரித்தோ திடஸம்மத்தேண பாவியம ஈஓ|
ஜாயந்தோ அப்பாணம் பரமபயம் பாவஏ ஜோஈ ||

31. மேருமந்தர புராணம் - 64.

(ப-ரை) ஹோஊண - ‘உலோபம்’ அற்றவராகி, திட - உறுதியான, ஸம்மத்தேண - நற்காட்சியால், திட - உறுதியான, சாரித்தோ - நல்லொழுக்கத்தை, பாவிய - அடைந்த, மாஊ - நல்லறிவுடைய, ஜோஈ - யோகியர், அப்பாணம் - பரமான்மாவை, ஜாயந்தோ - தியானிக்கிறார், அவர், பரம - உயர்ந்த, பயம் - பதவியை அதாவது பரமான்ம நிலையை, பாவஏ - அடைகிறார், ஏ.று.

(க-ரை) பற்றற்றவராகி நற்காட்சியால் நல்லொழுக்கத்தை அடைந்த நல்லறிவுடைய யோகியர் பரமான்மாவை தியானித்து பரமான்மா நிலையை அடைகிறார்.

(வி-ரை) பற்றற்ற முனிவரே மும்மணியால் பரமான்ம நிலையை அடைகிறார் என விளக்குகிறார்.

முன் காதையில் உலோபத்தை கடும் பற்றுணர்வை - ஒழித்தவரே பரமான்மாவை தியானிக்கிறார் என்று குறிப்பிட்டார். இங்கே அந்தப் பற்றுணர்வு அற்ற நிலையோடு மும்மணி ஒழுக்கத்தில் உறுதியுடன் இருந்து பரமான்ம தியானம் செய்து பரம நிலையை - வீடு பேற்று நிலை அடைகிறார் முனிவர் என்று குறிப்பிடுகிறார்.

இரண்டு குறிப்புகள் இங்கே தருகிறார். ஒன்று பற்றுணர்வை ஒழித்தல்; மற்றொன்று மும்மணியில் உறுதிப்பாடு. வெள்ளை ஊழ்கத்தில் நிலைப்பட இவ்விரண்டும் அடிப்படையானவை. தூய ஆன்மாவில் துவர்ப்பு இருத்தற்கு இயலாது. கடைசியாக விலகுகிற துவர்ப்பு உணர்வு ‘உலோப’ மாகும். அதன்பிறகே ஆன்மா தூய்மை அடைகிறது. அதனையே ‘ஹோ ஊண’ என்ற சொல்லால் பெற வைத்தார். ‘திட’ என்பது மும்மணியின் உறுதிப்பாட்டை உறுதி செய்கிறது. இடையூறுகள் இடையில் நுழைந்தாலும் மலினப்படாமல் உறுதியில் நிற்றலைக் குறித்தார் எனலாம். அதனால் தூய ஆன்ம தியானத்தில் நிற்க முடிகிறது. அப்படி நின்று வினைகளை வீழ்த்தி பரமான்ம பதவியை அடைகிறார் யோகியர் எனத் தெளிவு செய்கிறார்.

50 சரணம் ஹவஇ ஸ‾தம்மோ தம்மோ ஸோ ஹவஇ அப்பஸமபாவோ |
ஸோ ராகரோஸ ரஹிஓ ஜீவஸ்ஸ அணண்ண பரிணாமோ ||

(ப-ரை) ஸ‾தம்மோ - தன் தருமம் அதாவது ஆன்ம தருமம், சரணம் - சாரித்திரம், ஹவஇ - ஆகும், தம்மோ - தருமம், ஸோ - அது, அப்ப ஸமபாவோ - ஆன்மாவின் சமவுணர்வு, ஹவஇ - ஆகும், ஸோ - அது, ராகரோஸ ரஹிஓ - ஆர்வம் செற்றம் இல்லாதது, ஜீவஸ்ஸ - உயிரிலிருந்து, அணண்ண - வேறுபடாத, பரிணாமோ - பரிணாமமாம், எ.று.

(க-ரை) சாரித்திரம் ஆன்மாவின் தருமம், அது. சம உணர்வு உடையது; அது காமம் வெகுளி இல்லாதது. அது உயிரிலிருந்து வேறுபடாத பரிணாமம் ஆகும்.

(வி-ரை) சாரித்திரத்தின் இயல்பை விளக்குகிறார்.

நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கம் கூடியது முத்தி நெறி. அம் மூன்றும் ஆன்மாவின் இயல்பாகும். ஆன்மா இயல்பில் நிகழும் போதுதான் முத்தி விளைகிறது. நற்காட்சி நல்லறிவு ஆன்மாவின் இயல்பு என விளக்கி வரும் ஆசாரியர் நல்லொழுக்கமும் அப்படியே என காட்டுகிறார்.

பொருளின் இயல்பு தருமம் எனப்படும். உயிரின் இயல்பு மும்மணி வடிவ மாகும். அதுவே அதன் தருமம் ஆகும். அந்த வடிவில் தன்னைக் காணும் ஆன்மா பிற எல்லா உயிர்களும் அவ் வடிவமே என அனுபவம் செய்கிறது. அதனையே 'ஸமபாவோ' என்றார். " உள்ளத்தால் எவ்வுயிர்க்கும் ஒத்து ஒழுகாதவர் பிறவி வெள்ளத்து ஆழ்பவர் என்று விரிதவர் முன் விரித்தருளி " என திருக்கலம்பகம் சுட்டும்.[32] முனிவர் முன் பகவான் உரைத்தார் எனும் போது முனிவர் நெஞ்சத்தின் பாங்கினை விளங்கிக் கொள்ளலாம். அவ் வொத்த உணர்வு உள்ள போது அங்கு விருப்பு வெறுப்புக்கு - ஆர்வம் செற்றத்துக்கு - வேண்டுதல் வேண்டாமைக்கு இடம் ஏது? அந்த உணர்வு சாரித்திரம் ஆகும். அதாவது அது அறிவில் ஆகுலம் (விருப்பு வெறுப்பு) இல்லாத நிலையாகும். அறிவு தன்னில் திளைக்கும் நிலையாகும். அது சாரித்திரம் ஆகும். அது ஆன்மாவின் இயல்பான நிகழ்வாகும். ஆன்மாவிலிருந்து வேறுபடாத நிகழ்வாகும்.

51 ஜஹ பலிஹமணி விஸுத்தோ பரதவ்வ ஜுதோ ஹவேஇ அண்ணம் ஸோ |
தஹ ராகாதிவிஜுத்தோ ஜீவோ ஹவதி ஹு அணண்ணவிஹோ ||

(ப-ரை) ஜஹ - எப்படி, விஸுத்தோ - தூய்மையான, பலிஹ மணி - பளிங்கு மணி, பரதவ்வ - பிற பொருள், ஜுதோ - கூட்டத்தால், ஸோ - அது, ஹவேஇ அண்ணம் - வேறாகக் காட்சி தருகிறது, தஹ - அப்படி, ராகாதி விஜுத்தோ - ஆர்வம் முதலான பிறவற்றோடு கூடிய, ஜீவோ - உயிர், ஹு - வெளிப்படையாக, அணண்ணவிஹோ - வெவ்வேறாக, ஹவதி - இருக்கிறது, எ.று.,

(க-ரை) தூய்மையான பளிங்கு மணிக்கு முன்னால் வெவ்வேறான வண்ணப் பொருள்கள் வரும் போது அம் மணி வேறு வேறாகத் தோற்றம் தருகிறது. அது போல, இயல்பாகவே தூய்மையான உயிர் ஆர்வம் முதலானவற்றோடு கூடி வேறு வேறாகக் காட்சி தருகிறது.

(வி-ரை) உயிரின் மலினத் தன்மைக்குக் காரணம் காட்டுகிறார்.

பளிங்கு மணி இயல்பாகவே தூய்மையானது. அதன் முன்னர் வண்ண வண்ண பூக்களை வைத்தால் மணி அவ் வண்ண வடிவமாகக் காட்சித் தருகிறது. அது போல உயிர் மணி ஒத்து தூய்மை உடையதாகும். அதனோடு விருப்பு முதலான உணர்வுகள் சேரும் போது அது பல வாறாகக் காணப்படுகிறது.

32. திருக்கலம்பகம் - 1.

உண்மையில் ஆர்வம் முதலான திரிபுகள் புற்கலத்தைச் சார்ந்தவை. அவை உயிர் அறிவில் காணப்படும் போது அதனோடு சேர்ந்து ‘அவை என்னுடையன’ என அறிகிறது. அவை வேறானவை எனும் தெளிவு பிறக்காத வரை உயிர் வேறு வேறான வடிவமாக அனுபவம் பெறுகிறது. பளிங்கு மணி தன் இயல்பில் திரிதலுக்கு (பிற) மலர்கள் காரணம் ஆவது போல உயிரின் தூய்மை திரிபின் காரணத்தை விளங்கிக் கொள்ளலாம்.

இங்கே நிமித்த காரணம் உள்ளதைக் காட்டியுள்ளமையால் திரிபு தானே நிகழ்வது இல்லை என்றாகிறது. தூய்மை தானே நிகழ்வது பிறிதைச் சாராத தன்னுரிமை உடையது. அதனைப் போற்றுக.

52 தேவகுரும்மி ய பத்தோ ஸாஹம்மிய ஸஞ்ஜதேஸு அணுரத்தோ |
ஸம்மத்தமுவ் வஹந்தோ ஜாணரஓ ஹோதி ஜோஈ ஸோ ||

(ப-ரை) தேவ குரும்மி ய - தேவரிடத்தும் குருவினிடமும், பத்தோ - அன்புடையவர், ஸாஹம்மி - தன் தருமத்தவரிடமும், ய - மற்றும், ஸஞ்ஜ தேஸு - சையமியிடமும், அணுரத்தோ - பாசமுடையவர், ஸம்மத்த முவ்வஹந்தோ - நற்காட்சியுடையவர், ஸோ ஜோஈ - அந்த யோகியர், ஜாணரஓ - தியான ஆர்வலர், ஹோதி - ஆகிறார், எ.று.

(க-ரை) தேவர், குருவிடம் அன்பும், தன் தருமத்தர் சையமியரிடம் பாசமும், நற்காட்சியும் உடைய அம் முனிவர் தியான ஆர்வம் உடையவராம்.

(வி-ரை) பரம தியானம் கூடும் வரை முனிவர் நிலை என்ன என்று விளக்குகிறார்.

அருகர், சித்தரிடம், துறவும் ஓதுதலும் தரும் குருக்களிடம், அன்புடையவராக உள்ளார். அவர் அன்பு பணிவோடு கூடியதாகும். அதே போல தன் தருமத்தரிடம் மற்றும் தன்னொத்த முனிவர்களிடம் பாசம் உடையவராக உள்ளார். இவை எல்லாம் ஆர்வத்தின் பாற்படும். என்றாலும் நற்காட்சி உடையவராகவும் இருக்கிறார். அவரே தியானத்தில் ஈடுபாடு உடையவராக உள்ளார். முனிவராகியும் தேவர், குரு, உடனுறை துறவியரிடம் அன்பு அல்லது பாசம் இல்லை எனில் அவருக்கு தியானத்தில் ஆர்வம் இராது. ஏனெனில், தியானிப்பவருக்கு தியானப் பொருளில் ஆர்வம் காணப்படும். அது காணப்படவில்லை என்றால் அவருக்குத் தியானத்திலும் ஆர்வம் இல்லை என்பது தெரியும்.

பரம தியானத்திலும் ஆழும் ‘யதாக்யாத’ சாரித்திரம் அடையும் வரை முனிவருக்கு இத்தகு ஆர்வம் இருக்கவே செய்யும் என தெளிதல் வேண்டும்.

'அங்கநூல் பயின்று வல்லார்
அறவமிர்து அளிக்கும் சொல்லார்
சிங்கநல் பாய்ச்சல் ஆதி
நோன்பொடு செறிந்து நின்றார்
தங்கிய கருணை நெஞ்சில்
தரியினார் உயிர்கட்கு எல்லாம்
திங்கள்வெண் குடையி னான்தன்
தேவியைக் கண்டு சொன்னார்'

என முனிவர் கருணை நெஞ்சோடு அன்பு காட்டுதலைக் காணலாம்.[33]

53 உக்கதவேணண்ணாணீ ஜம் கம்மம் கவதிபவஹி பஸுஏஹிம் |
தம் ணாணீ திஹி குத்தோ கவேஇ அந்தோ முஸுத்தேண ||

(ப-ரை) உக்க தவேணண்ணாணீ - மிகக் கடுந்தவமுடைய அஞ்ஞானி, பவஹி பஸுஏஹிம் - மிகப் பல பிறவிகளில். ஜம் கம்மம் - எத்தனை வினைகளை, கவதி - அழிக்கிறார், தம் - அதனை, திஹி குத்தோ - மூன்று குத்திகளை உடைய, ணாணீ -ஞானி முனிவர், அந்தோ முஸுத்தேண - அந்தர் முகூர்த்தத்தில், கவேஇ - அழிக்கிறார், எ.று.,

(க-ரை) அஞ்ஞானி மிகக் கடுந் தவம் செய்து மிகப் பல பிறவிகளில் அழிக்கும் கருமங்களை மூவடக்கம் உடைய முனிவர் அவற்றை அந்தர் முகூர்த்தத்தில் அழிக்கிறார்.

(வி-ரை) அஞ்ஞானி - ஞானி முனிவருக்கு இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறார்.

அறிவின் ஆற்றல் அளப்பரியது. நற்காட்சி யுடையார் அறிவே நல்லறிவு ஆகும். அந்த ஞானம் உடையார் ஞானி ஆவார். அவர் வினைகளை விரைவாக உதிர்க்கிறார். ஏனெனில், ஊற்றுக்கு ஏதுவான மனம் மொழி உடல் செயல்களைப் புறம் போகாது தன் வயப்படுத்தி உள்ளார். அதனை மூன்று குத்தி என்பர். பதிமூன்று சாரித்திரங்களில் உள்ளடங்கி யுள்ளது அது. அதனால் அம் முனிவர் தன் ஆன்ம தியானத்தில் நிகழ்ந்து வினைகளை உதிர்க்கிறார். ஆனால் அஞ்ஞானி - ஆன்ம இயல்பினைத் தெளியாத அஞ்ஞானி-முனிவர்-கடும் தவம் பல பவங்களில் செய்தால் வினைகள் எத்தனை கழியுமோ அத்தனையை அந்தர் முகூர்த்தத்தில் ஞானி முனிவர் கழிக்கிறார். தன்னையும் பிறிதையும் பிரித்தறியும் அறிவின் சிறப்பு இது. தவத்தால் கருமம் கழியும் என்பது ஞானி முனிவருக்கே பொருந்தும். ஏனெனில் அவரே வீடுபேறு பெறுகிறார்.

33. மேருமந்தர புராணம் - 393.

54 ஸுஹஜோஏண ஸுபாவம் பரதவ்வே குணஇ ராகதோ ஸாஸூ|
ஸோ தேண த அண்ணாணோ ணாணீ ஏத்தோ து விவரீஓ||

(ப-ரை) ஸுஹ - ஜோ ஏண - விரும்பியவை கூடினால், ஸாஸு-முனிவர், பர தவ்வே - பிற பொருள்களில், ஸுபாவம் - ஈடுபாட்டுடன், ராகதோ - ஆர்வம், குணஇ - செய்கிறார், ஸோ - அவர், தேண - அதனால், து அண்ணாணோ - அஞ்ஞானியே ஆவார், ஏத்தோ து - இதற்கு, விவரீஓ - எதிரானவர், ணாணீ - ஞானி ஆவார், எ.று.

(க-ரை) விரும்பிய பொருள் கூடும் போது அதில் ஆர்வம் கொள்ளும் முனிவர் அஞ்ஞானி ஆவார்; இதற்கு எதிரானவர் ஞானி ஆவார்.

(வி-ரை) ஞானி அஞ்ஞானி இயல்பை விளக்குகிறார்.

ஆர்வம் என்பது பிற பொருள் மேல் செல்லும் அன்புணர் வாகும். பிற பொருள் விருப்பத்தால் அது நிகழ்கிறது. அதே போல் செற்றம் என்பதும் பிற பொருள் மேல் செல்லும் வெறுப்பு உணர்வு ஆகும். பிற பொருளை வெறுப்பதால் அது நிகழ்கிறது. விருப்பும் வெறுப்பும் இணைந்தே இருக்கும்.

நற்காட்சியுடைய முனிவர் பிற பொருள் மேல் ஆர்வம் கொள்ளார். ஏனெனில் பிற பொருள் நல்லது செய்யும் அல்லது செய்யும் எனக் கருதும் அறியாமை அவருக்கு இல்லை. அதனால் அவர் ஞானி எனப்படுகிறார். ஆனால் நற்காட்சி இல்லாத முனிவர் பிற பொருள் நல்லது செய்யும் அல்லது செய்யும் என கருதுவதால் பிற பொருள் மீது விருப்பு அல்லது வெறுப்பு கொள்கிறார். அதனால் அவர் அஞ்ஞானி எனப்படுகிறார். அதாவது தன்னையும் பிற பொருளையும் பிரித்து அறிந்து தன்னில் சுவை கொள்பவர் ஞானி; அதற்கு எதிரானவர் அஞ்ஞானி ஆவார்.

சாரித்திர மோக உதயத்தால் அறத்தில் ஆர்வம் தோன்றுகிறது. அதுவும் கசாயம்தான். ஆனால் அதனைச் சிறந்ததாக ஏற்பது இல்லை. அப்போது பிற பொருள் மீது அவருக்கு எப்படி ஆர்வம் தோன்றும்? தோன்றாது. முனிவரானாலும் விருப்பு வெறுப்புகளில் சிக்கினால் அவர் அஞ்ஞானி-மித்தர் ஆவார் என்பதாம்.

55 ஆஸவஹேதூ ய தஹா பாவம் மோக்கஸ்ஸ காரணம் ஹவதி |
ஸோ தேண து அண்ணாணீ ஆதஸஹாவா துவிவரீது ||

(ப-ரை) மோக்கஸ்ஸ - வீடுபேற்றுக்கு, காரணம் - நிமித்தம், ஹவதி - ஆகிறது என்றாலும், தஹா பாவம் ய - அந்த ஆர்வமும், ஆஸவ ஹேதூ - ஊற்றுக்கு ஏதுவாகும், ஆத ஸஹாவா து - ஆன்ம இயல்புக்கு, விவரீது - எதிரானது, தேண - அதனால், ஸோ து அண்ணாணீ - அவரும் அஞ்ஞானி ஆவார், எ.று,

(க-ரை) முத்திக்குக் காரணம் என்றாலும் அந்த ஆர்வமும் வினை ஊற்றுக்கு நிமித்தமாகும். அந்த உணர்வு உடையார் தன் ஆன்ம இயல்பினை அறியவில்லை. அதனால் அவர் அஞ்ஞானி ஆவார்.

(வி-ரை) எந்த ஆர்வமாக இருந்தாலும் அது முத்திக்குத் தடை என்கிறார்.

ஞானம் - அஞ்ஞானம் என்பது அறிதல் அறியாது இருத்தலை ஒட்டி எழுவது அன்று. பொருளின் உள்ளவாறான இயல்பை அறிதல் ஞானம். அப்படி அறியாது இருத்தல் அஞ்ஞானம் ஆகும். அதாவது தன் இயல்பையும் பிற பொருள் இயல்பையும் உள்ளவாறு உணர்தல் ஞானம். அப்படி உணராமை அஞ்ஞானம் ஆகும்.

இங்கே முத்தி வேண்டும் எனத் துறவு ஏற்ற முனிவர் புறப் பொருள்கள் மீது ஆர்வம் கொள்ள வில்லை என்றாலும் முத்தி மீது ஆர்வம் கொள்கிறார். விரும்புகிற பொருள் முத்தி என்றாலும் விருப்பம் என்பது கசாயம் தான். அது வினை ஊற்றுக்குக் காரண மாகும். இங்கே புண்ணிய வினை ஊற்று அமைகிறது. இது முத்திக்குத் தடை ஆகும். ஆர்வம் அணுவளவும் இன்றி தன் ஆன்ம இயல்பைத் தியானித்தலே முத்திக்கு வழியாகும். அத் தியானம் உடைய முனிவரே ஞானி ஆவார். அப்படி இல்லாமல் முத்தி ஆர்வத்தை நல்லது என்று நம்பும் முனிவர் அஞ்ஞானி ஆவார். எனவே இத்தகு ஆர்வம் முத்திக்கு ஏது ஆகும்; நல்லதும் ஆகும் எனும் கருத்தை - நம்பிக்கையை விட வேண்டும் என்பதாம்.

56 ஜோ கம்மஜாதமஇஓ ஸஹாவ ணாணஸ்ஸ கண்டதூஸயரோ |
ஸோ தேண து அண்ணாணீ ஜிணஸாஸணதூஸகோ பணிதோ ||

(ப-ரை) ஜோ - எவர், கம்ம ஜாத மஇஓ - வினை உதயத்துக்கு ஏற்ற அறிவு உள்ளவர், ஸஹாவ ணாணஸ்ஸ - இயல்பான அறிவை, கண்ட தூஸயரோ - தவறு என தூற்றுபவர், தேண து - அதனால், ஸோ - அவர், அண்ணாணீ - அஞ்ஞானி ஆவார், ஜிணஸாஸண - ஜிநர் கோட்பாட்டை, தூஸகோ - பழிப்பவர் என, பணிதோ - கூறப்பட்டுள்ளது, எ.று,

(க-ரை) வினை உயத்துக்கு ஏற்ப அறிவுடையவர் முழுதுணர் அறிவைத் தூற்றும் அஞ்ஞானி ஜிந தரிசனத்தைப் பழிப்பவர் என்று கூறப்பட்டுள்ளது.

(வி-ரை) அஞ்ஞானியை வேறு வகையாக விளக்குகிறார்.

வினை உதயத்துக்கு ஏற்ப அறிவு உடையவர் என்பதால் கசாய உணர்வு உடையவர் என்பதாயிற்று அவருக்கு நல்லறிவு இருத்தற்கு இயலாது. தன்னுடைய அறிவு பொறிகள் வழிப்பட்டது என்பதும் அது குறையுடையது என்பதும் வினை வழிப்படுவது என்பதும் அறியாது. தன் அறிவே மிக்கது என எண்ணுபவர் அஞ்ஞானி ஆவார். அவர் முழுதுணர் அறிவை ஏற்காது தூற்றுவார். அதனால் அவரை ஜிந

தரிசனத்தை பழிப்பவர் / இழிப்பவர் என்று கூறப்பட்டுள்ளது. ஜிந தரிசனம் என்றது முழுதுணர் அறிவரால் அருளப்பட்ட மெய்ம்மை. முழுதுணர் அறிவை மறுப்பதால் அவர் மெய்ம்மையைப் பழிப்பவர் எனப்பட்டார்.

உலகில் எத்தனையோ கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் பொருளின் இயல்பை உள்ளவாறு உரைக்கும் கோட்பாட்டைத் தெளிதல் அரிதாகும். அதனால் முழுதுணர் அறிவு உண்டு என ஏற்காதாரை அஞ்ஞானி என்றார். தான் கண்டதே உண்மை என கருதாது தான் கண்டது எத்தகையது என ஆய வேண்டும். தன் அறிவு எத்தகையது என ஆய வேண்டும். அப்போது உண்மையைத் தேடும் உணர்வு உறுதி பெறும். அப்படி உறுதி பெற்று உண்மையை அறியாதவரை அஞ்ஞானி என்று குறிப்பிட்டார். ஞானி ஆக முயல்க என்பது குறிப்பாகும்.

57 ணாணம் சரித்த ஹீணம் தம்ஸணஹீணம் தவேஹிம் ஸஞ்ஜுத்தம் |
அண்ணேஸு பாவரஹியம் லிங்கக் கஹணேண கிம் ஸோக்கம் ||

(ப-ரை) சரித்த ஹீணம் - நல்லொழுக்கம் இல்லாத, ணாணம் - அறிவு, தம்ஸணஹீணம் - நற்காட்சி இல்லாத, தவேதஹிம் ஸஞ்ஜுத்தம் - தவத்தோடு கூடி இருத்தல், பாவரஹியம் - அகவுணர்வு இல்லாத, அண்ணேஸு - பிற நாளொழுக்கங்கள் முதலான இருந்து, லிங்கக் கஹணேண - துறவுத் தோற்றம் கொள்ளுதலால், கிம் ஸோக்கம் - என்ன இன்பம் கிடைக்கும்? எ.று.

(க-ரை) அறிவோடு நல்லொழுக்கம் இல்லை; தவத்தோடு நற்காட்சி இல்லை; நாளொழுக்கங்கள் முதலான பிறவற்றில் அகவுணர்வு இல்லை. இந்த நிலையில் துறவுத் தோற்றம் என்ன இன்பத்தை அல்லது நலனைத் தரும்?

(வி-ரை) புறத்தோற்றம் மட்டும் இன்பம் தராது என்கிறார்.

முனித் தோற்றம் உள்ளது. ஆகமம் படிக்கிறார். அதனால் அறிவும் பெறுகிறார். அம் முனிவர் ஆன்மாவில்தோயும் உண்மை ஒழுக்கமும் ஒழுக வில்லை; புற ஒழுக்கங்களையும் புரையின்றிப் போற்றவில்லை; தபம் பற்றி மிகக் கவலை கொள்கிறார். உபவாசங்கள் பல செய்கிறார்; ஆனால் நல் காட்சி இல்லை-உயிரை நம்பும் ஈடுபாடு இல்லை; ஆற்ற வேண்டிய நாளொழுக்கங்கள் முதலானவற்றை ஆற்றுகிறார்; ஆனால் அதற்கான அகவுணர்வு ஈடுபாடு இல்லை. அப்படிப்பட்ட முனிவர்-முனித் தோற்றம் உடையவர்-அத் தோற்றத்தால் எந்த ஆன்மீய அமைதியையும் அடைய வில்லை; ஆன்ம தூய்மையும் அடைய வில்லை. மறுமையிலும் இத்தகு இன்பத்தை அடைய முடியாது. எனவே ஆசாரியர் மும்மணியும் அகவுணர்வும் கூடிய புறத் தோற்றமே வேண்டப்படுவது என விளக்குகிறார். பொது மக்கள் புறத் தோற்றம் கண்டே / கொண்டே போற்றுவர். ஆனால் அப் போற்றுதலே உண்மை என மயங்குகிறான் போலித் துறவி / முனி. பலப்பல பிறவிகள் தொடருமே

அல்லாது முத்தி கைகூடாது. கூடா ஒழுக்கங்களைக் கைவிட்டு உயிரோடு கூடிய ஒழுக்கங்களுடன் புறத் தோற்றம் கொள்ளலே பொருந்தும் என்பதாம்.

58 அச்சேயணம் பி சேதா ஜோ மண்ணஇ ஸோ ஹவேஇ அண்ணாணீ |
ஸோ புண ணாணீ பணிஓ ஜோ மண்ணஇ சேயணே சேதா ||

(ப-ரை) ஜோ - எவர், அச்சேயணம் பி - உயிரற்றதையும், சேதா - உயிருள்ளது என, மண்ணஇ - கருதுகிறார், ஸோ - அவர், அண்ணாணீ - அஞ்ஞானி, ஹவேஇ - ஆகிறார், புண - மற்றும், ஜோ - எவர், சேயணே - உயிருடையதை, சேதா - உயிர் என, மண்ணஇ - கருதுகிறார், ஸோ - அவர், ணாணீ பணிஓ - ஞானி எனப்படுகிறார், எ.று,,

(க-ரை) உயிரற்றதை உயிர் என கருதுவார் அஞ்ஞானி ஆவார். உயிருள்ளதை உயிர் என கருதுவார் ஞானி எனப்படுவார்.

(வி-ரை) அறிவு அறிவின்மை எது என விளக்குகிறார்.

உலகில் காணப்படும் பொருள்கள் பல வாகும். அப் பொருள்களின் இயல்பும் பல வாறாக உள்ளது. அவற்றின் உண்மையான இயல்பு அல்லது இயல்புகள் என்ன? எவை? என ஆய்தல் தொடக்க மற்ற கால மாக நிகழ்ந்து வருகிறது; இனியும் தொடர்ந்து வரம்பற்ற காலம் நிகழும். ஏனெனில், முழுமையாக அறியும் ஆற்றலை அடையும் போதுதான் உண்மை விளங்கும். அதுவரை உண்மை விளங்காது. எனவே இந்த ஆய்தல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகில் உள்ளது ஒரு பொருளா? பல பொருளா? என்னும் ஆய்வும் நடைபெறுகிறது. ஒரு பொருள் மட்டுமே உண்டு என்பாரும் பல பொருள்கள் உள என்பாரும் உள்ளனர். இந்த ஆய்வுக்கு முடிவு இராது. பல பொருள்கள் என்றால் அவை என்ன என்ன பொருள்கள்? என்னும் ஆய்வும் நடைபெறுகிறது. அதற்கும் முடிவு இல்லை. இந்தச் சூழலில் ஒருவர் என்ன செய்ய வேண்டும்? தானேதான் தெளிய வேண்டும். அத் தெளிவு பெற பல வகை கருவிகள் உள்ளன. அவற்றுள் ஆகமம் ஒன்று. தம் முழு அறிவில் கண்டதை வெளிப்படுத்தி உள்ளனர். அதுவே ஆகமம் ஆகும். உலகப் பொருள்கள் உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள் என இரு வகையாக உள்ளன என ஆகமம் கூறுகிறது. உயிரை உயிராகவும் உயிரற்றதை உயிரற்றதாகவும் அறிதல் அறிவுடைமை ஆகும். அப்படி இன்றி ஒன்றை மற்றொன்றாக அறிதல் அறியாமை ஆகும். முத்தி நெறியில் அறியாமைக்கு வழி இல்லை. அதனால் முத்தியை அடையும் உயிரைத் தெளிபவரே ஞானி என்றார். பிறர் அஞ்ஞானி என்றார்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்பார் தேவர்.[34]

59 தவரஹியம் ஜம் ணாணம் ணாணவஜுத்தோ தவோ வி அகயத்தோ |
தம்ஹா ணாணதவேணம் ஸஞ்ஜுத்தோ லஹஇ ணிவ்வாணம் ||

(ப-ரை) தவ ரஹியம் - தவம் போற்றாத, ஜம் ணாணம் - அந்த அறிவும், ணாண விஜுத்தோ - அறிவு இல்லாத, தவோ வி - தவமும், அகயத்தோ - வீணாகும், தம்ஹா - ஆகையால், ணாணதவேணம் - அறிவும் தவமும், ஸஞ்ஜுத்தோ - கூடிய பிறகே, ணிவ்வாணம் - நிருவாணம், லஹஇ - அடைகிறார், எ.று.,

(க-ரை) தவம் இல்லாத அறிவும் அறிவு இல்லாத தவமும் வீணாகும். அறிவும் தவமும் ஒன்றும் போது நிருவாணம் அடைகின்றனர்.

(வி-ரை) தவமும் அறிவும் முத்திக்கு வேண்டும் என்கிறார்.

அறிவு என்றது தன்னையும் பிறிதையும் பிரித்தறியும் மெய்யறி வாகும். தவம் என்றது விருப்பு வெறுப்பு முதலான துவர்ப்புகள் கடந்த உயிர் அனுபவம் ஆகும்.

'மெய்த் தவத் தன்மை தானும்
வென்றவர் படிமம் தாங்கிச்
சித்தமெய் மொழிகள் மூன்றில்
இரு தொடர்ப்பாட்டின் நீங்கிப்
பத்தறம் பன்னிரண்டாம்
தவத்தொடு பயின்று தன்கண்
உத்தம காட்சி ஞான
ஒழுக்கத்தை அழுத்தல் கண்டாய்'

என உயிர் அனுபவத்தைச் சுட்டுவார்.[35]

அத்தகு தபத்தை ஆற்ற நல்லறிவு வேண்டும். நல்லறிவு இல்லாத போது நற்றவம் அமையாது. அதனால் இரண்டும் உள்ள போதுதான் இறுதியில் இன்பம்-வீடுபேறு அடைய முடியும் என்றார்.

ஆனால் உலகில் அறிவு ஒன்றால் முத்தி அடையலாம், வேறு ஏதும் தேவை இல்லை என நம்புவாரும் உள். அறிவு வேண்டாம். கடும் தவம் செய்தால் முத்தி அடையலாம் என நம்புவாரும் உள். இது போல பிற பிற நம்பிக்கைகள் உடையவர்

34. திருக்குறள் - 355, 423
35. மேருமந்தர புராணம் - 411

பலர் உளர். ஆறு பலவானாலும் கலக்குமிடம் - கடல் ஒன்றுதான் என்றும் உரைப்பர். எனவே ஏதோ ஒன்றைப் பற்றிக் கொண்டால் போதும் என பிறவற்றை மறுத்து விடுவர். அதனால், ஆசாரியர் அறிவின் உண்மை இயல்பை அறியாதவரும், தவம் உடல் வருத்தும் செயல் என எண்ணுபவரும், தன் தன் எண்ணப்படி அறிவு மட்டும் போதும், தவம் மட்டும் போதும் என எண்ணுவதால் அவை வீண் - பயன்படாது என்றார்.

60 துவஸித்தீ தித்தயரோ சஉணாணஜுத்தோ கரேஇ தவயரணம் |
ணாஊண துவம் குஜ்ஜா தவயரணம் ணாணஜுத்தோ வி ||

(ப-ரை) துவ ஸித்தீ - முத்தி உறுதியான, தித்தயரோ - தீர்த்தங்கரர், சஉ ணாண - (துறவு ஏற்ற காலத்து) நான்கு ஞானங்களோடு, ஜுத்தோ - கூடி இருந்தாலும், தவயரணம் - தவஒழுக்கத்தை, கரேஇ - செய்கிறார், ணாஊண - இதை அறிந்து, ணாண- ஞானம், ஜுத்தோ வி - உடையவரானாலும், தவயரணம் - தவஒழுக்கத்தை, துவம் - உறுதியாக, குஜ்ஜா - செய்யத் தக்கதாகும், எ.று,

(க-ரை) நான்கு ஞான முடைய தீர்த்தங்கரரும் தவம் ஏற்கிறார். அதனால், அறிவுடையரானாலும் தவ ஒழுக்கம் தள்ளாது கொள்ள வேண்டும்.

(வி-ரை) ஓர் எடுத்துக்காட்டு வழி அறிவும் தவமும் ஒருங்கே அமைய வேண்டும் எனக் காட்டுகிறார்.

தீர்த்தங்கரர் பிறக்கும் போது மதி, சுருதம், அவதி ஞானங்களோடு பிறக்கிறார். துறவு ஏற்கும் போது மனப்பரியய ஞானமும் தோன்றுகிறது. இப்படி நான்கு வகையான ஞானம் இருந்தாலும், முத்தி உறுதியாக வரப் போகும் நிலையில் இருந்தாலும், அவர் தவம் ஏற்கிறார். ஆகையால் இம்மெய்ம்மையை அறிந்து அறிவுடையரானாலும் தவம் செய்ய ஈடுபாடு கொள்ள வேண்டும். அறிவால் மட்டும் முத்தி அமையாது. ஆகமங்களை அறிந்தால் மட்டும் போதாது. அது சுட்டும் தவத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்பதாம்.

'மாண்டவர் மாண்ட வினைபெறுப, வேண்டாதார்,
வேண்டா வினையும் பெறுபவே - யாண்டும்
பிறப்பார் பிறப்பார் அறன்இன் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்'

என அறிவின் மாட்சியையும் தவத்தின் சிறப்பையும் சுட்டும் நான்மணிக்கடிகை[36] (மாண்டவர்-அறிவில் மாட்சிமைப்பட்டவர்.)

61 பாஹிர லிங்கேண ஜுதோ அப்பந்தர லிங்கரஹிய பரியம்மோ |
ஸோ ஸகசரித்தபட்டோ மோக்க பஹவிணாஸகோ ஸாஹு ||

36. நான்மணிக்கடிகை

(ப-ரை) ஸாஹூ - எந்த முனிவர், பாஹிர லிங்கேண - புறத்தே ஜிநர் தோற்றம், ஜுதோ - உடையவர், அப்பந்தர லிங்க ரஹிய பரியம்மோ - அகத்தே காண வேண்டிய முனிமை இல்லாதவர், ஸோ - அவர், ஸக சரித்த பட்டோ - தன் ஆன்ம ஒழுக்கத்திலிருந்து இழிந்தவர், மோக்க பஹ - முத்தி நெறியை, விணாஸகோ - அழிப்பவர், எ.று.,

(க-ரை) புறத்தே ஜிநர் தோற்றம் கொண்டு அகத்தே அதற்கு இசைய ஆன்ம அனுபவம் இல்லாத முனிவர் தன் ஆன்ம ஒழுக்கத்தில் இழிந்தவர். அத்துடன் முத்திப் பாதையை அழிப்பவர்.

(வி-ரை) புறத் தோற்றம் மட்டும் உடையவர் அடையும் இழிவைச் சுட்டுகிறார்.

அகத்தே முனிமை உணர்வு உள்ள போது புறத்தே ஜிநர் தோற்றம் அமையும் என்பது ஆகம நெறி. ஆனால் அகத்தே முனிமை பெறாது-துவர்ப்புகள் அற்ற தூய ஆன்மாவைத் துய்க்காது, புறத்தே முனிவர் வடிவம் கொள்பவர் ஆன்ம அனுபவத்தில் வீழ்ச்சி அடைந்தவர். அதே போது அவரது புறத்தோற்றம் போலியாக நின்று ஜிநர் நெறி முத்திப் பாதையை அழிக்கிறது. அவரால் முத்தி நெறி இழிவு அடைகிறது. அதனால் முனிவர் அக ஒழுக்கத்தில்-ஆன்ம ஒழுக்கத்தில்-ஆழ பாவனை செய்ய வேண்டும்.

62 ஸுஹேண பாவிதம் ணாணம் துஹே ஜாதே விணஸ்ஸதி |
தம்ஹா ஜஹாபலம் ஜோஈ அப்பா துக்கேஹி பாவஏ ||

(ப-ரை) ஸுஹேண-சுகமாக, பாவிதம்-பெற்ற, ணாணம்-அறிவு, துஹே ஜாதே-துன்பம் வந்துற்ற போது, விணஸ்ஸதி-பயனற்றுப் போகிறது, தம்ஹா-ஆகையால், ஜோஈ-யோகியர், ஜஹாபலம்-ஆற்றலுக்கு ஏற்ப, துக்கேஹி-துன்பத்தோடு, அப்பா - ஆன்மாவை, பாவ ஏ - தியானிக்க வேண்டும், எ.று.,

(க-ரை) உண்டு சுகமாக இருந்து பெற்ற அறிவு இடையூறுகள் வரும் போது பயனற்றுப் போகின்றது. ஆனால் முனிவர் தபம் முதலானவைத் துன்பம் தருவதாக இருந்தாலும் அதனை ஏற்று தம் ஆற்றலுக்கு ஏற்ப ஆன்ம தியானம் செய்ய வேண்டும்.

(வி-ரை) ஏட்டறிவு பயன்படாது என்கிறார்.

முத்தி நெறியில் ஆகம அறிவு பெறுதல் வேண்டும். அதனை நூல்களைப் படித்து மட்டும் பெறுவது இல்லை. உடன், அந் நூலுள் கூறப்படுள்ள தவம் முதலான ஒழுக்கங்களில் ஒழுகிப் பெறுவதாகும். ஏட்டறிவு என்பது சுகமாக உண்டு உறங்கிப் பெறுவதாகும். அவ்வறிவு ஏதேனும் சிறு இடையூறு வந்தாலும் உதவிக்கு வாராது பயனற்றுப் போகும். ஏனெனில், அறிவு பெறுங்கால் உடல் சுகத்தை நாடும் முனிவர் உண்மையாக மெய்யறிவு பெற முடியாது. அதனால் அந்த ஏட்டறிவு வீணே ஆகும்.

தம் ஆற்றலுக்கு ஏற்ப தவம் முதலான ஒழுக்கங்களைச் செய்யும் போது உடல் துன்பம் வரலாம். என்றாலும், அத் துன்பங்களால் தளர்ச்சியுறாது தன் ஆன்மாவைத் தியானிக்க முடியும். ஆகையால் துன்பத்துக் கிடையே பெறும் அறிவு நன்று என்றார். அதாவது தவமும் அறிவும் ஒன்றாக இணைந்து வர வேண்டும் என்பதாம். இடையூறுகளை வெல்ல அதுவே வழியாகும்.

'தவம் செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆகையுள் பட்டு'
தவமுடையார் ஞானம் பெறுவார் என்பதனை அறிக.[37]

63 **ஆஹாராஸண ணித்தா ஜயம் ச காஊண ஜிணவரமஏண|**
ஜாயவ்வோ ணியஅப்பா ணாஊணம் குருபஸாஏண||

(ப-ரை) ஜிணவரமஏண - ஜிநர் நெறிப்படி, ஆஹாராஸண ணித்தா - உணவு, இருக்கை, உறக்கம் இவை முதலானவற்றை, ஜயம் காஊண - வென்று, ச - மேலும், குருபஸாஏண - குருவின் அருளால், ணிய அப்பா - தன் உயிரை, ணாஊணம் - அறிந்து, ஜாயவ்வோ - தியானிக்க வேண்டும், எ.று.,

(க-ரை) ஜிநர் நெறிப்படி உணவு, இருக்கை, உறக்கம் முதலானவற்றை வென்று, குரு அருளால் உயிர் இயல்பை அறிந்து அதனைத் தியானிக்க வேண்டும்.

(வி-ரை) உடல் சார்ந்தவற்றை வென்று உயிரைத் தியானிக்க வேண்டும் என்கிறார்.

ஆன்ம தியானம் விரும்பும் முனிவர் உணவை மெல்ல மெல்ல குறைக்க வேண்டும். மெல்ல மெல்ல படுத்தல் இருத்தல் நிற்றல் இவற்றில் பயின்று தவத்துக்குரிய இசைவான இருக்கையில் பயிற்சி பெற வேண்டும். உடல் சுகம் காணாது வெல்ல வேண்டும். அதே போன்று மெல்ல மெல்ல உறக்கத்தை வெல்ல வேண்டும். இம் மூன்றையும் வெல்லுதல் முத்தி நெறியில் பயிற்சியால் ஆகும். தீர்த்தங்கர பரமேட்டி உணவு இல்லாமல் ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஒரே நிலையில் இருக்கின்றனர். உறக்கமும் இல்லை. இவை எல்லாம் வெல்ல முடியும் என அறிதல் வேண்டும்.

இப்படி வென்று குரு அருளால் உரைக்கப்பட்ட உயிர் இயல்பை உணர்ந்து அதனைத் தியானிக்க வேண்டும். ஏனெனில், ஆன்ம ஞானி குருவின் அனுபவப்பட்ட வழிகாட்டலில் முனிவர் ஆன்மாவின் உண்மையை அறிய முடியும். எனவே குருவின் அருள் வேண்டும் என்றார். எனவே ஜிநர் நெறியில் எவ்வாறு ஆன்மாவின் இயல்பு, தியான இயல்பு, உணவு, இருக்கை, உறக்கம் இவற்றை வெல்லல் கூறப்பட்டுள்ளன அவ்வாறே அறிந்து அதில் நிகழ்ந்து முத்தி பெற வேண்டும் என்பதாம்.

37. ந

'அரியது திருவறம் அல்லது இல்லையேல்
மருவிய திருவறம் ஒருவி மன்னனாய்
உருகெழு முடிகவித்து உலகம் ஆள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக்கு ஈவதே' [38]

64 அப்பா சரித்த வந்தோ தம்ஸணணாணேண ஸஞ்ஜுதோ அப்பா |
ஸோ ஜாயவ்வோ ணிச்சம் ணாஊணம் குருபஸாஏண ||

(ப-ரை) அப்பா - ஆன்மா, சரித்தவந்தோ - நல்லொழுக்கம் உடையது, அப்பா - ஆன்மா, தம்ஸண ணாணேண - நற்காட்சி நல்லறிவோடு, ஸஞ்ஜுதோ - கூடியது, குருபஸாஏண - குரு அருளால், ணாஊணம் - அறிந்து, ணிச்சம் - எப்போதும், ஸோ - அது, ஜாயவ்வோ - தியானிக்கப்பட வேண்டும், எ.று.,

(க-ரை) மும்மணி வடிவமானது ஆன்மா. குரு அருளால் அதனை அறிந்து எப்போதும் அதனை தியானிக்க வேண்டும்.

(வி-ரை) குரவர் வழி காட்டுதலில் ஆன்மாவைத் தியானிக்க வேண்டும் என்கிறார்.

ஆன்மா நல் காட்சி நல்லறிவு நல்லொழுக்க வடிவ மாகும். ஏனெனில் அது பார்த்தலும் அறிதலும் மட்டும் உடையது. அந் நிகழ்வில் நிகழ்வது. அதனால் மும்மணி வடிவம் என்றார். அம் மும்மணி வடிவ ஆன்மாவை அனுபவம் செய்யும் குரு அருளாளே அறிய முடியம். அதனால் அவர் வழி அறிந்து என்றார். அந்த ஆன்மாவை இடைவிடாது தியானிக்க வேண்டும். ஏனெனில் அந்தத் தியானமே ஆன்மாவை பரமான்மாவாக ஆக்குகிறது.

தியானம் எல்லாரும் செய்கின்றனர். ஆனால் தியானப் பொருள் இயல்பு அறியாமலே செய்கின்றனர். அதனால் தியானப் பொருள் இயல்பை அறிந்து-குரு அருளால் அறிந்து-தியானிக்க வேண்டும் என்கிறார்.

'பரித்த மலர்ப்பதத் தார்உருக் கொண்டுபைந் தோலும் நஞ்சும்
உரித்துமிழ் சற்பம் எனத்துற வார்தொண்டர் ஓங்குலகை
அரித்தும் அளித்தும் அழிப்பவர் ஆத்தர்என்று ஆபரணம்
தரித்தும் உடுத்தும் தவம்செய்கு வார்ஒத்து அவம் செய்வரே'

என தியானப் பொருளைத் தெளியாது செய்யும் தவத்தைக் காட்டுவார்.[39]

65 துக்கே ணஜ்ஜஇ அப்பா அப்பா ணாஊண பாவணா துக்கம் |
பாவிய ஸஹாவ புரிஸோ விஸயேஸு விரச்சஏ துக்கம்||

38. மேருமந்தர புராணம் - 118
39. திருநூற்றந்தாதி - 16

(ப-ரை) அப்பா - ஆன்மா, துக்கே - மிக வருந்தி (உழைத்து), ணஜ்ஜஇ - அறியப்படுகிறது, அப்பா - ஆன்மாவை, ணாஊண - அறிந்தும், துக்கம் - மிக வருந்தி (உழைத்து), பாவணா - நினைக்கப்படுகிறது, பாவிய ஸஹாவ புரிஸோ - ஆன்மாவை அறிந்து இயல்பை நினைப்பவர், துக்கம் - மிக வருந்தி (உழைத்து) விஸயேஸு - புலனாசைகளிலிருந்து, விரச்சஏ - விடுபடுகிறார், எ.று.,

(க-ரை) ஆன்மாவை அறிதலும் அரிது. அதனை நினைத்தலும் அரிது. அறிபவர் புலன்கள் வேட்கையிலிருந்து விடுபடுதல் அரிதிலும் அரிது. இவற்றை மிக முயற்சித்தே பெற வேண்டி உள்ளது,

(வி-ரை) ஆன்மாவை அரிதாகவே பெற முடிகிறது / துய்க்க முடிகிறது என்கிறார்.

மூன்று செய்திகளை இங்கே காட்டுகிறார். முதலில் ஆன்மாவை உள்ளவாறு அறிதல் அரிது; மிகத் துன்புற்றே அறிய வேண்டி உள்ளது. ஆன்மா உள்ளது நிலையானது எனும் அறிவு பெறுதல் அவ்வளவு எளிதன்று. அப்படி அறிந்தாலும் அதனை எண்ணுதல், நினைத்தல், தியானித்தல் அரிதாகும். மிகத் துன்புற்றே அதனைச் செய்ய வேண்டி உள்ளது. ஒருவேளை அவ் விரண்டும் கைகூடினாலும் ஐம்புல வேட்கையிலிருந்து தியானி விடுபடுதல் அரிதினும் அரிதாகும்.

‘வினையினது எழுச்சி தன்னால்
வேதனை வசத்த னாகி
முனியவன் தனியன் ஆகி’

என முனிவர் காமத்துக்கு வயப்பட்ட காட்சியைக் காட்டுவார்.[40]

66 தாம ண ணஜ்ஜஇ அப்பா விஸஏஸு ணரோ பவட்டஏ ஜாம |
விஸஏ விரத்த சித்தோ ஜோஈ ஜாணேஇ அப்பாணம் ||

(ப-ரை) ஜாம - எதுவரை, ணரோ - ஒருவர், விஸஏஸு - ஐம்புல இன்பத்தில், பவட்ட ஏ - ஈடுபடுகிறார், தாம - அதுவரை, அப்பா - ஆன்மாவை, ண ணஜ்ஜஇ - அறிவது இலர், ஜோஈ - யோகியர், விஸஏ - ஐம்புல இன்பத்தில், விரத்த சித்தோ - விலகிய எண்ணமுடையவராகி, அப்பாணம் - ஆன்மாவை, ஜாணே இ - அறிகிறார், எ.று.,

(க-ரை) ஒருவர் ஐம்புல இன்பத்தில் ஈடுபடும் வரை ஆன்மாவை அறிய மாட்டார். அதனால் முனிவர் ஐம்புல இன்ப நோக்கம் விட்டு ஆன்மாவை அறிகிறார்.

(வி-ரை) புலனின்ப உணர்வுடையார் உயிரை உணரார் என்கிறார்.

40. மேருமந்தர புராணம் - 855.

புலன் இன்ப உணர்வு கசாயம் ஆகும். அந்த உணர்வு ஆன்மாவின் திரிபு (விபாவ) நிலையாகும். அத் திரிபு நிலையில் அறிவு செல்லும் வரை ஒருவர் தன் உயிர் இயல்பை அறிய முடியாது. ஏனெனில், தன்னை அறிதல் என்பது இயல்பு (சுபாவ) நிலையாகும். சுபாவமும் விபாவமும் ஒருசேர இருத்தல் இயலாது. உயிர் உண்மையில் அறிவு மயமாகும். அது பொருள்கள் எப்படி உள்ளனவோ அப்படியே அறிவதாகும். அதனால், ஆசாரியர், புலனின்பத்தில் சிந்தனை உள்ள வரை அதன் வழிப்படுவது அல்லது ஆன்மாவை அனுபவம் செய்ய முடியாது என்றார். எனவே முனிவர் புலன் இன்பம் விட்டு உயிரில் உபயோகத்தைச் செலுத்தி உயிரை அறிய / அனுபவம் செய்ய அறிவுறுத்துகிறார்.

'மதியினால் ஆர்வம் செற்றம்
மயக்கத்தான் வினைஅ வற்றால்
கதிகளுள் கழுமக் காயம்
ஆறிலொன் றாம்அக் காயம்
பொதியஐம் பொறியை ஆக்கும்
பொறிகளால் புலத்தை மேவி
விதியினாம் வேட்கை செற்றம்
மீட்டும்அச் சுழறி யாமே'

'பரியட்டம் இதனை வெல்வார்
பான்மையர் பான்மை இல்லார்
திரிவட்டம் போல நான்கு
கதிகளுள் திரிவர் என்னக்
கிரியட்ட இறைமை தன்னைக்
கிரணவே கன்கண் வைத்துப்
பொறியொக்கப் போகம் விட்டுப்
புரவலன் முனிவன் ஆனான்'

என புலன்களால் ஆம் கேடும், அவற்றை விட்டவனே முனிவன் ஆவான் எனவும் உரைத்தமை காண்க.[41]

67 அப்பா ணாஊன ணரா கேஈ ஸப்பாவ பாவபப்பட்டா |
ஹிண்டந்தி சாஉரங்கம் விஸஏஸு விமோஹியா மூடா ||

(ப-ரை) ணரா கே ஈ - மனிதர் சிலர், அப்பா - ஆன்மாவை, ணாஊண - அறிந்தும், ஸப்பாவ - தம் இயல்பால், பாவ - ஆன்ம பாவனையில், பப்பட்டா - மிக

41. மேருமந்தர புராணம் - 616, 617

இழிந்து, விஸஏஸு - புலன் இன்பங்களில், விமோஹியா - மயங்கிய, மூடா - அஞ்ஞானிகள், சாஉரங்கம் - நாற்பிறவியில், ஹிண்டந்தி - உழலுகின்றனர், எ.று.,

(க-ரை) ஆன்மாவை அறிந்து வைத்தும் அஞ்ஞானியர் புலன் இன்பங்களில் மயங்கி நாற் பிறவியில் நலிகின்றனர்.

(வி-ரை) புலன் இன்பத்தில் மயங்கும் பேதமையைக் கண்டிக்கிறார்.

புலன் இன்பங்களை விட்டு ஆன்மாவை அறிந்து, நினைந்து அடைய வேண்டும் என முன்னே குறிப்பிட்டார். புலனின்ப நாட்டம் போதலின் அருமையையும் சுட்டினார். ஆனால் இங்கே ஆன்ம இயல்பை அறிந்து வைத்தும் புலன் இன்பங்களில் மயங்கும் பேதமையை எடுத்துக் காட்டுகிறார். ஆன்மாவை அறிந்த பின்பும் என்கிறார். எனவே அவ் வறிவு கேள்வி அறிவாக / நூலறிவாக மட்டுமே உள்ளது என்றாகிறது. அவ் வறிவு வழி ஆன்மாவில் ஒழுக வில்லை. காரணம் புலன் இன்ப வேட்கையே. இவ் வேட்கை பிறவிகள் தோறும் தொடர்ந்து வருவதாகும். அதன் பதிவு உயிரில் உள்ளது. அதனை அழிக்காது அதன் வழிப்படூஉம் அறியாமையைச் சுட்ட ‘மூடா‘ என்றார். ஏட்டுக் கல்வி ஏட்டுக் கல்வியாக நிறுத்தியவனை வேறு எப்படிச் சுட்டுவது? ஆசாரியர் அருளோடு ஆன்மாவை அறிந்தும் மூடனாக உள்ள பேதமையைச் சுட்டிக் காட்டி ‘ஆன்மா அறிந்த வழியில் செல்க; புலன்கள் வழியை விடுக’ என அறிவுறுத்துகிறார்.

68 ஜே புண விஸயவிரத்தா அப்பா ணாஊண பாவணாஸஹியா |
சண்டந்தி சாஉரங்கம் தவகுண ஜுத்தா ண ஸந்தேஹோ ||

(ப-ரை) புண - மேலும், ஜே - எவர், விஸய விரத்தா - புலன் இன்பம் விட்டு இருக்கிறார், அப்பா - ஆன்மாவை, ணாஊண - அறிந்து, பாவணா - ஆன்ம நினைவோடு, ஸஹியா - கூடியிருக்கிறார், தவ - தவ குணங்களோடும், குண - மூல குணங்களோடும், ஜுத்தா - கூடி இருக்கிறார், (அவர்) சாஉரங்கம் - நாற் பிறவியை, சண்டந்தி - கடக்கிறார், ண ஸந்தேஹோ - இதில் ஐயம் இல்லை, எ.று.,

(க-ரை) புலன் இன்பம் விட்டு ஆன்மாவை நினைந்து அனுபவித்து, தவம் செய்யும், மூல குணங்களோடு கூடிய முனிவர் நாற் பிறவியைக் கடக்கின்றனர்; இதில் ஐயம் இல்லை.

(வி-ரை) புலனின்பம் விட்டவரே பேரின்பம் அடைகிறார் என்கிறார்.

ஆன்மாவை அறிதலும் அதில் தோய்தலும் நாற் பிறவியைக் கடக்க வழி ஆகும். முனிவர் இருபத்தெட்டு மூல குணங்களை உடையவர். பன்னிரண்டு தவங்களில் பயில்பவர். புலன் இன்பங்களைப் புறங் கண்ட முனிவரே இவற்றைச் செய்ய முடியும். ஏனெனில் புலன் இன்ப உணர்வு கசாய உணர்வு ஆகும். அது இல்லாத போதே ஆன்மாவை அனுபவம் செய்ய முடியும். அதனால் புலன் இன்பம் விடுதல் தவ மாகும்.

மூல குணமும் உத்தர குணங்களும் சிறப்புடன் விளங்கும் முனிவரே இவற்றைச் செய்ய முடியும் என்பதாம். அவரே நாற் பிறவி ஒழித்துப் பேரின்பம் (முத்தி) அடைகிறார்.

‘சமைதமம் சாந்தி காந்தி
தயாமலிந்து யாக்கை நோக்கி
அமைவரும் தொழிலர் அன்றி
அச்சங்கள் ஏழும் அகற்றி
நமர்பிறர் என்பது இன்றி
ஒழிதல்மா தவம்இ தாமே’

என தவச் சிறப்பைச் சொல்லுவர்.[42]

69 பரமாணு பமாணம் வா பரதவ்வே ரதி ஹவேதி மோஹாதோ |
ஸோ மூடோ அண்ணாணீ ஆதஸஹாவஸ்ஸ விவரீஓ ||

(ப-ரை) பரமாணு பமாணம் வா - பரமாணு அளவும், பர தவ்வே - பிற பொருளில், மோஹாதோ - மயக்கத்தால், ரதி - ஆர்வம், ஹவேதி - உடையவர், ஸோ - அவர், மூடோ - மூடர், அண்ணாணீ - அஞ்ஞானி, ஆத - ஆன்ம, ஸஹாவஸ்ஸ - இயல்பிலிருந்து, விவரீஓ - எதிரானவர், எ.று.,

(க-ரை) பரமாணு அளவும் பிற பொருள் ஆர்வம் உடையவர் மூடர், அஞ்ஞானி, ஆன்ம இயல்பிலிருந்து விலகியவர் ஆவார்.

(வி-ரை) பிற பொருள் ஆர்வம் அணு அளவும் ஆகாது என்கிறார்.

தன்னையும் பிறிதையும் அறிதலே நல்லறிவு-மெய்யுணர்வு உடைமை ஆகும். அப்போது பிற பொருளில் ஆர்வம் தோன்றாது. இல்லெனில் அம் மெய்யுணர்வு இல்லாதவர் மூடர், அஞ்ஞானி ஆவார். ஆன்ம இயல்புக்கு எதிரான போக்குடையவர் மெய்யுணர்வு தோன்றிய பிறகும் சாரித்திர மோகனீய உணர்வு உதயம் ஆவது உண்டு. அது உள்ள வரை வினைக்கட்டு உண்டு. அதனால் அவ் ஆர்வத்தில்-சாரித்திர மோக உணர்வில்-ஆர்வம் இன்றி நிகழும் போது பர பொருள் ஆர்வம் இல்லாதவர் ஆகிறார் என அறிதல் வேண்டும். மூடம்-பிடித்ததை விடாமை; அஞ்ஞானம்-உண்மையைத் தெளியாமை.

‘ஆர்வத்தால் ஒருவன் ஆனை
ஆயினான் ஒருவன் நின்ற
வேரத்தால் நரகத்து அழிந்தான்
விளம்பிய விலார்கள் இன்ப

42. மேருமந்தர புராணம் - 801

பாரத்தை முடியச் சென்றார்
பன்னகர்க்கு இறைவ பாராய் !
ஆர்வம் செற் றங்கள் இன்றி
பகைநமக்கு இல்லை கண்டாய்'

என ஆர்வமும் செற்றமும் ஆன்மாவுக்குப் பகை என்பார்.[43]

'அருந்தவம் தாங்கி மேரு
அனையவர்க்கு ஏலும் ஆசை
துரும்பிடைத் தோன்ற மேனும்
துகளினும் சிறியர் ஆவர்
அருந்தவன் இவனில் கண்டாம்
ஆசை இல்லாமை அன்றோ
பெருந்தவம் ஆதல் அன்றேல்
பிறவிவித்து உலர்த்தல் அன்றோ'

என மேரு அன்ன தவம் உடையாரும் தூசு அன்ன ஆர்வம் கொள்வார் எனில் துகள் அனையர் ஆவர் எனச் சுட்டுதல் காண்க.[44]

70 அப்பா ஜாயந்தாணம் தம்ஸண ஸுத்தீண திட சரித்தாணம் |
ஹோதி துவம் ணிவ்வாணம் விஸஏஸு விரத்த சித்தாணம் ||

(ப-ரை) விஸஏஸு - புலனின்பத்திலிருந்து, விரத்த - விலகிய, சித்தாணம் - சிந்தையும், அப்பா - ஆன்ம, ஜாயந்தாணம் - தியானமும், தம்ஸண ஸுத்தீண - தூய காட்சியும், திட - உறுதியான, சரித்தாணம் - ஒழுக்கமும் உடைய முனிவருக்கு, துவம் - உறுதியாக, ணிவ்வாணம் - வீடுபேறு, ஹோதி - ஆகிறது. எ.று.

(க-ரை) புலனின்ப நாட்டம் இல்லாத சிந்தையும், ஆன்ம தியானமும், தூய காட்சியும், உறுதியான ஒழுக்கமும் உடைய முனிவர் உறுதியாக வீடுபேறு அடைகிறார்.

(வி-ரை) வீடுபேறு பெறும் முனிவர் இயல்பு கூறுகிறார்.

ஆன்மத் துய்ப்பு நாடும் முனிவருக்கு மூன்று ஒழுக்கங்கள் முதன்மையானவை என தெரிவிக்கிறார். தூய நற்காட்சி வேண்டும். நம்பிக்கையில் தடுமாற்றம் கூடாது. நம்பிக்கை மலினமானால் அறிவும் ஒழுக்கமும் மலினமாகும். அதனால் நம்பிக்கை தூயதாக இருக்க வேண்டும்.

43. மேருமந்தர புராணம் - 890.
44. மேருமந்தர புராணம் - 135.

நம்பிக்கை தூய்மையானால் தனது-பிறிது எனும் மெய்யறிவு விளக்கம் பெறும். அதனால் புறப் பொருள் நோக்கும் புன்மை நேராது. அதனால் புலனின்ப குறி இராது. இவை அமையும் போது அகப் புற ஒழுக்கங்கள் உறுதி பெறும். எனவே இம் மூன்றும் உடையார்-மும்மணி-உடையார்-ஆவார். அம் முனிவர் முத்தி பெறுதல் உறுதியாம்.

நின்னை அறப்பெறு கிற்கிலேன் நல்நெஞ்சே னு
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்? நின்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன்மற்று ஈண்டே
துறக்கம் திறப்பதோர் தாள்

என தன்னுயிரைப் பெறுவார் துறக்கம் புகுவார் என்பது காண்க.[45]

71 ஜேண ராகோ பரே தவ்வே ஸம்ஸாரஸ்ஸ ஹி காரணம் |
தேணாவி ஜோஇணோ ணிச்சம் குஜ்ஜா அப்பே ஸபாவணம் ||

(ப-ரை) பரே தவ்வே - புறப்பொருளில், ஜேணராகோ - எதனால் ஆர்வம் தோன்றுகிறதோ, அது, ஸம்ஸாரஸ்ஸ ஹி - பிறவிக்கே, காரணம் - காரணமாம், தேணாவி - அதனாலே, ஜோ இணோ - யோகியர், ணிச்சம் - எப்போதும், அப்பே - ஆன்மாவின், ஸபாவணம் - இயல்பில் நினைவு கொள்ளலை, குஜ்ஜா - செய்கிறார், எ.று.

(க-ரை) புறப் பொருளில் ஆர்வம் செல்ல காரணமானது பிறவிக்குக் காரணம் ஆகும். அதனால் முனிவர் எப்போதும் ஆன்ம இயல்பை நினைவில் கொள்கிறார்.

(வி-ரை) பிறவிக்கும் பிற பொருள் வேட்கைக்கும் காரணம் ஒன்றே என்கிறார்.

தனது-பிறிது எனும் மெய்யுணர்வு இன்மையே புறப் பொருள் மேல் ஆர்வம் செல்ல காரணம். பிறவிக்கும் அதுவே காரணம். எனவே ஆசாரியர் மெய்யுணர்வு உள்ள முனிவர் தன்னை அறிவதால் எப்போதும் தன் ஆன்மாவை நினைக்கிறார்-தியானிக்கிறார் என்றார். ஆர்வ உணர்வால் கருமம் கட்டுகிறது என்பது ஜிநர் ஆகம உரையாகும். அதன் உதயம் பிறவிக்கு ஏது வாகும். அதனால் ஆர்வம் ஒழித்து முனிவர் ஆன்மாவில் எப்போதும் ஆழ்கிறார்.

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து[46]

72 ணிந்தாஏ ய பஸம்ஸாஏ துக்கே ய ஸுஹஏஸு ய |
ஸத்தூணம் சேவ பந்தூணம் சாரித்தம் ஸமபாவதோ ||

---

45. அறநெறிச்சாரம் - 191
46. திருக்குறள் - 353

(ப-ரை) ணிந்தா ஏ - இகழ்ச்சியிலும், ய - மற்றும், பஸம்ஸாஏ - புகழ்ச்சியிலும், ய - மேலும், துக்கே - துன்பத்திலும், ய - மற்றும், ஸுஹஏஸு - இன்பத்திலும், ஸத்தூணம் - பகையிலும், சேவ - மற்றும், பந்தூணம் - உறவிலும், ஸம பாவதோ - ஒத்த உணர்வு கொள்ளவே, சாரித்தம் - நல்லொழுக்கம் ஆகிறது, எ.று.,

(க-ரை) இகழ்விலும் புகழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும், பகையிலும் உறவிலும் ஒத்த உணர்வு கொள்ளுதலால் சாரித்திரம் அமைகிறது.

(வி-ரை) சாரித்திரம் அமைய காரணம் காட்டுகிறார்.

நல்லொழுக்கம் (சாரித்திரம்) என்பது உயிர் தன் இயல்பில் நிகழ்தல் என்பர். ஆனால் ஆன்ம இயல்பு வினைத் தொடர்பால் திரிபு அடைகிறது. அறிவு புறப் பொருளில் விருப்பு வெறுப்பு கொள்கிறது. அத்திரிபு நிலை இல்லை என்றால் அறிவு தன் இயல்பில் நிகழும். அதனை ' சுத்த உபயோகம் ' என்பர். அதுவே சாரித்திரம் ஆகும். இங்கே சுட்டப் பட்டுள்ள இகழ்ச்சி-புகழ்ச்சி, இன்பம்-துன்பம், பகை-உறவு முதலானவை மோக வினை உதயம் நிமித்தமாகத் தோன்றுவன. இந்த மோக வினை அற்றுப் போதலே சுத்த உபயோக வடிவ சாரித்திரம் ஆகும். அதனால் முனிவர் தன் இயல்பு நோக்கி நிகழ வேண்டும் என்பதனையே இந்த காதையில் சுட்டுகிறார்.

'ஆர்வமும் செற்றமும் மயக்கம் இன்மையால்
ஆருயிர்க்கு உறுதிஅல் லாத சொல்லிலார்
ஓர்விடத்து ஒருவிய புலத்தில் மீட்டுளம்
சோர்விடத் தும்செலாத் தூயர் ஆயினார்'

என ஆன்ம தூய்மையை விளக்குவார்.[47]

'ஆர்வமும் செற்றமும் நீக்கி அடங்குதல்
சீர்பெறு வீட்டு நெறியென்ப'

என்பார் அறநெறிச் சாரம் உடையார்.[48]

73 சரியாவரியா வதஸமிதி வஜ்ஜியா ஸுத்தபாவ பப்பட்டா |
கே ஈ ஜம்பந்தி ணரா ண ஹு காலோ ஜாண ஜோயஸ்ஸ ||

(ப-ரை) சரியாவரியா - (சாரித்திர மோக வினையால்) நல்லொழுக்கம் மூடப்பட்டு, வத ஸமிதி வஜ்ஜியா - நோன்பு சமிதிகளை விட்டு, ஸுத்த பாவ - தூய உணர்விலிருந்து, பப்பட்டா - இழிந்து உள்ள, கேஈ ணரா - மனிதர், காலோ - இந்தக்காலம், ஜாண ஜோயஸ்ஸ - தியானத்துக்குத் தக்கது, ணஹு - உறுதியாக இல்லை என்று, ஜம்பந்தி - முணுமுணுக்கின்றனர், எ.று.

47. மேருமந்தர புராணம் - 1360.
48. அறநெறிச்சாரம் - 166.

(க-ரை) நல்லொழுக்கம் தடைப்பட்டு, நோன்பு சமிதிகளில் தளர்வுற்று, ஆன்ம நினைவி லிருந்து இழிந்துள்ளவர் இந்தக் காலம் தியானம் செய்ய தக்கது அன்று என முணுமுணுக்கின்றனர்.

(வி-ரை) இந்தக் காலத்தில் ஆன்ம தியானம் செய்ய முடியாது என உரைப்போர் உளர் என்கிறார்.

இது ஐந்தாம் காலம். இங்கு வீடுபேறு அடைய முடியாது. அதனால் தியானம் செய்ய பொருத்தமான காலம் அன்று என சிலர் கூறுகின்றனர். அப்படிச் சொல்பவர் யார்? சாரித்திர மோகனீய வினை உதயம் மிகுந்துள்ளதால் பெரு நோன்பினை, ஐந்து சமிதிகளைப் போற்ற முடிய வில்லை. அதனால் ஆன்ம இயல்பு நினைவிலிருந்தும் இழிந்துள்ள மனிதர் கூற்று இது என்கிறார். வீட்டு நெறியில் செல்ல காலமோ இடமோ தடை ஆக முடியாது. ஏனெனில் அது ஆன்ம சாதனை ஆகும், ஆனால் வினை உதயம் தூக்கலாக உள்ள போது அறிவு வினை வழிப்பட்டு நல்லொழுக்க செயல்களிலிருந்து இழிகிறது. இது அந்த ஆன்மாவின் வலிவற்ற தன்மையே தவிர காலம் காரணம் அன்று. தன்தன் ஆற்றலுக்கு ஏற்ப-எந்தக் காலத்திலும் ஆன்ம சாதனை செய்ய முடியும் / செய்ய வேண்டும் என்பதாம்.

இங்குச் சுட்டப்பட்டுள்ள மனிதர் புறவய ஆன்மா (பஹிரங்க ஆத்மா) என எண்ண வேண்டி உள்ளது.

74 ஸம்மத்தணாண ரஹிஓ அபவ்வ ஜீவோ ஹு மோக்கபரிமுக்கோ |
ஸஸாரஸுஹே ஸுரதோ ண ஹு காலோ பணஇ ஜாணஸ்ஸ ||

(ப-ரை) ஸம்மத்த ணாண ரஹிஓ - நற்காட்சி, நல்லறிவு இல்லாதவர், அபவ்வ ஜீவோ - அபவ்வியர், ஹ - உறுதியாக, மோக்க பரிமுக்கோ - முத்தி இல்லாதவர், ஸம்ஸார ஸுஹே - பிறவிச்சுகத்தில், ஸுரதோ - நன்கு திளைப்பவர், ஜாணஸ்ஸ - தியானத்துக்கு, ண ஹு காலோ - இது காலம் இல்லை, பணஇ - என்கிறார், எ.று.,

(க-ரை) காட்சியும் அறிவும் இல்லாதவர் அபவ்வியர். முத்தி இல்லாதவர். பிறவிச் சுகத்தில் ஆழ்ந்து கிடப்பவர். தியானத்துக்கு இது காலம் இல்லை என்று அவர் சொல்கிறார்.

(வி-ரை) காலத்தைக் காரணம் காட்டித் துறவை மறுப்பவர் இயல்பைக் காட்டுகிறார்.

ஐம்புல இன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவருக்கு உயிர், உயிரற்றனவற்றில் உண்மையான நம்பிக்கையும் அறிவும் தோன்றாது. அவர்தான் தியானத்துக்கு இது காலம் இல்லை என்கிறார். முத்தியை மறுப்பதால் அவர் அபவ்வியர் என தோன்றுகிறது. அவருக்கு முத்தி கிடைக்காது.

அபவ்வியர் என்பவர் என்றும் முத்திக்குச் செல்ல முடியாதவர். பொய்ம்மை (மித்யாத்துவ) வினை எப்போதும் உதயத்தில் இருக்கும். நற்காட்சி பெறும் ஆற்றல் இல்லாதவர். வேகாத பாசிப் பயிறு போன்றவர். அத்தகையோரே இந்தக் காலத்தில் தியானம் அமையாது என்று கூறுவர். அல்லது அப்படிக் கூறுபவர் அபவ்வியரை ஒத்தவர் என்பதாம்.

75 பஞ்சஸு மஹவ்வதேஸு ய பஞ்சஸு ஸமிதீஸு தீஸு குத்தீஸு |
ஜோ மூடோ அண்ணாணீ ணஹு காலோ பண இ ஜாணஸ்ஸ ||

(ப-ரை) பஞ்சஸு - ஐந்து, மஹவ்வதேஸு - மாவிரதங்கள், ய - மற்றும், பஞ்சஸு - ஐந்து, ஸமிதீஸு - சமிதிகள், தீஸு - மூன்று, குத்தீஸு - குத்திகள், இவற்றில், ஜோ மூடோ - மூடனாக இருப்பவர், அண்ணாணீ - அஞ்ஞானி, அவர், ஜாணஸ்ஸ - தியானத்திக்கு, ண ஹ காலோ - இது காலம் இல்லை என்று, பணஇ - சொல்லுகிறார், எ.று.,

(க-ரை) ஐம் பெரு நோன்புகளையும், ஐந்து சமிதிகளையும், மூன்று குத்திகளையும், நன்கு அறியாத மூடர் - அஞ்ஞானி இந்தக் காலம் தியானத்துக்கு உரியது அன்று என்கின்றனர்.

(வி-ரை) இதுவும் அது.

கொலை, பொய், களவு, காமம், பற்று இவ் வைந்து பாபங்களையும் மனம், மொழி, மெய்களாலும், செய்தல், செய்வித்தல், உடன்படுதல்களாலும் விலக்கி ஒழுகுதல் ஐம்பெரு நோன்புகள் ஆகும். வழியில் முன்னே நான்கு முழம்பார்த்து நடக்கும் பயண ஒழுக்கம், நன்மையும் இனிமையும் சுருக்கமுமான மொழியில் பேசும் பேச்சு ஒழுக்கம், 46 குறைகள் இல்லாத தூய உணவை ஏற்கும் உணவு ஒழுக்கம், கமண்டலம் நூல்கள் இவற்றை மயிற்பீலி கொண்டு உயிர் வதை இல்லாமல் ஆளும் எடுத்தல்-வைத்தல் ஒழுக்கம், உயிர்களுக்கு இமிசை நேராத இடத்தில் மலம், சிறுநீர் விடும் விடுகை ஒழுக்கம் இவ் வைந்தும் ஐந்து ‘சமிதி‘ எனப்படும். மனம், மொழி, மெய் மூன்றையும் புறம் போகாது தன் முகம் ஆக்கல் மூன்று குத்தி எனப்படும். இவற்றை ஒழுகுதலில் மூடத்தனம் காட்டுதல் அஞ்ஞானம் ஆகும். சாரித்திர மோக வினையின் உதயம் தூக்கலாக இருக்கும் போது இவ் வொழுக்கங்களை நன்குப் போற்ற முடியாது; இவற்றில் நன்கு ஒழுக முடியாது. இக் குறையுடையோரே இந்தக் காலம் தியானத்துக்கு உரியது அன்று என்பர்.

76 பரஹே துஸ்ஸம காலே தம்மஜ்ஜாணம் ஹவே இ ஸாஸுஸ்ஸ |
தம் அப்ப ஸஹா வட்டிதே ண ஸு மண்ணஇ ஸோ வி அண்ணாணீ ||

(ப-ரை) பரஹே - பரதத்தில், துஸ்ஸம காலே - தீக்காலத்தில், தம் அப்ப ஸஹா - தன் ஆன்ம இயல்பில், வட்டிதே - உறுதியுள்ள, ஸாஸுஸ்ஸ - முனிவருக்கு, தம்மஜ் ஜாணம் - தரும தியானம், ஹவேஇ - இருக்கிறது, ண ஸு மண்ண இ - அதனை ஏற்காதவர், ஸோ வி - அவரே, அண்ணாணீ - அஞ்ஞானி ஆவார், எ.று.,

(க-ரை) இப் பரதத்தில் தீக் காலத்தில் தம் ஆன்ம இயல்பில் உறுதியுள்ள முனிவருக்கு தரும தியானம் இருக்கிறது. அப்படி ஏற்காத அவர் அஞ்ஞானி ஆவார்.

(வி-ரை) ஐந்தாம் காலத்தில் முனிவர் தரும தியானம் செய்கிறார் என்கிறார்.

காலம் இரண்டு பகுதிப்படும், இறங்கு (அவஸர்ப்பிணி) காலம், ஏறு (உத்ஸர்ப்பிணி) காலம் என பரதத்தில் இப்போது நடை பெறுவது இறங்கு காலம் ஆகும். அது நன்னற் காலம், நற்காலம், நல் தீக்காலம், தீ நற்காலம், தீக்காலம், தீத்தீக்காலம் என ஆறு பிரிவுகள் உடையது. இறங்கு காலம் மொத்தம் பத்து கோடா கோடி கடல் காலம் அளவுடையது. அவற்றுள் நன்னற் காலம் நான்கு கோடா கோடி கடல்கள் என்னும் கால அளவு உடையது. அது போல நற் காலம் மூன்று கோடா கோடி கடல், நல் தீக்காலம் இரண்டு கோடா கோடி கடல் கால எல்லை உடையன. இவை மூன்றும் ‘போக பூமி‘ கால மாகும். தீ நற்காலம் 42,000 ஆண்டுகள் குறைந்த கோடா கோடி கடல் அளவினது. தீக் காலம் 21,000 ஆண்டுகளும், தீத்தீக்காலம் 21,000 ஆண்டுகளும் உடையன. இறங்கு காலத்தில் தீ நற்காலத்தில் தீர்த்தங்கரர் தோன்றுவர்; அறம் உரைப்பர். இக் காலத்தே ஆன்ம சாதனை செய்து முத்தி அடைவர். அடுத்து வரும் ஐந்தாம் காலத்தில் தீர்த்தங்கரர் தோன்றுவது இல்லை. ஆனால் ஆன்ம சாதனை செய்ய முடியும். முத்திபோக முடியாது. அதனால் இக் காலத்தில் தியானம் செய்ய முடியாது என்று சொல்லுவர். உண்மை என்னவென்றால் சுக்கில தியானம் இந்தக் காலத்தில் செய்ய முடியாது. ஆனால் தரும தியானம் செய்ய முடியும். நற்காட்சியுடைய முனிவர் ஆன்ம இயல்பில் உறுதியாக இருப்பதால் அவருக்குத் தரும தியானம் உண்டு என்றார். அதாவது முத்தி நோக்கிய தரும தியானம் ஆன்ம சாதனையாக அமைய முடியும். ஆசாரியர் இதனையே சுட்டிக் காட்டி இதனை ஏற்காதவர் அஞ்ஞானி என்றார். ஏனெனில், ஜிநர் ஆகமத்தில் இந்த பரத நிலத்தில் ஐந்தாம் காலத்தில் ஆன்ம பாவனையில் உறுதியுள்ள முனிவர் தரும தியானம் செய்ய முடியும் என்று கூறப்பட்டுள்ளது. இதனை ஏற்காதவர் அஞ்ஞானி. அவர்க்கு தரும தியானத்தின் இயல்பு குறித்து அறிவு இல்லை என்பதாம்.

77 அஜ்ஜ வி திரயண ஸுத்தா அப்பா ஜாஏவி லஹஹிம் இந்தத்தம் |
லோயந்தி ய தேவத்தம் தத்த சுஆ ணிவ்வுந்தி ஜந்தி ||

(ப-ரை) அஜ்ஜ வி - இந்த ஐந்தாம் காலத்திலும், தி ரயண ஸுத்தா - மும்மணி தூய்மையுடைய முனிவர், அப்பா - ஆன்மாவை, ஜாஏவி - தியானித்து, இந்தத்தம் - தேவேந்திர பதவி, லோயந்திய தேவத்தம் - இலௌகாந்திக தேவ நிலை, லஹஹிம் - அடைகிறார், தத்த சுஆ - அங்கிருந்து வந்து, ணிவ்வுந்தி - முத்தியை, ஜந்தி - அடைகிறார், எ.று.

(க-ரை) இந்த ஐந்தாம் காலத்திலும் மும்மணி தூய்மையுடைய முனிவர் ஆன்மாவைத் தியானம் செய்து இந்திர பதவியோ இலௌகாந்திக தேவ நிலையோ அடைந்து அங்கிருந்து வந்து முத்தியை அடைகிறார்.

(வி-ரை) தரும தியானத்தின் பயனை விளக்குகிறார்.

ஐந்தாம் காலத்தில் முத்தி உண்டு என ஆகமம் குறிப்பிடவில்லை. பிறகு தியானம் செய்வதால் என்ன பயன்? வீண் என்று சிலர் கூறுகின்றனர். அவருக்கு விடையாக இந்த காதை அமைந்துள்ளது. முத்தி இல்லை, வெள்ளை (சுக்கில) தியானம் இல்லை என்பது உண்மை. ஆனால் தரும தியானம் இல்லை என்று ஆகமங்கள் கூற வில்லை. இப்போதும், மும்மணியில் தூய்மை உடையவரான முனிவர் தரும தியானத்தில் ஆழ்ந்து ஆன்ம தியானம் செய்ய முடியும் / செய்கின்றனர். அம் முனிவர் இந்திர பதவி அல்லது இலௌகாந்திக தேவப் பிறவி அடைகிறார். அங்கிருந்து வந்து மனிதராகப் பிறந்து வீடுபேறு பெறுகிறார். இப்படித் தரும தியானத்தினால் பரம்பரையில் வீடுபேறு பெற முடிகிறது. அதனால் தியானமே இல்லை என்று சொல்லுதல் உண்மை அன்று. அவ்வாறு தியானம் இல்லை என்று மறுப்பவர் பொய் நம்பிக்கை உடையவர். அவருக்கு உலக இன்பங்களில் நாட்டம் இருக்கிறது. அதனால் அப்படிச் சொல்லுகிறார்.

78 ஜே பாவமோஹியமஈ லிங்கம் தித்தூண ஜிண வரிந்தாணம் |
பாவம் குணந்தி பாவா தே சத்தா மோக்க மக்கம்மி ||

(ப-ரை) ஜே - எவருக்கு, பாவ மோஹிய மஈ - பாபத்தால் மலினமான அறிவு உள்ளது, ஜிணவரிந்தாணம் - முழுதுணர் அறிவர், லிங்கம் - தோற்றம், தித்தூண - ஏற்றும் அவர், பாவம் - பாபத்தை, குணந்தி - செய்கிறார் எனில், தே பாவா - அப் பாபிகள், மோக்க மக்கம்மி - முத்தி நெறியிலிருந்து, சத்தா - இழிந்தவர், எ.று.,

(க-ரை) பாபத்தில் மலிந்த அறிவுடையார் தீர்த்தங்கரர் தோற்றம் ஏற்றும் பாபங்கள் செய்கின்றனர் எனில் அவர் முத்தி நெறியிலிருந்து இழிந்தவர் ஆவர்.

(வி-ரை) முனிவர் தோற்றம் ஏற்றுப் பாபம் செய்பவர் முத்தி நெறியிலிருந்து இழிந்தவர் என்கிறார்.

முனிவர் தோற்றம் முழுதுணர் அறிவர் தோற்றம் ஆகும். அதனை ஏற்ற பின், இந்தக் காலத்தில் தியானம் இயலாது என்றும் அதனைச் செய்வது வீண் என்றும் முயற்சியை விட்டு பாபங்களில் நிகழ்வாரானால் அவர் பாபி ஆவார்; முத்தி நெறியிலிருந்து இழிந்தவர் ஆவார்.

அறிவு மலினமானவர் என்கிறார். முனிவராகி ஆகமம் கூறிய வழியில் தரும தியானம் முதலானவற்றில் நிகழாது ஐந்தாம் காலத்து முத்திக்கான தியானம் இல்லை என்று தியானத்தை விடுதல் கெட்டுப் போன அறிவாகும். அதனால் தனக்கு உரிய ஒழுக்கங்களில் நிகழாது எதிராக நிகழ்வதால் பாபம் செய்கிறார். அவர் பாபி. அவர் முத்தியை அடைய முடியாது.

முனித் தோற்றம் கொண்டு அவ் வுருவுக்கு எதிரான ஒழுக்கத்தில் நிகழ்வது பெரும் பாபமாகும். அதனால் அத்தகையவரைப் பாபி என்றார். அவர் தானும் கெட்டு முத்தி நெறியையும் இழிவு செய்கிறார் என்பதாம். இது எல்லாத் தோற்றத்துக்கும் பொருந்தும். ஆன்ம சாதனையாளர்தான் ஏற்ற நிலைக்கு ஏற்ப ஒழுக வில்லை என்றால் பாபியே ஆவார்.

79 ஜே பஞ்ச சேல ஸத்தா கந்த்தக்காஹீ ய ஜாயணாஸீலா |
ஆதா கம்மம்மி ரயா தே சத்தா மோக்கமக்கம்மி ||

(ப-ரை) ஜே - எவர், பஞ்ச - ஐந்து வகைப்படும், சேல - ஆடையில், ஸத்தா - ஆர்வம் உடையவர், ய - மேலும், கந்த்தக் காஹீ - பற்றுகளை வைத்துக் கொண்டிருப்பவர், ஜாயணா ஸீலா - இரத்தலை இயல்பாக உடையவர், ஆதா கம்மம்மி - இழிவான செயல்களில், ரயா - ஆர்வம் உடையவர், தே - அவர், மோக்க மக்கம்மி - முத்தி நெறியிலிருந்து, சத்தா - இழிந்தவர் ஆவார், எ.று.,

(க-ரை) ஆடையில் ஆர்வம் உடையவர், பற்றுகள் உடையவர், இரக்கும் குண முடையவர், இழிந்த செயல்களில் ஈடுபாடு உடையவர், முத்தி நெறியிலிருந்து இழிந்தவர் ஆவார்.

(வி-ரை) முத்தி நெறியிலிருந்து விலகுவோரைச் சுட்டுகிறார்.

நான்கு செயல்களை இங்குக் குறிப்பிடுகிறார். இச் செயல்களை உடையவர் முத்தி நெறியிலிருந்து விலகியவர் என்கிறார். முனிவராகி, ஐந்தாம் கால நிலை எனக் கருதி, ஒழுக்கத்தைக் காக்க இயலாமல் இழிகிறார். அவரைக் குறிப்பிடுகிறார் எனத் தோன்றுகிறது. முனிவர் இன்று பல தோற்றங்களில் காணப்படுகின்றனர். உடை உடுத்தியவரும் முனிவர் என சுட்டப்படுகிறார். உடை ஐந்து வகைப்படும். பருத்தி ஆடை, பட்டை ஆடை, தோலாடை, மயிராடை, தழை ஆடை. உடை உடுத்துதல் முனிவர் நிலை அன்று. அதனால் எந்த வகையில் உடலை மறைத்தாலும் அவர்

முனிவர் ஆகார். முனிவராகி ஒழுக்கத்துக்கு வேண்டிய கமண்டலம், மயிற்பீலி தவிர பிற பொருள்களை வைத்திருத்தல் பற்றுணர்வுக்கு அடையாள மாகும். பற்றுகள் உடையவர் முனிவர் ஆகார். வேண்டிய பொருளை இரந்து பெறுதல் முனிவர் குணம் அன்று. உணவைக் கூட முனிவர் இரந்து பெறுதல் இல்லை. எனவே ஒன்றை இரத்தல் முனிவர் குண மாகாது. இரத்தல் புலனின்ப வேட்கைக்கு அடையாளமாகும். இழிவான செயல் என்று குறிப்பிடுகிறார். முனிமைக்கு ஒவ்வாத செயல்கள் அனைத்துமே இழிவான செயல்கள்தாம். இவை எல்லாம் காலத்தால் ஏற்பட்டவை என்று சொல்லி ஒழுகுபவர் முத்தி நெறியிலிருந்து விலகியவர் ஆவார். ஆசாரியருடைய காலத்திலே முனிவர்தம் தோற்றத்தில், ஒழுக்கத்தில் சிதைவு காணப்பட்டுள்ளது என்பதனை இந்த காதை வழி அறிய முடிகிறது. தற்காலத்து முனிவர் நிலை பற்றி என்ன சொல்ல முடியும்? முனிவர் பெயரில் எத்தனை தோற்றங்கள்? எத்தனை ஒழுக்க வழுக்கல்கள்? பகவானே அறிவார்.

80 ணிக்கந்த மோஹமுக்கா பாபீஸபரீஸஹா ஜியகஸாய |
பாவாரம்ப விமுக்கா தே கஹியா மோக்க மக்கம்மி ||

(ப-ரை) ணிக்கந்த - பற்றுகள் இல்லாதவர், மோஹமுக்கா - மயக்கம் இல்லாதவர், பாபீஸ - இருபத்திரண்டு, பரீஸஹா - இடையூறுகளைப் பொறுத்தவர், ஜிய கஸாயா - துவர்ப்புகளை வென்றவர், பாவாரம்ப - பாபத்தொழில்களை, விமுக்கா - விட்டவர், தே - அவரே, மோக்க மக்கம்மி - முத்தி நெறியினர், கஹியா - எனப்படுகிறார், எ.று.,

(க-ரை) பற்று இல்லாத, மயக்கம் இல்லாத, இடையூறுகளை வென்ற, துவர்ப்புகள் இல்லாத, பாபத் தொழில் செய்யாத முனிவரே முத்தி நெறியினர் ஆவார்.

(வி-ரை) முத்தி நெறிச் செல்லும் முனிவர் குண நலன்களைக் கூறுகிறார்.

முனிவர் உலகத் தொடர்புகளிலிருந்து விலகியவர் தம் உயிரில் தலைவரம்பான தூய்மையை அடைய முயற்சிப்பவர். அதனால் தம் உயிரை நோக்குபவர். அவர் உலக இடையூறுகள் தொழில்கள் இல்லாதவர். முத்தி நெறி என்பது அகப்பற்றும் புறப்பற்றும் இல்லாத நெறி என்று முழுதுணர் அறிவர் அருளியுள்ளார். அந்த அருளுரை வழி ஒழுகுபவரே முத்தி நெறியினர் ஆவார்; பிறர் அல்லர்.

பற்று புறப்பொருள் மீது செல்லும் ஆர்வம். அது காரணமாக உயிரில் தோன்றும் உணர்வுகள் அத்தனையும் அகப்பற்றுகள் ஆகும். என்றாலும் அதனைப் பதினான்கு வகையுள் அடக்குவர். அவ்வுணர்வுகளுக்கு ஏதுவான புறப் பொருள்களைப் பத்து வகையுள் அடக்குவர். மயக்கம் என்பது மோகமாகும். பிற பொருளைத் தனதாகக்

கருதுதல் மயக்கமாகும்.‘ பரீஷகம்’ என்பது இடையூறுகள் உடலில் துன்பம் தருவன; உள்ளத்தில் துன்பம் தருவன என இருவகையாகும், அது.

‘வெப்பமொடு தட்பம் கடிப்பன குத்துவ
வித்திவ தையலை புல்ஊறு மிக்க
சிறப்புமுறை பாட்டொடுமெய்ம் மாசு தரித்தல்
புறப்பரிசை புல்லியவாம் பத்து’

எனவும்,

‘பசிபேறு நீர்த்தாபம் சோலைமே வாமை
ஒசியும் நோய்கோள் பிறவாமை யோகுற்று
இருத்தல் கிடத்தல் அறிவுகாண்பு இன்மை
அகப்பரிசை ஆறிரண்டாம் நற்கு’

என 22 இடையூறுகளை அகப் பரிசை, புறப்பரிசை என வகைப்படுத்துதலைக் காணலாம்.[49] மேருமந்தரத்தார் புறப் பரிசை ஒன்பது என்றும், அகப் பரிசை பதின்மூன்று என்றும் குறிப்பார்.[50]

81 உத்தத்த மஜ்ஜலோயே கோ மஜ்ஜம் ண அஹயமேகாகி |
இய பாவணாஏ ஜோ பாவந்தி ஹு ஸாஸயம் ஸோக்கம் ||

(ப-ரை) உத்தத்த மஜ்ஜ - மேல், கீழ், நடு, லோயே - உலகம் மூன்றிலும், கோ - ஏதொன்றும், மஜ்ஜம் ண -எனது இல்லை, அஹம் - நான், ஏகாகி - தனியன், இய - என இவ்வாறு, பாவணாஏ - பாவனை / சிந்தனை செய்வதால், ஜோ - யோகியர் (முனிவர்), ஹு - உறுதியாக, ஸாஸயம் - நிலையான, ஸோக்கம் - பேரின்பத்தை, பாவந்தி - அடைகின்றனர். எ.று.,

(க-ரை) ‘மூவுலகிலும் ஏதொன்றும் எனது இல்லை; நான் தனியன்’ என பாவிக்கும் யோகியர் அழியாத பேரின்பத்தை உறுதியாக அடைகின்றனர்.

(வி-ரை) முனிவர்தம் பாவனையைச் சுட்டுகிறார்.

பாவனை - எப்போதும் இடையீடு படாமல் நினைத்தல். இதனை ‘அனுபிரேக்ஷே’ என்றும் கூறுவர். முத்தி நெறியில் முனைந்து செல்லும் முனிவர் தனது பிறிது என மெய்யுணர்வு பெற்றதால் மூவுலகில் ஏதொன்றும் /யாரொருவரும், தனது ஆகாது எனவும், தான் மும்மணி வடிவமான ஆன்மா மட்டுமே அகும். அதனால் தனியன் அவன் என பாவனைசெய்கிறார், அதனால் அவரே முத்தி நெறியுடையார் ஆவார். இதைவிட்டு உலகத் தொடர்புகளில் உள்ளவர் அந்நெறியினர் ஆகார்.

49. நீலகேசி 125 இன் மேற்கோள் பாடல்கள்
50. மேருமந்தர புராணம் - 786, 787.

இங்கு ‘ஏகாகி’ என ஒரு பாவனையைக் குறிப்பிட்டதால் ‘அனுபிரேக்ஷே’ பன்னிரண்டையும் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம். ‘சித்தம் பன்னிரண்டில் சென்று சித்தையை முருக்குதல்’ முனிவர் செயலாம்.

முத்தி நெறியினருக்கு வழிபாடு ஒரு பண்பு என காட்டுகிறார்.

82 தேவகுரு ணாம் பத்தா ணிவ்வேய பரம்பரா விசிந்திந்தா|
ஜாணரயா ஸுசரித்தா தே கஹியா மோக்க மக்கம்மி ||

(ப-ரை) தேவ - ஜிநர், குருணாம் - குருவிடம், பத்தா - வழிபடும் அன்புடையார், ணிவ்வேய - உள உறுதியை ஆக்கும், பரம்பரா - தொடர்புகளை நீக்கும், விசிந்திந்தா - சிந்தனையுடையவர், ஜாணரயா - தியான ஈடுபாடு உடையவர், ஸு சரித்தா - நல்லொழுக்கம் உடையவர், தே - அவர், மோக்க மக்கம்மி - முத்தி நெறியை, கஹியா - ஏற்றவர் ஆகிறார், எ.று.,

(க-ரை) தேவரை, குருவை வழிபடுதல், பிறவித் தொடர்புகளை அறுத்து உள உறுதி ஆக்கும் சிந்தனை உடைமை, தியான ஈடுபாடு, நல்லொழுக்கம் இவை உடைய முனிவர் முத்தி நெறியை ஏற்கிறவர் ஆகிறார்.

(வி-ரை) முத்தி நெறிச் செல்லும் முனிவர் இயல்பை விளக்குகிறார்.

முத்தி நெறியினருக்கு வழிபாடு ஒரு பண்பு என காட்டுகிறார். முத்தி நெறியை அடைந்து முழுதுணர் அறிவர் ஆனவர் தேவர். அவர் அருளிய அவ் வழியில் செல்லும் முனிவர் அவ்வழி நாடும் பிறருக்குத் துறவும் பயிற்சியும் தருபவர் குரு. இவரை வழிபடும் பண்பு முதலில் வேண்டும். அவரை வழிபடுதல் என்பது அவரை அணுகி அத் துறவு நெறி அனுபவம் பெறுதலாம். பிறவி, உடல், புலன் இன்பங்கள் இவற்றிலிருந்து விலகி உயிரை முத்தி நெறியில் நிலைப்படுத்துதல் உள உறுதி ஆகும். இதனை ‘வைராக்யம்‘ என்பர். தியானம் என்பது ஆன்ம அனுபவம் எனும் தூய ஒருமுக உபயோகம் ஆகும். அதில் மிகு ஈடுபாடு முனிவர் கொள்வார். நல்லொழுக்கம் என்பது தன் உயிரில் ஒருமைப்பட்டு அனுபவம் செய்யும் உண்மை ஒழுக்கமும், நோன்பு, சமிதி, குத்திகளில் செல்லும் வழக்கு ஒழுக்கமும் ஆகும். இந் நல்லொழுக்கம் முனிவர் ஒழுகுவார். அம் முனிவரே முத்தி நெறி பயணி ஆவார். பிற புறத் தோற்றம் உடையவர் அல்லர்.

‘பெருமலை அனைய காதிப்
பெரும்பகை பெயர்த்து, பெற்ற
திருமலி கடையில் நான்மைத்
திருவொடு திளைப்ப ரேனும்

உரிமையின் உயிர்கட்கு எல்லாம்
ஒருதனி விளக்கம் ஆகி
திருமொழி அருளும் தீர்த்த
கரர்களே துயர்கள் தீர்ப்பார்'

'ஐவகை ஒழுக்கம் என்னும்
அருங்கலம் ஒருங்கு அணிந்தார்
மெய்வகை விளக்கம் சொல்லி
நல்லறம் மிகஅ ளிப்பார்
பவ்வியர் தம்மைத் தம்போல்
பஞ்ச நல் ஒழுக்கம் பாரித்து
அவ்வியம் அகற்றும் தொல்லா-
சிரியர்எம் அல்லல் தீர்ப்பார்'

'அறிவொடா லோகம் உள்ளிட்டு
அனந்தமாம் இயல்பிற்று ஆகி
அறிதலுக்கு அரிய தாகி
அருவமாய் அமல மாகிக்
குறுகிய தடற்றுள் வாள்போல்
கொண்டியல் உடம்பின் வேறாய்
இறுகிய வினையும் அல்லது
எமதுஇயல்பு என்று நின்றார்'

இவற்றை விரித்து அறியலாம்.[51]

83 ணிச்சய ணயஸ்ஸ ஏவம் அப்பா அப்பம்மி அப்பணே ஸுரதோ |
ஸோ ஹோதி ஹ ஸுசரித்தோ ஜோஈ ஸோ லஹஇ ணிவ்வாணம் ||

(ப-ரை) ணிச்சய ணயஸ்ஸ ஏவ - நிச்சய நய நோக்கில் காணுங்கால், அப்பா - ஆன்மா, அப்பம்மி - ஆன்மாவுக்காக, அப்பணே - தன் ஆன்மாவில், ஸுரதோ - நன்கு திளைத்தல், ஹ - உண்மையில், ஸு சரித்தோ - நல்லொழுக்கம், ஸோ ஹோதி - அது ஆகும், ஜோ ஈ - அதனையுடையவர் யோகியர், ஸோ - அவரே, ணிவ்வாணம் - நிருவாணம், லஹஇ - அடைகிறார், எ.று.,

(க-ரை) உண்மை நய நோக்கில் காணுங்கால் ஆன்மா ஆன்மாவை ஆன்மாவால் அனுபவம் செய்தலே நல் லொழுக்கம் ஆகும். அதனை உடைய முனிவரே உறுதியாக வீடுபேறு பெறுகிறார்.

51. யசோதர காவியம் - 50, 53, 54.

(வி-ரை) உண்மை நல்லொழுக்கம் இதுவென கூறுகிறார்.

தியான வழியாக உயிர் வீடுபேறு பெறுகிறது. அந்த தியானம் உண்மையில் ஆன்மாவை ஆன்மாவால் அனுபவம் செய்தலே ஆகும். உயிருக்கு இரண்டு நிலைகள் காணப்படுகின்றன. ஒன்று அறியாமை நிலை; மற்றொன்று அறிவுடைமை நிலை. அறியாமை நிலையில் இருக்கும் வரை உயிர் தன்னை மனிதனாக விலங்காக, தேவனாக, நாரகனாக, வெகுளியாக, மானியாக, மாயாவியாக, உலோபியாக, புண்ணியவானாக, பாபியாக, செல்வந்தனாக, வறியவனாக, அரசனாக, அடிமையாக, முனியாக, சாவகனாக இன்ன பிற பரியாயங்களில் ஏற்றிப் பார்க்கிறது. அவற்றில் ஆழ்ந்து போகிறது. அப்போது அது பொய் நம்பிக்கையதாக அறியாமை யுடையதாக நின்று பிறவியில் உழல்கிறது; அதனை அனுபவம் செய்கிறது.

வாய்ப்பு நேர்ந்து, ஜிநர் அருளால், உயிரற்ற பொருளை அறியும் போது தன்னையும் பிறவற்றையும் பிரித்து அறியும் மெய்யுணர்வு பெறுகிறது. அப்போது தன்னை அறிவுணர்வு மட்டும் உடைய உயிராக அறிகிறது. பிற ஒன்றும் தனது இல்லை எனத் தெளிகிறது. அப்போது முனிமை நிலையை உயிரில் அனுபவம் செய்கிறது. அதாவது தான் தன்னை தன்னால் தனக்காக தன்னிலிருந்து அனுபவம் செய்கிறது. அதுவே உண்மையான உயிர் ஒழுக்க மாகும்; அப்போது முத்தி நெறி அமைந்து முத்தியை அடைகிறது. இது உயிரின் அறிவுடைமை நிலையால் விளைவது ஆகும். நய அடிப்படையில் ஆன்ம விளக்கத்தை அறிய வேண்டும் எனும் குறிப்பும் உள்ளதனை அறியலாம்.

'மன்றலர் முடியினாய் மாற்றும் வீட்டுமாம்
சென்றதத் துவம்தெளி யாமை தேறலால்'

என உயிர் முதலான தத்துவங்களை தெளியாமை மாற்றுக்குக் காரணம்; அவற்றைத் தேறுதல் வீட்டுக்குக் காரணம் என வருதல் காண்க.[52]

84 புரிஸாயரோ அப்பா ஜோஈ வரணாணதம்ஸண ஸமக்கோ |
ஜோ ஜாயதி ஸோ ஜோஈ பாவஹரோ ஹவதி ணித்தந்தோ ||

(ப-ரை) அப்பா - ஆன்மா, புரிஸாயாரோ - ஆண் வடிவம் உடையது, ஜோஈ - யோகி ஆகும், வரணாண தம்ஸண - உயர்ந்த அறிவு, காட்சி, ஸமக்கோ - முழுமை உடையது, ஜோ - எவர், ஜாயதி - அதனை தியானிக்கிறார், ஸோ ஜோஈ - அந்த யோகியர், பாவ ஹரோ - பாபத்தை அழிக்கிறார், ணித்தந்தோ - இருமை அற்றவர், ஹவதி - ஆகிறார், எ.று.,

52. மேருமந்தர புராணம் - 639.

(க-ரை) ஆன்மா ஆண் வடிவம்; யோகி ஆகும். உயர்ந்த அறிவு காட்சி முழுமை பெற்றதாகும்-கேவலி ஆகும். அந்த ஆன்மாவைத் தியானிக்கிற முனிவர் பாபத்தை அழிக்கிறார், விகற்பம் அற்றவர் ஆகிறார்.

(வி-ரை) நல்லொழுக்கம் உடைய முனிவர் நிர்விகல்பம் அடைகிறார் என்கிறார்.

தியானத்துக்குப் புலமாகும் ஆன்மா ஆண் உடலில் இருப்பதால் ஆண் வடிவம் என்றார். வேறு வடிவில் தியானத்துக்கு உரிய பரமான்மா அமைய முடியாது என்பது கருத்து. எது தியானிக்கப்பட வேண்டுமோ அது அந்த வடிவ மாக இருத்தல் வேண்டும். யானையைத் தியானிக்க வேண்டுமானால் யானை வடிவம் தான் வேண்டும். பூனை வடிவில் உள்ளதை யானையாகத் தியானிக்க முடியாது. ஏனெனில் தியானம் தியானிக்கப்படும் பொருளாகத் தன்னை ஆக்குவது ஆகும். அதனால் பரமான்மா நிலையை அடைய விரும்பும் யோகி பரமான்மா வடிவைத் தியானிக்க வேண்டும். அது ஆண் (உடல்) வடிவமாக உள்ளது. அப் பரமான்மா அறிவு காட்சியின் முழு வடிவமாக உள்ளது. அதாவது பார்ப்பவன் அறிபவன் மட்டுமாக விளங்குகிறது. அதனை தியானிக்கும் முனிவர் வினைகளைத் தன் தியான நெருப்பால் அழிக்கிறார். அதனால் பாபத்தை அழிக்கிறார் என்றார். அந்த நிலையில் அவர் விருப்பு - வெறுப்பு முதலான விகற்பங்களில் இல்லை. ஒருமை - தன்னில் தன்னைத் துய்க்கும் - நிலையில் பேரமைதியில் இருக்கிறார் - பேரின்ப அனுபவத்தில் திளைக்கிறார். அங்கே இருமை நிலை இல்லை. அறிவதும் அறியப்படுவதும் ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் அந்த நிலையே சித்த நிலைக்கு - பரமான்ம நிலைக்கு - உயர வழியாகும். முந்தைய வினை அழிவும், தற்போதைய விருப்பு வெறுப்பு நிலை அழிவும் அமைகின்றன என்பது கருத்து.

85 ஏவம் ஜிணேஹி கஹியம் ஸவணாணம் ஸாவயண புண ஸுணஸு |
ஸம்ஸார விணாஸயரம் ஸித்தியரம் காரணம் பரமம் ||

(ப-ரை) ஏவம் - இவ்வாறு, ஸவணாணம் - முனிவருக்கு, ஜிணேஹி - ஜிநரால், கஹியம் - அறவுரை அருளப்பட்டுள்ளது, புண - இனி, ஸாவயண - சாவகருக்கு, ஸம்ஸார விணாஸயம் - பிறவியை அழிக்கும், ஸித்தியரம் - முத்தியை ஆக்கும், பரமம் காரணம் - சிறந்த காரண அருளுரையை, ஸுணஸு - கேட்க, எ.று.,

(க-ரை) முன்பு முனிவருக்கு அறவுரை அருகரால் அருளப்பட்டது. இனி இல்லறத்தார் பிறவியை அழித்து முத்தியை அடையும் சிறந்த காரணத்தை கேட்க.

(வி-ரை) இல்லறத்தாருக்கு அறவுரை கூறப்படுகிறது என்கிறார்.

முத்தி அடையும் நெறி முனிவருக்கு முன்பு கூறப்பட்டது. இப்போது இல்லறத்தார் பிறவியைக் கெடுத்து முத்தியை அடைய வழி கூறப்படுகிறது.

86 கஹிஊண ய ஸம்மத்தம் ஸுணிம்மலம் ஸுரகிரீவ ணிக்கம்பம் |
தம் ஜாணே ஜாஇஜ்ஜஇ ஸாவய துக்கக்கயட்டாஏ ||

(ப-ரை) ஸாவய - சாவகர், ஸுணிம்மலம் - நல்ல நிர்மலமான, ய - மற்றும், ஸுர கிரீவ - சுமேரு மலை போல, ணிக்கம்பம் - அசைவு இலாத, ஸம்மத்தம் - நற்காட்சியை, கஹிஊண - ஏற்று, துக்கக்கயட்டா ஏ - பிறவித் துன்பத்தைத் துடைக்க, தம் - அந்த நற்காட்சியை, ஜாணே - தியானத்தில், ஜாஇஜ்ஜஇ - தியானிக்க, எ.று.,

(க-ரை) தூய, மேருபோல அசைவு இலாத நற்காட்சியை சாவகர் ஏற்று அதனைத் தியானப் பொருளாக்கித் தியானிப்பாராக.

(வி-ரை) சாவகர் முதலில் நற்காட்சியை ஏற்க வேண்டும் என்கிறார்.

முத்தி நெறியில் முதல்படி நற்காட்சி ஆகும். அதனால் சாவகர் குறைகள் இல்லாத உறுதியான நற்காட்சியை ஏற்க வேண்டும். அதனை தியானிக்க வேண்டும். அந்த நற்காட்சி பாவனையால் இல்வாழ்க்கையில் இல்லற செயல்களால் ஏற்படும் கவலை, துன்பம் முதலானவை விலகும். செயல்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்போது பொருள் இயல்பைச் சிந்தித்தால் துன்பம் நீங்கும். 'ஜிநர் பொருள் இயல்பை எவ்வாறு அறிந்தாரோ அவ்வாறே நிகழ்கின்றன. அதனால் வேண்டியன வேண்டாதன என விருப்பு வெறுப்பு அடைவது வீணே ஆகும்' என நற்காட்சியுடையார் நினைவு கொள்ளும் போது துன்பம் நீங்குகிறது. இதனை அனுபவத்தால் அறியலாம். அதனால் நற்காட்சியை தியானம் செய்ய வேண்டும் என்றார்.

87 ஸம்மத்தம் ஜோ ஜாயஇ ஸம்மாஇட்டீ ஹவேஇ ஸோ ஜீவோ |
ஸம்மத்த பரிணதோ உண கவேஇ துட்டட்ட கம்மாணி ||

(ப-ரை) ஜோ - எவர், ஸம்மத்தம் - நற்காட்சியை, ஜாய இ - தியானிக்கிறார், ஸோ ஜீவோ - அவர், ஸம்மாஇட்டீ - நற்காட்சியுடையவர், ஹவேஇ - ஆகிறார், உண - மற்றும், ஸம்மத்த - நற்காட்சி இயல்பில், பரிணதோ - நிகழ்ந்து / பரிணமித்து, துட்டட்ட கம்மாணி - கொடிய எட்டு வினைகளை, கவேஇ - அழிக்கிறார், எ.று.,

(க-ரை) நற்காட்சியைத் தியானிப்பவர் நற்காட்சியர். அவர், நற்காட்சியில் பரிணமிப்பதால் கொடிய எட்டு வினைகளை அழிக்கிறார்.

(வி-ரை) நற்காட்சியைத் தியானிப்பதால் வினை அழிகிறது என்கிறார்.

நற்காட்சி பெற்றால் அந்த உயிர் நற்காட்சி உணர்வில் நிகழ்கிறது. பிறவிக்கு ஏதுவான வினைகள் அப்போது முதல் அழியத் தொடங்குகின்றன. வினைகள் உதிர்வது நற்காட்சி அடைந்த பிறகு தொடங்கி படிப்படியாக பல மடங்குகளாகப் பெருகி விலகுகின்றன. இதனை 'குண சிரேணி நிர்ஜரை' என்பர். முறையாக

நற்காட்சியர் முனிவராகி சுக்கில தியான வாளால் வினைகளை வீழ்த்தி முத்தி அடைகிறார். அதனால் வினைகளை அழிக்கிறார் என்றார். இல்லற நிலையிலேயே, ஆடையுடன் முத்தி அடையலாம் என எண்ணுதல் அறியாமை ஆகும்.

88 கிம் பஹுணா பணிஏணம் ஜே ஸித்தா ணரவரா கயே காலே |
ஸிஜ்ஜிஹஹி ஜே வி பவியா தம் ஜாணஹ ஸம்ம மாஹப்பம் ||

(ப-ரை) கிம் பஹுணா பணிஏணம் - நிறைய பேசுவதால் என்ன பயன்? சிறந்த மனிதர், கயே காலே - கடந்த காலத்தில், ஜே ஸித்தா - எத்தனை பேர் சித்த ரானார், பவியா - எதிர் காலத்தில், ஜே வி - எத்தனை பேர், ஸிஜ்ஜஹஹி - சித்தர் ஆகுவர், தம் ஸம்ம மாஹப்பம் - எல்லாம் நற்காட்சியின் பெருமை என, ஜாணஹ - அறிக, எ.று.,

(க-ரை) நிறைய கூறுவதால் என்ன பயன்? கடந்த காலத்தில் எத்தனை சிறந்த மனிதர் சித்தர் ஆனார், எதிர் காலத்தில் சித்தர் ஆவார். எல்லாம் நற்காட்சியின் பெருமை என அறிக.

(வி-ரை) நற்காட்சியின் சிறப்பைச் சுட்டுகிறார்.

எட்டு வினைகளையும் கெடுத்து இராமர், பாண்டவர், பரதர், பாகுபலி போன்ற எத்தனை சிறந்த மனிதர் சித்தர் ஆகியுள்ளனர்? எத்தனை தீர்த்தங்கரர் கடந்த காலத்தில் சித்தர் ஆகியுள்ளனர்? இனி எதிர்காலத்தில் எத்தனை அறவோர் சித்தர் ஆகுவர்? அவர் அனைவரும் நற்காட்சி பெற்றே சித்த நிலையை அடைந்தனர் / அடைவர். நற்காட்சியின் பெருமை இது. அதனால் நிறைய பேசிக் கொண்டு இருப்பதால் என்ன பயன்? நற்காட்சியை அடைதலே முதன்மை ஆகும். எல்லா அறங்களையும் நற்காட்சியே பயனுடையதாக ஆக்குகின்றது. ஏனெனில் நற்காட்சியே முத்திக்கு முதன்மை ஆகும்.

‘காட்சி விசேட உணர்வும் ஒழுக்கமும்
மாட்சி அதனில் பெறும்’

‘நற்காட்சி இல்லார் உணர்வும் ஒழுக்கமும்
ஒற்கா ஒசிந்து கெடும்’

‘அச்சிலேல் பண்டியும் இல்லை சுவரிலேல்
சித்திரமும் இல்லதே போன்று’

என நற்காட்சியின் பெருமையைப் பேசும் அருங்கலச் செப்பு.[53]

89 தே தண்ணா ஸுகயத்தா தே ஸுரா தே வி பண்டியா மணுயா |
ஸம்மத்தம் ஸித்தியரம் ஸிவிணே வி ண மஇலியம் ஜேஹிம் ||

53 அருங்கலச்செப்பு - 43, 44, 45.

(ப-ரை) ஜேஹிம் - எவரால், ஸிவிணே வி - கனவிலும், ஸித்தியரம் - முத்தியை நல்கும், ஸம்மத்தம் - நற்காட்சி, ண மஇலியம் - மலினப்பட வில்லையோ, தே - அவரே, தண்ணா - பெருமையுடையவர், ஸுகயத்தா - அவரே வினை முடித்தவர், தே ஸுரா - அவரே சூரர், வி - மேலும், தே பண்டியா - அவரே புலவர், மணுயா - அவரே சிறந்த மனிதர் ஆவார், எ.று.,

(க-ரை) நற்காட்சியைக் கனவிலும் மலினப்படுத்தாதவரே பெருமைக்கு உரியவர், வினை (செயல்) முடித்தவர், வீரர், புலவர், சிறந்த மனிதர் ஆவார்.

(வி-ரை) நற்காட்சியைக் குறையின்றி போற்றுபவரே சிறந்தவர் என்கிறார்.

உலகில் தானம் நல்குபவரை ‘ தன்யர்’ என்றும், மணம் முதலான செயல்களைச் செய்பவர் ‘கிருதார்த்தர்’ என்றும், போரில் புறங் காட்டாதவரை வீரர் என்றும் கூறுகின்றனர். நிறைய நூல்களில் வல்லவரை ‘பண்டிதர்’ என்கின்றனர். ஆனால், ஆசாரியர், இச் சிறப்பெல்லாம் நற்காட்சியைக் கனவிலும் மலினப்படுத்தாதவருக்கே பொருந்தும் என்கிறார். ஏனெனில் தன்னில் விருப்பு வெறுப்புகளை வென்று முத்தியை அடைய முதன்மையான காரணமான நற்காட்சியைச் சிதைக்காமல் காக்கிறவர் வீரர்; வினை முடித்தவர், புலவர், பெருமையுடையவர்; சிறந்த மனிதர் ஆவார். இப்படி நற்காட்சியின் பெருமை உள்ளது.

90 ஹிம்ஸரஹிஏ தம்மே அட்டாரஹதோஸவஜ்ஜிஏ தேவே |
ணிக்கந்தே பவ்வயணே ஸத்தஹணம் ஹோஇ ஸம்மத்தம் ||

(ப-ரை) ஹிம்ஸ - இன்னாமை (இமிசை), ரஹிஏ - இல்லாத, தம்மே - அறம், அட்டாரஹ - பதினெட்டு, தோஸ - குற்றங்கள், வஜ்ஜிஏ - இல்லாத, தேவே - இறைவன், ணிக்கந்தே - பற்றற்ற குரு, பவ்வயணே - பரம ஆகமம், (இவர்களில்) ஸத்தஹணம் - நம்பிக்கை கொள்கை, ஸம்மத்தம் - நற்காட்சி (நல் நம்பிக்கை) ஹோஇ - ஆகும், எ.று.,

(க-ரை) அகிம்சை அறம், பதினெண் குற்றம் இல்லா பகவான், பற்றற்ற குரு, பரம ஆகமம் இவரிடம் நம்பிக்கை வைத்தல் நல் நம்பிக்கை ஆகும்.

(வி-ரை) நற்காட்சியுடைமையை விளக்குகிறார்.

அறம் (தருமம்) உயிர்களுக்கு இன்னாமை செய்யாமை. உணர்வின் அடிப்படையில் அமையும் ஒழுக்கம் / உணர்வு ஆகும். ஆனால் கடவுள் பெயரால், வேள்வியின் பெயரால் உயிர்களைக் கொல்லலாம் என்பதும் அறமாக உலகில் பேசப்படுகிறது. அதனால் ஆசாரியர் எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்குதலே அறம் எனச் சுட்டினார். அது அருகரால் அருளப்பட்டதாகும். அவர் பதினெண் குற்றங்கள் இல்லாதவர். பசி முதலானவை பதினெட்டு குற்றங்கள் ஆகும். அவை இல்லாதவர்

இறைவர் என்றதனால் இறைமை நிலை அடையப்படுவதாகும் எனத் தெளிவாகிறது. இறைவர் எவரும் அநாதியாக இலர். உயிர் தலை வரம்பான தூய்மை அடைந்த நிலையே இறைநிலை ஆகும். பரமான்மாவே இறைவர் ஆவார். பற்றற்ற குரு அப் பரமான்ம நிலை நோக்கி பயணிக்கும் முனிவர் ஆவார். தானும் முத்தி நெறியில் பயணித்து, அதில் பயணிக்க விரும்பும் பவ்வியருக்குத் துணை செய்வதால் குரு ஆவார். பற்றுகளுக்கு இடையே வாழ்ந்து கொண்டிருப்பவர் குரு ஆகார். பகவான் அருளியது பரமாகமம். இவர்களை நம்புதல் அல்லது இவர்களிடம் உறுதியான நம்பிக்கை கொள்ளும் உணர்வு நற்காட்சி-நல் நம்பிக்கை - ஆகும். நம்பிக்கையுடையவர் நற்காட்சியர் ஆவார்.

‘ணிக்கந்தே பவ்வயணே’ என்ற தொடருக்கு முத்தி நெறி, குரு என உரைகாணுகிறார் பண்டிதர் ஜயசந்திரர்.

பயம் பகை பணித்தல் ஆர்வம்
செற்றமே கவர்ச்சி சோகம்
வியந்திடல் வெகுளி சோபம்
வேர்த்திடல் விரும்பல் கேதம்
மயங்குதல் தெளிதல் சிந்தை
வருந்துதல் களித்தல் மாயம்
இயம்பரும் திறத்த இன்ன
யாவையும் எறிந்து இருந்தார்

என இறைமை நிலை அடைவோரிடம் இல்லாதனவற்றைச் சுட்டுவார்.[54]

91 ஜஹஜாய ரூவரூவம் ஸுஸஞ்ஜயம் ஸவ்வ ஸங்க பரிசத்தம் |
லிங்கம் ண பராவேக்கம் ஜோ மண்ண இ தஸ்ஸ ஸம்மத்தம் ||

(ப-ரை) ஜஹ ஜாய ரூவ - பிறந்த நாள் உருவம் போன்ற, ரூவம் - தோற்றம், ஸுஸஞ்ஜயம் - உயிர்களைப் போற்றும், புலன்களை வென்று அடங்கிய ‘சையம்‘ (நல்லொழுக்கம்), ஸவ்வ ஸங்க பரிசத்தம் - எல்லா பற்றின்மை, பராவேக்கம் - புற நோக்கு, ண - இல்லாமை, (இவற்றின் உருவமான), லிங்கம் - தோற்றத்தை, ஜோ - எவர், மண்ணஇ - நம்புகிறார், தஸ்ஸ - அவருக்கு, ஸம்மத்தம் - நல் நம்பிக்கை உள்ளது, எ.று.,

(க-ரை) ஆடையில்லா அம்மண உருவம், உயிரில் அடங்கிய ஒழுக்கம், புறப் பொருளை நோக்காமை, பற்றின்மை இவையே முத்தி நெறியுடையார் சின்னமாகும். அதனை நம்புபவர் நற்காட்சியர்.

(வி-ரை) வேறு வகையில் நற்காட்சியை விளக்குகிறார்.

54. மேருமந்தர புராணம் - 1385.

முதலில் முத்தி செல்வார் புறத்தோற்றத்தை - உடல் தோற்றத்தை விளக்குகிறார். பிறந்த நாள் தோற்றம் என்கிறார். அதாவது ஆடை முதலான இல்லாத அம்மணத் தோற்றம். அத்தோற்றம் அகத்தும் புறத்தும் பற்றில்லாமையைக் காட்டுவதாகும். இது தவிர வேறு எந்தத் தோற்ற மானாலும் அது பற்றுகள் உள்ள தோற்றம் ஆகும். இரண்டாவது ‘சையம்’ கட்டுப்பாடு-அடங்குதல்-என்று பொருள். உயிர் துன்புறுத்தாமல் அடங்குதலும், பொறிகள் வழி படராது அடங்குதலும் ஆகும். அதாவது பிற உயிர்களையும் காத்துத் தன்னுயிரையும் காத்தல் ஆகும். முனிவர்தம் முனிமை நிலை இது. மூன்றாவது பற்றின்மை. அகப்பற்றுகளும் புறப் பற்றுகளும் இல்லாது உயிரது தூய்மையில் குறி நிறுத்தலாம். நான்காவது புறம் நோக்காமை. முத்தி நெறிப் பயனை நோக்குவது அல்லது பிறவற்றின் பயனை நோக்காமை ஆகும். இத்தகு குறிப்புகளை உடையது முத்தி நெறிச் சின்னம் (லிங்கம்) இதுவே முத்தி நெறிச் சின்னம், பிற அல்ல என உறுதியாக நம்புவாருக்கு நற்காட்சி அமைகிறது என்று கருத்து. நற்காட்சியை பல கோணங்களில் விளக்குதல் ஆசாரியர் தனிப் போக்காகும். தரிசன பாகுடத்திலும் (காதை 20) இதே நூலில் காதை 14இலும் இங்கும் தரப்பட்டுள்ள கருத்துகளை.விளக்கங்களைத் தொகுத்து பார்த்து நற்காட்சியின் இயல்பைத் தெளியலாம்.

92 குச்சிய தேவம் தம்மம் குச்சிய லிங்கம் ச வந்தஏ ஜோ து |
லஜ்ஜாபயகாரவதோ மிச்சாதிட்டீ ஹவே ஸோ ஹு ||

(ப-ரை) ஜோ து - எவர், குச்சிய தேவம் - கு தேவர், தம்மம் - கு தருமம், ச - மற்றும், குச்சிய லிங்கம் - கு குரு இவரை, லஜ்ஜா - வெட்கம், பய - அச்சம், காரவதோ - தற்பெருமை காரணமாக, வந்தஏ - வணங்குகிறார், ஸோ - அவர், ஹு - உறுதியாக, மிச்சாதிட்டீ - பொய் நம்பிக்கையர் (மித்தர்), ஹவே - ஆவர், எ.று.,

(க-ரை) குதேவர், குதருமம், குகுரு இவரை வெட்கம், அச்சம், தற்பெருமை முதலான காரணமாக வணங்குகிறவர் உறுதியாக மித்தர் (பொய் நம்பிக்கையர்) ஆவார்.

(வி-ரை) பொய் நம்பிக்கையர் அடையாளத்தைக் காட்டுகிறார்.

பொய் நம்பிக்கையரை அறிய சில சின்னங்களை இங்கே குறிப்பிடுகிறார். முத்தி நெறியில் செல்ல முதல்படி நற்காட்சி என்றார். அந்த நற்காட்சி இல்லாதாரும் முத்தி நெறியில் செல்லும் போக்கு உலகில் காணப்படுகிறது. அதனால், அத்தகையோரை வழிபடுவாரைச் சுட்டி அவர் பொய் நம்பிக்கையர் என மெய்ப்பிக்கிறார்.

பசி முதலான பதினெட்டு குற்றங்கள் இல்லாதவர் தேவர் (இறைவர்). அகிம்சையை ஆதாரமாக உடையது உண்மையான அறமாகும் (தருமம் ஆகும்). அணுவளவும் அகத்தும் புறத்தும் பற்று இல்லாதவர் துறவி (குரு) ஆவார். ஆனால்

இவரைத் தெளிந்து வழிபடாது, பசி முதலான இடர்களும் விருப்பு வெறுப்பு முதலான உணர்வுகளும் உடையாரை இறைவர் என்றும், இமிசையை அஹிம்சை என உரைக்கும் அறம் அல்லதை அறம் என்றும், பற்றுகள் பல உடைய துறவி வேடத்தரை உண்மையான துறவி என்றும், இவர் நன்மை செய்வர் என வழிபடுவார் மித்தர் ஆவர். இவரை வெட்கம், அச்சம், தற்பெருமை காரணமாக வழிபடுவோரும் மித்தர் ஆவர்.

மக்கள் வழிபடுகின்றனர். அவர் போல வழிபடவில்லை என்றால் என்ன சொல்லுவர்? பெருமை போய்விடாதா? என எண்ணி வழிபடுதல் வெட்கத்தால் வழிபடுதலாகும். இவரை அரசர் போன்றவர் சிறப்புச் செய்கின்றனர். அவரை வணங்க வில்லை என்றால் தொல்லை நிகழலாம் என அஞ்சி வழிபடுதல் அச்சத்தால் வழிபடுதலாகும். இவரை வழிபடுதலால் பெருமை இன்னும் கூடும் என வழிபடுதல் தற்பெருமையால் வழிபடுதலாகும்.

இப்படியுள்ளவர் மித்தர். அவருக்கே இவையே சின்னங்கள்.

‘அச்சமே ஆசை உலகிதம் அன்புடைமை
மிச்சபட் சண்டமே தீத்தெய்வம் மெச்சி
வணங்குதல் அவ்விநயம் என்பவே மாண்ட
குணங்களில் குன்றா தவர்’

என உரைக்கும் அறநெறிச்சாரம்.[55]

93 ஸபராவேக்கம் லிங்கம் ராஈ தேவம் அஸஞ்ஜயம் வந்தே |
மண்ணஇ மிச்சாதிட்டீ ண ஹு மண்ணஇ ஸுத்த ஸம்மத்தோ ||

(ப-ரை) ஸ பரா வேக்கம் - தன்னை அல்லது பிறரைச் சார்ந்து, லிங்கம் - துறவியானவரை, ராஈ - விருப்புடைய, தேவம் - இறைவனை, அஸஞ்ஜயம் - ஒழுக்க மிலாரை, மண்ணஇ - நம்பி, வந்தே - வணங்குகிறவர், மிச்சாதிட்டீ - மித்தர் (பொய் நம்பிக்கையர்) ஆவார், ஸுத்த - தூய, ஸம்மத்தோ - நற்காட்சியுடையார், ஹு - உறுதியாக, ண மண்ணஇ - நம்பார் / வணங்கார், எ.று.

(க-ரை) வேறு காரணங்களுக்காகத் துறவு ஏற்றவரைத் துறவி என்றும், விருப்பு உணர்வுடைய இறைவரை, ஒழுக்கமிலாரை நம்புகிறவர், வணங்குகிறவர் மித்தர் ஆவார். உறுதியான நற்காட்சி உடையார் அவரை வணங்கார்.

(வி-ரை) மித்தரை வேறு வகையில் விளக்குகிறார்.

துறவு ஏற்றல் பற்றற்ற உணர்வில் நிகழ்வதாகும். அப்படி இல்லாதும் துறவு ஏற்கும் நிலை ஏற்படலாம் என இந்த காதை வழி அறிய முடிகிறது. ஸ - தன்னை / தான் என்று பொருள். ஏதேனும் உலகப் பயனை உள்ளத்தில் எண்ணித் துறவு ஏற்றல்

55. அறநெறிச்சாரம் - 12

தன்னைச் சார்ந்து - தன் காரணமாக துறவு ஏற்றல் ஆகும். பிறருடைய வற்புறுத்தலால் அல்லது அரசர் முதலானோரிடம் கொண்ட அச்சத்தால் துறவு ஏற்றல் பிறரைச் சார்ந்து- பிறர் காரணமாகத் துறவு ஏற்றல் ஆகும். இதனை 'ஸபராவேக்கம்' என்றார். அதாவது உண்மையான துறவியாக இல்லாமல் போலித் துறவியாக உள்ளவர் என்று பொருள். இக்காலத்தில் இத்தகையோரை மிகுதியாகக் காணலாம்.

இறை நிலையில் பற்றுணர்வுக்கு இடம் இல்லை. ஆனால், பற்றுடையாரை- ஆர்வம் உடையாரை-இறையாகப் போற்றுதலை உலகில் காண முடிகிறது. அவ் விறைத் தோற்றமே அவர் ஆர்வம் முதலான உடையவர் என்பதனைக் காட்டும். என்றாலும் அத்தோற்றத்தையும் இறைவர் தோற்றமாக ஏற்று நம்புகின்றனர்.

ஒழுக்கமிலார் என்றது இமிசை உணர்வு உடையாரை ஆகும். உயிர்களைப் போற்றும் உணர்வும் இல்லை; பொறி வழிப் போகாது தன் உயிரைப் போற்றும் உணர்வும் இல்லை. எனவே அவர் ஒழுக்கமிலார் என்றார்.

இம் மூவரையும் நம்பி-உண்மையானவர் என நம்பி-வணங்குபவர் / போற்றுபவர் மித்தர் ஆவார். நற்காட்சி உடையார் இத்தகையோரை உறுதியாக வணங்கார் / போற்றார்.

94 ஸம்மாஇட்டீ ஸாவய தம்மம் ஜிணதேவ தேஸியம் குணதி |
விவரீயம் குவ்வந்தோ மிச்சாதிட்டீ முணேயவ்வோ ||

(ப-ரை) ஜிணதேவ - ஜிநர், தேஸியம் - அருளிய, தம்மம் - அறத்தில், குணதி - ஒழுகுபவர், ஸம்மாஇட்டீ ஸாவய - நற்காட்சி உடைய சாவகர் (இல்லறத்தார்) ஆவர், விவரீயம் - இறை உரைக்கு எதிராக, குவ்வந்தோ - செய்பவர், மிச்சா திட் டீ - மித்தர் என, முணேயவ்வோ - தெளிதல் வேண்டும், எ.று.

(க-ரை) ஜிநர் அருளிய அறநெறியில் ஒழுகுபவர் நற்காட்சி உடைய சாவகர் ஆவார். அந் நெறிக்கு எதிராக ஒழுகுபவர் - மற நெறியில் ஒழுகுபவர் - மித்தர் என இருவரையும் தெளிய வேண்டும்.

(வி-ரை) நற்காட்சியர் - பொய்க் காட்சியரைத் தெளிவுபடுத்துகிறார்.

ஜிநர் உரையை ஆதாரமாக்கி நற்காட்சியையும் பொய்க் காட்சியையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். ஜிநர் உரை அகிம்சை அறத்தை விளக்குவதாகும். எந்த நிலையிலும் எந்த உயிரையும் துன்புறுத்தாமல் இருத்தல் அகிம்சை ஆகும். அகிம்சையின் முழுமை எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்கும் உணர்வுடையாரிடமே காண முடியும். தன்னுயிரைப் போற்றுதல் போல பிற உயிரையும் போற்றும் உணர்வு அவரிடமே காண முடியும். முத்தி நெறியில் இந்த உணர்வே அகிம்சை எனப்படுகிறது. அந்த அகிம்சை நெறியுடையார் நற்காட்சியர்; அதற்கு எதிரானவர் பொய்க் காட்சியர்.

அவ்விருவரையும் அடையாளம் காட்ட அகிம்சை - இமிசையே ஆதாரம். இதனை ஜிநர் உரைத்தமையால் ஜிநர் உரையைக் காட்டி இருவரையும் அடையாளப்படுத்தினார் எனத் தெளிய வேண்டும்.

'மறவுரையும் காமத்து உரையும் மயங்கிப்
பிறவுரையும் மல்கிய ஞாலத்து - அறவுரை
கேட்கும் திருவுடை யாரே பிறவியை
நீக்கம் திருவுடை யார்'

என அறநெறிச் சாரம் சுட்டுதலைக் காணலாம்.[56]

95 மிச்சாதிட்டீ ஜோ ஸோ ஸம்ஸாரே ஸம்ஸரேஇ ஸுஹரஹிஓ |
ஜம்ம ஜர மரண பஉரே துக்கஸஹஸ்ஸாஉலே ஜீவோ ||

(ப-ரை) ஜோ - எவர், மிச்சாதிட்டீ-மித்தர், ஸோ - அவர், ஜம்ம - பிறப்பு, ஜர - மூப்பு, மரண - இறப்பொடு, பஉரே-விரிந்துள்ள, துக்க ஸஹஸ்ஸாஉலே - ஆயிரமாயிரம் துன்பங்கள் நிறைந்துள்ள, ஸுஹரஹிஓ - இன்பமே இல்லாத, ஸம்ஸாரே-பிறவியில், ஸம்ஸரேஇ - உழல்கின்ற, ஜீவோ - உயிராகும், எ.று.

(க-ரை) பொய் நம்பிக்கை உயிர் பிறப்பு மூப்பு இறப்பு விரிந்துள்ள, எண்ண முடியாத துன்பங்கள் நிறைந்துள்ள, இன்பமே இல்லாத பிறவியில் உழல்கிறது.

(வி-ரை) பொய்க் காட்சியர் பிறவியில் துன்புறுகின்றனர் என்கிறார்.

பொய் நம்பிக்கை என்பது பொருள்களை உள்ளவாறு அறியாது வேறாக அறிந்து நம்புதலாகும். அந் நம்பிக்கையின் விளைவாக உயிர் பிறவியில் உழல வேண்டி யுள்ளது. அப் பிறவியோ பிறப்பு மூப்பு இறப்பு வடிவ மாக உள்ளது. அவற்றின் காரண மாக உயிர் எண்ணத் தொலையா துன்பங்களைத் துய்க்கிறது. பொய் நம்பிக்கை உடைய உயிர் பிறவியில் இத் துன்பங்களைத் துய்த்துக் கொண்டு உழல்கிறது.

'கடல்களும் மலையும் காணும்
வானமும் கடல்கள் சூழ்ந்த
திடர்களம் காயமும் ஆறும்
நாளிகைப் புறவுந் தீராப்
படுதுயர் நரகம் ஏழும்
நிகோதமும் பதேசமும் முன்னர்
உடல்கிடந்து அழிந்தி டாத
இடமில்லை உணரின் என்றான்.' எனவும்,

56. அறநெறிச்சாரம் - 1

‘இறந்தநம் பிறவி மேனாள்
எண்ணுதற்கு அரிய தம்முள்
கறந்து கொண்டு உயிரை உண்ணும்
காலன்வாய்ப் பட்ட போழ்தும்
பிறந்துநாம் கதிகள் நான்கில்
பெருந்துயர் உழக்கும் போழ்தும்
துறந்திடா வினைகள் அன்றித்
துணைபிறிது இல்லை கண்டாய்’

எனவும் நாற் பிறவிச் சுழற்சியில் பிறக்காத இடமும் இல்லை; படாத துன்பமும் இல்லை எனக் கூறுதல் காண்க.[57]

96 ஸம்ம குண மிச்ச தோஸோ மணேண பரிபாவிஊண தம் குணஸு |
ஜம் தே மணஸ்ஸ ருச்சஇ கிம் பஹுணா பலவிஏணம் து||

(ப-ரை) ஸம்ம - நற்காட்சியின், குண - குணச் சிறப்பையும், மிச்ச - பொய் நம்பிக்கையின், தோஸோ - குறையையும், மணேண - மனத்தால், பரிபாவிஊண - நன்கு நினைத்து, ஜம் - எது, தே மணஸ்ஸ - மனதுக்கு, ருச்சஇ - பிடிக்கிறதோ, தம் - அதனை, குணஸு - செய்க, பஹுணா - திரும்ப திரும்ப, பலவிஏணம் து - வீணே பேசுவதால், கிம் - என்ன பயன்? எ.று.

(க-ரை) நற்காட்சியின் சிறப்பையும் தீக் காட்சியின் தீமையையும் நன்கு நினைத்து மனதுக்குப் பிடித்ததைச் செய்க; திரும்பத் திரும்ப வீணே ஏன் பேச வேண்டும்?

(வி-ரை) குணம் குற்றங்களை ஆய்ந்து தெளிய வேண்டும் என்கிறார்.

பொய் நம்பிக்கையை விட்டு மெய் நம்பிக்கையை ஏற்பதன் வழியே பிறவித் துன்பத்தை நீக்கி முத்தி இன்பத்தை அடைய முடியும் என்பது குறிப்பு.

97 பாஹிர ஸங்க விமுக்கோ ண வி முக்கோ மிச்சபாவ ணிக்கந்தோ
கிம் தஸ்ஸ டாண மஉணம் ண வி ஜாணதி அப்பஸமபாவம் ||

(ப-ரை) மிச்சபாவ - பொய் நம்பிக்கையுடன், ணிக்கந்தோ - அம்மணத் தோற்றம் கொண்டு, பாஹிர - புற, ஸங்க - பற்றுகளை, விமுக்கோ - விட்டவர், ண வி முக்கோ - பற்று விட்டவர் அல்லர், அப்ப - ஆன்மாவின், ஸம பாவம் - ஒத்த உயிர் ஒழுக்கம் ண வி ஜாணதி - அறியாதவர், தஸ்ஸ - அவருடைய, டாண - நின்ற நிலையும், மஉணம் - மௌனமும், கிம் - என்ன பயன் தரும்? எ.று.

57. மேருமந்தர புராணம் - 110, 112.

(க-ரை) முனித் தோற்றம் கொண்டும் பொய் நம்பிக்கை உடையவர் புறப் பற்றுகளை விட்டாலும் பற்றுகளை விட்டவர் அல்லர். எல்லா உயிர்களையும் தன் உயிர் போல கருதாதவரது மௌனமும், நின்று செய்யும் தவமும் என்ன பயன் தரும்?

(வி-ரை) நற்காட்சி இல்லாதவர் நிருவாணத் தோற்றம் பயன் இல்லை என்கிறார்.

ஆன்மாவின் தூய இயல்பை அறிபவரே நற்காட்சி உடையவர் ஆகிறார். அந் நற்காட்சி இன்றிப் புறப் பற்றுகளை விடுதலும் அம்மணத் தோற்றம் ஏற்றலும் வீணே. மௌனம் ஏற்றலும், நின்று உடல் பற்று இன்றி ஆன்ம தியானம் (காயோத்ஸர்கம்) செய்தலும் வீணே. இவை எல்லாம் பொருளற்ற செயல்களாகவே அமையும். முத்தி நெறியில் அணு அளவும் பயன் இல்லை. ஏனெனில், நற்காட்சி இல்லாத புறச் செயல்கள் இவை. இதன் விளைவு பிறவித் தொடர்ச்சியே ஆகும். இதனையே இங்குக் குறிப்பாகச் சுட்டி உள்ளார்.

‘நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்’

‘கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்’

என தேவர் புறச் செயல் மட்டும் உடையாரைக் கண்டித்தலைக் காணலாம்.[58]

98 மூலகுணம் சித்தூண ய பாஹிர கம்மம் கரேஇ ஜோ ஸாஹூ |
ஸோ ண லஹஇ ஸித்தஸுஹம் ஜிணலிங்க விராஹகோ ணியதம் ||

(ப-ரை) ஜோ - எந்த, ஸாஹூ - முனிவர், மூல குணம் - அடிப்படை குணங்களை, சித்தூண - சிதைத்து, ய - மற்றும், பாஹிர - புற, கம்மம் - செயல்களை, கரே இ - செய்கிறார், ஸோ - அவர், ணியதம் - உறுதியாக, ஜிண லிங்க - ஜிநர் தோற்ற, விராஹகோ - பகைவர் ஆவார், அதனால், ஸித்தி - ஸுஹம் - முத்திப் பேரின்பத்தை, ண லஹஇ - அடைதல் இலர். எ.று.,

(க-ரை) மூல குணங்களைச் சிதைத்துவிட்டு புறச் செயல்களை மட்டும் செய்யும் முனிவர் உறுதியாக ஜிநர் தோற்ற பகைவர் ஆவார். அவர் முத்திப் பேரின்பத்தை அடையார்.

(வி-ரை) மூல குணங்களைச் சிதைப்பவர் முத்தி அடைய இயலாது என்கிறார்.

நற்காட்சி உடையவரே முனிவர் ஆகிறார். அவரே மூல குணங்களைப் போற்றிப் புறச் செயல்களை / ஒழுக்கங்களைச் செய்கிறார். மூல குணங்கள்

58. திருக்குறள் - 276, 279

இருபத்தெட்டு என்பர். அவை: ஐந்து பெரு நோன்புகள், ஐந்து ஒழுகலாறுகள் (ஸமிதி), ஐம்பொறி அடங்குதல், ஆறு நாள் கடமைகள், தரையில் படுத்தல், நீராடாமை, உடை இன்மை, மயிர் பறித்தல், நின்று உணவு ஏற்றல், பல் விளக்காமை, ஒரு வேளை உண்பது. இவை அடிப்படை ஒழுக்கங்கள். இவற்றை முனிவர் குறையின்றி போற்றுவர். அப்படிப் போற்றாது விலகுவாரானால், அவரது மௌனம், தவம், தியானம், பயிலல் முதலானவற்றால் முத்தி அடைய முடியாது. ‘எனக்கு ஜிந நெறியில் நம்பிக்கை இருக்கிறது, மூல குணங்கள் சிதைந்தால் சிதையட்டும், முத்தி நெறியில் இருப்பவன்’ என நினைத்தால், அது உண்மை ஆகாது. ஏனெனில் மூல குணங்கள் ஜிநர் நெறியில் உரைக்கப்பட்டவை. அவை சிதையுமானால் ஜிநர் ஆணையும் சிதைகிறது. ஜிநர் ஆணை சிதைதல் என்றால் நற்காட்சியும் சிதைகிறது என்று பொருள். பிறகு முத்தி எப்படி ஏற்படும்?

வினையின் உதயம் தூக்கலாக இருந்தால் ஒழுக்கச் சிதைவு ஏற்படுகிறது. அது துவர்ப்புணர்வு (கசாயம்) தூக்கலாக உடையவன் என்பதனைச் சுட்டுகிறது. எனவே, ஜிநர் உரைக்கு இசைவாக நம்பிக்கை இருந்தால்தான் நற்காட்சி இருக்கிறது என்று பொருள். ஆனால் மூல குணங்கள் இல்லாமல் நற்காட்சியால் மட்டும் முத்தி கிடைக்காது. அல்லது நற்காட்சி இல்லாத ஒழுக்கச் செயல்களால் மட்டும் முத்தி இல்லை. இரண்டும் வேண்டும் என அறிதல் வேண்டும்.

99 கிம் காஹிதி பஹிகம்மம் கிம் காஹிதி பஹு˜விஹம் ச கவணம் து |
கிம் காஹிதி ஆதாவம் ஆதஸஹாவஸ்ஸ விவரீதோ ||

(ப-ரை) ஆத - ஆன்ம, ஸஹாவஸ்ஸ - இயல்பிலிருந்து, விவரீதோ - வேறுபட்டவருக்கு, பஹி கம்மம் - புறச் செயல்கள், கிம் காஹிதி - என்ன செய்யும்?, ச - மேலும், பஹு˜விஹம் - பலவாறான, கவணம் து - உபவாசம் முதலான கடுமையான தவங்கள், கிம் காஹிதி- என்ன செய்யும்? ஆதாவம் - வெய்யிலில் நிற்றல் முதலான உடல் வருத்தல், கிம் காஹிதி - என்ன செய்யும்? எ.று.

(க-ரை) தன் ஆன்ம இயல்புக்கு எதிராக உள்ளவருக்கு நாள் செயல்கள், உபவாசங்கள், வெய்யிலில் நிற்றல் முதலான தவங்கள் என்ன நன்மை செய்யும்? (ஒன்றும் செய்யாது).

(வி-ரை) ஆன்ம நம்பிக்கை இலாத புற ஒழுக்கங்கள் பயன்படா என்கிறார்.

ஆன்ம இயல்பிலிருந்து வேறுபடுதல் என்றால் தன்னை அறியாது இருத்தலாம். தன்னை அறிந்த போது ஒழுக வேண்டிய ஒழுக்கங்களைத் தன்னை அறியாது ஒழுகினால் என்ன பயன் விளையும்? ஒன்றும் விளையாது. ஒரு அபவ்வியர் முனிவர் ஆகிறார். அவர் பாடம் ஓதுதல், குறைகளுக்கு கழிவிரக்கம் கொள்ளல் (பிரதிகிரமணம்) முதலான புறச் செயல்களைச் செய்கிறார். கடுமையான உபவாசம் முதலான

தவங்களை மேற் கொள்கிறார். கோடையில் பாறையில் நிற்றல் முதலான யோகங்களைச் செய்கிறார். அவற்றால் அவருக்கு என்ன நன்மை விளையும்? அபவ்வியருக்கு நற்காட்சி இல்லை. அதனால் ஆன்ம இயல்பு அனுபவம் இல்லை. இவை இல்லாத போது இந்தப் புற அறச் செயல்களால் அவர் முத்தி அடைவது இல்லை. அது போல முனிவர் ஆன்ம இயல்பிலிருந்து விலகியவராக இருந்தால் இத்தகு புற அறச் செயல்கள் அவருக்கு முத்தியைத் தராது என்பதாம். ஆன்ம அனுபவத்தோடு கூடிய புறச் அறச் செயல்களே பயனுடையன எனத் தெளிய வேண்டும்.

> **" வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
> **தானறி குற்றப்படின்"**

என்பார் தேவர்.[59]

100 ஜதி படதி பஹு ஸுதாணி ய ஜதி காஹிதி பஹுவிஹம் ச சாரித்தம் |
தம் பாலஸுதம் சரணம் ஹவேஇ அப்பஸ்ஸ விவரீதம் ||

(ப-ரை) அப்பஸ்ஸ - ஆன்ம இயல்பிலிருந்து, விவரீதம் - வேறுபட்டவர், பஹு - பலவான, ஸுதாணி - நூல்களை, ஜதி படதி - படிக்கிறார் எனினும், ச - மற்றும், பஹுவிஹம் - பல வகையான, சாரித்தம் - சாரித்திரங்களில், ஜதி காஹிதி - ஒழுகுகிறார் எனில், தம் - அது, பால ஸுதம் - பால சுருதம், சரணம் - பால ஒழுக்கமாக, ஹவேஇ - ஆகும், எ.று.,

(க-ரை) ஆன்ம இயல்பிலார் நூலறிவும் ஒழுக்கமும் அறியாமை உடையதாம்.

(வி-ரை) இதுவும் அது.

ஆன்ம இயல்பை அறியாது பல நூல்களைக் கற்றாலும், பலவான ஒழுக்கங்களை அல்லது தவங்களைச் செய்தாலும் அவை எல்லாம் குழந்தை விளையாட்டே. குழந்தைகள் அறியாமை உடையவர்கள். அவர்கள் செயல்களில் அறியாமை மண்டிக் கிடத்தலைக் காணலாம். அது போல உண்மை தெளியாதார் செயல்களும் குழந்தை செயல்களாக - அறியாமையுடைய செயல்களாகவே விளங்கும். நூல்களில் இவற்றைப் 'பால சுருதம்', 'பால சாரித்திரம்' 'பால தபம்' எனக் குறிப்பிடுவர். அறியாமை உடையவர் செயல்கள் என்பது கருத்து.

ஆசாரியர் 'பால ஸுதம், சரணம்' என ஆண்டுள்ளமை இந்த அடிப்படையில்தான். ஆன்ம இயல்பைத் தெளியாது பல நூல்களைக் கற்றாலும் அவர் அறியாமை உடையவரே. அதே போல அவருடைய ஒழுக்கங்களும் அறியாமை உடையனவே. பதினோரு அங்கம் ஒன்பது பூர்வம் வரை அபவ்வியர் படிக்கின்றனர். முனிவராகி புறத்தே மூல குணங்களிலும் ஒழுகுகின்றனர். என்றாலும் அவர் முத்தி

59. திருக்குறள் - 272

அடைய தகுதி இல்லாதவர். அவர் ஆன்ம இயல்பை அனுபவம் செய்யாதவர் / செய்ய முடியாதவர். எனினும் நூல் வல்லவராகவும், புற ஒழுக்கமுடையவராகவும் உள்ளார். அது போல ஆன்ம இயல்பை அறியாதார் நூல் அறிவும் புற ஒழுக்கமும் முத்தியைத் தராது எனத் தெளிதல் வேண்டும்.

101 வேரக்க பரோ ஸாஹூ பர தவ்வபரம்முஹோ ய ஜோ ஹோதி |
ஸம் ஸார ஸுஹ விரத்தோ ஸகஸுத்த ஸுஹேஸு அணுரத்தோ ||

(ப-ரை) ஜோ ஸாஹூ - எந்த ஸாது, வேரக்க பரோ - பற்றில்லாதவரோ, ய - மற்றும், பர தவ்வ - புறப் பொருளை, பரம்முஹோ - நோக்காதவரோ, ஸம்ஸார ஸுஹ - பிறவிச் சுகத்தை, விரத்தோ - விரும்பாதவரோ, ஸக ஸுத்த ஸுஹேஸு - தன் ஆன்ம இன்பப் பேற்றில், அணுரத்தோ - ஈடுபாடு உடையவரோ, எ.று.

102 குணகண விஹூஸியங்கோ ஹேயோபாதேய ணிச்சிதோ ஸாஹு |
ஜாணாஜ்ஜயணே ஸுரதோ ஸோ பாவஇ உத்தம டாணம் ||

(ப-ரை) குணகண - குணங்களால், விஹூஸியங்கோ - அழகு பெற்ற உடலுடையவரோ, ஹேயோபாதேய - ஏற்கத் தக்கன, ஏற்கத்தகாதனவற்றில், ணிச்சிதோ - தெளிவானவரோ, ஜாணாஜ்ஜயணே - தியானத்திலும் நூல் ஓதுகையிலும், ஸுரதோ - மிகு ஈடுபாடு உடையவரோ, ஸோ ஸாஹு - அந்த ஸாது, உத்தம டாணம் - முத்தி நிலையை, பாவ இ - அடைகிறார், எ.று.,

(க-ரை) பற்றற்ற, புறப் பொருளை நோக்காத, பிறவிச் சுகம் தேடாத, தன் ஆன்ம இன்பத்தில் ஆர்வ முடைய, குண அணிவுடைய, ஏற்பன - ஏலாதனவற்றில் தெளிந்த, தியானத்திலும் நூல் பயிற்சியிலும் ஆர்வம் மிக உடைய முனிவர் முத்தி நிலையை அடைகிறார்.

(வி-ரை) முத்தி அடையும் முனிவர் குண நலன்களைக் கூறுகிறார்.

முத்தி ஆன்மத் தூய்மையால் அடையப்படுகிறது. உயிர் அனாதி காலமாகக் கரும மலத்தால் மலினப்பட்டு காம வெகுளி மயக்க உணர்வுகளில் நிகழ்ந்து பிறவிப் பெருங்கடலில் துன்புற்று வருகிறது. அத் துன்பம் நீங்க உயிரை மலின நிலையிலிருந்து மாசற்ற நிலைக்கு உயர்த்த வேண்டும். மாசற்ற நிலைக்கு உயர முனிவர் ஒழுகும் ஒழுக்கங்களை - முதன்மையான ஒழுக்கங்களை இங்கே ஆசாரியர் சாற்றியுள்ளார்.

'வைராக்கியம்' : உறுதி - உடல் முதலானவற்றில் பற்று இல்லாத உறுதிப்பாடு. முனி பதவியில் - துறவில்- நுழையும் போது இந்த உறுதியே அடிப்படையாக அமைகிறது. அந்த உறுதியில் உறுதியாக தொடர்ந்து நிற்றலைச் செய்கிறார் முனிவர்.

'புறப்பொருள் நோக்காமை' தன் உயிர் தவிர பிற எல்லாம் புறப் பொருளே. தன் உயிரை நோக்கும் உயிர் புறப் பொருளை நோக்காது பாராமுகமாகவே இருக்கும். அம் முகத்திருப்பல் உடையவராக முனிவர் திகழ்வார்.

'புலன் இன்பம் போற்றாமை' : பிறவியில் தேடும் இன்பம் பொறிகள் வழி பெறப்படும் புலன் இன்பம் ஆகும். அது ஆன்மீய இன்பம் அன்று. அது போலி இன்பம். பிற பொருளில் இன்பம் கிடைக்கிறது என எண்ணுதல் அறியாமை ஆகும். அவ் வறியாமை இல்லாத முனிவர் புலனின்பத்தைப் போற்றுதல் இல்லை.

'தன்னுயிர் இன்பம் போற்றுதல்': தன்னுயிரே இன்ப வடிவம். அதுவே இயல்பான / உண்மையான இன்பம். அது உயிராலேயே துய்க்கப்படுகிறது. கவலை ஏதும் கலக்காத, கருவி ஏதும் தேவை இலாத இன்பம் அது. அதனை நாடுபவர் முனிவர்.

'அணியோடு கூடியவர்': உடலுக்கு அணிகள் பொன் முதலானவற்றால் செய்யப்படுகின்றன. அவ் வணிகளை விலக்கி விட்டு ஆடை முதலானவற்றை விலக்கிவிட்டு முனிவர் தன் உயிர் பிரதேசம் எனும் உயிர் உடலை மூல குணங்கள் மேலை (உத்தர) குணங்கள் எனும் அணிகளால் அழகு செய்கிறார்.

'ஏற்றல்-ஏலாமை': உயிருக்கு நன்மை செய்வன ஏற்கத்தக்கன; தீமை செய்வன ஏற்கத் தகாதன. அந்த ஏற்றல்-ஏலாமையில் தெளிவுடையவர் முனிவர்.

'தியான ஆர்வலர்': தரும தியானம், வெள்ளை (சுக்கில) தியானங்களில் மிகு ஈடுபாடு உடையவர். உயிரை நோக்கி ஒருமுகப்படும் உணர்வே உண்மையில் தியானமாகும். அதுவே முந்தைய வினை அழிவுக்கும் புதிய வினை செறிப்புக்கும் காரணம் ஆகும். முனிவர் அத் தியான பயிற்சியைச் செய்கிறார்.

'நூல் ஓதுதல்' : பரமாகமம் பரமான்ம இயல்பைப் பகர்வதாகும். நூல் வழி ஆன்மாவின் இயல்பு நோக்கப்படுகிறது. அதனால் முனிவர் இடைவிடாது நூல் பயிற்சியில் நின்று அறிவு விளக்கத்துக்கு வழி செய்கிறார்.

இத்தகு அகவுணர்வு (பாவனை) உடைய முனிவரே உயிரைத் தூய்மை ஆக்கி அவ் வுயிரின் தலை வரம்பான நிலையை-முத்தி நிலையை அடைகிறார். இவை இல்லாது புறத் தோற்றத்தாலோ புற ஒழுக்கங்களாலோ முனிவர் முத்தி அடையார் என்பது குறிப்பு.

'ஆர்த்தரவுத் திரத்த சிந்தை
அறவெறிந்து உயிரை மாற்றில்
பேர்த்துமுத் திக்கண் வைக்கும்
தரும சுக் கிலத்தி யானம்
ஓர்த்துடன் உள்ளம் வைத்தான்
உதிர்ந்தன வினைகள் பின்னைப்

பார்த்தீப குமரன் சிந்தைப்
பரமமா முனிவன் ஆனான்'

என்பார் வாமனர்.[60] முனிமை நிலை இதுதான்.

103 ணவிஏஹிம் ஜம் ணவிஜ்ஜஇ ஜாஇஜ்ஜஇ ஜாஇஏஹிம் அணவரயம் |
துவ்வேந்தேஹிம் துணிஜ்ஜஇ தேஹத்தம் கிம் பி தம் முணஹ ||

(ப-ரை) அணவரயம் - இடைவிடாது, ணவிஏஹிம் ஜம் - வணங்கப்படுகிறவர்களாலே, ணவிஜ்ஜஇ - வணங்கப்படுகிறது, ஜாஇ ஏஹிம் - தியானிக்கப்படுகிறவர்களாலே, ஜாஇஜ்ஜஇ - தியானிக்கப்படுகிறது, துவ்வந்தேஹிம் - துதிக்கப்படுகிறவர்களாலே, துணிஜ்ஜஇ - துதிக்கப்படுகிறது, தேஹத்தம் - உடலுக்குள், கிம்பி - எது ஒன்று உள்ளது, தம் - அதை, முணஹ - நீ அறிக எ.று.

(க-ரை) உடலுக்குள் ஏதோ ஒன்று உள்ளது. அதனை பெருமைக்கு உரியவர்கள் வணங்குகின்றனர், தியானத்துக்கு உரியவர்கள் தியானிக்கின்றனர். துதிக்குரியவர்கள் துதிக்கின்றனர். பவ்வியனு அந்த உயர்ந்த பொருளை நீ அறிக.

(வி-ரை) 'ஆன்மாவை அறிக' என ஆசாரியர் அருளுகிறார்.

உடலுக்குள் ஒன்று உள்ளது. அது பரமான்மா ஆகும். ஆனால் அது கரும மலத்தாலே மூடப்பட்டுள்ளது. என்றாலும் அதனைப் பிரித்து அறிகின்றனர் மெய்யுணர்வு உடையவர்கள். ஆசாரியர் அந்தப் பரமான்மாவின் சிறப்பை / பெருமையை மூன்று குறிப்புகளாலே விளக்குகிற். பெருமைக்கு உரியவரை உலகம் போற்றுகிறது / வணங்குகிறது. மனிதருள் ஆறுகண்ட பேரரசரும், தேவருள் இந்திரரும் பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியவர். அவரும் பரமான்மாவை வணங்குகின்றார் / போற்றுகின்றார். முனிவர்தம் தியானப் பொருளாக விளங்குகிறவர் தீர்த்தங்கரர் ஆவார். அவரும் பரமான்மாவைத் தியானிக்கிறார். பவ்வியர்தம் துதிக்குரியவராக பஞ்ச பரமேட்டிகள் உள்ளனர். அவ் வைங்குரவரும் பரமான்மாவைத் துதி செய்கின்றார். இப்படி முத்தி நெறியில் உள்ளவராலும் முத்தி நிலையை அடைந்தவராலும் இடைவிடாது போற்றப்படுகிற பரமான்மா இப்போது உடலுக்குள் உள்ளது. அந்த பரமான்மாவை அறிய வேண்டும். அந்த பரமான்மாவை-உடலுக்குள் அடைபட்டுக் கிடக்கும் பரமான்மாவை-தியானம் செய்தே தீர்த்தங்கரர் முதலானோர் தீர்த்தங்கரராகி முத்தியை அடைந்துள்ளனர். முத்தி அடைந்த அனைவரும் ஆன்மாவை அறிந்து தியானித்தே முத்தியை அடைந்தனர், இனி அடையப் போகிறவரும் அந்தத் தூய ஆன்மாவை அறிந்து தியானித்தே முத்தியை அடைவர். அதனால், "பவ்விய! உன் உடலுக்குள் உள்ள அந்த பரமான்மாவை அறிக! தியானம் செய்க! என ஆசாரியர் அருளோடு வழிப்படுத்துகிறார்.

60. மேருமந்தர புராணம் - 433.

‘கருமக் கடல்கடந்த கைவலச் செல்வன்
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் யாரே?
எரிமலர்ச் சேவடியை ஏத்துவார் வான்தோய்
திருமுத்து அவிர் ஆழிச் செல்வரே அன்றே !’

‘முனிமை முகடாய மூவா முதல்வன்
தனிமைத் தலைமை தனதுதான் என்ப
தனிமைத் தலைமை தனதுதான் என்றால்
பனிமலர் தூய்நின்று பழிச்சாவாறு என்னே?’

என பரமான்மா போற்றப்படுதலை அறியலாம்.[61]

104 அருஹா ஸித்தாயரிய உஜ்ஜாயா ஸாஹூ பஞ்ச பரமேட்டீ |
தே வி ஹு சிட்டஹி ஆதே தம்ஹா ஆதாஹுமே ஸரணம் ||

(ப-ரை) அருஹா - அருகர், ஸித்த - சித்தர், ஆயரியா - ஆசாரியர், உவஜ்ஜாயா - உவாத்தியாயர், ஸாஹூ - ஸாதுக்கள், பஞ்ச - ஐந்து, பரமேட்டீ - பரமேட்டிகள், தே வி ஹு - இந்த ஐந்து நிலையினரும், ஆதே - ஆன்மாவிலே, சிட்டஹி - நிலை பெற்றுள்ளனர், தம்ஹா - ஆகையால், ஆதா ஹு - அப் பரமான்மாவே, மே - என்னுடைய, ஸரணம் - அடைக்கல மாகும், எ.று.,

(க-ரை) ஐந்த பரமேட்டி நிலைகளும் ஆன்ம நிலையே ஆகும். அதனால் பரமான்மாவே என்னுடைய அடைக்கலம் ஆகும்.

(வி-ரை) ஆசாரியர் ஆன்மாவே அடைக்கலம் என்கிறார்.

இந்த ஐந்து நிலைகளும் ஆன்ம நிலைகளே ஆகும். நான்கு காதி வினைகள் அழியும் போது அருக நிலை அமைகிறது. அதே உயிர் அகாதி வினைகளை அழிக்கும் போது சித்த நிலையை அடைகிறது. துறவு ஏற்க துணை புரியும் முனிவர் நிலை ஆசாரியர் நிலை ஆகும். நூல் ஓதுவித்துதல் செய்பவர் நிலை உவாத்தியாயர் நிலை ஆகும். மும்மணி வடிவமான முத்தி நிலைக்கு முயல்பவர் நிலை சாது நிலையாகும். இந்த ஆன்மா உடலுக்குள் இருக்கிறது; கரும மூடல் இருந்தாலும் இந்த ஐந்து நிலையையும் அடையும் தகுதி உள்ளது. இந்த ஆன்மாவின் தூய்மை நிலையைத் தியானம் செய்தலே ஐம்பத தியானம் ஆகும். இந்த ஆன்மாவே அடைக்கலம். வேறு அடைக்கலம் இல்லை. இப்படி ஆசாரியர் பஞ்ச பரமேட்டி தியான வடிவமாக-மங்கல வாழ்த்து செய்கிறார்.

61. *சீவக சிந்தாமணி 2741, 1609.*

105 ஸம்மத்தம் ஸண்ணாணம் ஸச்சாரித்தம் ஹிஸத்தவம் சேவ |
சஉரோ சிட்டஹி ஆதே தம்ஹா ஆதா ஹு மே ஸரணம் ||

(ப-ரை) ஸம்மத்தம் - நற்காட்சி, ஸண்ணாணம் - நல் அறிவு, ஸச்சாரித்தம் ஹி - நல்லொழுக்கமும், சேவ - மற்றும், ஸத்தவம் - நல் தவமும், சஉரோ - இந் நான்கும், ஆதே - ஆன்மாவில், சிட்டஹி - உள்ளன, தம்ஹா - ஆகையால், ஆதா ஹு - உண்மையில் ஆன்மா, மே - எனக்கு, ஸரணம் - அடைக்கலம், எ.று.,

(க-ரை) மும்மணி வடிவமாக ஆன்மா உள்ளது. அந்த பரமான்மாவே எனக்கு அடைக்கலம் ஆகும்.

(வி-ரை) இதுவும் அது.

மெய்ப் பொருளை உள்ளவாறு நம்பும் உணர்வு நல் நம்பிக்கை ஆகும். ஐயம், திரிபு, மயக்கம் இன்றி தன் உயிரை / மெய்ப் பொருளை அறிதல் நல்லறிவு ஆகும். அந்த நல்லறிவால், மெய்ப் பொருளை உறுதி செய்து, விருப்பு வெறுப்பு முதலான மலின உணர்வு இல்லாது தன் இயல்பான உணர்வில் நிகழ்தல் நல்லொழுக்கம் ஆகும். இம் மூன்றையும் அடைய தன் ஆற்றலுக்கு ஏற்ப முயற்சி செய்தல் - சாதனை செய்தல் - நல் தவம் ஆகும். இந் நான்கும் 'ஆராதனை' எனப்படும். இந் நான்கும் ஆன்மாவின் நிகழ்வே ஆகும். அதனால், ஆன்மாவே என்னுடைய அடைக்கலம் என்கிறார், ஆசாரியர்.

106 ஏவம் ஜிண பண்ணத்தம் மோக்கஸ்ஸ ய பாஹுடம் ஸுபத்தீஏ |
ஜோ படஇ ஸுணஇ பாவஇ ஸோ பாவஇ ஸாஸயம் லோக்கம் ||

(ப-ரை) ஏவம் - இவ்வாறு, ஜிண - ஜிநரால், பண்ணத்தம் - அருளப் பெற்ற, மோக்கஸ் ய பாஹுடம் - 'மோக்ஷ பாகுடத்தை', ஸுபத்தீஏ - நல் பக்தியுடன், ஜோ - எவர், படஇ - படிக்கிறார், ஸுணஇ - கேட்கிறார், பாவஇ - நினைக்கிறார், ஸோ - அவர், ஸாஸயம் - நிலையான ஸோக்கம் - பேரின்பத்தை, பாவஇ - அடைகிறார், எ.று.,

(க-ரை) ஜிநரால் அருளப் பெற்ற இம் 'மோக்ஷ பாகுட' நூலை அன்புணர்வுடன் படிக்கிறவர், கேட்கிறவர், நினைக்கிறவர் நிலையான முத்தி இன்பத்தை அடைகிறார்.

(வி-ரை) கடைசி மங்கல வாழ்த்துக்குப் பிறகு நூலின் பயனைக் கூறி நூலை முடிக்கிறார் ஆசாரியர்.

இந் நூல் முத்தி குறித்தும் முத்தியின் காரணம் குறித்தும் நன்கு விளக்குகிறது. முத்தி என்பது அனுபவம் ஆகும். அது சொல்லுக்கு அப்பாற்பட்டது. அதனைக் காரண வகையால் கூறலாமே தவிர வேறு வழி இல்லை. இந் நூல் அக் காரணங்களை

விளக்குவதால் இதனைப் படிப்பதாலும், கேட்பதாலும், நினைத்தலாலும் முத்தியை அடையலாம் என நூலை முடிக்கிறார் ஆசாரியர். எனவே இந் நூல் ஆன்ம சாதனைக்கு நிமித்தம் மட்டுமே என அறிதல் வேண்டும்.

நூலை முடிக்குங்கால் நூலால் ஆகும் பயனையும் உரைத்தல் வேண்டும் என்பது மரபு. என்னை?

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடுஆ எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே'

என்ப ஆதலின்.[62]

ம ங் க ல ம்

பாகத மூலமும் தமிழ் உரையும் முற்றும். எண் பாகுடம் (அஷ்டபாகுடம்) முற்றும்.

இவ்வுரையாக்கத்துக்குப் பயன்பட்ட நூல்கள்

1) ஆர்யிகை சுபார்சுவ மதியார் இந்தி உரை 'ஷட்பாகுடம்'

2) பண்டிதவரர் ஜய சந்திரர் 'அஷ்டபாகுடம்' இந்தி உரை.

62. நன்னூல் 47.

இலிங்க பாஹூடம்

மங்கல நுழைவாயில்

உயிரும் உடலும் தொடக்க மற்ற காலமாகத் தொடர்பு கொண்டு வருகிறது. அத் தொடர்பு எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்ற ஆய்வும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த ஆய்வுக்கு தொடக்கமும் இல்லை;முடிவும் இல்லை. காலம் காலமாக நிகழ்ந்து கொண்டு வருகிறது. காலங்காலமாக நிகழ்ந்து கொண்டே இருக்கும்!

உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை பிரிப்பது என முடிவு செய்யும் ஓருயிர் அது முயற்சி தொடங்கிய நாளிலிருந்து உயிரிலும் உடலிலும் சில மாறுதல் நிகழ்வதைக் காணுகிறது. அகத்தே உயிரில் நிகழும் மாறுதலுக்கு ஏற்ப புறத்தே உடலிலும் மாறுதல் நிகழ்கிறது. இந்த உடல் மாறுதல் உயிர் மாறுதலின் குறியீடாக அடையாளமாக விளங்குகிறது. குறியீடுகள் வழியாகக் கருத்தைப் புரிந்து கொள்ளுதலும் மனித வரலாற்றில் காணப்படுகிறது.

எழுத்து (வரி) வடிவம் கொள்ளுதற்கு முன்பு குறியீடுகளே புரிதல் கருவியாக இருந்திருக்கின்றன. அந்தக் குறியீட்டு முறை தன் உடலில் இருந்தே தொடங்கி இருக்க வேண்டும். தன் உடலில் தோன்றிய மாற்றங்களே குறியீடுகளுக்கு ஆதாரமாக இருந்து இருக்க வேண்டும். அதன் பிறகே குறியீடுகளின் வகையும் விரிவும் ஆகி இருக்க வேண்டும். இன்னும் ஆகிக் கொண்டிருக்கிறது.

அதே போல உயிர் தன் இயல்பை உணரும் மாற்றத்தைப் பெறுகின்ற போது உடலிலும் சில மாற்றங்கள் நிகழ்வதனைக் காணுகிறது. தன்னுடைய முயற்சி உயிரில் நிகழ்கிறது. ஆனால் மாற்றம் உடலிலும் காணப்படுகிறது. எனவே உடலில் காணப்படும் மாற்றம் கண்டு உயிரில் இன்ன மாற்றம் நிகழ்கிறது என்று அறிய முடிகிறது. இந்தப்புற மாற்றம் முத்தி நெறியில் முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. உயிருக்கும் உடலுக்கும் இடையே நிமித்த நைமித்திக உறவு இருக்கிறது. உயிர் மாற்றத்தால் உடல் மாற்றமும் உடல் மாற்றத்தால் உயிர் மாற்றமும் நிகழ்கிறது. இது பிறவி நிலை. இப்பிறவி நிலையிலிருந்து விடுபட முயலும் முயற்சியாளன் தன் உயிரின் நிகழ்வில் மாற்றங்களைக் காணுகிறான். அதன் விளைவாக உடலில் (புறத்தே) மாற்றம் நிகழ்கிறது. அக நிலையில் நிகழும் மாற்றமே புற நிலை மாற்றத்துக்கு ஆதாரமாகும். இந்த அடிப்படை நுட்பத்தை நூல் முதலிலேயே ஆசாரியர் குறிப்பிடுகிறார்.

அந்த காதையின் தமிழ் வடிவம்:

தருமமே தோன்ற தோன்றுமே குறியே
தருமமும் குறிதான் தருவது அன்றே
தருமம துணர்வாம் தெளியவே அறிக
தருகுறி யாலே பெறும்பய னென்னே?

தருமம் உள்ளே மலரும் போதுதான் புறத்தே குறி (அடையாளம்) தோன்றும். புற அடையாளம் அக தருமத்தைத் தருவது அன்று. அதனால் உடலுக்கு குறி தருவதால் என்ன பயன்? உணர்வில் உள்ளது தருமம் என அறிய வேண்டும் என்கிறார் ஆசாரியர். ஜிந நெறியில் புறத் தோற்றம் அக தருமத்தால் அமைகிறது என்று சுட்டி அந்த அக தருமம் இல்லாமல் புறத் தோற்றம் கொள்வதால் வரும் கேடுகளை விளக்குகிறார். நரகம் முதலான துன்பங்களில் விழ வேண்டும் என எச்சரிக்கிறார். அதோடு வெறும் தோற்றம் உடையவர் விலங்கு என்கிறார். விலங்கு பொறிகள் வழிப்பட்டு வாழ்வது; விவேகம் இல்லாதது. அதே போல வெறும் தோற்றம் உடையவர் பொறிகள் வழிப்படுபவர், அஞ்ஞானி என உய்த்துணர வேண்டும்,

மக்கள் உடல் தோற்றம் மட்டும் கண்டு மயங்குவர். ஆனால் நற்காட்சியாளன் வெறும் தோற்றம் மட்டும் காண்பது இல்லை. உடன் அத் தோற்றத்துக்கான அக குணங்களையும் நோக்குகிறான். பிறகே அவருக்குப் பணிவிடை செய்கிறான். முதலில் அறிமுகம் இல்லாதார் போலக் கருதி எழுதல் எதிர் கொள்ளல் முதலானவற்றைச் செய்கிறான். பிறகு அறிமுகம் ஆனார் போல பணிவிடை செய்து பயன் அடைகிறான்.

இந்த நூலில் ஆசாரியர் முதன்மையாக ஜிந தோற்றம் பற்றியும் அதன் உள் கருத்து பற்றியும் விளக்கி உள்ளார். ஜிந தோற்றம் ஏற்போருக்கு இது கையேடு. மற்றவருக்குக் குறிப்பேடு. இந்த மங்கல உணர்வோடு நுழைக நூலில் ! மங்கலம் பெறுக !

ஓம் சாந்தி!

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

-ங்க பாஹு-ட

(இ—ங்க பாகுடம்)

எனும்

துறவுத் தோற்ற விளக்கம்

(பாகத மூலமும். தமிழ் உரையும்)

மங்களா சரணம்

1. காஊண ணமோகாரம் அரஹந்தாணம் தஹேவ சித்தாணம் |
வோச்சாமி ஸமணலிங்கம் பாஹு-டஸத்தம் ஸமாஸேண ||

(பதவுரை) அரஹந்தானம் - அருக பரமேட்டியையும் தஹேவ- அதே போல, ஸித்தாணம் - சித்த பரமேட்டியையும் ணமோக்காரம் - வணக்கம். காஊண - செய்து, நான் (ஆசாரியர் குந்த குந்தர்) ஸமண - சமணர், லிங்கம் - தோற்றம் (அடையாளம்) கூறும் பாஹு-ட - பாகுட, ஸத்தம் - நூலை, ஸமாஸேண - சுருக்கமாக, வோச்சாமி - சொல்லுவன் என்றவாறு

(கருத்துரை) அருகரையும் சித்தரையும் வணங்கி சமணர் தோற்றம் கூறும் நூலைச் சுருக்கமாகச் சொல்லுவன்.

(விளக்க உரை) ஆசாரிய தேவர் இறைவணக்கம் கூறி நூலைத் தொடங்குகிறார். இறை வணக்கத்துடன் நூலைத் தொடங்குதல் மங்கலமாகும். என்னை?

வழிபடும் தெய்வம் வணக்கம் செய்து
மங்கல மொழிமுத லாக வகுத்தே
எடுத்துக் கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் இன்றி இனிது முடியும்[1]

என்ப ஆகலின் இவ் வண்ணம் வணங்கி நூலைத் தொடங்குதல் நூலறிந்தார் மரபாகும். இறைவரை வணங்குதல் மங்கலம் ஆகும். ஏனெனில் அவ் வணக்கம் வணங்குவாரின் உணர்வில் சுப உணர்வை ஆக்கலால் பாபம் அழிய காரணம் ஆகிறது. பாபத்தை அழித்து நன்மையை நல்குவதே மங்கலம் ஆகும். அம் மங்கலத்தால் எடுத்த செயல் இனிது முடியும் என்பதாம்.

---

1. நன்னூல் மயிலைநாதர் உரை மேற்கோள் நூ.55

அடுத்து நூலைக் கூற உறுதி கொள்கிறார் 'ஸமணலிங்கம்' 'சமணர் அடையாளம் என்பது பொருள். முத்தி நெறியில் முயற்சியுடையாரைச் சமணர் என்பர். என்றாலும் இச் சொல் பற்றற்ற துறவியரைக் குறிப்பதாகும். பற்றற்றவரைத் துறவி என்பர். ஆனால் துறவி எனும் பெயரில் உள்ளார் பல தோற்றங்களில் உள்ளனர். உண்மையில் துறவியின் தோற்றம் என்ன? அடையாளம் என்ன? எனும் ஐயம் தோன்றவே செய்யும். ஏனெனில் துறவுத் தோற்றத்தில் உண்மையான துறவியும் இருப்பார், போலித் துறவியும் இருப்பார். இது தவிர்க்க முடியாததே. ஏனெனில் மெய்யறியாமல் தோற்றம் கொள்வார் எப்போதும் உள்ளனர். ஆனால் அவர் மெய்யறியாதவர். அதனால் அவா துறவி எனும் பெயரில் பல தோற்றங்களைக் கொண்டனர். கருத்து என்ன வென்றால் உண்மை உள்ள போது பொய்யும் இருக்கும் என்பதாம்.

ஆனால் இங்கே ஆசாரியர் பார்வை சற்று ஆழமானது. அவர் ஜிந துறவில் தோற்றம் எப்படி அமையும் என ஆய்கிறார். அவர் காலத்தில் ஜிந தோற்றத்தில் வேறுபாடுகள் இருந்துள்ளன. அவ்வேறு பாடுகளைச் சுட்டாமல், உண்மை தோற்றம் எப்படி அமைகிறது என்பதனைக் காட்டுதலே அவர் கருத்தாகத் தோன்றுகிறது.

"ஸமாலேண" என்பதால் சுருக்கமாகவே உரைக்க எண்ணம் கொண்டுள்ளார். அடையாளம் சுட்டுதலே அவர் குறி. அதனால் நூல் சுருங்கிய வடிவில் அமைகிறது. மிக விரிவுக்குத் தேவை இல்லை என்று சுருதி உள்ளார்.

பாகுடம் எனில் அன்பளிப்பு பரிசு என்று பொருள். "ஒரு பாகுடம் ஈந்த பின்" என்பார் மேருமந்தர புராணம் உடையார்[2] நூல் நுவலும் பொருள் பரிசுப் பொருளாக, அன்பளிப்பாகக் கருதப்படுவதால் அது பொருளுடைய நூலும் பாகுடம் எனச் சுட்டப்படுகிறது. ஆசாரியருடைய அன்பையும் அருளையும் சுட்டும் அரிய சொல் இது. ஆசாரியருடைய பல நூல்கள் "பாகுடம்" எனும் பெயரால் அமைந்துள்ளன என்பதும் கருதத்தக்கது. "ஸத்தம் சாஸ்த்ரம் மெய்ந் நூல்" அன்பளிப்பு நூலை உரைக்கிறேன் எனப் பொருள் காணலாம்.

ஜிந தோற்றம் பகவான் ஏற்ற தோற்றமாகும். அத்தோற்றத்தில் நின்றே சமணர் தோற்றத்தை விளக்கினார். அத்தோற்றத்தில் தற்போது மலினம் காணப்படுகிறது. அதனைக் கருதியே உண்மை தோற்றத்தை உரைக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

2. **தம்மேண ஹோஇ லிங்கம் ணலிங்க மத்தேண தம்மஸம்பத்தீ |**
ஜாணேஹி பாவ தம்மம் கிம் தே லிங்கேண காயவ்வோ ||

2. *மேருமந்தர புராணம் 245*

(ப-ரை) தம்மேண - தருமத்தால், லிங்கம் -தோற்றம் (அடையாளம்) ஹோ இ - அமையும், லிங்க மத்தேண - தோற்றத்தால் மட்டும், தம்ம - தருமத்தை, ஸம்பத்தீ - அடைதல், ண -இல்லை, ஆகையால்; பாவ - இயல்பான, தம்மம் - தருமத்தை ஜாணேஹி- அறிக, தே -அந்த, லிங்கேண - தோற்றத்தால், கிம் -என்ன, காயவ்வோ-காரியம் ஆகிறது எ-று

(க-ரை) தருமத்தால் பெறுவது தோற்றம். தருமம் தோற்றத்தால் மட்டும் பெறுவது அன்று. ஆகையால் இயல்பான தருமத்தை அறிக. வெறும் அந்த தோற்றத்தால் என்ன பயன் உண்டு? ஒன்று மில்லை.

(வி-ரை) ஆசாரிய தேவர் இந்த காதையில் தருமத்தையும் தோற்றத்தையும் இணைத்துக் காட்டுகிறார். புறத்தோற்றம் அக தருமத்தால் அமைகிறது என்கிறார். தருமம் என்பது இங்கே உயிர் இயல்பாகும். உயிரின் இயல்பு என்னவோ அதுதான் தருமம். உயிர் பற்றற்று நிற்கும் போது, புறமும் பற்றற்ற தோற்றத்தைக் காட்டும். அந்த உயிரில் வீதராக (பற்றற்ற) நிகழ்வு இல்லை என்றால் புறத்தோற்றம் இருந்தும் பயன் இல்லை. ஏனெனில் புறத்தோற்றத்தால் அகத்தில் பற்றற்ற தன்மை அடைய முடியாது. அதனால் பாவ தருமத்தை அறிதல் வேண்டும் என்றார். விருப்பு வெறுப்பற்ற தூய ஞான தரிசன வடிவமே பாவ தருமம் ஆகும். அதனையே அறிய வேண்டும். அதனை அறியாது புறத் தோற்றம் கொள்வதால் என்ன பயன்? ஒன்றும் இல்லை. ஏனெனில் முத்தி நெறியில் உயிரின் தரும வடிவமே வேண்டப்படுகிறது. புறத்தோற்றம் வெறும் அடையாளம் மட்டுமே. வெறும் தோற்றம் கொள்வதால் முத்தி அடைய முடியாது என எச்சரிக்கிறார் ஆசாரியர்.

விலையிலா வாச மாலை
தூமத்தால் வேய்ந்த கூந்தல்
தலையினின் றிழிந்த காலைத்
தான்துறந் திட்டதே போல்
மலையன தவத்து வேடங்
கண்டுமுன் வணங்கி மாண்ட
நிலையினின் றிழியப் பின்னை
நேரிழை இகழ்ந்திட டாளே.

இங்கே அசைவிலா மலை எனக் கருதி தவத் தோற்றத்தை போற்றிய ஒருத்தி அத்தோற்றத்துக்குரிய வீதராகம் அகத்தே இல்லை என்று அறிந்த போது புறத் தோற்றம் உடைய முனிவரை இகழவும் செய்தாள். அதனால் அகத்தே தூய்மை இல்லாத புறத்தோற்றம் இகழ்ச்சிக்கு உரியதாகிறது.[3]

3. மேருமந்தர புராணம் 865

அகமும் புறமும் ஒத்து இருக்க வேண்டும் என்பது கருத்து. ஜிந நெறியில் மூன்று தோற்றங்கள் மட்டுமே உள்ளன என ஆசாரிய தேவர் தம்ஸன பாகுடத்தில் குறிப்பிட்டுள்ளார். [4]அவை 1 பகவானை ஒத்த பற்றற்ற அம்மண தோற்றம். 2 உயர்ந்த இல்லறத்தார் தோற்றம் 3. ஆர்யிகையர் தோற்றம். இம் மூன்று தோற்றங்கள் தவிர நான்காவது தோற்றம் இல்லை. இம் மூன்று தோற்றங்கள் தவிர பிற தோற்றங்கள் ஒதுக்கப்பட வேண்டும். அவை வந்தனைக்கு உரியன அல்ல. இம் மூன்று தோற்றங்கள் வெறும் புறத் தோற்றங்களாக இருக்குமானால் அவையும் விலக்கப்பட்ட வேண்டியவையே. வழிபடுவோன் தோற்றம் கண்டு வழிபட வில்லை. அத் தோற்றம் வழியாக அகத்தே உள்ள தோற்றத்துக்கு ஒத்த குணத்தைப் போற்றுமுகமாகவே வழிபடுகிறான். அகத்திலே குணம் இல்லை என்றால் புறத் தோற்றத்தைப் போற்றிப் பெறுவது என்ன? ஒன்றுமில்லை. முத்தி நெறியில் அத்தோற்றத்தால் பயன் இல்லை. அதனால்தான் ஆசாரியரே அத்தோற்றத்தால் என்ன விளைவு இருக்க முடியும் என வினா எழுப்பியுள்ளார்.

3. **ஜோ பாவ மோஹிதமதீ லிங்கம் கேத்தூண ஜிணவரிந்தாணம் |**
உவஹஸதி லிங்கிபாவம் லிங்கிம்மி ய ணாரதோ லிங்கீ ||

(ப-ரை) ஜோ - எவர், ஜிணவரிந்தாணம் - தீர்த்தங்கரருடைய, லிங்கம் - உருவை, கேத்தூண - ஏற்று, லிங்கி பாவம் - தோற்றத்துக்குரிய, அக - உணர்வை, உவஹஸதி - வேடிக்கையாக்குகிறார், அவர், பாவ மோஹித - மதீ - அறிவு பாபத்தில் மயங்குகிறது, லிங்கிம்மிய தோற்றத்தில், அவர் - ணாரதோ - நாரதர், லிங்கீ - தோற்றம் உடையவர் எ.று.

(க-ரை) தீர்த்தங்கரர் உருவை ஏற்று அதற்குரிய அக உணர்வை நகைப்புக்கு இடமாக்குகின்றவருடைய அறிவு பாபத்தில் மயங்குகிறது. அவருடைய தோற்றம் நாரதர் தோற்றம் ஒத்தது.

(வி-ரை) ஜிந உருவை ஏற்று அதற்குரிய ஒழுக்கம் இல்லாது ஒழுகி நகைப்புக்கு இடமாகின்றவர் அறிவு பாபத்தில் மயங்குகிறது என்கிறார்.

அக நிலையும் புற நிலையும் இசைந்திருக்கும் தோற்றமே உண்மையான ஜிந தோற்றமாகும். அந்த தோற்றம் தீர்தங்கரர் போன்ற பெருமைக்குரியவரால் ஏற்று உரைக்கப்பட்ட தோற்றமாகும். அத்தோற்றத்தை ஏற்க ஆன்மாவை அறிந்து போற்றும் உறுதி வேண்டும். அது இல்லாது அத் தோற்றத்தை ஏற்று பிறர் நகைப்புக்கு இடமாகும் செயல்களைச் செய்பவர் பாப வினை பந்தத்துக்கு இலக்காகிறார். ஆசாரியர் அவருடைய அறிவு பாபத்தில் மயங்குகிறது என்று சுட்டுகிறார். அதாவது பாபத்துக்குப் பாத்திரமாகிறார் அவர் என்கிறார். ஓர் எடுத்துக் காட்டும் தருகிறார். அது

4. தம்ஸான மக்கம் கா 18

நாரதர் தோற்றம் போன்றது. ஒவ்வொரு கல்ப காலத்திலும் ஒன்பது நாரதர் தோன்றுகின்றனர். வாசுதேவர் (நாராயணர்) தோன்றும் போது இவர் தோன்றுகின்றனர். மிகவும் கலகப் பிரியர். பிறரை அழச் செய்வதில் ஈடுபாடு மிக உடையவர். வாசுதேவரைப் போல நரக கதி செல்கின்றனர்.[5] இவர்கள் தங்கள் விருப்பம் போலச் சுற்றித் திரிகின்றவர்கள். இந்த நாரதரை எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார் ஜிந தோற்றம் ஏற்று தம் விருப்பம் போல ஒழுகுவதால்.

இனி 'லிங்கணாஸேதி லிங்கீணம்' என்ற பாடமும் சுட்டுகின்றனர். இதன் பொருள் இத்தகைய தோற்றம் உடையவர் பிறர் தோற்றத்தையும் அழிக்கின்றனர் என்பதால் இவருடைய இழிவான ஒழுக்கம் நல்ல ஒழுக்கம் உடைய பிறரையும் அழிக்கிறது. அதாவது அத் தோற்றத்துக்கு ஊறு ஏற்படுகிறது, ஒருவர் செய்யும் தவறு பிறரையும் தவறுடையதாகக் கருதச் செய்கிறது என்பதனை உலகில் காணலாம். இத்தகையோர் தருமத்துக்கு ஊறு செய்த பாபம் ஈட்டுகின்றனர் என்பதாம்.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும்

என்று கூறியுள்ளதையும் இங்கே நினைவுகூறலாம்.[6]

4. **ணச்சதி காயதி தாவம் வாயம் வாஏதி லிங்கரூவேண|**
ஸோ பாவமோஹித மதீ திரிக்கஜோணீ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) லிங்கரூவேண - பற்றற்ற தோற்றம் கொண்டு, ணச்ரதி - ஆட்டம் ஆடுகிறவர், காயதி - பாட்டுப் பாடுகிறவர், வாயம் - இசைக் கருவி, வாரதி - இசைக்கின்றவர், ஸோ - அவர், பாவ மோஹித மதீ - பாபத்தில் மயங்கிய அறிவுடையர், திரிக்க ஜோணி- விலங்கு பிறவியர், ஸோ - அவர், ஸமணோ-சமணர், ண - அல்லர் எ.று

(க-ரை) ஜிந தோற்றம் கொண்டு நாட்டியம் ஆடுதல், பாட்டுப்பாடுதல், இசைக் கருவி இசைத்தல், முதலான செய்பவர் அறிவு பாபத்தில் மயங்கியதாகும். அவர் சமணர் அல்லர். விலங்கு ஆவார் அதாவது அஞ்ஞானி ஆவார்.

(வி-ரை) ஜிந தோற்றம் உடையவர் மன மொழி உடலில் அடக்கம் உடையவர். அவர் இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் ஈடுபடுவாரானால் அம்மூவடக்கமும் இல்லாது போகிறது. மூல குணத்துக்கு ஊறு நேருகிறது. அகஉணர்வும்

5. ஜைனேந்தர சித்தாந்த அகராதி 4 பக் 20
6. திருக்குறள் 271, 275.

மலினப்படுவதால் பாபத்துக்கு இடம் ஆகிறது. அதனால் பாபத்தில் மயங்கும் அறிவுடையவர் என்றார். அவர் விலங்கு ஆவார் என்பதன் கருத்து அஞ்ஞானி ஆவார் என்பதாம். தன் உயிருக்கு நன்மையானது தீமையானது என வேறுபாடு அறியாதவர். அதனால் அவர் அத்தோற்றத்துக்கு உரியவர் அல்லர் என்பதாம். முன் காதையில் நாரதரைச் சுட்டி உள்ளதால் அவர் ஆடிப்பாடி மகிழ்வது போல இவரும் ஆடிப்பாடி மகிழ்ந்து அந்த நாரதர் கீழ்க்கதிக்குப் போவது போல இவரும் கீழ்க் கதிக்குப் பாத்திரமாகிறார் எனச் சுட்டுகிறார் எனலாம். இல்லறத்தார் ஈடுபாடு கொள்ளும் இசை போன்ற நிகழ்ச்சிகளில் முனிவர் ஈடுபாடு கொள்ளுதல் கூடாது என்பதாம்.

5 **ஸம்மூஹதி ரக்கேதி ய அட்டம் ஜாஏதி பஹு பயத்தேண |**
ஸோ பாவ மோஹிதமதீ திரிக்கஜோணீ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) பஹு பயத்தேண - மிக முயன்று, ஸம்மூஹதி - பொருளைச் சேர்க்கிறவர், ரக்கேதி - காப்பாற்றுகிறவர், ய - மேலும் அதற்காக, அட்டம்- ஆர்த்த தியானம், ஜாஏதி- தியானிக்கிறவர், ஸோ- அந்த முனிவர், பாவ மோஹித மதீ - பாப மயக்கத்தில் சிக்கிய மதியுடையவர், திரிக்க ஜோணி - விலங்கு பிறவியர்,ஸோ- அதனால், அவர் ஸமணோ - சமணர், ண - அல்லர். எ.று.

(க-ரை) பற்றுகளைச் சேர்ப்பதிலும் காப்பதிலும் மிக முயற்சியுடைய முனிவர் எப்போதும் ஆர்த்த தியானத்தில் நிகழ்வதால் பாபத்தில் சிக்கிய மதியுடையவர், விலங்கு பிறவியர், அவர் சமணர் அல்லர்.

(வி-ரை) ஜிந தோற்றம் பற்றற்றவர் தோற்றமாதலால் முனிவர் பற்றுடையவரானால் அவர் முனிவர் அல்லர், அஞ்ஞானி என்கிறார். பற்று அகப்பற்று, புறப்பற்று என இருவகைப்படும். அகப் பற்று என்பது தூய ஆன்மாவின் மலினப்பட்ட நிலையாகும். புறப்பற்று என்பது அது நிமித்தமாகப் புறப் பொருளைச் சேர்த்தலும் காத்தலும் ஆகும். அதனால் அந்த உயிர் எப்போதும் அப்பற்றுச் சிந்தனையில் இருப்பதால் அதனை ஆர்த்த தியானம் உடையவர் என்றார். வேண்டியன விலகும் போதும் வேண்டாதன வரும் போதும் கொள்ளும் துன்ப உணர்வு ஆர்த்தம் ஆகும் வேண்டியன தொடர்ந்து இருத்தல் வேண்டும். வேண்டாதன வருதல் கூடாது எனச் சிந்தித்துக் கொண்டிருத்தலும் ஆர்த்த தியானமாகும். அணு அளவு பற்று இருந்தாலும் அவர் முனிமை நிலை இழந்தவர் என்பதே ஆசாரியருடைய எண்ணம். பல இடங்களில் இதனை அவர் தம் நூல்களில் தெளிவு செய்துள்ளார். இங்கே ஜிந தோற்றம் பூண்ட ஒருவர் பற்றுக்கு ஏதுவான செயல்களில் நிகழ்வாரானால் அவர் முனிவர் அல்லர் விலங்கு என்றார். அதாவது முனிமை இயல்பு அறியாது அஞ்ஞானி ஆவார் என்பதாம். அந்த அஞ்ஞானம் காரணமாகப் பாபம் செய்பவராகிக் கீழ்கதிக்குப் போகிறார் என்பதாம்.

அகப் பற்று இல்லாத போது புறப்பற்றும் இராது. அகப்பற்று உள்ள போது புறப் பற்றும் இருக்கவே செய்யும். இவை ஒன்றுக்கொன்று நிமித்த நைமித்தக தொடர்புடையன. ஆர்த்த தியானம் ஆறாம் குணஸ்தானம் வரை இருக்க முடியும் என்பது ஆகம உரை.

என்று தானிவை எய்துவ தென்றெழா
நின்ற ஆர்த்தத்தின் நீடிய ஆயுளூ
குன்ற வந்து விலங்கினுள் ஆயுகம்
அன்று கட்டிய தாயுவு மற்றதே

எனப் பற்று நிமித்தத்தால் ஆர்த்த தியானம் கொண்டு விலங்கு ஆயுள் பந்தமானதைக் குறிப்பிடுதல் காண்க.[7]

6. **களஹம் வாதம் ஜுவா ணிச்சம் பஹுமாணகவ்விஓ லிங்கீ |**
வச்சதி ணாயம் பாஓ கரமாணோ லிங்கிரூவேண||

(ப-தை) பஹு - மிகவும், மாண-மான உணர்வால், கவ்விஓ - செறுக்குற்ற, லிங்கீ - துறவி தோற்றமுடையவர், ணிச்சம் - எப்போதும், களஹதட - குழப்பம், வாதம் - எதிராடல் (தருக்கம்), ஜு வா-சூது, ஆடுதல் செய்கிறான், அவன், லிங்கரூவேண - துறவு தோற்றத்தில், பாஓ - பாவம், கரமாணோ - செய்கிறான், ணரயம் - நரகத்தை, வச்சதி- அடைகிறான் எ.று

(க-ரை) துறவு தோற்றத்தில் உள்ளவன் குழப்பம், தருக்கம், சூது ஆடுதல் முதலான பாபம் செய்கிறான், அதனால் நரகம் அடைகிறான்.

(வ-ரை) ஆசாரியர் தன் தோற்றத்துக்குத் தகாத இமிசை காரியங்களைச் செய்யும் துறவி நரகம் அடைகிறான் என்று கூறுகிறார்.

ஒருவருக்கொருவரைத் தூண்டி விட்டு குழப்பம் செய்தல். வீணாக எதிராடல், சூதாடுதல் முதலான பாப செயல்களைத் தீயோர் செய்வர். துறவி விளையாட்டாகக் கூட இவற்றைச் செய்தல் கூடாது. இத்தகைய செயல்களில் மான உணர்வு மேலோங்கி இருக்கிறது. அது இமிசை உணர்வாகும், பாப உணர்வாகும். இந்த உணர்வுடையார் நரகம் முதலான கீழான பிறவிக்கு செல்வர். அதாவது துறவுத் தோற்றம் ஏற்றும் அதற்கு உரிய உணர்வு இல்லாமையால் நல்ல பிறவியை அடையாமல் கீழான பிறவியை அடைகிறார் என்பதாம்.

உலக மக்கள் இச் செயலைச் செய்வர். அவர் ஒருபோது அறம் கேட்டுத் திருந்தினாலும் திருந்துவர். ஆனால் துறவு தோற்றம் கொண்டோர் இச் செயல்களைச் செய்வரானால் அவர் அறவுரை கேட்கவும் விரும்பார். அதனால் நரகம் முதலான பிறவி அடைவர்.

சூதும் வாதும் வேதனை செய்யும் என்பதாம்’[8]

---

7. மேருமந்தர புராணம் 330 *8. கொன்றை வேந்தன் - 31*

7. **பாவோபஹதம் பாவோ ஸேவதி ய அபம்பு லிங்கிரூவேண|**
ஸோ பாவமோஹித மதீ ஹிண்டதி ஸம்ஸார கந்தாரே||

(ப-ரை) லிங்கிரூவேண - துறவு தோற்றம் கொண்டு, அபம்பு - காமத்தில், ஸேவதி உபஹதம் - செய்பவர், ஸோ- அவர், பாவ-பாப, மோஹித - மயக்கமுடைய, மதீ - மதியுடையராம், ச-மேலும் அவர், ஸம்ஸார - பிறவி, கந்தாரே - பெருங்காட்டில். ஹிண்டதி- சுற்றுகிறார் எ.று.

(க-ரை) துறவுத் தோற்றத்தில் நின்று பிரமசரியம் இல்லாதவர் துறவு உணர்வை அழிக்கிறார். அவர் பாப மயக்கத்தில் உள்ள மதியுடையார். அதனால் பிறவி எனும் பெருங்காட்டில் சுற்றுகிறார்.

துறவு தோற்றம் பற்றற்ற உணர்வின் அடையாளமாகும். அத்தோற்றத்தை ஏற்ற பிறகு பிரமசரிய ஒழுக்கம் போற்றவில்லை என்றால் அவர் தன் உயிருக்கு ஊறு செய்கிறவர் ஆகிறார். அந்த பாப மதியுடையாரை என்ன வென்று சொல்லுவது ? அவருக்கு அமிழ்தும் நஞ்சாகிப் போகும். பிறகு நோய் எப்படித் தீரும்? பிறவிப் பிணி போக்க துறவு தோற்றம் கொண்டார். ஆனால் அவ்வொழுக்கம் போற்றாமல் இழிவாரானால் பிறவியை எப்படிக் கடக்க முடியும்? கடக்க முடியாது என்பதாம்.

மோகத்தால் முடையு டம்பின்
நாற்றத்தை முனிதல் இன்றிப்
போகத்தாற் கழுமி நிற்கும்
புல்லறி வாளர் ஆகும்
சேகற்காம் முடையு டம்பைச்
சேர்தல் மற் றொன்று மென்றிட்டு
ஆகத்தான் நினைக்க மாட்டது
அருந்தவத்து இழிந்து நின்றான்!

என வருதல் காண்க. காமத்தின் விளைவு இது.

8. **தம்ஸண ணாண சரித்தே உவஹாணே ஜஇண லிங்கரூவேண|**
அட்டம் ஜாயதி ஜாணம் அனந்தஸம் ஸாரிஓ ஹோதி ||

(ப-ரை) லிங்க ரூவேண - துறவுத் தோற்றம் கொண்டு, தம்ஸன - காட்சி, ணாண - அறிவு, சரித்தே - ஒழுக்கம், இவற்றில் ஜஇண உவஹாணே - ஒழுக வில்லை எனில், அட்டம்-ஆர்த்த, ஜாணம்- தியானம், ஜாயதி - தியானிக்கிறார், அவர் அனந்த - வரம்பற்ற, ஸம்ஸாரி ஒ - பிறவி உடையவராக, ஹோதி - ஆகிறார். எ.று.

(க-ரை) துறவுத்தோற்றம் கொண்டு மும்மணி ஒழுக்கத்தில் நிகழாது பற்றுகளைத் தியானிப்பவர் வரம்பற்ற பிறவிகளுக்கு ஆட்படுகிறார்.

(வி-ரை) துறவு உணர்வில் நிகழாதவர் துவர்ப்பு உணர்வில் நிகழ்ந்து பிறவிகளில் வீழ்வார் என்கிறார்.

துறவுத் தோற்றம் கொள்ளுதல் அகத்தே துறவு உணர்வு துளிர்க்கும் போது அமைகிறது. அதற்கு ஆதாரம் தன்னையும் பிறவற்றையும் பிரித்துக் காட்டும் மும்மணி ஒழுக்கமாகும். துறவு ஏற்று அவ்வொழுக்கத்தில் நிகழவில்லை எனில் பிறகு அவர் எதில் நிகழ்வார்? உறவு பற்றுகளை உதறி விட்டு வந்தவர் மீண்டும் அவற்றின் சிந்தனையில் ஆழ்ந்து ஆர்த்த தியானம் உடையவராக ஆகிறார். அதன் விளைவாக வரம்பற்ற பிறவிகள் உடையவர் ஆகிறார். வேறு ஏதோ காரணத்தால் துறவுத் தோற்றம் கொள்வார் நிலையை இங்கு ஆசாரியர் உணர்த்துகிறார். அகத்தைத் தூய்மை ஆக்கி உறுதி செய்த பிறகே துறவு ஏற்க வேண்டும். குணமணி அணிந்து குன்றாப்பண்ணவர் குழாத்தைப் புக்கார் என்பார். அதாவது மும்மணி அணிந்து முனிவர் தோற்றம் கொண்டவர் என்பதாம்'.[9]

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்

என்பதும் காண்க.'[10]

9. **ஜோ ஜோடேதி விவாஹம் கிஸிகம்ம வணிஜ்ஜ ஜீவகாதம் ச |**
வச்சதி ணாயம் பால கரமாணோ லிங்கிரூவேண ||

(ப-ரை) லிங்க ரூவேண - துறவுத் தோற்றம் கொண்டு, விவாஹம் - திருமண ஜோ ஜோடேதி- உறவு ஏற்பாடு செய்கிறார், கிஸிகம்ம - உழவுத் தொழில், வணிஜ்ஜ- வாணிபம், ச-மற்றும், ஜீவ காதம் - உயிர் இமிசைக்கு ஏதுவானவற்றைச் செய்கிறார், அவர் பால-பாப, கரமாணோ- செய்து, ணாயம்- நரகத்தை, வச்சதி - அடைகிறார். எ.று.

(க-ரை) துறவு தோற்றம் ஏற்றவர் திருமண உறவு, உழவுத் தொழில், வாணிகம், மருத்துவம் முதலான இமிசை தொழில்களில் ஈடுபாடு கொள்வாரானால் அவர் நரக கதிக்குப் பாத்திரம் ஆகிறார்.

(வி - ரை) ஆசாரியர் இல்வாழ்வார் போல் துறவி தொழில் படுதல் கேடு தரும் என்கிறார்

திருமண உறவு ஏற்பாடு, உழவு, வாணிகம், மருத்துவம் இவை முதலான தொழில்கள் இல்வாழ்வார் செய்வனவாகும் . ஏனெனில் அவர் முழு இமிசை நீக்கியவர் அல்லர். அவர் அணு விரதம் உடையவர். சங்கல்ப இமிசை தவிர பிற இமிசை உடையவர். அவருக்கு இவை தகும். ஆனால் இத்தொழில்களில் இல்வாழ்வாருக்குத்

9. *மேருமந்தர புராணம் 123*
10. *திருக்குறள் 276*

துணை செய்தல் தக்கது அன்று. தன் உயிருக்கு மிகு பாபத்தைத் தருவது ஆகி அவரை நரகம் முதலான பிறவிகளில் உழலச் செய்யும். அதனால் அவர் தோற்றம் கொள்ளுதல் தக்கது அன்று என அறிவுறுத்துகிறார்.

இங்கே முனிவரை முதன்மைப் படுத்தினாலும் துறவு நெறிக்கு வந்து துறவுத் தோற்றம் கொண்ட பிறகும் இத்தகு செயல்களில் ஈடுபடுதல் கூடாது என அறிய வேண்டும்.

ஜீவ காதம் என்ற தொடருக்கு உயிர் வதை என்பது பொருள். உயிர் வதை உடைய மருத்துவம் எனப் பொருள் காணப்படும் மரபும் காணப்படுகிறது அல்லது இமிசைத் தொழில் எனப் பொருள் கொண்டாலும் பொருந்தும்.

10 **சோராண லாஉராணய ஜூத்த விவாதம் ச திவ்வகம்மேஹிம் |**
ஜந்தேண திவ்வமாணோ கச்சதி லிங்கீ ணரயவாஸம் ||

(ப-ரை) சோரண- திருடுதல், ய -மற்றும், லாஉராண - பொய் சொல்லுதல், ஜூத்த- போரிடுதல், ச-மற்றும், விவாதம் - தருக்கம் செய்தல் போன்ற, திவ்வ மிகு கம்மேஹிம்- வினைகள் கட்டக் கூடிய செயல்களில் ஈடுபாடு காட்டுதல், ஜக்தேண- கவறாடுதல், கட்டமாடுதல் முதலான, தீவ்வமாணோ-விளையாட்டுகளில் ஈடுபடுதல் செய்யும், லிங்கீ - துறவி, ணரய வாஸம் - நரகத்துக்கு, கச்சதி - செல்கிறார் எ.று.

(க-ரை) துறவுத் தோற்றம் கொண்டு திருடு முதலான மிகு பாபங்களுக்கு எதுவானவற்றிலும், கவறாடுதல் முதலான விளையாட்டுகளிலும் ஆர்வம் கொள்ளுவார் நரக கதிக்குப் பாத்திரமாவார்.

(வி-ரை) ஆசாரியர் பாப பந்தத்துக்கு ஏதுவானவற்றில் துறவி ஆர்வம் காட்டக் கூடாது என்கிறார்.

துறவி மகா விரதி ஆவார். இமிசை முதலான ஐந்து பாபங்களையும் விட்டவர். அப்படிப் பட்ட தோற்றம் கொண்டு ஒருவர் பாபத்துக்கு ஏதுவான செயல்களில் ஆர்வம் கொண்டால் அவர் உறுதியாக நரகம் செல்கிறார் என்கிறார். ஏனெனில் மிகு துவர்ப்பு உணர்வு இல்லாமல் இத்தகு பாபச் செயலில் ஈடுபட முடியாது. வெகுளி முதலான துவர்ப்பு உணர்வுகள் மிக்கு விளங்கும். அதனால் நரகம் முதலான துன்பங்களை அடைவர் என்பதாம்.

இந்த எச்சரிக்கை துறவில் நிகழும் அனைவருக்கும் பொருந்தும். முனிவருக்கு மட்டும் கூறப்பட்டது எனக் கருதுதல் கூடாது.

'பொய் கொலை களவு காமம்
புலைசுதேன் கள்ள கற்றி

மெய்யுறத் திசையி னோடு
பொருளினை வரைந்து மேனி
நையினும் வதங்கள் அணையா
வகையினா னாக ராசன்
சய்யமா சய்ய மத்தில்
தலைநின்றார் போலச் சென்றான்'

என அணு விரதம் ஏற்ற யானையின் துறவு உணர்வைச் சுட்டுதலைக் காண்க' [11]

11. **தம்ஸண ணாண சரித்தே தவ ஸஞ்ஜம ணியம ணிச்ச கம்மம்மி |**
பீடயதி வட்டமாணோ பாவதி லிங்கீ ணரய வாஸம் ||

(ப-ரை) லிங்கீ - துறவு தோற்றம் கொண்டவர், தம்ஸண-காட்சி, ணாண - அறிவு, சரித்தே - ஒழுக்கம், தவ - தவம், ஸஞ் ஜம - சய்யம், நியம் -நியமம், ணிச்ச கம்மம்மி - நாள் கடமைகள், வட்ட மாணோ - இவற்றில் ஒழுகும் போது, பீடயதி - துன்புறுகிறார் எனில் அவர், வாஸம் - நரகத்தை, பாவதி -அடைகிறார் எ.று

(க-ரை) துறவி தனக்குரிய ஒழுக்கங்களான மும்மணி போற்றல், தவம் செய்தல், நியமங்களைக் கைக் கொள்ளல், நாள் கடமைகளைச் செய்தல் இவற்றில் ஒழுக துன்பம் கொள்வாரானால் அவர் நரகத்தை அடைவார்.

(வ-ரை) துறவி தன் தோற்றத்துக்குறிய ஒழுக்கங்களில் ஒழுகுவதில் சலிப்பு அடைவாரானால் நரகப் பிறவியை அடைவார் என்கிறார்.

துறவி அக நிலையில் தான் கொண்ட தோற்றத்துக்கு ஏற்ப உணர்வுகளை எப்போதும் விழிப்போடு காப்பற்ற வேண்டும். இங்கே ஆசாரியர் துறவியின் செயல்களாகச் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். நற்காட்சி, நல் ஞானம் நல்லறிவு இவற்றில் தெளிவாக இருத்தல் வேண்டும். முத்தி என்பது மும்மணியாலேயே பெறப்படுகிறது.

உரைத்தவிப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி
பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்தனல் லொழுக்கம் ஆகும்
சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய் வீட்டின்
மெய்ந்நெறி யாவ தாமே

என வருதல் காண்க.[12]

11. மேருமந்தர புராணம் 475
12. மேருமந்தர புராணம் 107

தவம் பன்னிரண்டு என்பர். அவை அகத் தவம் ஆறு, புறத்தவம் ஆறு என இரு பகுதிப்படும் 1. அனசனம் (உண்ணாமை) 2. அவமோதுரியம்-(குறைத்து உண்ணல்) 3.விருத்தி சங்கமம் (நியமம் செய்து உண்ணல்) 4. சுவைப் பறித்தியாகம் 5.வெவ்வேறு இடத்தில் உறைதல் 6. உடலை வாட விடல் இவை ஆறும் புறத்தவம் ஆகும் 1. கழுவாய் 2. விநயம் 3. வையாவச்சம் 4. நூல் ஓதுதல் 5. வியுத்சர்கம் 6. தியானம். இவை ஆறும் அகத்தவமாகும்.

சய்யம் என்பது பொறிகள் வழி செல்லாது அடங்குதலும் பிற உயிர்கள் காத்தலும் ஆகும். நியமம் என்பது தக்கன என வரையறுத்துச் செய்தல். ஆறு நாள் கடமைகள் சாமாயிகம், துதி, வந்தனை, பிரதி கிரமணம், பிரத்தியாக்யானம், வியுத்ஸர்க்கம் காலத்தில் செய்ய வேண்டிய ஒழுக்கங்கள் இவை. துறவியர் செய்யும் ஒழுக்கம் இவை. இதனை ஒழுகுதலில் விழிப்பில்லாமால் போதல், சலிப்படைதல் முதலான கொண்டால் துறவி உண்மை உணர்வுடன் துறவு கொள்ளவில்லை அல்லது உண்மை உணர்வை இழந்தார் என ஆகும். அதனால் நரகம் முதலான துன்பங்களை அடைவார் என்பதாம்.

தவம் செய்வார் தம்கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுள் பட்டு.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

என வருவனவும் காண்க.[13] செய்ய தக்கனவற்றைச் செய்யாதவன் அழிவான் என்பதாம்.

12 **கந்தப்பாஇய வட்டஇ கரமாணோ போயணேஸு ரஸகிந்ததி |**
மாயீ லிங்கவிவாஈ திரிக்க ஜோணீ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) போயணேஸு - உணர்வில், ரஸகிந்தி - சுவையை, கரமாணோ - மிக விரும்புபவன், கந்தப்பாஇய - புலன் வேட்கை முதலானவற்றில், வட்டஇ - திளைக்கிறான், லிங்கவிவாஈ - தோற்றத்தைக் கெடுக்கிறான், மாயீ - கபடனாகிறான், ஸோ - அவன், திரிக்க ஜோணீ - விலங்காவான், ஸமணோ - துறவி, ண- அல்லன் எ.று.

(க-ரை) துறவுடையான் உணவுச் சுவையில் மிக உடையனானால் புலன் வேட்கையில் திளைக்கிறான் என்பதாம். அதனால் தன் தோற்றத்தைக் கெடுத்து கபடனாகிறான். அவன் விலங்கு ஆவானே ஒழிய துறவி ஆகான்.

(வி-ரை) துறவு தோற்றம் கொண்டு உணவு வேட்கை கொள்பவன் விலங்கு என்கிறார்.

13. திருக்குறள் 266-466.

ஐம் பொறிகளில் வாயை அடக்குதல் செய்பவனே துறவி ஆக முடியும். உணவுச் சுவையில் நாட்டம் உடையவன் ஒரு போதும் துறவுணர்வு கொள்ள முடியாது. ஏனெனில் அவன் ஐம் புலன்களில் திளைப்பவனாகிறான். அவ் வேட்கையின் விளைவாக உறக்கம் முதலான விழிப்பின்மை அமைகிறது. மற்றும் அப்புலனாசையால் அவற்றை அடைய பல வஞ்சனைகளை மேற்கொள்கிறான். அதனால் தன் தோற்றத்தைக் கெடுக்கிறான். அவன் விலங்குக்கு ஒப்பாவான் மனிதன் அல்லன். அதனால் துறவியும் அல்லன்.

'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று'

'நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்'

என வருவதனையும் காண்க.[14]

13. **தாவதிபிண்டணிமித்தம்கலகம் காஊண புஞ்ஜதே பிண்டம் |**
அவர்பரூஈ ஸந்தோ ஜிணமக்கி ண ஹோஇ ஸோ ஸமணோ ||

(ப-ரை) பிண்ட - உணவு ணிமித்தம் - காரணமாக, தாவதி ஓடுகிறவன், கலகம் கலகம், காஊண - செய்து, பிண்டம் - உணவு, புஞ்ஜதே - உண்பவன், அவர் - பிற துறவியர், ஸந்தோ -இடையே, பரூஈ - பொறாமை கொள்பவன், ஸோ - அந்த, ஸமணோ - துறவி, ஜிணமக்கி - ஜிந நெறியினன், ண ஹோகி - ஆவது இல்லை எ.று.

(ப-ரை) ஜிந தோற்றம் கொண்டு உணவுக்காக ஓடுபவன், அதற்காக கலகம் செய்பவன், அதற்காகப் பிற துறவியரிடம் பொறாமை கொள்பவன் ஜிந நெறியினன் அல்லன்.

(வி-ரை) ஜிந தோற்றம் கொண்டவன் உணவு வேட்கை உடையவனாக இருத்தல் கூடாது என்கிறார்.

நாக்குச் சுவை வெல்லப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஐம் பொறிகளில் மெய்யும் வாயும் வெல்லுதற்கு அரியன. பிற மூன்றையும் வெல்லுதல் எளிதாகும். ஆனால் ஊறு உணர்வையும் உணவு உணர்வையும் வெல்லுதல் அரிதாகும். அதனால்தான் புறத்தவத்தில் அனசனமும் அவமோதரியமும் சுவை பறித்தியாகமும் எண்ணப்பட்டுள்ளன. ஜிந தோற்றம் கொண்ட ஒருவர் நாக்குச் சுவையை வெல்ல வில்லை என்றால் அவர் உணவுக்குச் செல்லும் சரியையை ஓடுகிறார் என இடித்துக் காட்டுகிறார். அதையும் தாண்டி, தனக்கு வேண்டிய

14. திருக்குறள் 273-276.

உணவுக்காகக் கலகமும் செய்ய தயங்குவது இல்லை எனக் காட்டுகிறார். இவை எல்லாம் அவர் துறவு உணர்வு காரணமாகத் துறவு ஏற்க வில்லை என்பதனைச் சுட்டுவதாக உய்த்துணர வைக்கிறார்.

ஜிந நெறியில் - ஜிந தோற்றத்தில் - திரிபுகள் பலஆகி விட்டன என்பதனையே இத்தகு காதைகள் சுட்டுகின்றன எனக் கருத வேண்டி உள்ளது. நெறி ஜிந நெறி என்று சுட்டப்பட்டாலும் அதற்கான மூலத்தோற்றம் அங்கு இல்லை. புதிய இழிவான தோற்றங்கள் தோன்றியுள்ளன. அவை காரணமாக உணவு ஏற்பு பழக்க வழக்கங்களிலும் சிதைவு ஏற்பட்டு கலகம் முதலான உணர்வுகள் தோன்ற காரணமாகி உள்ளன எனவும் எண்ணலாம்.

14 **கிண்ஹதி அதத்ததாணம் பரிணிந்தா வி ய பரோக்க தூஸேஹிம்|**
ஜிணலிங்கம் தாரந்தோ சோரேண வ ஹோஇ ஸோ ஸமணோ ||

(ப - ரை) அதத்த - கொடாத, தானம் - பொருளை, கிண்ஹதி - ஏற்கிறார், ய- மற்றும், பரோக்க தூஸேஹிம் - பிறர் பாரா முகமாக இருந்தால், பரணிந்தா வி - அவரை நிந்திக்கிறார், ஸோ - அந்த, ஸமணோ - சமணர், ஜிணலிங்கம் - ஜிந தோற்றம், தாரந்தோ - ஏற்றாலும், சோரேணவ - திருடனாகவே, ஹோஇ -இருக்கிறார். எ.று.

(க-ரை) கொடாததைக் கொள்ளுதலும், நிந்தனை செய்தலும் உடைய சமணர் ஜிந தோற்றத்தில் இருந்தாலும் திருடருக்கு ஒப்பாவார்.

(வ -ரை) ஆசாரியர் ஜிந தோற்றத்தில் உள்ளார் திருடரைப் போல ஒழுகுதல் கூடாது என்கிறார்.

திருடர் பிறர் பொருளைச் கவர்கின்றனர். பொருளுக்கு உரியவர் தருவது இல்லை. அச்ச மூட்டி பொருளை எடுத்துச் செல்கின்றனர். ஆதரவு அற்ற நிலையிலேயே மறைவாகவே எடுத்துச் செல்லுகின்றனர். அது போன்ற ஒழுக்கம் ஜிந துறவிக்கு இருக்க முடியாது. ஜிந தோற்றம் உடையார் கொடாததைக் கொண்டால், கொடாதாரை நிந்தனை செய்தால் அவர் சமணர் அல்லர். திருடர் என்கிறார். திருடர் போலவே சமணர் ஒழுக்கம் அமைகிறது என இடித்துக் காட்டுகிறார். அப்படிச் சமணர் ஒழுகுதல் கூடாது.

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து

தவ மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று

என உரைத்தமை காண்க. [15]

15. திருக்குறள் 277-274.

15. **உப்படதி படதி தாவதி புடவி ஓ கணதி லிங்கரூவேண |**
இரியாவஹ தாரந்தோ திரிக்கஜோணீ ண ஸோ ஸமணோ||

(ப-ரை) லிங்க ரூவேண - துறவுத் தோற்றத்தோடு, இரியாவஹ - நடை ஒழுக்கம், தாரந்தோ - ஏற்றும், உப்படதி - குதித்து நடக்கிறவர், படதி - (நடக்குங்கால்) விழுகிறவர், தாவதி - ஓடுகிறவர், புடவீன - நிலத்தை, கணதி - தோண்றுகிறவர் அல்லது கீறுகிறவர், ஸோ - அவர், திரிக்க ஜோணீ - விலங்காவார், ஸமணோ - சமணர் ண - அல்லர் எ.று.

(க-ரை) துறவு தோற்றம் கொண்டு நடை ஒழுக்க விதிமுறை ஏற்றும், குதித்தும், தடுமாறி விழுந்தும், விரைந்து ஓடியும், நிலத்தைக் கீறியும் செல்பவர் சமணர் அல்லர் விலங்கு ஆவார்.

(வி-ரை) ஜிந தோற்றம் கொண்டவர் ஏற்ற நடை விதிமுறையை மீறி ஒழுகுவரானால் கீழ்ப் பிறவி அடைவார் என்கிறார்.

ஜிந தோற்றம் ஏற்ற துறவிக்கு மூல குணங்கள் 28 ஆகும். அவை பெருநோன்புகள் (மகா விரதம்) ஐந்து, செய்கை விழிப்புடைமை (ஸமிதி) ஐந்து, நாள் கடமைகள் ஆறு, பொறிகள் அடக்கம் ஐந்து, நீராடாமை, தரையில் படுத்தல், உடுத்தாமை, மயிர் பறித்தல், ஒரு வேளை உணவு, நின்று உணவு ஏற்றல், பல் துலக்காமை ஆகும். இவற்றுள் செய்கை விழிப்புடைமை என்பது நடத்தலில் விழிப்பு, பேசுதலில் விழிப்பு, உணவில் விழிப்பு, பொருளை ஆளுவதில், விழிப்பு கழித்தலில் விழிப்பு என ஐந்தாகும். இந்த காதையில் ஆசாரியர் நடத்தலில் விழிப்பு இல்லாமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

துறவி நடக்கும் போது நான்கு முழம் பார்த்து உயிர்களுக்கு ஊறு ஏற்படாதவாறு நடக்க வேண்டும். இது மூல குணத்தில் ஒன்றாகும். இதனைப் போற்ற வில்லை என்றால் அக நிலையில் விழிப்பு இல்லை என்பதாம். விழிப்பு இல்லை எனில் அங்குத் துவர்ப்பு துளிர் கொண்டுள்ளது எனவாகும். அது பாபத்துக்கு ஏதுவாகும். அதனால் விளைவது நரகத் துன்பம் முதலானவை ஆகும். ஏனெனில் தான் போற்ற வேண்டிய முதன்மையான அகிம்சை விரதம் சிதைந்து போகிறது. இது அவருடைய அஞ்ஞானத்தைக் காட்டுகிறது. அதனால் விலங்கு என்று குறிப்பிட்டார்.

காற்றெதிர் இன்றி மண்ணில்
கண்ணுகத் தளவு நோக்கி
மாற்றினை எறியும் நூல்வாள்
வாய்ப்பிடி நடப்பதேபோல்

நடத்தல் வேண்டும் என்பார். [16]

16. மேருமந்தர புராணம் 850

முன்னுகத் தளவு நோக்கி
முன்புபின்பு இரியச் செல்லார்
இன்சொலும் பிறர்த மக்கு
மிதத்தன அன்றிச் சொல்லார்
அன்பு நீத்து உயிரை ஓம்பி
அளவமைந்து உண்ப ரார்க்கும்
துன்புறக் கோடல் வைத்தல்
மலங்களைத் துறத்தல் செய்யார்

என ஐவகை செய்கை விதி அமைதலைக் காண்க.[17]

16. **பந்தோ ணிரஓ ஸந்தோ ஸஸ்ஸம் கண்டேதி தஹய வஸுஹம் பி |**
சிந்ததி தருகண பஹுஸோ திரிக்கஜோணீ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) ஸந்தோபந்தோ ணிரஓ - தாவரங்களின் இமிசையை எண்ணாதவர் பந்தத்தை, ஸஸ்ஸம் - தாணியங்களை, கண்டேதி - உடைக்கிறவர், தஹய- அதேபோல, வஸுஹம் பி - நிலத்தைத் தோண்டுவார், தருகண - மரங்களை, பஹுஸோ - அடிக்கடி, சிந்ததி - வெட்டுகிறவர், ஸோ - அவர், திரிக்க ஜோணீ - விலங்கு ஆம், ஸமணோ - சமணர், ண அல்லர் எ.று,

(க-ரை) தாவர இமிசையை எண்ணாதவர், தானியங்களைப் பொடிப்பவர், நிலத்தைத் தோண்டுகிறவர், மரங்களை அடிக்கடி வெட்டுகிறவர் சமணர் அல்லர்; விலங்காம்.

(வ -ரை) ஒரு பொறி உயிர்களைப் போற்றாதவர் சமணர் அல்லர் என்கிறார்.

ஜிந தோற்றம் உடையவர் சையம் உடையவராக இருத்தல் வேண்டும். அவர் ஆறுவகைப்படும் உயிர்களைப் போற்ற வேண்டும். அவற்றுக்கு ஊறு நேரா வண்ணம் ஒழுக வேண்டும். மண்ணுடலி, நீருடலி, காற்றுடலி, நெருப்புடலி, தாவர உடலி இவ்வைந்தும் ஒரு பொறி உயிர்கள். இவற்றுக்கு ஊறு செய்தால் வினைக் கட்டு ஆகும் என்பதனை நினையாது தன் மனம் போன போக்கில் நடந்து அவற்றுக்கு ஊறு செய்பவர் முனிவர் அல்லர். விலங்கு அதாவது அஞ்ஞானி என்றார்.

ஜிந தோற்றம் உடைய முனிவர் ஆரம்பம் முதலான இமிசையிலிருந்து விலகியவர். அவர் அறத்தின் பெயரால் பூ பறித்தல், பழம் பறித்தல், மாலை தொடுத்தல், தண்ணீரை ஆளுதல், மண்ணைக் கிளறுதல், தானியங்களளைப் பொடித்தல், மின் விசிறி காற்றில் அமர்தல், நெருப்பில் குளிர் காய்தல், விளக்கு ஏற்றல் முதலான செயல்களைச் செய்தல் கூடாது. தரும காரியத்துக்குத் தானே? என்றும்

17. மேருமந்தர புராணம் 1363

செய்தல் கூடாது. இதனால் என்ன பாபம் வந்து விடும்? என்று கருதுதல் கூடாது. ஒரு பொறியுடையனவும் உயிர்கள். அவற்றுக்கு இமிசை நேரும்படி நிகழ்ந்தால் பாபம் பந்தமாகும் என்று பரம ஆகமங்கள் சுட்டுகின்றன. ஒரு பொறி உயிர்கள் மிகவும் நுண்ணியவை. அவற்றுக்கும் இமிசை வராத வகையில் ஒழுக வேண்டும். 'தயா மலிந்து யாக்கை நோக்கி அமைவரும் தொழிலர்' ஆக முனிவர் இருத்தல் வேண்டும்.[18] அப்படி இல்லாதவர் அஞ்ஞானி- விலங்கு; சமணர் அல்லர்.

17. **ராகம் கரேதி ணிச்சம் மஹிளாவக்கம் பரம் ச தூஸேதி |**
தம்ஸண ணாண விஹீணோ திரிக்கஜோணீ ண ஸோ ஸமணோ||

(ப-ரை) மஹிளாவக்கம் - பெண்களிடம், ணிச்சம் - எப்போதும், ராகம் - ஆர்வம், கரேதி - கொள்பவர், ச - மேலும், பரம் - பிறரை, துஸேதி - பழிப்பவர், தம்ஸணம் - நற்காட்சி, ணாண - நல்லறிவு, விஹிணோ- இழந்தவர், ஸே - அவர், திரிக்க ஜோணீ விலங்காவார், ஸமணோ - சமணர், ண - இல்லர் எ.று.

(க-ரை) பெண்களிடம் எப்போதும் ஆர்வம் காட்டுபவர் பிறரைப் பழிப்பவர் சமணர் ஆகார். விலங்காவார். ஏனெனில் அவர் நற்காட்சி நல்லறிவு இழந்தவர்.

(வி-ரை) விருப்பு வெறுப்புடையவர் சமணர் ஆகார், விலங்காவார் என்கிறார்.

நற்காட்சி நல்லறிவு உடையாரே ஜிந தோற்றம் ஏற்பர். அவருக்கு பிற பொருளில் விருப்பு வெறுப்பு கொள்ளாத நல்லொழுக்கம் அமைகிறது. ஆனால் ஜிந தோற்றம் ஏற்று பெண்களிடம் ஆர்வம் கொள்ளுதலும், பிறர் மீது பழி கூறி வெறுப்பு கொள்ளுதலும் இழிந்த நிலையைக் காட்டுதலாம். அவரிடம் எப்படி நற்காட்சியும் நல்லறிவும் இருக்க முடியும் ? நல்லொழுக்கம் எப்படி ஏற்பட முடியும் ? ஜிந தோற்றம் கொண்டவர் அத் தோற்றத்துக்கு இசைய அகத்தே விருப்பு வெறுப்பு அற்றவராக இருத்தல் வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர் அஞ்ஞானி - விலங்கு ஆவார். தானும் நற்காட்சி இல்லாதவர் பிறரையும் நற்காட்சி இழக்கச் செய்பவர்.அவரோடு தொடர்பு கொள்ளுதலும் தவிர்க்கப் பட வேண்டும்.

அறிவால் அறியா அறியா அதனால்
பிறிதாம் வினையைப் பிணியா அதனால்
நிறையா துநிலா துவிருப் புறநின்று
உறவே முயல்வார் உணர்வுஒன் றிலரே

என நல்லறிவு இல்லாத அஞ்ஞானி நிலையைக் காட்டுவார்.[19] அதாவது நல்லறிவால் ஜிந தோற்றத்தில் ஒழுக வேண்டிய உண்மை ஒழுக்கத்தை அறியாத, அதனால்

---

18. மேருமந்தர புராணம் 801
19. மேருமந்தர புராணம் 780

பொருள் இயல்பு அறியாதவன் ஆகி, பிற பொருளாம் வினையைப் பந்திக்கிறான். அதனால், நிறைதலும், நிலைத்தலும் இல்லாத ஆர்வம் வந்து பொருந்த நின்று அதற்குப் புலமாம் ஐம்புல இன்பம் அடைய முயல்வான் நல்லறிவு இல்லாத அஞ்ஞானி.

18. **பவ்வஜ்ஜ ஹீண கஹிணம் ணேஹம் ஸீஸம்மி வட்டதே பஹுஸோ|**
ஆயார விணய ஹீணோ திரிக்கஜோணீ ண ஸோ சமணோ||

(ப-ரை) பவ்வஜ்ஜ ஹீண - துறவு ஏற்காத, கஹிணம் - இல்வாழ்வாரிடமும், ஸீஸம்மி - சீடர்களிடமும், பஹுஸோ - மிகவும், ணேஹம் - நட்புரிமையுடையவர், ஆயாரா - முனிமை ஒழுக்கம், விணய - குருவிடம் பணிவு, ஹீணோ - இல்லாதவர் ஆக, வட்டதே- ஒழுகுபவர், ஸோ - அவர், திரிக்கஜோணீ - விலங்காவர், ஸமணோ சமணர், ண - அல்லர் எ.று.

(க-ரை) இல்வாழ்வாரோடும் சீடரோடும் மிகவும் நட்புரிமை உடையவர், தன் முனிமை ஒழுக்கமும் குரு விநயமும் இல்லாதவர் சமணர் அல்லர், விலங்காம் - அதாவது அஞ்ஞானி ஆம்.

(வி-ரை) ஜிந தோற்றம் ஏற்றவர் மிக நட்புரிமையும் விநயமின்மையும் உள்ளவரானால் சமணர் அல்லர் என்கிறார்.

சமணத் துறுவு ஏற்றவர் அத் துறவுக்கு ஏற்ற ஒழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். அப்படி இல்லாத நான்கு இடங்களைச் சுட்டுகிறார். இல்வாழ்வாரோடு மிக நெருங்கிய நட்புறவு கொள்ளுதல். துறவிக்கும் மக்களுக்கும் உள்ளதொடர்பு இரண்டு இடத்தில் மட்டுந்தான். ஒன்று: உணவு முதலான ஏற்கும் போது. இரண்டு: அறம் உரைக்கும் போது. இந்த இரண்டு இடம் தவிர வேறு தொடர்பு இல்லை. இதைத் தாண்டி உறவு கொள்ளுதல் ஆர்வம் தோன்ற ஏது ஆகிறது. 2 அதே போல சீடரிடமும். அங்கும் நட்புறவு நெருக்கமாக இருத்தல் கூடாது. ஏனெனில் அது ஆர்வம் மிக ஏதுவாகும் 3. தனக்குரிய 28 மூல குண ஒழுக்கங்களையும் நாள் கடமைகளையும் உவகையுடனும் முயற்சியுடனும் போற்ற வேண்டும். அப்படி இல்லையென்றால் அது வெறுப்புக்கு இடமாகும் 4. அதே போல குருவிடம் உரிய பணிவுடன் ஒழுக வேண்டும். அப்படி இல்லை என்றால் அது வெறுப்புக்கு இடமாகும். இப்படி ஜிந தோற்றம் உடையவர் விருப்பு வெறுப்புக்கு இலக்காகி முனிமையை இழக்கிறார். அதனால் சமணர் அல்லர் விலங்கு அஞ்ஞானி என்றார்.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை.

எனச் சுட்டுதல் காண்க.[20]

20. திருக்குறள் 345

19. **ஏவம் ஸஹிஓ முணிவர ஸஞ்ஜதமஜ்ஜம்மி வட்டதே ணிச்சம் |**
பஹுலம் பி ஜாணமாணோ பாவவிணட்டோ ண ஸோ ஸமணோ ||

(ப -ரை) ஏவம் - இப்படி, முனிவர - துறவியே ! ஸஹி ஓ-ஒழுகி, ணிச்சம்-எப்போதும், ஸஞ்ஜம மஜ்ஜம்மி - முனிவர் பலருக்கிடையே, வர்த்ததே - வாழ்ந்தாலும், பஹுலம் பி - மிகவும் விரிவாக, ஜாணமாணோ -நூலறிவு உடையவரானாலும், பாவ-அக உணர்வில், விணட்டோ - வீழ்ந்தவர் ஆதலால், ஸோ- அவர், ஸமணோ - சமணர், ண - அல்லர் எ.று.

(க-ரை) துறவியே ! முன்பு கூறியபடி ஒழுகி எப்போதும் முனிவர் பலருக்கிடையே வாழ்ந்தாலும், நூலறிவு மிக உடையவராக இருந்தாலும், முனிமை உணர்வு இன்மையால் அவர் சமணர் அல்லர்.

(வி-ரை) இங்கே ஆசாரியர் தொகுத்துக் கருத்தைச் சொல்கிறார்.

ஜின உருவம் ஏற்றவர் அகத்தும் புறத்தும் ஒத்து ஒழுக வேண்டும் என்றார். உடன்பாட்டு முறையாலும் எதிர்மறை முகத்தாலும் அதனை விளக்கினார். இனி அவற்றைத் தொகுத்துச் சொல்லத் தொடங்கி இந்த காதையில் புறத்தே அம் முனிவர் துறவியர் பலருக்கு இடையே உறைந்தாலும், நூல்களில் வல்லவராக இருந்தாலும் அவற்றால் பயன் இல்லை என்கிறார். ஜிந தோற்றம் தருமத்தால் அமைவது (கா 2) அந்த தருமம் ஆன்ம இயல்பாகும். அந்த இயல்பை அறியாது பிற எத்தனை அறிந்தாலும் என்ன பயன்? பல துறவியருக்கு இடையே உடன் இருந்தாலும் என்ன பயன்? ஒன்றுமில்லை. தருமத்தில் இழிந்தவர் சமணர் அல்லர் என்றார். சமண உருவம் தருமம் உள்ள இடத்திலேயே சிறப்படையும். பிற இடங்களில் அல்ல !

20. **தம்ஸண ணாண சரித்தே மஹிலாவக்கம்மி தேதி வீஸட்டோ |**
பாஸத்த வி ஹு ணியட்டோ பாவ விணட்டோ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) மஹிலாவக்கம்மி - பெண்களுக்கு, வீஸட்டோ-நம்பிக்கை ஊட்டியும் நம்பிக்கை கொண்டும், தம்ஸண - நற்காட்சி, ணாண - நல்லறிவு, சரித்தே - நல்லொழுக்கம், தேதி - புகட்டுபவர், பாஸத்த வி ஹு - ஒழுக்கமிழந்த முனிவரைக் காட்டிலும், ணியட்டோ - அழிந்தவர், பாவ விணட்டோ - முனிமையிலிருந்து விழுந்தவர், ஸோ - அவர், ஸமணோ - முனிவர், ண - அல்லர். எ.று.

(க-ரை) பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டி, நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் புகட்டுபவர் இழிந்த ஒழுக்கமுடைய துறவியைக் காட்டிலும் இழிந்தவர், முனிமை இழிந்தவர், அவர் சமணரல்லர்.

(வி-ரை) ஜிந தோற்றம் உடையவர் பெண்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

ஆசாரியர் இந்த காதையில் தருகின்ற கருத்துக்கள் மிகவும் சிந்தனைக்கு உரியன. பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டி அவருக்கு நற்காட்சி, நல் ஞானம், நல்லொழுக்கம் பற்றி கற்பிக்கிறார். தானும் அவரிடம் நம்பிக்கை வைக்கிறார். அவருக்குப் பாடம் நடத்துதல். படிக்கச் செய்தல், தீக்ஷை தருதல், ஒழுக்க முறை கற்பித்தல் முதலான செய்து நம்பிக்கை ஊட்டுகிறார். அதிலே மிகவும் ஈடுபடுகிறார். இத்தகு செயல்கள்- பெண்களோடு அவருக்கு உள்ள நெருக்கத்தையும் ஈடுபாட்டையும் காட்ட வல்லன. அது சமண தோற்றத்துக்கு உகந்தது அன்று. ஏனெனில் அவருடைய அந்த ஈடுபாடு முனிமையில் அவர் இழிந்துள்ள நிலையைக் காட்டுகிறது. அக நிலையில் பாவம் இழிந்துள்ளது. இந்த இழிந்த நிலை ஒழுக்கத்தில் சிதைந்த துறவியரைக் காட்டிலும் இழிந்தது என்கிறார். ஜிந தோற்றம் ஏற்றவர் பெண்களிடமிருந்து எவ்வளவு விலகி இருக்க வேண்டும் என்பதனை இந்த காதை வழி அறிவுறுத்துகிறார். அறம் கற்பித்தல் அல்லது முத்தி நெறி புகட்டுதல் என்ற போர்வையில் பெண்களுக்கு இடையே உறைதல் முனிமை இழிந்த நிலை ஆகும். அவர் சமணர் அல்லர். பெண் துறவியர் ஆண் துறவியரோடு தங்குதல் விலக்கப்பட்டுள்ளது என்பதனை இங்கு உய்த்துணரலாம்.

21. **புஞ்சலிகரி ஜோ புஞ்சஇ ணிச்சம் ஸந்துணதி போஸஏபிண்டம் |**
பாவதி பாலஸஹாவம் பாவ விணட்டோ ண ஸோ ஸமணோ ||

(ப-ரை) ஜோ - எவர், புஞ்சலிகரி - தீயொழுக்கம் உடையவள் வீட்டில், புஞ்சஇ - உணவு ஏற்கிறார், ணிச்சம் - எப்போதும், ஸந்துணதி -அவளைப் புகழ்கிறார், பிண்டம் - தன் உடலை, போஸஏ - இப்படி வளர்க்கிறார், பால ஸஹாவம் - சிறுவன் இயல்பை, பாவதி - அடைகிறார், பாவ விணட்டோ - முனிமையில் இழிந்தவர் ஆகிறார் . ஸோ - அவர், ஸமணோ - சமணர், ண - அல்லர் எ.று.

(க-ரை) தீய ஒழுக்கம் உடையவள் வீட்டில் உணவு கொண்டு உடலை வளர்ப்பவர், அவளைப் பாராட்டுபவர், சமணர் அல்லர். ஏனெனில் அவர் முனிமையில் இழிந்தவர், சிறுபிள்ளை போன்றவர்.

(வி - ரை) ஆசாரியர் தீய ஒழுக்கம் உடைய பெண் வீட்டில் உணவு ஏற்று உடல் வளர்ப்பவர் முனிவர் அல்லர் என்கிறார்.

இங்கே இரண்டு கருத்துகளைத் தருகிறார். 1 தீய ஒழுக்கம் உடையவளிடம் உணவு ஏற்றல் 2. அவளைப் புகழ்தல். உணவு ஏற்கும் முனிவர் உணவு இடுவாரைப் புகழ்தல் இல்லை, உணவு ஏற்பு நியமத்தின் வழி நடப்பதாகும். புண்ணிய உதயத்தால் நிகழ்வதாகும். இன்னார் இனியர் என்ற வேறுபாடு அங்கு இல்லை.

இந்த நிலையில் முனிவர் உணவு இடும் பெண்ணைப் புகழ்தல் என்பது அவருடைய இழிந்த நிலையைச் சுட்டுகிறது. தீய ஒழுக்கம் உடையவளைப் பாராட்டுதல் என்பது உண்மையான பாராட்டுதல் அன்று. அது தான் உணவு பெற வேண்டி அவளைப் புகழ்தலாம். அதனால் தன் உடலை வளர்க்க என்று ஆசாரியர் குறிப்பிட்டுள்ளார். உடலை வளர்க்க எங்கும் உணவு ஏற்கலாம் என்ற உணர்வு முனிமையிலிருந்து இழிந்தமையைக் காட்டுகிறது. அதனால் முனிவர் அல்லர் என்றார்.

22. **இய லிங்கபாஹுடமிணம் ஸவ்வம் புத்தேஹிம் தேஸியம் |**
தம்மம் பாலே இ கட்ட ஸஹியம் ஸோ காஹதி உத்தமம் டாணம் ||

(ப-ரை) இய - இவ்வாறு, லிங்க பாஹுடமிணம்- இந்த லிங்க பாகுடம், ஸவ்வம் புத்தேஹிம் - எல்லாம் அறிந்த கணதரர் முதலானோர், தேஸியம் - உரைத்ததாகும், தம்மம் - அதில் கூறப்பட்டுள்ள தருமத்தை, கட்ட ஸஹியம் - பெரு முயற்சியுடன், பாலேகி - போற்ற ஒழுகுகிறார், ஸோ - அவர், உத்தமம்-உயர்ந்த, டாணம் - இடத்தை (முத்தியை) காஹதி- அடைகிறார். எ.று.

(க-ரை) இவ்வாறு இந்த லிங்க பாகுடம் துறவுத் தோற்றம் அறிந்த ஆசாரியர் அருளியதாகும். அது கூறும் தருமத்தை ஏற்று மிக முயற்சியுடன் ஒழுகுபவர் உயர்ந்த முத்தி இடத்தை அடைகிறார்.

(வி-ரை) லிங்க பாகுடம் ஓதுதலின் பயனைக் கூறுகிறார். ஆசாரியர்.

ஜிநர் தோற்றம் மிகு புண்ணியத்தால் அமைவதாகும். அத்தகு தோற்றம் ஏற்பவர் அதனைக் கெடுக்கிறார் எனில் அவர் நற்பேறு இல்லாதவர், அவர் சிந்தாமணியைச் சோழி வாங்க பயன் கொண்டது போலாகும். அதனால் ஆசாரியர் இத்தகு தோற்றத்தைப் பெற்றவர் மிக முயற்சியுடன் காத்து, அதற்கு உரிய பயனைப் பெற வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

இல்லெனில், முன்பு அறியாமையால் அனந்த பிறவியில் உழன்று வந்தது போல இப்போது ஜிநர் உருவம் ஏற்று தவறான ஒழுக்கத்தில் ஒழுகினால் மீண்டும் அந்த அனந்த பிறவியில் உழல வேண்டியதாகும்.

இந்த பாகுடம் - ஜிந தோற்றம் விளக்கும் நூல் எழக்காரணம் என்ன? என்ற வினா உள்ளத்தில் எழவே செய்கிறது. ஆசாரியர் தமக்கு முன்பு கணதரர் போன்ற எல்லாம் அறிந்தவர் உரைத்ததே உரைக்கப்பட்டுள்ளது என்கிறார். ஜிநர் தோற்றம் எப்போதும் இருக்கும் தோற்றம் என்பது தெளிவாகிறது.

அந்தத் தோற்றத்தில் சிதைவுகள் காணத் தொடங்கும் போது மூலத் தோற்றத்தை எடுத்து விளக்குவர் ஆசாரியர்கள். அது போல இக்காலத்தே ஜிந நெறியில் ஜிந தோற்றம் சிதைந்து வந்துள்ளது. அதனைக் கருத்தில் கொண்டே

ஆசாரியர் இந்த நூல் வழி அந்த மூல தோற்றத்தின் இயல்பைச் சுருக்கமாக உரைத் தருளினார் என எண்ணத் தோன்றுகிறது. அவர் காலத்தில் சிதைவு இருந்தது என்று ஊகிக்க முடிகிறது. இன்றும் அந்த சிதைவுகளின் சின்னங்கள் இங்கும் அங்குமாகச் சிதறிக் கிடக்கின்றன. அச்சின்னங்களுக்கு இடையே மூலச் சின்னத்தைக் கண்டறிந்து போற்ற இந்த நூல் கருவி நூலாக அமைகிறது எனலாம். உண்மை தோற்றம் உரைத்து அருளிய ஆசாரியரை வணங்கி, போலி தோற்றத்தை வணங்காது விலகுவோமாக!

மங்கலம்!

சீல பாஹுடம்

மங்கல நுழைவாயில்

உயிர் இன்பமாக எப்போதும் இருக்க விழைகிறது. இந்த விழைவு இயல்பாகவே உயிரிடம் காணப்படுகிறது. இவ் விழைவு ஓர் உணர்வாகும். மனமுடைய உயிராக இருந்தாலும் மனம் இல்லாத உயிராக இருந்தாலும் இவ்விழைவில் வேறுபாடு இல்லை. அதனால்தான் எல்லா உயிர்களும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இடம் பெயர முடியாத செடி, கொடி முதலானவை இதற்கு விதி விலக்கு அல்ல, அவையும் இந்த விழைவால் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

உயிர் இயல்பாகவே இன்ப வடிவம். அது பேரின்ப வடிவமாகும். ஆனால் அநாதி காலமாக அது வினையோடு தொடர்பட்டு வருவதால் அந்த இன்ப- பேரின்ப இயல்பு நிலை திரிந்து காணப்படுகிறது. அத் திரிவு காரணமாகவே உயிர்கள் இன்பத்தை விழைகின்றன. புறப் பொருள்களை நாடுகின்றன. அந்த விழைவு உணர்வே ஒரு திரிபு தான்.

இந்த விழைவு உணர்வு அறுபடும் போது இன்ப - துன்ப உணர்வும் அறுப்பட்டு போகிறது. அப்போது இடையீடு படாத பேரின்பத் துய்ப்பு நிகழ்கிறது. அது இயல்பானது. புற நோக்கு உடையது அன்று. அதுவே 'சீலம்' எனப்படுகிறது. 'சீலம்' என்பதும் 'அறிவு' என்பதும் ஒன்று எனக் குறிப்பிடுகிறார். ஆசாரியர் (காதை :2). உண்மையில் அறிவு அறிவாக நிகழ்வதே 'சீலம் ஆகும்.

அச்சீலத்தைக் குறியாக வைத்துச் செயல்படும் போது அச்செயல் அகநிலை, புற நிலை என இரண்டு கூறுப்படுகிறது. ஆசாரியர் அக நிலைச் செயலை முதன்மை படுத்துகிறார். இந்நூலுள் அக நிலை ஆன்மாவைச் சார்ந்தது. அதனால் விருப்பு, வெறுப்பு, புலன் வேட்கை முதலான வடிவ உணர்வுகள் இல்லாத தூய நிலையைப் போற்றுகிறார். அதுவே இந்நூலின் ஆதார சுருதி, அதற்கு இசைவாக தவம் முதலானவை பேசப்படுகின்றன. தொகுத்துச் சுட்ட வேண்டுமானால் 'விபாவ' உணர்வுகள் முற்றுமாக விலகி சுபாவ நிலை முனைப்புப் பெற வேண்டும்.

நல்லொழுக்கம் இல்லா அறிவும், நற்காட்சி இல்லா தோற்றமும், சையம் இல்லா தவமும், ஒழுகப்படுமானால் எல்லாம் வீணே யாம் (காதை: 5) என்கிறார். அறிவு

இயல்பை அறிந்து புலன் வேட்கையிலிருந்து விலகித் தன் அறிவு உணர்வில் திகழ்பவர் தவம் மற்றும் குணங்களோடு கூடிப் பிறவியை அழிக்கிறார். இதில் ஐயம் இல்லை (காதை: 8) என்கிறார். சீலம் தான் தூய தபம், தூய நற்காட்சி, தூய அறிவு ஆகும். புலன்களுக்கும் பகை ஆகும். முத்திக்குப் படியாகும் (காதை: 20).

அறிவால் அல்லது நூல்களில் வல்லனாய் இருப்பதால் மட்டும் ஆன்மா தூய்மை அடைவது இல்லை எனும் போது ஆகமங்களில் அறிவு பெற்றும் புலன்களில் திளைப்பவன் முத்தி அடைவான் எனில் பத்து பூர்வ அறிவுடைய ருத்திரன் ஏன் நரகம்சென்றான்? (காதை: 30) அறிவால் மட்டும் உயிரில் விசுத்தி (விளக்கம்) தோன்றும் எனப் புலவர் கூறுவாரானால் பிறகு பத்து பூர்வ அறிவுடைய ருத்திரன் ஏன் தூய உணர்வைப் பெறாது போயினர்? (காதை: 31) எனும் போது சீலத்தின் சிறப்பை வலியுறுத்தலைக் காணலாம். உண்மையும் அதுதான். அறிவும், சீலமும் முரணாக இருத்தல் முடியாது. இரண்டும் இசைந்தே காணப்படும்.

ஆசாரியர் இப்படி ஆன்மாவின் சீலச் சிறப்பை அக நிலையில் நின்று காட்டும் பாங்கு ஆன்ம முயற்சியாளருக்குப் பெரும் பயனுடையதாம். இந்த அடித்தளத்தை நன்குப் புரிந்து கொண்டு நூலை அணுகினால் ஆசாரியர் காட்டும் சீல அனுபவம் படிப்பார் அனுபவமாக ஆக முடியும். இந்த மங்கல உணர்வோடு நூலுள் நுழைக! மங்கலம் பெறுக!

"மோகமே முனிமைக்கு இடையூறது
மோகமில்லவர் நல்ல முனிவரே"

ஓம் சாந்தி!

நம: ஸித்தேப்ய:

ஆசாரியர் குந்த குந்த தேவர்

அருளிய

ஸீலபாஹுடம்

(சீல பாகுடம்)

எனும்

தூய உணர்வு நூல்

(பாகத மூலமும். தமிழ் உரையும்)

மங்களா சரணம்

1. வீரம் விஸால ணயணம் ரத்துப் பல கோமளஸ் ஸமப்பாயம் |
திவிஹேண பணாமி ஊணம் ஸீல குணாணாம் ணிஸாமேஹ ||

(பதவுரை) ரத்த - ஆர்வ உணர்வை, உப்பல- அழியச் செய்யும், கோமள - இனிய மென்மையான, ஸமப் பாயம் -நல் மொழியும், விஸால- அகன்ற, ணயணம் - கண்களும் உடைய, வீரம் - மாவீர பிரபுவை, திவிஹேண - மனமொழி மெய் எனும் மும்மையால், பணாமிஊணம் -பணிந்து, ஸீல-தூய உணர்வின், குணாணாம் குணங்களை, ணிஸாமேஹ- சொல்லுவன், என்றவாறு.

(கருத்துரை) ஆர்வ உணர்வை அழியச் செய்யும் இனிய மொழியையும் அகன்ற கண்களையும் உடைய அந்திம தீர்த்தங்கரரைப் பணிந்து தூய உணர்வின் குணங்களைக் கூறுவன்.

(விளக்கவுரை) ஆசாரிய தேவர் அந்திம தீர்த்தங்கரரைப் பணிந்து நூலைத் தொடங்கியுள்ளார். நூலைத் தொடங்கும் போது வணக்கம் சொல்ல வேண்டும் என்பது மரபு. என்னை?

"**வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்**
சிறப்பென்னும் பாயிர மாம்"

என்பர்.[1] அதிகாரம் எனில் எடுத்துக் கொண்ட நூல் பொருள். வீரம் என்பது வணக்கம். “ஸீஸ குணாணாம்” என்பது அதிகாரம். இப்படி வணக்கமும் அதிகாரமும் சொல்லுதலைச் சிறப்புப் பாயிரம் என்பர். நூலைச் சொல்லத் தொடங்கும் போது வணக்கம் ஏன் கூற வேண்டும்? எனில்,

---

1. நன்னூல் 55ன் மேற்கோள்,

"வழிபடும் தெய்வம் வணக்கம் செய்து
மங்கல மொழிமுத லாக வகுத்தே
எடுத்துக் கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் இன்றி இனிது முடியும்"[2]

என்ப ஆதலின்

வணக்கம் செய்து செயலைத் தொடங்குதல் மங்கலம் என்பர். ஏனெனில், அம்மங்கல வணக்கம் வணங்குவார் உள்ளத்தில் நல்லுணர்வாக அமைகிறது. அந் நல்லுணர்வு பாபத்தை அழிக்க ஏது ஆகும் நன்மையையும் தருவது ஆகும். அதனால் கொண்ட செயல் இடையூறு இன்றி இனிது முடியும் என்பதாம்.

"சீலம்" எனில் உயிரின் இயல்பான உணர்வு. அவ்வுணர்வின் குணங்களைக் கூறுவதாக ஆசாரியர் குறிப்பிடுகிறார். உயிர் அநாதி காலமாகத் தன் இயல்பான உணர்வில் நிகழ வில்லை. வினை எனும் மாசுடன் இணைந்து வருவதால் தன் இயல்பு திரிந்து தூய்மை கெட்டுத் திரிகிறது. அதுவே பிறவி எனச் சுட்டப்படுகிறது. அவ்வுயிர் தன் இயல்பை அறியுமானால், அறிந்து அதில் நிலைக்குமானால், பிறவி ஒழிந்து பிறவா நிலையில் பிறக்கும். அதுவே அதன் இயல்பாகும். அந்நிலையை அடைய அரிய முயற்சி வேண்டும். பயிற்சி வேண்டும். தூய்மை நோக்கிய அப்பயிற்சியும் சீலம் எனச் சுட்டப்படுதல் உண்டு.

அஞ்சினான் மாற்றைச் சால
அடங்கினான் புலங்கள் தம்மை
நஞ்சையே போலும் என்று
நடுங்கினான் தொடங்கல் செய்யான்
வஞ்சமும் படிறும் பற்றும்
செற்றமும் களிப்பும் மாற்றிப்
பஞ்சணு வதங்க ளோடு
சீலங்கள் பயின்று சென்றான்

எனச் சீலப் பயிற்சியைச் சுட்டுதலைக் காணலாம்.[3]

அகன்ற கண்களை உடையவர் அருகர் எனச் சுட்டியுள்ளார். அனைத்துப் பொருள்களையும் பார்ப்பது என்பதனைக் குறிப்பாகச் சுட்டினார் எனலாம். அவர் பார்வைக்குப் படாத பொருள் ஏதும் இல்லை என்பதாம். உண்மையில் பகவான் உலகைத் தன் அறிவுக் கண்ணாலேயே காணுகிறார். புறக் கண் சான்று மட்டுமே. அழகிய பெரிய கண்கள் என்றார். அவருடைய திருவடிகள் சிவந்த தாமரைக்கு ஒப்பானது; கோமளமானது என்றும் 'ரத்துப் பல கோமளஸ்ஸமப்பாயம்' எனும்

2. மயிலைநாதர் உரை.
3. மேருமந்தரம், 535.

தொடருக்குப் பொருள் காணலாம். ரத்த – செம்மை; உப்பலம் – தாமரை; ஸப்பாயம் – இணையடிகள்.

முழுதுணர் அறிவருடைய இனிய மொழி உயிருக்கு இதம் செய்வதாகும். அது உயிரின் மாசாக உள்ள ஆர்வம், செற்றம் முதலானவற்றை அழிக்க ஏதுவாகும். அவரைப் பணிவதன் பயன் அதுவே. அதனால் அக் குணங்களைப் போற்றியுள்ளார் ஆசாரியர்.

**2. ஸீலஸ்ஸய ணாணஸ்ஸய ணத்தி விரோஹோ புதேஹிம் ணித்திட்டோ |
ணவரி ய ஸீலேண விணா விஸயா ணாணம் விணாஸந்தி ||**

(பதவுரை) புதேஹிம் - அறிவர், ஸீலஸ்ஸ - சீலத்துக்கும், ய-மற்றும், ணாணஸ்ஸ - அறிவுக்கும், ய - இடையே, விரோஹோ - வேறுபாடு, ணத்தி -இல்லை என, ணித்திட்டோ-உரைத்துள்ளனர். ய-மேலும், ணவரி- இங்குக் குறிப்பாக, ஸீலேண- சீலம், விணா - இன்றி, விஸயா - புலன்கள், ணாணம் - அறிவை, விணாஸந்தி-அழியச் செய்கின்றன என்பதாம்.

(கருத்துரை) சீலம் அறிவுக்கிடையே வேறுபாடு இல்லை என அறிவர் (ஞானியர்) அறைந்துள்ளனர். இங்குக் குறிப்பாக அறிய வேண்டியது சீலம் இல்லை எனில் புலன்கள் அறிவை அழியச் செய்கின்றன என்பதாம்.

(விரிவுரை) ஆசாரியர் சீலம் அறிவு இரண்டையும் இணைத்துக் காட்டுகிறார். இரண்டுக்கும் இடையே வேறுபாடு இல்லை என்கிறார்.

அறிவு உயிரின் இயல்பாகும். சீலம் என்றாலும் இயல்பு தான். ஆனால் அனாதி கால வினைத் தொடர்பால் இந்த இயல்பு திரிந்து விருப்பு வெறுப்பு அறியாமையில் உயிர் நிகழ்கிறது. பிறவியில் உழல்கிறது. அதனால், இப்பிறவியைத் தானாக தனதாக உயிர் கருதி விருப்பு வெறுப்புகளில் நிகழ்கிறது. அறிவு பொதுவாக இயல்பானது திரிபானது எனலாம். இயல்பானது எனும்போது அது தன்னில் நிகழ்வதாகும். திரிபானது என்னும் போது அதே புறநோக்கில் நிகழ்வதாகும். தன்னில் நிகழ்வது சீலம். புறத்தில் நிகழ்வது சீலமின்மை; அதனால் தான் அறிவுக்கும் சீலத்துக்கும் வேறுபாடு இல்லை என்றார். பிறவியை நோக்காது தன்னை - தன் விடுதலையை நோக்குதல் சீலம் ஆகும்.அதனால் அறிவு சீலம் என்பதில் வேறுபாடு இல்லை. ஆனால் அறிவு இயல்பாக இல்லை என்றால், சீலமாக இல்லை என்றால் அவ்வறிவைப் புலன்கள் அழித்து விடுகின்றன. அதாவது அறிவு அறியாமையாக ஆகிறது. அது சீலமின்மை ஆகும்.

ஆசாரியருடைய பார்வை ஆழமானது. அறிவு அறிவாக நிகழ்தலே சீலம் என எண்ணுகிறார். அதனால்தான் முதல் காதையில் 'சீலத்தின் குணங்களைச்

சொல்லுவன், என்றார். எனவே குணம் என்பது சீலத்தின் சிறப்பைச் சுட்டுவதாகக் கருதலாம்.

அந்தச் சீலம் இல்லை என்றால் அறிவு புலன்களில் செல்லத் தொடங்குகிறது. அதில் ஆர்வமும், ஈடுபாடும் கொள்கிறது. அப்போது அறிவு எனும் தகுதியை இழக்கிறது. அஞ்ஞானம் ஆகிறது. அது சீலமின்மை (கு சீலம்) ஆகும்.

அற்றம் மறைத்தாலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி

என்பர்.[4] அதனால் அறிவுப் போற்றப்பட வேண்டும் என்பதாம். அதுவே சீலமாகும்.

'அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாக அரண்'[5]

3. துக்கே ணஜ்ஜதி ணாணம் ணாணம் ணாஊண பாவணா துக்கம்|
பாவியமஈ வ ஜீவோ விஸயேஸு விரஜ்ஜஏ துக்கம் ||

(பதவுரை) ணாணம் - அறிவு, துக்கே - வருந்தியே, ணஜ்ஜதி - அடையப்படுகிறது; ணாணம் - அந்த அறிவை, ணாஊண-அறிந்தும், துக்கம் - வருந்தியே, பாவணா-போற்றப்படுகிறது.வ - மற்றும், பாவியமஈ - போற்றுதலை உடையதாக, ஜீவோ-உயிரானாலும், விஸயேஸு - புலன்களில், துக்கம் - வருந்தியே, விரஜ்ஜஏ - விலக வேண்டியுள்ளது, (எ.று).

(கருத்துரை) அறிவு பெரு முயற்சியாலே அடையப்படுகிறது. அடைந்த அறிவைத் தெளிந்து பெரு முயற்சியாலே போற்றப்படுகிறது. உயிர் அதனைப் போற்றினாலும், புலன்களை பெரு முயற்சியாலேயே விலக்க வேண்டியுள்ளது.

(விரிவுரை) ஆசாரியர் புலன்களால் அறிவு அழிகிறது என்றார். அவ்வழிவை நீக்க பெரு முயற்சி வேண்டும் என்கிறார்.

அறிவை பெறுவதும், அதனைக் காப்பதும் பிறகு புலன்வேட்கையை விடுதலும், ஒன்றைக் காட்டிலும் ஒன்றுக்கு அரு முயற்சி தேவைப்படுகிறது.

அதனால் அவற்றைத் துன்பப்பட்டே பெற முடிகிறது என்று காட்டியுள்ளார். அறிவு தன்னை நோக்க வேண்டும். இதுநாள் வரை அது புறத்தே நோக்கி வந்துள்ளது. அப்புற முக நோக்கை விட்டு தன்முக நோக்குக்கு வர பெரு முயற்சித் தேவை.

ஒருகால் அது கூடினாலும் அப்படிப் பெற்ற அறிவை மீண்டும் மீண்டும் போற்றி வர பெரு முயற்சி செய்ய வேண்டும்.அப்படி ஒருகால் போற்றினாலும், உயிர் புலன்

4. *திருக்குறள் 846*
5. *திருக்குறள் 421.*

வேட்கையை விலக்க பெரு முயற்சி செய்ய வேண்டியுள்ளது. புலன் வேட்கையே அறிவை அழிக்கிறது. புலன் வேட்கை இன்மையே சீலமாகும் - அறிவாகும் என்பது தெளிவாகிறது.

"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து"[6]

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"[7]

என உரைத்துள்ளமை காண்க.

4. தாவ ணஜாணதி ணாணம் விஸயபலோ ஜாவ வட்டஏ ஜீவோ |
விஸஏ விரத்த மேத்தோ ண கவேஇ புராஇயம் கம்மம் ||

(பதவுரை) ஜீவோ - உயிர், ஜாவ - எப்போது வரை. விஸயபலோ - புலன்களில், வட்டஏ - நிகழ்கிறது, தாவ - அப்போது வரை, ணாணம் -அறிவை, ண ஜாணதி - அறிய முடிவது இல்லை, விஸஏ - புலன்களிலிருந்து, விரத்த மேத்தோ - விலகுவதால் மட்டும்,புரா இயம் - பழைய, கம்மம் - வினை, ண கவேஇ -அழிவது இல்லை (எ.று)

(கருத்துரை) எப்போது வரை உயிர் புலன்களில் நிகழ்கிறதோ அப்போது வரை அது அறிவை அறிய முடிவது இல்லை.மேலும் புலன்களிலிருந்து விலகுவதால் மட்டும் பழைய வினை அழிவது இல்லை.

(விளக்கவுரை) ஆசாரியர் புலன் வேட்கையிலிருந்து விலகுவதால் மட்டும் முன்பு கட்டிய கருமம் கழிவது இல்லை என்கிறார்.வினை அழிதல் என்பது புதிய வினையைக் கட்டாமல் கழிதலாகும். பழைய வினை உதயத்துக்கு வரும் போது அதன் வழி உபயோகம் (அறிவுணர் முனைப்பு) செல்லாமல் இருத்தல் வேண்டும்.

அப்போது அவ்வினை கழியும். இது பழைய வினை அழியும் முறையாகும். புலன் வேட்கையிலிருந்து விலகி நிற்பதால் மட்டும் பழைய வினை அழிய முடியாது. ஏனெனில் உயிர் எப்போது எதை அறிகிறதோ அப்போது அது அதில் தன்மய மாகிறது. புலன் வேட்கை விருப்போடு நிகழும் போது உயிர் அதில் தன்மயமாகிறது.

அப்போது அறிவின் அனுபவத்தைப் பெறவில்லை. விருப்பு, வெறுப்புக்களில் நிகழ்ந்து வினையைக் கட்டிக் கொள்கிறது. அதே போல அறிவை அறியாமல் புலன் வேட்கையிலிருந்து விலகி நிகழும் போது அவ்வேட்கையை விட்டேன் எனும் விருப்பு உணர்விலேயே அது தன்மயமாகிறது.

6. திருக்குறள் 136
7. திருக்குறள் 137.

அந்த ஆர்வ உணர்வு காரணமாக மீண்டும் வினையைக் கட்டுகிறது. பழைய வினையை அழிக்கவில்லை. ஏனெனில் பழைய வினை அழிய அறிவை அறிய வேண்டும்.அதாவது அறிவு தன்னில் நிகழும் அனுபவத்தைப்பெற வேண்டும். அப்போது பழைய வினை அழிவு அமையும். புதிய வினை கட்டாது.

ஆசாரியர் இந்த காதையில் பழைய வினையை அழிக்க தன் முகமான அறிவே ஆற்றல் உடையது என்று காட்டியுள்ளார். எனவே ஆன்மாவை அறியாத, அதாவது தன்முகமான அறிவை அறியாதவர் புலன் வேட்கையை விலக்குவதால் மட்டும் வினையைக் கெடுக்க முடியாது. ஆன்ம அறிவோடு கூடிய புலன் வேட்கை விடுகையே சிறப்புடையதாம் எனத் தெளிய வேண்டும்.

அபவ்ய உயிர் அருகர் தோற்றம் ஏற்று, புலன் வேட்கையிலிருந்து விலகி நிற்கின்றது. ஆனால் அறிவு, ஆன்ம அறிவு - அனுபவம் இன்மையால் பழைய வினையைக் கெடுக்காமல் மீண்டும் புதிய வினையைக் கட்டிக் கொண்டு பிறவியில் உழல்கின்றது. அதனை இங்கு இணைத்துப் பார்க்கலாம். அல்லது மித்யா தவத்தரை எண்ணிப் பார்க்கலாம்.

ஆன்ம அறிவு இல்லாத புலனடக்கங்கள் முத்தி நெறியில் பயனுடையன அல்ல என்பதாம்.

"வேடந் தரித்து விதி அந்தரிக்க ஒழுகி மெய்ந்நூல்
பாடம் தரித்து உண்மை பாரா முனிவரின் பாயரிமான்
பீடம் தரிக்க இருந்தபெம் மான் அறம் பேணலின்றி
மூடம் தரித்து எண்ம யத்துநின்றார்நல்லர் மும்மடியே"

என உண்மை அறிவின் அனுபவம் இன்றி ஏற்ற புலன் அடக்கத்தின் பயனின்மையைச் சுட்டுதலைக் காணலாம்.[8]

5. ணாணம் சரித்தஹீணம் லிங்கக்கஹணம் ச தம்ஸண விஹூணம் |
ஸஞ்ஜம ஹீணோ ய தவோ ஜஇ சரஇ ணிரத்தயம் ஸவ்வ ||

(பதவுரை) சரித்த - சாரித்திரம், ஹீணம் - இல்லாத, ணாணம் -அறிவு, ச- மேலும், தம்ஸண - நற்காட்சி, விஹூணம் - இல்லாத, லிங்க - துறவு தோற்றம், கஹணம் - ஏற்பு, ய- மற்றும், ஸஞ்ஜம -சையம், ஹீணோ - இல்லாத, தவோ-தபம், ஜஇ சரஇ -ஒழுகப்படுமானால், ஸவ்வ - எல்லாம், ணிரத்தயம் - வீணே. எ.று

(கருத்துரை) நல்லொழுக்கம் இல்லா அறிவும், நற்காட்சி இல்லா தோற்றமும், சையம் இல்லா தவமும் ஒழுகப்படுமானால் எல்லாமே வீணேயாம்.

8. திருநூற்று அந்தாதி 62

(விரிவுரை) அறிவு, தோற்றம், தவம் இம்மூன்றும் பயன்தரும் இடம் சுட்டுகின்றார் ஆசாரியர்.

புலன் வென்ற அறிவு வேண்டும் என முன்னே குறிப்பிட்டார். அவ்வறிவும் நல்லொழுக்கத்தோடு கூடி இருக்க வேண்டும் என்கிறார். அறிவு பெற்று ஒழுக்கத்தை ஏற்க வில்லை எனில் அவ்வறிவால் ஆம் பயன் என்ன?

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்பர்.[9] அறிவின் பயன் ஒழுக்கம் கொள்ளலே ஆகும். அந்த அறிவும் நல்லறிவாக இருத்தல் வேண்டும். அப்போது துறவுத் தோற்றம் கொள்ள வேண்டும். தன்னையும், பிறிதையும் பிரித்தறிந்து தன்னை நோக்குதல் நற்காட்சி ஆகும். அந்த நற்காட்சி தோன்றிய பிறகே தோற்றம் எடுக்க வேண்டும். முத்தி நெறியில் முனைய வேண்டும். அந் நற்காட்சி இல்லாது எடுக்கும் தோற்றத்தால் என்ன பயன்? சிறு நோன்புடையார் (அணு விரதி) தோற்றமானாலும், பெரு நோன்புடையார் (மாவிரதி) தோற்றமானாலும் நற்காட்சி - நல் நம்பிக்கை தோன்றிய பிறகே அமைய வேண்டும்.

ஜிநர் நெறியில் செல்லுங்கால் சையம் அமைதல் வேண்டும். புலன் வேட்கையில் போகா உணர்வும், உயிர்களைப் போற்றும் உணர்வும் சய்யம் ஆகும். அகிம்சையின் வெளிப்பாடு ஆகும்அது. அதுவே தவமாகும். தவம் கொண்டு சய்யம் தப்பின் என்ன பயன்?

"**தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து**
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று"

என்பர்.[10] சய்யம் இல்லாத தவம் இன்னாமைக்கு ஏது ஆகும் என்பதாம். எனவே அறிவும், தோற்றமும், தவமும் தமக்குரிய தகுதியோடு இல்லை எனில் அவை எல்லாம் வீணே ஆகும்.

6. ணாணம் சரித்தஸு'த்தம் லிங்கக கஹணம் ச தம்ஸண விஸு'த்தம் |
ஸஞ்ஜம ஸஹிதோ ய தவோ தோஒ வி மஹாபலோ ஹோ இ ||

(பதவுரை) சரித்த - ஒழுக்க, ஸு'த்தம் - தூய்மையுடைய, ணாணம் -அறிவு, ச- மேலும், தம்ஸண - நற்காட்சி, விஸு'த்தம்-தூய்மையுடைய, லிங்கக் கஹணம் - துறவு ஏற்பு, ய - மற்றும், ஸஞ்ஜம -சையம், ஸஹிதோ கூடிய, தவோ - தவம், தோஒ வி- அற்பமானாலும், மஹா பலோ - பெரும்பயன், ஹோஇ -ஆகும். எ-று

9. திருக்குறள் 391
10. திருக்குறள் 274

(கருத்துரை) தூய நல்லொழுக்கம் கூடிய அறிவும், நற்காட்சி தூய்மை கூடிய தோற்றமும், சய்யம் கூடிய தவமும் அற்பமாக அமைந்தாலும் அதனால் பெரும்பயன் ஆகும்.

(விரிவுரை) அறிவு, தோற்றம், தவம் அற்ப தகைமையோடு ஒழுகினாலும் பெரும் பயன் ஆகும் என்கிறார்.

முன் காதையில் எதிர்மறையில் விளக்கிய கருத்தை இந்த காதையில் உடன்பாட்டு முறையில் வலியுறுத்துகிறார். அறிவு அற்பமாக இருந்தும் நல்லொழுக்கத்தோடு கூடி இருந்தால் பெரிதாகும். நற்காட்சியோடு கூடிய தோற்றம் அற்பமானாலும் பயம் மிகுதியாகும். புலன் பாரா நோக்கும் பிற உயிர் போற்றும் நோக்கும் கூடிய தவம் அற்பமாக இருந்தாலும் மிகு பயன் உண்டாம்.

தோ ஓ வி எனும் தொடர் அற்ப அளவு எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இங்கே அளவு என்பது அவ்வவ் ஆற்றலின் அளவு எனக் கருதலாம். தனக்குரிய ஆற்றலை மறைக்காமல் ஜிந நெறியில் செல்லுதலாம்.

7. ணாணம் ணாஊண ணரா கோ விஸயாஇபாவ ஸம்ஸத்தா |
ஹிண்டந்தி சாதுரகதிம் விஸஏஸு விமோஹியா மூடா ||

(பதவுரை) ணராகோ- ஒரு மனிதர், ணாணம் - அறிவை, ணஊண-அறிந்தும், விஸயாஇ-புலன்வடிவ, பாவ- உணர்வுகளில், ஸம்ஸத்தா - வேட்கையால், சாதுரகதிம் - நாற் பிறவிகளில், ஹிண்டந்தி - உழல்கிறார். (ஏனெனில்) விஸஏஸு- புலன்களில், விமோஹியா-விடுதலறியா மோகத்தால், மூடா - மூடன், எ-று

(கருத்துரை) ஒருவர் அறிவை அறிந்தும் புலனின்பங்களில் வேட்கை கொள்ளுதலால் நாற் பிறவியில் உழல்கிறார். புலன்களில் விடுதலறியா மோகத்தால் அவர் மூடர்.

(விரிவுரை) புலனின்ப வேட்கை பிறவிக்கு ஏது என்கிறார்.

அறிவை அறிதல் எனில் தன்னையும் பிறவற்றையும் பிரித்தறியும் அறிவை உடையவராக இருத்தல் ஆகும். அந்த அறிவு பெற்றும் புலன் வேட்கை உணர்வுகளில் ஒருவர் திளைப்பாரானால் அதனால் விளைவது நாற் பிறவி சுழற்சியாகும். பிறவிக்கு ஏது கசாய உணர்வாகும். கசாய உணர்வு உள்ள போது அறிவு அதன் வழிப்படுகிறது. அப்போது அந்த அறிவு இருந்தும் அறியாமைக்கு ஒப்பாகும். புலன் வேட்கை அறிவைக் கெடுக்கும் என முன்பே குறிப்பிட்டுள்ளார் (காதை:3).

அறிவு பிறவி சுழற்சிக்கு ஏது அன்று. ஆர்வம், செற்றம் முதலான உணர்வுகளே பிறவிக்கு ஏது ஆகும். ஆர்வம் முதலான உயிர் இயல்பு அல்ல என அறிதலே அறிவின்

சிறப்பாகும். அந்த அறிவு பெற்றும் ஒருவர் தன் இயல்பு நெறிக்குத் திரும்ப வில்லை என்றால் அந்த அறிவால் என்ன பயன்?

அறிவினால் சிறிய நீரார்
ஆன்றவர் தாங்கள் சென்ற
நெறியினைப் பிழைக்கப் போகின்
மாற்றிடைச் சுழல்வர் நீடு

என வருதல் காண்க.[11] அறிவு பெற்றுப் புலன் வேட்கையிலிருந்து அகலுதல் பயனுடையது. இல்லையெனில் அவ்வறிவு அறிவின்மைக்கு ஒப்பாகும்.

8. ஜே புண விஸயவிரத்தா ணாணம் ணாஊண பாவணாஸஹிதா |
சிந்தந்தி சாதுரகதிம் தவகுணஜுத்தா ண ஸந்தேஹோ ||

(பதவுரை) ணாணம் -அறிவை, ணாஊண-அறிந்து, புண-மேலும், விஸய விரத்தா - புலன் வேட்கையிலிருந்து விலகி, ஜே பாவணாஸஹிதா - அறிவு உணர்வில் திகழ்பவர், தவ - அகப்புறத் தவம், குண- மூல உத்தர குணங்களோடு, ஜுத்தா சாதுரகதிம் - நான்கு வகைப்படும் பிறவியை, சிந்தந்தி - அழிக்கிறார், ண ஸந்தேஹோ - இதில் ஐயம் இல்லை, எ-று

(கருத்துரை) அறிவு இயல்பை அறிந்து புலன் வேட்கையிலிருந்து விலகி தன் அறிவு உணர்வில் திகழ்பவர் தவம் மற்றும் குணங்களோடு கூடிப் பிறவியை அழிக்கிறார்; இதில் ஐயம் இல்லை.

(விரிவுரை) நாற் பிறவியை நலியச் செய்ய அறிவோடு தவமும் குணங்களும் வேண்டும் என்கிறார்.

நாற் பிறவி சுழலில் உயிர் அனாதி காலமாக உழன்று வருகிறது. வினைக் காற்றினால் கதி நான்கில் சுழலும் உயிர் தன் இயல்பான அறிவு வடிவ ஆன்மாவை அறியவில்லை. ஆன்மாவின் அவ்வறிவை அறிந்து ஐம்புல வேட்கை உணர்விலிருந்து விடுபடும் போது அகப்புற தவங்கள் பன்னிரண்டிலும் நிகழ்கிறது. உயிர் தனக்குரிய மூல உத்தர குணங்களோடு கூடி உள்ளது. அதனால் பிறவிக்கு ஏதுவான வினைகளை அழித்துப் பிறவியை அழிக்கிறது. தூய பரமான்ம நிலையை அடைகிறது. இதுவே சீலத்தோடு கூடிய அறிவு நெறியாகும்.

தவம் பன்னிரண்டு:

1. அனசனம் (உண்ணாமை)
2. ஆவமோதுரியம் (சுருக்கி உண்ணல்)
3. விருத்தி சங்கமம் (எல்லை செய்து உண்ணுதல்) ,

11. மேருமந்திர புராணம் 120

4. சுவைப்பறித் தியாகம் (சுவை நீக்குதல்)
5. விவிக்த ஸையாசனம் (தனியாக உறைதல்)
6. கால யோகம் (காய கிலேசம்)

இவை ஆறும் புறத் தவங்கள் ஆகும்.

1. கழுவாய் (பிராயச்சித்தம்)
2. விநயம்
3.வையாவச்சம் (பணிவிடை)
4. சுவாத்தியாயம்
5. தியானம்
6. வியுத்சர்கம்

இவை ஆறும் அகத் தவம்.

மூல குணங்கள் இருபத்தெட்டு:

5 பெருநோன்பு
5 சமிதி (விழிப்புடைமை)
6 நாள் கடமைகள்
5 பொறிகள் அடக்கம்
நீராடாமை
உடுத்தாமை
தரையில் படுத்தல்
மயிர் பறித்தல்
ஒரு வேளை உணவு
நின்று உணவு ஏற்றல்
பல் துலக்காமை.

**9. ஜஹ கஞ்சணம் விஸுத்தம் தம்மஇயம் கடியலவண லேவேண |
தஹ ஜீவோ வி விஸுத்தம் ணாணவிஸலிலேண விமலேண ||**

(பதவுரை) ஜஹ -எவ்வாறு, கஞ்சணம் - பொன், கடிய லவணலேவேண - படிக்காரத்தால், விஸுத்தம்- அழுக்கு நீங்கித் தூய்மை, தம்ம இயம்- குணத்தை அடைகிறதோ, தஹ - அவ்வாறு, ஜீவோ -உயிரும், விமலேண - தூய, ணாண - அறிவு எனும், விஸலிலேண - நீரால், விஸுத்தம்- தூய்மை ஆகிறது, எ-று

(கருத்துரை) பொன் படிக்காரத்தால் அழுக்கு நீங்கி ஒளி பெறுதல் போல உயிரும் தூய அறிவு எனும் நீரால் கழுவப்பட்டு தூய்மை அடைகிறது.

(விரிவுரை) தூய அறிவால் உயிர் தூய்மை அடைகிறது என்கிறார். அறிவு உயிரின் முதன்மையான பண்பாகும். ஆனால் அது புலன் வேட்கையால் மலினப்பட்டுள்ளது. அது தன்னளவில் தூய்மை என்றாலும் மெய்யுணராமை, புலன் வேட்கை முதலானவற்றில் தன் மயமாகி அனாதி காலமாக உயிர் பிறவியில் உழலக் காரணமாக உள்ளது. அதன் மலினத் தன்மைக்கு ஏதுவான மெய்யறியாமை, புலன் வேட்கை முதலான அழுக்குகளை நீக்கினால் அது தன்னியல்பில் நிகழும். அந்த அறிவில் ஒருமுகப்பட்டு நிற்கும் போது ஊழ்கத்தில் (தியானத்தில்) உறையும் போது அனாதி கால வினைத் தொடர்பு அறுபட்டு உயிர் அழுக்கு நீக்கிய பொன் போல அனந்த நான்மையில் ஒளிர்கிறது. தூய பரமான்ம நிலையை அடைகிறது.

"வீட்டில் நின்றது வெவ்வினை எண்மையின்
கேட்டில் எண்குணம் எய்திஓர் கேடிலா
மாட்சி யாலுல கம்தொழ மாற்றற
ஓட்டி வைத்தசெம் பொன்ஒத்து ஒளிருமே"

என வருதல் காண்க.[12]

10. ணாணஸ்ஸ ணத்தி தோஸோ குப்புரிஸாணம் வி மந்த புத்தீணம் |
ஜே ணாண கவ்விதா ஹோவாணம் விஸஏஸு ரஜ்ஜந்தி ||

(பதவுரை) ஜேணாண கவ்விதா - அறிவுக் செருக்கு (ஒருவர்), ஹோஊணம்- அடைந்து, விஸஏஸு- புலன்களில், ரஜ்ஜந்தி-திளைப்பாரானால், (அது) ணாணஸ்ஸ - அறிவினுடைய, தோஸோ ணத்தி - குற்றம் ஆகாது, (மாறாக), மந்தபுத்தீணம் - புத்தி குறைந்த, குப்புரிஸாணம் வி- அந்த ஒழுக்கம் சிதைந்த மனிதனுடைய குற்றமே ஆகும். எ-று.

(கருத்துரை) அறிவுச் செருக்கால் ஒருவர் புலன் வேட்டையில் திளைப்பாரானால் அது அறிவின் குற்றம் அன்று; மாறாக ஒழுக்கம் கெட்ட அந்த புத்தி குறைந்த மனிதன் குற்றம் ஆகும்.

(விரிவுரை) ஆசாரியர் ஒழுக்க மின்மை அறிவின் குற்றம் ஆகாது என்கிறார்.

புலன்களில் திளைப்பதற்குக் காரணம் அறிவில் மிகுந்து இருப்பது தான் எனக் கருதுதல் கூடாது. ஏனெனில் அறிவு அறிதலை மட்டுமே செய்வது. பொருளை உள்ளவாறு அறிதலே அறிவாகும். அது அதன் இயல்பு. அத்தகு அறிவைப் பெற்ற ஒருவர், அவ்வறிவுச் செருக்கால் புலன் துய்ப்பில் மூழ்கிப் போவார் எனில், அது அவ்வறிவின் குற்றம் ஆகாது என இங்குத் தெளிவு செய்கிறார் ஆசாரியர். ஏனெனில்

12. மேருமந்திர புராணம் 70

அந்த அறிவில் செருக்கு அடையும் மனிதருடைய ஒழுக்கச் சிதைவே அதற்குக் காரணம் ஆகும். அதுவே குற்றமுடையது ஆகும்.

அறிவு உயிரின் இயல்பாக இருப்பதால் அது உயிரைக் கெடுப்பது இல்லை. ஆனால் அவ்வறிவு குறித்து ஒருவர் செருக்கு அடைதல் கசாயத்தால் ஆகும். அக் கசாயமே குற்ற முடையது. உயிரின் உயர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் கசாயமே (துவர்ப்பே) காரணம் என்பதாம்.

"பொறி மீ துபுலத்து எழும்போ கமெலாம்
இறவாது இரவும் பகலும் நுகரா
நிறையாது ஒழியப் பின் நெருப் பினிடை
விறகே இவைஎன்றுவெறுத் தனனே"

இதுவே கசாயத்தின் இயல்பாகும்.[13] புலன் திளைப்பின் இயல்பாகும். அதனால் அவனை 'புத்தி குறைந்தவன்' என்கிறார். ஒழுக்கம் சிதையும் போது புத்தி அதில் படிந்து மந்தமாகிறது. அதனால் விளைவது அம் மனிதன் குற்றமாகும்.

அறிவின் குற்றம் அன்று என்பதாம். அறிவுக்குத் தொழில் பொருளை உள்ளவாறு தெளியச் செய்தலே. அதன் வழி பிறகு நடத்தல் அறிவுடையவன் செயல் ஆகும்.

11. ணாணேண தம்ஸணேண ய தவேண சரிஏண ஸம்மஸஹிஏண |
ஹோ ஹதி பரிணிவ்வாணம் ஜீவாண சரித்த ஸுத்தாணம் ||

(பதவுரை) ஸம்மஸஹி ஏண- ஸம்யக்த்வத்தோடு கூடிய, ணாணேண- நல்லறிவால், தம்ஸணேண- நல் நம்பிக்கையால், ய-மற்றும், தவேண- நற்றவத்தால், சரிஏண- அமையும் ஒழுக்கத்தால், சரித்த ஸுத்தாணம்- தூய்மையுற்ற ஒழுக்கம் அடைந்த, ஜீவாண- உயிரால், பரிணிவ்வாணம்- வீடுபேறு, ஹோஹதி- அடையப்படுகிறது. எ-று

(கருத்துரை) நல்லறிவு நற்காட்சி நற்றவம் இவை கூடிய ஒழுக்கத்தால் தூய ஒழுக்கம் அடைந்த உயிர் வீடுபேற்றை அடைகிறது.

(விரிவுரை) உயிர் வீடுபேறு அடையும் நெறியை இங்குச் சுட்டுகிறார். உயிர் நற்காட்சி நல்லறிவு நல் தவம் கொண்டு ஒழுகும் போது ஆன்ம ஒழுக்கம் தூய்மை ஆகிறது. விருப்பு வெறுப்பு முதலான திரிபு உணர்வுகள் நீங்கி தன் இயல்பான நிகழ்வு ஆன்மாவில் இடம் பெறுகிறது. அந் நிகழ்வால் உயிர் வீடுபேற்றை அடைகிறது.

13. மேருமந்தர புராணம் 779

முத்தி நெறி என்பது ஆன்ம ஒழுக்கமாகும். தன்னையும் பிறிதையும் வேறுபடுத்தும் பக்குவம் உயிரில் தோன்றும் போது அது தன்னை உணரும் பான்மை நிலையாகும். அதனையே ஸம்யக்த்வம் என்பர்.

அந்த நிலைக்குப் பின் உயிர் நற்காட்சி நல்லறிவு நல் ஒழுக்கம் உடையதாகிறது. அம்மும்மணி கூடிய நிலையில் தன்னில் திளைக்கும் ஊழ்கத்தில் (தியானத்தில்) நுழையும் போது தூய உபயோக வடிவ முனிமை நிலை அமைகிறது. அம் முனிமை நிலையே வீடு பேற்று நெறியாகும்.

வினையற விட்ட போழ்தின்
வெடித்தவே ரண்டம் போல
நினைவரும் குணங்கள் எட்டும்
நிறைந்து மேல் நோக்கி ஓடி
முனிவரும் உலகம் மூன்றும்
இறைஞ்சமூ உலகின் உச்சி
கனைகழல் அரச! நிற்றல்
கைவலம் ஆகும் கண்டாய்![14]

இது வீடுபேற்று நிலை, அந் நிலையை அடையும் வழி கூறும் போது,

"உரைத்த இப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி
பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்த நல் ஒழுக்கம் ஆகும்
சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய்! வீட்டின்
மெய்ந்நெறி ஆவ தாமே!"[15]

என்பார் மேருமந்தர புராணமுடையார்.

ஆசாரியர் இங்கே வீடுபேற்று அடைதலை இரண்டு நய நோக்கிலும் சுட்டி உள்ளார் என அறிதல் வேண்டும். 'சரித்த ஸுத்தாணம்' என்பது உண்மை நயம். ணாணேண முதலானவை வழக்கு நயம் ஆகும்.

12. ஸீலம் ரக்கம் தாணம் தம்ஸண ஸுத்தாண திட சரித்தாணம் ||
அத்தி துவம் ணிவ்வாணம் விஸஏஸு விரத்த சித்தாணம் ||

14, 15. மேருமந்திர புராணம் 106, 107.

(பதவுரை) விஸஏஸு-ஐம்புலங்களிலிருந்து, விரத்த - விலகிய, சித்தாணம் - மனமும், ஸீலம் - சீலத்தை, ரக்கம் தாணம்-காத்தலும், தம்ஸண - நல்ல நம்பிக்கையில், ஸுத்தாண - தூய்மையும், திட சரித்தாணம் - உறுதியான நல்லொழுக்கமும் உடையவருக்கு, துவம் - உறுதியாக, ணிவ்வாணம் - வீடுபேறு, அத்தி - அமைகிறது. எ-று

(கருத்துரை) புலன் வேட்கையிலிருந்து விலகிய சித்தமும், சீலக் காப்பும், தூய நம்பிக்கையும், உறுதியான ஒழுக்கமும் உடைய உயிர் உறுதியாக வீடுபேற்றைப் பெறுகிறது.

(விரிவுரை) வீடுபேறு அடைதலில் சீலத்தின் முதன்மையைச் சுட்டுகிறார்.

ஐம்புல வேட்கை நோக்காத பேராண்மையே சீலத்தைக் காத்தலாகும். அறிவு புறம் நோக்காது தன்னை நோக்கும் பேராண்மை சீலம் ஆகும். அதனால் நல் நம்பிக்கை தூய்மை உடையதாகிறது. தூய்மையான நம்பிக்கையால் குற்றங்கள் இல்லா நல்லொழுக்கம் அமைகிறது. அதுவே உறுதி ஆகும். தன்னில் ஒழுகும் ஒழுக்கம் உறுதி கொள்ளும் போது வீடுபேறு உதயம் ஆகிறது.

இதற்கு மாறாக ஐம்புல வேட்கையில் உயிர் திரும்புமானால் சீலம் சிதைந்து போகும். அப்போது நம்பிக்கை கெட்டு சாரித்திரம் சிதலம் அடையும். பிறகு வீடுபேறும் விளையாது. அதனால் வீடுபேறு பெற சீலம் முதன்மையாகப் போற்றப்பட வேண்டும் என்பதாம்.

"சீலத்தை உறுதியாகப் போற்றுதலாலே தீர்த்தங்கர நாம வினை கட்டுகிறது. கொலை, பொய், களவு, காமம், பற்று இவற்றிலிருந்து விடுபடுதல் விரதம் - உறுதி ஆகும். நோற்றல் உறுதியைக் காத்தல் சீலம் எனப்படும். கள் குடித்தல், புலால் உண்ணல், வெகுளி, மானம், மாயை, உலோபம், சிரிப்பு, ஆர்வம், சோகம், அச்சம், அருவருப்பு, பெண்மை நயத்தல், ஆண்மை நயத்தல், அலி நயத்தல் (வேதம்) இவற்றை விடாமை குற்றங்கள் (அதிசாரம்) ஆகும். இவற்றை இல்லாது ஆக்குதல் குற்றங்கள் (அதிசாரம்) இல்லாமை ஆகும். அல்லது முழுமை ஆகும். இதனை பாவனை செய்தல் (எண்ணத்தில் போற்றுதல் அதிசாரம் இன்மை ஆகும். சீல ஒழுக்கத்தில் இந்த குற்றமில்லாத தன்மையால் தீர்த்தங்கர நாம வினை கட்டுகிறது"

13. விஸஏஸு மோஹிதாணம் கஹியம் மக்கம் பி இட்ட தரிஸீணம் |
உம்மக்கம் தரிஸீணம் ணாணம் பி ணிரத்தயம் தேஸிம் ||

(பதவுரை) இட்ட - விரும்பிய நெறியை, தரிஸீணம் - காட்டும் அறிவுடையவன், விஸஏஸு - புலன்களில், மோஹிதாணம்- மயங்கி நின்றாலும், மக்கம் பி- நெறியை அடைபவன் என, கஹியம் -சொல்லப்படுவான். ஆனால், உம்மக்கம் -

தவறான நெறியை, தரிஸீணம் - காட்டுபவன். ணாணம் பி - அறிவு பெற்றும். ணிரத்தயம் - வீணே ஆகும். எ-று

(கருத்துரை) புலன்களில் மயங்கி நின்றாலும் விரும்பிய நெறியைக் காட்டுபவன் நெறியை அடைபவன் என்று சுட்டப்படுவான். ஆனால் தவறான நெறியைக் காட்டுபவன் அறிவு பெற்று இருந்தாலும் அவ்வறிவால் பயன் இல்லை.

(விரிவுரை) முத்தி நெறியில் நுழையாமல் இருந்தாலும் புலன்களிலிருந்து விலகுதலே முத்தி நெறி எனக் கூறுபவன் நெறியை அடைபவன். ஆனால் புலன்களில் இருப்பதே நெறி எனக் கூறுபவன் அறிவு பயனற்றது ஆகும் என இங்கு ஆசாரியர் காட்டுகிறார்.

சீலமும் அறிவும் ஒன்றுதான் என ஆசாரியர் முன்னரே கூறியுள்ளார் (காதை:2). ஆனால், அறிவு இருந்தும் புலன்களில் விருப்பு இருக்குமானால் அங்கு அறிவு அழிகிறது - மலினமாகிறது. அங்கே சீலம் இல்லை. அறிவு பெற்றும் புலன்களிலிருந்து ஒரு வேளை சாரித்திர மோகனீய உதயத்தால் விடுபட வில்லை என்றால் அவற்றில் மயங்கி உள்ளான் என்பதாகும்.

ஆனால், புலன்களிலிருந்து விடுபடுதலே நெறி என்று உறுதி காட்டுபவன் அந்நெறியை அடைபவனே. ஆனால், நெறி தவறாகக் காட்டுபவன், புலன்களில் இருத்தல் நெறி என்று காட்டுபவன் -அவன் அறிவு பெற்று இருந்தாலும், அவ்வறிவால் பயன் ஏதும் இல்லை. ஏனெனில் அவன் நெறியை இழந்தவன் ஆகிறான். தவறான நெறியைப் போற்றுபவனுடைய அறிவு எவ்வாறு நல்லறிவு ஆகும்? அது பொய்யறிவே ஆகும்.

நான்காம் குணத்து நற்காட்சியாளன் "அவிரதி" ஆவான். அவன் விரத நெறியில் வரவில்லை என்றாலும் நெறி தவறானதாகக் காட்டவில்லை. அவனுக்கு சாரித்திர மோகனீய வினை அழுத்தமாக இருக்கும் வரை அவன் புலன்களிலிருந்து விடுபடான். அதனால் "அவிரதி" எனப்படுகிறான்.

ஆனால் நெறி தவறாகக் காட்டும் நற்காட்சி இல்லாதவன் மிகு அறிவுடைய வனாக இருந்தாலும், புலன் வேட்கை காட்டா விட்டாலும், தவறான நெறியைக் காட்டுவானானால் அவனுடைய அறிவும் வேட்கை விலகலும் பயனற்றது ஆகும். ஏனெனில் அவன் முத்தி நெறியிலிருந்து இழிந்து உள்ளான்.

'கற்ற மாந்தராய்க் காமச் செல்வத்தில்
பெற்ற இன்பத்தை பிழைக்க விட்டுப் போய்
மற்றும் இன்பம் மேல் வர வருந்துதல்
உற்ற ஊன்நரி விட்டது ஒக்கமே' [16]

16.மேருமந்திர புராணம் 817.

துன்பத் தால் துன்பம் துய்த்தல் அல்லது
துன்பத் தால் இன்பம் துய்க்க எண்ணுதல்
அன்பில் காஞ்சிரம் ஆக்கி மாங்கனி
தின்குற் றஃது அவர் சிந்தை வண்ணமே'.[17]

எனத் தவறான நெறியினை அடையும் கேட்டினைச் சுட்டுதலை அறிக.

14. குமயகுஸுத ப ஸம்ஸா ஜாணந்தா பஹு விஹாஇம் ஸத்தாஇம் |
ஸீல வதணாணரஹிதா ண ஹுதே ஆராதயா ஹோந்தி ||

(பதவுரை) பஹு- பல, விஹாஇம்- வகை, ஸத்தாஇம் -நூல்களை, ஜாணந்தா - அறிந்தவர், குமய- பொய்க் கோட்பாடு, குஸுத- பொய்ந் நூல்களை, பஸம்ஸா- புகழ்பவர், ஸீல - சீலம், வத - நோன்பு, ணாண - நல்லறிவு, ரஹிதா- இல்லாதவர், தே-அவர், ஹு -உறுதியாக, ஆராதயா- ஆராதிப்பவர், ண ஹோந்தி -ஆகார், எ-று

(கருத்துரை) பல நூற்கள் பயின்றவராகவும், பொய் மதங்களை, பொய் நூல்களைப் போற்றுபவராகவும் உள்ளவர் சீல நோன்பு நல்லறிவு இல்லாதவர் ஆவார்.அவர் இவற்றை ஆராதிப்பவர் ஆகார்.

(விரிவுரை) தவறான நெறியைப் பரப்புபவர் சீல விரதம் போற்றுபவர் ஆகார் என்று கூறுகிறார். நெறி இரண்டு. ஒன்று அற நெறி; மற்றொன்று மற நெறி; முன்னது இன்ப நெறி; பின்னது துன்ப நெறி; மற நெறி பரப்புவார் சீல விரதம் போற்ற முடியாது; நல்லறிவு போற்ற முடியாது.

பல ஆகம நூல்களை அறிந்தவர். ஆனால், துன்பத்துக்கு ஏதுவான பொய் மதங்களையும், நூல்களையும் போற்றுபவர். ஒன்றைப் போற்றுதல் என்பது ஆர்வம் ஆகும். அந்த ஆர்வம் உயிருக்கு நன்மை செய்வதாகவும் அமையலாம்; தீமை செய்வதாகவும் அமையலாம். அற நெறியையும், அற நூல்களையும் போற்றுதல் நல்லார்வம் ஆகும். நல்லுணர்வாகும்.

பொய் நெறியையும், பொய் நூல்களையும் போற்றுதல் தீய ஆர்வம் ஆகும். தீய உணர்வு ஆகும். பொய் நம்பிக்கை உள்ள போது தான் பொய் மதமும் பொய் நூலும் சுவையுடையதாகத் தெரியும். ஏனெனில் புலன் இன்பங்களைத் தூண்டுவதாகும். புலன் இன்பங்களிலிருந்து விலகுதல்தான் சீலம் எனப்படுகிறது. பொய் நம்பிக்கை உடையவனுக்கு அந்த சீலம் அமைய முடியாது. அவனுக்கு நோன்பும் அமையாது. எப்போதாவது நோன்பொழுக்கம் கொண்டாலும் அது புற ஒழுக்கமாகப் பொய்யொழுக்கமாகவே அமைய முடியும்.

17. மேருமந்தர புராணம் 818

ஆகையால் அவன் நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்கத்தை ஆராதிப்பவனாக, ஏற்பவனாக இருக்க முடியாது. அவன் பொய் நம்பிக்கையனாவான் என்பது தெளிவு.

'அருந்தவம் தாங்கி மேரு
அனையவர்க்கு ஏலும் ஆசை
துரும்பிடைத் தோன்று மேனும்
துகளிலும் சிறியர் ஆவர்.[18]

அராகாதி மான்கள் ஆத்தர்
அல்லவர் நல்லர் என்றும்
விரகாதி அல்ல மார்க்கம்
விகற்பத்தை விடுதல் என்றும்
உரோகாதி ஓம்பல் இன்றி
உயிர்க்கொலை தருமம் என்றும்
வராகாதிப் பிறவி யானே
வையத்துக்கு இறைவன் என்றும் [19]

விகாரமில் ஒருவன் செய்கை
உலகத்தில் விகாரம் என்றும்
அவாவோடு மனையின் நீங்கா
தவரைமா தவர்கள் என்றும்
தகாதன யாவும் செய்ய
வல்லவர் தலைவர் என்றும்
தொகாவிரி பொருள்கள் இல்லை
சூனியம் அல்லது என்றும் [20]

தன்னைக் கொன்று உயிரை ஓம்மல்
தக்க நல் கருணை என்றும்
பின்னைத்தான் ஊனை உண்கை
பெருந்தவம் ஆவது என்றும்
உன்னிற்றான் கணத்து யாவும்
ஒட்டறக் கெடுமென்று ஓதிப்
பின்னைத்தான் நித்தம் முத்திக்கு
உழக்கெனப் பேச லாமே [21]

18. மேருமந்திர புராணம் 135.
19. மேருமந்திர புராணம் 1325.
20. மேருமந்திர புராணம் 1326.
21. மேருமந்திர புராணம் 1327.

அறிவினே வீடாம் அன்றி
ஆசாரத்து ஆகும் அன்றி
இறைவன்நல் காத லாலாம்
இவ்விரண் டாலும் ஆகும்
நெறி முத்திக்கு இல்லை நித்தம்
முத்தனே சீவன் என்றும்
அறிவின்மை நன்றே என்றும்
அழைத்தலாம் பிழைத்த நீதி.[22]

எனப் பொய் மதங்களையும் பொய் நூல்களையும் போற்றுதல் காண்க. இவை பொய் நீதியாகும்.

15. ரூவஸிரி கவ்விதாணம் ஜுவ்வண லாவண்ண கந்திகளிதாணம் |
ஸீல குண வஜ்ஜிதாணம் ணிரத்தயம் மாணுஸம் ஜம்ம ||

(பதவுரை) ஜுவ்வண- இளமையும், லாவண்ண- அழகும், கந்தி- ஒளியும், களிதாணம்- கூடிய, ரூவ- உருவம், ஸிரி-செல்வத்தால், கவ்விதாணம்- செருக்கடைந்து, ஸீல-சீலமும். குண- குணங்களும், வஜ்ஜிதாணம்- இல்லாத, மாணுஸம் ஜம்ம-மனிதப்பிறவி, ணிரத்தயம் - வீணே, எ-று

(கருத்துரை) இளமையும், அழகும், ஒளியும் கூடிய உருவச் செல்வத்தால் செருக்குற்று சீலங்களும் குணங்களும் இல்லாத மனிதப் பிறவி வீணே ஆகும்.

(விரிவுரை) சீலம் இல்லாத மனிதப் பிறவி வீண் என்கிறார். மனிதப் பிறவி கிடைத்தல் அரிதாகும். அரிதரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்பர். அப்பிறவி பெற்றும், புலன் வேட்கையில் விழுந்து மும்மணி குணங்கள் இன்றி சீலமின்றி வாழ்தலால் என்ன பயன்? இளமையில் வளமான உடலும், அழகிய உருவும் செல்வமும் பெற்றுச் செருக்குற்று மகிழ்கின்றனர். அவர் மனிதப் பிறவி எடுத்தும் பயன் இன்றே.

ஏனெனில், மனிதப் பிறவியே ஆன்மாவைப் பரம ஆன்மாவாக உயர்த்த வாய்த்த ஒரே பிறவி ஆகும். அதனைப் பயன் கொள்ளாது மீண்டும் பிறவிக்கு வழி தேடுதலால் அப்பிறவி வீண் என்றார்.

முன் காதையில் பொய் மதங்களையும் பொய் நூல்களையும் போற்றுவார் நூலறிவு பயனற்றது என்றார். இங்கு உருவம் முதலானவற்றால் செருக்கு அடைதல் பொய் நம்பிக்கையின் சின்னமாவதால் பொய் நம்பிக்கையர் ஆனார். அவரிடம் உருவம், அழகு முதலானவை மிகுந்து இருந்தாலும், சீலம் இன்மையால் உலக நிந்தனைக் குரியவரே என்பதாம்.

22. மேருமந்தர புராணம் 1328

என்பினை நரம்பில் பின்னி
உதிரம் தோய்த்து இறைச்சி மெத்திப்
புன்புறம் தோலின் மூடி
அழுக்கொடு புழுக்கள் சோரும்
ஒன்பது வாயிற் றாய
ஊன்பயில் குரம்பை தன்மேல்
அன்பரா மாந்தர் கண்டாய்
அறிவினால் சிறிய நீரார். [23]

அரியது திருவறம் அல்லது இல்லையேல்
மருவிய திருவறம் ஒருவி மன்னனாய்
உருகெழு முடிகவித்து உலகம் ஆள்வது
பெருவிலை மணியினைப் பிண்டிக்கு ஈவதே [24]

என வருதல் காண்க.

16. வாயரண சந்த வஇ ஸேஸிய வவஹாரணயஸத் தேஸு |
வேதேஊண ஸுதேஸு ய தேஸு ஸுயம் உத்தமம் சீலம் ||

(பதவுரை) வாயரண - இலக்கணம், சந்த - அணி, வஇ - நூல்கள் (என உலகியல் நூல்கள்) ஸேஸிய வவஹார - சிறப்பும் வழக்கும், ணாய - ஸத்தேஸு - நீதி, ய - மற்றும், ஸுதேஸு - ஆகம நூல்கள், வேதே ஊண - நன்கு கற்றும், தேஸு- இவற்றுள், மற்றும், ஸுயம் - ஆகமத்துள்ளும் சிறந்து இருத்தலைக் காட்டிலும், சீலம் - சீலத்துடன் விளங்குதல், உத்தமம் உயர்ந்தது ஆகும்.

(கருத்துரை) இலக்கணம், அணி இலக்கணம், இதன் சிறப்பு. உலக வழக்கு நீதி நூல்கள் மற்றும் ஆகமங்களில் அறிவு மிகப் பெற்று இருத்தலைக் காட்டிலும், சீலம் உடையவராக விளங்குதல் உத்தமம் ஆகும்.

(விரிவுரை) நூல்களில் வல்லனாக இருத்தலைக் காட்டிலும் சீலவானாக இருத்தல் சிறந்தது என்கிறார்.

இலக்கண இலக்கியங்களிலும், ஜிந ஆகமங்களிலும் நீதி நூல்களிலும், உலக வழக்குகளிலும் சிறந்து விளங்குதல் சிறப்புடையது தான். ஆனால் அந்த நூலறிவோடு நின்று விட்டால் அதனால் பயன் இல்லை. ஏனெனில் அந்தப் புலமை புகழையும் பொருளையும் தரலாம். ஆனால் அது நிமித்தமாக உயிர் மலினமாகி ஒழுக்கம் பற்றிய குறியே இல்லாது ஆக்கிவிடும். ஆனால் அவ்வறிவோடு சீலம் இருக்குமானால்

23.மேருமந்திர புராணம் 116.
24.மேருமந்திர புராணம் 118.

சிறப்புடையது ஆகும். அப்படி இல்லை என்றால் அந்த நூலறிவுடன் இருப்பதைக் காட்டிலும் சீலம் உடையவனாக இருத்தல் சிறப்புடையதாகும். சீலம் இல்லாது நூல்களைக் கற்றும் ஐம்புல இன்பங்களில் ஈடுபட்டு நிகழ்ந்தால் அந்த நூலறிவு வீணே ஆகும். அதனால் சிறப்பும் இல்லை எனவே ஆசாரியர் நூல் அறிவைக் காட்டிலும் சீலம் சிறந்தது என்றார்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.

என்பார் தேவர்.[25]

17. ஸீல குண மண்டிதாணம் தேவா பவியாண வல்லஹா ஹோந்தி |
ஸுத பாரய பவுரா ணம் துஸ்ஸீலா அப்பிலா லோஏ ||

(பதவுரை) ஸீல- சீலமும். குண- குணங்களும், மண்டிதாணம் - மிகுந்துள்ள, பவியாணம்- பவ்வியருக்கு, தேவா- தேவர், வல்லஹா- மனைவி, ஹோந்தி- ஆகின்றனர், ஆனால், ஸுத-சுருதங்(நூல்)களில், பாரய - வல்ல, பவுராணம்- பலர், துஸ்ஸீலா-சீலம் இல்லாதவர், லோஏ -உலகில், அப்பிலா- அற்பமானவர், என்று

(கருத்துரை) சீலமும், குணமும் மிகுந்துள்ள பவ்வியருக்கு தேவரும் சேவை செய்கின்றனர். ஆனால் ஆகமங்கள் பல கற்றும் சீலம் இல்லாதவர் பலர் ஆவர். அவர் உலகில் அற்பமானவர்.

(விரிவுரை) சீலத்தின் பெருமையையும் சீலமின்மையின் சிறுமையையும் கூறுகிறார்.

மெய்ந்நூல்கள் பல கற்று வல்லுநர் ஆனாலும், புலன் வேட்கையில் விழுந்து கிடப்பாரை உலகம் அற்பராகவே பார்க்கும். ஆனால் கொஞ்சம் அறிவாக இருந்தாலும் சீலத்தில் சிறந்துள்ளாரைத் தேவரும் விரும்பி சேவை செய்வர். 'வல்லஹா' என்ற சொல்லை ஆண்டுள்ளார். 'வல்லபி' என்று பொருள். மனதுக்கு இனிய மனைவி என்பர். கணவருக்கு இனிய மனைவி சேவை மிகச் செய்தல் போல தேவரும் அவருக்கும் சேவை செய்வர் என்பதாம். தேவரே சேவை செய்வர் எனில் மனிதர் சேவை பற்றி கூறவும் வேண்டாம். சீலம் உடையவர் அனைவராலும் போற்றப்படுவர் என்பதாம்.

18. ஸவ்வே வி ய பரிஹீணா ரூவ விரூவா வி படிதஸுவ யாவி |
ஸீலம் ஜேஸு ஸுஸீலம் ஸுஜீவிதம் மாணுஸம் தேஸிம் ||

(பதவுரை) ஸவ்வே வி ய - எல்லாவற்றிலும், பரிஹீணா-தாழ்ந்தும், ரூவ- உருவில், விரூவாவி - அழகற்றும், படித ஸுவயாவி- நிலை தளர்ந்தும், (முதுமை அடைந்தும்)

25. திருக்குறள் 140

இருந்தும், ஜேஸு- அவரிடம், ஸீலம்- சீலம், ஸுஸீலம்-நற்சீலமாவதால், தேஸிம்- அவருடைய, மாணுஸம்- மனிதப் பிறவி, ஸுஜீவிதம் - நல்வாழ்வுடையதாம், எ-று

(கருத்துரை) எல்லாவற்றிலும் தாழ்ந்தும், உருவில் அழகற்றும் வயதில் முதுமையுற்றும் இருந்த போதும் நல் சீலம் உடையவர் மனிதப் பிறவி போற்றுதலுக்கு உரியதாம்.

(விரிவுரை) நல் சீலம் உடைய சிறியோர் வாழ்வு சிறப்புடையது என்கிறார்.

சீலம் போற்றுதற்கு செல்வம் முதலான வேண்டும் என்பது இல்லை, 'ஸவ்வே' என்ற சொல்லை ஆண்டுள்ளார். உலகம் எவற்றை எல்லாம் சிறப்புடையது எனப் பாராட்டுமோ அவை அனைத்திலும் தாழ்நிலையில் உள்ளவர். குலம், கல்வி, செல்வம், வனப்பு, வலி, முதலானவற்றை உலகம் பாராட்டுகிறது. ஆனால் இத்தகு சிறப்புகள் எதனையும் பெறாத எளியவர் நல்சீலத்தோடு வாழ்வாரானால் அவர் வாழ்வு போற்றத் தக்கதாம் என்கிறார் ஆசாரியர்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

என வருதல் காண்க.[26]

19. ஜீவதயா தம ஸச்சம் அசோரியம் பம்பசேர ஸந்தோஸே |
ஸம்மத் தம்ஸண ணாணம் தஓய ஸீலஸ்ஸ பரிவாரோ||

(பதவுரை) ஜீவதயா- கருணை, தம-புலனடக்கம், ஸச்சம்-மெய்ம்மை, அசோரியம்- திருடாமை, பம்பசேர ஸந்தோஸே -பிரமசர்ய மகிழ்ச்சி, ஸம்மத் தம்ஸண- நற்காட்சி, ணாணம் நல்லறிவு, ய- மற்றும், தஓய - தபம், ஸீலஸ்ஸ- சீலத்தினுடைய, பரிவாரோ- சுற்றமாம், எ-று

(கருத்துரை) கருணை, புலனடக்கம், மெய்ம்மை, திருடாமை, பிரமசரியம், நற்காட்சி, நல்லறிவு, தபம் இவை எல்லாம் சீலத்தின் சுற்றம் ஆகும்.

(விரிவுரை) சீலம் தழுவும் ஒழுக்கங்களைக் கூறுகிறார். சீலம் அறிவு இரண்டும் ஒன்றே. அறிவு உயிரின் இயல்பு.சீலம் உயிரின் இயல்பாகும். அதனால் பேரின்ப நிலையின் ஊற்றுக்கண் ஆகும். இங்கே ஆசாரியர் கருணை முதலான சிலவற்றைக் கூறி அவை சீலத்தின் சுற்றம் எனச் சுட்டியுள்ள பாங்கு எண்ணி நினைவு கூரத்தக்கது. உயிர் தன் இயல்பில் இடைவிடாது நிகழ்தல் ஒழுக்கம் என்பர், அவ் வொழுக்கம்

26. திருக்குறள் 505, 654

நற்காட்சி நல்லறிவால் அமைவது ஆகும். அதனால் நற்காட்சி நல்லறிவைச் சுட்டினார். நல்லொழுக்கத்தின் புற வெளிப்பாடாகக் காணப்படுவன கருணை முதலானவை ஆகும். அதனால் அவற்றைச் சுற்றம் எனச் சுட்டினார்.

பொய் நம்பிக்கையுடையார் அறிவு பொய்யறிவாகும். அதனால் அவ் வறிவில் நிகழ்தல் சீல மின்மை ஆகும். அது பிறவியின் இயல்பு ஆகும். அந்த இயல்பு மாறி நற்காட்சி இயல்பு வருமானால் அது சீலம் எனப்படும். இதனை முத்தி இன்ப இயல்பு என்பர். பிறவியிலிருந்து விடுபடும் உறுதி கொள்ளும் போதுதான் முத்தியில் ஊக்கம் மிகும். அப்போது நற்காட்சி முதலானவற்றில் உயிர் நிகழும். அதுவே சீலம் ஆகும். அதனால் பிறவி முடிபவருக்கு அது அமைகிறது. அந்த சீலம் ஆகாதவரைப் பிறவி சுழற்சி எனத் தெளிதல் வேண்டும்.

20. ஸீலம் தவோ விஸுத்தம் தம்ஸண ஸுத்தீய ணாண ஸுத்தீய |
ஸீலம் விஸயாண அரீ ஸீலம் மோக்கஸ்ஸ ஸோவாணம் ||

(பதவுரை) ஸீலம் - சீலம், விஸுத்தம்- தூய்மையான, தவோ-தவமாகும், (சீலம்) தம்ஸண - நற்காட்சியின், ஸுத்தீ-தூய்மையாகும், ய- மற்றும், (சீலம்) ணாண- அறிவின், ஸுத்தீ-தூய்மையாகும், ய - மேலும், ஸீலம் - சீலம், விஸயாண- புலங்களுக்கு, அரீ- பகை, ஸீலம்- சீலம், மோக்கஸ்ஸ- முத்தியின், ஸோவாணாம்- படியாகும், எ-று

(கருத்துரை) சீலம்தான் தூய தபம், தூய நற்காட்சி, தூய அறிவு ஆகும், புலன்களுக்குப் பகையாகும். முத்திக்குப் படியாகும்

(விரிவுரை) சீலம் மும்மணி வடிவம் என்கிறார். முத்தி நெறி நற்காட்சியும் நல்லறிவும் நல்லொழுக்கமும் கூடிய தாகும். அம் மும்மணியின் தூய்மை சீலத்தால் அமைகிறது என்கிறார். அம் மும்மணியில் நிகழ்வதுதான் உண்மையில் சீலம் ஆகும். அதனால் அதனை மும்மணியின் தூய்மை என்றார்.

தன்னையும் பிறவற்றையும் பிரித் தறிந்து தன்னில் ஆர்வம் முதலான உணர்வுகள் இல்லாமல் செய்தல்தான் சீலமாகும். அது ஆன்மாவின் அறிவு வடிவமாகும். அதுவே பிறவியைக் கெடுத்து முத்தியைக் கொடுக்கிறது. அப்போது சீலம் தபம் முதலான பெயர்களால் சுட்டப்படுகிறது. தூய தபம்,தூய காட்சி, தூய அறிவு, ஆர்வம் முதலாவை ஐம்புல வேட்கைக்குப் பகை ஆகும். முத்தி மாளிகையின் படி ஆகும். இப்படிச் சீலத்தின் பெருமையைச் சுட்டினார். உண்மையில் இவை தனித்தனியானவை அல்ல.

இவை ஒன்றை விட்டு ஒன்று பிரியாத ஒருமை நிலையை நோக்குவன என உணரவேண்டும். இதனை 'சீலமும் வதங்களும் செறிந்த எல்லை' என்பார் மேருமந்தரத்தார்.[27]

'வினையான் வரும்இன் பம்வெறுத்திடவே
தனையே நுதலித் தளரா வகையான்
நினைவான் வினைநீங் கிநிறைந் துடனே
புனையா துபொருந் தும் அனந் த சுகம்'

என ஐம்புலம் நீங்கித் தன்னை நோக்கி செய்யும் தியானத்தால் வீடுபேறு விளையும் என்று சுட்டுதலைக் காண்க.[28]

21. ஜ ஹ விஸயலுத்த விஸதோ தஹ தாவர ஜங்கமாண கோராணம்|
ஸவ்வேஸிம் பி விணாஸதி விஸய விஸம் தாருணம் ஹோ ஈ||

(பதவுரை) ஜஹ - எவ்வாறு, விஸதோ- ஐம்புலம், விஸயலுத்த- புலன்துய்ப்பாருக்கு நஞ்சோ, தஹ- அதே போல, கோராணம்- கொடிய, தாவர ஜங்கமாண- நிலையுயிர் இயங்குயிராம், ஸவ்வேஸிம்- எல்லாவற்றின் நஞ்சு, விணாஸதி -உயிர்களைக் கொல்லுகின்றது, பி- எனினும், விஸய - ஐம்புல. விஸம் - நஞ்சு, தாருணம்- எல்லா நஞ்சினைக் காட்டிலும் கொடியது, ஹோ ஈ- ஆகிறது. எ-று

(கருத்துரை) ஐம்புலத் துய்ப்புடையாருக்கு ஐம்புலம் நஞ்சாம்; அதே நிலை உயிர், இயங்குயிர் வழி வரும் எல்லா நஞ்சும் உயிர்களைக் கொல்கிறது. எனினும் அவற்றைக் காட்டிலும் ஐம்புல நஞ்சே உயிர்களுக்கு மிகக் கொடியது.

(விரிவுரை) ஐம் புலங்களும் கொடிய நஞ்சு என்கிறார். மெய், வாய், கண், மூக்கு, செவி இவ்வைந்தும் பொறிகளாகும். ஊறும், சுவையும், ஒளியும், மணமும், ஒலியும் இவற்றின் புலன்களாகும். உயிர்கள் தமக்குக் கிடைத்த பொறிகளுக்கு ஏற்ப இப்புலன்களில் திளைத்துத் துன்புறுகின்றன. களிறும், மீனும்,விட்டிலும், வண்டும், மானும், முறையே இப்புல வேட்கையால் மடிவதை எடுத்துக் காட்டாகத் தருவர். அதே போல நஞ்சுடை செடி, கொடிகளும், பாம்பின் நஞ்சு போன்ற விலங்கினது நஞ்சும் உயிர்களைக் கொல்லுகின்றன. என்றாலும் இவ் வெல்லா நஞ்சினைக் காட்டிலும் புலன் எனும் நஞ்சு மிகவும் கொடியது ஆகும்.

27. மேருமந்திர புராணம் 1205
28. மேருமந்திர புராணம் 781

ஐம்புல வேட்கை சீலத்தைக் கெடுப்பது எனத் தெளிவு செய்தார்.

'ஐந்தலை அரவம் தன்வாய்
ஐந்துடன் கலந்த நஞ்சில்
துன்பம்ஓர் கடிகை அல்லால்
துஞ்சினால் தொடர்ந்தி டாதாம்
ஐம்பொறி அரவம் தன்வாய்
ஒன்றினால் ஆய நஞ்சு
துஞ்சினால் அநேக காலம்
தொடர்ந்துநின்று அடுங்கள் கண்டீர் [29]

'புலங்கள்மேல் புரிந்தெழு பொறிகள் ஓம்பியே
விலங்குபோ லேஅவன் வீய்ந்து போகுமோ [30]

என வருவன காண்க.

22. வாரி ஏக்கம் மி ய ஜம்மே மரிஜ்ஜ விஸவேயணாஹதோ ஜீவோ|
விஸய விஸ பரிஹயா ணம் பமந்தி ஸம்ஸார கந்தாரே||

(பதவுரை) விஸ - புலன், வேயணா- வேதனையால், ஹதோ-தாக்கப்பட்ட, ஜீவோ- உயிர், ஜம்மே ய- பிறவியில், வாரி ஏக்கம் மி- ஒரு முறையே, மரிஜ்ஜ- இறக்கிறது. ணம் - ஆனால், விஸய-புலன், விஸ - நஞ்சால், பரிஹயா- தாக்கப்பட்ட உயிர், ஸம்ஸார-பிறவி, கந்தாரே- அடவியில், பமந்தி- அலைகிறது. என்று

(கருத்துரை) நஞ்சு தீண்டிய உயிர் பிறவியில் ஒரு முறையே இறக்கிறது. ஆனால் புலன் எனும் நஞ்சு உண்ட உயிர் பிறவி அடவியில் மீண்டும் மீண்டும் சுற்றுகிறது.

(விரிவுரை) ஐம்புல நஞ்சுக்கு இரையான உயிர் பிறவியில் பல முறை பிறந்து உழல்கிறது என்கிறார். பிறப்பும், இறப்பும் கூடியது பிறவியாகும். உயிர் இந்த பிறப்பு இறப்பு வட்டத்தில் எல்லையற்ற காலமாக உழன்று வருகிறது. அதற்குக் காரணம் ஐம்புல வேட்கையில் சிக்கியதாகும். இது ஒரு நஞ்சு என்கிறார். பாம்பு முதலான நஞ்சால் வாழ்வில் இறப்பு ஒரு முறைதான் நேர்கிறது. ஆனால் புலன் இச்சை எனும் நஞ்சுண்டவர் பல முறை இறந்து பிறந்து பிறவியில் உழல்கிறார். ஏனெனில் அப்புலன் இச்சை வினைக் கட்டுக்குக் காரணமாகி பல பிறவிகளைப் பெற பல இறப்புப் பிறப்புகளைப் பெற காரணம் ஆகும்.

29. மேருமந்திர புராணம் 138
30. மேருமந்திர புராணம் 451

எரியிடைப் பதங்கம் போன்றும்
இளம்பிடிக் களிறு போன்றும்
கரிமதத்து அளியைப் போன்றும்
கானத்தின் அசுணம் போன்றும்
விரகினால் தூண்டில் பொன்னை
விழுங்கிய மீனைப் போன்றும் [31]

போகம் துய்ப்பதால் பல பிறவிகளை எடுக்க நேரிடுகிறது.

23. ணரஏஸு வேயணா ஓ திரிக்கஏ மாணவேஸுதுக்காஇம் |
தேவேஸுவி தோஹக்கம் லஹந்தி விஸயாஸியா ஜீவா ||

(பதவுரை) விஸயாஸியா- புலனில் பேரீடுபாடு உள்ள, ஜீவா-உயிர், ணரஏஸு நரகப்பிறவியில், வேயணாஓ- பொறுத்தற்கரிய துன்பத்தை அடைகிறது. திரிக்கஏ- விலங்கிலும், மாணவேஸு - மனிதரிலும், துக்காஇம்- துன்பங்களை அடைகிறது. வி- மேலும், தேவேஸு- தேவரிலும், தோஹக்கம்- பேறின்மையை, லஹந்தி-அடைகிறது. எ-று.

(கருத்துரை) புலன் வேட்கையுடைய உயிர் நரகத்தில் மிகு துன்பத்தையும், விலங்கு, மனிதரில் துன்பத்தையும், தேவரில் பேறின்மையையும் அடைகிறது.

(விரிவுரை) புலன் விரும்பிக்கு நான்கு பிறவியிலும் துன்பமே என்கிறார். புலன் வேட்கையுடைய உயிருக்கு எங்கும் இன்பம் இல்லை. நரகத்தில் பிறந்து மிகு துன்பம் அடைகிறது. இந்தப் பிறவியிலும் துன்பம் அடைகிறது. ஏனெனில், அது எப்போதும் கவலை உடையதாக உள்ளது. தேவப் பிறவியானாலும் நீச்ச தேவனாகப் பிறந்து மிகு துன்பம் அடைகிறது. அறியாமையால் புலனில் சுகம் உண்டு என நம்புகிறது. ஆனால் அறிவன் அவற்றிலிருந்து விலகியே இருக்கிறான்.

'மோக மேதிரி யக்கிடை உய்ப்பது
மோக மேநர கத்தில் விழுப்பது
மோக மேமற மாவது முற்றவும்
மோக மேயற மாசுற நிற்பதும்'

என வருதல் காண்க.[32]

'பொறிபுல மிசைப் பொலி மனத்தொடு புணர்ந்தாய்
கறுத்து முடை மேனிநர கத்து இங்கம் ஆனாய்' [33]

---

31. மேருமந்திர புராணம் 872

32. மேருமந்திர புராணம் 325

33. மேருமந்திர புராணம் 959.

‘மறத்தொடு மலிந்து எழு நிலத்தும் உறை வாயோ’ [34]

‘மனத்தின் மற மேவின்மிகு பாவம் வரும் வந்தால்
உனைப்பினை விலங்கினிடை உய்த்து இடரை ஆக்கும்’ [35]

‘கறுவு செறிவு உறுதலொடு வத்துவை அழித்தால்
இறுதியில் பல் தீவினைகள் எய்தி அடும் நின்றே’[36]

எனப் புலன் துய்ப்பால் வரும் கேடுகளை அறியலாம்.

24. துஸ தம்மந்த பலேண ய ஜஹ தவ்வம் ண ஹி ணராணம் கச்சேதி|
தவ ஸீல மந்த குஸலீ கவந்தி விஸயம் விஸவ கலம்||

(பதவுரை) துஸ தம்மந்த பலேண- கோது நீங்கிப் போவதால், ய ஜஹ- எவ்வாறு, ணாராணம்- மனிதருக்கு, தவ்வம்- தானியம் ஏதும், ணஹி கச்சேதி- போவதில்லை, அவ்வாறு, தவ -தவமும், ஸீல மந்த- சீலமும் உடைய, குஸலீ- அறிவுடையார், விஸயம்-புலப்பொருள்கள், விஸவ- நஞ்சு போன்றது என, கலம் - சக்கை போல, கவந்தி - எறிகின்றனர்.

(கருத்துரை) கோது நீங்கிப் போவதால் மனிதர் தானியம் எதனையும் இழப்பது இல்லை. அது போல தவமும் சீலமும் உடைய அறிவுடையார் புலப்பொருள்களை நஞ்சென சக்கைபோல எறிந்து விடுகின்றனர்.

(விரிவுரை) புலப் பொருள்களை விடுவதால் இழப்பு ஏதும் இல்லை என்கிறார்.

தவத்திலும் சையமத்திலும் சிறந்த அறிவுடையாருக்குப் புலப்பொருள்கள் சக்கை போன்றதாகும். சாறு பிழிந்த பின்பு கரும்பு சாறற்ற சக்கையாகப் போகிறது. அதனை மக்கள் எறிந்து விடுகின்றனர். அது போல புலப்பொருள்கள் சாரமற்ற சக்கைகள் ஆகும். ஏனெனில் அறிவுடையார் தம் தவத்தாலும் சீலத்தாலும் ஆன்ம சாற்றினைச் சுவைத்து விட்டனர். அதனால் அவற்றை சக்கைகள் என எறிவதில் வியப்பில்லை. சாறு போன கரும்பின் சக்கையை எறிதல் போல எறிந்து விடுகின்றனர். அதனால் அவர் இழப்பது ஏதும் இல்லை.

புலன்களில் இன்பம் காண்பவர் அறிவு இலாதவர், ஏனெனில், புலங்கள் எல்லாம் உயிரற்ற பொருள்கள். அதில் இன்பம் இல்லை. இன்பம் அவருடைய அறிவிலேதான் இருந்தது. ஆனால் அறியாமையால் அவர் பொருள்களில் இன்பம் எனக் கொண்டார். எலும்பைக் கடிக்கும் நாய் தன் வாயில் பட்ட குருதியை எலும்பில் கிடைப்பதாகக் கருதிச் சுவைப்பது போல அறிவிலார் இன்பம் புலன்களில் இருப்பதாக மீண்டும்

34. மேருமந்திர புராணம் 960
35. மேருமந்திர புராணம் 961
36. மேருமந்திர புராணம் 962

மீண்டும் அதில் திளைக்கின்றனர். ஆனால் அறிவுடையார் தம் அறிவிலே இன்பம் காண்கின்றனர். அதனால் புலன்களைத் துறப்பதால் அவருக்குத் துன்பம் ஏதும் இல்லை. புலன்கள் அறியப்படும் பொருளாக மட்டுமே அவருக்கு விளங்குகின்றன என அறியலாம்.

'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு'

எனத் தெளியலாம்.[37]

25. வட்டேஸுய கண்டேஸு ய பத்தேஸுய விஸாலேஸு அங்கேஸு |
அங்கேஸுய பப்பேஸு ய ஸவ்வேஸுய உத்தமம்ஸீலம் ||

(பதவுரை) அங்கேஸு- உடலுறுப்பு, வட்டேஸு- வட்டமாக, ய-அல்லது, கண்டேஸு-அரைவட்டமாக, ய - அல்லது, பத்தேஸு - நேராக, ய- அல்லது, விஸாலேஸு- அகலமாக, என, அங்கேஸுய-உறுப்புகள் உரிய இடத்தில், பப்பேஸுய-பொருந்தி புகழத்தக்க அமைந்தாலும், ஸவ்வேஸுய - எல்லாவற்றைக் காட்டிலும், ஸீலம்-சீல உறுப்பே, உத்தமம்-உயர்ந்ததாகும். எ-று

(கருத்துரை) உடலில் உறுப்புகள் வட்டமாகவோ, அரைவட்டமாகவோ, நேராகவோ, அகலமாகவோ, உரிய இடத்தில் பொருந்தி புகழத் தக்கதாக அமைந்தாலும் சீல உறுப்பே அனைத்தையும் காட்டிலும் உயர்ந்ததாகும்.

(விரிவுரை) அழகான உடல் உறுப்புகளைக் காட்டிலும் சீலமே உயர்ந்த உறுப்பாம் என்கிறார்.

உடல் அழகாக அமைதல் அதன் உறுப்புகள் உரிய இடத்தில் உரிய வடிவில் அமையும் போதுதான். ஆனால் அழகிய உறுப்புகளை உடையவன் எனப் புகழுக்கு உரியவனாதலைக் காட்டிலும் சீல உறுப்பை உடையவன் எனப் புகழுக்கு உரியனாதலே உயர்ந்தது ஆகும்.

உலகம் அழகிய உறுப்புடையாரைப் புகழ்கிறது.ஆனால் எல்லா உறுப்புகளும் சிறப்பாக அமைந்து ஒழுக்கம் இல்லாதாரை உலகம் இழிவாகவே பேசுகிறது. உடல் அழகைப் பாராட்டுவது இல்லை. உலக வாழ்விலும் சீலமே சிறப்பாகப் பேசப்படுதலைக் காணலாம்.

முத்தி நெறியிலும் சீலத்துக்கே முதன்மையான இடமாகும். முத்தி நெறியில் போற்றப்படும் நற்காட்சி முதலான உறுப்புகள் எல்லாம் சீலத்தின் சுற்றமே என முன்பே சுட்டியுள்ளார். அதனால் சீலமே சிறந்த உறுப்பாகும். உடல் உறுப்புகள் அழகாக இருந்து சீலம் இல்லை என்றால் அவ்வுடலால் என்ன பயன்? ஒன்று மில்லை.

37. திருக்குறள் 343

26. புரிஸேண வி ஸ்ஹியாஏ குஸமய மூடேஹி விஸயலோலேஹிம் |
ஸம்ஸாரே பமிதவ்வம் அரய கரட்டம் வ பூதேஹிம் ||

(பதவுரை) குஸமய- பொய் நம்பிக்கை உடைய, மூடேஹி-மூடனே, விஸய - ஐம்புலங்களில், லோலேஹிம் - திளைப்பவன், அரய கரட்டம்- வண்டிச் சக்கரம் போல, ஸம்ஸாரே- பிறவியில், பமிதவ்வம்- உழல்கிறான், வ- மேலும், பூதேஹிம் புரிஸேண வி-பிறரும், ஸஹியா ஏ - துன்பத்துடன் உழல வேண்டி உள்ளது. எ -று.

(கருத்துரை) பொய் நம்பிக்கை மூடரே ஐம்புல வேட்கையில் ஆழ்ந்து கிடப்பர்.அவரே வண்டி சக்கரம் போல பிறவியில் சுழல்கின்றனர், அவரால் பிறரும் பிறவியில் துன்புறுகின்றனர்.

(விரிவுரை) பிறவியில் உழல்வதற்கான காரணத்தைக் கூறுகிறார்.

ஐம்புல வேட்கை என்பது பிற பொருளில் இன்பம் காணுதலாகும். தன் ஆன்ம இயல்பையும் அதன் பேரின்ப நிலையையும் அறியாதவர் மூடராவார். அதற்குக் காரணம் பொய் நம்பிக்கை ஆகும். மெய்யறியா பொய்ம்மையில் உள்ளதால் மூடர் என்றார். மோகனீய வினை தரிசன மோகனீயம் சாரித்திர மோகனீயம் என இரண்டு கூறுடையதாகும். தரிசன மோகனீயத்தால் நற்காட்சி பெறாத போது உண்மை அல்லாததை உண்மை என மயங்குவர்

அம் மயக்கத்தால் ஒழுக்கமும் பொய்யொழுக்கத்தில் நிகழ்வர். தான் ஒழுகுவது மட்டும் அன்று. அதுவே உண்மை ஒழுக்கம் என்று பிறரையும் அவ்வொழுக்கத்தில் நடத்துவர். அதனால் தான் பிறவியில் உழல்வது போல அவரையும் உடன் பிறவியில் சுழல வைப்பர்- துன்புறச் செய்வர்.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு[38]

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று[39]

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு[40]

'பொறிப்புலத்து எழுந்த போகத்து
ஆசையைப் போக விட்டு

38. திருக்குறள் 135
39. திருக்குறள் 206
40. திருக்குறள் 351

வெறுத்தெழு மனத்தர் ஆகின்
வீட்டின்பம் விளையும் அன்றி
மறுத்துஎதி ராகச் செல்லின்
மாற்றிடைச் சுழல்வர் என்னும்
திறத்தினை நினைதல் இல்லான்
சீலத்தின் இழிந்து சென்றான்'

என வருதல் காண்க.[41]

27. ஆதேஹி கம்மகண்டீ ஜா பத்தா விஸயராகரங்கேஹிம் |
தம் சிந்தந்தி கயத்தா தவ ஸஞ்ஜம ஸீலயகுணேண ||

(பதவுரை) விஸய- ஐம்புல, ராக- ஆர்வத்தில், ரங்கேஹிம்-மகிழ்ந்து, ஆதேஹி- தாமே, கம்ம- கருமத்தை, கண்டீ- முடிச்சை, ஜா பத்தா- சேர்க்கின்றனர், கயத்தா- உத்தமர், தவ-தவம், ஸஞ்ஜம்-சையம், ஸீலயகுணேண- சீல குணங்களால், தம்- அதனை, சிந்தந்தி- சிக்கறுக்கின்றனர். எ.று

(கருத்துரை) ஐம்புல வேட்கையில் மகிழ்பவர் தாமே கரும முடிச்சைப் போடுகின்றனர். ஆனால் முத்தி முயற்சியாளர் தாமே தவம், சையம், சீல குணங்களால் கரும முடிச்சை அவிழ்க்கின்றனர்

(விரிவுரை) புலன் வேட்கையில் மகிழ்தல் கரும கட்டுக்குக் காரணம்; சீலத்தில் திகழ்தலே கரும அழிவுக்குக் காரணம் என்கிறார், பந்தம், விடுதலை குறித்து இங்குச் சுட்டுகிறார். உயிர் பிறவியில் கட்டுறுதற்கும் அதிலிருந்து விடுதலை பெறுதற்கும் தானேதான் காரணம். விருப்பு, வெறுப்பு முதலான உணர்வுகளில் நிகழ்வதும் உயிர்தான். அவ்வுணர்கள் இல்லாமல் பேரின்ப அறிவு பின்னதற்குக் நிலையில் நிகழ்வதும் உயிர்தான். முன்னதற்குக் காரணம் ஐம்புலங்களில் இன்பத் தெளிவு நிலை. காரணம் தன்னிடத்து இன்பத்தைத் துய்த்தலாகும். முன்னது அறியாமை நிலை; பின்னது அறிவுத் தெளிவு நிலை. இதனையே ஆசாரியர் இங்குத் தெளிவு செய்கிறார்.

விருப்பு வெறுப்புகளில் நிகழ்ந்து வினையைக் கட்டிக் கொண்டது உயிர். ஆனால் தன் இயல்பையும், விருப்பு வெறுப்புகளில் தான் இல்லாமையையும் தெளிந்து தன் இயல்பில் நிகழ முயற்சி செய்கிறது. அந்த முயற்சியே தவம், சையம், சீலம் ஆகும். சீலம் தன்னில் ஒழுகுதலாகும். தவம் முதலானவை அச்சீலம் நோக்கிய உணர்வுகளாகும். உயிரின் நிகழ்வுகளாகும். அந்நிகழ்வுகளே உயிரை வினையிலிருந்து விடுவிக்கிறது. முறையாக!

41. மேருமந்திர புராணம் 862

இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலிஎன்று இவைஎல்லாம் - மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாம்உய்யக் கொண்டு

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையார்
விலங்காது வீடு பெறும்.

என வருவன காண்க.[42]

28. உத்தீ வ ரதண பரிதோ தவ விணயம் ஸீல தாண ரய ணாணம் |
ஸோ ஹேந்தோ ய ஸஸீலோ ணிவ்வாணமணுத்தரம் பத்தோ ||

(பதவுரை) ரதண- அரு மணிகளால், பரிதோ- நிறைந்த, உததீ வ- கடல் போல, தவ- தவம், விணயம்- பணிவு, ஸீல- சீலம், தாணம்- தானம் முதலான, ரயணா யணாணம்- அருமணிகளால் நிறைந்துள்ள ஆன்மா, ஸஸீலோ- சீலத்தோடு, ஸோஹேந்தோ-விளங்குகிறது. ய - மேலும், அணுத்தரம்- தலை வரம்பான ணிவ்வாணம்-வீடுபேற்றை, பத்தோ- அடைந்துள்ளது. எ.று

(கருத்துரை) அரிய மணிகளால் நிறைந்த கடல் தண்ணீரோடு விளங்குகிறது. அதுபோல ஆன்மா தவம், பணிவு, ஒழுக்கம். தானம் முதலான அரு மணிகளால் நிறைந்து நல் சீலத்தோடு விளங்கி வீடு பேற்றையும் அடைந்துள்ளது.

(விரிவுரை) சீலத்தால் ஆன்மா சிறப்படைகிறது என்கிறார். கடலில் தண்ணீர் மட்டுமல்ல. முத்து போன்ற அருமணிகளும் நிறைந்துள்ளன. தண்ணீரின் சிறப்பால் கடலின் சிறப்பு அறியப்படுகிறது. அது போல ஆன்மா தவம் முதலான அருங்குண மணிகளைப் பெற்றிருந்தாலும் அது நல் சீலத்தோடு விளங்கி வீடுபேற்றையும் அடைகிறது. அருமணிகள் பல இருந்தாலும் நீராலே'சமுத்ர' எனும் பெயரைப் பெற்றுள்ளது கடல். அதே போன்று ஆன்மா தவம் முதலான அரிய பல குணங்களைப் பெற்றிருந்தாலும் சீல குணத்தாலேயே வீடு பேற்றை அடைகிறது என்பதாம்.

'தவத்தொடு விரதம் சீலம்
தக்கன தாங்கிச் சிந்தை
உவர்ப்பொடு வெறுப்பின் ஒன்றி
உறுதிக்கண் உழக்க என்றார்'

எனச் சுட்டுதல் காண்க.[43]

42. நாலடியார் 53, 59
43. மேருமந்திர புராணம் 397

29. சுண ஹாண கத்தஹாண ய கோவஸுமஹிலாண தீஸதே மோக்கோ |
ஜே ஸோ கந்தி சஉத்தம் பிச்சிஜ்ஜந்தா ஜணேஹி ஸவ்வேஹிம் ||

(பதவுரை) சுண ஹாண -நாயிடம், கத்தஹாண-கழுதையிடம், ய-மற்றும், கோவஸு- பசு முதலான விலங்கிடம், மஹிலாண-பெண்களிடம், மோக்கோ -முத்தி தீஸதே- காணப்படுகிறதா? சஉத்தம்- வீடுபேறு நான்காம் புருஷார்த்தம் ஆகும். ஜே ஸோதந்தி- எவர் தேடுகிறார். ஸவ்வேஹிம் ஜணேஹி- அவ்வனைவரிடமும், பிச்சிஜ்ஜந்தா - முத்தி காணப்படுகிறது. எ-று

(கருத்துரை) நாய், கழுதை, பசு முதலான விலங்குகள், பெண்கள், முத்தி செல்லுதலைக் காண முடியவில்லை. உறுதிப்பொருள் நான்கில் நான்காவதனை உடையவரிடமே அதனைக் காண முடிகிறது.

(விரிவுரை) சீலமுடைய ஆண்களை முத்திக்குப் பாத்திரம் ஆகின்றனர் என்கிறார்

உலகில் அறம்,பொருள்.இன்பம். வீடு என இந்நான்கும் உறுதிப் பொருளாகக் கூறப்படுகின்றன. இவை புருஷார்த்தங்கள் எனப்படும். இவற்றுள் நான்காவது புருஷார்த்தம் வீடு பேறு (மோக்ஷம்) ஆகும். அதனைத் தேடும் ஆணே அதனை அடைகிறார்.அவர் தவிர நாய் முதலான விலங்கு கதி உயிர்களோ 'பெண்களோ அதனை அடைவது இல்லை.

கருத்து என்னவென்றால் வீடுபேறு சீலத்தால் அமைவது ஆகும். நாய் முதலான விலங்குகள் அறிவு இல்லாதன. அவற்றிடம் சீலம் காண முடியாது. அவற்றிடம் அந்த இயல்பு புருஷார்த்தம் மேற் கொள்ளும் இயல்பு - காணப்படவில்லை. அதனால் மோக்ஷம் அடையும் தகுதி இல்லை. அதனால் ஆண்களே அதனை அறிந்து ஏற்று முத்தியை அடைகின்றனர் என்பதாம். "அறம், பொருள், இன்பம் வீடடைதல் நூற்பயனே"

30. ஜஇ விஸய லோலஏஹிம் ணாணீ ஹி ஹவிஜ்ஜ ஸாஹிதோ மோக்கோ|
தோ ஸோ ஸச்சஇ புத்தோ தஸபுவ்வீஓ வி கிம் கதோ ணரயம்||

(பதவுரை) விஸய- புலன்களில், லோலஏஹிம் - திளைப்பவர், ணாணீஹி பவிஜ்ஜ-நூல்கள் அறிந்த அறிவுடையவர், மோக்கோ-முத்தியை, ஜஇ ஸாஹிதோ- அடைவார் எனில், தஸபுவ்வீஓ -பத்து பூர்வம் அறிந்த, ஸச்ச இ புத்தோ- ருத்திரன், தோஸோ-அவன், ணரயம்- நாகம், கிம் கதோ- ஏன் சென்றான், எ-று

(கருத்துரை) ஆகமங்களில் அறிவு பெற்றும் புலன்களில் திளைப்பவன் முத்தி அடைவான் எனில் பத்து பூர்வ அறிவுடைய ருத்திரன் ஏன் நரகம் சென்றான்?

(விரிவுரை) சீலத்தோடு கூடிய அறிவுடையாரே முத்தி அடைவார் என்கிறார்.

வெறும் அறிவால் மட்டுமே வீடுபேறு அடைய முடியும் என்றால் பிறகு பத்து பூர்வ அங்க அறிவுடைய ருத்திரன் ஏன் நரகம் சென்றான்? என வினா எழுப்பி சீலம் இல்லாத அறிவால் மட்டும் முத்தியை அடைய முடியாது எனத் தெளிவு செய்தார். ஓர் எடுத்துக்காட்டாக ருத்திரனைக் காட்டினார்.

ஜிந ஆகமங்களில் 11 ருத்திரர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் பவ்வியர் ஆவர். முத்தியை அடையும் தகுதி உடையவர். முத்தி அடையும் 169 மகா புருடர்களில் இவரும் எண்ணப்பட்டுள்ளனர். இவர் முனி துறவு ஏற்று பத்து பூர்வ அங்க அறிவு பெற்றும் சாரித்திர மோக வினை உதயத்துக்கு ஆட்பட்டு நரக கதியை அடைகின்றனர், பிறகு காலப்போக்கில் மும்மணி பெற்று முத்தி அடைகின்றனர். அறிவு பெற்றும் சீலம் இன்மையால் முத்தி அடைய முடியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர் சுட்டப்படுகின்றனர்.

31. ஜஇ ணாணேண விஸோஹோ ஸீலேண விணா புதேஹிம் ணித்திட்டோ|
தஸ புவ்வியஸ்ஸ பாவோ ய ண கிம் புணு ணிம்ம லோ ஜாதோ||

(பதவுரை) புதேஹிம் - புலவர் (பண்டிதர்)கள், ஸீலேண -சீலம், விணா- இல்லாமல், ணாணேண- வெறும் அறிவால் மட்டும், விஸோஹோ- உயிரில் விசுத்தி, தோன்றும் என, ஜஇ ணித்திட்டோ - கூறுவாரானால், தஸ- பத்து, புவ்வியஸ்ஸ - பூர்வ அறிவுடைய ருத்திரர், ய பாவோ - பாவம்(உணர்வு), ணிம்மலோ - தூய்மையாக, புண கிம் ண ஜாதோ- ஏன் பின் ஆகவில்லை, எ-று.

(கருத்துரை) அறிவால் மட்டும் உயிரில் விசுத்தி தோன்றும் என புலவர் கூறுவாரானால் பிறகு பத்து பூர்வ அறிவுடைய ருத்திரர் ஏன் தூய உணர்வைப் பெறாது போயினர்?

(விரிவுரை) சீலம் இன்றி அறிவால் மட்டும் பாவம் தூய்மை ஆவது இல்லை எனச் சுட்டுகிறார்.

அறிவு பொருளை அறிதல் செயலைச் செய்வது ஆகும். அவ்வறிவு துவர்ப்பு முதலான பொய்ம்மை உணர்வில் தன்மயம் ஆகும் போது பொய்யறிவு எனப்படுகிறது. ஆனால் பொய்ம்மை, துவர்ப்பு அழிதலே சீலம் எனப்படுகிறது. அதனால் சீலம் இல்லாமல் அறிவால் மட்டும் உயிர் தூய்மை அடைந்து முத்தி அடையும் என்பது உண்மை அன்று. அதற்குச் சான்றாக ருத்திரர் விளங்குகின்றனர். முனிமை நிலை அடைந்தும், பத்து பூர்வ அறிவு பெற்றும், சீலம் இன்மையால் தன் நிலையில் இழிந்து நரகம் முதலான துன்பத்தை அடைகின்றனர். அதனால் சீலம் முதன்மையுடையது என்பது தெளிவு.

அறிவு தன்னில் நிற்பது, சீலம் ஆகும். அறிவுக்கும் சீலத்துக்கும் வேற்றுமை இல்லை என்று முன்பு சுட்டியுள்ளார். (காதை:2) அதாவது தன்னில் தோயும் அறிவே சீலமாகும். தன்னில் தோயாத புறப் பொருளை அறியும் / தோயும் அறிவு சீலம் உடையது அன்று. அதனால் அவ்வறிவால் முத்தியை அடைய முடியாது என்பதாம்

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

என வருதல் காண்க.[44]

32. ஜாஏ விஸய விரத்தோ ஸோ கமயதி ணரய வேயணா பஉரா|
தா லேஹதி அருஹபயம் பணியம் ஜிணவட்டமாணேண ||

(பதவுரை) ஜாஏ - எவர், விஸய- புலன்களில், விரத்தோ-விலகினாரோ, ஸோ- அவர், பஉரா- மிகு, ணரய- நரக, வேயணா-துன்பத்தை, கமயதி- கழிக்கிறார், தா- மேலும், அருஹபயம்-அருகபதவியையும், லேஹதி - அடைகிறார் என, ஜிண வட்டமாணேண- மாவீர வர்தமானர், பணியம் - அருளியுள்ளார். எ-று

(கருத்துரை) புலன் வேட்கையை விலக்கியவர் நரகத்தின் மிகு துன்பத்தையும் தவிர்க்கிறார். அங்கிருந்து வந்து தீர்த்தங்கரர் பதவியையும் அடைகிறார் என மகா வீர ஜிநர் அருளியுள்ளார்.

(விரிவுரை) நரக பிறவியிலும் புலன் வேட்கையை விலக்கி நின்றால் அந்நரகத் துன்பம் குறைந்து மனிதராகப் பிறந்து அருக பதவியையும் அடைகிறார் என்கிறார். நரக கதியிலிருந்தும் வந்து தீர்த்தங்கரர் பதவியை அடைய முடியும் என ஜிந ஆகமங்கள் சுட்டுகின்றன. அதாவது மூன்றாம் நரகம் வரையிலிருந்து அருக பதவியை அடையலாம் என்பதாம். அங்கே நற்காட்சியுடன் கூடி புலன் வேட்கை உணர்விலிருந்து விலகி நிற்கும் போது நரக துன்பமும் அற்பமாகிப் போகிறது. பிறகு அங்கிருந்து வந்து அருக நிலை பெற்று முத்தியைப் பெறுகின்றனர். இதற்குக் காரணம் புலன்வேட்கை விரும்பாத உணர்வாகும். அதுவே சீலத்தின் பெருமை ஆகும். நற்காட்சியுடையார் நல்லறிவும் நல்லொழுக்கம் போற்றும் ஆற்றலும் உடையவர் ஆவார். அவற்றால் விளைவது உறுதிப்பாடு. அவ்வுறுதிப்பாடு சீலத்தைச் சிறக்கச் செய்வதாம்.

‘சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு’[45]

‘கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு’[46] என வருதல் காணலாம்.

44. திருக்குறள் 348 45. திருக்குறள் 267 46. திருக்குறள் 269

**33. ஏவம் பஹுப்பயாரம் ஜிணேஹி பச்சக்க ணாண தர ஸீஹிம் |
ஸீலேண ய மோக்கபயம் அக்காதீதம் ய லோய ணாணேஹிம் ||**

(பதவுரை) ஏவம் - இப்படி, பஹுப் பயாரம்- பல வகையில், பச்சக்க ணாண- நேர் அறிவும், தரஸீஹிம் - நேர் காட்சியும், லோய ணாணேஹிம் - உலகும் உலகலாப் பகுதியும் அறியும் அறிவும் உடைய, ஜிணேஹி- ஜிந தேவர், ஸீலேணய- சீலத்தால், அக்காதீதம் ய - பொறி கடந்த, மோக்க பயம்- வீடு பேற்று நிலை ஆகிறது என அருளியுள்ளார். எ-று

(கருத்துரை) முழுதுணர் அறிவர் பல வகையில் சீலத்தை விளக்கி அதனால் புலன் கடந்த பேரின்ப நிலையான முத்தி கிடைக்கிறது என அருளியுள்ளார். .

(விரிவுரை) ஆசாரியர் அருக பகவான் சீலம் பற்றி பல வகையாக விளக்கி அதனால் முத்திப் பதம் விளைகிறது எனக் கூறியுள்ளார் எனச் சுட்டுகிறார்.சீலத்தின் சிறப்பை நூலுள் கூறியுள்ளவாறு பல வகையால் பல வழியால் பகவான் பகர்ந்துள்ளார் என்பது கருத்து. அத்தகு சீலத்தை பவ்விய உயிர் கைக் கொள்ள வேண்டும் என்பது குறிப்பு ஆகும்.

**'அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃது உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்'**[47]

**'இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்'**[48]

**'ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'**[49]

என வருதல் காணலாம்.

**34. ஸம்மத்த ணாண தம் ஸண தவ வீரிய பஞ்சயார மப்பாணம் |
ஜலணோ வி பவண ஸஹிதோ டஹந்தி போராயணம் கம்மம் ||**

(பதவுரை) ஸம்மத்த- நல்லொழுக்கம், ணாண- நல்லறிவு, தம்ஸண - நற்காட்சி, தவ - தவம், வீரிய- வீரியம், பஞ்ச- ஐந்து, ஆயார- ஆசாரம், அப்பாணம்- ஆன்மாவைச் சார்ந்து, போராயணம்-பழைய, கம்மம்- கருமங்களை, பவண- காற்றுடன், ஸஹிதோ-கூடிய, ஜலணோ வி- நெருப்புப்போல, டஹந்தி- எரிக்கிறது. எ-று

(கருத்துரை) ஆன்மாவைச் சார்ந்த ஐந்து ஆசாரங்கள் நெருப்பு எரிப்பது போல பழைய கருமங்களை எரிக்கிறது.

47. திருக்குறள் 368 48. திருக்குறள் 369 49. திருக்குறள் 370

(விரிவுரை) பஞ்ச ஆசாரங்கள் பழைய கருமங்களை அழிக்கிறது என்கிறார்.

நெருப்பு எரிப்பது போல என உவமை காட்டியுள்ளார். தான் தொடும் பொருளை எல்லாம் நெருப்பு எரித்துவிடுகிறது. நெருப்பின் ஆற்றல் எரித்தல் ஆகும். எரிபடும் ஆற்றல் பொருளினுடையது (விறகு முதலானவை) ஆகும். ஐந்து ஆசாரங்களுக்கு நெருப்பு உவமை. ஆன்மாவுக்கு காற்று உவமை. காற்றோடு சேர்ந்த நெருப்பு என்றதால் ஆன்மாவோடு சேர்ந்த ஐந்து ஆசாரங்கள் என்பதாம்.

ஆன்மாவின் தூய்மையே சீலமாகும். அந்தச் சீலம் எனும் காற்றோடு சேர்ந்த ஐந்து ஆசாரங்கள் என்பதாம். இவற்றால் உயிர் முன்பு கட்டிய வினைகள்எரிக்கப்படுகின்றன என்பதாம். வினை அழிவு என்பது நற்காட்சி தோன்றிய பிறகே தொடங்குகிறது. அதற்கு இசைவாக மற்ற நான்கும் அமைகின்றன. எனவே ஐந்தாகக் குறிப்பிட்டாலும் அவை செயலாற்றல் பெறுதலில் சீலம் முதன்மையாக விளங்குகிறது என்பதாம். சீலத்தின் சிறப்பை ஐந்து ஆசாரங்கள் வழிக் காட்டியுள்ளார் எனலாம்.

‘ஆசாரம்’ எனில் தன் ஆற்றலுக்கு ஏற்ப ஒழுகும் முயற்சி ஆகும். அதாவது நற்காட்சி முதலானவற்றில் பெற்ற தூய்மையை நிலைப்படுத்தும் முயற்சி ஆகும்.

1. **தரிசன ஆசாரம்**: நற்காட்சியில் தூய்மையுடன் ஒழுகுதல். அதாவது ஐயமின்மை முதலான ஒழுக்கங்களில் முயற்சியுடைமை.

2. **ஞான ஆசாரம்**: அறிவு பெறுதலில் தூய்மை போற்றல், காலம் போற்றுதல், பணிவு காட்டல் முதலான ஒழுக்கங்களில் முயற்சியுடைமை

3. **சாரித்திர ஆசாரம்**: ஐந்து நோன்பு முதலானவற்றில் தூய்மை போற்றுதல். அதாவது கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, காமமின்மை, பற்றின்மை இவை முதலானவற்றில் முயற்சியுடைமை

4. **தவ ஆசாரம்**: அகப்புறத் தவங்கள் பன்னிரண்டாகும். இவற்றில் குறையின்றி நிகழ்த்தலில் முயற்சியுடைமை

5. **வீரிய ஆசாரம்**: தன் ஆன்ம ஆற்றலை ஒழுக்கங்களை நிலைப்படுத்த முயற்சியுடைமை வீரிய ஆசாரம் ஆகும்.

‘ஸம்மத்த’ என்ற சொல்லுக்கு நல்லொழுக்கம் எனப் பொருள் காண வேண்டும். ஏனெனில் அறிவு முதலானவற்றைத் தனித்துச் சுட்டி இருப்பதால் சாரித்திரம் இதன் பொருள் என உய்த்துணர வேண்டும்.

35. ணித்திட்ட அட்ட கம்மா விஸயவிரத்தா ஜிதிந்தியா தீரா |
தவ விணய ஸீல ஸஹிதா ஸித்தா ஸித்தம் கதிம் பத்தா ||

(பதவுரை) ஜிதிந்தியா- பொறிகளை வென்ற, விசய-புலங்கள் வேட்கை, விரத்தா- நீங்கிய, தீரா- தீரர், தவ - தவம், விணய- பணிவு, ஸீல - சீலம், ஸஹிதா- கூடியவர், அவரே. ணித்திட்ட அட்ட கம்மா- எட்டு வினைகளையும் அழித்து, ஸித்தம் - சித்த, கதிம்- கதியை, பத்தா- அடைந்தார் அவர், ஸித்தா - சித்தாராவார்.எ-று

(கருத்துரை) பொறிகளை வென்று புலங்களை நீக்கிய தீரர் தவம் பணிவு சீலத்துடன் கூடி எட்டு வினைகள் அழித்து சித்த கதி அடைந்து சித்தரானார்.

(விரிவுரை) சீலம் எட்டு வினைகளை அழித்து உயிரை சித்தாராக்குகிறது என்கிறார்.

பொறிகளையும், புலங்களையும் வெல்லுதலினால் தீரர் என்கிறார். உண்மையில் தனக்குப் பகையாக உள்ள விருப்பு வெறுப்பு முதலானவற்றை வெல்லுபவரே வீரர் ஆவார். ஏனெனில் அப்பகையை வெல்லுதல் கடினமாகும். இந்த காதையில் பொறிகளை புலங்களையும் வெல்லுதலைச் சுட்டி இருப்பதால் அவை சீலத்தின் சிறப்பைக் காட்டுகின்றன. அந்த சீலமே முத்தியைக் கூட்டுவது. சீலமுடையார் சித்த நிலையை அடைவார் என்பதாம்.

‘காட்சியும் அறிவும் இன்ன
கதிர்ப்ப ஐம்பொறியும் வென்று
பூட்சிசால் ஒழுக்கம் தாங்கிப்
புரிந்தெழு தியான வாளால்
வேட்கைவேர் அறுத்துக் காதி
வினைகளை வென்ற போழ்தில்
ஆட்சி மூ வுலகம் ஆகும்
அரச! மற்று அறிமோ என்றான் [50]

வினை அற விட்ட போழ்தின்
வெடித்த வே ரண்டம் போல
நினைவரும் குணங்கள் எட்டும்
நிறைந்துமேல் நோக்கி ஓடி
முனிவரும் உலகம் மூன்றும்
இறைஞ்ச மூவுலகின் உச்சி
கனைகழல் அரச! நிற்றல்
கைவலம் ஆகும் கண்டாய் [51]

என வருவன காணலாம்.

50. மேருமந்திர புராணம் 725
51. மேருமந்திர புராணம் 106

36. லாவண்ண ஸீல குஸலோ ஜம்ம மஹீருஹோ ஜஸ்ஸ ஸவணஸ்ஸ |
ஸோ ஸீலோ ஸ மஹப்பா பமிஜ்ஜ குணவித்தரம் பவிஏ ||

(பதவுரை) ஜஸ்ஸ- எந்த, ஸவணஸ்ஸ- முனிவருடைய, ஜம்ம- பிறப்பெனும், மஹீருஹோ- மரம், லாவண்ண- மகிழத் தக்கதாக உள்ளது. ஸீலோ - சீலம் உள்ளது (இவ்விரண்டிலுள்) குஸலோ - நிபுணனாக இருப்பவர், ஸோ - அவர், ஸீலோ- சீலமுடைய முனிவர், ஸ மஹப்பா- பெருமையுடையவர். பவிஏ-அம் முனிவருடைய, குணவித்தரம்- குணச்சிறப்புகள், பமிஜ்ஜ-எங்கும் பரவுகிறது. எ-று

(கருத்துரை) முனிமை தோற்றம் விரும்பத் தக்கதாகவுள்ளது, சீலமும் உள்ளது. இவ்விரண்டில் சிறப்புடைய சீல முடைய முனிவர் பெருமையுடையவர். அவர் குணச்சிறப்பு உலகில் எங்கும் பரவுகிறது.

(விரிவுரை) விரும்பத் தக்க தோற்றம் சீலமும் உடைய முனிவர் புகழுக்கு உரியவர் என்கிறார்.

மரத்தின் கிளை, இலை, பூ அழகாகவும், அது எந்த வேறுபாடு மின்றி நிழல் தந்து எல்லாரும் பாராட்டும் பெருமை உடையதாக விளங்குகிறது. அது போல முனிவரும் தன் அழகிய தோற்றத்தாலும் குணச்சிறப்பாலும் அனைவருடைய பாராட்டையும் பெறுகிறார். இங்கேயும் சீலத்தின் பெருமை பேசப்படுகிறது.முனி தோற்றத்தை மரமாக உருவகம் செய்துள்ளார்.

37. ணாணம் ஜாணம் ஜோகோ தம்ஸண ஸு‍த்தீய வீரியாயத்தம் |
ஸம் மத்த தம்ஸணேண ய லஹந்தி ஜிண ஸாஸணே போஹிம் ||

(பதவுரை) ணாணம்- அறிவு, ஜாணம்- தியானம், ஜோகோ - யோகம், தம்ஸண- நற்காட்சியின், ஸு‍த்தீய- தூய்மை, இவை, வீரியாயத்தம்- வீரியத்தை சார்ந்தவை, ய- மற்றும், ஸம்மத்த தம்ஸணேண- நற்காட்சியில், ஜிணஸாஸணே- ஜிந நெறியால் போஹிம்- மும்மணி, லஹந்தி- அடையப்படுகிறது. எ.று

(கருத்துரை) அறிவு, ஊழ்கம் (தியானம்) யோகம், காட்சியின் தூய்மை இவை வீரிய குணத்தைச் சார்ந்தவை. ஜிந நெறியில் நற்காட்சியால் மும்மணி அடையப்படுகிறது.

(விரிவுரை) ஜிந நெறியில் அம்முனிவர் மும்மணி பெறுகிறார் என்று காட்டுகிறார்.

பொருளை அறிவது அறிவு, தன் இயல்பில் ஒருமுகப்படுதல் தியானம், சமாதியில் ஆழ்தல் யோகம், நற்காட்சியில் குறை இன்றி தூய்மை போற்றுதல் இவை தன் ஆற்றலுக்கு (வீரியத்துக்கு) ஆட்பட்டது. அவ்வாற்றல் எவ்வளவு வெளிப்படுமோ அவ்வளவு நிகழும் இவை. ஆனால் நற்காட்சியால் ‘போதி’ அதாவது

மும்மணி அடையப்படுகிறது. நற்காட்சி அமையும் போது தியானம் முதலானவையும் சிறப்பை தக்கவாறு அடைகின்றன. ஆற்றலும் கூடுகிறது. மும்மணி என்பது ஆன்மாவின் இயல்பு- சீலம் என்றும் அதனைச் சுட்டுவர். இதனால் சீலத்தின் பெருமை விளங்குகிறது.

'அறிவு நல் காட்சி காந்தி
சாந்திநல் அடக்கம் ஐந்து
பொறிகளில் செறிவு குத்தி
சமிதியும் பொருந்தி ஆசை
வறுவிய மனத்துத் தண்டம்
காரவம் சன்னை வீந்த
உறுதவன் உரைக்கல் உற்றான்
உவந்தவன் கேட்கல் உற்றான்'

என முனிவர் தன்மை கூறுதல் காணலாம்.[52]

38. ஜிண வயணகஹித ஸாரா விஸய விரத்தா தாவோதணா தீரா|
ஸீல ஸலிலேண ண்ஹாதா தே ஸித்தாலய ஸுகம் ஜந்தி ||

(பதவுரை) ஜிண- ஜிநர், வயண- திருமொழியின், கஹித ஸாரா-பிழிவை ஏற்றவர், விஸய- புலன் வேட்கையை, விரத்தா - விட்டவர், தாவோதணா - தபச் செல்வம் உடையவர், தீரா-வீரர், ஸீல - சீலம் எனும் ஸலிலேண - நீரால், ண்ஹாதா-குளித்து தூய்மையானவர், தே - அம்முனிவர், ஸித்தாலய - சித்தாலய (ஸித்தர் நிலைய) ஸுகம் - பேரின்பத்தை, ஜந்தி- அடைகிறார். எ.று

(கருத்துரை) ஜிநர் மொழியின் சாரம் அறிந்து, புலன்வேட்கை விட்ட, தவச் செல்வம் உடைய வீரர் சீல நீரில் குளித்துத் தூய்மை அடைந்த அந்த முனிவர் ஸித்த நிலை பேரின்பத்தை அடைகிறார்.

(விரிவுரை) ஜிநர் திருமொழியால் அடையப்படுவது இது என்கிறார். ஜிநர் மொழிக்கொண்டு பொருள்களின் இயல்பை உள்ளவாறு அறிந்து அதன் பிழிவான தன் தூய இயல்பை ஏற்று புலன்வேட்கையிலிருந்து விலகி, முனிவர் ஆகிறார். கொசுக்கடி முதலான இடையூறுகள் வந்த போதும் தளர்தல் இல்லை. வீரராகத் தீரராகத் திகழ்கிறார். அப்போது 84 லக்ஷம் வேறுபாடாகக் கூறப்படும் சீலத்தின் முழுமை தன் இயல்பு எனும் நீரால் குளிக்கிறார். எல்லா வினைகளையும் கழுவி விடுகிறார்.சித்த நிலையை அடைகிறார். அந்த சித்த நிலையத்தில் தங்கிப் பேரின்பத்தில் திளைக்கிறார். இது சீலத்தின் பெருமை ஆகும். அது ஜிநர் திருமொழியால்

52. மேருமந்திர புராணம் 344

பெறப்பட்டதாகும். அதனால் ஜிந ஆகமங்களை இடைவிடாது பயில்க என்பது குறிப்பு.

39. ஸவ்வ குண கீண கம்மா ஸுக துக்க விவஜ்ஜிதா மண விஸுத்தா |
பப்போடிய கம்ம ரயா ஹவந்தி ஆராஹணாபயடா ||

(பதவுரை) ஸவ்வ எல்லா, குண- மூல, உத்தர குணங்களால், கீண கம்மா- கருமங்கள் கழியப் பெற்றவர். ஸுக - இன்பம், துக்க - துன்பம், விவஜ்ஜிதா- இல்லாதவர், மண - மனம், விஸுத்தா - தூய்மையானவர், கம்ம- கரும, ரயா- தூசு, பப்போடிய - நீக்கியவர் என, ஆராஹணா - ஆராதனை, பயடா-வெளிப்பட்டவராக, ஹவந்தி- விளங்குகிறார். எ-று

(கருத்துரை) மூல, உத்தர குணங்களால் கருமங்களை அழித்து, இன்பம், துன்பம் இல்லாது, மனமாசு இல்லாது, கரும் தூசு நீங்கியவர் எனும் ஆராதனை வெளிப்பட்டவராக விளங்குகிறார். முனிவர்

(விரிவுரை) சீலத்தால் ஆராதனை அமைகிறது என்கிறார்.

ஆராதனை எனில் போற்றுதல் என்பது பொருள். இடைவிடாது போற்றல் ஆகும். நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம், தவம் இந்நான்கிலும் தக்கவாறு முயன்று தன்னில் அவற்றை நிகழ்ச் செய்தல், இடைவிடாது இருக்கச் செய்தல், தொய்வு அடையும் போது மீண்டும் மீண்டும் விளங்கச் செய்தல் ஆராதனை ஆகும். வாழ்வின் கடைசியில் ‘சல்லேகனை’ கூறப்பட்டுள்ளது. அதில் இந்நான்கும் போற்றப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த ஆராதனையும் சீலத்தால் அமைகிறது என்று சுட்டுகிறார்.

நற்காட்சியுடன் மூல, உத்தர குணங்களைக் கொண்டு வினைகள் உதிர்க்கப்படுகின்றன. அப்போது வினைகளின் காலம், அனுபாகம் குறைகின்றன. புலன்களால் வந்த இன்ப துன்பங்களும் பிறகு இல்லாது போகின்றன. தவத்தில் நின்று படி ஏறும் போது உபயோகத்தில் தூய்மை துலங்குகிறது. துவர்ப்புகள் உதயம் இல்லாது இன்ப துன்பங்கள் அழிந்து போகின்றன. மனம் மாசற்றதாகி தரும தியானம் விட்டு வெள்ளை தியானம் விளங்குகிறது.

பன்னிரண்டாம் குணத்தான கடைசியில் மன விகற்பமும் அழிந்து போகிறது. காதி வினைகள் கெட்டு அனந்த நான்மை வெளிப்படுகிறது. இப்படி ஆராதனை முழுவதுமாக வெளிப்படுகிறது. கடைசி உடலுடையவருக்கு இத்தகு ஆராதனை ஆகி முத்தியும் கிடைக்கிறது. பிறருக்கு இந்த ஆராதனை ஓரளவு அமைவதால் தேவப் பிறவியில் சென்று பிறக்கின்றனர். அங்கு இருந்து வந்து பிறகு மனிதப் பிறவியில் ஆராதனையை முழுமை செய்து முத்தி அடைகின்றனர் என அறிதல் வேண்டும். இது

ஜிநர் திருமொழி. சீலம் இவற்றின் சிறப்பாகும். இப்படி இந்த காதையை விளக்குகிறார் பண்டிதர் ஜய சந்திரர்.

40. அரஹந்தே ஸுஹ பத்தீ ஸம்மத்தம் தம்ஸணேண ஸுவிஸுத்தம் |
ஸீலம் விஸய விராகோ ணாணம் புண கேரிஸம் பணியம் ||

(பதவுரை) அரஹந்தே - அருகரிடம், ஸுஹ- இனிய, பத்தீ, அன்புடைமை, ஸம்மத்தம்- நல்லொழுக்கம், தம்ஸணேண-நற்காட்சியால், ஸுவிஸுத்தம்- தூய்மை ஆகும், விஸய- புலன் வேட்கை, விராகோ- இல்லாமை, ஸீலம் - சீலம் ஆகும். ணாணம் புண- அறிவும் அதுவே, கேரிஸம் - வேறு எவ்வாறு, பணியம்- கூறப்படுகிறது? எ-று

(கருத்துரை) அருகரிடம் கொள்ளும் அன்புடைமை நல்லொழுக்கம் நற்காட்சியால் தூய்மையாம். புலன் வேட்கை இல்லாமை சீலமாம். அதுவே அறிவாகும். வேறு எவ்வாறு அறிவு விளக்கப்படும்?

(விரிவுரை) அறிவால் அனைத்தும் ஆகிறது. அந்த அறிவு அமையும் பாங்கினைச் சுட்டி நூலை முடிக்கிறார் ஆசாரியர்.

நற்காட்சியும், சீலமும் கூடியது அறிவு என ஆகமங்கள் சுட்டுகின்றன. வேறு வகையாக அறிவு எப்படி இருக்க முடியும்? நற்காட்சியும் சீலமும் ஜிந நூலால் அடையப்படுகின்றன. அதனால் அதில் அன்புடைமை தோன்றுகிறது. அதுவே நம்பிக்கைக்கு அடையாளமாகும். இப்படி நம்பிக்கை தோன்றிய பிறகு புலன் வேட்கை விலகுகிறது. அதுவே சீலமாகும். இவ்விரண்டும் ஆன பின்பு அறிவு நல்லறிவு ஆகிறது.

இப்படி நற்காட்சி நல்லொழுக்கத்தால் நல்லறிவு மற்றும் மெய்ந்நூல்களின் பெருமை விளங்குகிறது. மும்மணியின் பெருமை இப்படி உள்ளது என்பதே காதையின் மங்கலம் எனலாம்.

இயல்பு என்பது சீலம் ஆகும். ஆன்மா தூய மும்மணி வடிவ மாகும். ஆனால் அநாதி காலமாக கருமத்துடன் கிடந்து திரிந்து காணப்படுகிறது. இதற்கு மெய்யறியாமை, துவர்ப்பு முதலான பல காரணங்கள் ஆகும். இதனையே காம வெகுளி மயக்கம் என்றும் சுட்டுவர். இவற்றை உடைத்தாய் இருத்தல் சீலமின்மை ஆகும். இவற்றின் நீக்கமே சீலம் ஆகும்.

இவற்றின் விரிவெல்லாம் நூல் வழி அறிதல் வேண்டும். அறிந்து உலகமும் போற்றும் சீலத்தினைக் கைக் கொண்டு முத்தி அடைகின்றனர் என்பதாம். அவரை வணங்கி அத்தகு சீலம் பெறுவோமாக!

உரைத்த இப் பொருளின் மெய்ம்மை
உணர்வது நல்ல ஞானம்
புரைப்பறத் தெளிதல் காட்சி
பொருந்திய இரண்டும் ஒன்றில்
தரித்த நல் லொழுக்கம் ஆகும்
சாற்றிய மூன்றும் ஒன்றின்
விரைபொலி தாரோய் வீட்டின்
மெய்ந்நெறி யாவதாமே [53]

எனவும்,

அருகனது சரணம் அல்லால்
அரண்பிறிது இல்லை கண்டாய் [54]

எனவும்,

சித்தமெய் மொழிகள் மூன்றில்
சினவரன் செழும்பொற் பாதம்
மத்தகத்து அணிந்து நான்கு
மங்கலம் பயின்று வையத்து
உத்தமர் தம்மை ஏத்திச்
சரணம் புக்கு உயிரை ஓம்பித்
தத்துவம் பயின்று தானம்
தவத்தொடு தயாவில் சென்றான்[55]

எனவும்,

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் [56]

எனவும் வருவன காண்க.

53. *மேருமந்திர புராணம் 107*
54. *மேருமந்திர புராணம் 111*
55. *மேருமந்திர புராணம் 536*
56. *மேருமந்திர புராணம் 360*